# இந்திய ஆட்சி அமைப்பு வளர்ச்சி வரலாறு

1707 வரை

(DEVELOPMENT OF INDIAN POLITY)

UP TO 1707

ந. க. மங்களமுருகேசன்



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க. வெ.) வரிசை எண் — 333

# இந்திய ஆட்சி அமைப்பு வளர்ச்சி வரலாறு

*(கி.பி. 1707 வரை)*

ஆசிரியர் :
**ந. க. மங்களமுருகேசன்**, எம்.ஏ.,
துணைப் பேராசிரியர், வரலாற்றுத் துறை,
மாநிலக் கல்லூரி,
சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—July, 1972

T.N.T.B.S. (C. P.) No. 333

© Tamil Nadu Text Book Society

**Development of Indian Polity upto 1707 A.D.**

N. K. Mangalamurugesan

**Price Rs. 6-25**

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by
Avvai Achukkoodam,
96, P. V. Koil Street,
Madras-13.

# அணிந்துரை

**திரு. இரா. நெடுஞ்செழியன்**
(தமிழகக் கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினேராண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், பௌதிகம், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகின்றது.

இவற்றுள் ஒன்ருன '**இந்திய ஆட்சி அமைப்பு வளர்ச்சி வரலாறு**' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **333**ஆவது வெளியீடாகும். இதுவரை **368** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

**இரா. நெடுஞ்செழியன்**

# பொருளடக்கம்


பக்கம்

பகுதி I

1. அறிமுகம் ... ... ... ... 1
2. இருக்கு வேதகால ஆட்சி அமைப்பு முறை ... 11
3. பின் வேதகால ஆட்சி அமைப்பு முறை ... 22
4. சபை, சமிதி ... ... ... 34
5. காவியங்களின் காலம் ... ... ... 41
6. தர்மம் ... ... ... 52
7. குடியரசுகள் ... ... ... 64
8. சமய எழுச்சிக் காலம் ... ... ... 75
9. அர்த்த சாத்திரம் கூறும் ஆட்சியியல் நெறி ... 85
10. மௌரியர் ஆட்சிமுறை ... ... ... 93
11. மௌரியர்களின் காலத்திற்குப் பின் ... ... 111
12. குப்தர்களின் காலம் ... ... ... 120
13. குப்தர்களுக்குப் பின் ... ... ... 134
14. இராஜபுத்திரர்களின் காலம் ... ... 146

பகுதி II

15. சங்க காலத் தமிழக ஆட்சிமுறை ... ... 158
16. திருக்குறள் கூறும் ஆட்சியியல் நெறி ... 169
17. சோழர்களின் ஆட்சிமுறை ... ... 182
18. பல்லவர் காலம் ... ... ... 193
19. விஜயநகரப் பேரரசு காலம் ... ... 204

பகுதி III

20. சிந்துவில் அராபியரின் ஆட்சி ... ... 218
21. கஜ்னவைடுகளின் காலம் ... ... 226
22. டில்லிச் சுல்தானிய ஆட்சி ... ... 240
23. உள்ளூர் அல்லது வட்டார நாடுகளின் ஆட்சி அமைப்பு முறை ... ... ... 251
24. ஆப்கானியர்களின் ஆட்சிமுறை ... ... 262
25. மராத்தியர்கள் ஆட்சிமுறை ... ... 289
26. முகலாயர் ஆட்சி அமைப்பு முறை ... ... 305

இந்நூல் எழுதத் துணை புரிந்த நூல்கள் ... 352

கலைச் சொற்கள் ... ... ... 355

## பகுதி I

# 1. அறிமுகம்

இந் நூலில் ஆட்சி அமைப்பு முறை வரலாறு குறித்த ஆய்வினைமேற்கொள்ள இருக்கிறோம். நம்முடைய ஆய்வு இருக்கு வேத காலத்திலிருந்துதான் தொடங்குகிறது. இருக்கு வேதத்திற்கு முந்திய காலங்களில் ஆட்சி அமைப்பு எவ்வாறு இருந்தது என்பதனை அறியப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. சிந்துச் சமவெளி நாகரிக காலத்தில், ஆரியர்களின் வருகைக்கு முன்போ, பின்போ நிலைமை எவ்வாறு இருந்தது என்பது குறித்து ஏதும் இன்று வரை அறிய இயலவில்லை. சிந்துச் சமவெளி நாகரிக காலத்திய முத்திரைகள் (Seals) கிடைத்துள்ளன. ஆனால், அவற்றில் என்ன கூறப்பட்டுள்ளது என்பதனை அறிய இயலவில்லை. எனவே, அவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகளின் பொருள் வெளிப்படும் போது நம்மால் இருக்கு வேத காலத்திற்கு முந்திய வரலாற்றினை அறிய இயலும்.

இருக்கு வேத காலத்தின் ஆட்சி அமைப்பு முறையினைப் பற்றி ஆராயும் போது நாம் மிகவும் கவனத்துடனே பொருள் கொள்ளவேண்டும். ஏனென்றால், இருக்கு வேதமோ, அதற்குப் பின் தோன்றிய வேதங்களோ, நமக்கு ஆட்சித் துறை அமைப்பு வரலாற்றினை அறிவிக்க வேண்டும் என்னும் கண்ணோட்டத்தில் எழுதப்படவில்லை. அவை சமய நூல்களே.

பிந்திய வேதகாலத்திற்கும் இருக்கு வேத காலத்திற்கும் இடையே சமூக, சமயத்துறைகளில் மட்டுமின்றி அரசியல் துறையிலும் நிரம்ப வேறுபாடுகள் காணப்படுகின்றன

காவியங்களின் காலத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. காவியங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளின் பிரதிபலிப்பு இந்து ஆட்சி ஏற்பட்ட போதெல்லாம் ஏற்பட்டதைக் காண்கிறோம்.

நாம் படிக்கின்ற இக்காலப் பகுதியில் தர்மம், சபா, சமிதி, குடியரசுகள் ஆகியவை பற்றிய செய்திகளைத் தனித்தனி அத்தியாயங்களாகக் காண்கிறோம். இந்தியச் சிந்தனையில் தர்மக் கோட்பாடு தனிச் சிறப்பு வாய்ந்தது. எத்தனையோ வகையான தர்மக் கோட்பாடுகளை நாம் காண்கிறோம். அதைப் போலவே அரசருக்கு உதவிய இரண்டு அமைப்புகளாகச் சபா, சமிதி ஆகியவை விளங்கின. இவை குறித்துத் தனியாகக் காணவேண்டியது அவசியமாகிறது. பண்டைய இந்தியாவில் முடியரசுகளோடு குடியரசுகளும் (Republics) இருந்தன என அறியும் போது, அக் குடியரசுகளை இக்காலக் குடியரசுகள் போல அமைந்தவை என்று எண்ணிவிடக் கூடாது.

கி.மு. ஆறும் நூற்றாண்டினைச் சமய மறுமலர்ச்சிக் காலம் என்று சொல்லுகின்றோம். இந்தியாவில் மட்டுமின்றி உலக நாடுகள் பலவற்றிலும் சமய மறுமலர்ச்சி ஏற்பட்டதும், கன்பூஷியஸ் போன்றவர்கள் தோன்றியதும் இக் காலத்தே தான். இக் காலத்தில் மதத்தின் எழுச்சி பற்றியும், அது ஆட்சித்துறை அமைப்பு வரலாற்றினை எவ்வாறு பாதித்தது என்பது குறித்தும் காண்கிறோம். பின்னர் மௌரியப் பேரரசைப் பற்றிக் காணும் போது, 'அர்த்தசாஸ்திரம்' என்னும் நூலில் கௌடில்யரின் கருத்துகளைத் தனியாகவும், மற்றச் சான்றுகளின் துணைக்கொண்டு மௌரிய ஆட்சி முறை பற்றிப் பொதுவாகவும் ஆராய்வோம்.

ஆட்சித்துறை அமைப்பு வரலாற்றினை அறிந்திட விழையும் நமக்கு, இடையூறும் நம் முயற்சிக்குத் தடையும் ஏற்படுவது மௌரியர்களின் வீழ்ச்சியில் தொடங்கிக் குப்தர்களின் ஆட்சித் தொடக்கம் வரை உள்ள காலத்தில்தான். இக்காலம் நிலையில்லா அரசுகளின் காலம்; அந்நியப் படை எடுப்புகள் பல ஏற்பட்ட காலம்; எனவே உறுதியான சான்றுகள் ஏதும் இல்லாது நாம் தடுமாற்றமடைகிறோம். இக்கால அரசுகளில் குஷானர்களின் ஆட்சி வட இந்தியாவிலும், சாதவாகனர்களின் ஆட்சி தென்னிந்தியாவிலும் குறிப்பிடத் தகுந்தவையாக உள்ளன.

குப்தர்களின் காலத்தில் ஏராளமான சான்றுகளின் துணைகொண்டு ஆட்சி முறை அமைப்புக் குறித்த தெளிவான விளக்கத்தினை நாம் பெறுகிறோம். குப்தர்களுக்குப் பின் ஹர்ஷருடைய ஆட்சிமுறை அமைப்புச் சிறப்புப் பெற்ற ஒன்று ஆகும். குப்தர்களுக்கு அடுத்தபடியாக, ராஜபுத்திரர்களின் ஆட்சி அமைப்பினைக் குறித்த ஆய்வினை மேற்கொள்ளுகிறோம். பின்னர் இந்தியமண், வரலாற்றில் மாறுதல்களை ஏற்படுத்திய ஆக்கிரமிப்பாளர்களைச் சந்திக்கிறது.

அத்தகைய ஆக்கிரமிப்பாளர்களில் முதலாவதாகக் குறிப்பிடத் தகுந்தவர்கள் அராபியர்கள். தங்களோடு சில அரசியல் நிறுவனங்களையும், கருத்துகளையும் அவர்கள் கொண்டு வந்தனர்.

கஜனவைடுகளின் காலத்தில் டெல்லிச் சுல்தானிய அரசு உருவாயிற்று. கஜினி மாமூது சிலை வழிபாட்டை இந்தியாவிலிருந்து அறவே ஒழித்துக்கட்டிவிடுவதெனச் சபதம் பூண்டார். ஆனால், ஆட்சிமுறை எதனையும் அவர் இந்தியாவில் புகுத்தவில்லை. குத்புத்தின் காலத்திலிருந்துதான் டில்லிச் சுல்தானிய அரசு என்று எல்லாராலும் அறியப்படுகின்ற முஸ்லிம் அரசு இந்தியாவில் தொடங்கியது. டில்லிச் சுல்தானியர்களுக்குப் பின் உள்ளூர் அல்லது வட்டார நாடுகளின் ஆட்சி பற்றிய ஆய்வினை மேற்கொள்கிறோம்.

பதினைந்தாம் நூற்றாண்டில் மேற்கூறிய இருவேறுபட்ட நாடுகளின் தொகுதிகளைக் காண்கிறோம். இந்தியாவிற்கு வந்த அந்நியர்களில் ஆப்கானியர்களின் ஆட்சியே சிறப்புப் பெற்ற ஒன்றாகத் திகழ்ந்தது. இதற்குக் காரணம் ஷெர்ஷாவே ஆவார். இந்திய வரலாற்றின் சிறப்பு மிக்க காலங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது முகலாயரின் ஆட்சிக் காலமே ஆகும். இக்காலத்தில் அக்பருடைய ஆட்சிக் காலம் சிறப்புமிக்கதாக விளங்கிற்று. ஔரங்கசீப்பின் காலத்தில்தான் சமயத் துறை, பண்பாட்டுத்துறை, அரசியல்துறை ஆகியவற்றில் மாறுதல்கள் தோன்றின. அக்பருடைய காலத்திற்குப் பின்னர் ஆட்சித்துறையில் மாறுதல்கள் தோன்றின; பேரரசு விரிவடைந்து கொண்டிருந்தமையால் புதிய நிர்வாகத் துறைகள் ஏற்பட்டன.

வட இந்தியாவில் இருந்த அரசுகள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டபோது தென்னிந்தியாவில் இருந்த அரசுகள் அமைக்

கப்பட்டிருந்த விதம் குறித்து ஆராய்தல் அவசியமாகிறது. தென்னிந்திய அரசுகள் வட இந்தியாவில் ஏற்பட்ட மாறுதல்கள் குறித்துத் தம்மிடையே எவ்வித மாற்றமும் பெறவில்லை; தத்தம் முன்னோர்களின் வழியையே பின்பற்றின. விஜயநகரப் பேரரசு காலம் போர்த்துகீசியர் வருகையைச் சந்தித்தது. ஆனால், போர்த்துகீசியர் வருகையினால் விஜயநகரப் பேரரசின் ஆட்சிமுறையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. அவர்கள் ஏற்கெனவே இருந்து வந்த முறைகளையே கடைப்பிடித்து வந்தனர். அந்நியர்களின் வருகையின் விளைவு எவ்வகையிலும் விஜயநகரப் பேரரசு ஆட்சி அமைப்புக் கொள்கையில் மாறுதல்களை ஏற்படுத்தவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழக வரலாற்றினைப் பொறுத்த மட்டில், திருக்குறளில் ஆட்சி அமைப்புமுறை இருந்ததைக் குறித்துக் கூறப்பட்டுள்ள செய்திகளை அறிகிறோம். திருக்குறள் அரசியல் விளக்க நூலாக இல்லாவிடினும் நம் ஆய்வுக்கு மிகவும் துணை புரிகிற ஒன்றாகும்.

இதுவரையில், நாம் காணவிருக்கின்ற ஆட்சி அமைப்பு முறை குறித்த சிறிய விளக்கத்தினைப் பெற்றோம். இந்த அடிப்படையில் இனி வரும் அத்தியாயங்களில் ஒவ்வொரு காலத்திலும் நிலவிய முறைகளைக் காண்போம். இனிச் சான்றுகள் கூறும் செய்திகளோடு நம் ஆய்வினை மேற்கொள்வோம்.

## ஆதாரங்கள்
## (Sources)

*வரலாற்று அறிவு*

இந்திய வரலாற்றில் ஆட்சி அமைப்பு முறை வளர்ச்சியினைப் பற்றி அறிந்துகொள்ள நமக்கு ஏராளமான ஆதாரங்கள் துணைநிற்கின்றன. ஆனால், அச்சான்றுகள் முழுமையாக ஆட்சி அமைப்பு முறைபற்றியே விளக்குகின்ற சான்றுகள் அல்ல. மேலை நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது இந்தியாவில் வாழ்ந்தவர்கள் நமக்குச் சான்றுகளாக விட்டுச் சென்றுள்ளவை வரலாற்று அறிவுடனோ, (Historical sense) அரசியல் வளர்ச்சி முறையினை விளக்குகின்ற கண்ணோட்டத்துடனோ அமைக்கப்பட்டவை ஆகா. கிடைத்த சான்றுகளை நாம் முழுமையாக உண்மை என்று நம்பிவிடவோ அல்லது

முழுவதும் புனைந்து உரைக்கப்பட்டவை என்று தள்ளிவிடவோ இயலாது. வரலாற்றுச் சான்றுகளை ஆராய்கின்ற எவரும் மிகவும் நுட்பமாக ஆராய்ந்தே எம் முடிவிற்கும் வருதல் வேண்டும்.

வரலாற்று அறிஞர்களிடையே இந்திய மக்களுடைய வரலாற்று அறிவு குறித்து இரு வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. ஒருசாரார் இந்தியர்களுக்கு வரலாற்று அறிவு (Historical sense) இல்லை என்றும், மற்றொரு சாரார் உண்டு என்றும் கருதுகின்றனர். டாக்டர் கீத், என்பார் முதலில் கூறிய வகையைச் சேர்ந்தவர். அவர் ‘இந்தியாவில் இலக்கியங்கள் நிரம்ப இருந்தாலும், மிகவும் குறைவாகவே வரலாற்றுச் செய்திகள் அவற்றிலிருந்து கிடைக்கின்றன. வடமொழி இலக்கியத்தின் வளமான காலத்திலும்கூட, சிறந்த வரலாற்று ஆசிரியன் என யாரையும் கருத இயலவில்லை’ என்று உரைக்கின்றார்.

## நிலமானிய முறை

சான்றுகளை ஆராய்ந்த மேலைநாட்டவர்களின் குறிப்புகளுக்கும், இந்திய வரலாற்று ஆசிரியர்களின் குறிப்புகளுக்கும் வேறுபாடுகள் காணப்படுவது இயற்கை. இதற்குக் காரணம் இருசாராரின் கண்ணோட்டமே ஆகும். மேலை நாட்டவர்கள் இந்திய வரலாற்றுச் சான்றுகளைத் தங்கள் அமைப்பு முறைகளோடு ஒப்பிட்டு ஆராய்கின்றனர். அப்படி ஒப்பிடும் போது அவர்கள் சரியான பதத்தினை உணர இயலாதவர்களாக உள்ள நிலையினைக் காணலாம். சிறப்பாக, நிலமான்ய முறையில் (Feudalism) நம் நாட்டிற்கும் மேலை நாட்டிற்கும் வேறுபாடு உள்ளது.

## அலெக்சாந்தர்

ஏன் இந்திய மக்கள் வரலாற்று உணர்வுஇன்றி வாழ்ந்தனர்? அலெக்சாந்தரைப் பற்றி நாம் இன்று நிறைய, செய்திகளை அறிந்துள்ளோம். ஆனால், அந்தச் செய்திகள் எல்லாம் நமக்கு, நம்முடைய ஆதாரங்களில் இருந்து கிடைக்கவில்லை. கிரேக்க நாட்டு அறிஞர்கள் எழுதிவைத்த குறிப்புகளின் மூலமே அலெக்சாந்தரின் படை எடுப்பினைப் பற்றி அறிகிறோமே தவிர இந்தியச் சான்றுகள் எதிலும் இதைப் பற்றிய சிறு குறிப்புக்கூடக் காணப்படவில்லை. அலெக்சாந்தரின் பெயரே இந்தியச் சான்றுகளில் இல்லை. இதற்குக் காரணம் இந்திய மக்களின் மனப்பான்மையே. அவர்கள் தங்களுக்கு வாழ்க்கையில் நேர்பவை எல்லாம் வினைப்பயனே என்று எண்ணினார்கள். காதால் கேட்பனவற்றிற்கும், அனுபவபூர்வ

மான உண்மைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை அவர்கள் உணரவில்லை.

கே. பி. ஆச்சார்யா போன்ற சிலர் இந்தியர்களுக்கு வரலாற்று உணர்வு இருந்தது என வாதிடுகின்றனர். கே. பி. ஆச்சார்யா சாசனங்களைச் சான்று காட்டி இந்திய மக்கள் வரலாற்று உணர்வு மிக்கவர்கள் என்று உரைத்தார். கலிங்க தேசத்தை ஆண்ட காரவேல மன்னனின் சாசனங்கள், சமுத்திர குப்தர், ருத்ரதாமன், ஹர்ஷர், சாளுக்கியர்கள், இராட்டிர கூடர்கள், பாலர்கள், சேனர்கள் ஆகியோரின் சாசனங்கள் இந்திய மக்களின் வரலாற்று உணர்வினைக் காட்டுவன. இச் சாசனங்களில் இருந்து அரசர்களுடைய வமிசத்தினரைப் பற்றி எழுதிவைத்துள்ள குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன. ஆகவே, டாக்டர் கீத் அவர்களுடைய கூற்று ஓரளவிற்கே உண்மையாகும். முழுமையாக அதனை ஏற்றுக்கொள்வது அவ்வளவு பொருத்தமன்று.

### மூன்று பிரிவுகள்

இந்திய வரலாறு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முன்னர், அம் மூன்று பிரிவுகளையும் இந்துக்கள் காலம்,(Hindu Period) முகம்மதியர்கள் காலம்,(Moghul Period) ஆங்கிலேயர்கள் காலம், (British Period) என்றே பெயரிட்டனர். ஆனால், நவீன காலத்தில் மேற்கூறிய பிரிவுகளை வரலாற்று அறிஞர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இந்துக்கள் காலம் என்று பிரிக்கப்பட்ட பகுதியில் இந்துக்களைப் பற்றி மட்டுமோ, முகலாயர்கள் காலம் என்பதில் முகலாயர்களைப் பற்றிமட்டுமோ, ஆங்கிலேயர்கள் காலம் என்பதில் ஆங்கிலேயர்களைப் பற்றி மட்டுமோ நாம் படிப்பதில்லை. எனவே பழைய காலம், (Ancient Period) இடைக்காலம் (Medieval Period) நவீன காலம் (Modern Period) என்னும் பிரிவுகளை நடைமுறையில் காண்கிறோம். இப் பிரிவுகளும் சரியானவை என நாம் உரைத்திட இயலாது. ஏனென்றால், ஒவ்வொரு காலத்தையும் பிரித்திட அளவுகோல் ஏதுமில்லை.

ஆட்சி அமைப்பு முறை பற்றிய வரலாற்றினை இந்நூலில் முகலாயர்கள் ஆட்சிக் கால முடிவு வரையில்தான் பயில்கிறோம். எனவே பழைய காலம், இடைக்காலம் ஆகியவற்றில் ஆட்சி அமைப்பு முறை வளரத் துணைநின்ற சான்றுகள் எவை என அறிந்துகொள்ளுதல் அவசியமாகும்.

### இருக்கு வேதம்

இருக்குவேத காலத்தினை உணர இலக்கியச் சான்றுகளில் முன் நிற்பது இருக்குவேதமேயாகும். இந்த இலக்கியங்களில் பழைமையான இலக்கியம் இதுவே என்பது எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வேதநூல்கள் புனிதமானவை யாகக் கருதப்படுபவை. மேலும், இவை சமய நூல் வகையைச் சார்ந்தவை. இருக்கு வேதம் சமய நூல் ஆயினும் அதில் ஆங்காங்கே சமூக அரசியல் நிகழ்ச்சிகள் நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. இருக்கு வேதத்திற்குப் பின்வந்த சாம, யஜுர், அதர்வண வேதங்களில் அதர்வண வேதமே மிக வும் துணைசெய்கிறது. உரை நடையாக விளங்குபவை பிராம ணங்கள் கிரகிய சூத்திரங்கள். வேதங்களுக்கும் பிராமணங் களுக்கும் கிரகிய சூத்திரங்கள் பிந்தியவை. தர்மசாத்திரங்கள், தர்மத்தைப்பற்றி விளக்குகின்றன. பர்கிடார் என்பாரின் கூற்றுப்படி 'வேதங்கள் சமய நூல்கள் ஆகையால் அவற்றை நம்புதல் கூடாது.' பாணினி எழுதிய நூல் இலக்கண நூல் ஆகும். ஆயினும் இதில் பாணினியின் காலச் சமூக, அரசியல் நிலைகள் கூறப்பட்டுள்ளன. இந் நூலாசிரியரின் காலம் புத்த ருடையகாலத்திற்கும் முந்தியது என்றும், கி.மு. ஏழாம் நூற் றுண்டு என்றும் உரைக்கப்படுகிறது.

### பாணினி

பாணினிக்குப் பின்னர், புத்த சமய நூல்கள் சமய நூல் களாக இருப்பினும் கி.மு. ஆரும் நூற்றுண்டில் மக்கள் வாழ்க்கை, அரசியல் நிலைமை ஆகியவற்றை விளக்குகின்றன. வடமொழி இலக்கியத்தில் வேதங்களுக்கு அடுத்தபடியாக இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டு காவியங்களுமே குறிப்பிடத் தகுந்தவை. ஏனெனில், இவை இரண்டின் மூல மாகக் காவியகால மக்களின் அரசியல் சமூகநிலை ஆகியவை நமக்குத் தெரியவருகின்றன. இவற்றின் மூலமாக, ஆரியர் கள் போர் ஆர்வம் மிக்கவர்கள் எனவும், போரில் வெற்றி பெற உடன்பாடுகள் மேற்கொண்டனர் எனவும் அறிகிறோம். மேலும், அரசர் அமைச்சர்களின் ஆலோசனையின்படியே அரசாட்சி நடத்திய செய்தியும் நமக்குக் கிடைக்கப் பெறு கிறது. மனு, யஜ்ஞவால்கியர், விஷ்ணு, பிரஹஸ்பதி, நாரதர் ஆகியோரின் ஸ்மிருதிகளும் துணையாய் உள்ளன. டாக்டர் விண்டர்னிட்சு (Winternintz) என்பாரே புராணங்கள் வரலாற் றிற்கு முக்கிய சான்றுகள் என எடுத்து உரைத்தவர். புராணங் கள் பழைமையானவையும் ஆகும். பாணர் என்னும் கவிஞர்

தம்முடைய கிராமத்தில் வாயு புராண வாசிப்பு நடைபெற்றதையும், 18 புராணங்களின் பெயர்களையுமே கி. பி. 1000-இல் இந்தியா வந்த அல்பெருனி (Alberuni) என்பார் குறித்து வைத்துள்ளார். அதன்வாயிலாகப் புராணங்களின் பழைமை நமக்குத் தெரியவருகிறது. 18 புராணங்களும் வரலாற்றுத் தேவையை நிறைவு செய்வன ஆகமாட்டா. புராணங்கள் பண்டைய நில இயல் முறையை அறிய உதவும் சான்றுகள் எனவும் சொல்லலாம்.

*அர்த்த சாஸ்திரம்*

அர்த்த சாஸ்திரம் என்னும் நூல் நிர்வாக அமைப்பு முறைகளை மட்டுமின்றிச் சமூக, சமய நிலைகளையும் விளக்குகிறது. முத்திராராக்ஷா என்னும் நூல் மௌரியப் பேரரசர் சந்திரகுப்தர், நந்தவம்சத்தினை அழித்து ஆட்சிக்கு வந்த முறையைக் கூறுகிறது. காளிதாசரின் நூல்கள் நமக்கு வரலாற்றை அறியப் பெரிதும் உதவுகின்றன. பாணர் எழுதிய ஹர்ஷ சரிதம் அரசியல் வரலாற்றிற்கு மிகவும் பயன்படுகிறது. இராம சரிதம் என்னும் நூலிலிருந்து வங்காள அரசரான இராமா வரைப் பற்றியும், கல்கணரின் இராஜதரங்கிணியிலிருந்து காஷ்மீரத்தின் வரலாற்றினையும் அறிவது போலவே தமிழக வரலாற்றினை நாம் தெரிந்துகொள்ளச் சங்ககால இலக்கியங்கள் உதவுகின்றன. திருக்குறளில் அரசியல் குறித்து இயற்றப்பட்டுள்ள அதிகாரங்களில் அரசனின் கடமைகள், அமைச்சரின் கடமைகள், நல்ல அரசுக்கு உரிய இலக்கணம் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

*வெளிநாட்டவர்*

இவை தவிர வெளிநாட்டவர்களின் (Foreign accounts) குறிப்புகள், வரலாற்றை அறிய உதவினாலும் அவற்றை நாம் முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலாது. இருப்பினும், மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகாவையும் பாகியான், இட்சிங், ஹியூங்சாங் ஆகியோரின் குறிப்புகளையும் பயன்படுத்தி ஏற்கெனவே உள்ளவற்றோடு ஒப்பிட்டு ஒரு முடிவிற்கு வர முடிகிறது.

*அராபியர்கள்*

அராபியர்களும், துருக்கியர்களும், மங்கோலியர்களும், முகலாயர்களும் இந்திய மண்ணில் நிலைபெற்ற பின்னர் ஓரளவு தெளிவான வரலாறு நமக்குக் கிடைக்கத் தொடங்கியது. மன்னர்களே தத்தம் வாழ்க்கைக் குறிப்புகளைக்

குறித்து வைத்தனர் அல்லது அரசர் அவையில் இருந்த புலவர்கள் அன்றாட நடப்புகளைக் குறித்தனர். அவர்களில் அப்துல் ஹமீது லோகாரி, இபின் பதூதா போன்றவர்கள் சுல்தான்கள் ஆட்சிக் காலத்திலும் பதாவுனி, காளிகான், அபுல்பாசல் நிசாமுதீன் அகமது, நியமதுல்லா, அப்பாஸ் கான் சார்வானி, இனயட்கான், அகில்கான் ராசி, முகம்மதுமசூம் போன்றவர்கள் முகலாயர்கள் காலத்திலும் குறிப்பிடத்தகுந்தவர்கள். பாபரின் குறிப்புகளும், ஜஹாங்கீரின் குறிப்புகளும் இலக்கியச் சிறப்பு வாய்ந்தவை. முகலாயர் காலத்தியச் சான்றுகள் மிக அதிகமாக உள்ளன. அவற்றில் சிலவற்றையே நாம் மேலே பார்த்துள்ளோம்.

### போர்த்துக்கீசியர்

போர்த்துக்கீசியர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோர் வருகையையும் இங்குக் குறிப்பிடவேண்டும். ஆனால், அவர்கள் எழுதிவைத்த குறிப்புகள் எல்லாம் காய்தல் உவத்தல் இன்றி உளச்சான்றின்படி எழுதப்பட்டவையல்ல. அவர்கள் சலுகைகள் அளித்த அரசர்களைப் பாராட்டியும், அளிக்காத அரசர்களைத் தூற்றியும் எழுதியதாக வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

### பட்டயங்கள்

இலக்கியச் சான்றுகளை அடுத்துப் பட்டயங்களை (Inscriptions) நாம் துணைக்கொள்கிறோம். பட்டயங்கள் இருவகைப்படும். முதல் வகை கல்வெட்டுப் பட்டயங்கள், இரண்டாம் வகை உலோகப் பட்டயங்கள். கல்வெட்டுப் பட்டயங்களில் அசோகரின் பட்டயங்கள் புகழ்பெற்றவை. பாஹியான் என்னும் சீன தேசத்துப் பயணி புத்த விகாரங்களில் தாமிரப் பட்டயங்கள் பல இருந்ததைக் குறித்துள்ளார். உத்திர மேரூர்ப் பட்டயம் தமிழகத்துப் பட்டயம் ஆகும். சோழர்கள் ஆட்சி முறையினை இப் பட்டயத்தின் மூலம் அறிகிறோம்.

### நாணயங்கள்

நாணயங்கள் மூலமாக நாம் அரசியல் அமைப்பு முறையினைப் பற்றித் தெளிவாக ஏதும் தெரிந்துகொள்ள இயலவில்லை. வெளிநாட்டவர்களில் கிரேக்கர்களின் எழுத்தோவியங்கள் நமக்கு உறுதுணையாக இருப்பதைக் குறிப்பிடல் வேண்டும். தாரநாத் எனப்படும் திபெத்திய வரலாற்று

ஆசிரியர் புத்தமதத்தைப்பற்றிய சிறப்பான வரலாற்றையும், அல்பெருனி என்பார் மாமூது கஜினியின் கால வரலாற்றையும் நமக்கு அளிப்பது போலவே மனூசி, டிராவர்னியர், பெர்னியர் ஆகியோர் முகலாயர்களின் கால வரலாற்றினை விளக்கி எழுதியுள்ளனர்.

இத்துணைச் சான்றுகள் இருந்தும் நம்மால் கருத்து ஒருமித்த வரலாற்றினை உருவாக்கிட இயலவில்லை. ஆயினும், பெரும்பாலான வரலாற்று அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப் படும் கருத்துகளே உண்மைக் கருத்துகளாகக் கருதப் படுகின்றன. சான்றுகளை ஆராய்ந்த ஆங்கிலேயர்கள் தங்கள் நாட்டு முறைகளை மனத்தில் கொண்டு கருத்துகளைப் பரப்பினர். இந்திய வரலாற்று ஆசிரியர்கள் அவற்றை ஒப்பிட்டு நோக்காது, தாங்கள் வாழ்கின்ற நூற்றாண்டிற்கு ஒப்பக் கருத்துகளைக் கோத்தனர்.

நாம் சான்றுகளைப் பொருத்தமட்டில் இந்த அத்தியாயத்தில் மிகஅதிகமாகப் பேசப்பட்ட—பயன்பட்ட சான்றுகளையே குறித்துள்ளோம். அத்துணைச் சான்றுகளையும் ஒரு கட்டுரை அளவில் அடக்கிவிட முடியாது. அவ்வப்போது பின்னால் நம் பாடப் பகுதியில் ஆட்சித்துறை நிறுவனங்களைப் பற்றிப் பயிலும்போது சான்றுகள் கூறுகின்ற செய்திகளை மேற்கோள்களுடன் காண்போம். இச்சான்றுகளைப் பற்றி மட்டுமின்றி இவற்றின் தன்மை குறித்து அறிஞர் பெருமக்களிடையே காணப்படுகின்ற கருத்து வேறுபாடுகள் யாவை என்பதைக் குறித்த செய்திகளையும் காண்போம். சான்றுகள் பற்றிய விளக்கங்களை இந்த அளவில் நிறுத்திக்கொண்டு இந்தியாவின் இலக்கியங்களில் பழைய இலக்கியமாகிய இருக்கு வேத காலத்தில் இருந்த ஆட்சி அமைப்பு முறை எங்ஙனம் இருந்தது என்பதனை ஆராய்ந்து நம்முடைய ஆட்சி அமைப்பு முறை பற்றிய ஆய்வினைத் தொடர்வோம்.

# 2. இருக்குவேத கால ஆட்சி அமைப்புமுறை

## (Rig Vedic Polity)

### ஆரியர்களின் பூர்வீகம்

நமக்கு ஆரியர்களைப் பற்றிய வரலாறு அவர்கள் சப்த சிந்துப் பகுதியிலே வாழத் தொடங்கிய பின்னரே தெரிய வருகிறது. ஆனால், அதற்கு முந்திய கால வாழ்க்கை முறைகள் எவ்வாறிருந்தன என்பது குறித்துத் தெளிவான செய்திகள் நமக்குக் கிட்டவில்லை. அதைப்பற்றி முடிவாக உரைப்பதற்கு ஆவணங்கள் (Records) ஏதும் இல்லை. ஆரியர்களைப் பொருத்த மட்டில் அவர்கள் வெளிநாட்டவர்களென்றும், இந்திய மண்ணிலே தோன்றியவர்களென்றும் இருவகையான கருத்துகள் நிலவுகின்றன.

ஆரியர்களுடைய பூர்வீகத்தைப் பற்றி அறிவது மிகவும் கடினமான பணியாகும். இருக்கு வேதத்தில் உள்ள சில சூத்திரங்களின் துணைகொண்டும், மொழி ஆராய்ச்சியின் துணை கொண்டுமே நாம் ஒரு முடிவிற்கு வர இயலுகிறது. ஆனால், அம் முடிவு சரியான முடிவுதானென்று கூறிவிட முடியாது. மொழி நூல் அறிஞர்கள் மொழி ஆராய்ச்சியின் மூலம் இந்திய, ஐரோப்பிய மொழிகளுக்கு இடையே அடிப்படையான ஒற்றுமை இருப்பதை உலகுக்கு அறிவித்தனர்.

சர். வில்லியம் ஜோன்ஸ் (Sir. William Jones) என்பார் வங்காளத்திலிருந்த 'இராயல் ஏஷியாடிக் சொசைட்டி' என்னும் சங்கத்தில் 1786 ஆம் ஆண்டு விரிவுரை நிகழ்த்தியபோது வடமொழிக்கும், ஐரோப்பிய மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமையை எடுத்துக் காட்டினர். மேலும், இந்தத் தொடர்பானது தற்செயலாக ஏற்பட்டதன்று, நன்கு வேரூன்றிய ஒன்று

என்றும் வலியுறுத்தினர். இவரே ஒப்பீட்டு மொழியியலுக்கு வழிவகுத்தார்.

மாக்ஸ் முல்லர் (Max Muller) என்னும் ஜெர்மானிய அறிஞர் மொழிக்கும், இனத்திற்கும் தொடர்பு உண்டு என்னும் கருத்தினை வெளிப்படுத்தினர். மேலும், அவர் இந்தியர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் இடையே மொழித் தொடர்பு மட்டுமின்றி இலக்கியத் தொடர்புமிருந்தது என்று கூறினர்.

ஆரியர்கள் ஐரோப்பாவிலிருந்து வந்தவர்களென்றும் சிறிது காலம் ஈரான் தேசத்தில் தங்கினரென்றும் பின்னரே இந்தியாவிற்கு வந்தனரென்றும் கருதப்படுகிறது. ஆனல், திரு. பி. டி. சீனிவாச ஐயங்கார் திராவிடர்களும் ஆரியர்களும் வேறுபட்டவர்களல்லர், தீயை வழிபட்டவர்கள் ஆரியர்களென்றும், பழைய சம்பிரதாயங்களைக் கொண்டவர்கள் திராவிடர்களென்றும் கூறி இந் நாட்டைச் சேர்ந்தவர்களே, என்று வலியுறுத்துகிருர். ஈரான் நாட்டவர்களுக்கும், வேதகால ஆரியர்களுக்கும் இடையே சமயச் சடங்குகளில் உள்ள ஒற்றுமைகளை மார்ட்டின் ஹாக், ஆர். எல். மிட்டர் ஆகியோர் எடுத்துக் காட்டினர். இரு தேசத்தவர்க்கும் இடையேயுள்ள உறவினை ஆராய்வது நம் நோக்கமில்லை. ஆயினும், ஈரானியர்களின் தொடர்பு ஆரியர்களுடைய அரசியல் அமைப்பு முறைகளைப் பாதித்திருக்கக்கூடும் என்பதை விளக்குவதற்கே ஆரியர்களின் பூர்வீகத்தைப் பற்றி விவாதித்தோம். ஆரியர்கள் வெளியிலிருந்து வந்தவர்கள் என்பதையே பெரும்பாலான வரலாற்று அறிஞர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனல், எங்கிருந்து வந்தவர்கள் என்பது குறித்துப் பல கருத்துகள் நிலவுகின்றன.

### வாழுமிடம்

வேதகால அரசியல் நிலைமைகளை அதிலும் சிறப்பாக இருக்குவேதகால ஆட்சியமைப்பு முறைகளை அறிந்துகொள்ள நமக்குக் கிடைத்துள்ள ஒரே சான்று இருக்கு வேதமாகும். இருக்கு வேதம் அரசியல் விளக்க நூல் அன்று. மாருகச் சமய நூல் என்பதை மட்டும் கருத்தில் கொள்ளவேண்டும். இருக்குவேதத்திலிருந்து ஆரியர்கள் பல குழுக்களாகப் பிரிந்து வாழ்ந்தனரெனவும், வாழுமிடங்களைத் தேடி அலைந்தனர் எனவும் அறிகிறோம். அவர்கள் அவ்வாறு முன்னேறிய போது ஏற்கெனவே அங்கு வாழ்ந்தவர்களோடு போரிட நேரிட்டது. அங்கு வாழ்ந்தவர்கள் கற்களாலும், கட்டைகளாலும் அரண்களை அமைத்துக்கொண்டு வாழ்ந்தனர். அவர்களை

வெற்றி கொண்ட ஆரியர்கள் எதிரிகளின் அரண்களைத் தங்கள் உடைமைகளாக்கிக் கொண்டனர்.

### தாஸர்கள்

ஆரியர்களுக்கும் ஏற்கெனவே வாழ்ந்த பூர்வீகக் குடியினருக்கும் இடையே நிறத்திலும், தோற்றத்திலும், உடல் அமைப்பிலும் மட்டுமின்றிப் பேச்சிலும், பழக்கவழக்கங்களிலுங்கூட மாறுதல்களிருந்தன. இருக்குவேதத்தில் தாஸர்கள் தாஸ்யூக்கள் என்னும் சொற்கள் அடிக்கடி காணப்படுகின்றன. 'தாஸர்கள்' என்று ஆரியர்கள் தங்கள் எதிரிகளைப் பழித்து உரைத்துள்ளனர். தாஸ்யூக்கள் என்றால் இறைவனின் எதிரிகள் என்பது பொருள்.

### சமுதாய அமைப்பு

பூர்வீகக் குடியினராகிய மேற்கூறியவர்களின் பழக்க வழக்கங்கள் பண்பாடுகள் ஆகியவை எந்த அளவிற்குக் கலந்துள்ளன என்பதை ஆராய்வது இயலும் பணியன்று. ஈரானியப் பண்பாடு, பூர்வீகக் குடிகளின் பண்பாடு, ஆரியர்களின் இயல்பான பண்பாடு ஆகியவற்றின் கலப்பிலேதான் இருக்குவேத கால ஆட்சி அமைப்புமுறை உருவாயிருத்தல் வேண்டும். நடுநிலையோடு ஆராய்கின்ற எவரும் ஆரிய அரசியல் அமைப்பு முறை வளர்ச்சி பழங்காலத்துடன் தொடர்பு கொண்டது என்பதைமட்டும் மறக்க இயலாது. ஆட்சி நிர்வாகத்தினை அறிந்து கொள்ளுமுன் ஆரிய சமூகத்தின், சமூகப் பொருளாதார அமைப்பு முறையினை அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. ஏனென்றால், சமுதாய அமைப்பை ஒட்டியே அரசியல் வாழ்க்கை அமைகிறது.

### பிரிவு

ஆரிய சமூகத்தில் பாகுபாடுகள் அதனுள்ளேயே இருந்தன. பிராமணர்களுக்கும், க்ஷத்திரியர்களுக்குமிடையே போட்டி மனப்பான்மை நிலவியது. சமூகத்தின் தலைமைப் பதவிக்கு இருவரும் போட்டியிட்டனர். பிராமணர்கள் வேள்விகள் இயற்றிக் குருமார்களாகப் பணிபுரிந்தனர். சத்திரியர்கள் போர்த்தொழில் புரிந்தனர். பொதுவான சிலர் வைசியர் என்றழைக்கப்பட்டனர். ஆரியர்கள் அல்லாதோரில் போரில் ஆரியர்களிடம் தோற்றவர்கள் சூத்திரர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

### கோனாட்சி

கோனாட்சியே (Monarchy) வேதகால மக்களிடையே நிலவிய ஆட்சி நிறுவனமாகும். கோனாட்சி எவ்வாறு தோன்றியது என்பது குறித்துச் சில அனுமானங்கள் உள்ளன. ஆரிய சமூகம் தந்தைவழிச் சார்ந்ததாகவே (Patriarch) இருந்தமையால் கோனாட்சியே நிலவியது. ஆரியர்கள் ஈரானியர்களோடு கொண்ட தொடர்பினால் அரசியல் துறையிலும் சில மாறுதல்களைப் பெற்று இருக்கலாம். இந்தியாவிற்கு வந்த ஆரியர்கள், ரிதம் என்னும் இயலுலகக் (Cosmic order) காட்சியில் நிலவுகின்ற ஒழுங்குக் கோட்பாட்டினையும், யக்ஞம் என்னும் வேள்வி பற்றிய கோட்பாட்டினையும் தங்களுடன் கொண்டுவந்தனர்.

### வேள்வி

ஆரியர்கள் பூர்வீகக் குடிகளாக இருந்தவர்களோடு போரிட நேரிட்டது. போரில் வெற்றிபெற இறைவனின் துணை தேவைப்பட்டது. இறைவனின் துணையைப் பெற வேள்விகள் இயற்ற வேண்டியிருந்தது. இவ் வேள்விகளை இயற்றியவர்கள் குருமார்கள் அல்லது புரோகிதர்களாவார்கள். இவ் வேள்விகளின் பயனாக அரசருக்கு வெற்றி கிட்டியது என்று கருதப்பட்டது. அதன் விளைவாக வேள்விகளை முடித்த புரோகிதர்கள் அரசருக்கு நெருங்கியவர்களாகவும் அரசனின் நன்மதிப்பைப் பெற்றவர்களாகவுமாயினர். எனவே, புரோகிதர்கள் சமூகத்தில் ஒரு பிரிவினராக மாறினர். இவர்களைப் போலவே போர்த்தொழில் புரிந்து அரசனின் நன்மதிப்பைப் பெற்ற க்ஷத்திரியர்கள் சமூகத்தில் மற்றொரு வலிவு மிக்க பிரிவாக விளங்கினர். கைத்தொழில்கள் விவசாயம் ஆகியவற்றைச் செய்தவர்கள் வைசியர்கள் என்னும் பிரிவினர். இப்படிப் பிரிவுகள் இருந்த போதுங்கூட வாழ்க்கைத் தொழில் மரபு வழியில் இல்லை.

### அரசபதவி

அரசபதவி (Kingship) சமயச் சார்பற்றதாக இருந்தது. அரசர் இறைவனின் பிரதிநிதி என்றோ இறைவனின் மறுஉரு என்றோ எண்ணப்படவில்லை. மேலும், அரசபதவிக்குப் புனிதத் தன்மை ஏதும், புனித உரிமைகள் ஏதும் அளிக்கப்படவில்லை. காரணம், அரசபதவி உருவாக்கப்பட்டதே தேவையை முன்னிட்டுத்தான். இருக்கு வேத காலத்தில் தொழில்கள் அடிப்படையில் பிரிவுகள் இருந்தனவே ஒழியச் சாதிகளில்லை.

*தலைவன்*

அரச பதவியின் தோற்றத்தைப்பற்றி இருக்கு வேதத்தில் ஒரு குறிப்புக் கிடைத்துள்ளது. அதில் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் போர் தொடர்ந்துநடைபெற்றதென்றும், அப்போரில் தேவர்களுக்கு வெற்றி கிட்டவில்லையென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அப் போரில் தங்களுடைய தோல்விக்குக் காரணம் தங்களுக்குத் தலைவன் இல்லாமையே என உணர்ந்து இந்திரனைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்தார்களென்றும் கூறப்பட்டுள்ளது. கோனாட்சி ஆரம்ப நிலையில் தேர்தல் முறையிலேயே நடைபெற்றிருக்கிறது. நாம் தேர்ந்தெடுத்தலுக்கும் (election), பொறுக்குதல் (selection) என்பதற்கும் உள்ள வித்தியாசத்தினை அறிய வேண்டும். இந்திரனுக்குக் கூறப்பட்டுள்ள 100-7ஆம் சூத்திரத்தில் 'மக்கள் தங்கள் நலன்களைப் பேணுவோனாக ஆக்கினர்' என்னும் வரியும் சூத்திரம் 124-8 -இல் 'குடிமக்கள் அரசனைப் பொறுக்கியெடுத்தல் போல்' என்னும் வரியும் காணப்படுகின்றன. மெக்டனல், கீத் ஆகியோர் சில நேரங்களில் கோனாட்சி தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் நடக்கவில்லை என்று கூறுவதற்குச் சான்றுகளில்லை. வேதகால அரசபதவி சில சந்தர்ப்பங்களில் தேர்வு முறையில் அமைந்ததாக இருந்தாலும் பல சந்தர்ப்பங்களில் மரபு வழியே இருந்துள்ளது. பேராசிரியர் தீட்சிதர் அவர்கள் தம்முடைய இந்து ஆட்சிமுறை நிறுவனங்கள் என்னும் நூலில் 'கோனாட்சி அமைப்புப் பழங்கால இந்தியாவில் எந்த அமைப்பிலிருந்து உருவாகியிருந்தாலும் ஓர் உண்மை மட்டும் தெளிவானது. அஃதாவது தேர்வுக் கொள்கை முக்கிய அங்கம் வகித்தது என்பதே. கோனாட்சியே மரபு வழிப்பட்ட குணதிசயமாக இருந்தாலுங்கூடத் தேர்வுக் கொள்கை ஏதாவதொரு வகையில் இருந்தது' என்று உரைத்ததோடு அரசர்கள் தங்கள் சந்ததியார்களை நியமிக்கும் அதிகாரமில்லாதவர்களாக இருந்தார்கள். இருப்பினும் தங்கள் வேட்பினைப் பொது மக்கள் ஏற்றுக்கொண்டால் நியமித்தார்கள் என்றும் உரைக்கின்றார்.

தேர்வு முறை

பாண்டியோபாத்தியாயா என்பார் குரு நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு முறையே நிலைபெற்ற அரசாங்க அமைப்பு ஆகும் என்று கூறுவதோடு அரசர்கள் தாங்கள் தங்கள் மூதாதையரின் சந்ததியினராகக் கடமையாற்றுதல் போலத் தங்கள் வாரிசுகளுக்கும் அவ் வுரிமை

வேண்டும் என்று வேண்டலாம்; ஆனால், அவ் வேண்டுதலை ஏற்றுக்கொள்வதும், எதிர்த்து உரைப்பதும் மக்கள் கையிலே இருந்தது என்கிறார். அரசன் பெயரளவிலேயே தேர்ந்து எடுக்கப்பட்டான் என்றே டாக்டர் எல். டி. பார்னெட் உரைக்கின்றார். இருக்கு வேத மக்களில் யாதுக்கள், புருக்கள், அனுக்கள், துருவாசகர்கள் என அழைக்கப்பட்ட இன மக்கள் தங்களுக்கெனத் தனித்தனியே தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.

## குடும்பம்

இருக்குவேத காலத்தில் ஆட்சித் துறையின் அடிப்படையான பிரிவு குடும்பம் ஆகும். இதனைக் குலம் அல்லது கிரகம் என்று உரைக்கின்றனர். அநேகக் கிரகங்கள் அல்லது குடும்பங்கள் சேர்ந்து கிராமம் உருவாயிற்று. கிராமத்தின் தலைவர் கிராமணி. கிராமணி என்றால் அன்பளிப்புகள் வழங்குபவர் என்பது பொருள். கிராமத்தில் மிக முக்கியமான அவர் கிராமமக்களுக்குத் தலைவராக விளங்கினார். அரசர்கள் கிராமங்களைக் கைப்பற்றிக் 'கிராமஜிதா'— கிராமங்களை வெற்றி கொண்டான் என்னும் பட்டத்தைப் பெற்றனர். நாட்டின் பாதுகாப்பில் கிராமத்தின் பங்கும் இருந்தது. மக்கள் சபையில் கூடி முன்னணிப் பிரச்சினைகளை விவாதித்தனர். கிராமத்திற்கு அடுத்த பிரிவு விஸ் ஆகும். விஸ் என்பது கிராமம் முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ பல பகுதிகளையோ கொண்டதா என்பது தெரியவில்லை. கிராமம் என்னும் அமைப்பைப் பொருத்தவரையில் அது புதிய அமைப்பாக இருக்கு வேத காலத்தில் விளங்கிற்று. ஏற்கெனவே இருந்துவந்த சிந்துச்சமவெளி நாகரிகம் நகர நாகரிகமாகும். ஆரிய நாகரிகம் கிராமப்புற நாகரிகமாகும். எனவே, சிலர் ஆரியர்களின் வருகைக்குப் பின்னரே கிராமங்கள் உருவாயின எனக் கருத்தில் கொண்டு கிராமம் என்பது புது நிறுவனம் என்று உரைக்கின்றனர். இராட்டிரம் கிராமத்தின் வளர்ச்சி அல்லது கிராமங்களின் ஒன்று சேர்ந்த பகுதியையோ குறிக்கும்.

## அடுத்த பிரிவுகள்

வரலாற்று அறிஞர்களிடையே மிக உயர்ந்த அமைப்பு எது என்பதில் கருத்து ஒற்றுமையில்லை. ஜனம் என்னும் அமைப்பே கிராமம், விஸ் ஆகியவற்றிற்கு மேலான அமைப்பு ஆகும். இவை எல்லாவற்றிற்கும் மேலானது

இராட்டிரமாகும். இராட்டிரம் என்ருல் அரசோடு சேர்த்துப் பேசப்படுவது. ஆனல் இராட்டிரம் நவீன அரசினின்று வேறு பட்டது. இராட்டிரம் அரசர்க்குரியது. சமுதாய அமைப்பில் குடும்பமும் ஒரு பிரிவாக விளங்கிற்று. ஆப்தே (Apte) என்னும் பேராசிரியர் கிராமம், விஸ், ஜனம் ஆகிய எல்லாமே ஒன்ருகவே பயன்படுத்தப்பட்டன என்றுரைத்தார். விசாவின் தலைவர் விசாபதி (Commonder of that section) ஆவார்.

கிராமம் சிறிய அமைப்பு, ஜனம் பரந்த அமைப்பு என்றே சொல்லவேண்டும். அரசனேடு மிக நெருக்கத்தில் தொடர்பு உள்ளது ஜனமேயாகும். இருக்கு வேதத்தில் பத்தாவது மண்டலத்திலுள்ள நூற்றுஐம்பத்தொன்பதாவது சூத்திரம் அரசனுக்கும், ஜனவிற்கும் இடையேயுள்ள உறவினை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. ஜனம் என்பதனை இனத்தோடு (tribe) தொடர்புபடுத்தல் வேண்டும். ஜிம்மர் (Zimmer) என்பார் ஜனம் என்ருல் இனம் என்னும் பொருளிலே கொள்ளு தல்தான் சிறப்பு என்று உரைக்கிருர். ஆரியர்கள் நிலைபெறு வதற்கு முன்னல் நாடோடிகளாகத் திகழ்ந்தனர் என்று கண்டோம். அவர்கள் தங்கிய பகுதி 'விஸ்' எனவும், தங்கிய மக்கள் 'விஸா' எனவும் அழைக்கப்பட்டனர். இவ்விஸாக்களில் பல இன அடிப்படையிலோ அல்லது நில அடிப்படையிலோ பெயரிடப்பட்டன. 'திரினஸ்கந்தாவிஸ்' என்பது நில அடிப் படையில் அமைந்த பெயர். 'திரிட்சூஸ்விஸ்' என்பது இன அடிப்படையில் அழைக்கப்பட்ட பெயர். நதிக்கரையில் உருவான கிராமங்கள் நதிக்கிராமம் என அழைக்கப்பட்டன.

### கிராமணி

கிராம மக்களின் உரிமைகள் கடமைகள் பற்றிய செய்திகள் தெளிவாகத் தெரியவில்லை. ஜிம்மர் (Zimmer) மட்டும் கிராமத்தின் தலைவர்களாக விளங்கிய **கிராமணிகள்** இராணுவப் பணிகளைக் கவனித்தனர் என்று கருதுகின்ருர். இவ்வாறு இவர் கருதியதற்குக் காரணம் கிராமணிகள் சேனனி என்று சொல்லப்படும் தளபதிகளோடு கொண்டிருந்த தொடர்பேயாகும்.

### கோனுட்சி

இருக்கு வேதத்தின் பழமையான பகுதிகளில் கூட கோனுட்சியே பழமையான ஆட்சிமுறை என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இருக்கு வேதத்தில் இராசன் என்னும் குறிப்புப்

பல இடங்களில் காணப்படுகிறது. இராசன் என்றால் ஆள் பவன் என்பது பொருள். இராசன் என்னும் சொல் 'இரஞ்ச்' என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது. 'இரஞ்ச்' என்றால் மகிழ்வித்தல் என்பது பொருள். அப்படியாயின் குடிகளைக் காத்து அவர்களை மகிழ்வித்தமையால் அவன் இராசன் என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்றே பொதுவாகக் கருதப் படுகிறது.

### தோற்றம்

வேதகால முடியாட்சி தோன்றியது குறித்துப் பல ஊகங் கள் உள்ளன. வேதகால முடியாட்சி தற்செயலாக (accidental) ஏற்பட்ட ஒன்று. இருக்கு வேதகாலத்தில் மக்கள் தங்களுக் கென்று தலைவன் இல்லாதது குறித்து வருந்தியதை அது குறிப் பிடுகின்றது. அரசர் நாடு பிடிக்கும் போரிலும், நாட்டைக் காக்கும் பணியிலும் மக்களின் தலைவராவார். மக்களைக் காப்பவர் அரசர் என்னும் பொருளில் அரசரைக், 'கோப ஜனஸ்யா' என்றும், 'பூரம்பட்டா' என்றும் அழைத்தனர். அரசர் வெறுந் தலைவராக மட்டுமின்றி மக்களிடையே முதன்மை பெற்றோராகவும் விளங்கினர்.

### மரபு வழிச் சட்டம்

அரச பதவி ஒருசில குறிப்பிட்ட குடும்பங்களில் மட்டுமே இருந்தது. மரபு வழிச் சட்டம் (Law of Primogeniture) அமுலில் இல்லாவிடினும் தந்தைக்குப்பின் தனயன் அரச பதவியை அடைவது என்னும் முறை பின்பற்றப்பட்டது. திரஸதாஸ்யூ என்பார் முடி உரிமையைத் தந்தை இறந்துவிடவே பாட்டனி டமிருந்து பெற்றார். சுதா என்னும் அரசனின் குடும்பத்தவர் கள் மூன்று தலைமுறைகளாக ஆண்டு வந்தனர். சமூகத்தில் ஆளுகின்ற இனத்தின் சிறப்பு, மரபு வழியே ஆட்சியைப் பெறும் உரிமை ஆகியவை அரசன் தன்னிச்சையாகச் செயல்படுவதைத் (autocracy) தடைசெய்கின்றன என்று கருதப்பட்டது.

### அரசன்

அரச பதவி மரபு வழிபட்டது என்பது பொதுவான முறையாக இருந்தபோதும் சூழ்நிலை ஏற்பட்டபோது தகுதி வாய்ந்த அரசனைத் தேர்ந்து எடுக்கும் உரிமை மக்களுக்கு இருந்தது. ஆனால் அவனை அரச குடும்பத்திலிருந்தே தேர்ந் தெடுத்தனர். அரசனின் ஆட்சி எல்லை பற்றிய செய்திகள் தெளி

வாக இல்லை. மேலும் அரசன் ஆயிரம் தூண்களும், ஆயிரம் வாயில்களும் கொண்ட அரண்மனையில் வாழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. அரசன் மற்றவர்களைவிடப் பெரிய இல்லத்தில் வேறுபாடு காட்டும்வண்ணம் வாழ்ந்திருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. அரசனின் பணிகளில் தலையாயது மக்களைக் காப்பதே. வெளியிலிருந்துவரும் ஆபத்தாயினும் சரி, உள்ளேயே ஏற்படும் கலவரம் ஆயினும் சரி அவற்றிலிருந்து மக்களைக் காப்பதோடு அல்லாது அவர்களுடைய நலனைப் பேணி வாழ்க்கையை வளம்பெறச் செய்வதும் அரசனின் பணியாகும். அமைதியான காலங்களில் அதாவது போர் இல்லாத காலங்களில் அரசனின் பணி என்ன ? மக்களுடைய மன (Spiritual) பொருளியல் (Material) வாழ்க்கையை வளமாக்கும் கடமையினை அரசன் ஒருவன் மட்டுமே தனியொருவனாக நின்று நிறைவேற்றிவிட முடியாது. அதற்கு மக்களுடைய துணை தேவைப்பட்டது. மக்கள் அரசனுக்கு இருவகையில் உதவலாம். முதலாவது வகை உதவி பொருளுதவியாகும். பலி என்னும் சொல் இருக்கு வேதம் முழுவதிலும் காணக்கிடைக்கிறது. பலி என்னும் சொல்லுக்குத் திறை என்னும்பொருளினைக் கொள்ளலாம். திறை இறைவனுக்குச் செலுத்துவது. அது இருக்குவேத காலத்தில் அரசனுக்குச் செலுத்தப்பட்டது. அரசன் திறையை இருவகைகளில் வசூலித்ததாக அறிகிறோம். அவ்விரு வகைகளும் கட்டாயமாக வசூலிப்பதும், அவர்களே கட்டாயமின்றிச் செலுத்துவதும் ஆகும். நிலமானிய முறை இந்தியாவிலேயே இடையாது. ஆனால் திறை நாடுகளிருந்தன (tributary states). போரில் தோற்ற அரசனின் நாட்டினைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக அவ்வரசனிடம் இருந்து திறைப் பொருள்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஆடு, மாடுகளும் விளைபொருள்களுமே திறைப்பொருள்களாய் (tributes) அமைந்தன. அரசன் கட்டாயமாக வசூல் செய்தான். இருக்குவேத சூத்திரமொன்றில் (65·4) ‘அக்கினி பொருள்களைத் தின்பது போல் அரசன் பொருள் படைத்தோரைத் தின்றான்’ அதாவது வரி வசூலித்தான் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அரசன் நிலச் சொந்தக்காரன் அல்லன். மாறாகத் தானைத் தலைவனே ஆவான். மக்கள் போரில் அரசனோடு கலந்து கொள்வதின் மூலமாக அரசனுக்குதவலாம்.

### இறையருள்

போரில் வெற்றிபெற இறைவனின் துணை வேண்டியிருந்தது. அத் துணையினைப் பெற வேள்விகளே வழியாகக் கருதப்

பட்டன. இவ் வேள்விகளைச் செய்யப் புரோகிதர்கள் அமர்த்தப் பட்டனர். அரசனுக்குச் செய்திகளை அறிவிக்க ஒற்றர்கள் பலர் இருந்தனர். அரசன் தூதர்களையும் நியமித்து இருந்தான். தூதர்கள் என்னும் சொல்லுக்கு இக்காலப் பொருள் கொள்ளுதல் கூடாது. இருக்கு வேத காலத்தில் தூதுவர்கள் செய்திகொண்டு செல்வோர்களாகவே இருந்தனர். உதாரணம் அக்கினி, கடவுளர்களை அழைத்து வரும் தூதுவன்.

### போர்

போரில் அரசன் குதிரையின் மேலிருந்தோ தேரில் அமர்ந்தோ போரிட மக்கள் நடந்து சென்று போரிட்டனர். வில்லும், அம்புமே முக்கிய ஆயுதங்களாகப் பயன்படுத்தப் பட்டன. அவர்கள் இரண்டு வகைப்பட்ட அம்புகளைப் பயன் படுத்தினர். அவை அம்பின் கூர்மையான பாகத்தில் நஞ்சு தோய்க்கப்பட்டவையும், தோய்க்கப் படாதவையுமாகும். அரசனுக்குப் புரோகிதர், சேனாதிபதி, கிராமணி ஆகியோர் போரில் துணைபுரிந்தனர். புரோகிதர் அரசனின் தனி மரியாதைக்கும், அன்புக்கும் பாத்திரப்பட்டவர். அரசாங்கத் தின் தத்துவ ஞானி, வழிகாட்டி, நண்பர் எல்லாம் அவரே.

### நீதித்துறை

செயல்துறை (Executive), சட்ட ஆக்கத்துறை (Legislative) நீதித்துறை (Judicial) ஆகிய மூன்றுக்கும் தலைவன் அரசனே. இத்தகைய பிரிவு முறை இக்காலத்திலிருப்பது போல் இல்லாமல் அரசனிடம் இணைந்திருந்தன. இருக்குவேதம் நீதித்துறையின் இருபிரிவுகளான சமூக நீதித்துறையைப் பற்றியோ, குற்ற இயல் துறையைப் பற்றியோ ஏதும் அறிவிக்கவில்லை. (There was no difference between civil and Criminal law) வழக்குகளை விசாரிக்கும் உயர்நீதி மன்றமாக அரசன் விளங்கினான். அரசன் வழக்குகள், தண்டனை கள் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டவன். எனவே அரசனை 'அதண்டயா' என்று அழைத்தனர்.

### தடைகள்

அரசனுடைய அதிகாரங்களைக் குறைக்கின்ற அரசியல் சட்டத் தடைகள் (Constitutional checks) எதுவுமில்லை. பொது மக்களுடைய ஒருமித்த எண்ணங்களே தடையாக அமைந் தன. அரசன் கொடுங்கோலனாக மாறியபோது மக்கள் கிளர்ந் தெழுந்து அவ் வரசனை நீக்கிவிட்டுத் தங்களுக்குப் பிடித்தவர்

களைப் பதவியில் அமர்த்தினர். எனவே கோனாட்சி நிலையான அடித்தளத்தில் எழுப்பப்படவில்லை. இருப்பினும் கோனாட்சியை எல்லாரும் ஒருமுகமாக ஏற்றுக்கொள்ளச் செய்த சக்தி எது? மலைப் பகுதியிலிருந்து ஆரிய இனமக்கள் சமவெளிப் பகுதியில் குடியேறியபோது பூர்வீகக் குடிகளின் எதிர்ப்பு ஏற்பட்டது. அந்த எதிர்ப்புத்தான் அதற்குக் காரணமாகும். 'டியூட்டானிக்' குடிமக்களிடையேயும், போரே அரசனைத் தோற்றுவிக்கிறது என்னும் கொள்கை உள்ளது என்பதை ஆங்கிலோ, ஸாக்ஸன் வரலாற்றினை அறிந்த அறிஞர்கள் கூறுவர்.

## முடிவுரை

இதுவரை நாம் பார்த்தவற்றிலிருந்து கோனாட்சியே வேதகால மக்களின் அரசியல் நிறுவனம் (Organisation) எனவும், அரசபதவி சமயச் சார்பற்றது எனவும், அரசன் பெயரளவில் தேர்ந்தெடுக்கப்பட்டான் எனவும், மக்களுடைய மன இயல், பொருளியல் வாழ்க்கையை வளப்படுத்துவது அரசனின் தலையாய கடமை எனவும், அரசனின் அதிகாரத்தினைக் குறைக்கச் சட்டத் தடைகள் ஏதும் இல்லை எனவும் அறிகிறோம்.

# 3. பின் வேதகால ஆட்சி அமைப்பு முறை

## (Later Vedic Polity)

*பிராமணங்கள்*

பின் வேத காலம் என்பது இருக்கு வேத காலத்திற்குப் பின்னர் தோன்றிய சாம, யஜுர், அதர்வண வேதங்கள், பிராமணங்கள் ஆகியவை நமக்கு வரலாற்றினை அளிக்கின்ற காலமாகும். இக்காலத்தைப் பற்றிய வரலாற்றை அறிய மேற்கூறிய நூல்களே சான்றுகளாக உள்ளன. பின் வேத காலத்தில் ஆட்சி அமைப்பு முறை வளர்ந்த விதத்தினைக் காண்போம். இதுவரையில் சப்த, சிந்துப் பகுதியில் தங்கள் வாழ்க்கைப் பகுதிகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்த ஆரியர்கள், சரஸ்வதி ஆற்றைக்கடந்து கிழக்குத்திசையிலும், தென் திசையிலும் முன்னேற ஆரம்பித்தனர். இதுவரையில் வர்க்கப் பிரிவுமட்டுமே கொண்டு சாதிப்பிரிவினையின்றி வாழ்ந்த ஆரியச் சமூகத்தில் மெல்லச் சாதிப்பிரிவுகள் தலைதூக்கின. இதுவரையில் அரசியலுக்கு அப்பாற்பட்டு இருந்த சமயம் அரசியல் வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தது இக்காலத்தேதான். இக்காலத்தினைப் பிராமணங்களின் காலம் என்றும் சிலர் சொல்வர். ஆரிய சமூகத்தில் புதிய மாற்றங்கள் இக் காலத்தில் தோன்றின. ஆரிய சமூகம் விரிந்து பரந்து வாழத் தொடங்கியது. அவ்வாறு பரந்து வாழ்ந்திட நேர்கையில் பூர்வீகக் குடியினருடன் தொடர்ந்து போரிட நேரிட்டது.

**பூர்வீகக் குடியினருடன் மோதல்**

ஆரியர்கள் பூர்வீகக் குடியினருடன் சண்டை இடுவது முதல் தடவை இல்லை. இருக்கு வேத காலத்தில் 'தாஸர்கள்' தலைவர்களான சூஸனு, குயவா, சம்பாரா, அற்புதன், பரியன் ஆகியோர் தோற்கடிக்கப்பட்டாலும் அவர்கள் சமுதாயம் முழுவதுமாக அழிந்துவிடவில்லை. சதபாத பிரா

மணத்தில் பின் வேதகால ஆரியர்களுக்கும், பூர்வீகக்குடியின ருக்கும் இடையே நடைபெற்ற சண்டைகள் பற்றிய செய்திகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. தாஸ்யூக்கள் தொடர்ந்து ஆரியர்களுக்குத் தொல்லை அளித்தனர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

*நியாயம்*

வேதகாலத்தில் 'மச்சநியாயம்' (மச்சநீதி) என்னும் கொள்கை ஒவ்வொரு அரச பதவிக் கோட்பாட்டிலும் நிலவி யது. 'மச்சநியாயம்' என்றால் என்ன? எவ்வாறு பெரிய மீன் சிறிய மீனைத் தின்னுகிறதோ அதைப்போல வலிவு மிக்கவன் வலிவற்றவரின் மீது ஆதிக்கம் செலுத்துவது ஆகும்.

இக் கொள்கையினை அறிந்துகொண்டால்தான் இந்தியா வின் பழங்காலத்திய அரச பதவியினைப்பற்றியும் அரசனுக் குரிய மதிப்புப் பற்றியும் அறிந்துகொள்ளலாம். இந்தியா வில் மேலைநாடுகளிலிருப்பதுபோல அரசனின் கடமைகளும் உரிமைகளும் தெளிவுபடுத்தப்படவில்லை. அரசியல் பிரச்சினை எதுவும் பொறுப்பையும், கடப்பாட்டினையும் (obligation) பொருத்ததாகும். அரசன் குடிமக்களுக்குக் கடமை உணர்ச்சி யுடன் செயல்படுவோனாக இருக்கவேண்டும் என்பது போலவே மக்களும் கடப்பாட்டுடன் செயல்படவேண்டும். மக்கள் கொள்கை அளவிலேயே அரசனை எதிர்த்துக் கிளர்ச்சி ஏதும் செய்ய இயலாது. மக்கள் தங்கள் உரிமைகள் வேந்தனால் பறிக்கப்பட்டன என்பதற்காகக் கிளர்ச்சி செய்ய வில்லை. ஆனால் அரசன் கடமை உணர்ச்சி வழுவியவனாக மாறியபோது மட்டுமே கிளர்ந்து எழுந்தனர். மக்களைக் காக்க வேண்டும் என்னும் கடப்பாடு அரசனுக்கு இருந்தது போலவே, மக்களுக்கும் வரிசெலுத்த வேண்டும் என்னும் கடப் பாடு இருந்தது.

*அரச பதவி*

இருக்கு வேத காலத்தின் தொடக்கத்தில் அரச பதவி தெய்வத்தன்மை (Divine) வாய்ந்ததாகக் கருதப்படவில்லை. ஆனால் பின் வேத காலத்தில் அரசன் தெய்வத் தன்மை வாய்ந்தவனாகக் கருதப்பட்டான். சதபத பிராமணத்தில் மேற்கூறிய கருத்தினை விளக்கும் சான்று ஒன்று உள்ளது. நல்ல அல்லது தீய அரசர்களின் மூலமாக எல்லா உலகத் தினையும் சூரியன் ஆளுகிறான் என்று சொல்லப்பட்டுள்ளது. ஐத்திரேய பிராமணத்தில் வருணன் அரசனை நியமித்ததாகச்

சொல்லப்படுகிறது. பிரகதாரண்ய உபநிடதத்தில், உலகத்தின் ஆரம்பத்தில் பிரம்மா மட்டுமேயிருந்தார்; எனவே க்ஷத்திரியர்களில் உயர்ந்தவர்களை இந்திரன், வருணன், சோமன், உருத்திரன், பரிசன்யன், யமன், மிருத்யு, இசானா ஆகிய கடவுள்களிடமிருந்து படைத்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. எனவே பின் வேத காலத்தில் அரச பதவி தெய்வத்தன்மை வாய்ந்ததாகக் கருதப்பட்டு க்ஷத்திரியர்களைப் பிராமணர்களைவிட உயர்வானவர் என்று கருதப்பட்டது. இவ்வாறு கருத க்ஷத்திரியர்கள் செய்த இராசசூய யாகம் காரணம் ஆகும்.

அரசன் தெய்வீகத்தன்மை வாய்ந்தவனா என்பது குறித்து அறிஞர் பெருமக்களிடையே கருத்தொற்றுமை காணப்படவில்லை. பாண்டியோபாத்யாயா, மாசன் அவர்சல் (Masson oursel) ஆகியோர் அரசனும், அரசபதவியும் தெய்வீகத்தன்மை வாய்ந்தன அல்ல என்று கூறினர். பாண்டியோபாத்யாயா, 'அரசன் தெய்வீகத்தன்மை வாய்ந்தவனோ, தனிச்சிறப்புப் பெற்றவனோ அல்லன்' என்று உரைத்தார். மாசன் அவர்சல் 'அரச பதவி மனிதனுக்குரிய நிறுவனமே, அது தெய்வீக உரிமை எதனையும் கொண்டிருக்கவில்லை' என்று உரைத்தார்.

வாஜபேயா வேள்வியின்போது அரசன் இந்திரனாகவும் புரோகிதர்பிரஹஸ்பதியாகவும் ஆனதாகச் சதபாதபிராமணம் உரைக்கின்றது. அரசன் இந்திரனாகக் கருதப்பட்டதற்குக் காரணம் அவன் உயர்ந்தவனாகமட்டுமின்றி வேள்வி நிகழ்த்துபவனாகவும் இருந்தான். அரசன் இந்திரனாக எண்ணப்பட்டாலும் புரோகிதர் வேள்வியின்போது அரசனைப் பிரம்மா, வருணன், உருத்திரன் ஆகியோருடன் ஒப்பிட்டார். அசுவமேத வேள்வியின்போதும் அரசனின் தெய்வத்தன்மை பற்றிப் பேசப்படுகிறது. எனவே வேள்வியின்போது அரசனுக்குத் தெய்வீகத்தன்மை ஏற்பட்டது எவ்வாறு எனில் அவனுடைய உடலில் அக்கினி, சாவித்திரி ஆகியோர் புகுந்து கொண்டமையாலேயே ஆகும். வேள்வி மூலமாக அரசன் தெய்வீகத்தன்மை பெற்றது தற்காலிகமான ஒன்று ஆகும்.

புருகுட்சா என்னும் அரசன் பாதி தெய்வத்தன்மை வாய்ந்தவன் என்னும் பொருளில் 'அர்த்ததேவர்' என்றும், பரீக்ஷித் என்பான் மனிதர்களில் கடவுள் என்றும் அழைக்கப்படுகிறார்கள் என்னும் வாதத்தினை அல்டேகர் ஏற்றுக்கொள்ளவில்லை.

### சமூக ஒப்பந்தக் கொள்கை

தெய்வீகக் கொள்கையினைப் போலவே (Divine Right theory) 'சமூக ஒப்பந்தம்' (Social contract) என்னும் கொள்கை எந்த அளவில் இருந்தது என்பதைத் தெரிந்து கொள்ளுதல் மிகவும் அவசியமாகும். இந்தியச் சூழ்நிலையில் சமூக ஒப்பந்தமே அரசபதவி தோன்றக் காரணம் என்றனர் சிலர். ஆனால் சமூக ஒப்பந்தத்தினை அறிந்துகொள்ளுவதற்கு முன்னர் சில கோட்பாடுகளை ஆராய்தல் அவசியம். அதர்வண வேதத்தில் அரச தோற்றத்தில் பாதி தெய்வீகக் கோட்பாட்டினை முனிவர்கள் சேர்த்தனர் என்று குறிப்பிடப் பட்டுள்ளது தவிர வேறு விளக்கமில்லை.

### ஸ்பெல்மென்

இந்தியச் சூழ்நிலையில் சமூக ஒப்பந்தமே அரச பதவி தோன்றுவதற்குத் துணை நின்றது என்னும் கொள்கையினை ஏற்றுக்கொள்ள இயலாது என்றே ஸ்பெல்மென் தம்முடைய நூலில் எடுத்துரைக்கின்றார். சமூக ஒப்பந்தமே அரச பதவிக் கோட்பாட்டின் அடிப்படை என்றால், கீழே குறிப்பிட்டுள்ள சில அடிப்படைத் தகுதிகள் இருக்கவேண்டும். அப்போதுதான் சமூக ஒப்பந்தம் நிலவியது எனக்கொள்ளலாம். கீழே கண்ட சமூக ஒப்பந்தத்திற்கான விதிகள் உள்ளனவா என்று காண்போம்.

முதலாவதாக இயற்கை நிலையில் (State of nature) எல்லா மனிதர்களும் சமஉரிமை உடைய சமுதாயமாக இருந்திருக்க வேண்டும். அவ்வுரிமைகள் இயல்பாகவே மனித இயற்கையில் தோன்றியிருத்தல் வேண்டும் அல்லது இறைவனால் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இரண்டாவதாகச் சமூக ஒப்பந்தத்தின் விதியாகிய கொள்ளலும், கொடுத்தலும் இருந்திருக்க வேண்டும்.

மூன்றாவதாகச் சட்டத்தோடு இயைந்த அதிகாரம் செயலுக்கு வழங்குதல் சமூக ஒப்பந்தத்தின் விளைவாக ஏற்பட வேண்டும். மெய்யான (defacto) அரசனுக்குச் சட்டப்படி ஏற்பு (dejure) அளித்தல் (consent) ஒப்புதல் அளித்தலாகக் கருதப்படுமே தவிர (contract) ஒப்பந்தமாகக் கருதப்பட மாட்டாது.

நான்காவதாக ஒப்பந்தம் செய்து கொள்ளுகின்றவர்களுக்கு அதற்கான ஆற்றல் வேண்டும்.

சமூக ஒப்பந்தத்திற்கு மேலும் சில கொள்கைகள் இருப்பினும் மேற் குறித்தவை குறிப்பிடத்தகுந்தவை. மேற்கூறிய கொள்கைகளின் அடிப் படையில் அமைந்திருந்தாலே சமூக ஒப்பந்தம் இருந்ததாகப்பொருள் கொள்ளலாம். நாம் எந்த அளவுக்குச் சமூக ஒப்பந்தக் கோட்பாடுகள் இருந்தன என்பதனை ஆராய்வோம்.

### சபதம்

மிக முக்கியமான உரைப்பகுதி ஒன்று ஐத்திரேய பிராமணத்தில் காணப்படுகிறது. அதில் அரசன் மகாபிடேகம், அதாவது முடிசூட்டு விழாவின்போது, முடிசூட்டும் விழாவினை நிகழ்த்தும் புரோகிதர் முன் சபதம் எடுக்கவேண்டியிருந்தது என்று கூறப்பட்டுள்ளது. 'நான் பிறந்த நாளிலிருந்து இறக்கின்ற நாள் வரையில் உள்ள இடைவெளியில் உள்ள என் வேள்வி, என் கொடை, என் இடம், என் நற்செயல்கள், என் வாழ்க்கை, என் சந்ததியினர் ஆகியவற்றை நான் தங்களிடம் தவறி நடந்தால் தாங்கள் எடுத்துக்கொள்ளலாம்' என்பதே அச்சபதமாகும்.

### ஒப்பந்த அடிப்படை

மேற்கூறிய சபதத்தினை டாக்டர் ஜெயஸ்வால் ஒப்பந்த இயல்புடைய (contract) அடிப்படை என்று கூறினர். ஆனல் பி. வி. கேன், (Kane) டாக்டர் ஜெயஸ்வாலின் கருத்தைக் குறை கூறி இச்சபதம் அரசனுல் தர்மத்தின்படியோ அல்லது மக்களின் நலங்கருதியோ வெளியிடப்படவில்லை என்று வாதிட்டார். ஆனல் இவ்வுரைப்பகுதியின் மெய்க்கருத்து ஜெயஸ்வாலின் கருத்துடன் பொருந்துகிறது. இக்குறிப்புச் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டுக் கொள்கையை ஏற்றமையாகக் கொள்வதற்கான தேவைகளைக் கொண்டிருக்கவில்லை. அப்படி இருந்தபோதிலும் தொடக்க நிலையில் உள்ள தோற்றத்தில் இக்கோட்பாடு காணப்பெற்றது என்றே நாம் சொல்ல வேண்டும்.

### பதவிக்குரியது

சிலர் தெய்வத்தன்மை அரசனுக்குக் கிடையாது; அரச பதவிக்கே உரியது என்று வலியுறுத்தினர். செண் ஏ. கே, அரச பதவிக்கே தெய்வத் தன்மை உரித்தானது என வாதிட்டார். 'இந்து எழுத்தாளர்கள், இவ்வாருக அரசன் என்னும் தனி மனிதனுக்குத் தெய்வத்தன்மை இல்லை, அரச பதவிக்கே

தெய்வீகத்தன்மை உண்டு என்று அரசனின் கடமைகளுக்கும், சில தெய்வங்களின் கடமைகளுக்கும் உள்ள ஒற்றுமையினைக் கொண்டு வலியுறுத்தினர்' என்று அல்டேகர் உரைத்தார்.

## பதவிக்கு வந்தவிதம்

இனி அரசன் பதவிக்கு வந்த விதத்தினை ஆராய்வோம். இதில் புதிதாக நாம் ஒன்றும் சொல்வதற்கு இல்லை. இருக்கு வேத காலத்தில் என்ன முறை அமுலில் இருந்ததோ, அதே முறை தொடர்ந்து இருந்து வந்தது. சில சந்தர்ப்பங்களில் பின் வேதகால அரச பதவி தேர்தலைப் பொருத்திருக்கின்ற ஒன்றாக இருந்தபோதிலும் அநேக சந்தர்ப்பங்களில் மரபு வழியிலேயே இருந்திருக்கின்றது என்பதற்குச் சான்றுகள் இவை: வத்ரியாஸ்வா, திவோதசா, பிஜாவண, சுதா, புருக் குட்சா, சாசதாஸ்யூ, மித்ராதிதிக் குருஸ்வண, உபமாசிரவர் கள் ஆகியோர் மரபு வழியே வந்தவர்கள். பொதுவான முறை மரபு வழியே என்பதற்கு மற்றுமொரு சான்று இது. 'அப் பாத்திரத்தை அரசன் தன் மகனிடம் கொடுத்தான். என்னு டைய மகன் என்னைப் போலவே ஆட்சி செலுத்தட்டும்' என்று கூறியதாகப் பின் வேதங்களில் காணப்படுகிறது. ஆனால் அரசனுக்குள்ள அதிகாரங்கள் அதிகமாயின. பின் வேத காலத்தில் மிகப் பெரிய ஆட்சிப் பகுதியிருந்தது என்று கருதிடமுடியாது. பல்வேறு இனங்கள் ஒன்றுபட்டு இருக்கு வேதகாலத்தில் இருந்ததைக்காட்டிலும் பெரிய ஆட்சிப்பகுதி உருவாயிற்று எனலாம்.

## இராஜன்யா

இராஜன்யா என்பது அரசன், அரச குடும்பத்தவர், உயர் குடிமக்கள் ஆகிய அனைவரையும் குறிக்கும் சொல். இச்சொல்லுடன் 'இராஜபுத்திரன்' 'அரசரின் புதல்வன்' என்னும் சொற்களும் பின் வேதங்களில் காணப்படுகின்றன.

## திருமுழுக்கு

அரசன் சடங்குகளுக்குரிய உடையணிந்து புரோகிதரால் திருமுழுக்குச் செய்யப்பட்டுப் புலித்தோலின்மீது வேங்கை யின் வலிமை பெறக் காலெடுத்து வைக்கச் சடங்கு கள் நடைபெறுகின்றன. அரசன் போலியாக வேட்டை யாடுவதுபோல் நான்கு மூலைக்கும் வில், அம்பு ஆகியவற் றுடன் செல்லும் நாடகம் நடத்தப்படும். இதே முறை ஹங்கேரிய தேசத்தின் முடிசூட்டு விழாக்களிலும் நடைபெற்ற

தாக அறிகிறோம். பின்னர் அரசன் பகடை ஆடுவான். பகடையில் அரசனே வெற்றி பெறுவது போல் செய்யப்படும். ஐத்திரேய பிராமணத்தில் பதவியில் அமர்த்தப்பட்ட மன்னர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பெயர்கள் சதபாத பிராமணத்தில் அசுவமேத வேள்வி செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ள மன்னர்களின் பெயர்களோடு பொருந்துகின்றன.

### இரத்தினங்கள்

இந்தப் பதவியேற்பு விழாவின்போது அரசனின் சுற்றத்தார் சிறப்பைப் பெற்றனர். ஐத்திரேய பிராமணத்தில் **இரத்தினங்கள்** (Ratnanis) என்னும் பெயரில் பிராமணர்கள் (புரோகிதர்கள்), **இராஜன்யா**, **மகிஷி** (அரசனின் முதல் மனைவி), **வாவதா** (அரசனின் விருப்பத்திற்குரிய மனைவி), **பரிவிருக்தி** (அரசனால் விரும்பப்படாத மனைவி), **சுதா** (இரத ஓட்டி), **சேனானி** (படைத் தலைவன்), **கிராமணி** (கிராமத் தலைவன்), **க்ஷத்திரியன்** (அரச குடும்ப அலுவல் உயர் அதிகாரி), **சம்கிராடிக்திரி** (பொருளாளர்), **அக்ஷவபா** (பகடைமேலாளர்) ஆகியோர் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சதபாத பிராமணத்தில் வேட்டையாடுபவன், அரசியல் தூதுவன் ஆகியோர் பெயர்களும் காணப்படுகின்றன. மைத்திரயாணி சமிதாவில் தட்சன், இரதகாரன் ஆகிய இருவர் பெயர்கள் காணப்படுகின்றன. பஞ்சவிம்க பிராமணத்தில் எட்டு வீரர்களாகச் சகோதரன், மகன், புரோகிதன், மகிஷி, சுதா, கிராமணி, க்ஷத்திரியன், சம்கிரகிருதா ஆகியோரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சுதாவைப் பெரும்பாலான இந்திய வரலாற்று ஆசிரியர்கள் இரத ஓட்டி என்று கருதினாலும் 'கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு' (Cambridge history of India) பகுதி ஒன்றில் கட்டியங் கூறுபவன் அல்லது அமைச்சர் என்றே காணப்படுகிறது. கிராமணி இக்காலத்தில் ஊர்த்துறை அலுவலராகவும் (civil) இராணுவத்துறை அலுவலராகவும் கிராமத்தில் தலைவராக விளங்கினார். கிராமணிமூலமாக அரசாங்கத்தின் அலுவல்களும், அரசரின் ஆணைகளும் வழிப்படுத்தப்பட்டன.

### அல்டேகர்

அல்டேகர், மஜீம்தார் ஆகிய இருவராலும் இரத்தினங்கள் என்பது அரசரின் குழு என்று சொல்லப்படுகிறது. அரசன் அவர்களின் ஆலோசனையைக் கேட்டு ஆட்சி செய்தான். முடிசூட்டு விழாவின்போது இவர்கள் முக்கிய

பணி ஆற்றினர். போலி வேட்டையாடுதல் நிகழ்ச்சி, பகடை விளையாட்டு, பரிசு வழங்குதல் ஆகியவற்றில் இவர்களின் துணை தேவைப்பட்டது. வரலாற்று ஆசிரியர்களும், அரசியல் கொள்கை விளக்கும் அறிஞர்களும் இவர்களுடைய மற்ற அரசியல் பணிகள் குறித்து அறிய முயன்றும் இயலவில்லை. ஸ்பெல்மென் என்பார் 'இரத்தினங்கள் என்று சொல்லப் பட்டவர்கள் அரசியல் ஆலோசனைக் குழுவினரோ அரசனின் அமைச்சர்களோ இல்லை' என்றே கருதுகிறார். இரத்தினங்களில் குறிப்பிடப்படாவிடினும் அடிக்கடி காணப்படக்கூடிய பெயர் ஸ்தபதி ஆகும். **ஸ்தபதி** அரசாங்கத்தின் ஒரு பகுதிக்கு ஆளுநராக இருந்திருக்கலாம். '**ஸ்தபதி**' என்பதற்குத் 'தலைமை நீதிபதி' என்னும் பொருளே பொருத்தமாகும். '**ஸ்தபதி**' என்னும் அலுவலர் செயல்துறைப் (executive) பணிகளையும் நீதித்துறைப் பணிகளையும் கவனித்து வந்தார். 'நிஷாதா ஸ்தபதி' என்னும் சொல்லுக்கு நிஷாதாவின் ஆளுநர் என்பது பொருள்.

## பணிகள்

அரசரின் உண்மையான பணிகள் பற்றி நமக்குப் போதிய செய்திகள் கிட்டவில்லை. அரசர் தானைத் தலைவராகப் பணி புரிந்து வந்திருக்கிறார். குரு பாஞ்சால அரசர்கள் பனிக் காலத்தே வெளிச் சென்று, வெயில் காலத்தே திரும்பினர் என்னும் குறிப்பும், சேனானி அரசரின் கீழ் பணி புரிந்தார் என்னும் குறிப்பும் காணப்படுகின்றன. சதபாத பிராமணத்தில் இருந்து அரசர் குற்றஇயல் (Criminal) நிர்வாகத்தினைக் கவனித்து வந்ததாக அறிகிறோம். இனமரபுக் குழுவினரின் (Hereditary tribes) நிலங்களையும் கட்டுப்படுத்திவந்தார். அரசனுக்கு வைசியர்களையும், பிராமணர்களையும் வெளியேற்ற அதிகாரம் உண்டு. ஆனால் க்ஷத்திரியர்கள் விஷயத்தில் அவ்விதம் நடந்துகொண்டதாகத் தெரியவில்லை. அரசன் நிலத்தின் மீது தனக்கு உள்ள உரிமையை விட்டுக் கொடுக்காது நிலத்தினின்று சிறப்புரிமைகளான நிலவரி வசூலித்தல், அதனைப் பாதுகாத்தல் ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டான். நில உரிமையை அளித்ததற்கான சான்று ஒன்றேஒன்று சதபாத பிராமணத்திலும், ஐத்திரேய பிராம்மணத்திலும் காணப்படுகிறது. விஸ்வகர்மன் புவன என்னும் அரசன் தனக்கு வேள்வியின்போது உதவிய பிராமணர்களுக்கு நிலம் அளித்ததாகவும், மண்ணுலகே அதனைக் கண்டனம் செய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மண்ணுலகே கண்டனம்

செய்ததாகக் கூறப்பட்டிருந்தாலும் எந்தப் பொருளில் அவ்வாறு கூறப்பட்டது என்பதனை நம்மால் அறிய இயல வில்லை. மண்ணுலகு என்பது மக்களைக் குறிக்கலாம் என்று எண்ணவும் இடமுள்ளது. இதனை நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஏனென்றால் வழக்கமாகக் கொண்டுள்ள முறைப்படியே மக்களுக்கு அரசன் நிலங்களை ஒதுக்கவேண்டும். இம்முறைப் படி இல்லாதவற்றை மக்கள் ஏற்றுக்கொள்வதில்லை. மேற்கு ஆப்பிரிக்காவில் இன்றும் அத்தகைய நிலை உள்ளது. அரச னுக்கு உதவிய புரோகிதர் பதவி மரபு வழியில் இக்காலத்தில் இல்லை. புரோகிதர் பதவிக்குப் போட்டி இருந்ததாக ஐத்தி ரேய பிராமணம் உரைக்கிறது. அரசாங்கத்தில் புரோகிதர் குறிப்பிடத் தக்கவராக விளங்கினர். புரோகிதர்களைப் போலவே ஒற்றர்களும் மிகவும் உதவினர். அதர்வண வேதத்திலிருந்து அரசர்களுக்கு ஒற்றர்கள் செய்த பணிகளை அறிகிறோம். அரசாங்கத்தில் முக்கியமானவர்களாக ஒற்றர்கள் விளங்கினர்.

### நீதித்துறை

நீதித்துறையில் முன்பு அறிந்ததைக் காட்டிலும் இக் காலத்தில் நாம் அதிகம் அறிந்துகொள்கிறோம். பிராமணனைக் கொலை செய்தல், சுரா என்னும் பானத்தினை அருந்துதல், தங்கத்தைத் திருடுதல், அரசனுக்கு வஞ்சகம் இழைத்தல் ஆகியவையே தலையாய குற்றங்களாகக் கருதப்பட்டன. குற்றவாளியா இல்லையா என்று ஆராயும் சோதனைமுறை (ordeal) இருந்ததற்கான சான்று ஒன்றே ஒன்று கிடைத் துள்ளது. சாந்தோக்கிய உபநிடதத்தில் 'கோடலிச்சோதனை' என்னும் சோதனைமுறை இருந்தது பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

### சூத்திரங்கள்

சூத்திரங்களில் இருந்து மேலை நாடுகளில் நிலவிய வெர்கில்டு (wergild) என்னும் அபராதம் வசூலிக்கும் முறை இந்தியாவிலும் அமுலில் இருந்தது என்று அறிகிறோம். க்ஷத்திரியனைக் கொலை செய்துவிட்டால் ஆயிரம் பசுக் களையும், வைசியனைக் கொலை செய்துவிட்டால் நூறு பசுக் களையும், சூத்திரனைக் கொலை செய்துவிட்டால் பத்துப் பசுக் களையும் அபராதமாகக் கொடுக்கவேண்டும். பெண்கள் சம்பந் தப்பட்ட மட்டில் சூத்திரனுக்கு என்ன விதிக்கப்பட்டதோ அதுவே பொருந்தியது. சட்ட வழக்குகளில் பிராமணர்களுக்கு

முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இரத்தினங்கள் வரிசையில் அரசியாரும் சேர்க்கப்பட்டிருந்தாலும், எத்தகைய கடமைகளை அவர் ஆட்சித்துறையில் நிறைவேற்றினர் என்பது தெரிய வில்லை. அல்டேகர், 'இந்துச் சட்டப்படி ஒரு புதல்வி ஆட்சியை நடத்த அரசியாக நியமிக்கப்படவில்லை. ஏனென்றால் அவர்களிடையே உள்ள இயற்கைத் தடைகள் அவர்கள் சிறந்த ஆட்சியாளர்கள் ஆவதற்குத் தடையாய் இருந்தன' என்று குறிப்பிடுகின்றார்.

அரசபதவிக்குச் சாதி முறைகள் எவையேனும் தடையாய் இருந்தனவா என்று ஆராயும்போது க்ஷத்திரியர்கள்மட்டுமே பொருத்தமானவர்களாகக் கருதப்பட்டனர் என்னும் பொது வான கருத்து நிலவியது என்னும் உண்மையினை அறிகிறோம். இராஜன் என்னும் சொல்லுக்கு உள்ளபொருள்கள் பலவற்றில் க்ஷத்திரியன் என்னும் பொருளும் உள்ளது. சதபத பிரா மணம் க்ஷத்திரியன் புரோகிதத் தொழிலில் ஆர்வமோ, புரோகிதன் க்ஷத்திரியத்தொழிலில் ஆர்வமோ செலுத்தவில்லை என்று உரைக்கின்றது. எனவே க்ஷத்திரியர்களே அரச பதவிக்கு உரியவர்களாயினர் என்றாலும், அதே நூலில் அயோகவன் பிரிவைச் சேர்ந்தவர்கள் அரசர்கள் ஆனசெய்தி யும் கிடைத்துள்ளது. சூத்திரர்களுக்கும் வைசியர்களுக்கும் பிறந்தவர்களே அயோகவன் வகுப்பினர்.

### பிராமணர்கள்

ஏன் பிராமணர்கள் அரசபதவிக்குப் பொருத்தமானவர் களாக அக்காலத்தில் கொள்கையளவில் கருதப்படவில்லை என்னும் கேள்விக்குச் சதபாதபிராமணம் 'பிராமணர்கள்' தகுதியற்றவர்கள் மட்டுமல்ல, பொருத்த மற்றவர்கள், என்றும் கூறுகிறது.

### வரிசைகள்

அரசபதவியில் பல வரிசைகளும், வேறுபாடுகளும் இருந்தன. அரசர்களின் தகுநிலையைப்பற்றியும், அறிந்து கொள்வது அவசியம். கிழக்குப் பகுதிகளில் முடிசூட்டப் பட்டவர்கள் 'சாம்ராஜ்யா' என்றும், தெற்குப்பகுதியில் முடி சூட்டப்பட்டவர்கள் பாஜ்யா என்றும், மேற்குப் பகுதியில் முடிசூட்டப்பட்டவர்கள் ஸ்வாராஜ்யா என்றும், வடக்குப்பகுதி யில் வாழ்ந்தவர் ஸ்வாராஜ்யா என்றும் அழைக்கப்பட்டதாக ஐத்திரேய பிராமணம் குறிப்பிடுகிறது. குருபாஞ்சாலாவின் மத்திய பகுதியில் முடிசூட்டப்பட்டவர்கள் 'இராஜ்யா' என

அழைக்கப்பெற்றனர். இருப்பினும் இவ்வாறு நிலப்பரப்பு வாரியாகப் பிரிக்கப்பட்டிருப்பது வரலாற்றுச் சார்பான உண்மை ஆகாது. ஐத்ரேய பிராமணத்தில் உள்ள மற்றொரு உரைப்பகுதி மேற்கூறிய கருத்துக்கு எதிராக இருக்கிறது. மேற்கூறிய பட்டங்களைக் கொண்டே அரசன் முடிசூட்டப்பட வேண்டும் என்று குறிப்பிடுவதனால் நாம் மேற்கூறிய கருத்தை ஏற்கவில்லை.

### சாம்ராஜ்

யஜுர் வேத காலத்தில் 'சாம்ராஜ்' என்னும் சொல்லால் அரசனை அழைத்தனர். சாம்ராஜ் என்பது இராஜா என்பதைவிட உயர்ந்தபட்டம் என்பதில் சந்தேகமில்லை. இராஜசூய வேள்வி இயற்றினால் ராஜா, வாஜபேயா வேள்வி இயற்றினால் பேரரசர். மேலை நாட்டுப் பேரரசர் என்னும் சொல்லோடு 'சாம்ராஜ்' என்னும் சொல்லினை ஒப்பிடக்கூடாது. 'சாயனா' என்பார் ஐத்திரேய பிராமணத்தை விவாதிக்கும்போது சாம்ராஜ்யம் என்றால் முறையான அரசு என்று பொருள்கொள்கிறார். கோபாத பிராமணம் வாஜ்பேயா வேள்விமூலம் பிரஜாபதி சாம்ராட் ஆனதாகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. கேன் (Kane) என்பார் சாம்ராட், திறை செலுத்தும் மன்னன், திறை செலுத்தா மன்னன் என்று மூன்று பிரிவுகள் இருந்ததாக உரைக்கின்றார். 'சாம்ராட்' என்பது அரசன் என்பதைவிட உயர்ந்தபட்டம் என்பதே பொதுவான கருத்து.

### பாஜ்யம்

யாதவ அரசர்கள் 'பாஜ்யம்' என்னும் பட்டம்கொண்டனர். இது குறிப்பிடத்தகுந்த பட்டம் அன்று. 'ஸ்வராஜ்' என்னும் பட்டம் பிறருக்குத் திறை செலுத்தாத மன்னனுக்கு உரிய பட்டம். 'வைராஜ்யா' என்னும் பட்டத்திற்கு மிகப்பரந்த நிலத்திற்கு உரிமையாளன் என்பது பொருள். மிகவும் பிரபலமானது 'இராஜா' என்னும் பட்டம். இராஜா என்னும் பொருள் எந்தவித அரசியல் அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை. இராஜா என்னும் சொல்லுக்குப் பொருள் இருக்கிறது. ஆனால் அது என்ன பொருள் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

### வரி வசூல்

வரி வசூலிப்பு முறை எவ்வாறு இருந்தது என்பதைத் தெரிந்துகொள்ளச் சதபாத பிராமணம் நமக்குச் செய்திகளைத் தருகிறது. அரசன் வரி வசூலித்தது மான் ஒன்று தானியங்களைத் தின்பதுபோல, அரசனின் அதிகாரத்திற்கு உணவாக வரி வசூலிக்கப்பட்டது. வரிச்சுமையை அதிகமாக அனுபவித்தவர்கள் வைசியர்களே ஆவர். மற்ற சமூகப் பிரிவினருக்கு அரசாங்கத்தோடு தொடர்புடைய பணிகள் இருந்தன. ஆனால் வைசியருக்கு அத்தகைய பணிகள் ஏதும் இல்லை. அவர்கள் சமுதாயத்தோடு மட்டுமே தொடர்பு உள்ளவர்கள். க்ஷத்திரியரும், புரோகிதரும் அரசருக்கு எத்துணை உதவியாக இருந்தனரோ, அத்துணை உதவியாக வைசியர்கள் இல்லை. எனவே அவர்கள்மீது வரிச்சுமை அதிகரித்தது.

### தர்மம்

பிராமணர்கள் தர்மத்தின் மூலமாகவும், வேள்விகள் நிகழ்த்துவதன் மூலமாகவும் பொருள் தேடிக்கொண்டனர். க்ஷத்திரியர்கள் வரி வசூலித்தல், போரிடுதல், அபராதம் வசூலித்தல் ஆகியவற்றின் மூலமாகப் பொருள் சேர்த்தனர். வைசியர்கள் பொருள் சேர்த்திட வாணிபம், விவசாயம் ஆகியவற்றைக் கைக்கொண்டனர். ஆனால் சூத்திரர்களுடைய வாழ்க்கையோ இதற்கு மாறாக இருந்தது. தங்கள் வாழ்க்கைக்குப் பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், ஆகிய மூவரையும் நம்பியிருந்தனர். இவ்வாறு சூத்திரர்கள் இருந்தமையானது பிந்திய வேதகால அரசியல் வாழ்க்கையில் குறிப்பிடத்தகுந்த அம்சமாகும்.

இனி அடுத்து வரும் அத்தியாயத்தில் எவ்வாறு அரசனின் அதிகாரத்திற்கு வேதகால மன்றங்களான சபை, சமிதி ஆகியவை இருந்தன என்பதை விளக்கமாகக் காண்போம். சபை, சமிதி ஆகியவைகளைப் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப் படும்போது, அவற்றினை இக்காலத்திய சட்டமன்றங்களோடு சேர்த்து எண்ணிப் பார்க்கக் கூடாது என்னும் உண்மையைக் கைக்கொள்ள வேண்டும்.

# 4. சபை, சமிதி

## (Sabha, Samithi)

இந்திய வரலாற்றில் வேதகால மக்களின் ஆட்சி அமைப்பு முறையினை ஆராய்கின்றபோது மிக அதிகமாகச் சபை, சமிதி என்னும் சொற்கள் காணப்படுகின்றன. சபை என்னும் சொல்லே நிலைபெற்று இருந்துள்ளது. சமிதியைப் பற்றிப் பிந்திய வேதகாலத்திற்குப் பின்னர் அறிய இயல வில்லை. எந்த வகையில் சபை அமைக்கப்பட்டிருந்தது எனவும், அதன் அமைப்பு முறை பற்றியும் நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. இவ்வாறு முறையான, சரியான தகவல்கள் கிடைக்கப்பெறாதபோது அறிஞர்கள் தங்கள் கருத்துக்கு ஏற்பப் பொருள் கொண்டனர். அனுமானத்தின் மூலமே இவை பற்றிய செய்திகள் உருவாக்கப்பட்டன.

ஹில்லி பிராண்ட் என்னும் அறிஞர் சபை, சமிதி ஆகிய இரண்டுமே வேறு வேறு அமைப்புகள் அல்ல, ஒன்றுக் கொன்று தொடர்பு உள்ளவை என்று கூறினர். அவர் தம் கருத்திற்கு ஆதாரமாகச் சபை என்பது கூடுகின்ற இடத் தையும், சமிதி என்பது கூடியுள்ளவர்களையும் குறிக்கும் என்று உரைத்தார். ஆனல் ஜிம்மர் (Zimmer) சபையினைக் கிராமத்தோடு இணைத்துப் பேசினர். ஆனல் மேற்கூறப்பட் டுள்ள இருவரது கருத்துகளுமே சரியானவை ஆகமாட்டா என்று கூறலாம்.

### பிரஜாபதி

அதர்வண வேதத்தின்மூலம் இவை இரண்டுமே தனித் தனி அமைப்புகள் என்று கூறத்தக்க அளவில் நமக்குச் செய்திகள் கிடைத்துள்ளன. அவ் வேதத்தில் (VIII 12·1) சபையும், சமிதியும் பிரஜாபதியின் அதாவது உலகைப் படைத் தவனின் இரு மக்கள் என்று கூறப்பட்டுள்ளது. அதைப்

போல மற்றுமொரு குறிப்பு 'அவன் மக்களிடம் சென்றான்; சபை, சமிதி, சேனை, முதலியன பின் தொடர்ந்து செல்லலாயின' என்று கூறுவதன் மூலமாக அவை இரு வேறு தனிப்பட்ட அமைப்புகள் என்பது தெளிவாயிற்று.

### ஜிம்மர் (Zimmer)

மேலே நாம் கண்ட ஜிம்மர் கூறிய கருத்தினை மறுத்துரைக்க வேண்டியுள்ளது. நன்முக ஆராய்ந்து நோக்குமிடத்து அவர் கூறிய உரைப் பகுதியிலிருந்து காணப்படுகின்ற சபை, சமிதி பற்றிய கூற்றுகள் தவறானவை என்பது விளங்கும். எந்த வேத உரைப் பகுதியிலும் ஜிம்மரின் கருத்தோடு ஒன்றுபட்ட கருத்தினை நாம் காண இயலவில்லை. சபை என்னும் சொல்லுக்குப் பொருள் குடும்பம், சமூகம் ஆகிய வற்றின் இணைப்பு என்பதே ஆகும்.

### கெல்ட்னர் (Keltner)

கெல்ட்னர் என்பார் 'சபையின் வேலை அரசனைத் தேர்ந்தெடுப்பது' என்னும் ஜிம்மரின் கூற்றை மறுத்து 'எந்த வேத உரைப் பகுதியிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அத்தகைய கருத்து உரைக்கப்படவில்லை' என்று கூறினர். டாக்டர் கே. பி. ஜெயஸ்வால் சபை என்பது சமிதியின் அதிகாரத்தின் கீழே இருந்த நிலையான அமைப்பு என்றார். 'அதனுடைய பணி வேத காலத்தைப் பொருத்த சட்டங்களையும், நீதித்துறைப் பணிகளையும் கவனித்தலே ஆகும்' என்று மாக்டொனால், கீத் ஆகிய இருவரும் கூறுகின்றனர். இவை அனைத்தும் அனுமானத்தின் பேரில் கொண்டவை.

### சபை

சபையினைப் பொருத்தமட்டில் அது அரசன், அறிவாற்றல் மிகுந்தவர்கள், பகடையாடுவோர் ஆகியோர் அடங்கிய பொது அமைப்பு என்பது தெரிகிறது. ஆனால் ஆட்சித்துறையில் அது எத்தகைய பணிகளை மேற்கொண்டது என்பது மட்டும் தெளிவாகத் தெரியவில்லை. சபை கிராமத்திலும், அதற்கு மேற்பட்டவை வாரியங்களிலும் இருந்திருக்கலாம். சபை ஒரு விருந்துக்குரிய அவையாக இருந்திருக்கலாம் என்றும், மக்கள் சமய, சமூகப் பணிகளுக்கு அங்கே கூடியிருக்கலாம் என்றும் கருதி, அத்தகைய சபைகளை இன்றைக்கும்கூடத் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் காணலாம் என்று ஸ்பெல்மன் கூறுகின்றார். இருக்குவேத காலத்தில் மக்களின் எண்ணங்களை விளக்கும் வாரியமாக விளங்கிய சபை சமூகத்

தில் பிற்காலத்தில் அரசியல் வலிமை பெற்றிருக்கக்கூடும். ஆனால் சட்டத்தினை உருவாக்குகின்ற தகுதிநிலை இவ்வமைப்புக்கு இருந்தது என்று கூறுதல் சந்தேகத்திற்குரியது. சபைக் குரிய அதிகாரங்கள் வலுப்பெறத் தொடங்கிய உடனே அதனுடைய உறுப்பினர்களிடையே தனி வேறுபாடுகள் காணப்பட்டன. இருந்தாலும்கூடத் தேர்தல் முறையில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை தோன்றவில்லை. சபா சாத் அல்லது சபாகாரா என்னும் சொல்லும், சபயா என்னும் சொல்லும் உறுப்பினர்களிடையே தோன்றிய தனி வேறுபாடுகளைக் காட்டுகின்றன.

### சுதந்திரமான கருத்து

மகாபாரதத்தில் சபை நீதித்துறை அமைப்பாகவும் செயல்பட்டதை அறிகிறோம். சூதில் தோற்ற தர்மர் தங்கள் துணைவி பாஞ்சாலியைச் சூதுப் பொருளாகப் பணயம் வைத்தபோது சிக்கல் ஒன்று ஏற்பட்டது. ஏற்கெனவே பிறருக்கு அடிமையாகிவிட்ட ஒருவனுக்குத் தன் மனைவியைச் சூதுப் பொருளாக்க முடியுமா? அதற்கு உரிமையுண்டா? என்னும் கேள்விகள் எழுந்தன. அப்போது சபை உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைச் சுதந்திரமாக அறிவித்தனர். சபையில் உள்ள உறுப்பினர்களின் கருத்துகள் சுதந்திரமாக வெளிப்பட்டன என்பதற்குச் சான்று இது.

### வேறு பணிகள்

சபையில் பெண்களின் நிலை என்ன? அவர்கள் அனுமதிக்கப்பட்டார்களா? என்னும் கேள்விகளுக்கு நமக்குத் தகுந்த விடையாகக் கீசகனுக்கு எதிராகச் சபையில் திரௌபதை தோன்றிய செய்தி கிடைத்து உள்ளது. நீதித்துறைப் பணிக்கு மட்டுமின்றிச் சபை வேறு செயல்களுக்கும் பயன்பட்டது. ஆபஸ்தம்ப தர்ம சூத்திரத்திலிருந்து சபை விருந்தினர் மாளிகையாகப் பயன்பட்டது என அறிகிறோம். அரசனைச் சார்ந்தவர்கள் அரசு அலுவலர்களாக மாற்றப்பட்டுத் தங்கள் அலுவல்களைக் கவனித்துக்கொள்ளத் தனி இடங்களை அமைத்துக்கொண்டுவிட்டபோது சபையினைச் சமூகச் சமயக் காரியங்களுக்குப் பயன்படுத்தினர் எனவும் அறிகிறோம்.

### ஆலோசனை அமைப்பு

சபையினை எல்லா மக்களும் கலந்துகொண்ட அமைப்பாகக் கருத முடியாது. செல்வந்தர்கள் சபைக்குச் சென்றனர் என்

னும் குறிப்புக் காணப்படுகிறது. பகடை விளையாடவும், பொழுது போக்கவும் சபைகள் இருந்தனபோல அரசியல் மன்றங்களும் இருந்திருக்கின்றன. எனவே, சபை அரசனுக்கு ஆலோசனை கூறிய அமைப்பு என்பதோடு வேறு பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டது எனக் கருதப்படுகிறது. சபை என்னும்சொல் 'தர்பார்' என்னும் பாரசீகச் சொல்லோடு பொருந்துகிறது.

### சமிதி

இனிச் சமிதி பற்றிய குறிப்புகளை ஆராய்வோம். சமிதி என்றால் கூடுதல் என்பது பொருள். டாக்டர் கே. பி. ஜெயஸ்வால் (K. P. Jayaswal) சபையைவிடச் சமிதியே மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதுகிறார். மேலும் அவர் சமிதி என்பது மக்கள் அனைவரும் கலந்து கொண்ட அமைப்பு என்று கூறுவதோடு சமிதியினுடைய பணிகளில் குறிப்பிடத் தகுந்தவை அரசனைத் தேர்ந்தெடுப்பதும், தேவைப்பட்டால் மறுமுறை தேர்ந்தெடுப்பதும் ஆகும் என்றும் உரைக்கிறார். சில சமயங்களில் சமுதாயத்திலிருந்து அரசர்கள் துரத்தப்பட்டனர். அப்படிப்பட்ட சமயங்களில் சமுதாயத்திலிருந்து துரத்தப்பட்ட அரசனைச் சமிதி மீண்டும் தேர்ந்தெடுத்தது. இறைமை பொருந்திய சிறந்த பகுதி சமிதி ஆகும்.

### உண்மையான அரசன்

அமைச்சர்களைப்பற்றிச் சமிதியில் விவாதிக்கப்பட்டதாகப் புளூம்பீல்டு என்பாரின் கூற்றிலிருந்து அறிகிறோம். அரசன் உண்மையிலேயே தன்னுடைய அதிகாரத்தைச் செலுத்துபவனாக இருந்தால் சமிதியில் கலந்துகொள்வது அவசியமாகக் கருதப்பட்டது. இருக்கு வேதத்தில் 'உண்மையான அரசனைப் போல் சமிதிக்குச் சென்றான்' என்னும் வாக்கியம் காணப்படுகிறது. இதன் மூலம் அரசன் சமிதியில் கலந்து கொண்டால் மட்டுமே உண்மையான அரசன் என்று பொருள் கொள்கிறோம்.

### பொறுப்புணர்வு

சமிதி என்னும் அமைப்பு இருந்தவரை அரசன் அதில் கலந்துகொண்டான் என்று கூறலாம். பிரவஹான ஜெய்பாலன் என்னும் அரசன் பாஞ்சால சமிதிக்கு வந்ததாகச் சாந்தோக்கிய உபநிடதம் குறிப்பிடுகின்றது. அவையில் கலந்துகொண்டவர்கள் தங்கள் கருத்துக்கு மறுப்பு ஏதும் தோன்றிவிடக்

கூடாது என்னும் எண்ணத்தில் நன்கு ஆராய்ந்து தெளிந்த வற்றையே அங்குப் பேசினர் என அதர்வண வேதம் உரைப் பதிலிருந்து அவையினர் பொறுப்புணர்வுடையோர் என அறி கிறோம்.

### சமிதியின் பணிகள்

சமிதியினுடைய பணிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் டாக்டர் ஜெயஸ்வால் அது தேசியக் கலைக் கழகமாகப் (National Academy) பயன்பட்டது என்று கூறுவதோடல்லாமல் அதற்கான சான்று ஒன்றினையும் காட்டுகிறார். ஸ்வேதகேது என்னும் இளைஞன் தத்துவக் கோட்பாடுகள், தெய்வ நூல்கள் ஆகியவற்றில் தன் கல்வியை முடித்துக்கொண்டு அரசனைச் சந்திக்க வந்ததாகவும், ஐந்து தத்துவக் கேள்விகளை அரசன் அவ்விளைஞனிடம் கேட்க அவ்விளைஞன் பதிலிறுக்க இய லாது போய்விடவே இக்கருத்துக்களைக்கூடத் தெரியாதவன் எவ்வாறு கல்வியில் தேர்ந்தவனாகக் கருதப்படுவான்? என்று அரசன் வினவியதாகவும் கூறப்பட்டுள்ளது எனக் கூறியுள் ளார்.

இருக்குவேத காலத்தில் சமிதி சிறப்பிடம் பெறவில்லை. பின் வேத காலத்தில்தான் சிறப்பிடம் பெற்றது என்பது அறிஞர்களின் கருத்து. சமிதியினுடைய தலைவனாக விளங்கி யவன் யார் என ஆராய்ந்தபோது, அறிவாற்றல் மிக்கோனாக இருந்தவனே தலைவனாக விளங்கினான் என்று கிரக சூத்திரம் வாயிலாக அறிகிறோம்.

### அழிவில்லாதது

சமிதியில் என்ன அடிப்படையில் பிரதிநிதித்துவம் (Representation) வழங்கப்பட்டது என்று தெரியாவிடினும் ஏதாவது ஒரு கொள்கையின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் இருந் திருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. சமிதி நீண்ட ஆயுளைப் பெற்றதாகக் கருதப்பட்டது. அது அழிவில்லா ஒன்று எனக் கருதப்பட்ட காரணம், அது பிரஜாபதியின் அதாவது இவ்வுலகை உருவாக்கியவனின் படைப்புகளில் ஒன்று என் பதே. சமிதியைப் பற்றிய குறிப்புகள் இருக்கு, அதர்வண வேதங்களிலும், சாந்தோக்கிய உபநிடதத்திலும் காணப்படுவ தால் அது பல நூற்றாண்டுகள் நிலைபெற்ற அமைப்பு என்றே கொள்ளுதல் பொருந்தும். ஆயினும் சமிதியைப் பற்றிய வர லாற்றுச் செய்திகள் எல்லாம் கி.மு. 600-க்கு முன்பே மறைந்து

விட்டன. அதற்குப் பின் சமிதி பற்றிய குறிப்பு ஏதும் காணப் படவில்லை.

### விதாதா

சபை, சமிதி ஆகிய இரண்டு மட்டுமின்றி விதாதா என்னும் மன்றமும் இருந்ததாக வேத இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். விதாதா என்னும் மன்றம் சபை, சமிதி ஆகியவற்றிற்கு முன்பே இருந்ததாகக் கூறப்படுகிறது. கோஷால் என்னும் அறிஞர் விதாதாவினைப் பொது விவாத அரங்கு என்றே குறிப்பிடுகின்றார். ஆனால் ஆர். பி. சர்மா என்பார் விதாதாவின் பணி போரினை நிகழ்த்துவது மட்டுமே என்று கருதுகின்றார். வலிமை மிக்கவர்களும், வீரர்களும் மற்ற மன்றங்களில் இருந்தது போலவே விதாதாவிலும் இருந்தனர் என்றே கொள்ளலாம்.

இதுவரையில் சபை, சமிதி, விதாதா ஆகியவை பற்றி நாம் ஆராய்ந்த கருத்துகள் அறிஞர் பெருமக்களால் ஆராய்ந்து கூறப்பட்ட கருத்துகளே. அறிஞர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொருவிதமான கருத்துகளை அறிவித்த போதிலும் அவர்கள் யாராலும் தங்களுடைய கருத்தே சரியானது, முடிவானது, அதற்கு ஆதாரங்கள் இவை எனத் தகுந்த சான்றோடும், விளக்கத்தோடும் மெய்ப்பிக்க இயலவில்லை. வேத காலத்தைப் பற்றிய வேதங்கள் தவிர்த்த வேறு தெளிவான வரலாற்றுச் சான்று கிடைக்கும் வரை, நாம் மேற்கூறப்பட்ட கருத்துகளுக்குச் சிறப்பிடம் அளிக்கவேண்டியுள்ளது.

### குடியரசு

சபை, சமிதி ஆகியவற்றினைப் பற்றி ஆராய்கின்றபோது குடியரசு நாடுகளில் அதாவது முடியாட்சி அல்லாத நாடுகளில் அத்தகைய அமைப்புகள் எவையேனும் இருந்தனவா என்பதனையும் ஆராயவேண்டும். அப்படி ஆராய்கின்றபோது குடியரசு நாடுகளில் ஒரே ஓர் அவை மட்டுமே இருந்தது என்று கூறப்படுவதைக் காண்கிறோம். ஆனால் வரலாற்றறிஞர்களில் டாக்டர் ஜெயஸ்வால் இரண்டு அவைகள் இருந்தன எனக் குறித்துள்ளார். டாக்டர் ஜெயஸ்வாலின் கருத்துப்படி மேல் அவை என்றும், கீழ் அவை என்றும் அவைகள் அழைக்கப்பட்டன. இச்செய்தியின் தன்மை குறித்துக் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

*அமைதி ஒப்பந்தம்*

டாக்டர் ஜெயஸ்வால் இரண்டு அவைகள் இருந்தன என்று கூறுவதற்கு ஆதாரம் இல்லாமல் இல்லை. அலெக் சாந்தர் படையெடுத்து வந்தபோது அரசனிடம், சிலர், அமைதி ஒப்பந்தம் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர் என அறிகிறோம். அப்படிக் கேட்டுக்கொண்டவர்கள் மேலவை யினர் என்பது அவர் கருத்து. நாம் அதற்குக் கூறும் பதில், அவர்கள் மேலவையினர் அல்லர்; சமுதாயத்தில் வாழ்ந்த மக்களில் வயதும், அனுபவமும் வாய்ந்தவர்களே என்பதே.

சபை, சமிதி குறித்துப் போதிய சான்றுகள் கிடைக்கப் பெற்ற பின் நாம் ஒரு முடிவிற்கு வருவதே பொருத்தமாக இருக்கும். அதுவரையில் பொதுவாகப் பொருந்துவனவற் றையே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

# 5. காவியங்களின் காலம்

## (Epicage)

*முன்னுரை*

இந்திய மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிக் கலந்து ஐக்கிய மாகிவிட்டவை இராமாயணமும், மகாபாரதமும் ஆகும். இவ்விரு காவியங்களும் பல இலக்கியங்களுக்குத் தோற்றுவாய் ஆக அமைந்துள்ளன. புலவர்கள் இந்திய மக்களின் இசை, நடனம், கவிதை, நாடகம், சிற்பங்கள் ஆகியவற்றை இவ்விலக்கியங்களில் சித்திரித்துப் புத்துணர்வு பெற்றனர்.

**இலக்கியங்கள்**

இக் காவியங்களின் காலத்தில் வாழ்ந்த மக்களின் சமுதாய, அரசியல் நிலைமைகளை நாம் உணர்ந்து கொள்ள இக் காவியங்களையே துணையாகக் கொள்கிறோம். இக் காவியங்கள் வெறும் இலக்கியங்கள்தாமே தவிர வரலாற்றுச் சான்றுகள் ஆகா என்று வின்சென்ட் ஸ்மித், ஜாகோபி, மக்டோனல் ஆகியோர் கருதினர். இந்திய வரலாற்று ஆசிரியர்களில் மஜும்தார் போன்றவர்கள் இக் காவியங்கள் இலக்கியங்கள் மட்டுமல்ல, அவைகளின் காலத்தை விளக்கும் கண்ணாடிகள் என்றே கருத்துத் தெரிவித்தனர்.

*தோற்றம்*

நாம் இந்த அத்தியாயத்தில் மேற்கூறிய காவியங்களின் மூலம் அவைகளின் காலத்திய ஆட்சி அமைப்பு முறைகளைப் பற்றி ஆராய்வோம். இக் காவியங்களின் மூலம் நாம் அறிந்து கொள்கின்ற உண்மை, அப்போதைய பொதுவான ஆட்சி முறை கோனாட்சியே என்றாலும், அப்போது குடியாட்சியும் நிலவியது என்பதே.

ஓர் அரசு எவ்வாறு தோன்றுகிறது என்பதற்குப் பல கொள்கைகள் உள்ளன. அக் கொள்கைகளில் எக் கொள்கைகள் மகாபாரதக்காலத்தோடு பொருத்தமுடையனவாய் இருக்கின்றன என்று பார்ப்பதற்கு முன் அக் கொள்கைகள் யாவை என்று தெரிந்துகொள்வோம்.

அவை :

(1) இயற்கை நிலைக் கொள்கை. இதனைப் பொற்காலக் கொள்கை என்றும் கூறுவர். இக் காலத்தில் மக்கள், நலமாக, மன்னன் இன்றிச், சட்டங்கள் இன்றி வாழ்ந்தனர்.

(2) மச்ச நியாயக் கொள்கை. இக் கொள்கையின்படிச் சட்டமும் அரசனும் இல்லாவிடில், வலியவன் எளியவனை அடிமை கொள்வான். இதற்கு உதாரணம் பெரிய மீன் சிறிய மீனைப் பலிகொள்ளுதல் ஆகும்.

(3) உறுப்புகளால் அமைந்த கூட்டிணைவமைப்புக் கொள்கை. ஒவ்வொரு ஆட்சிப் பிரிவும் தனித்தனியாக இருப்பினும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளது என்னும் கருத்தாகும்.

(4) வேள்விக் கொள்கை. இக்கொள்கையினை உருவாக்கியவர் ஸ்பெல்மன்.

(5) கர்மத்தின் விளைவாகவே அரச பதவி என்னும் கொள்கை.

(6) தெய்வத்தினுல் அரசர்கள் உருவாக்கப்பட்டனர் என்னும் கொள்கை.

(7) முனிவர்களால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அரசர்கள் என்னும் கொள்கை.

(8) சமுதாய ஒப்பந்தத்தின் மூலம் அரசர்கள் உருவாக்கப்பட்டனர் என்னும் கொள்கை.

### இயற்கை நிலை

மக்கள் இயற்கை நிலையில் (State of Nature) வாழ்ந்தனரா என்று ஆராய்கின்றபோது மகாபாரத வன பருவமும், சாந்தி பருவமும் மக்கள் இயற்கை நிலையில் வாழ்ந்தனர் என்பதனை உறுதிப்படுத்துகின்றன. மனிதன் இறைவனுக்குச் சமமாய் வாழ்ந்தான் எனவும், ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தான் எனவும் கூறப்பட்டுள்ளது. காவிய கால மக்களுக்கு எண்ணிக்கை முறை சரியாகத் தெரியாத குற்றமா, அல்லது உண்மையிலேயே அவ்வாறு வாழ்ந்தார்களா என்பது புரியாத புதிராக உள்ளது.

### மச்ச நியாயம்

மச்ச நியாயக் கொள்கையினைப் பிராமணங்களில் இருந்து மட்டுமின்றிக் காவியங்களில் இருந்தும் அறிகிறோம். அரசன் இல்லை எனில் உலகில் என்ன நடந்துவிடும் என்பதைச் சாந்தி பருவம் காட்டுகின்றது. உயிர்கள் ஒன்றை ஒன்று காணமுடியாத அளவிற்கு இருளில் மூழ்கிவிடும் உலகம் எனவும், மீன்கள் நீரிலேயே புதையுண்டு இறந்துவிடும் எனவும், பறவைகளும், விலங்குகளும் பாதுகாப்போன் இன்றி அழிந்துவிடும் என நம்பினர்கள் எனவும் இப்பருவம் அறிவிக்கிறது. அரசன் தன் அதிகாரத்தைப் பயன்படுத்திட வில்லையென்ருல் வலியவன் எளியவனைத் தாக்கத் தொடங்குவான் என்றும் சாந்திபருவத்திலிருந்து அறிகின்ருேம். உறுப்புகளால் (federation) அமைந்த கூட்டிணைவமைப்புக் கொள்கை என்னும் கொள்கை காவியங்களின் காலத்தில் நிலவியதா எனத் தெளிவாகத் தெரியவில்லை.

### வேள்விக் கொள்கை

பிராமணர்களால் நிகழ்த்தப்பட்ட வேள்விகள் அரசனின் ஆயுளை நீடிக்கச் செய்து அதன்மூலம் மக்களின் வாழ்க்கை உயர்த்தப்பட்டது என்று கருதினர்கள் என்பதை அறியும் போது வேள்விக் கொள்கை இருந்தது என்றே கருதவேண்டும் என ஸ்பெல்மன் கருதுகின்ருர். வேள்விகள் அரசனை வாழவைப்பவை என்று நம்பினர்கள். அரச பதவிக்கும் கர்ம வினைகளுக்கும் தொடர்பு இருந்தது என்றே நம்பப்பட்டது. முற்பிறவியின் பயனலேயே மறுபிறவியில் ஒருவன் வாழ்க்கை அமைகிறது என்னும் கருத்தைச் சாந்தி பருவத்தில் காணுகின்ருேம். முற்பிறவியின் பயனல் அரச பதவி கிட்டியது என்று கருதப்பட்டாலும் இறைவனல் வழங்கப்பட்டது என்னும் கருத்தும் இருந்தது. மனிதர்கள் தங்களுக்குத் தலைவன் வேண்டும் என்று வேண்டியதாகவும், பிரம்மன் எழுப்பிய ஒலியின்மூலம் அவர்களுக்குத் தலைவன் கிடைத்ததாகவும் மகாபாரதத்தின் மூலம் அறிகிறோம். அரச பதவியின் தோற்றம் குறித்து மகாபாரதத்தில் பல கருத்துகள் கூறப்பட்டாலும், அது இறைவனல் உருவாக்கப்பட்ட பதவி என்னும் கருத்தே முன்னணியில் நிற்கிறது.

### பீஷ்மர்

யுதிஷ்டிரர் பீஷ்மரிடம் 'இராஜன் என்னும் வார்த்தை எப்போது தோன்றியது? ஏன் எண்ணிறந்த அறிவுக்கூர்மை

யும் ஆற்றலும் மிக்கவர்களை ஒருவன் ஆளவேண்டும்?" என்று கேட்டதாகவும், அதற்குப் பீஷ்மர் 'இயற்கை நிலையில் வாழ்ந்தபோது அரசன் என்று யாரும் இல்லாமையால் மனிதர்கள் தங்களுக்குள்ளே பகைமைபூண்டு ஒருவரை ஒருவர் அழித்திட முயன்றனர். இறைவன் பிரித்யூ என்பானை உருவாக்கினான்' என்று கூறிய பதில் அரச பதவி இறைவனால் அளிக்கப்பட்டது என்னும் கூற்றை மெய்ப்பிக்க உதவுகிறது.

### அரச பதவியும் முனிவர்களும்

மகாபாரதத்திலும், இராமாயணத்திலும் அரச பதவி முனிவர்களால் ஏற்படுத்தப்பட்டது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இராமன் இவ் வுலகத்தைவிட்டு நீங்கியபோது குழப்பம் நேரிடவே பூமிதேவி, கஸ்யப முனிவரை வேண்டிட அவர் பல அரசர்களை நியமித்தார் என்றும் அறிகிறோம்.

### சமுதாய ஒப்பந்தம்

மகாபாரதக் காலத்திலோ, இராமாயணக் காலத்திலோ சமுதாய ஒப்பந்தக் கொள்கை இருந்தது என்னும் கூற்றை ஸ்பெல்மென் ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய கருத்தின்படி பௌத்த இலக்கியங்களுக்கு முன்னால் சமுதாய ஒப்பந்தம் என்னும் கோட்பாடு இல்லை.

மேற் கூறப்பட்ட கொள்கைகளில் எல்லாக் கொள்கைகளும் காவியங்களின் காலத்திற்குப் பொருந்தவில்லை.

### தெய்வீகத்தன்மை

அரசனுடைய தெய்வத்தன்மையினை எந்த அளவிற்குக் காவியங்கள் காட்டுகின்றன என்று பார்க்கின்றபோது, அரசன் இறைவனை உள்ளடக்கியவன்; எனவே சிறப்பான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்னும் கருத்தே நிலவியது. சாந்திபருவம் 89-வது பிரிவில் அரசனை இந்திரனோடு ஒப்பிட்டு, 1000 கண்ணுடைய இந்திரனை எல்லாவகையிலும் ஒத்திருக்கின்றான் என்றே உரைக்கப்பட்டுள்ளது.

அரசன் தெய்வீகத் தோற்றுவாயைக் கொண்டவன்; தெய்வ அம்சம் பொருந்தியவன் என்று மட்டும் கருதப்படாமல், இறைவனின் வழித்தோன்றலாகவும் கருதப்பட்டான். 'அரசனே இந்திரன். அரசனே யமன். அரசனே தர்மம். அரசன் பல வடிவங்களை மேற்கொள்ளுகிறான்.

அரசன் உலகம் முழுவதையும் தாங்குகிறான்' என்பது சாந்தி பருவத்தின் கூற்று.

### தகுதிகள்

அரசனுக்குரிய தகுதிகள் பற்றிய குறிப்புகள் ஏதும் உள்ளனவா என்று காண்கின்றபோது, மகாபாரதம் ஆதிபருவத்தில் அரச வமிசக் குருதிக் கலப்பு உள்ளவர்கள், வீரர்கள், படையினைத் தலைமைதாங்கி நடத்திச் சென்றவர்கள் ஆகியோரே அரச பதவிக்குத் தகுதியுள்ளவர்கள் என்று விளக்குகின்ற குறிப்புக் காணப்படுகிறது. கோயுடையவர்களும், உடற் குறைபாடு உடையவர்களும் அரச பதவிக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டனர். திருதிராஷ்டிரன் குருடனாக இருந்தமையால் அரசனாக இயலவில்லை. பாண்டு என்னும் அவனுடைய தம்பி அரசனானான். பாண்டு இல்லாத போதே திருதிராஷ்டிரன் சிறிது காலம் ஆட்சி செய்தான். ஆயினும் பாண்டுவின் மக்களுக்கே வாரிசு உரிமை இருந்தது. திருதிராஷ்டிரனின் மற்றொரு சகோதரன் சூத்திரத் தாய்க்குப் பிறந்தபடியால் ஆட்சிக் கட்டில் ஏற முடியவில்லை என்பதிலிருந்து சூத்திரர்கள் என ஒதுக்கப்பட்டவர்களுக்கு ஆட்சிக் கட்டில் ஏறும் வாய்ப்பு இல்லை என்பது தெரிகிறது.

### அரசுரிமை

'பாண்டு என்னைவிட இளையவனாய் இருந்தும் அரச பதவியைப் பெற்று அரசன் ஆயினான். அவனுடைய மறைவிற்குப் பின்னர் அரசு அவன் மக்களுக்கே சேரவேண்டும். எனக்கே அரசுரிமை இல்லாதபோது உங்களுக்கு எப்படி அந்த உரிமை கிடைக்கும். நீங்கள் அரசனின் வாரிசுகள் இல்லை. எனவே அரச பதவியைப் பெறும் உரிமையும் உங்களுக்கு இல்லை' என்று திருதிராஷ்டிரன் தன் மக்களிடம் கூறியது குறிப்பிடத்தக்கது. ஜே. கோண்டா என்பவர் தம்முடைய நூலில் 'உடல் குறைபாடு உள்ளவர்களை அரச பதவிக்கு ஏற்றுக்கொள்வதில்லை. ஏனென்றால் அரசன் புனிதமானவன்; புனிதத் தன்மை உடல் திடமுடைய மனிதனிடத்தே இருக்கும். எனவே குறைபாடு உடையவர்கள் தகுதியற்றவர்கள்' என்று கூறித் திருதிராஷ்டிரன் கூறுவதையும் மேற்கோளாகக் காட்டுகின்றார்.

### பெண்கள்

காவியங்களின் காலத்தில் பெண்கள் ஆட்சி நடத்துவதற்குத் தகுதியற்றவர்கள் என்று கருதப்படவில்லை. பாரதப்

போரின் முடிவில் திருதிராஷ்டிரனுக்குத் தோற்ற அரசர்களின் சகோதரர்களையோ, மக்களையோ பதவியில் அமர்த்துமாறும், அவ்வாறு ஆண் வாரிசு இல்லையென்றால் பெண்மக்களை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துமாறும் கூறப்பட்டுள்ளசெய்தியும், இராமாயணத்தில் காட்டுக்கு இராமன் அனுப்பப்பட்ட பின்னர் தசரதன் தன்னால் இராமனின்றி வாழ முடியாது எனவும், கைகேயி விதவையாக ஆளலாம் எனவும் கூறுவதாகக் கிடைத்த செய்தியும் பெண்களும் ஆட்சி நடத்த அனுமதிக்கப் பட்டனர் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துகின்றன.

### சாதித் தடைகள்

அரச பதவிக்குச் சாதித் தடைகள் இருந்தனவா என்னும் கேள்விக்குக் கலியுகத்தில் சூத்திரர்களின் ஆட்சி என்னும் பயங்கரம் நிகழும் எனவும், அவர்கள் அசுவமேத வேள்வி நிகழ்த்துவர் எனவும் கூறப்பட்டுள்ளதோடு அனுசாசன பருவத்தில் தவமியற்றுவதன் மூலமாக அரச பதவியைச் சூத்திரன் பெறமுடியும் என்னும் செய்தி காணப்படுவதால் சாதித்தடை இருந்தது என்பது தெரிகிறது.

### தேர்தல்

தேர்தல் முறையில் அரச பதவி இருந்தது. காவிய காலத்தில் மன்னனைத் தேர்ந்தெடுத்தனர் என்று கூறப்படு வதைச் சில வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. தேர்தல் முறை இருந்தது என்று அவர்கள் கருதக் காரணம் என்ன? பரீக்ஷித் என்னும் அரசன் பாம்புகடித்து இறந்துவிட அவ்வரசனின் இறுதிச் சடங்குகள் முடிந்தவுடன் கூடியிருந்த மக்கள் பரீக்ஷித்தின் மகனை அரசனாக்கினர்கள் என்னும் ஒரு குறிப்பும், சாகரன் எனும் அரசன் இறந்தபின் குடிமக்கள் அஞ்சுமான் என்பவனைத் தங்கள் அரசனாகத் தேர்ந்தெடுத் தனர் என்னும் குறிப்புமே ஆகும். பொதுவாக அரசன் இறந்த பின்னர் மூத்த மகனே அரியணை ஏறுவது வழக்கமாக இருந்தது.

### இராஜன்

இராஜன் என்றால் மகிழ்வடையச் செய்பவன் என்றே கருதினர்கள். மகாபாரதத்தில் இராஜன் என்னும் சொல்லுக்கு விசேஷப் பொருள் ஏதும் இல்லை. அரசனை **இராஜன், போஜன், விராட், சாம்ராட், க்ஷத்திரியன், பூபதி, நிர்பா**

ஆகிய பெயர்களால் அழைக்கலாம் என்று கூறப்படுவதால் அரச பதவியில் பல நிலைகளும், வேறுபாடுகளும் இல்லை. விச்சவிக்கவிடையே 7707 அரசர்கள் இருந்தனர் என்பதனைக் குடியரசுகள் பற்றிய அத்தியாயத்தில் காண்போம்.

### புரோகிதர்

அரசன் ஒருவன் மட்டும் தனியே நின்று ஆட்சி நடத்திட இயலாது. எனவே அரசனுக்குத் துணைபுரியப் பலர் இருந்தனர். இவர்களில் புரோகிதர் மிகவும் குறிப்பிடத் தகுந்தவர். அரசின் பாதுகாப்பும், வளர்ச்சியும் எவ்வாறு அரசனைச் சார்ந்தனவோ அது போன்றே அரசனின் பாதுகாப்பும் வளர்ச்சியும் புரோகிதரைச் சார்ந்தன. பாகன் இல்லாத யானையின் தோற்றம் போர்க்களத்தில் எத்தகையதோ அத்தகையதே புரோகிதனைத் துணைக்கொள்ளாத க்ஷத்திரியன் நிலை என்று கருதப்பட்டது.

### மந்திரி

நாட்டிலுள்ள முக்கிய துறைகளின் தலைவர்கள் **மந்திரி, புரோகிதர், சாமுபதி, துவாரபாலர், காராக்கிரக அதிகாரி, திரவியசம்ச்சயக்கிரீட், யுவராஜா, பிரதேஷ்தா, நகர் அத்யட்சா, காரியநிர்மானகிரிட், துர்க்கபாலர், அத்விபாலகர், இராஷ்டிரபாலகர், சபாத்யக்ஷா, தர்மத்யக்ஷா, தண்டபாலன்** ஆகியோர்.

தசரதன் இராமனை நியமித்தபோது வசிஷ்டரும் எட்டு அமைச்சர்களும் இருந்தனர் என அறிகிறோம். அரசன் 37 சச்சிவர்களைக் கொண்டிருக்கவேண்டும் என்றும், அவர்களில் 4 பேர் பிராமணர்கள், 8 பேர் க்ஷத்திரியர்கள், 21 பேர் வைசியர்கள், 3 பேர் சூத்திரர்கள் ஒருவர் சுதா என இருக்க வேண்டும் என சாந்திபருவம் உரைக்கிறது. இருப்பினும் முக்கிய கொள்கைகள் 8 அமைச்சர்களுக் குள்ளேயே விவாதிக்கப்பட வேண்டும். உயர் நோக்குடையவர்களாய், நம்பிக்கைக் குரியவர்களாய், அறிவாற்றல், அடக்கம், அன்பு, பொறுமை, வீரம், உறுதி, கடமை தவறாமை ஆகியவைகளைக் குணங்களாகக் கொண்டவர்களே அமைச்சர் பதவிக்குப் பொருத்த முடையவர்களாகக் கருதப்பட்டனர். அமைச்சர்களுடைய வயதுத் தகுதி ஐம்பது என்று நிர்ணயித்திருந்தனர். ஆட்சிப் பொறுப்பை அமைச்சர்களிடம் விட்டுவிட்டு அரசர் கானகம் ஏகுகின்ற அளவிற்கு அவர்களிடம் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். நல்லதோர் அமைச்சரின்றி அரசனுல்

மூன்று நாட்கள்கூட ஆட்சி செலுத்த இயலாது என்றே கூறப்பட்டுள்ளது.

**ஒற்றர்களும், தூதுவர்களும்**

ஒற்றர்கள் அரசில் முக்கிய பங்கு வகித்தனர். எண்ணிறந்த ஒற்றர்கள் இருந்தனர். ஒற்றர்கள் எதிரிகளின் பாசறையிலேயேகூடச் செய்கைளைத் தெரிந்துகொண்டனர். ஒற்றர்கள் இருவரிடமும் இருந்தனர். ஒருவனுடைய படையில் மாற்றானின் ஒற்றர்கள் இருந்ததுபோன்றே, மாற்றானின் படையிலும் ஒற்றர்கள் இருந்தனர். காவியங்களில் இருந்து தூதுவர்களைப் பற்றிய செய்திகள் பலவற்றை அறிகிறோம். தூது வந்தவனைக் கொலை செய்யும் வழக்கம் இல்லையாயினும், துன்புறுத்தும் வழக்கம் இருந்தது என்பதனை இராமாயணம் காட்டுகிறது. தூதுவனைக் கொலைசெய்வது பாவம் என்றே கருதப்பட்டது.

**தண்டனை**

தண்டனை முறைகளில் அபராதம் வசூலிக்கும் முறை இருந்தது. அவரவர்களின் குற்றங்களுக்கு ஏற்பத் தண்டனை வழங்கப்பட்டது. செல்வந்தர்களாயிருப்பின் அபராதம் வசூலித்தலும், ஏழையாயிருப்பின் சுதந்திரத்திற்குத் தடை விதித்தலும் இருந்தது. கொடியவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டது. திருடியவனைக் கண்டுபிடிக்க இயலவில்லை எனில் பொருளை இழந்தவனுக்குத் தன் கருவூலத்திலிருந்து பொருள் கிடைக்குமாறு செய்தான் அரசன்.

**நீதிபதிகள்**

ஒவ்வொரு நகரத்திலும் கண்காணிப்பாளர் ஒருவர் நீதி வழங்கவும், தண்டனை அளிக்கவும் அதிகாரம்பெற்றவராக விளங்கினர். அத்தகைய கண்காணிப்பாளரை இக்கால நகராட்சித் தலைவரோடு (மேயர்) ஒப்பிடலாம். நீதிபதிகளாகத் திகழ்பவர்கள் குறிப்பிட்ட குடும்பங்கள் சிலவற்றைப் பற்றி, மக்களைப்பற்றி, பிறநாட்டவரைப் பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும். நடுத்தர வயதுடையவர்களே தகுதியானவர்கள் என்று கருதினர். நீதிபதிகள் குறைகள் காண முடியாதவர்களாகவும், அமைதியாகப் பேசுபவர்களாகவும் இருக்கவேண்டும். தர்மத்தைக் காக்கின்ற வழிகளிலேயே அவர்கள் நடக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்க்கப்பட்டது.

### போர்க்களம்

போர்க்களத்தில் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை களைப் பற்றியும் நாம் அறிகிறோம். ஒரே மாதிரியான ஆயுதங் களை வைத்திருப்பவர்களே போர் செய்யவேண்டும். போருக் குத் தயாராக இல்லாத நிலையில் இருப்போரையும், பின் வாங்குவோரையும், தேர் ஓட்டிகளையும்,விலங்குகளையும், இசை வாணர்களையும் தாக்குதல் கூடாது. பசுக்கள், பிராமணர் கள், பெண்கள், முட்டாள்கள், குடிகாரர்கள், பலவீனர்கள், தூங்குபவர்கள் ஆகியோர் கொலை செய்யப்படுதல் கூடாது. ஆனல் உண்மையாக இவ் விதிமுறைகள் முற்றிலும் பின்பற்றப் படவில்லை.

### திறை

திறை செலுத்தும் நாடுகளைப் பற்றிய செய்திகள் நிறைய காணக் கிடைக்கின்றன. தோல்வி யடைந்தவன் வென்ற வனுக்கு அடிமை எனப் பலர் முன்னிலையில் ஒத்துக்கொள்ள வேண்டியிருந்தது. திரௌபதையைக் கெடுத்திட எண்ணம் கொண்ட ஜெயதிரதன் பீமனல் பிடிக்கப்பட்டு அவமானம் செய்யப்பெற்ருன்.

### வரி வசூலிக்கும் முறை

மக்களைக் காக்கின்ற கடமையினுல் வரி வசூலிக்கின்ற உரிமை மன்னனுக்கு இருந்தது. மக்களைக் காப்பதற்குத் தான் வரி வசூலிக்கப்பட்டது. மக்களைக் காத்தல் என்னும் பணிக்கே மக்களிடமிருந்து வரி வசூலிக்கப்பட்டது. ஆனல் நிலவரி என்று விதிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் எல்லா நிலமும் அரசனின் உடைமை என்று கருதப்பட்டதுதான். எனவே அரசனின் உடைமைக்கு அரசனே வரி விதித்தல் பொருத்தமில்லை என்னும் எண்ணமிருந்தது. ஆனல் இன்றைய நாளில் நிலம் தனிப்பட்டவர்கள் உடைமையாக இருப்பினும், தேவைப்பட்டபோது அதனை எடுத்துக்கொள்ள அரசுக்கு உரிமை இருக்கிறது. அதில் வரும் பலனை அனுபவிக்கின்ற தனி நபர்கள் நிலவரி செலுத்துகின்றனர். சூத்திரனுக்கென்று தனி உடைமைகள் இல்லை. ஆறில் ஒரு பங்கே வரியாக வசூலிக் கப்பட்டது. வரியை வாங்கிக்கொண்டு மக்களைக் காத்திடாத மன்னன் அதர்மம் புரிபவனுகவே கருதப்பட்டான். மலர் களைச் சிதைத்திடாது தேனீ தேனை மட்டும் எடுப்பதுபோல் மன்னன் மக்களுக்குத் துன்பம் ஏற்படாத வகையில் வரி வசூலிக்க வேண்டும் எனக் கருதினர்.

### அரசியலும் சமயமும்

சமயத்திற்கும் அரசியலுக்கும் தொடர்பு இருந்தது. மக்களின் நலன் கருதி ஆண்ட மன்னன் வானுலகில் உயர் பதவி பெற்றான் என நம்பினார்கள். மக்களையும் அரசையும் காத்த மன்னனுக்குத் தெய்விக அம்சம் கிட்டியது. முன்னரே அரச பதவிக்கும் கர்மத்திற்கும் தொடர்பு உண்டு என்று கண்டோம். மறுமையில் ஏற்படும் விளைவுகளுக்கு அஞ்சி நேர்மை வழியில் அரசர்கள் நடந்திட அவாக் கொண்டனர். யாரும் அரசனை அவமதித்து நடந்திடல் கூடாது. அரசனுக்கு எதிராகச் செய்யப்படும் ஒவ்வொன்றும் உயிர்க் கொலைக்குச் சமமாகக் கருதப்பட்டது. தன் சிந்தனையிலேயேகூட அரசனைப் பற்றிய தாழ்வான எண்ணம் கொண்டிடுதல் கூடாது. அவ்வாறு எண்ணம் கொள்வாராயின் நரக உலகிற்குச் செல்வர் என்றும் எண்ணினர். மன்னன் அதிகத் தீங்கு விளைவிப்பானாயின் மிகமிக மோசமான நரகத்திற்குச் செல்வான் என்னும் கருத்தும் இருந்தது.

### கிளர்ச்சி

கொடுங்கோலனை எதிர்த்து மக்கள் கிளர்ச்சிகள் செய்தனர். பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்காத மன்னன் இறந்துவிட்டவனாகவே கருதப்பட்டான். மக்களைக் காப்பதாக வாக்குறுதிகளை அளித்துவிட்டு, அதன்படி நடவாத மன்னனைப் பைத்தியம் பிடித்த நாயைக் கொல்வதுபோல் கொல்ல வேண்டும் என்று கூறினர். மக்களைக் காக்காத மன்னன் மரயானைக்குச் சமம். மழை, மேகமில்லா வானம், விளையாத நிலம் ஆகியவற்றோடு அத்தகையவன் ஒப்பிடப்பட்டான். ஓட்டைப் படகை விட்டுவிடுவதைப் போல மக்களுக்குப் பாதுகாப்பளிக்காத மன்னனை ஒதுக்கிட வேண்டும் எனப் பீஷ்மர் கூறுகிறார்.

### ஜென்மேஜெயன்

மக்கள் எவ்வாறு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்? தவறு புரிந்த மன்னனைக் கொலை செய்தலே பொதுவான வழக்கமாயிருந்தது. சில சமயங்களில் மக்கள் மன்னனை விட்டு மொத்தமாக நீங்கிச் சென்றனர். ஜென்மேஜெயன் பிராமணர் ஒருவரைக் கொலை செய்துவிட எல்லாப் பிராமணர்களும் அரசனை விட்டு நீங்கிச் சென்றனர். வீணா என்னும் மன்னன் தவறான வழிகளில் நடந்து முனிவர்களுக்கு இடையூறு விளைவித்தபோது, முனிவர்கள் தர்ப்பைப் புல்லையே

ஆயுதமாக எடுத்து மந்திரங்களை ஓதி அரசனைக் கொன்றனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

### கிராமம்

கிராமம் அடிப்படையான ஆட்சிப்பிரிவு ஆகும். கிராமத்தின் தலைவர் கிராமணி ஆவார். கிராமணிக்கு மேற்பட்ட அதிகாரிகள் **தசகிராமி, பிம்சதீபா, சதகிராமி** என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் ஒவ்வொருவரும் முறையே பத்து, இருபது, நூறு கிராமங்களுக்குத் தலைவர்களாக விளங்கினர். ஆதிபதி என்பவர் 1000 கிராமங்களுக்குத் தலைவர்.

### படை வீரர்கள்

படைவீரர்கள் பணமாகவோ பொருளாகவோ ஊதியம் பெற்றனர். படைத் தளபதி ஒருவர் படை முழுவதையும் கவனித்துக்கொண்டார். காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என நால்வகைப் படையினமும், போக்குவரத்து, கடற்படை, ஒற்றர்கள் ஆகியோரும் இருந்தனர். உடல்வன்மை மிக்கவர்கள் கதை என்னும் ஆயுதத்தைப் பயன்படுத்தினர். தீப்பொறி பறக்கும் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. போரில் இறந்தவன் வானுலகம் செல்வான் என்று நம்பினர்.

### முடிவுரை

முக்கியமான மாற்றங்கள் காவியங்களின் காலத்தில் நடைபெற்றன என்பதனைக் கண்டோம். வேதகாலக் கடவுள்கள் சிறப்புத் தன்மை இழந்தன. பகவத்கீதை இந்து சமயத்தின் அடிப்படை நூல்களில் ஒன்றாயிற்று.

# 6. தர்மம்

**(Dharma)**

*முன்னுரை*

இந்திய ஆட்சி அமைப்பு முறை வளர்ச்சியினை ஆராய்கின்ற எவரும் தர்மம் என்னும் கோட்பாட்டினை அறிந்து கொள்ளாவிடில் பழங்கால இந்தியாவின் ஆட்சி அமைப்பு முறையினைத் தெளிவாக உணர்ந்து கொண்டவர்களாகக் கருதப்படமாட்டார்கள். தர்மம் என்னும் சொல் மிகவும் சிறப்புத் தன்மை வாய்ந்தது. இந்தியச் சிந்தனையில் தர்மம் என்னும் சொல் சிறப்பிடம் பெறுகின்ற அளவிற்கு வேறு சொற்கள் எவையும் சிறப்பிடம் பெறவில்லை. இருப்பினும் தர்மம் என்னும் சொல்லுக்குப் பல்வகைப் பொருள்கள் இருப்பதை உணர்கின்ற நம் மனத்தில் எழுகின்ற கேள்வி இது: இந்தியாவில் உணரப்பட்ட உண்மையான தர்மக் கோட்பாடு எது? இக்கேள்விக்கு யாரும் சரியான பதிலைத் தரவில்லை. எனவே இது முடிவான பதில் ஒன்றுக்குக் காத்திருக்கின்ற பிரச்சினையாகவே இன்னும் உள்ளது.

*பொருள்கள்*

தர்மத்திற் குரியனவாகச் சொல்லப்படும் பொருள்கள் யாவை என்னும் கேள்விக்குத் தர்மம் என்றால் ஒழுக்கம், நேரான செயல்கள், இயற்கையின் நியதி, தகுதியானவற்றோடு பொருந்துவது, எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படும் உண்மை, மரபுவழிக் கொள்கை, நேர்மை, அழிவேயில்லாதது, மாறுதல் இல்லா விதிமுறை, சட்டம் என்றெல்லாம் பல பொருள்கள் கூறப்படுகின்றன.

*கோட்பாடு*

தர்மம் தனித்த ஒரு கோட்பாடு (principle) அன்று. அரசியல் வாழ்க்கையில் எந்த அளவிற்குத் தர்மம் பேசப்பட்டதோ

அந்த அளவிற்குச் சமூக வாழ்க்கையிலும், சமய நெறியிலும் தர்மம் பற்றிப் பேசப்பட்டது. எனவே தர்மத்திற்கும், அரசியல், சமயச், சமூகச் செயல்களுக்கும் தொடர்பு உண்டு. தர்மத்தை ஒரு நியாய அளவு கோலாகக் கொண்டே பல்வேறு செயல்களின் சாதக பாதகங்கள் தீர்மானிக்கப் பட்டன.

### வாய்மை

பிரஹதாரண்யக உபநிடதத்தில் தர்மத்தை க்ஷத்திரிய னுக்கு மேம்பட்ட க்ஷத்திரியன் என வர்ணித்துக் கூறப் பட்டுள்ளது. மேலும் அவ்வுபநிடதம் தர்மத்தைவிட உயர்ந்தது இல்லை என்று கூறுவதோடு ஆற்றல் இல்லாத ஒருவன் ஆற்றல் மிகுந்த ஒருவனை ஆள்வதற்குத் துணைநிற்பது தர்மமே என்றும் உரைக்கிறது. இவ்வுபநிடதத்தின்படி தர்மம் என்றால் வாய்மை என்று பொருள். ஒருவன் உண்மையை உரைத்தால் தர்மத்தை அறிவிக்கிறான் என்று பொருள். தர்மத்தை அறிவித்தானுயின் உண்மையை அறிவித்தான் என்று பொருள். எனவே தர்மமும் வாய்மையும் ஒன்று என்பதாகும்.

### ரிதம்

பழைய வேத காலத்தில் ரிதம் என்னும் கோட்பாடே நில வியது. பாரசீகர்களோடு ஆரியர்கள் கொண்ட தொடர்பினுல் இந்தியாவிற்கு இரண்டு குறிப்பிடத்தக்க கோட்பாடுகளான 'ரிதம்' 'யஜ்ஞ' என்பவற்றைக் கொண்டுவந்தனர் என்று பார்த்தோம். ரிதம் என்பது இயலுலகு சார்ந்த விதி முறை (cosmic order) என்று சொல்லப்படுகிறது. இயற்கை உலகத் தில் ரிதம் வானுலகத்துப் பிரதிநிதி என்று கருதப்பட்டது. மனித உலகில் சமூக, நீதிமுறைகளைச் சார்ந்த விதிமுறையாக ரிதம் இருந்தது.

எந்த இடத்தில் ரிதம் இருந்ததோ அந்த இடத்தை தர்மம் என்னும் கோட்பாடு பிடித்துக்கொண்டது. ரிதம் என்னும் சொல் நியாய முறைகளையும், வாய்மையையும் வலியுறுத்துகிறது. ரிதம் என்னும் சொல்லுக்கு எதிர்ச்சொல் அனுரிதம் என்பது ஆகும். உண்மைக்குப் புறம்பானதும், நீதிநெறியோடு சாராததும், இயற்கை விதிகளுக்கு முரணு னதும் அனுரிதம் ஆகும். தர்மம் என்னும் சொல் ரிதம் என்னும் சொல்லின் பொருளோடு பொருந்துவது.

### வருணாசிரம தர்மம்

சதபாத-பிராமணம், ஐத்திரேய பிராமணம் ஆகியவற்றில் தர்மத்தைப் பற்றி வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. அரசனுடைய கடமையைப் பற்றிக் குறிப்பிடும்போது அரசன் அரச தர்மத்தை மட்டுமின்றிப் பல்வேறு வகுப்புகளைச் சார்ந்தவர்களின் வருணாசிரம தர்மத்தையும், சமுதாயத்தில் தனி மனிதர்களின் கடமையான ஸ்வதர்மத்தையும் நிலைநிறுத்தவும் வேண்டும் என்று அறிகிறோம்.

### ஸ்வதர்மம்

அரசனுக்குரிய தர்மம் அரச தர்மம் ஆகும். பல்வேறு வகுப்பினர்களுக்கு உரிய தர்மம் வருணாசிரம தர்மம் ஆகும். ஸ்வதர்மம் என்பது யாது என்பதை நாம் அறிய மகாபாரதத்தினையும், மனுவையும் துணைக்கொள்கிறோம். ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தனக்கென்று சில கடமைகள் உள்ளன. அவனுக்குரிய கடமைகளை மேற்கொள்வதே ஸ்வதர்மம் ஆகும். ஒவ்வொருவனும் அவனவனது கடமைகளை நிறைவேற்றுவது அவசியம் என்று கருதப்பட்டது. அதுவே ஸ்வதர்மம்.

ஸ்வதர்மத்தின் கொள்கைகள் யாவை என்று மேற்கூறிய நூல்களை ஆராய்கின்றபோது கீழ்க்கண்ட உண்மைகளை அறிந்துகொள்கிறோம். தனி மனிதனுக்கு அவனுடைய கடமையே எல்லாவற்றிலும் உயர்ந்தது. தன் கடமையைச் செய்வதனால் வாழ்க்கையே முடிவுற்றுவிடுமேயானாலும் கடமைதான் பெரிது என எண்ணவேண்டும். ஒருவனுடைய கடமையில் சில குறைபாடுகள் இருந்தாலும் அது அடுத்தவனுடைய கடமையை முழுமையாக நிறைவேற்றியதைவிட மிக உயர்ந்தது என்று சொல்லப்படுகிறது. தன்னுடைய கடமை இழிந்ததாக இருப்பினும் அதனை நிறைவேற்றத் தயங்கக்கூடாது என்றும், அடுத்தவனுடைய கடமையினை நிறைவேற்றும் பொறுப்பினை மேற்கொள்ளுதல் கூடாது என்றும் கூறப்படுகிறது.

### கடமையை நிறைவேற்றும் விதம்

தன் கடமையினை நிறைவேற்றும் ஆற்றல் படைத்த ஒருவன் தன் கடமையை நிறைவேற்றாது அடுத்தவனுடைய கடமையை மேற்கொள்வானாயின் அவன் கடமையிலிருந்து தவறியவனாகவே கருதப்படுவான். ஒருவன் முறையாகத் தன் கடமையை நிறைவேற்றும்போதுதான் இறைவன் மகிழ்கிறான்.

ஒவ்வொருவனும் அடுத்தவனுடைய தர்மத்தை அடுத்தவனுடைய அழகிய மனைவியைப் போல் எண்ணி அதனைப்பற்றி எண்ணுவதை விட்டுவிட வேண்டும்.

*சமுதாய மேம்பாடு*

சமுதாயத்தில் தனக்கென்று உள்ள கடமைகளையும், கடப்பாடுகளையும் (obligation) நிறைவேற்றவேண்டியவனாகவே ஒவ்வொரு மனிதனும் இருக்கின்றான். ஆனால் தன்னுடைய கடமைகளை மேற்கொண்டு அடுத்தவனுடைய பணிகளில் குறுக்கிடக் கூடாது. எல்லாக் கடமைகளும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றன. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தர்மத்தை மேம்படுத்துகிறான். தனி மனிதன் ஒவ்வொருவனும் ஏதாவது ஒரு வகுப்பைச் சார்ந்தவனாகவே இருப்பான். அவன் தன் தர்மத்தை மேம்படுத்துவதன் மூலமாகத் தன் வகுப்பின் தர்மத்தை மேம்படுத்துகிறான். ஒவ்வொரு வகுப்பும் சமுதாயத்தின் ஓர் அங்கம். எனவே முடிவில் சமுதாயம் மேம்படுகிறது. அப்சபாது சமுதாயத்தின் தர்மம் மேம்படுகிறது.

*தடைக்கல்*

பல்வேறுபட்ட மக்களும் தங்கள் விடுதலையைக் கருதிச் செயல்படும்போது அவர்கள் செயலுக்குத் தடைக்கல் தேவைப்பட்டது. அந்தத் தடைக்கல்லாக க்ஷத்திரிய தர்மம் பயன் பட்டது. அவ்வாறு தன் கடமையினை நிறைவேற்றும் போது வகுப்பு வேறுபாட்டையும் தாண்டிச் சமுகப் பொருளாதாரப் பாதுகாப்பினை அழித்துவிடும் சூழ்நிலை ஏற்படுமானால் அரசன் தலையிட்டுத் தன்னுடைய க்ஷத்திரிய தர்மத்தின் மூலம் அதனைத் தடுத்து நிறுத்துவான். அழிவிலிருந்து உலகம் காப்பாற்றப்படத் துணை நிற்பது தர்மம் ஒன்றே என்று பழங்கால இந்தியாவில் வாழ்ந்த மக்கள் எண்ணினர். மனித இயற்கை பற்றியும் அதனுடைய பேரார்வம் பற்றியும் உயர்வான சிந்தனைகளைக் கொண்டு மக்கள் வாழவில்லை. அரசன் ஸ்வதர்மம், வருணாசிரம தர்மம் ஆகிய கோட்பாடுகளைக் கண்டிப்பாக நிறைவேற்றிட வேண்டியவனாய் இருந்தான். அரசனுக்கு எவ்வளவு தான் வேண்டியவர்களாயிருந்தாலும் அரசனின் கடமை அவர்களைத் தங்களுடைய கடமையை நிறைவேற்றுமாறு வலியுறுத்தவே பயன் பட்டது.

*தண்டனை*

தர்மத்தை மீறியவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் அரசனுக்கு இருந்தது. தர்மத்தை மீறியவர்களைத் தண்டிப்பதன்

மூலம் அரசனின் தர்மம் நிறைவேற்றப்பட்டது. வகுப்பு களுக்கிடையேயுள்ள குழப்பத்தினை நீக்குவதன் மூலமாக அரசன் ஒரு பெரிய உலகத்திலும்கூடச் சிறப்பிடம் பெறும் வாய்ப்புப் பெற்றதாகக் கருதப்பட்டது. சில சந்தர்ப்பங் களில் வருணுசிரம தர்மம் மீறப்பட்டதற்கான சான்று மகா பாரதத்தின் மூலம் நமக்குக் கிட்டியுள்ளது. சில சந்தர்ப்பங் களில் ஒருவன் தன் தர்மத்தை மீறவேண்டியிருந்திருக்கிறது. அவ்வாறு மீறும் போது அது தவருகக் கருதப்படவில்லை. தர் மத்தைக் காத்திடப் புரோகிதர்களையும், பெண்களையும் ஒரு பிராமணன் கொலை செய்துவிட்டால் அந்தக் கொலை குற்ற மாகக் கருதப்படாத நிலையும் இருந்தது.

வருணுசிரமம்

சாந்தோக்கிய உபநிடதத்தினுல் தர்மத்தைப் பற்றிய மற் ருெரு கருத்தினை நாம் காண்கிருேம். அவ் வுபநிடதத்தின்படி தர்மம் மூன்று பிரிவுகளைக் கொண்டது. முதலாவது பிரிவில் வேள்வி, கல்வி, தானம் ஆகியவை பற்றியும், தவத்தினைப் பற்றி இரண்டாவது பிரிவிலும், பிரமச்சரிய வாழ்க்கை, குரு குல வாழ்க்கை ஆகியவைபற்றி மூன்ருவது பிரிவிலும் கூறப் பட்டுள்ளன. இக்கருத்து நால்வகை வருணங்களைப்பற்றிய வருணுசிரமக் கருத்தினை நமக்கு நினைவூட்டுகிறது. பிரமச் சரியம் எனப்படும் திருமணம் ஆகாத நிலை, கிரஹஸ்தம் எனப்படும் இல்லற வாழ்க்கை நிலை, வானப்பிரஸ்தம் எனப் படும் இல்லறத்தில் துறவற நிலை, சன்னியாசிப்பருவம், ஆகி யவையே வருணுசிரம தர்மத்தின் நான்கு நிலைகள். முதல் நிலையில் ஒருவன் தன் அறிவுசார்ந்த தேவைகளை நிறைவேற்று வதையும், இரண்டாவது நிலையில் இல்லற வாழ்க்கையின் அடிப் படையான திருமணம், பொருள் தேடுதல் ஆகியவற்றையும், மூன்ருவது நிலையில் இல்லறத்திலேயே துறவறத்தையும், நான்காவதாகத் துறவறத்தையும் மேற்கொள்ளுதல் ஆகும். இந்தக் கடைசி நிலையைப் பொதுவாக யாரும் மேற்கொள்ள வில்லை. இந் நான்கு நிலைகளும் தர்ம நோக்கங்களாகவும் கருதப்பட்டன.

தர்மத்தை நிறைவேற்றும் முறை

தர்மம் என்னும் சொல் 'த்ரு' என்னும் சொல்லின் அடியா கப்பிறந்தது. அதனுடைய பொருள் பற்றுதல் அல்லது நிலை நிறுத்துதல் என்பது ஆகும். தர்மம் உலகத்தை நேரானபடிச் செயல் புரியச் செய்வதுபோல், அரசன் தர்மத்தைக் கடைப்

பிடிப்பவன் ஆகிறான் என்று சதபாத பிராமணம் வலியுறுத்து கின்றது. தர்மம் என்னும் கோட்பாட்டிற்குப் புறம்பாக நின்று இயங்கி ஒருவன் தர்மத்தை நிலைநிறுத்திட இயலாது. இதற்கு மாறாக எந்த வகையிலாவது அதனை நிறைவேற்றும் முறை ஏற் பட்டாலுங்கூடக் கீழை நாடுகளில் நிலவிய வல்லாட்சிமுறையை இந்திய அரசியல் கோட்பாடுகள் கொண்டிருந்தன என்று கூறிட இயலாது. ஐத்திரேய பிராமணம் எது சரியானதோ, எது முறையானதோ அதனையே அரசன் பேசவும், மேற் கொள்ளவும் வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

## உணர்வது எப்படி

தர்மம்தான் உலகிலேயே உயர்ந்தது; இதற்கு மேற்பட்ட எதுவுமே கிடையாது; இதனினும் உயர்ந்ததாகச் சொல்லப் படுவதும் ஏதும் கிடையாது; அரசனைவிட, மக்களைவிடச், சமு தாயத்தைவிட உயர்ந்தது தர்மம் என்று பொதுவாகக் கருதப் பட்டது. தர்மம் இயற்கையான உலகியல் நியதி என்று கூறப்படுகிறது. வாய்மை, அறிவு ஆகியவற்றைப் பற்றிப் பேசுகிறோம். ஆனால் அந்த இரண்டையும் கண்ணால் காண முடியாது. என்றாலும் இரண்டும் ஒன்றல்ல, வேறுவேறு என்று உணர்கிறோம். அதைப்போலவே தர்மத்தினையும் கண்ணால் காணமுடியாது. செயலறிவாலேதான் உணரமுடியும்.

## ஏன் உருவாயிற்று

இனி நம்மிடையே தர்மம் ஏன் உருவாக்கப்பட்டது என்னும் கேள்வி எழலாம். இக் கேள்விக்கு உரிய விடையினைப் பிரஹதத்திர உபநிடதத்தில் காண்கிறோம். இவ் வுபநிடதத்தில் நால்வகை வருணத்தாரையும் பாதுகாத்திடவே தர்மம் உரு வாக்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. மகாபாரதத்தி லிருந்து கீழ்க்கண்ட செய்தி நமக்குக் கிடைத்துள்ளது. மனித வாழ்க்கைக்குப் பேராசை, காமம் ஆகியவற்றால் ஆபத்து ஏற் பட்டது எனவும், தர்மத்திற்கேகூட ஆபத்து ஏற்பட்டது எனவும் அதனைத் தடுத்து நிறுத்த மனித வாழ்க்கையின் நான்கு குறிக்கோள்களான தர்மம், அர்த்தம், காமம், மோட் சம் ஆகியவைபற்றி 1,00,000 அத்தியாயங்களில் பிரமன் விளக்கியதாகவும் சொல்லப்பட்டுள்ளது. மேற்கூறிய கருத் தினையே காமசூத்திரம் என்னும் நூலும் உரைக்கிறது.

தர்மம் ஒருவர் வாழ்கின்ற இடத்திற்கும் சூழ்நிலைக்கும் சம்பந்தம் உள்ள நடத்தை ஆகும். அர்த்தம் என்பது

தர்மத்தை நிலைநிறுத்தக் கடைப்பிடிக்கும் நேர்மையான வழியில் பொருள் தேடுதலாகும். காமம் என்பது வாழ்க்கையில் கிடைக்கும் முறையான மகிழ்ச்சி. மோட்சம் இறப்பின் பின் மனிதனுக்குக் கிடைக்கும் சிறப்பு. தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் ஆகிய நான்கும் மனிதனுடைய பயனுக்குச் சுருக்கப் பட்டன. தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்பவைகளை அறம், பொருள், இன்பம், வீடு என்று தமிழில் கூறுவர்.

### அரசனுக்கு விலக்கு

தெய்வத்தைப் பழித்து உரைப்பது, செய்வது ஆகியவை இன்றும் அரசாங்கத்திற்கு எதிராகச் செய்யப்படும் குற்றம் என்னும் கருத்து மேலை நாடுகளில் நிலவுகிறது. கடவுளர்க்கு என விதிக்கப்பட்ட விதிமுறைகள் மனிதனுக்கும் பொருந்துபவை.

உலகம் முழுமைக்கும் ஏற்புடைய தர்மம் காக்கப்பட வேண்டுமாயின் மனித வாழ்க்கையின் நடத்தையை ஆள்கின்ற சட்டங்களும் தேவை. எனவே வேத காலத்தில் சட்டங்கள், விதிமுறைகள் ஆகியவை வருணன் என்னும் ஒழுக்க நியதிக் குரிய கடவுளிடமிருந்து அரசனுக்காகத் தோன்றியதாகக் கருதப்பட்டது. அரசனைச் சட்டத்தின் தலைவனாக வருணன் ஆக்கினன் என்று சதபாத பிராமணம் கூறுகிறது. இவ்வாறு அரசன் வருணனால் தலைவனாக ஆக்கப்பட்டமையால் அரசன் தண்டனைகளிலிருந்து விலக்குப் பெற்றான், ஏன் அரசனுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டது எனில், அரசன் வருணன், தர்மம் ஆகியவற்றிற்குக் கட்டுப்பட்டவன்; எனவே விலக்கு அளிக்கப்பட்டது என்னும் பதில் கிடைக்கிறது.

### பிராயச்சித்தங்கள்

தர்மத்தை மன்னவன் மீறக்கூடாது. அப்படி மீற நேரிட்டால் அதற்கு என்று சில பிராயச்சித்தங்கள் செய்ய வேண்டியிருந்தது. நீதி பரிபாலனத்தின் மூலம் வசூலிக்கப்பட்ட பணத்தினை நீரில் எறிவதோ, பிராமணர்களுக்கு அளிப்பதோ பிராயச் சித்தம் என மனுவிலிருந்து அறிகிறோம். அரசன் வேள்விகளையும் பிராயச்சித்தமாக மேற்கொண்டான் என அறிகிறோம்.

### பிறநாடுகளுடன் ஒப்பிடுதல்

இந்திய மண்ணிற்குரிய தர்மக் கோட்பாட்டினைப் பிற நாட்டுக் கொள்கைகளோடு ஸ்பெல்மென் ஒப்பிட்டுக் காட்டு

கின்றார். பலவினமானவன் ஆற்றல் மிக்கவனை ஆள்வதற்குத் தர்மமே துணை நிற்கிறது என்பதனைக் கண்டோம். இதே கோட்பாடு சீன தேசத்தவர்களின் 'தாவ்' என்னும் கோட்பாட்டில் நிலவுவதைக் காண்கிறோம். 'தாவ்' கோட்பாடு உரைப்பது என்ன? 'மனிதனைப் பூமி ஆள்கிறது. பூமியை வானுலகு ஆள்கிறது. வானுலகத்தைத் தாவ் ஆள்கிறது. தாவ் தன்னை ஆள்கிறது' என்பதே. தாவ் என்பது தர்மத்தை ஒத்த கோட்பாடு. சீன தேசத்தில் மட்டுமின்றித் தர்மத்தைப் போன்ற 'மாட்' என்னும் கோட்பாடு எகிப்தில் நிலவியதையும் அறிகிறோம்.

## இயற்கைச்சட்டம்

ஐரோப்பியக் கொள்கையான 'இயற்கைச்சட்டம்' (Natural Law) தர்மத்தின் பொருளை ஓரளவு உடையதாக இருக்கிறது. இயற்கைச் சட்டத்தின்படி இயற்கை நியதியே எல்லாச் சக்தியிலும் உயர்ந்தது. ஏதாவது மனிதனுக்குரிய சட்டம் இயற்கையின் சட்டத்தினை மீறினால் அது செல்லாதது ஆகிவிடுகிறது. மனித சமுதாயத்திற்கு இயற்கைச் சட்டத்தின் ஒரு கொள்கையைக்கூடத் தள்ளுபடி செய்யவோ, மாற்றவோ முடியாது.

தர்மக் கோட்பாடு தத்துவரீதியிலானது; அதாவது ஒரு கொள்கையைப் போன்றது. ஆனால், தர்மம் தானே ஆட்சி செலுத்த முடியாது. எனவே தத்துவரீதியிலான தர்மக் கோட்பாட்டைவிட நிலையான ஒரு சக்தி ஆட்சியை நடத்தத் தேவைப்பட்டது. எனவே அரசனே தர்மத்திற்குப் பதிலாக ஆட்சியைச் செலுத்த நிலையான சக்தியாக நின்று தர்மசாஸ்திரங்களின் துணைக்கொண்டு சட்டத்தினைத் தீர்மானிக்க வேண்டியிருந்தது. சட்டங்கள் மனிதனால் உருவாக்கப்பட்டால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. வழக்கில் இருந்த நியதிகள் என்றால் அவை உயர்ந்தவை, செம்மையானவை, தெய்வீகமானவை என்று மக்களால் கருதப்பட்டன. எனவே மக்கள் அவற்றை மதித்தனர். சட்டங்கள் மனிதனால் உருவாக்கப்பட்டவை என்று கருதப்படாதவரை மக்களாட்சி முறையில் சட்டங்கள் உருவாகவில்லை.

## தர்மம் எது

இப்போது, நம்முடைய பணி எவ்வாறு தர்மக் கோட்பாடு தோன்றியது என்பதனை ஆராய்வது ஆகும். தர்மத்தின்

தோற்றுவாய் (origin) பற்றிப் பலவிதமான கருத்துகள் கூறப்படுகின்றன. கௌதமர் என்பவர் தர்மம் என்பது வேதம் முழுமையும் கொண்டதும், பழக்க வழக்கங்கள் சேர்ந்ததும் ஆகும் என்றார். பௌதாயணர் தர்மம் பழக்க வழக்கங்களால் உருவானது என்றும், அவ்வாறு பல்வேறுபட்ட மக்களின் பழக்க வழக்கங்கள் தெளிவின்றி இருந்தபோது நேர்மைத் திறம் படைத்தவர்களின் கருத்துகள் ஏற்கப்பட்டன என்றும் கூறினார். வசிஷ்டரும் இக்கருத்தினை ஏற்றுக்கொண்டதாக அறிகிறோம். ஆபஸ்தம்ப சூத்திரத்தில் ஆரியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவையே தர்மம் எனவும், அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாதவை அதர்மம் எனவும் கூறப்பட்டுள்ளது. தர்மம்பற்றிய பொதுவான கருத்து இதுவே. வேதங்கள், புனிதமரபுகள், நேரான நடத்தை உடைய வேதமறிந்தவர்கள் கருத்துகள், உயர்ந்தமனிதர்களின் பழக்கங்கள் அல்லது மரபுகள் ஆகியவையே தர்மம் என அழைக்கப்பட்டன.

### வழக்காறுகளும் மரபுகளும்

தர்மத்தின் தோற்றுவாயினைப்பற்றித் தெளிவான சிந்தனையில்லாதபோது தர்மத்தைப்பற்றிப் பல்வேறு விளக்கங்கள் பல்வேறு வகைகளில் கூறப்பட்டன. தர்மக் கோட்பாட்டினைப் பற்றி விவாதிக்கும்போது, நாம், அதனுடைய தோற்றுவாய்களில் முதலாவதாக, அடிப்படையாக விளங்கியது 'மரபு' என அறிகிறோம். இதுவே முதலாவது தோற்றுவாய் 'மரபு' ஆகும். 'நாட்டைச் சேர்ந்த சட்டங்கள், சாதிகள், குடும்பங்கள் ஆகியவை புனிதநிலைச் சான்றுகளுக்கு எதிரான கருத்தைத் தெரிவிக்காமல் இருந்தால் அவை ஏற்றுக்கொள்ளப்பட்டன. மனுவின் கருத்துப்படி தர்மம் நீதிநோக்கு உடையது. எனவே நேர்மையான அரசனைக் குடும்பங்கள், சாதிகள், நாட்டுப்புறங்கள் ஆகியவற்றின் தர்மத்தைக் கவனமாகப் பரிசீலிக்கச் சொல்கிறார். மேலும் அவைகள் வேதங்களுக்கு எதிரானவையாக இல்லாது இருந்தால், அரசனைக் கட்டுப்படுத்துபவைகளாகக் கருத வேண்டும் என்றும் உரைக்கிறார். மனுவின் கருத்துகளை யஜ்னவால்கியர் ஏற்றுக்கொண்டார்.

### பிரஹஸ்பதி

அரசன் தர்மத்தை நிலைகிறுத்த மரபுகளையும், வழக்காறுகளையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்று பார்த்தோம். எந்த அளவிற்கு அரசன் அவற்றைக் கருத்தில் கொள்ள

வேண்டும் என்னும் கேள்வி எழுகிறது. பெரும்பாலான நூல்களில் நியாயமான வழக்காற்று மரபுகளே தொடரப்பட்டிருக்கவேண்டும் எனக் கருதப்படுகின்றது. பிரஹஸ்பதி எண்ணிறந்த பழக்கங்களைக் குறிப்பிட்டு அவை அநியாயமானவை எனக் குறிப்பிடுகிறார். கீழ்த்திசையில் மீன் சாப்பிட்டன ரென்றும், மத்திய நாட்டில் பசுக்களைத் தின்றனர் என்றும் வடக்குப்பகுதியில் வாழ்ந்தவர்கள் மது அருந்தினர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் நீண்ட நாட்களாக வழக்காற்றில் இருந்தவை காக்கப்பட்டாலே தர்மம் நிலைபெறும் என்னும் நிலை இருந்தமையால் பிரஹஸ்பதி அவ்வாறு காக்கப்படவில்லை என்றால் மக்கள் தங்கள் வழக்காறுகளை விட்டுவிட மனமில்லாது கிளர்ந்தெழும்போது அரசு அழியும் என்றும் உரைத்தார்.

### கௌடில்யர்

ஆனால், கௌடில்யர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கருத்தைப் பூரணமாக ஏற்றுக்கொள்ளாது வழக்காற்றில் உள்ளவற்றை அரசன் மதிக்கவேண்டும் என்னும் கருத்தினை ஏற்றுக்கொண்டாலும் நியாயத்திற்குப் புறம்பானவற்றை அரசன் ஒழித்திட வேண்டும் என்றே குறிப்பிடுகிறார். அரசன் தர்மத்தின்படி ஆட்சி செலுத்த வேண்டும். எனவே தர்மத்திற்குத் தோற்றுவாய் வழக்காற்று மரபுகளும் பழக்கங்களும் என்று கருதவும் இடமுள்ளது.

### அரசனின் ஆணை

மரபுகளும், பழக்கங்களும் தோற்றுவாய் என்று கருதப்படுவதைப் போல் தர்மத்தின் மற்றொரு தோற்றுவாய் அரசனின் ஆணை ஆகும். அரசனின் ஆணை, உரிமைக்கட்டளை, பட்டயம் அல்லது வெற்றிச் சின்னம், அரசன் வேண்டுகோள் ஆகியவைகளின் வடிவத்தில் இருக்கும். பிரஹஸ்பதியின் மூலமாக அரசன் நிலக்கொடையினைத் துணியிலோ தாமிரத் தகட்டிலோ எழுதிக் கொடுத்ததாக அறிகிறோம். மேலும் அவ்வாறு அளிக்கப்பட்ட கொடைகள் சிறப்பானவைகளாகக் கருதப்பட்டன. அதனை வேறு யாரும் பெற்றுக்கொண்டவரிடமிருந்து ஏற்றுக்கொள்ளக் கூடாது.

அரசனின் சட்டங்கள் தர்மக்கொள்கையின் பின் தோற்றங்கள் என்று கூறப்படுகிறது. மகாவம்சம் என்னும் இலங்கைச் சான்றின்மூலம் இலங்கை அரசன் ஒருவன்

உயிர்க்கொலையை விட்டுவிடும்படி ஆணையிட்டதாக அறிகிறோம். மகாபாரதத்திலிருந்து எண்ணிறந்த மக்கள் மன்னனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடந்தனர் எனவும் அறிகிறோம். எனினும் தர்மத்தின் அடிப்படையான புனித மரபுகள், நேரான பழக்கங்கள், நிலைபெற்ற வழக்காற்று மரபுகள் ஆகியவை அன்றாட வாழ்க்கையில் மிகவும் சக்தி பெற்றுவிளங்கின. இதிலிருந்து தர்மத்தின் தோற்றுவாய்களில் ஒன்றான அரசனின் ஆணையைவிடப் புனிதமரபுகள், நேரான பழக்கங்கள், நிலைபெற்ற வழக்காற்று மரபுகள் ஆகியவை சிறப்புப் பெற்றனவாகக் கருதப்பட்டன என்னும் உண்மையினை அறிகிறோம்.

### குறிக்கோள்

மனிதனுடைய குறிக்கோள்களில் தர்மமே பொதுவாக உயர்ந்தது எனக் கருதப்பட்டது. தர்மத்திற்கு அடுத்தபடியாகவே அர்த்தம், காமம் ஆகியவை கருதப்பட்டன. நம்மிடையே ஓர் ஐயம் எழலாம். தர்ம நூல்களுக்கும் நடப்பில் உள்ள பழக்கங்களுக்கும், தர்ம நூல்களுக்கும், அரசின் செயல்களுக்கும் இடையில் சிக்கல் எழுமாயின் அது எவ்வாறு தீர்க்கப்பட்டது என்பதே அந்த ஐயம். கௌடில்யர் மூலம் நமக்குஅதற்கு விடை கிடைக்கிறது. அர்த்தசாஸ்த்திரம் தர்மத்தின் வழிநின்று அரசனே சிக்கலைத் தீர்த்திடவேண்டும் என்று கூறுகிறது. அரசின் சட்டங்களுக்கு அடிப்படையான சான்றுகளான தர்ம நூல்களுக்கும், அர்த்த் சாஸ்த்திரங்களுக்கும் இடையே வேறுபாடு தோன்றினால் தர்ம நூல்களையே பின்பற்றவேண்டும் என ஆபஸ்தம்ப சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

### மாறுதல்

மௌரியர் காலத்தில் தர்மத்தைப்பற்றிய கோட்பாடு முற்றிலும் மாறிவிட்டது என்றே சொல்லவேண்டும். மௌரியர்களின் காலத்தில் அரசனின் அதிகாரம் வலுப்பெற்றது. நீதித்துறையில் அரசனின் அதிகாரம் சக்திவாய்ந்ததாக இருந்தது. மரபுத்தடைகளை மீறுவதற்கு முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது என அறிகிறோம். இதுவரையில் இருந்த சூழ்நிலைகள் மாறத்தொடங்கின. தர்மத்திற்கும், இறைவனுக்கும் பிறகு அரசனும், அரசனுக்குப்பின மக்களும் என்னும் முறை இருந்தது. ஆனால் மௌரியர்கள் காலத்தில் தர்மத்தை அரசன் தன்கீழ்க் கொண்டு வந்த நிலை

யினைக் காண்கிறோம். எந்தத் தர்மம் அரசனைவிட உயர்ந்ததாகக் கருதப்பட்டதோ, அந்தத் தர்மம், இறைவன், அரசன், என்னும் நிலைகட்கு அடுத்ததாக எண்ணப்பட்டது. கௌடில்யர் தர்மத்தை விட அரசனுக்கே அதிகச் சிறப்பு வழங்கினார். தர்மத்தின் வழி நின்றே அரசன் சிக்கல்களைத் தீர்த்திட வேண்டும் என்று கௌடில்யர் கூறினாலும் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் மாறுபட்டுக் கூறப்பட்டிருப்பதைக் கண்டோம்.

*முடிவுரை*

இதுகாறும் கூறியவற்றிலிருந்து தர்மம் என்பது யாது? அது எத்தகையது? அது எவ் வகையில் செயல்படுத்தப் பட்டது என்பவைகளைக் கண்டோம். இனி அடுத்து வரும் அத்தியாயத்தில் பழங்கால இந்தியாவில் குடியரசுகளின் நிலை என்ன என்பதைக் காண்போம்.

# 7. குடியரசுகள்

## (Republics)

### குடியரசு

இந்தியாவில் இருந்த ஆட்சி அமைப்புப் பற்றிய ஆய்வினை மேற்கொண்ட நாம் இதுவரையில் முடியாட்சிபற்றிய செய்திகளைப்பற்றி மட்டுமே தெரிந்து கொண்டோம். வரலாற்று ஆசிரியர்கள் சிலர் இந்தியாவில் முடியாட்சி மட்டும் நிலவியது என்று கருத்துத் தெரிவித்தனர். அவர்களுடைய கருத்து இந்தியாவில் நிலவிய ஒரே ஆட்சிமுறை முடியாட்சிமுறையே என்பது. ஆனால் இந்திய வரலாற்றினை முறையாக ஆராய்கின்ற எவரும் மேற்கூறிய கருத்துகள் தவறு என்பதனை உணர்வார்கள். குலமரபுக்குழு நாடுகளான (Tribal states) மாளவகணம், யவ்தேயகணம் ஆகியவை குடியரசுகள் அல்ல என்று கூறுகின்ற சிலரின் வாதங்களை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. மாளவர்களும், யவ்தேயர்களும் குலமரபுக் குழுவினர் (Tribes) என்றாலுங்கூட அவர்களும் குடியாட்சி முறையினையே கொண்டிருந்தனர் என்பதனை நம்மால் சான்று காட்டி விளக்கிட இயலும்.

### கணம்

ஜைனசமய நூலான ஆசாரங்க சூத்திரத்தில் 'அரசன் இல்லாத நாட்டையும், அரச வம்சத்தினர் ஆளாத நாட்டையும், நாட்டின் ஆட்சிக்காக இருவர் சண்டையிட்ட நாட்டையும், 'கணம்' என்று சொல்லப்படும் அமைப்புள்ள நாட்டையும் ஒரு பௌத்தத் துறவி சென்று பார்வையிடுதல் கூடாது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து கணம் என்னும் அமைப்பு அரசியல் முதன்மை வாய்ந்த ஒன்று என உணர்கிறோம். கணம் எனப்படும் அமைப்பிலே அதிகாரம் ஒரு தனிமனிதனிடம் மட்டுமில்லாது பலரிடம் இருந்தது. சங்கம் என்னும்

சொல்லுக்குக் கணம் என்னும் சொல்லின் பொருளும் உண்டு.

### கிரேக்கர்கள்

நமக்குக் குடியரசுகள் பற்றிய செய்தியினை அறிவிக்க காணயங்கள் தகுந்த சான்றுகளாய் உள்ளன. நாணயங்களை மட்டுமின்றிக் கிரேக்க அறிஞர்களின் கருத்துகளையும் குடியாட்சிபற்றி அறிந்துகொள்ளத் துணைக்கொள்கிறோம். கிரேக்க வரலாற்று ஆசிரியர்கள் முடியரசு பற்றியும், முடியரசு அல்லாத அரசுகள் பற்றியுங் குறித்துள்ளனர். சிலர் கிரேக்கர்கள் உரைத்த உண்மைகளைத் தவறான செய்திகள் என்னும் எண்ணத்தில் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் நடுநோக்கிலே அவர்களுடைய கூற்றுகளை நன்கு ஆராய்ந்தால் எத்துணைக் கவனத்துடன் பல்வேறு அரசியல் அமைப்பு முறைகளை அவர்கள் விளக்கி உள்ளார்கள் என்பது தெரியும்.

### நியாசநகரம்

நியாசநகரத்தின் ஆட்சி உயர்குடியினர் (Nobles) வசமிருந்தது. சபாரகா என்னும் மக்கள் குடியாட்சியே கொண்டிருந்தனர். பியாஸ் நதியின் கிழக்கே அநேகக் கோனாட்சி இல்லாத (Non - Monarchical States) அரசாட்சிமுறைகள் இருந்தன. நாம் முடியரசு இல்லாத அமைப்புகளைக் 'கோனாட்சி இல்லா அரசு' (Non - Monarchical States) என்றே குறிப்பிடுகின்றோம். கோனாட்சி இல்லா அரசுகளுக்குப் பெயர்கள் இருந்திருக்க வேண்டும். அவற்றிற்கு இருந்த பெயர்கள் யாவை? சிலர் குலமரபுக்குழு அமைப்புகள் என்றும் (Tribal organisation), சிலர் சிலவர் ஆட்சி என்றும் (Oligarchy), சிலர் உயர்குடியினர் ஆட்சி என்றும் (Aristocracy), சிலர் குடியரசு என்றும் (Republics) அழைத்தனர்.

### சாக்கியர்கள்

அதனைக் குடியரசு என்றோ, மக்களாட்சி அரசு என்றோ அழைப்பது பொருத்தமில்லை என்று கருதப்படுகிறது. ஏனென்றால் அதில் அதிகாரம் எல்லா மக்களிடமும் இல்லாது உயர்குடியினரிடம் மட்டுமே இருந்தது. சாக்கியர்கள், கோலியர்கள், யௌதேயர்கள் ஆகிய இனத்தவரிடையே ஐயாயிரம் பேர்களிடம் மட்டுமே அதிகாரமிருந்தது. யானை ஒன்றினை நாட்டுக்கு அளித்தால் போதும் தங்கள் குரலை வெளிக்காட்டலாம் என்னும் நிலை இருந்தது.

### இக்காலக் குடியரசுடன் ஒப்பிடுதல்

யௌதேயர்கள், சாக்கியர்கள், மாளவர்கள், லிச்சவிகள் ஆகியோரின் நாடுகளைக் குடியரசுகள் என்று அழைக்கும்போது இக்காலத்திய குடியரசு அல்லது மக்களாட்சி நாடுகளைக் குறிக்கின்ற பொருளில் எண்ணிப் பார்கக்கூடாது. குடியரசு என்றால் அதிகாரம் தனி ஒருவனிடம் குவிந்திடாமையே. சிலவர் ஆட்சி, உயர்குடியினர் ஆட்சி ஆகியவைகூடக் குடியரசுகளாகக் கருதப்படுகின்றன. ஏதென்ஸ், உரோம், நெதர்லாந்து ஆகிய எந்த நாட்டிலும் மக்களாட்சிக்குரிய பண்புகள் இல்லை. இருந்தாலுங்கூட அவைகளைக் குடியரசுகள் என்றே அழைக்கிறோம். கிரேக்க, உரோமக் குடியரசுகளில் வாக்குரிமை பெற்றவர்கள் சிறு குழுவினரே. எல்லா மக்களும் வாக்குரிமை பெற்றவர்களாக இல்லை. அமெரிக்காவில்கூட நீக்ரோக்களுக்குச் சமீப காலம் வரை வாக்குரிமை அளிக்கப்படவில்லை பிரான்சு நாட்டில் மக்கள் தொகையில் பாதியே வாக்குரிமை பெற்றவர்கள். இருப்பினும் அந்த நாடுகளை யெல்லாம் முடியரசு நாடுகள் என்று சொல்லிவிடாது குடியரசுகள் என்றே அழைக்கிறோம்.

### அரசமுறை

இத்தகைய அடிப்படையில் நாம் காணுகின்ற அரசுகள் சிலவற்றையும் குடியரசுகள் எனலாம். ஏனென்றால் இறைமை (sovereign) அதிகாரம் ஒருவனிடம் இல்லாது எண்ணிறந்த வகுப்பார்களிடையே இருந்தது. பழங்காலக் கிரேக்கத்தில் உயர் குடியினருக்கும், மக்களுக்கும் இடையே போராட்டங்கள் பல நிகழ்ந்தன. அத்தகைய போராட்டம் ஏதும் நடந்ததாகப் பழங்கால இந்திய வரலாற்றுச் சான்றுகள் ஏதும் நமக்கு அறிவிக்கவில்லை. பல அரசர்கள் சமிதியில் ஒன்று கூடினர் என இருக்கு வேதம் உரைத்தது எனக் கண்டோம். சதபாத பிராமணம் எல்லா அரசர்களாலும் ஏற்றுக்கொள்ளப் பட்டவனே தலைவன் எனக் கூறுகின்றது. அரசர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் க்ஷத்திரியக் குடும்பங்களின் தலைவர்கள் என்று அல்டேக்கர் கருதுகின்றார். இறைமை அதிகாரம் மக்களிடத்தில் இல்லாது எண்ணிக்கையில் மிகுந்த உயர் குடியினரிடமிருந்து நாளடைவில் மரபு உரிமையாயிற்று. இந்த மரபு உரிமையே பிற்காலத்திய அரச முறைக்கு அடிப்படை ஆயிற்று. மரபுவழியே தலைவர்களைத் தேர்ந்தெடுக்காத நாடுகள் கணங்கள் என்றோ, சங்கங்கள் என்றோ அழைக்கப் பட்டன.

### சான்றுகள்

பழங்கால இந்தியாவின் வரலாற்றுக் காலத்தில் வட மேற்கு, வடகிழக்குப் பகுதியிலேயே குடியரசுகள் மலர்ந்தன. கிரேக்க அறிஞர்கள் நமக்கு வடமேற்குப் பகுதியிலிருந்த குடியரசுகள் பற்றிய செய்தியை அறிவிக்கின்றனர். வடகிழக்குப் பகுதியிலிருந்த குடியரசுகள் பற்றி நமக்கு அறிவிப்பவை பௌத்த இலக்கியங்களே. அதைப் போலவே இலக்கண நூல் ஆசிரிர்களான பாணினி, பதஞ்சலி ஆகியோரும் அறிவிக்கின்றனர். மகாபாரதம் நாடுகளின் அரசியல் சட்ட இயக்க முறைகளைப் பற்றி விளக்குகின்றபோது, கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் என்னும் நூல் கணங்கள், சங்கங்கள் ஆகியவற்றின் வல்லமையை எப்படி அழிப்பது என்று கூறுவதன் மூலமாகக் குடியரசுகளின் அமைப்பு முறைகளையும் காட்டுகின்றது.

### சிலகுடியரசுகள்

பஞ்சாப், சிந்து சமவெளியிலிருந்த குடியரசுகளின் பெயர்களை மட்டும் இலக்கண ஆசிரியர்கள் குறித்துள்ளனர். **கௌண்டபாரதா**, **தண்டகி**, **கௌஸ்டகி**, **ஜலமணி**, **பிரம்ம குப்தா**, **ஜானகி** ஆகியவை பாணினிகாலத்துக் குடியரசுகள். இவையெல்லாம் இணைந்து '**குனிந்தா**' எனப்படும் குடியரசு உருவாயிற்று. மகாபாரதத்தின் பாத்திரங்களில் ஒருவனான அர்ச்சுனன் மூலம் தோன்றியது 'அர்ஜுனயனக்குடியரசு' என்றும், யவ்தேயக் குடியரசு மூன்று குடியரசுகள் இணைந்து உருவானது என்றும் அறிகிறோம். மத்திய பஞ்சாப்பில் மத்ரா என்னும் குடியரசும், மாளவக் குடியரசும், சூத்ரகா குடியரசும், அலெக்சாந்தரைக் கடுமையாக எதிர்த்தன. மகாபாரதத்தில் மாளவர்களையும், ஷீத்திரர்களையும் ஒன்றாகவே இணைத்துப் பேசப்படுகிறது. **சிபிக்கல்**, **அசெஸ்ரே** மாளவத்திற்கு அருகிலிருந்தன. **ஷீத்திரகா**விற்கு அருகிலிருந்த **அம்பாஷ்**, **தாஸ்** அரசுமுறை மக்களாட்சியே எனக் கார்டியன் உரைக்கிறார். அந்தக விருஷிணிகள் குடியரசு பற்றிய செய்தி மகாபாரதத்திலும், மல்லர்கள், லிச்சவிகள், விதேகர்கள் ஆகியோர்களின் குடியரசுகள் பற்றிய செய்திகள் புத்தகால இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

### மையச் சட்ட மன்றம்

இனிக் குடியரசுகளின் ஆட்சி உறுப்புகள், சட்டங்கள் ஆகியவற்றைப்பற்றிஆராய முயல்கின்றநமக்கு ஏற்படுகின்ற

இடையூறு போதிய சான்றுகள் இல்லாமையே. விட்டு விட்டுக் கிடைத்துள்ள சான்றுகளைத் தொகுத்து ஓரளவிற்குச் செய்திகளை முழுமை பெறச் செய்கிறோம். மோரியர்கள், கோலியர்கள், சாக்கியர்கள் ஆகியோரின் குடியரசுகளில் சில கிராமங்களும், யௌதேயர்கள், மாளவர்களின் குடியரசுகளில் நகரங்களும், கிராமங்களும் இருந்தன. சிறிய நாடுகளில் மையச் சட்டமன்றத்தின் உறுப்பினர்கள் தலைநகர் அருகிலேயே வாழ்ந்தனர். அவர்கள் அருகில் வாழ்ந்தமையால் அடிக்கடி ஒன்று கூடி நாட்டின் நடப்புகளைக் கவனித்தனர். உயர் குடும்பத்தினர் ஒவ்வொருவரும் இராஜா என்றும், அக் குடும்பத்துப் பிள்ளைகள் உப இராஜாக்கள் என்றும் அழைக்கப்பட்டனர். ஆளுகின்ற வகுப்பினர் தவிர விவசாயிகள், பணியாட்கள், தொழிலாளர்கள் ஆகியவர்கள் மக்கள் தொகையில் அடங்கியிருந்தனர். பொது மக்களுக்குப் போர், சமாதானம், எல்லா மக்களையும் பாதிக்கின்ற நடவடிக்கைகளில் பங்கேற்க உரிமையில்லை.

### அரசியல் அமைப்பு

பெரிய குடியரசு நாடுகளில் சிறிது மாறுதலான அரசியல் அமைப்பு இருந்தது. பெரிய நாடுகள் பல மாநிலங்களாகப் (provinces) பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனி ஆளுநர்கள் (Governors) இருந்தனர். ஆளுநர் பதவிக்குச் சிறப்புரிமை பெற்றவர்களே நியமிக்கப் பட்டனர். எண்ணிறந்த நகரங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாகத் தங்கள் தலைவர்களைக் கொண்டு ஆட்சி நடத்தின. நகர அவைகள் (city councils) எவ்வாறு உருவாக்கப்பட்டன எனத் தெரியவில்லை. ஆயினும் அக் காலத்திய முடியாட்சியில் நகர அவைகள் என்ன வகையில் செயல் பட்டனவோ அவ் வகையிலேயே குடியரசைச் சார்ந்த நகர அவைகளும் செயல்பட்டிருக்கவேண்டும் என்று அல்டேக்கர் குறிப்பிடுகின்றார். கிராமங்களிலிருந்த கிராம அவைகளில் சாதாரண மக்கள் பங்கெடுத்துக் கொண்டனர். கிராமத்தின் தலைவர் ஆளுகின்ற வர்க்கத்தின் உறுப்பினராக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. கிராம அவையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் பல்வேறு தொழில் புரிபவர்கள், பல்வேறு வகுப்பினர்கள்.

### மையச் சட்டமன்றம்

குடியரசுகளின் தலைமை பெரிய மையச் சட்டமன்றத்தில் (central Assembly) இருந்தது. மையச் சட்டமன்றத்தில் சிறப்

புரிமை பெற்ற உயர் குடியினைச் சார்ந்த மரபினர், இராஜா என்னும் பட்டத்திற் குரியோர்களாக இருந்தனர். சிலர் தலை நகரிலும் சிலர் நகர்ப்புறங்களிலும் வாழ்ந்தனர். யௌதேயக் குடியரசின் மைய அவையில் ஐயாயிரம் உறுப்பினர்களும்; லிச்சவிக் குடியரசில் ஏழாயிரத்து எழுநூற்றேழு உறுப்பினர் களும் இருந்தனர். நூற்றுக்குப் பத்துச் சதவிகிதத்தினரே இக் கூட்டங்களில் கலந்து கொண்டனர். இந்த அவையில் சிறப்புரிமை பெற்றவர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம் என விதிக்கப்பட்டு இருந்தமையால் அவையின் உறுப் பினராக இருப்பதில் ஒவ்வொருவரும் பெருமை கொண்டனர். வாக்காளர் பட்டியல் எதுவும் இருக்கவில்லை. அதைப் போலவே தேர்தலும் நடைபெறவில்லை. தேர்தல் ஏதும் நடை பெற்றதாகச் சான்றுகளும் இல்லை.

டாக்டர் ஜெயஸ்வால் குடியரசு நாடுகளில் இரண்டு அவைகள் இருந்ததாகவும் அவைகள் மேல் அவை, கீழ் அவை என அழைக்கப்பட்டதாகவும் உரைக்கின்ற செய்தியினை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் சிறப்புரிமை பெற்ற வகுப்பினர் அவையின் உறுப்பினராக இருப்பதில் மிகப் பெருமை கொண்டனர் என்று கண்டோம். இந் நிலையில் இன் னொரு அவையினை ஏற்றுக் கொள்வார்களா என்பது ஐயத் திற்குரியது. அலெக்சாந்தரோடு சமாதானமாகச் செல் லுமாறு அறிவுரை கூறியவர்கள் மேல்சபையினர் என்று சிலர் கருதினர். அலெக்சாந்தரோடு சமாதானமாகச் செல்லுமாறு அறிவுரை கூறியவர்கள் மேல் அவை உறுப்பினர்கள் அல்லர்; சமுதாயத்தில் வயதும், அனுபவமும் பெற்றவர்களே. நாட்டின் தலையாய அதிகாரங்கள் மைய அவைக்கே இருந்தன. செயற்குழுவினரையும் (executives) இராணுவத் தலைவர் களையும் இந்த அவையினரே தேர்ந்தெடுத்தனர்.

## படைத்தலைவர் தேர்தல்

அலெக்சாந்தர் படையெடுப்பினைப் பற்றிய செய்தியினைக் கேள்விப்பட்டவுடன் இந்த அவையினர் படைத்தலைவர்களைத் தேர்ந்தெடுத்தனர். ரோமன் நாட்டுச் செனட் அவையினர் தங்கள் படைத்தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை இருந்தது. ஏதென்சிலும் (hereditary) மரபு முறையே இருந்தது. நாளடைவில் படைத்தலைவர் பதவி மரபுரிமை ஆயிற்று. மூன்று தலைமுறைகள் தளபதிக் குடும்பமாக மாறி னும் இராஜா, மகாராஜா போன்ற அரச பட்டங்களை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

### செயல்துறை

பௌத்த இலக்கியங்களின் மூலமாகச் சமயச் சங்கங்கள் தூதுவர்களை வரவேற்றல், வெளிநாட்டவர்களை வரவேற்றல் ஆகிய பணிகளைச் செய்தன என அறிகிறோம். அத்தகைய பணிகளையே மைய அவையும் கவனித்தது என அறிகிறோம். மைய அவையில் முதன்மை வாய்ந்த நூற்று ஐம்பது தூதுவர்கள் அலெக்சாந்தரிடம் அமைதி ஒப்பந்தம் செய்ய அனுப்பப் பட்டனர். பொதுச் சபையில் மறைவாக வைத்திருக்க வேண்டிய செய்திகளைப் பற்றி விவாதிக்கவில்லை. அவை களைச் செயல் துறையினர் தீர்மானத்திற்கு விட்டுவிட்டனர். செயல் துறையினர் மைய அவையின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர். அந்தக விருஷ்ணி என்னும் நாட்டின் தலைவர் நாரதரிடம், பலகட்சிகளின் விவாதங்களைப் பொறுமையோடு கேட்க வேண்டி இருந்தபடியால் மைய அவைக்குத் தாம் அடிமையாகி விட்டதாகக் கூறுகிறார். குடியரசுகளின் தலைவர்கள் பொது நிதியைத் தவறானவழியில் பயன் படுத்தினாலோ அல்லது நாட்டின் பொது நீதியை மீறினாலோ நாட்டின் தீர்ப்பு மன்றத்தின் (State Tribunal) மூலமாகப் பதவி யிலிருந்து நீக்கப்படவும், தண்டனை பெறவுஞ் செய்தனர் என அர்த்தசாத்திரம் உரைக்கிறது. இவ்வாறாகச் செயல்துறை யினர் மைய அவையின் அரசியல் அமைப்பின் முழுக் கட்டுப் பாட்டின் கீழிருந்தனர்.

### சமூகக்குழாம்

சட்டமன்றக் கூடம் சமூகக்குழாமாகப் (Social club) பயன் பட்டது. அங்கே சமய, சமூகக் கருத்துகள் விவாதிக்கப் பட்டன. புத்தர் இறந்தபின்னர் அவருடைய புனிதச் சாம்பலைக் கரைப்பது குறித்துக் குஷிநாகரைச் சார்ந்த மல்லர்கள் விவா தித்தனர். லிச்சவி இனத்தவர் போற்றுதலுக்குரிய ஒரு வரைக் கொண்டு சட்டமன்றக் கூடத்தின் திறப்பு விழாவினை நிகழ்த்துமாறு செய்ததாக அறிகிறோம்.

### குழப்பம்

சமூகச், சமயக் கூட்டங்கள் அமைதியாகவும், இடையூறின் றியும் நடைபெற்றபோதிலும் அரசியல் காரியங்களை விவா தித்தபோது குழப்பம் நிலவியதாகத் தெரிகிறது. மைய உறுப்பினர்களிடையே இலஞ்சம், உள்குழப்பங்கள், கட்சிச் சண்டைகள், குடும்பச்சண்டைகள் ஆகியவை இருந்தன என மகாபாரதத்திலிருந்தும், அர்த்தசாத்திரத்திலிருந்தும் அறி

கிறோம். நாரதரும், புத்தரும் அத்தகைய தீயவற்றை ஒதுக்கிட வழி முறைகளைக் காட்டினர். ஆனால் கௌடில்யர் இக் குழப்பங்கள் நீடிக்க வழிசெய்தார் என அர்த்தசாஸ்திரத்தின் மூலம் அறிகிறோம். ஏனென்றால் குழப்பங்கள் நீடித்தாலே குடியரசுகள் அழிவுறும்; முடியாட்சி வலுப்பெறும் என அவர் எண்ணினார்.

### அதிகாரம் பெறும் ஆற்றல்

கட்சிச் சண்டைக்கு அடிப்படையான தனிப்பட்ட போட்டிக்கு அதிகாரத்தின் மீது ஒவ்வொருவருக்கும் இருந்த ஆசையே காரணம் ஆகும். ஒவ்வொருவரும் இக் காலத்தைப் போலத் தமக்கென்று தனித்தனியாகக் குழுக்களை உருவாக்கிக் கொண்டனர். ஆர்வமிக்கவரும், அமைப்புத் திறன் வாய்ந்தவரும், சிறந்த சொற்பொழிவாளரும் ஆக இருக்கின்ற வராலேதான் அதிகாரத்தைத் தன்கைக்குக் கொண்டு வர முடிந்தது என மகாபாரதம் உரைக்கிறது. இரண்டு கட்சியினர் சமவலிமை பெற்றவர்களாகத் திகழ்ந்த போது நடுநிலையாளர்கள் தங்களுக்கு விருப்பப்பட்ட கட்சியில் சேர்ந்து கொண்டனர்.

### கட்சிப் பிரிவினை

கட்சிப் பிரிவினையை இக்காலத்தில் உள்ள கட்சிகளின் அமைப்போடு ஒப்பிடக் கூடாது. பதவியிலிருக்கின்ற கட்சியைச் சார்ந்தவர்களை அப் பதவியிலிருந்து விரட்டுவது எளிதாக இல்லை என்பதனை மகாபாரதத்தின் மூலம் அறிகிறோம். அவையிலிருந்தவர்கள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்தபோது நடுநிலை தவறாது தலைவர் நடந்து கொள்ள வேண்டியதாயிற்று. முழு நிறை நலம் பெற்றநாட்டில் கட்சிப் பாகுபாடு இல்லை. வயது முதிர்ந்தோர் கருத்தே ஏற்றுக் கொள்ளப்பட்டது. பெரும்பான்மையர் கருத்தினை (Majority) ஏற்றுக் கொள்ளும் நிலை இல்லை. இம் முறையினை லிச்சவி நாட்டினரிடம் காண்கிறோம். அலெக்சாந்தரை எதிர்ப்பதற்குத் தளபதிகளை நியமித்த அவையினர் பின்னர் முதியோரின் கருத்துப்படிச் சமாதான உடன்படிக்கை செய்தனர் என்பதை மேலே கண்டோம்.

### கட்சியின் பெயர்கள்

அல்டேக்கர், குடியரசுகள் கட்சி அடிப்படையில் அமைந்த (Party based) குடியரசுகள்தாம் என உரைக்கிறார். பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் தனித்தனிக் குழுக்களாக அமர்ந்

தனர். தலைவர்கள் பெயராலேயே கட்சிகள் அழைக்கப்பட்டன. 'வாசுதேவவர்க்கியா' என்பது வாசுதேவனின் கட்சியாகும். 'அக்ரூரபக்கியா' என்பது அக்ரூரா என்பவரின் கட்சியாகும். வர்க்கியா, கிரிக்கியா, பக்ஷியா என்பவை கட்சி உறுப்பினரைக் குறிப்பிடப் பயன்பட்ட சொற்களாகும்.

### கோரஎண்

கூட்டம் நடைபெறுவதற்குக் கோர்எண் (Quorum) தேவைப்பட்டது என அறிகிறோம். புத்த சமயக் கூட்டங்கள் நடைபெறக் குறைந்தது இருபது பேராகிலும் தேவைப்பட்டனர். அதைப் போலவே குடியரசிலும் தேவைப்பட்டிருக்கலாம். உறுப்பினர்களை அவையில் இருக்கச் செய்யக் கொறடாக்கள் (Whip) இருந்தனர். கொறடாவாகப் பணியாற்றியவர் கணபூரகர் என அழைக்கப்பட்டார். அவை உறுப்பினர்க்கு இடம் ஒதுக்கத் தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார். சங்க முக்கியர் அல்லது நாட்டின் தலைவர் என அழைக்கப்பட்டவர் பாகுபாடின்றி நடந்து விவாதங்களை ஒழுங்கு செய்தார்.

### சாக்கியர்கள்

தீர்மானங்களை ஒருவர் முன்வைத்தலும் அதைக் குறித்து விவாதித்தலும் இருந்தது. தீர்மானத்திற்கு ஆதரவானவர்கள் அமைதியாயிருந்தனர். எதிர்ப்பவர்கள் மட்டுமே தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர். கருத்தொற்றுமை இல்லாத போது தீர்மானம் வாக்குக்கு விடப்பட்டுப் பெரும்பான்மையினரின் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. சாக்கியர்களை எதிர்த்துக் கதவைத் திறப்பதா இல்லையா என்பது குறித்த விவாதம் குடியரசு ஒன்றில் எழுந்தது. அதைச் சிலர் ஆதரித்தனர்; சிலர் எதிர்த்தனர். முடிவில் தீர்மானம் வாக்குக்கு விடப்பட்டுப் பெரும்பான்மையின் முடிவுப்படி நடத்தப்பட்டது. குடியரசு அலுவல்களைக் கவனிக்கச் சில எழுத்தர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் அவை நடப்புகளைக் கவனித்தனர்.

### செயல்துறை

மையச் செயல்துறையினர் (Central Executive) நாட்டுக்கு நாடு வேறுபட்டிருந்தனர். மல்லநாடு சிறியது. இங்கு மொத்தம் ஐந்து உறுப்பினர்களே செயல் துறையினராய் இருந்தனர். லிச்சவி நாட்டில் 7707 பேர் இருந்தனர் என்பதை முன்பே பார்த்தோம். பொதுவாகக் குடியரசில் செயற்குழு

உறுப்பினர்கள் (Executive Members) நான்கு பேர் முதல் இருபது பேர் வரை இருந்தனர். செயற்குழு உறுப்பினர் அவைக்கு எவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்டனர் என்று தெரியவில்லை. செயற்குழு உறுப்பினர் பதவி நாளடைவில் மரபு உரிமை ஆயிற்று. மரபு உரிமைப்படி உறுப்பினர்களை அனுமதிக்கவில்லை யென்றால் சமூகத்தில் குழப்பம் நேரிடும் எனக் கௌடில்யர் எச்சரித்துள்ளார்.

### தளபதிகள்

கண நாடுகள், இராணுவ மரபினால் புகழ்பெற்றவை. தளபதிகள் கூர்த்த மதியும், நிறைந்த அனுபவ அறிவும், செயல் திறனும், எடுத்த காரியத்தை முடிக்கின்ற ஆற்றலும் பெற்றவர்கள் என மகாபாரதம் உரைக்கிறது.

### தலைவர்

செயல்துறையின் தலைவராக (Executive head) இருந்தவரே மைய அவையின் தலைவராக இருந்தார். பொது நிர்வாகத்தை (Public Administration) மேற்பார்வையிடுவதும், உறுப்பினர்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டுவதும் ஆகிய பணிகளே தலைவரின் பணிகள். ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒவ்வொரு விதப் பணிகள் கொடுக்கப்பட்டிருந்தன. ஓர் உறுப்பினர் வெளிநாட்டு விவகாரங்களையும், ஓர் உறுப்பினர் நிதித் துறையினையும், ஓர் உறுப்பினர் நீதித் துறையினையும், காவல் துறை, வருவாய்த்துறையினை இரு உறுப்பினர்களும், வாணிபம் தொழில் ஆகியவற்றை இரு உறுப்பினர்களும் கவனித்துக் கொண்டனர். ஒவ்வொரு துறையும் தங்களுக்கென்று தனி அலுவலர்களைக் கொண்டு இயங்கின. சிறிய நாடுகளின் செய்திகள் நேரடியாக மேலிடத்துக்குத் தெரிவிக்கப் பட்டன. பெரிய நாடுகளில் அதற்கென வகுக்கப் பட்ட முறைகளில் சென்றன.

### யௌதேயக் குடியரசு

பெரிய குடியரசான யௌதேயக் குடியரசு எண்ணிறந்த நகரங்களைக் கொண்டிருந்தது. நகரங்கள் முழு சுயாட்சி பெற்றிருந்தன. ஒவ்வொரு நகரத்திலும், நகர மன்றங்களிருந்தன.

கிராமங்களில் பஞ்சாயத்துகள் நிலைபெற்றன. கிராம மன்றங்கள், விவசாயம், வாணிபம், தொழில் ஆகியவற்றைக்

கவனித்தன. குடியாட்சியில் வாழ்ந்தவர்களுக்கு நாட்டுப் பற்றும் சுதந்திரமும் இருந்தன.

### அழிந்த விதம்

இனிக் குடியரசுகள் எவ்வாறு அழிந்தன என்பது குறித்து ஆராய்வோம். டாக்டர் கே. பி. ஜெயஸ்வால் அலெக் சாந்தரைப் போலக் குடியரசு மக்களின் உணர்வுகளைச் சந்திர குப்தர் நசுக்கினர் என்று கூறினர். ஆனல் இக் கூற்று உண்மையில்லை. ஏன்எனில் குப்தர்களின் உயர்ந்த நிலையினை மாளவர்கள், அர்ஜுனயர்கள், யௌதேயர்கள் ஏற்றுக் கொண்டு கப்பம் செலுத்தினர். மௌரியர்கள், குஷானர் கள் காலத்தில் மறைந்த குடியரசுகள் அவர்களுக்குப்பின் தோன்றின. குடியரசுகளின் அழிவுக்குக் காரணம் குடியரசு களில் மரபுரிமை நிலை ஏற்பட்டதேயாகும். குடியரசுகளின் தலைவர்களாக இருந்தவர்களின் மரபினர் அரச பட்டங்களைப் பெற்றுக் கோனாட்சிக்கு வழி வகுத்தனர். குடியரசுகள் ஏன் இந் நிலைமையை அனுமதித்தன என்பது தெளிவாகத் தெரிய வில்லை. குடியரசை விட முடியரசில் அதிகப் பாதுகாப்பு இருப்பதாக மக்கள் எண்ணியிருக்கலாம் என்பதே நம் கருத்து.

# 8. சமய எழுச்சிக் காலம்

## (Age of Religious Revival)

### உலகில் மாறுதல்கள்

கி. மு. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கி. மு. நான்காம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தினைச் சமய எழுச்சிக் காலம் என்றோ, சமயப் புரட்சிக் காலம் என்றோ கூறலாம். இக் காலத்திற்கும் இதற்கு முந்திய காலங்களுக்கும் வேறுபாடு உள்ளது. சமயத் துறையிலே ஏற்பட்ட புரட்சியின் விளைவாக ஜைன சமயமும், பௌத்த சமயமும் தோன்றின. சமயத் துறைப் புரட்சி அரசியல் துறையில் பிரதிபலித்தது. உலகில் மாறுதல்கள் தோன்றுகின்றபோது மக்கள் மனதில் எத்தகைய சிந்தனைகள் தோன்றுமோ அத்தகைய சிந்தனைகள் இக் காலத்தும் தோன்றின. ஏதனையும் பகுத்து அறிகின்ற மனப் பக்குவம் மக்களுக்கு ஏற்படலாயிற்று. சமயத்தையும் சடங்குகளையும் சத்தமின்றி இதுவரை ஏற்றுக்கொண்டவர்கள் புதிய சிந்தனைகளின் விளைவாக எதனையும் ஏன் என்று கேட்க ஆரம்பித்தனர்.

### பிராமணீயம்

இதன் விளைவாகத் தத்துவங்களும் கோட்பாடுகளும் எழுந்தன. வேள்விகளையும், பலிகளையும், சடங்குகளையும் எதிர்ப்பதோடு நின்று விடாது புதியனவற்றை உருவாக்கும் எண்ணமும் தோன்றியது. இந்தப் புதிய சக்திகள் பிராமணீயத்திற்கு எதிராக எழுந்தவை. எனவே இவற்றின் சக்தியை அடக்கிடப் பிராமணீயம் தலைப்பட்டது. கல்ப சூத்திரங்களும், உபநிடதங்களும் அத்தகைய பணிக்கே உருவாயின. இத்தகைய சூழ்நிலையின் அடிப்படையில் நாம் அரசியல் அமைப்பு முறையினை ஆராய வேண்டும்.

### வழக்கங்கள் சட்டங்களாதல்

இதுவரையில் அரசனிடம் மட்டுமின்றி நாட்டிலும் பிராமணியத்திற்குச் செல்வாக்கு இருந்தது. மன்னனுக்கு இறைமை அதிகாரத்தினை வழங்கியதே பிராமணியம்தான். ஆனால் ஜைன, பௌத்த சமயங்கள் நாம் காணுகின்ற இக்காலத்தில் பிராமணியத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்குச் சவாலாய் அமைந்தன. இந்தச் சவாலைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலையில் பிராமணியம் இருந்தபோது அது அதற்கான வழிமுறைகளைத் தேடலாயிற்று. தர்ம சூத்திரங்கள் இதுவரையில் இருந்த பழக்க வழக்கங்களைச் சட்டமாக மாற்றியமைத்தன. எனவே சட்டங்கள் ஏற்பட்டவுடனே அரசனுடைய கடமை அவற்றிற்கேற்பத் தானும் நடந்து மற்றவர்களை நடக்கச் செய்வதுமாய் ஆயிற்று. இறை அதிகாரத்தினைப் பிராமணியத்திலிருந்து பெற்றிருந்த அரசன் இப்போது அதனைச் சட்டக் கோட்பாடுகளின் மூலம் பெற்றது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஆகும். பிராமணியம் அரசனைச் சமய வழியில் நடக்கச் செய்வதின் முலம் தன் பிடியில் அவனை வைத்திருந்தது. சமயத்தின் பிடியிலிருந்து அரசனை விடுபடச் செய்யப் புதிய சக்திகள் அரசனுடன் ஒத்துழைக்க வேண்டியிருந்தது. பிராமணியத்தை அழித்திடப் புதிய சக்திகள் முயன்றபோது, பிராமணியம் அரசனை நாடிற்று. எதிர்ப்புச் சக்திகளும் அரசனுடைய துணையை நாடின. பிராமணியமும் அரசனின் துணையை நாடிற்று என்பதே இக்காலத்தின் சிறப்பு. இதன் விளைவாக அரசனின் செல்வாக்கு அதிகரித்தது. அரசனுக்குச் செல்வாக்கு ஏற்படும்போது சமயத்தின் செல்வாக்குக் குறைந்து விடத்தான் செய்யும். இதுவரையில் அரசியல் துறையில் சிறப்பிடம் வகித்த சமயம் இப்பொழுது பின்னால் தள்ளப்பட்டு விட்டது.

### அரசுமுறை

இக்காலத்தில் இருந்த அரசு முறைகள் முடியரசும் முடியரசு அல்லாத அரசு அல்லது குடியரசும் ஆகும். சமயத்தின் சவாலைச் சந்தித்த அரசன் இப்பொழுது குடியரசுகள் பால் தன் கவனத்தைச் செலுத்தினான் என்பது குறிப்பிடத்தக்கது. அரச முறைக்கு எதிரான அரசு முறை குடியரசு அது என்பதே காரணமாகும். குடியரசுகள் பற்றிய அத்தியாயத்தில் நாம் குடியரசுகள், சிலவராட்சி ஆகியவை பற்றி ஏற்கெனவே விவாதித்தாலும் இங்கு மேலெழுந்த வாரியாக இக்காலத்திய முறைகளை மட்டும் அறிந்து கொள்வோம்.

### முடியரசுகள்

முடியரசு நாடுகள் அளவில் பெரியவை; வலுவில் மிக்கவை. ஏற்கெனவே பழமைச் ஆதிக்க மனப்பான்மை கொண்டவை. சக்திகளுக்கும் புதுமைச் சக்திகளுக்கும் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்த இச் சந்தர்ப்பத்தில் அரசியல் துறையில் முடியரசு நாடுகளும், முடியரசு அல்லாத நாடுகளும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன. மேலும் அலெக்சாந்தரின் வடிவத்தில் பேராபத்து ஒன்று நேரிட்டது. அலெக்சாந்தரை எதிர்க்க இயலாத முடியரசுகள் அழிந்தன. ஆனால் முடியரசு அல்லாத அரசுகள் முழுமையாக அழியவில்லை. அவற்றின் முன்னேற்றத்தில் ஒரு தடைதான் ஏற்பட்டது. மௌரியப் பேரரசின் தோற்றம் முடியாட்சியின் வல்லமையைக் காட்டியது.

### மகாஜனபதங்கள்

இக் காலத்தில் வட இந்தியாவில் பதினறு நாடுகள் இருந்தன. அவைகளை 'மகாஜனபதங்கள்' என்று அழைத்தனர். இந்தப் பதினறு நாடுகளுக்கும் வட எல்லையாக இமயமும், தென் எல்லையாக விந்தியமும், மேற்கு எல்லையாகச் சிந்துப் பிரதேசத்திற்கு அப்பால் இருந்த மலைகளும், கிழக்கு எல்லையாகக் கங்கை நதியும் இருந்தன. இவற்றில் சிலவற்றில் முடியாட்சியும், சிலவற்றில் சிலவராட்சியும், சிலவற்றில் குடியாட்சியும் நிலவின. வஜ்ஜிக்கள், மல்லர்கள் ஆகியோர் நாடுகளில் சிலவர் ஆட்சியும், அங்கம், மகதம், காசி, கோசலம், சேதி, வம்சம், குரு, பாஞ்சாலம், மக்கா, சூரசேனம், அவந்தி, காந்தாரம், காம்போஜம் ஆகியவற்றில் மன்னராட்சியும் இருந்தன. பிராமணியம் முடியாட்சிக்கு மாறுபட்ட எந்த அரசையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்ருல் அவை க்ஷத்திரியர்காளல் உருவானவை. மேலும் ஜைன சமயமும், பௌத்த சமயமும் க்ஷத்திரியர்களால் உருவானவை என்பதும் ஒரு காரணம். முடியரசு அல்லாத அரசுகள் க்ஷத்திரியர்களால் உருவானவை என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

### வேறுபாடு

ஆட்சி முறைகளைப் பொருத்தவரையில் முடியரசில் இருந்த முறைக்கும், முடியரசு அல்லாதவற்றில் இருந்த முறைக்கும் பெருத்த வேறுபாடு ஏதும் இல்லை. முடியரசு அல்லாத அரசுகளிலும் சிலவராட்சியோ ஏகாதிபத்

திய முறையோ இருந்தன என்பதற்கு எண்ணிறந்த சான்றுகள் உள்ளன. எனவே இரண்டிற்கும் இருந்த இடைவெளி குறைந்த அளவுள்ளதுதான்.

### மக்கள் பெயர்

பிராமணங்களின் காலத்தில் பரந்த அரசுகள் உருவாயின என்பதையும், மக்களின் பெயராலேயே அரசுகள் அழைக்கப்பட்டன என்பதையும் கண்டோம். இக்காலத்தில் சம்பா, இராஜகா, சாவதி, சாகேதா, கோசாம்பி, பனாரஸ் ஆகிய புதிய நகரங்கள் தோன்றின என்பதனை மகாபரி நிர்வாண சுத்தா என்னும் நூலிலிருந்து அறிகிறோம். காசி, கோசலம், அங்கம், மகதம், சூரசேனம், அவந்தி போன்ற நாடுகளுக்கிடையே முன்னிலைக்குப் போட்டி ஏற்பட்டது. முதலில் காசியும், பின்னர் கோசலமும் இறுதியில் மகதமும் முன்னிலையை அடைந்தன. மகதம் உன்னத நிலையினை அடைந்ததற்குப் பிம்பிசாரரே பொறுப்பு எனலாம். அவர் திருமண உறவுகளின் மூலம் பல அரசுகளைத் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தார். ஜாதகக் கதைகளின் மூலமாக இந்தியா முழுவதையும் ஆள வேண்டும் என்னும் புதிய கருத்துத் தோன்றிய செய்தியை அறிகிறோம். மேலும் அந்நிய படை எடுப்புகள் குடியரசுகளை அழித்தன. உதாரணமாகப் பாரசீகப் படை எடுப்பின் விளைவாக வாஹீகக் கணங்கள் போன்றவை மறைந்தன. முடியாட்சி அல்லாத அரசுகளின் குறிக்கோள்கள் இழிநிலையினை அடைந்தன. எந்த அளவிற்கு முடியாட்சி அல்லாத அரசுகளின் குறிக்கோள்கள் இழிவு படுத்தப்பட்டனவோ அந்த அளவிற்கு முடியாட்சிக் குறிக்கோள்கள் உயர்வு அடைந்தன. இது முடியாட்சி பெற்ற வெற்றியைத்தான் காட்டுகிறது.

### சட்டங்கள்

இனி முடியரசுகளின் பரப்புப் பற்றி அறிகின்ற கருத்துகளைத் தெரிந்து கொள்ளுவோம். முடியரசுகள் சிறியனவாக இல்லை. முடியரசுகள் சிலவராட்சிகளை வென்று அடக்கிய பின் அதிகாரத்திலும் பரப்பிலும் வளர்ச்சி அடைந்தன. சாதிகள், குடும்பங்கள் ஆகியவற்றின் தனிப்பட்ட சட்டங்களை மட்டுமின்றி நாடுகளின் (Countries) சட்டங்களையும் மதிக்க வேண்டியவர்களாக மன்னர்கள் இருந்தனர். பல நாடுகளை உள்ளடக்கிய பரந்த அரசுகள் இருந்தன என்பதற்கான சான்றுகள் உள்ளன. கௌதமர் நாடுகளின் சட்டங்கள் மதிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறார். பௌதாயனரும் நாடுகளின் விதிகளை வலியுறுத்துகிறார். மரபுரிமைச் சட்டத்தை விவாதிக்

கையில் ஆபஸ்தம்பர் குறிப்பிட்ட நாடுகளில் பின்பற்றப் படுகிற வழக்கங்கள் பற்றிய சட்டத்தைக் குறிப்பிடுகிறார். அரசரின் கடமைகளைச் சுருக்கிச் சொல்லும் போது 'நாட்டின் எல்லாச் சடங்குகளுக்கும் அரசர் செலுத்த வேண்டும்' என்று வைசிஸ்தர் விரும்புகிறார். எனவே, நாடுகள் என்று பல்லோரும் குறிப்பதிலிருந்து பரந்த அரசுகள் இருந்தன என்னும் கூற்று உறுதிப்படுகிறது.

### அரசபதவி

இனி, காம் எவ்வாறு பரந்த அரசுகள் அரசர்களால் ஆளப் பட்டன என்பதனைக் காணவேண்டும். பெரிய மாகில அரசு களின் தோற்றத்தோடு மரபு வழி அரசபதவி (Hereditary kingship) நிலைபெற்ற ஒன்றாக ஆகிவிட்டது. மேலும் இதுவே முழு வல்லாட்சிக்கு முதற்படியாகவும் அமைந்தது. அரசனின் அதி காரத்தினைத் தடைசெய்யும் சக்திகள் ஏதும் இக் காலத்தில் இல்லை. வேத காலத்தில் சபைகளும், பிராமணங்களின் காலத்தில் இரத்தினங்களின் (Ratnanins) செல்வாக்கும் இருந் தன என்பது நாம் அறிந்ததே. முடியாட்சியின் இக் காலத்திய சிறப்பு சமயத்தின் பெரிய வரம்பு ஒன்றை மட்டும் ஏற்றுக் கொண்டதேயாகும். அரசனின் அவையினர், அமைச்சர்கள் புதிய அரசனைத் தெரிவு செய்யலாமென்றாலும், இறக்கும் அரசனின் உடன்பாட்டோடுதான் அதனைச் செய்யலாம். கொள்கை அளவில் அரசனின் மக்கள் அனைவருக்கும் ஆட்சிப் பீடம் ஏறும் உரிமை இருந்தது.

### வல்லாட்சி

அரசனின் அதிகாரங்கள் எவ்வாறு முழு வல்லாட்சிக்கு இணையாக வளர்ந்தன என்பதனைக் காணுவோம். அரசன், பிராமணர்களைத் தவிர எல்லாருக்கும் தலைவன் என்று கௌதமர் குறிப்பிடுகின்றார். மக்களுக்குத் தந்தையைப்போல் பாதுகாப்பு அளிக்க வேண்டும் எனப் பௌதாயனர் குறிப்பிடு கின்றார். அரசன் இறைத் தன்மை பெற்றுவிட்டான் என்பதும், பிராமணர்கள் அரசனுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்பதும், மற்றவர்கள் அரசனை வணங்க வேண்டும் என் பதுமே இதற்குச் சான்று. அரசன் வரி விதிக்கும் அதிகாரம் பெற்றது இக்காலத்தேதான். வரி விதித்தாலுங்கூட ஆறில் ஒரு பங்கினைப் பெற்றுக்கொள்ளும் உரிமையும் மன்னனுக்கு இருந்தது. வலிவு மிக்க படை ஒன்றினை ஏற்படுத்தி அதற்குத் தளபதியாக அரசனே விளங்கினன். எல்லா உயர் பதவி

களுக்கும் ஆட்கள் அரசனாலேயே நியமிக்கப்பட்டனர். இருப்பினும் அரசனுக்குத் தடையாக ஓரளவிற்கு விளங்கியது சமயமே ஆகும். சமூக வகுப்புகளைக் காப்பதற்கும், நான்கு வருணத்தவர் தம் கடமைகளிலிருந்து விலகிச் செல்லும் எல்லாவற்றையும் தண்டிப்பதற்கும் அரசனின் அதிகாரம் செயல் படுத்தப் படவேண்டியிருந்தது. அரசன் உலகில் நெறி முறையை நிலைநிறுத்த வேண்டியிருந்தது. அவ்வாறு அரசன் உலகத்தில் நெறிமுறையை நிலை நிறுத்தப் புரோகிதரின் தயவு வேண்டியிருந்தது. இங்கேதான் நாட்டிற்கும் சமயத்திற்கும் உள்ள தொடர்பு வெளிப்படுத்தப்படுகிறது.

### உயர் அலுவலர்

அரசன் உயர் அலுவலர்களை நியமித்தான் என்பதனைக் கண்டோம். மற்ற அலுவலர்கள் உயர் அலுவலர்களால் அமர்த்தப்பட்டனர். மிக உயர்ந்த சட்ட அதிகாரங்களை அரசன் செயல்படுத்தினான். அரசனுக்கு அடுத்தபடியாகச் சிறப்பிடம் பெற்றவர் புரோகிதர். அரசனை விடச் சிறப்புப் பெறாவிடினும் அரசனைப் போன்றதொரு நிறுவனமாக நிலைபெற்று விட்டார் புரோகிதர். வழிகாட்டக் குரு இல்லை என்றால் அரசனும் அரசும் துன்பத்திற்கு உட்படும் எனவும், பிராமணர்களால் உதவப் பெற்ற க்ஷத்திரியர்கள் துன்பம் அடைவதில்லை என்றும்கூட எண்ணப் பட்டமையால் பிராமணர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். கௌதமரும், பௌதாயனரும் புரோகிதருடைய தகுதிகளைப் பற்றி உரைக்கின்றனர். புரோகிதர் கற்றறிந்தவராகவும், நற்குடிப் பிறந்தவராகவும், நேர்த்தியான உருவமைந்தவராகவும், நற்பண்பினராகவும், எல்லாச் செயல்களிலும் தலைசிறந்தவராகவும் இருத்தல் வேண்டும் என உரைத்தனர். குருமார்களின் கட்டளையை மீறியவர்கள் தண்டனை வழங்கப்படக் குருமார்களின் முடிவிற்கே விடப்பட்டனர். சமயம் சட்டத்தைப் போல் ஆட்சி செய்தது.

### தண்டனைகள்

அரசன் செயல் படுத்திய சட்டம் சமயத்தின் முத்திரை பெற்றிருந்தது. சமயமே சட்டத்தினை அளித்தமையால் அதிகாரத்திற்குச் சமயமே தடையாக விளங்கிற்று. பிராமணர்கள் சமயத்தின் காவலர்கள். எனவே சில சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. பிராமணர்களுக்கு உடல் உறுப்புத் தண்டனையே கிடையாது. மற்றவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படக்கூடிய வழக்குகளில் பிராமணர்களுக்குச் சாதாரண

தண்டனையே வழங்கப்பட்டது. பிராமணர்கள் அரசனின் வரியிலிருந்து விலக்குப் பெற்றதோடு அல்லாமல், அரசன் அவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்தல் கூடாது என்னும் நிலையும் இருந்தது. பிராமணர்களுக்கு அடுத்தபடியாக க்ஷத்திரியர்களின் நிலை இருந்தது. அடுத்து வைசியர்களின் நிலை இருந்தது. சூத்திரர்கள் கடுமையாக நடத்தப்பட்டனர். சாதிக் கடமைகளுக்குச் சமயத்தின் ஒப்புதல் தேவைப்பட்டது. ஒருவர் தம் கடமைகளிலிருந்து விலகிச் சென்றால் அவர் தம் சமூகத் தனி மதிப்பு நிலையை இழப்பதோடு விலக்கப்பட்டவராகவும் ஆகிவிடுவார் என சின்ஹா உரைக்கின்றார்.

### தன்மை

நாட்டிற்கும் சமயத்திற்கும் உள்ள இத்தகைய தொடர்பினை மனதில் கொண்டே ஆட்சித் துறையினைப் பற்றி அறிதல் வேண்டும். முடியாட்சி அரசினை இயக்கும் சக்தியாக விளங்கியவன் அரசன். அரசனின் கடமை தீய மனம் படைத்தவர்களைத் திருத்துவது என்று வசிஷ்டர் கூறுகின்றார். அரசன் எல்லாச் சமூக ஒழுக்கக் குற்றங்களையும் தண்டனையினுல் அகற்றினுன். கொள்கை அளவில் அரசர்கள் தன்னலமற்றவர்களாகவும், அறிவுக் கூர்மை யுடையவர்களாகவும் இருந்திட வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தாலும் அவர்கள் உண்மை வாழ்க்கையில் கொடுங்கோலர்களாக விளங்கினர். வரிகளைப் பன்மடங்கு உயர்த்தினர். நீதித் துறை ஆட்சியில்கூட சில வழக்குகளில் விசாரணையின்றியே தண்டனை வழங்கினர் என்னும் செய்தியையும் அறிகின்றோம். அரசன் கோட்பாட்டில் உள்ளது போலத் தன்னை அரசோடு ஒன்றாகக் கருதினுன்.

### அமைச்சர்கள்

அரசனுக்கு உதவி செய்யப் பல அமைச்சர்கள் இருந்தனர் என்பது ஜாதகங்களின் மூலம் தெரிகிறது. பனரஸ் அரசன் ஐந்து அமைச்சர்களைக் கொண்டிருந்தான் என்னும் செய்தியின் மூலம் குறைந்தது ஐந்து அமைச்சர்களிருந்தனர் என அறிகிறோம். இருப்பினும் அமைச்சர்களின் துறைகளைப் பற்றி உறுதியாகத் தெரியவில்லை. கருவூலப் பொறுப்பினை ஏற்றிருந்தவர் செத்தி எனப் பெயர் பெற்றார். அவருக்கு உதவியவர்கள் அனுசெத்தி என்று அழைக்கப்பட்டனர். அரசன் தானே தலைவன் என்றாலுங்கூடத் தளபதி என்று ஒருவர் இருந்தார். நீதி ஆட்சி நீதிபதிகளால் நடத்தப்பட்டது.

காகபதி, பரிஞயகம் என வேறு அதிகாரிகளும் இருந்தனர். இவ்வாறாக நாட்டின் ஐந்து முக்கிய அதிகாரிகளைப் பற்றி அறிகிறோம். அரசனின் ஆளுமைக்குப் பெருமளவு முதன்மை அளிக்கப்பட்டபோதும் அரசனுக்கு அமைச்சர்களின் ஆலோசனை தேவைப்பட்டது. அமைதி, ஒழுங்கு ஆகியவற்றைப் பேணுவதற்கு அரசனின் வலிமையிலும், திறமையிலும் நம்பிக்கை வைக்க மக்கள் பழகிக்கொண்டனர். வரி செலுத்துவோரை மட்டுமின்றிப் படைக்கப்பட்ட அனைத்தையும் காக்கின்ற பொறுப்பு அரசனுக்கு இருந்தது. அரசன், தம் புனிதக் கடமைகளைச் செய்யாமல், வேதங்களைப் பற்றி அறியாமல், பிச்சையெடுத்து வாழும் பிராமணர்களைக்கூடத் தண்டிக்கலாம்.

### ஊர் அரசு

ஊர் அரசு (Local Government) வலிமை மிக்க ஒரு கூறாய் இருந்தது. கிராமம், நகரம் ஆகியவற்றின் அலுவலர்கள் தங்கள் பகுதியின் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியவர்களாக இருந்தனர். கிராமத்தின் தலைவர் அரசரால் நியமிக்கப்பட்டார். நீதித் துறை நிர்வாகத்தினைப் பற்றி அறிகின்றபோது அரசனே, நீதிபதிகளோ நடுநிலைமையோடு செயல்பட்டனர். தண்டனை வழங்கும்போது குற்றவாளியின் தகுநிலை, உடல் வலிமை, குற்றத்தின் தன்மை ஆகியவற்றைக் கருதியே தீர்ப்பு வழங்கப்பட்டது. வேதம், புனிதச் சட்ட மூலத் தொகுப்புகள், அங்கம், புராணம் ஆகியவற்றால் நீதி வழங்கும் முறை கட்டுப்படுத்தப்பட்டது. உண்மையை அறியச் சாட்சியங்களையும், சோதனை முறைகளையும் கொண்டு நீதி வழங்கினாலும் முரண்படுகின்ற வழக்குகளில் பிராமணரின் கருத்துகள் ஏற்கப்பட்டன.

### சமூக வாழ்க்கை

சமூக வாழ்க்கையில் மாறுதல்கள் தோன்றுவதையும், அந்த மாறுதல் அரசியல் நிறுவனங்களில் பிரதிபலிப்பதையும் காணுகின்றோம். நால்வகை வருணத்தவர்களாக வாழ்ந்த மக்கள் திருமண உறவுகளினால் பல சாதியினராகப் பிரிந்தனர். சமுதாயத்தில் சாதிப் பிரிவுகள் தோன்றிடத் தொழில்களும் பலவாக மாறின. சில சக்திகள் அரசனைச் சார்ந்து பல சாதியினராகப் பிரிந்த மக்களில் சமூக விரோதச் செயல்களைச் செய்வோரைத் தண்டிக்கும் அதிகாரத்தை அரசனுக்கு வழங்கின. ஜைன, பௌத்த சமயங்கள் இச்சூழ்நிலையில்

அரச பதவிக்கு அதிகாரத்தினை அளிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கின.

### வரம்புகள்

இதுவரை சமயத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த பரப்புகளின் மீது அரச அதிகாரத்தின் வரம்புகள் நீளத் தொடங்கின. புதிய சாதிகள் தோன்றியதன் காரணமாக அரச அதிகாரம் வளர்ந்தது. சமயத்தின் அதிகாரமும், தனி மதிப்பு நிலையும் அரசனின் கைகளுக்கு மாறின. சமுதாயத்தில் எல்லாப் பிரிவினரும் அரசனின் தயவை நாடினர். பிராமணர்கள் மட்டுமின்றிப் பிராமணர்களுக்கு எதிரான சக்திகளும் அரசனைச் சார்ந்திருந்தன. இவ்வாறாகச் சமுதாயத்தில் அரசனின் நிலைமை சமயத்தினால் கூறப்பட்ட சட்டங்களை மட்டும் செயல்படுத்துவதாக இல்லை. அரசன் சமூகச், சமயக் காரியங்களில் தன் எண்ணம்போல் நடந்துகொள்ளும் நிலையை அடைந்ததுதான் இக்காலத்தின் சிறப்பு அம்சம். இதுவரையில் ஆட்சி செலுத்துகின்ற அதிகாரம் மட்டுமே கொண்டிருந்த அரசன் இறைமை அதிகாரத்தையும் பெற்றான்.

### நந்தர்கள்

இனிவரும் பகுதியில் மௌரியர்களின் ஆட்சி முறையினைப் பற்றி அறிந்து கொள்வோம். மௌரியர்களுக்கு முன்னர் நந்தர்கள் காலத்தில் புதிய மாறுதல் எதனையும் ஆட்சி அமைப்புத் துறையில் நாம் காணவில்லை. புராணங்கள் ஒன்பது நந்தர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. அவ்வொன்பது நந்த அரசர்களும் நூறு ஆண்டுகள் ஆட்சி செய்தனர். புராணங்களில் இருந்து நந்த அரசர்கள் சர்வ க்ஷத்திராந்தகர்கள், ஏக்ராட் ஏகச்சத்ரா என்று அழைக்கப்பட்டனர் என்பது மட்டும் தெரிகிறது. நந்த அரசர்களுடைய ஆட்சி அமைப்பு முறைகளைப் பற்றிய வரலாறு ஏதும் நமக்குக் கிட்டவில்லை. கர்டியஸ் என்பாரின் கூற்றிலிருந்து அவர்கள் அளவில் பெரிய, எண்ணிக்கை மிகுந்த படையினை வைத்திருந்தனர் என்று அறிகிறோம். 20,000 குதிரைப் படையினரையும், 2,00,000 காலாட் படையினரையும், 2000 குதிரைகள் பூட்டிய தேர்ப் படையினரையும், 3000 யானைகளையும் கொண்டு விளங்கியதாகக் கூறப்பட்டுள்ளதிலிருந்து இராணுவத்துறை நிர்வாகம் சிறப்பாக நடைபெற்றிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு.

மௌரியர்களுக்கு முன்னர் பாரசிகர்களைப் பற்றி அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. ஏனென்ருல் அரசர் பட்ட முழுக்குச் செய்யப்படுதல், அமைச்சர்கள் கூடுமிடத்தில் நெருப்பை வளர்த்தல் ஆகிய மௌரியர்களின் பழக்கங்கள் பாரசிகர்களிடமிருந்தே பரவின. பாரசிகச் சொல்லான ‘சத்தராப்’ என்னும் சொல் இந்தியர்களால் பயன்படுத்தப் பட்டது. இத்தகைய பின்னணியைக் கொண்டதாக மௌரியப் பேரரசு விளங்கிற்று என்பதைக் காட்டவே இச் செய்திகளை இங்கே கண்டோம்.

# 9. அர்த்த சாத்திரம் கூறும் ஆட்சியியல் நெறி

## (Polity revealed in Artha Sasthra)

### *அர்த்த சாத்திரம்*

மௌரிய அரசினைப் பற்றி அறிந்திட நமக்குத் துணை நிற்கின்ற சான்றுகளில் கௌடில்யர் அல்லது சாணக்கியரின் அர்த்த சாத்திரமும் ஒன்றாகும். அர்த்த சாத்திரத்தின் காலமும் அதை ஆக்கியவர் யார் என்பதும் அறிஞர்களிடையே முடிவிற்கு வருவதற்கு இயலாத பிரச்சினைகளாக உள்ளன. சிலர் அர்த்த சாத்திரம் சந்திரகுப்தரின் காலத்தில் எழுதப் பட்ட நூல் என்றும், சிலர் அசோகருக்குப் பின்னர் எழுதப் பட்ட நூல் என்றும் கருத்துத் தெரிவித்தனர். மௌரியர் காலத்தில் எழுதப்பட்ட நூல் என்பது குறித்து எவ்வித ஐயப் பாடும் எழ நியாயமில்லை. பொதுவாக மௌரியர்கள் ஆட்சி குறித்து நாம் தனியாகப் படித்தாலும் அர்த்த சாத்திரம் என்னும் நூலில் இருந்து அறிவதென்ன ?

### *பிரிவுகள்*

பேராசிரியர் சத்தியநாத ஐயர் அர்த்த சாத்திரத்தினை மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார். அதில் காணப்படும் கருத்துகளைத் தொகுத்து முதல் பிரிவில் அரசன், அரச னுடைய அவை, அரசின் ஆட்சிப் பிரிவுகள் ஆகியவை பற்றியும், இரண்டாவது பிரிவில் ஊரியல், குற்ற இயல் சட்டங்கள் பற்றி யும், மூன்றாவது பிரிவில் நாடுகளுக்கிடையே நிலவும் சட்டம், அரச தந்திரம், போர் ஆகியவை பற்றியும் விவாதிக்கப் பட்டுள்ளன. அரசு நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்குகின்ற நூலாக மட்டுமின்றி, எதிரிகளை வெற்றி கொள்ளும் முறை பற்றியும் விளக்குகின்ற நூலாக அர்த்த சாத்திரம் விளங்கு கிறது. அறிஞர்கள் சிலர், இது போன்ற கருத்துகளைக் கூறியமையால் கௌடில்யரைக் குறை கூறினர். கௌடில்யர் அரசியல் பற்றிய நூலினை எழுதியுள்ளார். எனவே அதில்

நீதி நெறிகளை எடுத்துரைக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. புத்தர் அரசியல் பற்றிய நூலினை எழுதினால்கூட இவ்விதம்தான் எழுதுவார். ஏனென்றால் அரசியல் விளக்க நூல் அது.

### குறிக்கோள்

சாணக்கியர், குறிக்கோள் அரசு (Moral state) ஒன்றினையே அமைக்க முயன்றார். சாணக்கியரின் கருத்துகளையும் அசோகரின் ஆணைகளையும் அடுத்தடுத்துக் கற்றால் அரசின் உண்மை நிலையைக் கருத்திற் கொள்ள அர்த்த சாத்திரம் நமக்கு உதவி செய்யும் என்று டாக்டர் சின்ஹா கருதுகிறார். மேலும் அவர் அசோகப் பேரரசின் ஆட்சி இயல் விவரங்களை அர்த்தசாத்திரம் அடிப்படையாகக் கொண்டிருந்தது என்றும் கருதுகிறார்.

### புதிய கருத்து

அர்த்த சாத்திரத்தில் நாம் காணுகின்ற புதிய கருத்து ஒன்று உள்ளது. இந்திய வரலாற்றில் இதற்கு முன் இத் தகைய புதிய கருத்தினை நாம் காணவில்லை. இந்திய மரபுக்கு அது புதிய கருத்து ஆகும். மற்ற எல்லா நிறுவனங்களுக்கும் மேலாக அரசையும், அரசனையும் உயர்ந்தவையாகக் கூறிய கருத்துத்தான் அது. அரசு நிறுவனத்தின் மீதுதான் எல்லாச் சமூக அமைப்புகளும் சார்ந்து இருக்க வேண்டும் என்னும் கோட்பாடு உருவாயிற்று. தர்மம், ஒப்பந்தம், வழக்காறு, அரசின் ஆணை ஆகியவை சட்டத்தின் நான்கு கால்கள் எனவும், நான்கில் அரசனின் ஆணையே மற்றெல்லாவற்றையும்விட உயர்ந்தது என்றும் கூறப்பட்டது. அர்த்த சாத்திரத்தின்படி அரசர் தர்மப் பிரவர் என்னும் உயர்ந்த சிறப்பைப் பெறவேண் டுமாயின் கடுமையான பயிற்சிக்கு உட்பட வேண்டியிருந்தது. ஒருவர் அரசராக வேண்டுமென்றால் அவர் பெற்றிருக்க வேண்டிய தகுதிகள்பற்றி அர்த்தசாத்திரம் எடுத்துரைக் கிறது. கற்றறிந்தவராகவும், தன்னடக்கம் உள்ளவராகவும், திறமை மிக்கவராகவும், ஆற்றல் மிக்க வீரராகவும், சிறந்த அமைச்சர்களின் துணையினைப் பெற்றவராகவும் இருக்க வேண்டும் என்று அர்த்த சாத்திரம் விளக்குகிறது. கல்வி அறிவினால் பண்பட்டவரான அரசர் தம் குடையின் கீழ் வாழுகின்ற மக்களைத் துய்மைப் படுத்தும் பணியில் சிறந்து விளங்கினாலே உலகம் முழுமையும் ஆளுகின்ற ஆற்றல் படைத்தவராக இருப்பார்.

## இறைமை

கௌடில்யர் அரசரின் கடமைகளைப்பற்றிக் கூறுவதோடு அல்லாமல் அரசரின் இறைமைத் தன்மைபற்றியும் உரைக்கின்றார். அரசர் இறைமைத் தன்மை வாய்ந்தவராகக் கருதப்படவேண்டுமாயின், அதற்கு அடிப்படையான தகுதி அரசரின் அதிகாரமாகும். அதிகாரம் செலுத்தக் கூடிய ஆற்றல் இருந்தாலே அரசரின் இறைமைபற்றிக் கூற முடியும். பழங்கால இந்தியாவில் இறைமையின் ஏழு கூறுகள் தெளிவாக சுவாமி, அமாத்தியர், நிலம், அரண், பொருள், செல்வம், படை என வரையறை செய்யப்பட்டிருந்தன. அரசர் தன் அடக்கம் உடையவராக இருத்தல் வேண்டும். சிறப்பு இல்லாத அரசர் கூடத் தன்னடக்கத்தில் திறமை பெறுகையில் உலகம் முழுவதையும் அதிகாரஞ் செலுத்தலாம். அமைச்சர்களில் இரண்டு வகையான அமைச்சர்கள் இருந்திருக்க வேண்டுமென்றறிகிறோம். முதல் வகையினர் நடை முறையில் ஆட்சிப் பொறுப்பைப் பெற்று இருந்தவர்களாவார்கள். இரண்டாவது வகையினர் அரசனுக்கு ஆலோசனை மட்டும் கூறும் ஆலோசகர்கள். இவர்களின் எண்ணிக்கை அரசின் தேவைகளைப் பொறுத்து இருந்தது. தலைமை அமைச்சர் ஒருவர் அரசரின் குடும்ப குரு அல்லது ஆசிரியருக்குச் சமமான நிலையில் இருந்தார் எனவும் அறிகிறோம்.

## பதினெட்டுத் துறைகள்

கௌடில்யர் பல கண்காணிப்பாளர்களைக் கொண்ட பதினெட்டுத் துறைகளைப்பற்றிக் குறித்துள்ளார். வருமானந்திரட்டும் சமாஹர்த்தா, கருவூலப் பொறுப்பாளரான சன்னிதா, அக்ஷபட்டாள் எனப்படும் தணிக்கை அதிகாரி, அரசின் கட்டளைகளை ஏற்று நடப்பவர்கள், சுரங்கப் பொறுப்பாளர்கள், உற்பத்திப்பொருள்கள் கண்காணிப்பாளர்கள், ஆயுதத் துறைக் கண்காணிப்பாளர்கள், வனத்துறைக் கண்காணிப்பாளர்கள், சுங்கவரி வசூலிப்பவர்கள், வேளாண்மைத் துறைத் தலைவர்கள், நெசவுத்துறை நெறியாளர்கள், கப்பற்படைப் பொறுப்பாளர்கள் ஆகியோருடன் இன்னும் பலரைப் பற்றிய குறிப்பு அர்த்த சாத்திரத்தில் காணப்பட்டாலும் இக் கண்காணிப்பாளர்கள் எப்படிப் பதினெட்டு வகைகளின் கீழ்ப் பிரிக்கப்பட்டனர் என்பதையும், அமைச்சர்களுடன் எம்முறையில் தொடர்பு கொண்டார்கள் என்பதையும் அறிய வாய்ப்பு இல்லை. அர்த்த சாத்திரத்தின்படித் தணிக்கைத் துறை, கணக்கு வைப்புத் துறை ஆகியவை சிறிதளவும்

பிசகாதவாறு செயல்பட்டன. தற்கால அரசில் மிகச் சிறந்த நாட்டின் நலத்துறையாகிய பொதுச் சுகாதாரமும், சாக்கடைக் கழிவு மேம்பாட்டுத் துறையும்கூட மௌரியர் காலத்தில் விடுபடவில்லை.

### ஊர் ஆட்சி

ஊர் ஆட்சி பற்றி அர்த்த சாத்திரம் கூறும் கருத்துகளைக் காண்போம். ஊர்ஆட்சி ஜனபாதங்களால் உருவாக்கப்பட்டது. வருவாய்த் துறைப் பணிகளுக்காக நாடு அல்லது அரசு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஸ்தானிகர் என்பவரின் கீழ் ஒவ்வொரு பிரிவும் விடப்பட்டது. ஸ்தானிகர்களுக்கு உதவிட அத்தியட்சகர்களும், அத்தியட்சகர்களுக்கு உதவிடக் கணக்கர்கள், எழுத்தர்கள், நாணயச் சோதனையாளர்கள், இராணுவ அலுவலர்கள் ஆகியோரும் இருந்தனர்.

### மக்களின் கடமை

நகரங்களிலும், கிராமங்களிலும் வாழுகின்றவர்கள் தம் இல்லங்களுக்கு வந்து செல்லுகின்ற அந்நியர்களைப் பற்றிய தகவல்களை நகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றின் பொறுப்பில் இருந்த **கோபர், ஸ்தானிகர்** அல்லது **நகரர்** ஆகியவர்களிடம் அறிவித்தல் வேண்டும். குடும்பத்தில் இருந்தவர்கள் மட்டுமின்றித் தேறல் விற்போர், சமைத்த இறைச்சி, உணவுப் பண்டங்களை விற்போர், பரத்தையர் ஆகியோரும் தகவல் அறிவிக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். தீ போன்ற விபத்துகளைச் சமாளிக்க இல்லத்தவர்கள் எப்போதும் தயாராயிருக்கும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டனர். கிராமங்களில் இருந்த கிராமச் சபைகள் கிராம மேம்பாட்டுப் பணிகள், நீதித்துறைப் பணிகள் ஆகியவற்றைக் கவனித்துக் கொண்டன.

### கிராம நிர்வாகம்

ஆலயங்களின் சொத்துகளும், வயது வராத இளையோர் சொத்துகளும் முதியோர்களின் பொறுப்பில் விடப்பட்டிருந்தன. அரசின் பணி ஆங்காங்கே ஒற்றர்களை நியமித்துச் செய்தி அறிந்து மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளிப்பதே. கிராமத்தின் முதன்மையான அலுவலர்கள் கண்காணிப்பாளர், கணக்கர், கோபர், வைத்தியர், கால்நடை வைத்தியர், குதிரை பழக்குவோர், பணியாட்கள், கிராமத் தலைவர் முதலியோர் ஆவர். கிராமங்கள் நிதி நோக்கங்

களுக்காக ஐந்து அல்லது பத்துக் கிராமங்களைக் கொண்ட தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு தொகுதியினையும் கோபர் கவனித்துக் கொண்டார். அரசு வரி வசூலிப்பதற்கு எளிதாக வரி செலுத்துபவையெனவும், வரி செலுத்த வேண்டா இறையிலி எனவும் பிரித்து வீடுகள் இலக்கம் இடப்பட்டன. பலகிராமத் தொகுதிகளைக் கொண்ட மாவட்டத்தை ஸ்தானிகர் இவ்வாறே நிர்வாகம் செய்து வந்தார்.

### கிராமங்கள்

பிரதேஷ்தர்கள் என்னும் மேற்பார்வையாளர்களு மிருந்தனர். கிராமங்கள் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுப் பத்து, இருநூறு, நானூறு, எண்ணூறு கிராமங்களின் தொகுதிகளின் பாதுகாப்பிற்காக அரண்கள் அமைக்கப்பட்டன. பத்துக் கிராமங்களைக் கொண்ட தொகுதி ஒவ்வொன்றும் 'சம் கிரஹணம்' எனவும், இருநூறு கிராமங்களைக் கொண்ட தொகுதி ஒவ்வொன்றும் 'கார்வாதிகா' எனவும், நானூறு கிராமங்களைக் கொண்ட தொகுதி ஒவ்வொன்றும் 'துரோணமுகம்' எனவும், எண்ணூறு கிராமங்களைக் கொண்ட தொகுதி ஒவ்வொன்றும் 'ஸ்தானியம்' எனவும் அழைக்கப்பட்டன.

### நீதித்துறை

நீதித்துறை பற்றி அர்த்த சாத்திரத்திலிருந்து ஸ்தானியம் அல்லது துரோணமுகம் அல்லது சம்கிரஹணம் ஆகியவை இருந்த இடங்களில் புனிதச் சட்டங்களில் தேர்ச்சி பெற்ற மூவரைக் கொண்ட நீதியைப் பற்றிய அமைப்பும், அரச நீதியை வழங்க மூன்று அமைச்சர்களும் இருந்திருக்க வேண்டும் என அறிகிறோம். குற்ற இயல் (criminal) வழக்குகளில் நான்கு வகைச் சித்திரவதைகள் குற்றத்தை ஒப்புக் கொள்ளவைக்கப் பயன்படுத்தப்பட்டன. உரிமை (Civil) வழக்குகளில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். சிறைத் தண்டனை, அபராதம் விதித்தல், மரண தண்டனை ஆகியவை விதிக்கப்பட்டன.

### நிதித்துறை

கிராமத் தலைமை அதிகாரி கிராம மக்களின் துணையைப் பெற்றுக் குற்றவாளிகளையும், சந்தேகத்துக்குரிய நபர்களையும் அகற்றினர். குற்றங்களைத் தடுப்பதில் ஒற்றர்கள் மிகச் சிறந்த பணியாற்றினர். அரசின் பொதுவான இயல்புகளைப் பற்றிக் கௌடில்யர் கூறுகின்ற கருத்துகளைக் காண்போம்.

நிதித்துறையில், விளைவுகளில் ஆறில் ஒரு பங்கு, சமயவரிகள், குறுநில மன்னர்கள் செலுத்தும் திறைகள், அரசர்க்கு அளித்த அன்பளிப்புகள் ஆகியவை பொதுவான, மரபான வழிகள் ஆகும். சமைத்த உணவிலிருந்து, உயர்ந்த மீன் வரை நகருக்குள் எடுத்துச் செல்லப்பட்ட எல்லாப் பொருள்கள் மீதும் வரி விதிக்கப்பட்டு முத்திரையிடப்பட்டது. அரசுக்குச் சுரங்கங்கள், படகுப் பயணப் பாதைகள், நீதிமன்றத்தின் வருவாய்கள் ஆகியவைகளும் இருந்தன.

### அரசின் கட்டுப்பாடு

வாணிகம், உற்பத்தி, தொழிலாளர் போன்றவர்களைக் கட்டுப்படுத்தியது ஆகியவை அரசனின் மற்றொரு இயல்பாகும். உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களை வெளிநாடுகளில் விற்பனை செய்ய வணிகக் கண்காணிப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். உற்பத்திப் பொருட்களையும் சுரங்கப் பொருட்களையும் அரசு ஏற்று வந்தது. அரசு செய்யாத தொழில்களைத் தனியார்களுக்கு நடத்திட அனுமதி வழங்கப் பட்டது. தொழிலாளர்களின் தொழிற் சங்கங்கள், நாட்டின் கூட்டுறவுப் பணிகளை நிறைவேற்றியவர்கள் ஆகியோர் அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்டனர். மிருகவதைகளை அரசு கட்டுப் படுத்திக் குறிப்பிட்ட விலங்குகளை மட்டுமே கொல்லலாம் என விதி செய்யப்பட்டது. இறைச்சிக் கடைகளை அரசே நிறுவியது.

### மக்களோடு தொடர்பு

அர்த்த சாத்திரத்தில் கூறப்பட்டுள்ள மற்றொரு இயல்பு நிதிகளாலும், கட்டுப்பாடுகளாலும், அலுவலர்களின் நடத்தையினை நெறிப் படுத்துவதாகும். அலுவலர்கள் தாம் எந்த அலுவலராக இருந்தாலும் தம் கடமைகளை அரசின் பெருமையும், புகழும் பாதிக்காத வகையில் நிறைவேற்ற வேண்டும். கடமை தவறியவர்களுக்குத் தண்டனைகள் விதிக்கப்பட்டன. அரசர் மக்களோடு தொடர்பு கொள்ளவும், உண்மையான ஆட்சி முறையில் கவனம் செலுத்தவும், தாமே அடிக்கடி இராணுவச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். பழங்கால இந்திய ஆட்சி முறை வளர்ச்சியில் முதன்முறையாக அரசின் வெளியுறவுக் கொள்கை ஒழுங்கு படுத்தப்பட்டது. நட்பு நாடுகள், பகை நாடுகள், நடுநிலை நாடுகள் என வெளிநாடுகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இறைமையின் கூறுகளான அரசர், அமைச்சு, நாடு, அரண், பொருள், நட்பு ஆகியவை உன்னத

நிலைமை அடைந்தன. மிகப் பெரும் அரசு அல்லது எண்ணிறந்த நாடுகளைக் கொண்ட மண்டலம் ஆகியவை அரசுகளுக்கிடையேயான உறவு முறைகளை முடிவிற்குக் கொண்டுவர முயன்றன.

## கட்டுப்பாடு

இதுவரையில் நாம் பார்த்தவற்றிலிருந்து அர்த்தசாத்திர ஆட்சி முறையின் நோக்கம், சமூக வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவதும், அனைத்திந்திய முழுமையின் இறைமையைக் கொண்டிருந்ததும் எனத் தெரிகிறது. அரசு சமூக வாழ்க்கையில் தன் ஆதிக்கத்தைச் செலுத்தியது. வண்ணார் கூலியை நிர்ணயஞ் செயவது போன்றவற்றைக்கூடக் கட்டுப்படுத்தும் அளவிற்குச் சமூக வாழ்க்கையில் அரசு ஆதிக்கம் செலுத்தியது. கௌடில்யரின் கருத்துப்படி அரசுகள் விரிவடைய வேண்டும்; அல்லது சிதைவுற வேண்டும். எனவே அரசுகள் விரிவடையவே முயல வேண்டும் என அர்த்த சாத்திரம் உரைக்கிறது.

## சமயம்

அரசியல் பயன்களை அடைவதற்கு ஒரு வழியாகச் சமயத்தினை அரசு பயன்படுத்தியிருக்கிறது. ஆட்சியின் மீது சாதி செல்வாக்குப் பெற்றிருந்தது. குற்ற இயல் நீதி பற்றியவைகளில் பிராமணர்கள் சில சலுகைகள் பெற்றிருந்தனர். ஆயினும் கற்பு அழிப்பு வழக்குகளில் பிராமணக் குற்றவாளிகள் சூடு போடப்பட்டுப் பொது மக்களுக்கு அவர்கள் குற்றம் தெரிவிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டனர் என அறியும் போது சட்டம் கடுமையாக இருந்தாலும் சட்டத்தின் நடுநிலை நேர்மையை நாம் உணர முடிகிறது. நல்ல அரசு, அரசியல் நல்வாழ்வு முதலியன ஏற்படுத்துதற் பொருட்டே இதனைச் செய்ய வேண்டியிருந்தது. அரசின் நலனைப் பெற அதாவது தம் மக்களின் நல்வாழ்விற்குத் தம்மை மகிழ்விக்கும் எதையும் நலம் என்று கருதாமல் மக்களை மகிழ்விக்கும் எதையும் நலமெனக் கருதும் வகையை அரசர் தம் போக்கில் அமைத்துக் கொள்ள வேண்டும் எனக் கௌடில்யர் கூறியுள்ளார். நோக்கில் அகல் விரிவானதாகவும், மெய்க் கருத்தில் மிகத் தூய்மையானதாகவுமிருந்த ஓர் அரசையே கௌடில்யர் கருத்தில் கொள்ளுகிறார்.

### குறைபாடுகள்

அர்த்த சாத்திரம் அரசு பற்றிய சிறந்த அறிவியல் முறை ஆய்வுக் கட்டுரை ஒன்றின் கருத்துப் பதிவை விட்டுச் சென்றாலும் அதில் சில குறைபாடுகளும் காணப்படுகின்றன. அர்த்த சாத்திரத்தில் ஆட்சி இயலின் எல்லா இயல்புகளும் எடுத்துரைக்கப்படவில்லை. அரிஸ்டாட்டிலின் அரசியல் என்னும் நூலினைப் போலவோ, வில்சனின் அரசு என்னும் நூலினைப் போலவோ இது இருக்கவில்லை. அர்த்த சாத்திரத்தில் உயிர்ப்புத்திறமற்ற செயல்முறை சார்ந்த முறைகளையே விளக்கியுள்ளார். வாழ்க்கையின் பிரத்தியட்ச நிலையினைப் பற்றி இவர் உரைக்கவில்லை என்று மக்களை எண்ண வைக்கிறார். அரசு பற்றிய புனைவுக்கோல் இயல்பான (Hypothetical) விளக்கத்தையே கௌடில்யரின் அர்த்த சாத்திரம் விளக்குகிறது.

### ஹெல்லனிய முறை

பேராசிரியர் நீலகண்ட சாத்திரியின் கருத்துப்படி அர்த்த சாத்திரம் கூறும் கருத்துகளில் பெரும்பாலானவை ஹெல்லனிய (Hellenitic) முறைகளில் இருந்தும், பாரசிக தேசத்து அக்கிமேனிய அரசு முறைகளில் இருந்தும் மிகத் திறமையாகப் பின்பற்றப் பட்டவையே என்றாலும்கூட, மேற்கூறிய அந்நிய முறைகள் இந்திய மண்ணில் நிலை பெற்றிடாது மௌரியப் பேரரசின் மறைவிற்குப் பின்னர் மறைந்து விட்டன. சிற்சில இடங்களில் அர்த்த சாத்திரத்தில் கூறப்பட்டுள்ளவைகள் பொது ஒழுக்கத்திற்குப் புறம்பானவையாக இருந்தாலும்கூட அதனுடைய பொதுநோக்கு உயர்ந்த எண்ணத்தைக் கொண்டது. எந்தக் கொள்கையினை அர்த்த சாத்திரம் வலியுறுத்தினாலும் மக்களின் நலனே முதலில் அதில் சிறப்பிடம் வகித்தது என்று கூறப்படுகிறது. அது மட்டுமின்றி அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதும், கொடியவர்களைத் தண்டிப்பதும், அமைதி மிக்க குடிமக்களைக் காத்தலும் முக்கிய கடமைகளாகக் கருதப்பட்டன. கௌடில்யர் சிறந்த, ஆற்றல் மிக்க, நல்ல அரசர்களை மனத்தில் எண்ணியே கொள்கைகளை வகுத்தார். மக்களுடைய மகிழ்ச்சியே மன்னனுக்குச் சிறப்பைத் தருவது என்பது அவர் கருத்தாக இருந்தமையால் மக்கள் நலனில் அக்கறை கொண்டு சில கோட்பாடுகளை வகுத்தார் என நாம் எண்ணிப் பார்க்கின்ற போது மேற்கூறிய குறைபாடுகள் அடிபட்டு விடுகின்றன. இனி மௌரிய ஆட்சி முறையின் பொதுவான அம்சங்களை அடுத்த அத்தியாயத்தில் காண்போம்.

# 10. மௌரியர் ஆட்சிமுறை

## (Mauryan Polity)

*சான்றுகள்*

இந்திய வரலாற்றில் நாம் முதன் முதலாக நிறைய சான்றுகளின் துணையோடு ஆட்சிஅமைப்பு முறையினைப் பற்றி ஆராய்வது மௌரியப் பேரரசின் காலத்தினைப்பற்றித்தான். முதலாவது சான்ருகப் புராணச் சான்றுகளை எடுத்துக் கொள்வோம். புராணச் சான்றுகளில் வாயு, விஷ்ணு, மத்சயம் ஆகியவை குறிப்பிடத் தகுந்தவையாகும். புராணங்களின் வாயிலாக நந்தர்கள் அரசினைக் கவிழ்த்திடக் கௌடில்யர் உதவினர் என அறிவதோடு பதின்மூன்று மௌரிய அரசர்கள் 137 ஆண்டுகள் ஆண்டனர் எனவும், முதலாவது அரசர் 24 ஆண்டுகள் ஆண்டார் எனவும் அறிகிறோம். புத்த சமயச் சான்றுகளில் இலங்கை தேசத்து மகாவம்சமும் மேற்கூறிய செய்தியினை உறுதிப்படுத்துகிறது. சமணசமயச் சான்றுகள் சந்திரகுப்த மௌரியர் பற்றிய செய்திகளையும் பிளினி, ப்ளூடார்ச் ஆகிய கிரேக்க அறிஞர்களின் சந்திர குப்தரைப் பற்றிக் குறித்துள்ள செய்திகளும் நமக்கு மிகவும் உதவுகின்றன. கி.பி. 5 - ஆம் நூற்ருண்டில் வெளியான விசாகதத்தர் என்பார் எழுதிய முத்திரா ராட்சசம் என்னும் நாடக நூல் மூலமும் சில செய்திகளை அறிகிறோம். இவற்றைத் தவிர கௌடில்யரின் அர்த்தசாத்திரம் அரசியல் வரலாற்றை அறிந்து கொள்ள உதவுகின்றது. கௌடில்யரின் அர்த்த சாத்திரம் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முதல் பிரிவில் அரசனையும், அரசனுடைய அவையையும், இரண்டாவது பிரிவில் குற்ற இயல், வழக்கியல் சட்டங்கள் பற்றியும், மூன்ருவது பிரிவில் நாடுகளுக்கிடையே கடைப்பிடிக்க வேண்டிய சட்டங்கள், விதிமுறைகள் ஆகியவை பற்றியும் கூறப்பட்டுள்ளன என்பதனைக் கண்டோம்.

### கல்வெட்டுகள்

அசோகருடைய காலத்தில் ஆட்சி அமைப்புத் துறையில் ஏற்பட்ட மாறுதல்களை அறிந்து கொள்வதற்கு அசோகரின் கல்வெட்டுகளும், பட்டயங்களும் பெரிதும் உதவுகின்றன. இக் கல்வெட்டுகளுக்கு அடுத்தபடியாக நாம் குறிப்பிட வேண்டிய மிக முக்கியமான சான்று மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா என்னும் நூலே ஆகும். இக் நூலிலிருந்துதான் பாடலி புத்திரத்தினுடைய நகர ஆட்சி முறையைப் பற்றி அறிகிறோம். ஆனுலுங்கூட மெகஸ்தனிஸ் எழுதிய நூலினைச் சில வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அங்கியரா கையால் அவரால் எதனையும் முறையாக உணர்ந்து எழுதியிருக்க இயலாது என்று கருதினர். அவரது கருத்துகள் அனைத்தையும் உண்மை என ஏற்றுக் கொள்ளாவிடினும் மற்றவர்களோடு ஒப்பிட்டு உண்மையை அறிகிறோம். மௌரியர் ஆட்சி முறையைப் பற்றி நாம் ஆராயும் போது சில புதிய உண்மைகள் புலப்படுவதை உணர்கிறோம்.

### ஆட்சி எல்லை

மௌரியர்களுடைய ஆட்சி முறையைப் பற்றி நாம் தெரிந்து கொள்வதற்கு முன்னர் மௌரியப் பேரரசின் எல்லையைப் பற்றித் தெரிந்துகொள்ளுதலும், பேரரசின் குணங்களைப் பற்றி அறிந்துகொள்ளுதலும் அவசியமாகும். சந்திர குப்த மௌரியரின் கீழ் ஆட்சி வந்தவுடன் நந்தர்கள் எந்த எந்தப் பகுதிகளை ஆண்டார்களோ அந்தப்பகுதிகள் அப்படியே இணைந்தன. சமண மதத்தவர்களுடைய கருத்துகளின் படி தென்னிந்தியாவில் மைசூர்ப் பகுதி சந்திரகுப்த மௌரியரின் ஆட்சியில் இருந்தது. அசோகருடைய கல்வெட்டுகள், சித்த புரம், பிரம்மகிரி, இராமேசுவரமலை ஆகியவற்றில் காணப் படுவதைக் கொண்டும் மௌரியர்கள் ஆட்சி தென்னிந்தியா வரைபரவியிருந்தது என அறிகிறோம். தமிழ் இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் மௌரியர்களுடைய படையெடுப்புகளைப் பற்றிக் குறித்துள்ளதோடு, 'வம்ப மௌரியர்' என்னும் அடைமொழி தந்து அழைக்கப்பட்டு இருப்பதையும் அறிகிறோம். மேலும் மாமூலனர் நந்தர்களைப் பற்றிக் குறித்துள்ளார். எனவே விந்திய மலைக்கு இப்பால் தமிழகம் தவிர தென்னிந்தியா முழுமையும் மௌரியர்கள் வசம் இருந்தது எனக் கருத வாய்ப்பு உள்ளது.

காஷ்மீரத்திலிருந்து அஸ்ஸாம் வரை கிழக்கிலும், அரேபியன் கடல்வரை மேற்கிலும், தமிழகம் தவிர எல்லாப் பகுதிகளும் மௌரியர்கள் வசமிருந்தன. பேரரசின் கீழ் இருந்தாலும் ஆந்திரநாடு, போஜர்கள்நாடு, இராட்டிரர்கள்நாடு, பொலிந்தர்கள்நாடு ஆகியவை இராஜவிஸ்யங்கள், அதாவது பேரரசிலிருந்த இறைமை நாடுகள் என அழைக்கப்பட்டன.

அரசியல் ரீதியாகப் பேசப்படுகின்ற முதல் பேரரசு மௌரியப் பேரரசு என்றாலுங்கூட அதனைப் பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் இரண்டாவது பேரரசு என்றே கருதுகின்றனர். வி. ஆர். ஆர். தீட்சிதர் தம்முடைய நூலில் நந்தர்கள் அரசே முதல் பேரரசு என உரைக்கின்றார். வலுவுள்ள அரசுகள் ஏற்பட்ட போது சில அரசுகள் தங்கள் ஆட்சி அமைப்பு முறைகளை மட்டும் வைத்துக் கொண்டு பேரரசுகளுக்கு அடி பணிந்தன. அவைகள் பேரரசனின் வலிமையைப் பொருத்தே அடங்கி நடந்தன.

### மண்டலக் கொள்கை

மண்டலங்கள் என்னும் கொள்கையைப் பற்றிய செய்திகளை அர்த்த சாத்திரம் கிடைப்பதற்கு முன் அறிய இயலாது இருந்தது. வெற்றி பெற்ற மன்னர், அவருடைய நண்பர், நண்பர்க்கு நண்பர் ஆகிய மூவரே நாடுகளின் வட்டத்தில் அடங்கியிருந்தனர். மௌரியப் பேரரசின் மூன்று மண்டலங்களும், அமைச்சர், பிரதேசம், கோட்டை, கருவூலம், படை ஆகியவற்றைக் கொண்டிருந்தன. நாடுகளின் வட்டங்கள் 18 உறுப்புகளைக் கொண்டிருந்தன.

### சிறிய நாடுகள்

எண்ணிறந்த சிறிய நாடுகள் இருந்தன. இந்தச் சிறிய நாடுகள் மண்டலக் குழு நாடுகளுக்கு அடங்கியிருந்தன. மண்டலக்குழு நாடுகளின் அரசர்களில் யாராவது ஒருவர் வலுவுள்ளவராக ஆனால் மற்றவர்கள் அவருடைய தலைமையினை ஏற்று அடங்கி நடந்தனர். பின்னர் அவர் பேரரசராகவும், அவருடைய கொள்கை ஏகாதிபத்தியக் கொள்கையாகவும் ஆயின. மௌரிய அரசு தனி ஒன்றான (Unitary) அரசாகக் கருதப்படாது, பலநாடுகள் சேர்ந்த கூட்டிணைவாகவே (Federal) கருதப்படுகிறது. இந்தக் கூட்டிணைவு இடத்திற்கேற்றவாறும், காலத்திற்கேற்றவாறும் பொருள் வேறுபடுகிறது. மைய அரசு குறைந்த அளவு அதிகார எல்லையினைத் தனக்குக் கீழ் உள்ள

நாடுகளின்பால் செலுத்தினாலுங்கூட அது கூட்டிணைவு என்றே கருதப்படுகிறது. அவ்வாறு மேற்கூறிய கருத்தின்படிப் பார்க்கும்போது மௌரியப் பேரரசும் கூட்டிணைவுதான். ஆனால் உறுதியான கூட்டிணைவுக்குரிய அரசியல் சட்டங்கொண்டதன்று என்பது குறிப்பிடத்தக்கது.

### குறிக்கோள்

மௌரியப் பேரரசினுடைய ஆட்சி முறையினைப் பற்றி அறிந்து கொள்ள மௌரிய அரசின் நோக்கத்தினையும், குறிக்கோளையும் அறிந்து கொள்ள வேண்டும். மௌரிய ஆட்சி இராணுவ ஆட்சியோ, அதிகாரங்கள் குவிந்த வல்லாட்சியோ அன்று. போர்கள் நடந்தன; நாடுகள் பிடிக்கப்பட்டன. ஆனால் மக்களுடைய பொருளியல், நீதியியல் நலனே சிறப்பாகக் கருதப்பட்டன. மூன்று நோக்கங்களை மௌரிய நாடு கொண்டிருந்தது என 'வான் ஹால்ட் ஜென்டார்ப்' எனும் அறிஞர் கூறி, அவை: மற்ற நாடுகளின் மேல் ஆதிக்கம் செலுத்தும் எண்ணம், குடிமக்கள் தங்கு தடையற்ற தன் உரிமை பெற்றிருத்தல், பொதுவான மகிழ்ச்சி ஆகியவையே என்றும் உரைக்கின்றார்.

### ஆட்சிக்கு வந்த விதம்

இனி மௌரிய அரசின் சிறப்பியல்புகளையும், பண்புகளையும் பற்றி ஆராய்வோம். முதலில் அரசர்கள் ஆட்சிக்கு வருவது குறித்து ஆராய்தல் அவசியமாகும். பொதுவாக மரபு வழியே ஆட்சி என்னும் முறை இருந்தது. ஸ்டிராபோ என்னும் கிரேக்க அறிஞர், மகன் தந்தையைத் தொடர்ந்து ஆண்டார் என்றார். இளவரசனாக இருந்த காரணத்தினாலே மட்டும் ஒருவன் அரசனாகிவிட முடியாது. பிளினி என்பார் 30 உறுப்பினர்களால் அரசர் தேர்ந்தெடுக்கப்பட்ட போது அரசின் உயர் அதிகாரிகளும், பொது மக்களும் கூடியிருந்தனர் என உரைப்பதிலிருந்து மக்களின் எண்ணத்திற்கு மதிப்பளிக்கப்பட்டது என்பதையும் அறிகிறோம். பொதுவாக மூத்த மகனே ஆட்சிக்கு வந்தாலும் மற்ற மக்கள் அரசப் பிரதிநிதிகளாக நியமிக்கப் பட்டனர். மரபு வழியே ஒருவர் அரசரானாலும், புரோகிதரால் புனித நீராட்டப்பட்டுப், பதவி ஏற்பு விழா நடைபெறுவிடில் 'இராஜா' என்றோ, மகாராஜா என்றோ அழைக்கப்படுவதில்லை. அரசர்கள் தம் வாரிசான மக்களுக்காக முடிதுறத்தல் என்னும் வழ்க்கமிருந்தது என்பதற்குச் சந்திரகுப்தரே முதல் சான்றாக விளங்குகிறார். அதைப் போலவே அசோகரும் பதவி துறந்தார் என அறிகிறோம்.

### முழு வல்லாட்சி

மௌரிய அரசினை முழு வல்லாட்சி (Absolute Government) அரசு என்று சிலர் கருதினர். அதைத் தவறான கருத்து என்று திட்சிதர் கருதுகின்றார். அரசன் சட்டத்தினை உருவாக்குபவனாக இல்லாது சட்டத்தின் காவலனாக விளங்கினான். நாட்டில் நிலவிய சட்டங்களை—விதி முறைகளை மதித்து நடக்க வேண்டியிருந்தது. அவ்வாறு நடக்கவில்லையாயின் மக்கள் கிளர்ச்சி செய்தனர். எனவே சட்டங்களே நாட்டின் இறைமை அதிகாரமாகத் திகழ்ந்தன. அசோகர் கல்வெட்டுகளின் மூலமாகப் புதிய சட்டங்களை வெளியிட்டார் என்று கூறுவார்கள். ஆனால் அது உண்மையில்லை. அவர் புதிதாகச் சட்டங்களை வெளியிடவில்லை. அசோகர் செய்தது எல்லாம் வழக்கத்தில் இல்லாதுபோய்விட்டவைகளை மீண்டும் நிலை நிறுத்துதலாகும் என்று மறுத்துக் கூறப்பட்டது.

### அரசத் தடைகள்

இனி அரசருக்குத் தடையாக விளங்கிய சக்திகள் யாவை என ஆராய்வோம். மந்திரி பரிஷத் என்னும் அமைப்பும், மக்கள் அவையும் அவ்வாறு விளங்கியவை என்று கருதப்படுகிறது. மௌரியப் பேரரசு வலுவுள்ள அரசர்கள் காலத்தே வளர்ச்சியும், வலுவற்றவர்கள் காலத்தே தளர்ச்சியும் அடைந்தது. கௌடில்யருடைய கருத்துப்படி அரசன் எக் கருத்தையும் ஏற்றுக் கொள்ளவோ, தள்ளுபடி செய்யவோ கௌசிலர்கள், மந்திரிகள் ஆகியோருடைய கருத்துகளை ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அரசர்கள் நாட்டின் வேலையாட்கள் எனவும் நாட்டை ஆளுகின்ற செயலைவிட வேறெந்தச் செயலிலும் முழுத்திருப்தி அடையவில்லை என்றும் அரசன் நாட்டின் தலையாய வேலைக்காரனாகத் தன்னைக் கருதிக் கொண்டபடியால் வல்லாட்சி அரசனாக மாறவில்லை என்றும் கருதப்படுகிறது.

### தந்தையைப் போன்ற முறை ஆட்சி

அசோகருடைய கல்வெட்டுகளிலிருந்து அரசன் தந்தையினுடைய அன்பைப் பொழிந்து ஆட்சி புரிந்ததாகக் கருதாது தந்தையைப் போன்ற முறை ஆட்சி என்றவுடன், தந்தை எவ்வாறு கடுமையாகக் கேட்பதற்கியலாத முறையில் நடந்து கொள்ளுகின்றாரோ அவ்வாறு கேட்பாரின்றி மௌரிய அரசுகள் வல்லரசுகளாகத் திகழ்ந்தன எனத் தவறாகச் சிலர்

பொருள் கொண்டனர். தந்தை எவ்வாறு அன்பைச் செலுத்தி மக்கள்பால் நன்மைகள் புரிகின்றாரோ அதுபோலவே அரசனும் நடந்துகொண்டான் என்றே பொருள் கொள்ளவேண்டும். அது அவ்வாறுதான் என்று நாம் உறுதியாகக்கூறிட நமக்குத் துணை நிற்பவை அசோகரின் கல்வெட்டுகளே ஆகும். அவற்றில் அரசன் தந்தையைப் போல் தன்னைக் கருதிக் குடிமக்களிடம் அன்பு செலுத்தி அரசாள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

### அரசனின் தகுதிகள்

அரசனுக்கு என்று சில தகுதிகள் சுட்டிக் காட்டப்பட்டன. உடலாலும், மனத்தாலும் கட்டுப்பாடு உடையவனாக அரசன் இருத்தல் அவசியம் எனக் கருதப்பட்டது. அவ்வாறு ஆவதற்கு முறையான கல்வி தேவைப்பட்டது. கல்வி முறையில் இரண்டு பிரிவுகள் இருந்தன. முதலாவது பிரிவு மூன்று வயதிலிருந்து பதினொரு வயது வரை உள்ளது. இப் பிரிவில் அடிப்படைக் கல்வி அளிக்கப்பட்டது. இக் கல்வி அரசனின் தகுதியை அதிகப் படுத்தியது. இக் கல்வி பெற்றவுடன் அரசனுக்குப் பதினொரு வயதிலிருந்து பதினாறு வயது வரை உயர் கல்வி அளிக்கப்பட்டது. உயர் கல்வியில் தத்துவம், பொருளியல், அரசியல் ஆகியவை போதிக்கப்பட்டன. இவை தவிர இதிகாசங்கள், காவியங்கள் ஆகியவையும் பயிற்றுவிக்கப்பட்டன. கட்டுப்பாடான மனமும், உடலும் வாய்க்கப் பெற்றாலே நல்ல முறையில் ஆட்சி நடத்திட இயலும் எனக் கௌடில்யர் உரைக்கிறார். அரசன் கோபத்தையும், ஆசையையும் அடக்கிடப் பழகினாலே தீமைகளை ஒதுக்கிட வாய்ப்புக் கிடைக்கும் எனக் கருதினர். எல்லாக் கலைகளிலும் தேர்ந்த அரசன் வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர்களோடு விவாதித்து அறிவாற்றலை வளர்த்தல் அவசியம் எனவும் கருதினர்.

### அரசனின் கடமைகள்

இரவும் பகலும் எட்டுப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அட்டவணை தயாரிக்கப்பட்டது. காலை மூன்று மணிக்கு விழித்த அரசன் இரவில் 9 மணிக்கு உறங்கிடச் சென்றான். அரசன் நாள் முழுவதும் அரசவையில் இருந்தான். மெகஸ்தனிசின் கருத்தின்படி உண்ணுகின்ற நேரம் தவிர மற்ற நேரம் முழுவதும் அரசன் நாட்டின் காரியங்களையே கவனித்துக் கொண்டிருந்தான் என அறிகிறோம். அரசன் போதிய பாதுகாவலுடன் வாழ்தல் அவசியம் என்றும் கருதினர்.

அரசனுடைய கடமைகளை நோக்குமிடத்து அரசன் வெறும் காவற் பணியாளனை மட்டும் பணி செய்திடவில்லை. கட்டுப்பாட்டோடு மக்களை வாழ வைத்ததோடு மனிதப் பிறவியின் பயனையும் உணரச் செய்வது மன்னன் கடமையாக இருந்தது. அரசனின் முதலாவது கடமையாகக் கருதப்பட்டது, ஸ்வதர்மம் என்று சொல்லப்படும் குடிமக்களின் தர்மத்தைக் காத்தல் ஆகும். மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் கடமைகளை அடுத்தவர்களுக்கு இடையூறின்றி நடத்திடச் செய்வதே மன்னனின் கடமை. இவ்வாறு ஸ்வதர்மத்தைக் காப்பதன் மூலம் மன்னன் வலுவற்றவன் வலுவுள்ளவனால் அழிக்கப்படாத நிலையை உருவாக்கினான்.

இரண்டாவது கடமை குடிமக்களின் பொது நலன்களைப் பார்த்துக் கொள்வது. பொது நலன்களைப் பார்த்துக்கொள்வது என்றால் குடிமக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளிப்பது ஆகும். தண்டமுறையைக்கொண்டு தவறு புரிவோரையும், கொடியவர்களையும் அரசன் தண்டித்து நாட்டின் நலனையும் பாதுகாப்பையும் பேணினான்.

மூன்றாவது கடமை விவசாயம், வாணிபம் ஆகியவற்றிற்கு ஊக்கமளிப்பது ஆகும். பஞ்சப் பகுதியில் வாழ்ந்த மக்கள் வளமுள்ள பகுதிகளுக்கு மாற்றப்பட்டனர். கால்நடைகள் கடத்தப்படுவதைத் தடுத்து நோயின்றி வாழ அரசன் ஆவன செய்தான். அதைப் போலவே வாணிப வழிகளில் தகுந்த பாதுகாப்பும் அளித்தான்.

நான்காவது கடமை நீதிமுறை வழுவாது ஆட்சி நடத்துவது ஆகும். இக் கடமையை நிறைவேற்றுவதன் மூலம் அரசன் தர்மப்பிரவர்டகன் என அழைக்கப்பட்டான். நல்ல நீதி வழங்கிய மன்னனுக்கு வானுலகில் இடம் உண்டு என நம்பினர். நீதி வழங்கும் போது மகன் என்றோ, எதிரியென்றோ கருதாது நீதி ஒன்றையே மனதில் எண்ண வேண்டும் எனப்பட்டது.

துறவிகள், சன்னியாசிகள் ஆகியோருடைய செய்கைகளை ஆராய்வதும், கண்காணிப்பதும் ஐந்தாவது கடமையாகக் கருதப்பட்டது. போதிய மரியாதை அவர்களுக்கு அளிக்கப்பட்டது போலவே, தவறு செய்தவிடத்தும் அவர்களுக்குத் தக்க தண்டனை வழங்கப்பட்டது.

அரசனின் கடமைகளை அடுத்து நாம் காணுவது அரசன் மக்களுக்கு இயற்கையின் கோரத் தாண்டவத்தின் போது

ஆற்றிய பணிகளேயே. இயற்கை அபாயங்களான நெருப்பு, வெள்ளம், கொள்ளைநோய், பஞ்சம், விலங்குகளின் ஆபத்து ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு அளிக்க வேண்டியதும் மன்னனின் கடமையாகும்.

அரசனின் கடமையாக அடுத்துக் கருதப்படுவது வெளி நாட்டுக் கொள்கையாகும். அரசன் கையாளுகின்ற வெளி நாட்டுக் கொள்கைகள் நாட்டின் நலனுக்குக் குந்தகம் விளைவிப் பவையாக இல்லாமல் நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவு பவையாக இருத்தல் வேண்டும்.

சமூக, சமுதாயக் கடமைகளைப் பேணுவதும் அரசனின் கடமையே ஆகும். கலைகளின் முன்னேற்றத்திற்கு உதவுதல், கல்வி, நலம், தூய்மை, மருத்துவ உதவி, எளியோர்க்கு உதவி ஆகியவற்றையும் அரசன் கவனித்துச் செய்தல் வேண்டும். இவற்றில் மற்ற சமூகக் கடமைகள், மருத்துவ விடுதிகள், தங்குமிடங்கள், நன்கொடைகள், கற்றவர்க்கு உதவி, அனாதைகளுக்கு ஆதரவு ஆகியவையும் அடங்கும்.

### அரசனுக்கு இருந்த சலுகைகள்

அரசனுக்கு என்று சில கடமைகள் இருந்தது போலவே சில தனிச் சலுகைகளும் இருந்தன. அவற்றைத் தனிச்சலு கைகள் என்று சொல்வதைவிடத் தனி உரிமைகள் என்று கூறுதலே பொருத்தமுடையது ஆகும். அரசனுக்கு இருந்த உரிமைகள் யாவை என்று அறிந்து கொள்ள அர்த்தசாத்திரம் உதவுகிறது.

(1) அரசாங்கத்தின் தலைமைப் பதவி அரசனிடம் இருந்த மையால் அரசனுக்குச் சிறப்பான மரியாதைகள் கிடைத்தன.

(2) ஒரு இலட்சம் பணத்திற்கு மேற்பட்டுக் கிடைக் கின்ற புதையல்களுக்கு அரசனே உரிமையாளன். எனினும் புதயலைக் கண்டறிந்தவர்க்கு 1/6 பங்கு கொடுக்கப்பட்டது.

(3) வாரிசு இல்லாமல்போய்விட்ட சொத்துகள் யாவையும் அரசனுக்கே சொந்தம். இதில் சில விதிவிலக்குகள் இருந்தன.

(4) உரிமை கேட்கப்படாத பொருள்கள் எல்லாம் அரச னுக்கே சொந்தமாயின என்றாலும் உரிமையாளன் உரிமையை நிலை நாட்டியபோது திருப்பித் தரப்பட்டது.

(5) சாதாரண மனிதனை விட அரசனின் நிலை உயர்ந்தது. எனவே சாட்சியங் கூறுவதற்கு அரசனை நீதி மன்றத்திற்கு அழைத்திட இயலாது.

(6) சிறப்புச் சட்டங்களால் துரோகக் குற்றங்களிலிருந்து அரசனுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

(7) ஆட்சியி விருப்போனைக் கவிழ்த்தல், அந்தப்புர உறுப்பினர்களின் புனிதத் தன்மையைப் பாழ்படுத்தல், ஆளும் அரசனுக்கெதிராக மக்களைத் தூண்டுதல், கோட்டைகள், படை ஆகியவற்றை எதிரிக்குத் திருப்புதல், முத்திரைகளை உடைத்தல், கள்ளக் கையெழுத்துப் போடுதல், அரசனை அவமதித்தல், இரகசியங்களை வெளியிடுதல் ஆகியவை துரோகக் குற்றங்கள் எனக் கௌடில்யர் உரைக்கிறார்.

## மன்றம், அவை

இனி மன்றம், அவை ஆகியவை பற்றிக் காண்போம். அவைக் கூடம் வேற்று மனிதர்களும், விலங்குகளும் புகா வண்ணம் தகுந்த பாதுகாவலுடன் அமைக்கப்பட்டிருந்தது. கீழ்க் கண்ட குணங்கள் வாய்க்கப்பெற்றவர்களே உறுப்பினர்களாக அமர்த்தப்பட்டனர். நாட்டின் குடிமகன், உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்தவன், தன்னை ஆள்பவன், கலைத் தொழில்களில் தேர்ந்தவன், அர்த்த சாத்திரத்தினைக் கற்றவன், நினைவாற்றல் மிக்கவன், அறிவாளி, குரலினிமையுடையவன், தர்ம சிந்தனை யுடையவன், நன்கு விவாதிப்பவன், ஆற்றல் மிக்கவன், நிலைபெறத்தக்கவன், நேர்மையாளன், ஒத்துப்போகும் இயல்புடையவன், விசுவாசமுள்ளவன், நன்னடத்தை, நல்ல உடல், நல்ல நலம், தைரியம், அடக்கம், சிறந்த ஆளுமை ஆகியவை உடையவன் என்று கருதப்பட்டவனுக்கே அச் சிறப்புக் கிடைத்தது. புரோகிதரும் உறுப்பினராக இருந்தார். தகுதி யுடையவர்களே புரோகிதர்களாக இருந்தனர்.

## அவற்றின் பணிகள்

அவையின் தலைவரான அரசர் எல்லாச் சந்தர்ப்பங்களிலும், அவசரக் காலங்களிலும்கூட அவையோரைக் கலந்தே முடிவு செய்ய வேண்டியிருந்தது. பெரும்பான்மையோரின் கருத்துகள் என்று கருதாது, அனைவரின் ஒருமித்த கருத்தே ஏற்றுக்கொள்ளப்பட்டது. உள்நாட்டுக் கொள்கைகளுக்கும் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கும் அவையின்

கருத்தே கேட்கப்பட்டது. சுருக்கமாகச் சொல்வோமானால் அரசாங்கத்தின் கொள்கையை உருவாக்கியதே அவைதான். மேலும் அவை புதிய பணிகளை மேற்கொள்வதும், ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டவற்றை நிறைவு செய்வதும், உள்ளவற்றை விருத்தி செய்வதும், மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் கவனிப்பதும் அவையின் பணிகளாயிருந்தன. அவை அறிவுரை கூறும் அமைப்பாக மட்டும் இல்லாது செயல்துறைப் பணிகளையும் மேற்கொண்டது. அரசன் ஒருபோதும் அவையின் கருத்துக்கெதிராக நடப்பதில்லை. தலைநகரில் **பௌரா, ஜனபாதா** ஆகிய இருமன்றங்களிருந்தன. அதைப் போலவே மாநிலத் தலைமையிடத்திலும் பௌரா, ஜனபாதாக்கள் எனப்படும் அமைப்புகள் இருந்தன. அசோகரின் பட்டயங்களில் ஜனபாதாக்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

## வருவாய்

தர்மம், அர்த்தம், காமம் ஆகிய மூன்றும் மௌரிய நாட்டின் குறிக்கோள்களாக இருந்தாலும் அர்த்தம் என்று சொல்லப்படும் செல்வத்திற்கே சிறப்பிடம் கொடுக்கப்பட்டது. போதிய செல்வமில்லாது நாட்டினை நிர்வகிக்க முடியாது. அரசனுக்கு நிலவரி மூலம் செல்வம் கிடைத்தது என அறிகிறோம். மெகஸ்தனிஸ் 1/4 பங்கு கிடைத்தது எனக் கூறுகிறார். ஆனால் 1/6 பங்கு வசூலிக்கப்பட்டது என்பதைப் பலர் உறுதி செய்கின்றனர். இனி வேறு எவ் வகையில் அரசுக்குப் பொருள் சேர்ந்தது எனக் காண்போம். சிலநேரங்களில் கிராம மக்கள் அனைவரும் **பிந்தகாரா** என்னும் வரி செலுத்தினர். **பலி** என்னும் வரியும் வசூலிக்கப்பட்டது. **காரா** என்பது பழத்தோட்டங்கள் முதலியவற்றிலிருந்து பெறப்பட்ட வரியாகும். உற்பத்தியையும் தொழில்களையும் அரசாங்கமே கவனித்தது. வாணிகத்தின் மூலம் சுங்கவரி கிடைத்தது. அரசுக்குச் சொந்தமான காடுகள், வெற்றிடங்கள் ஆகியவற்றிலிருந்தும் வருவாய் கிடைத்தது.

## வரிவசூலித்தல்

மக்களுக்கு ஆத்திரம் ஏற்படும் வகையில் வரி வசூலிக்கக் கூடாது. வரி வசூலிப்பவர்கள் தவறு புரிந்திடாவண்ணம் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். இலஞ்சம் வாங்குகின்ற அதிகாரிகள் தண்டிக்கப்படப் புலனாய்வுத் துறையினர் இருந்தனர். இவ்வாறு வசூலிக்கப்பட்ட பணம் மக்களின்

நலன், காவல்படை, இராணுவம் ஆகியவற்றுக்கும், அரசுப்பணியாளர்களுக்கும் பயன்பட்டது போலவே, தொழிற்சாலைகள், தாயரிப்பு நிறுவனங்கள், நீர்ப்பாசனம், விவசாயம் ஆகியவற்றிற்கும் செலவிடப்பட்டது. அரசன் ஏழை எளியவர்கட்கு, வயதானவர்களுக்கு, உடல் ஊனம் உற்றோர்க்கு உதவிட இப் பணத்தின் மூலம் தர்ம நிறுவனங்களை நிறுவியதோடு, சாலைகள் அமைப்பதற்கும், சமயப் பணிகளுக்கும், கல்விப் பணிகளுக்கும் இதைச் செலவழித்தான் என அறிகிறோம்.

ஒவ்வோர் ஆண்டும் கணக்குப் புத்தகங்கள் தணிக்கைக்கு அனுப்பப்பட்டதோடு தவறான கணக்குகளைத் தயாரித்தவர்களுக்குத் தண்டனையும் வழங்கப்பட்டது. அரசு அலுவலர்கள் இலஞ்சம் வாங்குவதையும், சலுகைகள் பெறுவதையும் தடைசெய்யும் பொருட்டு அடிக்கடி இடமாற்றம் செய்யப்பட்டனர்.

### நீதித்துறை

நீதித்துறையின் எல்லை பற்றிக் காணுகின்ற போது அரசன் சட்டத்தின் காவலனே என்னும் உண்மையை அறிகிறோம். இந்தியச் சட்டம் என்றாலே தர்மத்தின் அடிப்படையிலானதுதான். அர்த்தசாத்திரம், இருவகையான நீதிமன்றங்கள் இருந்தன; அவை தர்மாஸ்தியா, கண்டக சோதனை என அழைக்கப்பட்டன என்கிறது. தர்மாஸ்தியா நீதிமன்றங்கள் சமூக இயல் வழக்குகளையும், கண்டகசோதனை குற்ற இயல் வழக்குகளையும் கவனித்தன. திருட்டு வழக்குகளில் திருடியவரை நிரூபித்தாலே தண்டனை வழங்கப்பட்டது. தற்கொலை செய்து கொண்டவர்களைப் புதைக்காமலும், எரிக்காமலும் நடு வீதியில் அனாதையாகக் கிடத்துவதன் மூலமாக மற்றவர்கள் அக் குற்றத்தைச் செய்யாவண்ணம் செய்தனர்.

### தண்டனைகள்

அபராதம் விதித்தல், சிறையிலடைத்தல், உறுப்புக் குறைத்தல், மரண தண்டனை விதித்தல் ஆகிய தண்டனைகளே விதிக்கப்பட்டன. தர்ம சாத்திரங்களில் விதிக்கப்பட்ட முறைகளிலேயே நீதி வழங்கப்பட்டது. கடுந்தண்டனைகள் அசோகர் காலத்திலும் விதிக்கப்பட்டன. உயர் நீதிமன்றம் தவிர எண்ணிறந்த வழக்கு மன்றங்கள் மாநிலங்களிலும் மாவட்டங்களிலும் இருந்தன. இவை தவிர கிராமங்களிலும் வழக்கு மன்றங்கள் இருந்தன. அங்கு, வழக்குகளைக் கிராமத்திலிருந்த

முதியோர் விசாரித்தனர். இவ்வாறாகக் கிராம நீதிமன்றங்கள் முதலாகத் தலைமை நீதிமன்றம் வரை பல இருந்தன. குற்றவாளிகளைக் குறுக்கு விசாரணை செய்தலும், சந்தேகப்படுவோரை விசாரணைக்காகச் சந்தர்ப்ப சாட்சியங்களை மட்டுமே கொண்டு தீர்ப்பு வழங்காமையும் குறிப்பிடத்தகுந்தவையாகும். வழக்கு மன்றத்தில் கோரான பதிலைச் சொல்லா திருத்தலும், பொருத்தமில்லாதவற்றைக் கூறுதலும், விரும்பப்படாதவர்களிடமிருந்து அறிவுரை பெறுதலும், கேள்விகளுக்குத் தொடர்ந்து பதில் அளிக்காமையும், தன் கூற்றையே மறுத்து உரைத்தலும், சாட்சியிடம் நீதிமன்றத்தின் அனுமதியின்றி இரகசியமாகப் பேசுதலும் நீதிமன்ற அவமதிப்புச் செயல்களாகக் கருதப்பட்டன.

### நீதிபதிகள்

உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, தர்மாதிகாரின் என்று அழைக்கப்பட்டார். மற்ற நீதிபதிகள் தர்மாஸ்தாக்கள் என அழைக்கப்பட்டனர். பிரதேசதாரக்கள் தற்கால மாவட்ட நீதிபதிகளைப் போன்றவர்கள். நீதிபதிகளுடைய நேர்மையைச் சோதித்து அறிந்திட ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டனர். அரசனின் பிறந்த நாள் விழாவின்போது கோயாளிகள், அனாதைகள், ஆகிய குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டனர். புதிய பகுதிகளைக் கைப்பற்றியபோதும், முடிசூட்டு விழாவின் போதும், அரசனுக்கு ஆண் மகவு பிறந்த போதும் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

### படை

நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட நல்ல கட்டுப்பாடுடைய க்ஷத்திரியர்களே படையிலிருந்தனர். கௌடில்யர் க்ஷத்திரியர்களுடைய படைக்கு க்ஷத்திரியர்களையே தேர்ந்தெடுத்தார். சந்திர குப்தரின் படையில் 9 ஆயிரம் யானைகளும், 30 ஆயிரம் குதிரைகளும், 60 ஆயிரம் காலாட் படையினரும் இருந்தனர் என பிளினி, புளூடார்ச் ஆகியோர் உரைக்கின்றனர். காலாட் படையினர் வில்லும், அம்பும் கொண்டு போரிட்டனர். சிலர் அம்புகளுக்குப் பதிலாக ஈட்டிகளை வைத்திருந்தனர். ஆனால் எல்லாருமே வாள் வைத்திருந்தனர்.

### இராணுவ வாரியங்கள்

இராணுவத்துறை நிருவாகத்தினை 30 பேர் அடங்கிய ஆறு வாரியத்தினர் (Boards) நிருவகித்தனர். ஒவ்வொரு வாரியத்

திலும் 5 உறுப்பினர்கள் இருந்தனர். இந்த வாரியங்கள் காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை, கடற்படை, பொறுப்பாளர்குழு என அழைக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் கண்காணிப்பாளர் ஒருவர் இருந்தார். இராணுவ அதிகாரிகளில் தளபதியே சிறப்பிடம் வகித்தார். போருக்கான இடத்தையும், தங்குமிடத்தையும் அவரே தேர்ந்தெடுத்தார். எதிரிகளின் படையில் பிரிவினை ஏற்படும் வண்ணம் செய்யும் தளபதி அரசின் நிலையான அலுவலர். இவருக்கு ஆண்டுதோறும் 48 ஆயிரம் பணம் வழங்கப்பட்டது. மற்ற அதிகாரிகள் நாயகர்கள் என்று அழைக்கப்பட்டுப் 12 ஆயிரம் பணம் பெற்றனர். இராணுவத்தில் மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள், சமையல்காரர்கள் ஆகியோர் இருந்தனர். இராணுவ நிருவாகம் மிகவும் சிறப்பாக இருந்தது. அது பழங்கால இந்திய முறையை ஒட்டியே இருந்தது என டாக்டர் வின்செண்ட் ஸ்மித் கூறுகின்றார்.

## ஆட்சிப் பிரிவு

மௌரியப் பேரரசு பல நாடுகளை ஒன்றுக்கி உருவானதாகும். ஆட்சி செய்வதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு அது மாநிலங்கள், மாவட்டங்கள், கிராமங்கள் ஆகியவையாகப் பிரிக்கப்பட்டிருந்தது. எத்தனை மாநிலங்கள் இருந்தன என்பது குறித்து ஒரு முடிவிற்கு வர இயலவில்லை. மாநிலங்களின் ஆளுநர்களாக அந்தந்தப் பகுதித் தலைவர்களே நியமிக்கப்பட்டனர். சாதாரணமாக அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களையே நியமிப்பது வழக்கம் என அறிகிறோம். பாறைக் கல்வெட்டுகளிலிருந்து குமாரர்கள் அல்லது ஆரிய புத்திரர்கள் எனப்பட்டவர்கள் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர் என உணர்கிறோம்.

நிருவாக வசதிக்காக மாநிலங்கள் மாவட்டங்களாகவும் மாவட்டங்கள் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. மாநிலங்களின் **ஆளுநர்கள்**, **மகாமாத்திரர்கள்**, **இராஜீகர்கள்**, **பிரதேசிகர்கள்** ஆகிய அதிகாரிகளைத் துணைக் கொண்டனர். அவர்கள் செயல்துறை அதிகாரிகளாகவும், காவல் துறையினைக் கண்காணிப்பவர்களாகவும் விளங்கினர். மகாமாத்திரர்கள் நாட்டின் உயர் அதிகாரிகள் என அறிகிறோம். அசோகர் காலத்தில் **தர்ம மகா மாத்திரர்கள்** என்பார் அமர்த்தப்பட்டனர். அந்த மகா மாத்திரர்கள் என்பவர்களைப் பற்றிச் சாசனங்கள் மூலம் அறிகிறோம். அவர்கள் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீது முத்திரையிட்டுச் சாலை

வரி வசூலித்தனர். மேலும் எல்லைப்புற நிர்வாகத்தினையும் கவனித்தனர்.

*மாநில அலுவலர்கள்*

இராஜீகர்கள் என்பார் மாநிலங்களில் அடுத்த முக்கிய அதிகாரிகள். வருவாய்த் துறையினை இவர்கள் கண்காணித்தனர். நில அளவை, நீர்ப்பாசனம் ஆகியவற்றையும் இவர்கள் கவனித்தனர். இராஜீகர்கள் மாநிலத் தலைமை வருவாய் அலுவலர் என்றே கருதப்படுகின்றனர். அசோகர் காலத்தில் அவர்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டது. மாநிலங்களைப் பொருத்தவரை தலைமை அதிகாரிகள், உள்நாட்டு அமைதியைப் பாதுகாத்தும், குறைகளை விசாரித்தும், கடமையுணர்வோடும், அமைதியான மனத்துடனும், குரோதமின்றியும் செயல்பட்டனர். மகா மாத்திரர்கள் ஆட்சித் துறையையும், இராஜீகர்கள் நீதித்துறையையும் கவனித்தனர். மூன்றாவதாகப் பிரதேசிகர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள். இவர்கள் வருவாய்த் துறை ஆணையாளர்கள். பேராசிரியர் தீட்சிதர் பிரதேசிகர்கள் என்றால் குறித்த பகுதியைச் சார்ந்த அதாவது பிரதேசத்தைச் சார்ந்த அதிகாரிகள் என்று உரைக்கின்றார்.

நிர்வாகப் பணியினைக் கவனிப்பதற்கு ஊரியல் அலுவலர்கள் (Civil Servants) தேவைப்பட்டனர். ஊரியல் துறையினர் புருசர்கள் என்றும், யுத்தர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். அவர்கள் மாநில அதிகாரிகள் மன்னனிடம் விசுவாசமாய் நடந்து கொள்கிறார்களா என்பதையும், அரசாங்கத்தைப் பற்றிய மக்கள் கருத்தையும் அறிந்தனர். யுத்தர்கள் எனப்படுவோர் எழுத்தர்களாகவும், கணக்காயர்களாகவும் வருவாய்த் துறையில் பணியாற்றினர். அரசு அலுவலர்கள் முதலில் தற்காலிகமாகவும் பின்னர் நிலையாகவும் அமர்த்தப்பட்டனர். அதற்கு நேர்மையும், திறமையுமே முக்கியமானவையாகக் கருதப்பட்டன.

*நகர ஆட்சி*

மெகஸ்தனிஸ் என்னும் கிரேக்கத் தூதுவர் மூலமாக, நகர ஆட்சி முறைபற்றி அறிகிறோம். மெகஸ்தனிஸ் மட்டுமின்றி ஸ்டிராபோ என்பாரும் நகர ஆட்சிபற்றிக் குறித்துள்ளார். பாடலிபுத்திர நகர் 30 பேரடங்கிய குழு ஒன்றினால் ஆளப்பட்டு வந்தது. இக் குழு ஐவரடங்கிய ஆறுவாரியங்களாக இயங்

கியது. ஒவ்வொரு வாரியமும் ஒரு குறிப்பிட்ட அலுவலைக் கவனித்து வந்தது.

முதலாவது வாரியம், தொழிற்கலைகள் (Industrial Arts) சம்பந்தமுள்ள எல்லாவற்றையுங் கவனித்துக்கொண்டது. இந்த வாரியமே கூலி நிர்ணயம் செய்து, தாமுள்ள பொருட்களைப் பயன்படுத்துகிறார்களா என்பதையும் மேற் பார்வையிட்டது. எல்லாத் தொழிற் கலைஞர்களும் அரசாங்கத்தினல் ஆதரிக்கப்பட்டனர். யாராவது கலைஞர்களுக்குத் தீங்கு விளைவித்தால் அவர்களுக்குக் கடுந்தண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டாவது வாரியம் வெளிநாட்டவர்களைக் கவனித்துக் கொண்டது. வெளி நாட்டவர்களுக்குத் தங்குமிடம் அளிப்பது, அவர்களைக் கண்காணிப்பது, அவர்கள் நோயுற்ற போது உதவுவதும் இறந்துவிட்டால் நல்லடக்கம் செய்வதும் ஆகிய பணிகள் இவ் வாரியத்தினுடையவை. இது வெளி நாட்டவர்களுடைய சொத்துகளையும் பாதுகாத்துக் கணக்கு வைத்தது.

மூன்ருவது வாரியம் பிறப்பு, இறப்பு, ஆகியவற்றைப் பதிவு செய்யும் பணியை மேற்கொண்டது. பிறப்பு, இறப்பு ஆகியவற்றைப் பதிவு செய்வதன் நோக்கமே முறையாக வரி வசூலைச் செய்தற் பொருட்டே ஆகும்.

நான்காவது வாரியம் வர்த்தகத்தையும், வாணிபத்தையும் (Trade & Commerce) கவனித்துக் கொண்டது. விற்பனையை ஒழுங்கு செய்து சரியான எடையுள்ள பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என்று கண்காணித்தது. வியாபாரிகளிடமிருந்து (லைசன்ஸ்) அனுமதிக் கட்டணம் வசூலித்தது. ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களை விற்பவர்கள் இரட்டை வரி செலுத்தினர்.

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மேற்பார்வையிடுவதை ஐந்தாம் வாரியம் மேற்கொண்டது. பழைய பொருட்களையும் புதிய பொருட்களையும் பிரித்து வைக்கவேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இவ் வாணையை மீறுவோர் தண்டிக்கப்பட்டனர்.

ஆருவது வாரியம் விற்பனை வரியை வசூலித்தது. விற்பனை வரியை ஏமாற்றுவோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மேற் குறிப்பிட்ட பணிகளைத் தவிர நகரத்தின் எல்லா அலுவல்களையும் வாரியங்களின் உறுப்பினர்கள் கவனித்துக் கொண்டனர். சந்தைகள், கோவில்கள், துறைமுகங்கள், பொதுப்

பணிகள் ஆகியவை சீராக நடைபெற உறுப்பினர்கள் கவனம் செலுத்தினர். நகர வருமானமாக விற்கப்பட்ட பொருளில் பத்தில் ஒருபங்கு அரசுக்குக் கிடைத்தது. நகரத்தினுடைய பொருளாதாரத்தில் நகராட்சியினர் அக்கறை செலுத்தினர்.

### மக்கள் தொகைக் கணக்கு

ஆண்டுக்கு ஒருமுறை மக்கள் தொகைக் கணக்கெடுப்பு (Census) நடத்தப்பட்டது மௌரிய ஆட்சியின் ஒரு சிறப்பான கூறுபாடு ஆகும். அரசியல் பொருளாதார நோக்கங்களைக் கொண்டே மக்கள் தொகையின் கணக்கெடுப்பு ஏற்பட்டது. இக் கணக்கெடுப்புப் பொதுமக்களின் பொருளாதார நிலை, அவர்கள் வரி கொடுக்கும் திறன், அயல் நாட்டினர் உட்பட மக்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்தல் முதலிய வற்றிற்கு உறுதுணையாக இருந்தது. கிராமங்களில் கிராம அலுவலர்களும், நகரங்களில் நகர அலுவலர்களும் இப் பணியினைச் செய்தனர். இந்தக் கணக்கெடுப்பில் குறிப்பிடத் தகுந்த அம்சம், கணக்கெடுப்புத் துறை நிலையான நிர்வாக அமைப்புத் துறையாக இருந்ததுதான்.

### நகர அலுவலர்

நகரத்தின் முக்கிய அலுவலர் நகரகா என்பவர் ஆவார். நகரகாவின் பணிகள் இக்கால நகராட்சி ஆணையாளரின் பணிகளையே ஒத்திருந்தன. நகரகாவின் பணிகள் இவையே என ஒரு பட்டியலே தரலாம். அவை :

(1) நகரத்தின் அமைதியைக் காத்தல், அந்நியர்களைக் கண்காணித்தல்.

(2) கணக்கெடுப்புப் பணி, வரவு செலவு ஆகியவற்றைக் குறித்தல்.

(3) நெருப்புப் பிடிக்காது இருப்பதற்கான செயல்களைச் செய்தல், தண்ணீர்ப் பானைகளை வைத்தல்.

(4) நகரத்தின் சுகாதாரத்தினைப் பேணுதல், சாலைகளை அசுத்தம் செய்வோர் மீது நடவடிக்கை எடுத்தல்.

(5) இரவு நேரங்களில் சுற்றுவோர் மீது நடவடிக்கை எடுத்து இரவுக் கண்காணிப்பிற்கு ஏற்பாடு செய்தல்.

(6) நகரத்திற்குத் தேவையான கட்டடங்களைக் கட்டும் பணியினை மேற்பார்வையிடுதல்.

(7) எல்லைப் புறங்களில் வசூலிக்கப்படும் சுங்க வரி முறைகளைப் பரிசீலித்தல்.

(8) திருடப்பட்டோ அல்லது காணாமல் போயோ கண்டு பிடிக்கப்பட்ட பொருட்களைப் பாதுகாத்தல்.

(9) நகர அளவிலான கைதிகளை விடுவித்தல் போன்ற பணிகள்.

(10) நகர மக்களின் ஒழுக்கத்தினை நிலைநிறுத்தல். அடிமைப் பெண்களிடம் முறை கேடாக நடந்தவர்கள் முதலியோரைத் தண்டித்தல்.

*நகரப் பிரிவு*

ஆட்சிமுறை வசதியைப் பொருத்து, ஒவ்வொரு நகரமும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒரு ஸ்தானிகரிடம் இருந்தது. அந்தந்தப் பிரிவுகளுக்கு அந்தந்த ஸ்தானிகரே பொறுப்பானவர் ஆவார். காவல்துறை அதிகாரங்கள் ஸ்தானிகர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. நகரகா என்னும் மேல் அதிகாரிகளுக்கும்,கோபா என்னும் இவர்களுக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளுக்கும் இடையே இருந்த அலுவலர்களே ஸ்தானிகர்கள்.

கோபா என்னும் அலுவலர் அவருடைய பிரிவில் வாழ்ந்தவர்களின் சொத்துக் கணக்கை வைத்திருந்தனர். பத்து வீடுகளுக்கு ஒரு கோபா இருந்தார். இவர் சிறிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அதிகாரி ஆவார். கலைஞர்கள், வியாபாரிகள் குடும்பத்தவர்கள், அவர்களுடையநண்பர்கள் ஆகியோர் தாங்கள் செல்லுமிடங்கள் பற்றிய செய்தியைத் தெரிவிக்க வேண்டியிருந்தது.

*பொதுப் பணிகள்*

அசோகரின் கல்வெட்டுகள் மூலமாகப் பூங்காக்கள், தங்குமிடங்கள், கல்வி நிலையங்கள், சாலைகள் ஆகியவை மௌரிய நகர ஆட்சியின் பொறுப்பில் இருந்தன என அறிகிறோம். சாலைகளின் ஓரங்களில் கிணறுகள் வெட்டப்பட்டு நிழல் தரும் மரங்கள் வளர்க்கப்பட்டன. மௌரியர்கள் நகரத்தினை அழகுபட வைத்திருக்கும் பணிகளை மேற்கொண்டனர்.

*சிறப்புகள்*

மௌரிய ஆட்சியின் முறையான, வரிசைப் படுத்தப் பட்ட, சீரான ஆட்சி முறையினைக் கண்டு யாவரும் ஆச்சரிய

மடைவது நிச்சயம். இன்றைய நாளில் வாழ்கின்ற நம் மனத்தில் மௌரிய ஆட்சியின் சிறப்பு மிகவும் சிறப்பாகவே காணப்படுகிறது. இன்றைக்கு நாம் குடியாட்சியைக் கொண்டிருந்தாலும், முடியாட்சியில் இருந்தது போன்ற நிறுவனங்கள் இன்றும் இருக்கின்றன. இன்றைக்கு மக்கள் தொகைக் கணக்கு எடுப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதைக் காட்டிலும், மௌரியர்களின் ஆட்சிக்கு அடிப்படையாக அமைந்தது மக்கள் தொகைக் கணக்கெடுப்பே என்று அறியும் போது வியப்படைகிறோம். இன்றைக்கு நகராட்சி ஆணையாளர்கள் மேற்கொண்டுள்ள இதே பணிகளை அன்றும் சிலர் மேற்கொண்டிருந்தனர். மௌரிய ஆட்சி முறையினை நன்கு ஆராய்கின்ற எவரும், இன்றைய ஆட்சி முறைக்கு அடிப்படைக் கல் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே நாட்டப்பட்டு விட்டது என்பதனை உணர்வார்கள்.

## முடிவுரை

மௌரிய அரசின் கோட்பாட்டில் நாம் காணுகின்ற குறை இதுதான். வேண்டிய முடிவை அடைய எந்த வழியையும் கையாளலாம் (End justifies means) என்னும் கோட்பாடு தான் அது. ஆனால் இதற்கு மௌரியப் பேராசை மட்டும் குறை கூறுவதில் பயனில்லை. அவர்கள் வாழ்ந்த காலத்தினை மனதிலே கொண்டு பார்க்கின்ற போது, முடியாட்சி என்பதையும் எண்ணிப் பார்க்கின்ற போது இந்தக் குறையும் நமக்குப் பெரிதாகத் தெரிவதில்லை. மேலும் ஒழுங்கு, திறமை, நிலையான படை, மக்கள் தொகைக் கணக்கெடுத்தல், இராணுவ ஊரியல் ஆட்சித் துறைகளின் பிரிவினை, சிறந்த நகராட்சி முறை, பொதுநலக் கண்ணோட்டத்தோடு நடைபெற்ற ஆட்சி முறை ஆகிய சிறப்புகள் மேற்கண்ட குறைபாட்டினை மறக்கச் செய்து விடுகின்றன.

# 11. மௌரியர்களின் காலத்திற்குப் பின்

(கி.மு. 100 முதல் கி.பி. 300 வரை)

**(Post Mauryan Age 100 B C—300 A D)**

*சுங்கப் பேரரசு*

மௌரியர்களின் காலத்திற்குப் பின் குப்தர்களின் காலம் வரை உள்ளிட்ட காலப் பகுதி முழுமையையும் ஒரு பிரிவாகக் கொண்டு இப் பிரிவில் ஆராய்கிறோம். அப்படி ஆராய்வதே பொருத்தமுடையதாகும். குப்தர்களின் காலச் சிறப்புக்கு இக் காலத்தில் நடந்த அரசியல் நிகழ்ச்சிகள் அடிப்படையாகத் திகழ்ந்தன. மௌரியப் பேரரசிற்குப் பின் சுங்கர்கள் ஆட்சி நடைபெற்றது. நமக்குக் கிடைத்த ஒன்றிரண்டு சான்றுகளை வைத்துப் பார்க்கும்போது தொய்வுற்ற நிறுவன அமைப்பையே சுங்கர்கள் கொண்டிருந்தனர் என அறிகிறோம். சுங்க அரசின் முதல் அரசரான புஷ்யமித்திரர் அசுவமேத வேள்வியின் மூலம் இருமுறை தம்முடைய அரசியல் மேலாண்மையை வெளிப்படுத்தினாலும் அவர் தம்மைச் சேனாதிபதி என்றே அழைத்துக் கொண்டார்.

*அரச பதவி*

ஆனால் அவருடைய மரபினர் அரசர் என்று அழைத்துக் கொண்டனரே தவிர தேவனாம்பிரியா என்று அசோகரைப் போலத் தங்களைச் சிறப்புப் பெயர் ஏதும் கொண்டு அழைத்துக் கொள்ளவில்லை. இளவரசர்கள் அரசப் பிரதிநிதிகள் (Viceroy) எனப் பதவியில் அமர்த்தப்பட்டு ஆட்சித் துறையில் பயிற்சி அளிக்கப்பட்டனர். மௌரியர் காலத்தில் இருந்த முறைதான் இது என்றாலும் இக்காலத்தில் இளவரசர்கள் அரச பதவிக்குரிய பட்டத்தினைத் தங்கள் பெயரோடு இணைத்திருந்தனர் என்பது குறிப்பிடத் தகுந்தது. அமைச்சர் குழுவினர் அத்தகைய ஆளுநர்களின் பணிகளில் துணை புரிந்

தனர். சுங்க அரசர்களின் கீழ் அரசர்கள் சிலர் இருந்தனர். அத்தகைய அரசரான தனபூதி என்பவரைப் பற்றிப் பார்கூத் (Barhut) கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம். சுங்கர்களின் காலத்தில் அயோத்தி, கௌசாம்பி, மதுரா போன்றவற்றில் ஊர் ஆட்சி அரசுகள் இருந்தன. அவற்றின் அரசர்கள் நாண யங்களில் தங்கள் பெயர்களைப் பொறித்திருந்தனர் என்ப தோடு, அரச பட்டங்களையும் கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத் தகுந்தது.

*பேரரசர்கள்*

இந்தியாவை ஆண்ட கிரேக்க அரசர்கள் ஹெல்லனிய அரசுகளின், சிறப்பாக மேற்கு ஆசியாவின் செலூசிட் அரசு களின் முறையையே சில புதிய மாற்றங்களுடன் இந்தியாவில் புகுத்தினர். இந்த அரசர்கள் கிரேக்க அரசர்கள் கொண்டி ருந்ததைப் போன்ற பட்டங்களையே சூட்டிக் கொண்டாலும் சிலர் பேரரசர்கள் எனத் தங்களை அழைத்துக் கொண்டனர். முதன்முதலாக அவ்வாறு தம்மை அழைத்துக் கொண்டவர் மூன்றும் ஆண்டியாகஸ் என்பவர் ஆவார். செலூசிட் முறை எனப் படுவது இளவரசர், பேரரசரோடு இணைந்து ஆட்சி புரி கின்ற முறை ஆகும். இதனை யூதிடெமஸ் என்பவர் புகுத்தினர். அவருடைய இளைய மகன் அவ்வாறு ஆட்சி செய்தார். இது போல எத்தனையோ எடுத்துக்காட்டுகளைக் காட்டலாம்.

மிலிந்தபாண என்னும் நூலிலிருந்து மெனந்தர் என்னும் கிரேக்க அரசர் ஹெல்லனிய முறைப்படி அமைச்ச ரவையினைக் கொண்டிருந்தார் என அறிகிறோம். அம்முறைப் படி அரசருக்கு மட்டுமே கட்டுப்பட்டவர்களாக மாநில ஆளு நர்கள் விளங்கினர். இந்த ஆளுநர்கள் கிரேக்க மொழியில் 'ஸ்டிரேஜடீஸ்' (தளபதி) மெரிடார்க் (மாநிலத்தின் பகுதித் தலைவர்) என அழைக்கப்பட்டனர். இந்தோ கிரேக்க அரசர் களின் காலத்தில் சில நகரங்கள் அரைப்பங்கு சுய நிர்வாகம் பெற்றவைகளாகத் திகழ்ந்தன. இந்தியாவை ஆண்ட கிரேக்க அரசர்கள் தாங்கள் ஆட்சி செலுத்திய பகுதிகளில் தங்களு டைய நாட்டு மக்களைக் குடியேறச் செய்யவில்லை. பட்டயங் களிலிருந்தும், நாணயங்களிலிருந்தும் மதுராஸ்வத் பகுதி களில் திறை அரசுகள் (Tributary States) இருந்தன என அறி கிறோம். உஜ்ஜயினி தன்னுடைய நாணயங்களைத் தொடர்ந்து வெளியிட்ட நேரத்தில் கிரேக்கர்களால் கைப்பற்றப்பட்ட தட்சசிலத்தில் நாணயம் அச்சடிப்பது நிறுத்தப்பட்டது.

### கிரேக்கர்கள்

ஆட்சித் துறையைப் பொருத்தமட்டில் இந்திய நாட்டிற்கு எத்தகைய கொள்கையினைக் கிரேக்க அரசர்கள் பின்பற்றினார்கள் என ஆராய்கின்ற போது முதலாம் டிமெட்ரியஸ் இந்தியர்களையும், கிரேக்கர்களையும் பதவியில் அமர்த்தியும், மெனண்டர் முழுவதும் இந்தியர்களைக் கொண்டும் ஆட்சி செய்தனர் என அறிகிறோம். இந்தியர்களுக்குக் கிரேக்கர்கள் சம உரிமைகள் வழங்கினர் என்று திரு. யு. என். கோஷால் கருத்துத் தெரிவிக்கின்றார். முதலாம் டிமெட்ரியஸ் இருமொழிகளில் நாணயங்களை வெளியிடுகின்ற புதிய முறையினைப் புகுத்தினர். மெனண்டர் இந்திய நகரங்களைத் தம் தலைநகர்களாக்கினர்.

### குடியரசுகள்

கிரேக்கப் பேரரசின் அழிவும் வீழ்ச்சியும் கிழக்குப் பஞ்சாப், மேல்கங்கைஆகிய பகுதிகளில் வாழ்ந்த பழமையான மக்களுக்குப் புதிய அரசுகளையும், குடியரசுகளையும் உருவாக்குகின்ற வாய்ப்பினை வழங்கின. அவ்வாறு உருவாக்கப்பட்ட அரசுகள் சில கி. பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டு வரை நிலைத்தன. **குனிந்தர்கள், அமோகபூதி** என்பவரின்கீழ் சிவாலிக் மலைக் குன்றுகளின் அடிவாரத்தில் புதிய அரசைத் தோற்றுவித்தனர். அமோகபூதி என்னும் அரசர் இராஜா, மகாராஜா போன்ற பட்டங்களைப் பெற்றிருந்தார். அவுதும்பரர்கள் இராஜன் எனவும், இராஜ இராஜன் எனவும் அழைத்துக்கொண்டனர். போரிடும் மரபினரான யௌதேயர்கள் நீண்ட காலம் நிலைத்திருந்த குடியரசைத் தோற்றுவித்தனர். யௌதேயர்களைப் போலவே குடியரசு அமைப்பினைக் கொண்டிருந்தவர்கள் அர்ஜுனயனர்கள். கி. மு. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் பல குடியரசுகளைப் பற்றி அறிந்தாலும் அவை பெயரளவிலேதான் இருந்தன.

### சாக-பஹ்லவர்கள்

சாகர்கள் பஹ்லவர்களின் ஆட்சி கிரேக்கர்களின் ஆட்சியின் தொடர்ச்சியாக வட இந்தியாவில் அமைந்தது. பார்த்திய வம்சத்தினிடமிருந்து பெறப்பட்ட சில கூறுகள் அவர்களுடைய ஆட்சியில் காணப்பட்டன. சாகர்களைப்பற்றிய குறிப்பினைக் காலகச்சார்யகதநாகா என்னும் ஜைனமதக் குறிப்பிலிருந்து அறிகிறோம். இந்தியாவின் வரலாற்றில் முதன்முதலாக

நாம் அறிகின்ற மௌஸ் என்னும் அரசன் கிரேக்கப் பட்டத் திற்குச் சமமான அரசன் அல்லது அரசர்க்கு அரசன் என்னும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டான். பின்னர் காந்தார நாட்டைக் கைப்பற்றியவுடன் அரசர்களின் பேரரசன் என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டதாக அறிகிறோம். மேற்கு ஆசியாவில் இருந்த செலூசிட்டுகளைப் போலச் சக வமிசத்து அரசர்கள் தங்கள் மைந்தர்களை இணை அரசர்களாக (co-rulers) நியமித்தனர். சக அரசர்கள் மைய ஆட்சித்துறை நிறுவனத்தை எவ்வாறு கிரேக்கர்களின் முறையைப் பின் பற்றினர்களோ அதைப் போலவே மைய ஆட்சித் துறை நிறுவனத்தினும் பின்பற்றினர். வடமேற்கில் சாகர்களும் பஹ்லவர்களும் ஸ்டிராடிஜஸ் எனப்படும் இராணுவத்துறை ஆளுநர்களையும், மெரிடார்க் எனப்படும் மாகில ஆளுநர் களையும் கொண்டிருந்தனர். சாகபஹ்லவர்களின் காலத்திய மாகில ஆளுநர் க்ஷத்ரபா என அழைக்கப்பட்டார். க்ஷத்ரபா (Kshatraba) என்னும் சொல்லானது க்ஷத்திரபவன் என்னும் பாரசீகச் சொல்லின் வடமொழித் திரிபுச் சொல்லாகும். இந்த க்ஷத்திரபா என்னும் சொல்லிலிருந்து தோன்றியது மகா க்ஷத்திரபா என்னும் சொல்லாகும்.

### க்ஷத்திரபா மரபு

சாக பஹ்லவர்களின் காலத்தில் ஆளுநர்களும், திறை செலுத்தும் அரசர்களும் சிறப்பிடம் வகித்தனர். நாணயங் களில் ஒருபுறம் பேரரசரின் பட்டங்கள் கிரேக்க மொழியிலும், மற்றொரு புறம் ஆளுநர்கள், திறை அரசர்கள் ஆகியோரின் பட்டங்கள் பிராகிருத மொழியிலும் பொறிக்கப்பட்டுள்ளன. சாகப் பேரரசின் மௌஸ் என்னும் அரசருக்குப் பின்னர் க்ஷத்திரபா மரபினர் தோன்றினர். அம் மரபின் ஆளுகின்ற அரசர் **மகாக்ஷத்திரபர்** எனவும், அவருடைய சந்ததியினர் **ஸ்வாமின், க்ஷத்திரபர்** ஆகிய குறைந்த பட்டங்களைக் கொண்டவர்களாகவும் விளங்கினர். முதன்முதலாக இந்தியர் களை ஆட்சித் துறையில் சேர்த்துக் கொள்வதை நடைமுறைக் குக் கொண்டு வந்தவர்கள் சாகர்களே ஆவர். இவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் முதன்முதலாக இந்தியர்கள் பொரு ளாளர்கள், ஆளுநர்கள் ஆகிய பதவிகளை வகித்தனர்.

### குஷாணர்கள்

அரச பதவியினை உயர்நிலைக்கு உயர்த்தியவர்கள் குஷாணர்களே. குஷாணர்களின் முதல் அரசர் குஜுலாகட்

பீஸஸ். அவர் பிரிந்து தனித் தனியே இருந்த ஐந்து சிற்றரசு களையும் ஒன்றுபடுத்தி அவற்றின் மீது தம்முடைய அதிகாரத் தை நிலைநாட்டினார். நீண்டகாலம் ஆட்சி செய்த அவர் தேவன் என்னும் பொருளைத் தருகின்ற யப்கு அல்லது யவ்வா என்னும் பட்டத்தினையே ஆட்சிக் கால ஆரம்பத்தில் கொண்டிருந்தார். அதுமட்டுமின்றி உரோம முறையில் நாண யங்களை வெளியிட்டு அந் நாட்டு அரசர்களின் உருவத்தினை நாணயங்களில் பொறித்திருந்தார். பார்த்தியா, தட்சசிலம் ஆகியவற்றினை வென்ற பின்னரே மகாராஜன் என்னும் பட்டத்தினைச் சூட்டிக் கொண்டார்.

### முதலாம்கட்பீஸஸ்

முதலாம் கட்பீஸஸ் எண்பது வயதில் இறை எய்தினர். இவருடைய மைந்தர் பீமாகட்பீஸஸ் அதற்குப் பின் அரியணை ஏறினர். இவர் இந்தியாவின் மீது ஆதிக்கம் செலுத்தினர். பஞ்சாப் மற்றும் கங்கைப் பள்ளத்தாக்கின் ஒரு பகுதி இவருடைய அரசின் ஒரு பகுதியாக விளங்கியது. பேரரசர்க் குரிய சிறந்த அரசர்க்கு அரசர், அரசர்க்கு அரசர், மீட்பவர் ஆகிய பட்டங்களை இவர் சூட்டிக் கொண்டார்.

### தேவபுத்திரன்

ஆனால் இவருக்குப்பின் வந்த கனிஷ்கர் முதலாம் கட் பீஸஸ், இரண்டாம் கட்பீஸஸ் ஆகியோரைப் போலக் கிரேக்க முறைகளைப் பின்பற்றவில்லை. கனிஷ்கரின் பேரரசுப் பட்டம் *மகாராஜாதிராஜ தேவபுத்திரர்* எனப்படும். *தேவபுத்திரர்* என்னும் சொல் (Tien tzu) டையன்-சு என்னும் சீனச் சொல்லி னடியாகப் பிறந்தது எனக் கருதப்பட்டாலும், இந்திய மக்களி டையே தெய்வீகத்தன்மை வாய்ந்த வகுப்பைக் குறிக்கும் சொல்லாகவே அது பயன்பட்டது என்று கருதப்படுகிறது. குஷானர்களின் காலத்தில் அரசரின் அலுவல்கள் பாதித் தெய்வீகத்தன்மை வாய்ந்தவையாக மாறியதைக் காண கிறோம்.

### க்ஷத்திரபா

குஷானர்களின் ஆட்சித்துறையினைப் பற்றி நமக்கு மிகக் குறைந்த அளவே செய்திகள் கிடைத்துள்ளன. மாநில ஆட்சியில் *மகாக்ஷத்திரபா*, *க்ஷத்திரபா* எனப்படுபவர்கள் அரசைத் தொடரச் செய்தனர். குஷானர்களின் ஆட்சியில் ஒரு பகுதி அந்நியக் கூறுகளையும், ஒரு பகுதி இந்தியக்கூறு

களையும் கொண்டதாக விளங்கிற்று. குஷானர்கள் இருவகையான இராணுவ அலுவலர்களைக் கொண்டிருந்தனர். மகாதண்டநாயகா, தண்டநாயகா என அவர்கள் அழைக்கப்பட்டனர். அந்நிய அதிகாரிகள் பலர் குஷானர்களின் காலத்தில் பணியாற்றினர். அவர்கள் வட மேற்கிலும், இந்திய அதிகாரிகள் நாட்டினுள்ளும் பணியாற்றினர். குஷானர்களின் காலத்தில், அவர்களுக்கு முன்பு இருந்த அரைத் தன்னாட்சி பெற்றிருந்த நகரங்கள் காணப்படவில்லை. மரபு வழியிலான தலைவர்களைப் பற்றி இவர்கள் காலத்தில் கேள்விப்படுகிறோம்.

### புதிய குடியரசுகள்

குஷானப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பஞ்சாப்பிலும், இராஜபுதனத்திலும் பல குடியரசுகள் தோன்றின. கி. பி. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த குனிந்தர்கள், கி. மு. முதல் நூற்றாண்டில் அரசர்களின் ஆட்சியின் கீழ் இருந்தனர் என்று கண்டோம். இக் காலத்தில் அவர்கள் குடியரசு மக்களாயினர். இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் மூன்றாம் நான்காம் நூற்றாண்டிலும் யௌதேயர்கள் டேராடூன் முதல் இராஜபுதனம் வரை உள்ள பகுதிகளில் சுதந்திரம் பெற்ற குடியாட்சியினைக் கொண்டவர்களாக விளங்கினர். யௌதேயர்கள் இராணுவ, ஊரியல் தலைவர்களை மகாராஜா, மகாசேனாதிபதி என்று அழைத்தனர். யௌதேயர்களைப் போல இரண்டாம் நூற்றாண்டிலிருந்து நான்காம் நூற்றாண்டுவரை சுதந்திரக் குடியரசு நாட்டினராகத் திகழ்ந்தவர்கள் மாளவர்கள் ஆவர். அவர்கள் வெளியிட்ட நாணயங்களே இதற்குச் சான்று பகர்கின்றன.

### பிராமணக் கோட்பாடு

குடியரசுகள் பற்றிய விளக்கங்களை நாம் இலக்கியங்களின் துணைக்கொண்டு அறியலாம். இதுவரையில் வட இந்தியாவில் இருந்த ஆட்சித் துறை நிறுவனங்களைப்பற்றிக் கண்டோம். இனிக் கிழக்கு, மேற்கு இந்தியப் பகுதிகளில் இருந்த முறைகளைக் காண்போம். கி. மு. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டில் கலிங்க தேசத்தை ஆண்ட அரசர் காரவேலர் ஆவார். அவ்வரசர் வெளியிட்ட ஹத்திக்கும்பாப் பட்டயங்களிலிருந்து கிழக்கிந்தியாவில் இருந்த ஆட்சித் துறை நிறுவனங்களைப்பற்றியும் அவருடைய ஆட்சிமுறைக் கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவைபற்றியும் அறிகிறோம். கார

வேலர் ஜைன சமயத்தைச் சார்ந்தவராய் இருந்தபோதிலும், ஆட்சித்துறைக் கொள்கைகளில் பிராமணக்கோட்பாடுகளையே பின்பற்றினர். காரவேலர் சக்கரவர்த்தி என்னும் பட்டத்தினைப் பெற விரும்பினர். அவருடைய அரசியல் சாசனம் ஒன்றில் அவரைச் சக்கரவர்த்தி என்றே குறித்துள்ளார்.

### புதிய பட்டங்கள்

மேற்கிந்தியாவைப் பூமகன், சஸ்தன என்னும் இருவர் ஆண்டனர். அவர்கள் மகாக்ஷத்திரபா, க்ஷத்திரபா என ஏற்கெனவே இருந்த பட்டப் பெயர்களோடு இராஜன் என்னும் அரச பதவிப் பெயரினையும் சேர்த்துக் கொண்டனர். இவை தவிர ஸ்வாமின், பத்ரமுகா, சுக்ரிஹிதனமன் என்னும் பட்டங்களையும் பெற்று இருந்தனர். ஆட்சித் துறையில் அமாத்தியர், சச்சிவர் எனப்படும் இரு இந்திய அலுவலகப் பதவிகளைக் கொண்டிருந்தனர். சாகர்கள் காலத்திலிருந்த மற்ற உயர் அதிகாரிகள் சேனபதி, மகாதண்டநாயகா ஆகியோர் ஆவர்.

### பிராகிருதம் பயன்படல்

மேற்கிந்தியாவைச் சார்ந்த சாக ஆட்சியாளர்களுக்கும் மற்ற அந்நிய ஆட்சியாளர்களுக்கும் உள்ள வேறுபாடு இதுதான். முந்திய க்ஷத்திரவர்கள் தங்களுடைய பெயர்களையும், பட்டங்களையும் கிரேக்கம், உரோமானியம், கரோஸ்தி ஆகிய முறையில் அமைத்திருந்தனர். ஆனால் பின்னல் வந்தவர்கள் பிராகிருத மொழியினைப் பயன்படுத்த ஆரம்பித்தனர்.

### தென்னிந்தியா

தென்னிந்தியாவில் நிலவிய முறைகளைப்பற்றி இனி ஆராய்வோம். தென்னிந்தியாவில் முதல் வரலாற்றுப் பேரரசை நிறுவியவர்கள் சாதவாகனர்கள் ஆவர்கள். இராஜன் என்னும் பட்டத்தினைக் கொண்டிருந்தாலும் சாகர்களோடு ஏற்பட்ட தொடர்புகளின் விளைவாக ஸ்வாமின் என்னும் பட்டத்தையும் பெற்றனர். கௌதமிபுத்திர சதகர்ணி இராஜ ராஜா எனவும் அவரும் அவருடைய மகனும் மகாராஜா எனவும் அழைக்கப்பட்டனர். அரசியர் தேவி எனவும் சிற்சில சமயங்களில் மகாதேவி எனவும் அழைக்கப்பட்டனர். சாதவாகனர்களின் ஆட்சித் துறை அமைப்பில் ஒரு புதிய நிகழ்ச்சியினைக் காண்கிறோம். அரசியர்கள் பொது வாழ்க்கையில் பங்கு கொண்டதே அப்புதிய நிகழ்ச்சி.

*சாதவாகனர்*

இந்திய அரசியல் மரபு தெரிந்த அதிகாரிகள் சாதவாகனர்களிடம் பணிபுரிந்தனர். அமாத்தியர்கள் என்பவர்கள் பொதுவான வகுப்பு அதிகாரிகளாக இருந்தனர். சாதவாகன அரசர்களில் ஒருவர் உருவாக்கிய இராஜமாத்தியர்கள் எனப்படும் உயர் அதிகாரிகள் வருவாய்த்துறை அதிகாரிகளாகப் பணி புரிந்தனர். அமாத்தியர்கள் செயல் துறை அலுவல்களிலும் பொருளாதாரத் துறை அலுவல்களிலும் தவிர மற்ற அலுவல்களிலும் பணியாற்றினர். சாதவாகனர் காலச் சான்றுகளிலிருந்து சேன கோபர் எனப்படும் தளபதியையும், அஸ்வவராகர் எனப்படும் குதிரைப் படையினரைப்பற்றியும், மகாசேனபதி என்பவரைப்பற்றியும் அறிகிறோம். மகாசேனபதி பதவிக்கு உயர் குடியைச் சேர்ந்தவர்களும் அமர்த்தப்பட்டனர்.

*நாட்டாட்சி*

மௌரியர்களின் காலத்தில் மாவட்ட ஆட்சியினர் அகரங்கள் என அழைக்கப்பட்டனர்; சாதவாகனர்களின் காலத்தில் அமாத்தியர்கள் என அழைக்கப்பட்டனர். மேற்கிந்தியக் குகைச் சாசனங்கள் மூலமாக நாட்டின் ஆட்சியைப் பற்றி அறிகிறோம். எழுத்து மூலமாக அன்றி, வாய் மூலமாக அரசர் தெரிவித்தவைகளை மாவட்ட அதிகாரி மக்களுக்கு வெளிப்படுத்தினர். கொடைகள் பற்றிய சாசனங்களில் கொடுக்கப்பட்ட தேதி, கொடுத்தவர், பெற்றுக் கொண்டவர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. சாதவாகனர்களின் கீழ் இருந்த திறை அரசுகள் சுயாட்சி புரிந்தன. சாசனங்களிலும் நாணயங்களிலும் இருந்து மகாரதிகள், மகா போஜர்கள் எனப்படும் திறை செலுத்தும் அரசர்களைப் பற்றி அறிகிறோம்.

**இக்ஷுவர்கள்**

சாதவாகனர்களுக்குப் பின்வந்த **இக்ஷுவாகர்கள்** சாதவாகனர்களின் முறையைச் சிறிது மாற்றத்தோடு பின் பற்றினர். **இக்ஷுவ** அரசர்கள் இராஜாக்கள், மகாராஜாக்கள் என அழைக்கப்பட்டபோது அரசி மகா தேவி என அழைக்கப் பட்டார். இக்ஷுவர்கள் மகா சேனபதி, மகா தண்ட நாயகர் எனப்படும் சாதவாகனர் காலத்து உயர் பதவிகளை வைத்திருந்தனர். இத்துடன் மகாதலவாரம் எனப்படும் உயர் நீதிபதிப் பதவியினையும் உருவாக்கினர். அரசு மாவட்டங்

களாகப் பிரிக்கப்பட்டு இராஷ்டிரம் என அழைக்கப்பட்டது. இராஷ்டிரத்தில் பொறுப்பாளர்களாயிருந்த அதிகாரிகள் பற்றி நாம் ஏதும் அறிய இயலவில்லை.

ஜெயவர்மன் என்னும் இக்ஷுவா அரசன் **இராஜா** என்றும் **மகாராஜா** என்றும் அழைக்கப்பட்டான். உயர் அதிகாரிகளாக **மகா தண்ட நாயகர், மகா தலவாரம்** ஆகியோர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சாதவாகனர்களின் முறையை ஜெயவர்மன் பின்பற்றியதாக அறிகிறோம். மாவட்ட அதிகாரிகள் அமாத்தியாயா என்றழைக்கப்படுவதற்குப் பதிலாக வியாப்ரிதா என அழைக்கப்பட்டனர்.

### இராஜன்

. சாதவாகனர்களின் மரபில் தோன்றிய ஒரு பிரிவின் அரசர்கள் இராஜன் என்னும் பட்டத்தைக் கொண்டிருந்தனர். நாட்டின் அதிகாரிகள் அவர்கள் ஆட்சியில் அமாத்தியர்கள் என அழைக்கப்பட்டனர். இறை அரசினர் மகாரத்தி, மகாபோஜர் என அழைக்கப்பட்டனர். கிராமங்கள் சாதவாகனர்களின் காலத்தில் இருந்த முறையில் தலைவர்களின் பொறுப்பில் இருந்தன. அரசு வழக்கம் போல அகரம் என அழைக்கப்பட்டது. அவற்றின் பொறுப்பில் இருந்த அதிகாரிகள் பற்றித் தெளிவாகத் தெரியவில்லை.

### முடிவுரை

இத்தகைய பின்னணியினைக் கொண்டதாகவே நாம் குப்தர்களின் ஆட்சியினை அடுத்த அத்தியாயத்தில் காண இருக்கிறோம். மௌரியர்களின் காலத்திற்குப் பின் குப்தர்கள் காலம் வரை உள்ள இக் காலத்துச் சான்றுகள் ஆட்சித் துறை அமைப்பைப் பற்றித் தெளிவான வரலாற்றை நமக்கு அளிக்கவில்லை. குப்தர்களின் காலத்தில்தான் நமக்கு ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன. இதுவரையில் மௌரியர்களுக்குக் பின்னர் இருந்த ஆட்சி அமைப்புத் துறை பற்றிய நம் ஆய்விற்கும், இனி வரும் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ஆய்விற்கும் வேறுபாடு உள்ளது. இவ் வேறுபாடு நமக்குக் கிடைக்கின்ற சான்றுகளாலேயே ஏற்படுகிறது. இதுவரையில் தெளிவின்றி அனுமானத்தின் பேரிலே தான் நாம் வரலாற்றினைத் தொகுத்து இருக்கிறோம். போதிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டால் இன்னும் அதிக விளக்கத்தைப் பெறலாம்.

# 12. குப்தர்களின் காலம்

## (Guptan Age)

*மௌரியப் பேரரசுக்குப் பின்*

மௌரியப் பேரரசின் வீழ்ச்சியின் பின்னர் அத்தகைய செல்வாக்குமிக்க அரசுகள் ஏதும் தோன்றிடாது, சிற்சில காலமே நிலைத்த அரசுகள் பல தோன்றின. அத்தோடு அந்நியப் படையெடுப்புகள் பலவற்றை இடையில் இந்தியா சந்திக்க நேரிட்டது. குப்தர்களின் ஆட்சிக் காலம் ஆட்சி அமைப்பு முறை வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றிய காலம் என்று குறிப்பிடலாம். குப்தர்களின் ஆட்சிக் காலம் சுமார் முன்னூற்று ஐம்பது ஆண்டுகள் ஆகும். இந்தக் காலத்தில் அவர்கள் அரசியல் துறையிலும், சமயத் துறையிலும் கலைத் துறையிலும் அரும்பணி ஆற்றித் தங்களது ஆட்சிக் குட்பட்ட பகுதியை உன்னத நிலைக்கு உருவாக்கிடப் பெரும் முயற்சிகள் எடுத்துள்ளனர். நிலையற்றதும் அந்நியர்களின் ஆட்சிக்குட்பட்டதுமான ஒரு காலக் கட்டத்திலிருந்து சிறப்புமிக்க அமைதி நிறைந்த ஒரு காலத்தினுள் நாம் நுழைகின்றோமென்றால் அக் காலம் குப்தர்களின் காலமாகத்தான் இருக்கும். குப்தர்களின் ஆட்சிக் கால முதல் பகுதி பொற்காலம் என்று அழைக்கப்பட்டது எனில் அதன் சிறப்புச் சொல்லாமலே விளங்கும். இலக்கியம், கலை, அறிவியல் ஆகியவற்றின் மிக உயர்ந்த நிலையும், வளர்ச்சியும், மென்மையுடன் திறமை சேர்ந்த ஆட்சியும், பொதுவாக மக்களின் செழுமையான நிலையும் முற்கால இந்தியாவின் இயல்பு கடந்த புகழ்சான்ற காலம் அது என்பதை மெய்ப்பிக்கின்றன.

*சமயப்பொறை*

குப்தர்களுக்கும் மௌரியர்களுக்கும் இடையே ஒரு வேறுபாட்டை நாம் இக் காலத்தில் காணலாம். குப்தர்களின்

காலத்தில், முற்போக்கும், சமயச் சார்பற்றதுமான ஒரு கருத்து வளர்ச்சி அடைந்தது. முற்போக்கும், சமயச்சார் பற்றதுமான கொள்கையை முற்றும் உணர்ந்துகொண்ட குப் தர்கள் சமயப் பொறைக் கொள்கையைப் பின்பற்றினர். நாட்டில் நிலவிய பல்வேறு சமயங்களில் எந்த ஒரு சமயத் திற்கும் அரசில் சிறப்பான ஆதரவு அளிக்க மறுக்கப்பட்டது. பல சமயக் கோட்பாடுகள் இயங்கும் இந் நாட்டில் பொறை உணர்வுடன் ஆட்சி செலுத்தினர். மௌரியர்களின் அரசு ஏதாகிலும் ஒரு சமயத்தைச் சார்ந்ததாகவே இருந்தது என் பதனை நாம் குறிப்பிட வேண்டும். மௌரியர்கள் சமயக் கொள்கையின் விளைவாக ஒரு சமயத்தவர், மற்றொரு சமயத் தவர் மீது வெறுப்புக் கொண்டனர். பிராமண சமயத்திற்கும் புத்த சமயத்திற்கும் இடையில் பகைமை உருவாயிற்று. அரசர்கள் ஒரு குறிப்பிட்ட சமயத்தின் ஆதரவாளர்களாகவே இருந்தனர். ஆனால் குப்தர்களின் நிலை அவ்வாறு இல்லை. அவர்கள் எந்த ஒரு சமயத்தின் ஆதரவிற்கும் உட்பட்டு ஆட்சி நடத்த மறுத்து எல்லாச் சமயங்களையும் சமமாக நடத்த முயன்று அதில் வெற்றியும் கண்டனர். இந்த வகையில் அவர்களின் நடத்தை குப்த அரசுக்கு மதிப்பைத் தேடித் தந்தது. சமயத்தினால் அவர்கள் ஆளப்படுவதற்குப் பதிலாகச் சமயத்தை அவர்கள் இயக்கினர். இதில்தான் அக் காலத்தின் சிறப்பு இருக்கிறது. சமயத்தின் பிடியில் சிக்காது சமயத் தைத் தங்கள் பிடிக்குள் வைத்திருந்தனர்.

## சமயத்திற்கு அப்பாற்பட்ட அரசியல் நெறி

குப்த அரசர்கள் திறமையும் ஆற்றலும் மிக்கவர்களாக விளங்கினார்கள். தங்களுடைய நுண்ணறிவின் திறத்தால் போற்றத் தக்க மாறுதல்களை ஆட்சித்துறையில் செய்தனர். அசோகரைப் போன்ற சிறந்த அரசர்கள்கூடக் கொள்கை களைப் புத்த சமயத்தின் நிழலிலிருந்து வகுத்தபோதிலும் சமயத்திற்கு அப்பாற்பட்டவர்களாக இருந்து அரசியல் நெறி யோடு ஆட்சி செய்தனர். சமயப் பொறை உணர்வு மட்டும் குப்தர்களிடம் இல்லாதிருக்குமேயானால் மௌரியர்கள் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் இவர்கள் காலத்திலும் நடைபெற்றிருக்கும். ஆனால் குப்தர்கள் பிராமணீயத்தையோ, வைணவத்தையோ வெறுக்கவில்லை. அரசர்களின் சமயக் கொள்கைக்கும் அரசு முறைக்கும் தொடர்பு இருப்பதை நாம் இதுகாறும் கண்ணுற்றமையாலேயே இதனை ஆராய வேண்டிய தாயிற்று.

### அரசரின் அதிகாரம்

குப்தப் பேரரசர்களின் காலத்தில் அரசரின் அதிகாரமும் மதிப்பும் உயர்ந்தன. அரசர் பூமியில் இறைவனின் அவதாரம் என்று கருதப்பட்டார். அரசனுடைய மதிப்பு உயர்ந்தபடியால் அவர் சிறிய பகுதிக்கு அரசராக இருந்தாலும், பெரிய பகுதிக்கு அரசராக இருந்தாலும் தெய்வீக உரிமையால் (Divine Right) அவருக்குச் சிறப்பு இருந்தது. தெய்வீக உரிமை பெற்றவர்கள் ஆனவுடன் அரசர்கள் திக்கு விஜயம் செய்யப் புறப்பட்டனர். பல பகுதிகளை வென்று திறமையான அரசை அமைத்தனர். வெல்ல முடியாத அதிகாரம் அரசரின் தெய்வீக உரிமையோடு சேரலாயிற்று. அரசர் தெய்வீக உரிமை உடையவராக மட்டுமின்றி அதிகாரம் வாய்ந்தவராகவும் குப்தப் பேரரசர்களின் காலத்தில் விளங்கினர் என்பதே சிறப்பு அம்சமாகும். குப்தர்கள் புன்மையற்றதும் சமயச் சார்பற்றதுமான (Secular) ஒரு முழுமையான சமயப்பற்றற்ற மனப்பான்மையைப் பின்பற்றினர்கள். குப்தர்களின் அரசு சமயம் சார்ந்த அரசாக ஏதாவது ஒரு சமயத்தவர்களுக்கு மட்டும் சலுகைகளை வழங்கிவிட்டுப் பிற சமயத்தவர்களுக்குச் சலுகை வழங்காத அரசாக இல்லை. எல்லாச் சமயத்தவர்களுக்கும் குப்தர்களின் அரசில் சம வாய்ப்புகள் வழங்கப்பட்டன. எனவே குப்தர்கள் அரசு சமயச் சார்பற்ற (Secular state) அரசு என அழைக்கப்படுகிறது. அரசு சமூகம் ஆகியவற்றின் மனப்பான்மை எவ்வாறு இருந்தது என்பதனை எடுத்துக் காட்டுவது சட்டமேயாகும். இங்குச் சட்டமே (Law) சிறப்பிடம் வகித்தது என்பதனை அறிகிறோம்.

### இரண்டாவது மகதப் பேரரசு

குப்தர்களின் ஆட்சிக் காலம் இரண்டாவது மகதப்பேரரசின் தொடக்கம் என்று கூறப்படுகிறது. முதலாம் சந்திர குப்தரால் இரண்டாவது மகதப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது. லிச்சவி இளவரசியான குமார தேவியை மணந்து கொண்டதன் விளைவாகச் சந்திரகுப்தரின் அதிகாரம் பெருகியது. சந்திரகுப்தர் மகத அரசின் ஒரு சிறிய பகுதியைக் கொண்ட ஒரு சிறிய அரசோடு தொடங்கி அயோத்தியும் மகதமும் அதில் அடங்குமாறு அதன் எல்லையை விரிவடைச் செய்தார். முதலாம் சந்திரகுப்தருக்குப் பின்னர் சமுத்திர குப்தர் வட இந்தியாவையும் தென்னிந்தியாவையும் வென்று இமயமலை அடிவாரம் வரை பரவியிருந்த பேரரசை

நூற்றாண்டுகள் ஆட்சி செய்தார். இவரது ஆட்சியில் இலங்கைக்குக் கட்டுப்பட்டு ஆட்சி புரிந்துவந்த நள, பாஞ்சால, மாளவ அரசுகளை வெற்றி கொண்டதன் காரணத்தால் இவர் இந்திய நெப்போலியன் என அழைக்கப்பட்டார். இரண்டாம் சந்திரகுப்தர் திருமண உறவுகள் மூலமாக மேலும் மேலும் நாடுகள் பலவற்றைச் சேர்த்துத் தம் எல்லையை மேற்குக் கடற்கரை வரை நீட்டினர். உஜ்ஜயினி பேரரசின் கேந்திர மாகவும் இரண்டாவது தலைநகரமாகவும் விளங்கிற்று.

சந்திர குப்தருக்குப் பின் குமார குப்தர் ஆட்சிக்கு வந்தார். ஆனால் குப்தர்களின் புகழ் உஷ்யமித்திரர்களின் படையெடுப்பால் தற்காலிகமாக மங்கியது. குப்தர்களின் மங்கிய செல்வாக்கிற்குப் புத்துயிர் அளித்தவர் ஸ்கந்த குப்த ராவார். அழிந்து கொண்டிருந்த குப்தப் பேரரசின் புகழ் மீண்டும் நிலை பெறச் செய்த பெருமை இவருடையதேயாகும். குப்த அரசர்கள் பலர் குறைந்த அதிகாரத்தோடு பல தலைமுறைகளாக ஆண்டனர். ஹூணர்கள் இந்தியாவிற்குள் புகுந்து குப்தப் பேரரசின் அழிவிற்குக் காரணமாயினர்.

### கூட்டரசு

குப்தப் பேரரசு தன்னகத்தே திறை செலுத்தும் அரசர்கள் பலரைக் கொண்ட கூட்டரசாக (Federation) வியங்கிற்று. வலிமையும், திறமையும் உள்ளவர்களாக அரசர்கள் விளங்கியதனால் தங்களின் கீழ் உள்ளவர்களை முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முடிந்தது என்பதை அறியும்போது அரசரின் தனிப்பட்ட இயல்பையே குப்தப் பேரரசு சார்ந்து இருந்தது எனவும் அரசர்கள் சொந்தத் திறமையோ வலிமையோ இல்லாமல் போய்விட்ட போது அரசு முடிவுற்றது எனவும் அறிகிறோம். இதனுடைய விளைவு என்னவெனில் சுயேச்சை அரசுகள் தோன்றியதேயாகும்.

இனிக் குப்தர்களின் காலத்தில் அரச பதவியின் தன்மை எவ்வாறு இருந்தது என்பதனைக் காண்போம்.

### அரச பதவி

அரசர்கள் சிறப்புப் பெயர்கள் பலவற்றைக் கொண்டனர். குப்த அரசர்கள் பரமேசுவரன், மகாராஜாதிராஜா, பரம பக்தாரகர் ஆகிய பட்டங்களைக் கொண்டனர். இப் பட்டங்களுக்குரிய பொருள்கள் என்ன என்று ஆராயும்போது பரமே

சுவரன் என்றால் தன்னிகரற்ற தலைவன் எனவும், மகாராஜா திராஜா என்றால் அரசர்களில் தலைசிறந்தவன் எனவும், பரம பக்தாரகர் என்றால் மிக்க வணக்கத்திற்குரிய தலைவன் எனவும் அறிகிறோம். அலஹாபாத் சாசனம் ஒன்றில் சமுத்திரகுப்தர் மானிடர்க்குரிய கடமைகளைச் செய்வதில் மட்டுமே அரசர் மனிதராவார்; மற்றபடி உலகில் வாழும் இறைவனே அரசர் என்று குறித்துள்ளார். கயா செப்பேடுகளில் குபேரன், இந்திரன், வருணன், அந்தகன் போன்ற கடவுளர்களில் ஓர் உருவமே சமுத்திர குப்தர் என்று குறிப்பிடபட்டுள்ளதை அறியும்போது அரச பதவியின் தெய்வீகச் செல்வாக்கை அறிகிறோம். ஓரளவு தனிப்பட்ட சூழ்நிலைகளாலும் ஓரளவுத் தொன்மை மாட்சியுடைய மரபுகளாலுமே அரச பதவியின் குண இயல்புகள் உறுதி செய்யப்பட்டன.

## தகுதிகள்

பிற்காலத்தில் முஸ்லிம்கள், முகலாயர்கள் ஆகியோருடைய ஆட்சிமுறை அமைப்பினை நாம் ஆராயும்போது முதலில் பிறந்தவரே (First born) அரசராக வேண்டும் என்னும் விதிமுறை ஏதும் இல்லை என்பதைக் காண்கிறோம். அதைப் போலவே குப்தப் பேரரசின் காலத்திலும் ஒருவர் முந்திப் பிறந்துவிட்ட காரணத்தால் அரச பதவியைப் பெற்றுவிட முடியாது. இறக்கும் தருவாயில் உள்ள அரசன் தனக்குப்பின் வாரிசாக யாரையாகிலும் நியமனம் செய்தான். சமுத்திர குப்தர், ஸ்கந்தகுப்தர், ஆகியோர் இறக்கும் தருவாயிலிருந்த அரசரின் மற்ற மைந்தர்களை விலக்கிவிட்டுத் தெரிவு செய்யப் பட்டனர் என்பதனை ஜுனாகாத் சாசனம் உறுதிப்படுத்துகிறது. சில வேளைகளில் அமைச்சர்களே தெரிவு செய்யும் நிகழ்ச்சிகளும் குப்தர்களின் வரலாற்றில் காணப்படுகின்றன. நாம் தெரிந்து கொள்கின்ற உண்மை, முந்து பிறப்பு நிலைச்சட்டம் (Law of Primogeniture) குப்தர்களிடம் இல்லை என்பதே. அது மட்டுமன்றி அரசுரிமையைப் பொருத்தவரை அரசவையின் வலிமை மிக்க கட்சியின் ஆதரவு அல்லது அமைச்சர்களின் ஆதரவு எப்போதும் தேவைப்பட்டது என்பதனையும் அறிகிறோம்.

## மரபு வழி அலுவலர்

அரசர் அசிந்தைய புருஷர் எனவும் தேவர்களுக்குச் சமமானவர் எனவும் கருதப் பட்டதோடு அவர் வாழ்கின்ற உலகத்தவர்களுக்குத் தர்ம தேவராயும் விளங்கினர். அது

மட்டுமின்றி வருண, இந்திர, அந்தகருக்குச் சமமாகவும் கருதப்பட்டார். அரசருக்கு வழி வழி வந்த அலுவலர்கள் பணி புரிய இருந்தனர். அரசரைப் போலவே அலுவலர்களும் மகா சம்-திகி-விக்ரகிகா, மகாவலாதிகிரித்தா, மகாசேனுபதி, மகாசர்வ தண்டநாயகா என்பன போன்ற பட்டங்களைப் பெற்றிருந்தனர். அரசனுக்குரிய அலுவலர்களின் பதவிகள் மரபு வழியே வந்தவை என்பதற்கு நம்மால் சான்று காட்ட இயலும். **மகா சம்திவிக்ரகிகா ஆரியதத்தர்** என்னும் ஒருவர் **அமாத்தியவக்ரர்** என்பவரின் கொள்ளுப்பேரர் என்று கூறப்படுகிறது. விஷ்ணு வர்த்தனரின் அமைச்சராக இருந்த தக்ஷன் என்பவர் ஓர் அமைச்சர் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

### குறைபாடுகள்

அரசின் மையநோக்கிய ஆட்சிமுறை யமைப்பில் (Centralised State) குறைபாடுகள் பல காணப்பட்டன. இக் குறைபாடுகளை நமக்கு உணர்த்தியவர்கள் பாஹியானும், யுவான் சுவாங்குமே ஆவர். பாஹியானின் கூற்றின்படி அரசு வருவாய்த் துறை ஆட்சி வலிமையற்று இருந்தது எனத் தெரிகிறது. யுவான் சுவாங்கின் மூலம் குறுநிலத் தலைவர்கள் அளித்த திறைகளையும் பரிசுப் பொருள்களையும் அரசர் நம்பியிருந்தார் எனவும், விளையுளின் ஒரு பகுதி வாரமாகக் கொடுக்கப்பட்டது எனவும், அரசர் தம் அலுவலர்களுக்கு நிலமானியம் வழங்கியமையால் அவர்கள் வலிமைமிக்கவர்களாகவும் பெரும்பாலும் அரசரது அதிகாரத்தை எதிர்ப்பவர்களாகவும் வளர்ந்தனர் எனவும் அறிகிறோம்.

### பேரரசின் தன்மை

பேரரசின் தன்மையைப் பற்றி ஆராயும்போது அது திறை செலுத்தக் கூடிய சிற்றரசுகளைக் கொண்டதாக இருந்தது என அறிகிறோம். போரில் தோற்ற அரசர்கள் தங்கள் அரசுகளைப் பேரரசுகளின் கையில் விட்டுவிட்டு அடிமைகளாக வாழவில்லை. மாறாகச் சுயேச்சை அரசர்களாகத்திறை செலுத்திப் பேரரசின் கீழ் ஆட்சி நடத்தினர். காளிதாசரின் நூலிலிருந்து இதனை அறிகிறோம். ரகு என்னும் அரசன் குடியிருப்பு வட்டாரங்களை வெற்றி கொண்டபோது அரசர் மகேந்திரனைக் கைது செய்து விடுதலை செய்ததன் மூலம், மகேந்திரன் சுயேச்சை அரசன் என்னும் பெருமையை இழந்தான் என்பதைத் தவிர நாட்டை இழக்கவில்லை என்னும் உண்மை தெரிகிறது.

இதைத் தவிர அலகாபாத் கல்வெட்டும் மேற்கூறப்பட்டதை உறுதிப் படுத்துகிறது.

### ஆட்சி இயல் நிறுவனம்

வாகாடர்களின் காலத்திற்குப் பின் அசுவமேத வேள்வியினைச் செய்தவர் சமுத்திர குப்தரேயாவார். குப்த அரசர்கள் திக்கு விஜயம் செய்வதன் மூலமாகவும், அரச தந்திரத்தாலும், அசுவமேத வேள்வியாலும் பெற்ற வெற்றி நிலை பெறுவதற்கு ஒரு காரியம் செய்ய வேண்டியிருந்தது. பேரரசை முழுமையாக வைத்துக் கொள்ள ஆட்சி இயல் நிறுவனத்தை அமைக்க வேண்டியிருந்ததே அக் காரியமாகும்.

எவ்வாறு ஆட்சி இயல் நிறுவனம் அமைக்கப்பட்டது? டாக்டர் பேணி பிரசாத் என்னும் வரலாற்று அறிஞர் அரசர் மைய அதிகாரியாகத் தம் அமைச்சர்களின் உதவியோடு ஆட்சி செலுத்தினார் என்று உரைக்கிறார். மகாதண்ட நாயக், மகாசந்தி விக்கிரகிகா, மகாபிரதிஹாரா என்போர் போன்ற பேரரசு அதிகாரிகளின் துணையோடு மையப் படுத்தப் பெற்ற ஓர் அரசு முறை இருந்ததாகக் கருதப்படுகிறது. டாக்டர் முகர்ஜி என்பார் மக்கள் சுயேச்சையாக இருந்ததோடு, மைய அரசின் அலுவலர்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டனர் எனவும், அரசு மென்மைத் தன்மை உடையதாக இருந்தது என்றும் கூறுகின்றார்.

### ஆட்சிப் பிரிவுகள்

குப்தர்கால அரசு ஒருமுக அரசின் கூட்டமைப்பாக அமையவில்லை. மாறாகக் கூட்டரசு நாடாகவே (Federation) இருந்தது என்று கூறப்படுகிறது. அதாவது மாநிலம், மாவட்டம், கிராமம் என அரசு பிரிக்கப்படவில்லை. ஆட்சியமைப்புகளின் பலவகைகளைத் தங்க வைத்துக் கொள்வதும், இடத்துக்கு இடம் ஏற்படும் மாறுபாடுகளை மதிப்பதும், ஒருவரின் மேதகு நிலையை எல்லார் மீதும் புகுத்துகிறதுமான அரசு முறையாக அது இருந்தது. பேரரசுக்குட்பட்ட எல்லாப் பகுதிகளின் பற்றுறுதியையும், தம் நாட்டையும், அரசருக்குச் சொந்த நிலத்தையும் முழுத் திறமையோடு ஆட்சி செய்ய மரபு வழிவந்த பற்றுறுதியும் திறமையும் மிக்க அலுவலர்களையும், திறை செலுத்தும் இராஜாக்களையும், மகா இராஜாக்களையும், சாமந்தர்களையும், பெரும் சாமந்தர்களையும் அரசர் தாராளமாகப் பயன்படுத்திக் கொண்டார். சிலர்

அரசரின் சொந்த நாட்டிலும், சிலர் பேரரசின் உறுப்பு நாட்டிலும் பொறுப்பேற்றுப் பணி புரிந்தனர்.

### மாநில ஆளுநர்கள்

குப்தர்களின் கீழ் மாநில ஆளுநர்கள் மைய அரசினுல் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்குத் **தட்பாதபரிகிரகிதா** என்றும் **உபாரிக மகாராஜா** என்றும் பட்டப் பெயர்கள் வழங்கப்பட்டன. மாநில ஆளுநர்கள் **விஷயபதி** என அழைக்கப்பட்ட மாவட்ட அதிகாரிகளே அமர்த்தும் அதிகாரம் பெற்றிருந்தனர். விஷயபதிகள் தங்கள் தலைமையகங்களை **அதிஷ்த்தனங்கள்** என அழைக்கப்பட்ட நகரங்களில் வைத்திருந்தனர். **விஷயபதிகளின் ஆட்சிப் பணிகளில் சம்வியவகாரா** அல்லது ஆலோசகர் கழகம் ஒன்று உதவியது. இக் கழகத்தில் **நகர சிரஸ்தின்** எனப்படும் நகரின் பெருஞ் செல்வந்தர், **சாரத வாகர்** எனப்படும் தலைமை வணிகர், **பிரதம குலிகா** எனப்படும் தலைமைக் கைவினைஞர், **பிரதம காயஸ்தா** எனப்படும் தலைமை எழுத்தர் ஆகியோர் பங்கு பெற்றனர். மாநில அரசுக்கும் அரசருக்கும் உள்ள தொடர்பு ஆளுநர் அரசரால் அமர்த்தப் பெற்றவர் என்பதுதான்.

### பெயரளவிலான மைய அரசு

எல்லா மாநிலங்களுக்கும் **அரசர் கோப்தர்** எனப்படும் ஆளுநரை அமர்த்தினர் என்பதை அடிப்படையாகக் கொண்டு பேரரசு முழுவதும் மாநிலங்களாகவும், மாநிலங்கள் மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. மைய அரசினுல் கட்டுப்படுத்தப்பெற்ற பல அதிகாரிகளால் மாநிலங்களும், மாவட்டங்களும் ஆட்சி செய்யப்பட்டன என்னும் முடிவிற்கு வந்துவிடக்கூடாது. பேரரசின் மைய அரசு பெயரளவிலேதான் இருந்தது. ஏனென்றல் **பர்னதத்தன், விஸ்வவர்மன்** என்போர் போன்ற மாநில ஆளுநர்கள் தாங்கள் விரும்பிய பதவிகளுக்குத் தம் மைந்தர்களை அமர்த்தினர். குப்தப் பேரரசில் மையப்படுத்தப்பட்ட அரசு இருக்கவில்லை. பேரரசில் தேசம் அல்லது புக்தி அதாவது மாநிலம், விஷயம் அதாவது மாவட்டம் போன்ற ஏற்றத் தாழ்வான குழம்பிய ஆட்சி அமைப்பு முறை இருந்தது. அரசரின் செல்வாக்கு மண்டலத்தைப் பின்பற்றி மாநிலங்கள் அமைந்ததால் ஒவ்வொரு முறையும் புதிய மாநிலங்கள் தோன்றின.

### அலுவலர்களின் தன்மை

நாம் ஆட்சித் தலைவர்களின் கடமை பற்றியும் மைய நிறுவனத்துடன் ஆட்சித் தலைவர்கள் கொண்ட தொடர்பு பற்றியும் ஏதும் உறுதியாகச் சொல்லமுடியாது. அவர்களின் கடமை பற்றி அறியச் சிறப்புப் பட்டங்களைத் துணையாகக் கொள்ளவும் முடியாது. ஏனென்றால் **மகாவலாதிகிருதா, மகாசப்தலாகிருதா** என்பன போன்ற சொற்களில் காணும் முன்னடை மொழியாகிய மகா என்னும் சொல், இந்த அலுவலர்கள் பேரரசு அலுவலர்களுக்கோ அல்லது மேல்நிலை அரசர்க்கோ உரியவர்கள் என்பதைக் காட்டவில்லை. இதைப் போல மகா என்பது சேர்க்கப்படாத **வலாதிகிருதா, அத்சபடலாதிகிருதா** என்பன போன்ற சொற்கள் திறை செலுத்துபவர்களுக்கு உரியன என்று குறிப்பிடவும் இல்லை. இவர்களில் சிலர் பேரரசு அலுவலர்களா அல்லது திறை செலுத்தும் தலைவர்களின் அலுவலர்களா அல்லது பேரரசின் மத்தியில், மாநிலத்தில், மாவட்டத்தில், கிராமத்தில் இருந்த அலுவலர்களைப்போல் வெவ்வேறு அலுவலர்களா, திறை செலுத்தும் அரசர்களின் இதே போன்ற அல்லது வேறு வகையான அலுவலர்களா என்பதையும் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை. அதுமட்டுமன்றிப் பேரரசு அலுவலர்களின் பட்டங்களும் திறைசெலுத்தும் அரசர்களின் பட்டங்களும் நமக்கு இரண்டு முறையான ஆட்சி இருந்ததா இல்லையா என்னும் ஐயப்பாட்டை உருவாக்குகின்றன.

### அலுவலர்களின் படிநிலை முறை

நாடு முழுவதும் தன்னாட்சிப் பரப்புகள் புள்ளிகளைப் போல் சிதறலாக இருந்தன. ஆகையால் பேரரசின் நிலப் பிரிவுகள் ஆட்சிப் பரப்புகளாக இருந்தன. • அவைகளில் அரசன் தனக்கு வேண்டியவர்களை அமர்த்தித் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் ஓர் உயர்ந்த நிலையில் உள்ளவர் போல் செய்யவில்லை. நாம் அலுவலர்களின் படிநிலை முறையை ஆராய்கின்றபோது அது தெளிவற்றதாக இருக்கிறது. சிலர் உயர்ந்த அதிகாரிகளாகவோ அல்லது மாநில ஆளுநர்களாகவோ உள்ளனர். மாநிலங்களையும் மாவட்டங்களையும் கட்டுப்படுத்தக் குறுநிலத் தலைவர்கள் அரசரால் அமர்த்தப் பட்டனர். அரசருக்கு அடங்கி நடந்திடுமாறு மற்றத் தலைவர்களை ஆக்குவது இவர்கள் கடமையாயிற்று. குறுநிலத் தலைவர்கள் அவர்களது பகுதிக்கு ஆளுநர்களாக அமர்த்தப்

பட்டனர். பேரரசின் பகுதிகளைப் பேரரசின் சார்பில் கட்டுப் படுத்தக் குறுநிலத் தலைவர்கள் அமர்த்தப்பட்டனர் என்றாலும் அவர்கள் இக் கால மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் போலல்லாது ஓர் அரசியல் பிரதிநிதியாகவே செயல்பட்டனர்.

### பேரரசின் நிதியியல்

பேரரசின் நிதியியல் முறை எவ்வாறு இருந்தது என ஆராயும் போது அத்தகைய முறை ஏதும் இல்லை என்ற முடிவுக்கு வருகிறோம். எல்லா ஆளுநர்களும், விஷயபதிகளும் குறுநிலத் தலைவர்களிடமிருந்து திறை வசூலித்தனர். ஆனால் அதுவே பொதுவான முறையாக இல்லை. மாவட்ட அலுவலர் **பிரதம காயஸ்தகர்** என்பவரைத் தலைவராகக் கொண்டு எழுத்தர்களையும், காயஸ்தர்களையும் கொண்ட பெரிய தொரு செயலகத்தைக் கொண்டிருக்க வில்லை. பேரரசு நிலப் பரப்பை ஒப்பிட்டுக் கிடைக்கக்கூடிய உறுதியற்ற செய்திக் குறிப்புகளைக் கொண்டு ஒரு மையப் படுத்தப்பட்ட பேரரசு அமைப்பு இருந்தது என்று சொல்லிவிட முடியாது. **உத்ரங்கா** எனப்படும் நிலவரியும், **உபாரிகா** என்னும் வரியும் வசூலிக்கப்பட்டன.

### குடியரசுகள்

இந்த அளவோடு பொதுவானவற்றை நிறுத்திக் கொண்டு சிறப்பான செய்திகளை ஆராய்வோம். குப்தர்களின் காலத்தில் குடியரசுகளும் இருந்தன. மத்ரர்கள், குனிந்தர்கள், யௌதேயர்கள், அர்சுனயனர்கள், மாளவர்கள் ஆகியோரின் குடியரசுகள் குப்தர்களின் காலத்தில் இருந்த குடியரசுகள்.

### அமைச்சரவை

அரசருக்கு உதவிட இளவரசர்கள், உயர் அலுவலர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோர் அடங்கிய அவை ஒன்று இருந்தது எனவும் அதனுடைய பணி ஆட்சிக்குரிய வாரிசை ஏற்றுக் கொள்வது அல்லது மறுப்பதாக இருந்தது எனவும் தெரிகிறது. காளிதாசர் மந்திரி பரிஷத் என்னும் அமைப்புப் பற்றிக் குறிப்பிடுகின்றார். காளிதாசரின் கருத்துப்படி கஞ்சுகி என்பவர் அரசனுக்கும், அவைக்குமிடையே பிரதிநிதியாகப் பணியாற்றினார் என்று அறிகிறோம். அமைச்சர்களின் குழுக்கள் எடுத்த முடிவுகள் அரசருக்கு **அமாத்தியர்** என்பவர் மூலம் அறிவிக்கப்பெற்றன. பிரச்சினைகளை அமைச்சர்கள்

ஒன்றுகூடி ஆராய்ந்து முடிவெடுத்தனர். அரசர் இறுதியில் தம் முடிவினை அறிவித்தார். அரசருக்கு ஆலோசனை கூறுவது அமைச்சர் குழுவின் பணியாயினும் இறுதியில் அது அரசரின் முடிவிற்குக் கட்டுப்பட வேண்டியிருந்தது. ஒரு வகையினர் அயல்நாட்டுக் கொள்கையையும், இரண்டாவது வகையினர் நிதியியலையும், மூன்றாவது வகையினர் நீதித்துறையையும் கவனித்தனர் என மூவகை அமைச்சர்களைப்பற்றிக் காளிதாசர் உரைக்கின்றார். அமைச்சர்கள் திறமையுடையவர்களாய் இருந்தனர். அமைச்சர்கள் நியமனம் பெரும்பாலும் மரபு வழியிலேயே இருந்தது.

### முக்கியத் துறைகள்

வருவாய் வசூலித்தலும், காவல் துறையும் ஒன்றாகவே இணைக்கப்பட்டிருந்தன. முக்கியமான துறைகளின் அலுவலர்கள் **உபாரிகள், தசபாராதிகர், சௌரோத்தரனிகர், தண்டிக தண்டபாஷிகர், கௌல்மிகர், ஷேத்திர பிரந்தபாலர், கோட்டபாலர், அங்காரச்சகர், அயுக்த விநியுக்தர், ராஜுகர்** ஆகியோரே. **உபாரிகா** என்னும் சொல் பலவிதமாகப் பொருள் கொள்ளப் படுகிறது. பட்டாச்சாரியா என்பார் நகர ஆளுநர்களின் தலைவரே **உபாரிகர்** என்று குறிப்பிடுகின்றார். டாக்டர் சாப்ரா என்பாரின் கருத்துப்படி உபாரிகர் நீதித் துறையையும் ஆட்சித் துறைப் பணிகளையும் மேற்கொண்டனர்.

### இராணுவம்

இனி இராணுவத் துறை பற்றி ஆராய்வோம். பட்டயங்களில் இராணுவ அதிகாரிகள் **சேனாதிபதி, மகா சேனாதிபதி, பாலதிகிரிதர், மகாபாலதிகிரிடர், தண்ட நாயகர், சாந்தி விக்ரகிகர், மகா சந்தி விக்கிரகிகர், கோப்தா** என்றெல்லாம் அழைக்கப்பட்டனர். பிஜயகாத் கல்சாசனத்தில் மகா சேனாதிபதி பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சடுபா என்னும் அலுவலர் பற்றியும் சாசனங்களில் குறிப்புக் காணப்படுகிறது. ஆனால் அவருடைய பணி பற்றிய விளக்கம் கிடைக்கவில்லை. வனபாலா என்னும் அலுவலர் பற்றியும் அத்தகைய நிலையே உள்ளது.

### நீதித்துறை

நீதித் துறை அலுவலர்களைப் பற்றி அறியச் சாசனங்களையே துணைக் கொள்ள வேண்டியுள்ளது. பொதுவான பணிகளையும், நீதித் துறைப் பணிகளையும் மேற்கொண்டவர் மகா

தண்ட நாயகர் என்பவராவார். பதிவுகளைப் பாதுகாத்து வந்தவர் மகாக்ஷபதாலிகா என்பவராவார். டாக்டர் சேலடோர் என்பாரின் கருத்துப்படி அதிகரணங்கள் எனப் பெயர் பெற்ற அலுவலர் நிறுவனங்கள் இருந்தன. நிலம் பற்றிய வழக்குகளைத் தீர்த்த மன்றமே **அதிகரணா** எனப் பட்டது. தர்ம நீதியை நன்கு அறிந்த அலுவலர் தர்மாதிகாரர் என அழைக்கப் பட்டார்.

### தண்டனைகள்

பாஹியானின் கூற்றின் படிக் கடுமையான தண்டனை விதிக் கப்படவில்லை; அபராதமே விதிக்கப்பட்டது என்று அறி கிறோம். ஆனல் காளிதாசர், விசாகதத்தர் ஆகியோரின் சான்றுகள் குற்றவாளிகள் யானைக்காலால் இடறப்பட்டுக் கொலை செய்யப்பட்ட செய்தியை அறிவிக்கின்றன. அரசனைக் கொலை செய்தலுக்கான சதியில் ஈடுபட்டவர்களின் கண்கள் குருடாக்கப்பட்டன. ஒருவர் குற்றவாளியா இல்லையா என அறியச் சோதனை முறை கையாளப்பட்டது. கடுமையான தண்டனை விதிக்கப்பட்டதன் நோக்கம் குற்றவாளிகளைத் திருத்துவதற்காக அன்றி மற்றவர்களைத் திருத்துவதற் காகவே என்னும் செய்திகளும் கிடைத்துள்ளன.

### ஆட்சிப் பிரிவுகள்

பேரரசில் புக்தி, பிரதேஷா, போகா என்னும் பிரிவுகள் இருந்தன. மாநிலங்களில் விஷயங்கள் என்னும் பிரிவுகள் இருந்தன. விஷயங்களை அதிகரணாவின் உதவியோடு விஷய பதி நிருவகித்தார். விஷயத்தின் ஒரு பகுதி விதி என அழைக் கப்பட்டது. கிராமங்களின் ஒன்றிப்பு பேதகா, சாந்தகா எனவும் கிராமத்தின் சிறிய பிரிவு அக்ரஹாரம், வட்டம் என வும் அழைக்கப்பட்டன. மாநில ஆட்சியின் தலைவர்கள் **உபாரிஹர், கோப்தர், போகிகர், போகபதி, ராஜஸ்தானியர்** என்றெல்லாம் அழைக்கப்பட்டனர். விஷய பதிக்கு மகாதா ரர்கள் எனப்படுவோரும், கிராமிகர்கள் எனப்படுவோரும், **சௌல்கிகர்கள், கௌல்மிகர்கள், துருவாதிகரணிகர்கள், ஆயுத்தர்கள், திராங்கிகர்கள், புஷ்டபாலர்கள்** ஆகியோரும் துணை புரிந்தனர்.

### நகர கிராம ஆட்சி

நகர ஆட்சியின் தலைவர் **புரபாலர்** அல்லது **நகர ரட்சகர்** என அழைக்கப்பட்டார். **புரபால உபாரிகர்** என்பவர்

பல்வேறுபட்ட நகரங்களின் தலைவர்களைக் கட்டுப்படுத்தினர். நகரத்தைப் **பரிஷத்** என்பவர் ஆட்சி செய்தார். தரும சாலை களின் கண்காணிப்பாளராக **அவஸ்திகர்** என்பவர் பணி யாற்றினர்.

ஆட்சித் துறையின் அடிப்படையான பிரிவு கிராமமே யாகும். கிராமத்தின் தலைவர் **கிராமிகா** என அழைக்கப் பட்டார். இவர் எவ்வாறு அப் பதவியில் அமர்த்தப்பட்டார் என அறிய இயலவில்லை. மரபுரிமை, பொதுமக்களின் கருத்து, அரசின் அனுமதி, ஆகியவை காரணமாக இவர் அமர்த்தப் பட்டிருக்கலாம். கிராமிகாவோடு கிராம மூதறிஞர்கள் அல்லது **மகாதாரர்கள்** இருந்தனர் எனவும் கிராமத் தலைவராக கிராமிகாவும், மகாதாரரும் கிராம ஆட்சியின் மையக் கருவாக அமைந்தனர் எனவும் சொல்லப்படுகிறது. டாக்டர் பேணி பிரசாத் மகாதாரர்கள் எனப்படுபவர்கள் கிராம ஆட்சியில் அலுவலற்ற முறையில் ஆலோசனை வழங்கியிருக்கலாம் என்று குறிப்பிடுகின்றார்.

பிரகஸ்பதியின் வாயிலாக மக்களுக்கு உகந்ததாக அல்லது அல்லாததாக இருந்தாலும் சட்டங்களுக்கும் வழக் காறுகளுக்கும் ஒப்பக் கிராம மூதறிஞர்களால் பிறப்பிக்கப் படுகின்ற கட்டளைகளை அரசர் ஏற்க வேண்டுமெனவும் மகா தாரர்கள் ஒருவருக்கொருவர் முரண்படுகிற போதுதான் அரசர் தலையிட்டுத் தம் தீர்ப்பைப் புகுத்துவார் எனவும் அறி கிறோம்.

*கிராம அலுவலர்*

கிராம அரசு **தலவாடகர்** எனப்படும் கணக்கர்களையும், **தூதர்கள்** எனப்படும் செய்தி கொண்டுசெல்வோரையும், **சீமாகர் மகாரி** எனப்படும் கிராம எல்லை வகுப்போரையும், **கரணிகர்** எனப்படும் எழுத்தர்களையும் கொண்டிருந்தது. கிராமமானது அரசுக்குச் சேரவேண்டிய வருவாய்களையும் பல்வேறு வரிகளையும் வசூலித்தது. **பரிஷத்** என்று சொல்லப் படும் கிராம அவையினைப் பற்றிய குறிப்புக் காணப்படு கின்றது. ஆனால் பரிஷத்தின் பணிகளைப் பற்றி நம்மால் ஏதும் அறிந்திட இயலவில்லை.

டாக்டர் அல்டேக்கரின் கருத்துப்படிக் குப்தப் பேரரசு சிறப்பாக அமைக்கப் பட்டிருந்தது. குப்தர்களின் காலத்திற் குப் பின்னரும் குப்த அலுவலர்களின் பதவிகள் தொடர்ந்து

இருந்தன. கால சூரிகளே முதன் முதலில் குப்த ஆட்சி முறையினுல் பயனடைந்தவர்கள். அதைப் போலவே வாதாபியை ஆண்ட சாளுக்கியர்கள், மால்கெட் பகுதியை ஆண்ட இராட்டிரகூடர்கள், கல்யாணியைச் சார்ந்த மேலைச் சாளுக்கியர்கள் ஆகியோரும் குப்த அரசர்களின் ஆட்சி முறையினுல் பயனடைந்தவர்கள் ஆவார்கள்.

குப்தப் பேரரசைத் தொடர்ந்து வந்த சிறப்புமிக்க ஹர்ஷரின் நிர்வாகமும் குப்த ஆட்சியை ஒத்திருந்தது.

# 13. குப்தர்களுக்குப் பின்

## (Post-gupta age)

### ஹீணர்களின் வருகை

சென்ற அத்தியாயத்தில் குப்தர்களின் ஆட்சி அமைப்பு முறைகளைப்பற்றிக் கண்டோம். ஹர்ஷரின் ஆட்சிக் காலம் ஓரளவிற்குக் குப்தர்களின் ஆட்சி, அமைப்பு முறையினை நினைவு படுத்துவதாகவே உள்ளது. ஹீணர்களின் வருகை குப்தப் பேரரசைச் சிதைத்தது. பேரரசைச் சிதைத்ததோடு அல்லாது பேரரசு அமைப்பையே அவர்களின் வருகை அசைத்தது. அதன் விளைவாகச் சிறிய முடியரசுகள் பல எழுந்தன. சிறிய முடியரசுகளும் போரில் ஆழ்ந்தன. ஆனாலும் சிறிய முடியரசுகளுள் வலிமை வாய்ந்த அரசுகள்கூட அமைதியாக இருக்க முடியவில்லை. இத்தகைய கூறுகளின் மீதுதான் ஹர்ஷர் தமது பேரரசை நிறுவினார்.

### கலப்பின் விளைவு

ஹர்ஷரின் பேரரசு மிகக் குறைந்த காலமே நிலைபெற்று இருந்ததால் ஓர் அரசியல் சக்தியாக (political power) எந்த நிலையான அடையாளத்தையும் விட்டுச் செல்ல இயலவில்லை. ஹீணர்கள் ஹர்ஷராலேதான் முழுமையாக அடக்கப் பட்டனர். ஹீணர்களின் அரசியல் கீழ்ப்படிந்த நிலை பிரமாணச் சமுதாயத்தில் முழுமையாகக் கலப்பதற்கு முன்னோடி நிகழ்ச்சியாக இருந்தது. ஹீணர்கள் தம்முடன் அமைவுற்ற சமயத்தையும் சமூக அமைப்பையும் கொண்டுவரவில்லை. ஆயினும் உண்மையில் ஹீணர்களின் கலப்பினால் அப் போதைய சமூகம் மீண்டும் இளமை பெற்றது. ஹீணர்களில் பலர் க்ஷத்திரிய சாதியிலும், பலர் கீழ்ச்சாதியிலும் கலந்து விட்டனர். ஹீணர், கூர்ஜரர், மெய்த்ரகர் ஆகியோர் கூட்டங் களில் உயர்ந்த சாதியினராக விளங்கியவர்கள் இராஜபுத் திரர்கள் ஆனார்கள். தாழ்ந்த சாதியினர் கூர்ஜரர், அஹிர்ச்,

ஜாட்டுகள் ஆகிய குறைந்த மதிப்புநிலை இந்து சாதிகளாக வளர்ச்சி பெற்றனர் என்று டாக்டர் வின்சென்ட்ஸ்மித் கூறியுள்ளார். இக் கருத்தினைப் பலர் மறுக்கின்றனர்.

### குப்தப் பேரரசைப் போன்றநிலை

குப்தப் பேரரசில் தொடங்கிய முற்போக்கும் சமயச் சார்பற்றதுமான (secular) ஒரு கருத்து மேலும் வளர்ச்சியடைந்தது. மௌரியப் பேரரசு சமயச் சார்புடையதாய் விளங்கிற்று. அதாவது நாட்டின் பல்வேறு சமயங்களில் ஏதாவது ஒன்றுக்கு அரசு சிறப்பாதரவு அளித்தது. இதன் விளைவு பிராமண சமயத்திற்கும் புத்த சமயத்திற்கும் இடையில் பகைமை உணர்வு தோன்றியது. ஆனால் குப்தர்கள் இவ்வாறு செய்ய மறுத்தனர் என்று கண்டோம். குப்தர்களைப் போலவே ஹர்ஷரும் சமய ஆதரவிற்கு உட்பட மறுத்தார். எல்லாச் சமயங்களையும் சமமாக நடத்த முயன்று வெற்றிபெற்றார். ஒருவாறு அரசர்களின் இம் மனப்பான்மை அரசின் தனி மதிப்பை வலியுறுத்தியது. முற்காலத்தைப் போல் அரசு சமயத்தினால் இயக்கப்படுவதற்குப் பதிலாகச் சமயம் அரசினரால் இயக்கப்பட்டது.

இனி நாம் ஹர்ஷரின் காலம்பற்றிய சுருக்கமான மதிப்பீட்டினை மேற்கொள்வோம். ஸ்கந்தகுப்தர் கி.பி. 467-இல் இறந்தார். இவரது மறைவோடு இவருடைய குலப் பெருமையும் மறைந்தது. அதன்பின்னர் குழப்பமும் இருளும் சூழ்ந்த மற்றொரு காலம் தொடர்ந்தது. ஹூணர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தனர். ஹூணர்களால் அழிவுற்ற பேரரசிற்கும் ஹர்ஷரால் நிறுவப்பெற்ற பேரரசுக்கும் இடைப்பட்ட நூற்றாண்டு ஒரு நிலையற்ற காலமாகும்.

### அரசியல் நிலை

ஹூணர்கள், கூர்ஜரர்கள் ஆகிய வெளியார் தடுத்து நிறுத்த இயலாத வலிமையோடு இந்தியாவின் வாயில்கள் வழியாக உட்புகுந்தனர். ஆறும் நூற்றாண்டில் இவர்களின் தலைவர் தோரமானர் மாளவத்தில் தம் அரசை நிறுவினர். தோரமானர்க்குப் பின்னர் அவரது மகன் மிகிரகுலான் சியால் கோட்டைத் தலைநகராகக் கொண்டு பஞ்சாப்பிலிருந்து மாளவம் வரை அதிகாரத்தைப் பரப்பினர். மகத நாட்டின் குப்த அரசரும், மாளவத்தின் அரசர் யசோதர்மனும் மிகிரகுலானின் அதிகாரத்தை முறியடித்தனர். அதேசமயத்தில் மேற்கில்

இரானிய இனத்தவர் வாலாபியைத் தலைநகராகக் கொண்ட சுயேச்சை அரசை ஆண்டனர். கூர்ஜரர்கள் தெற்கு இராஜ புதனத்திலும், பரோச்சிலும், பீன்மலிலும் நாடுகளை ஏற்படுத் தினர். சாளுக்கியர் வாதாபியில் புதிய அரசை உருவாக் கினர். உள்நாட்டினராகிய வாகாடர்கள், மௌகாரிகள் போன்றோர்களால் தோற்றுவிக்கப்பட்ட நாடுகளும் இருந்தன. இவர்கள் செல்வாக்கோடு வாழ்ந்தனர். ஹர்ஷரின் தங்கை இராஜ்யஸ்ரீ மௌகாரி அரசருக்கு மணம் செய்விக்கப் பட்டமை இதற்குச் சான்றாகும். பாணரின் கூற்றிலிருந்து பல சுயேச்சை நாடுகள் இருந்ததை அறிகிறோம். இவைகளி லிருந்துதான் ஹர்ஷர் வட இந்தியாவில் பெரும் பகுதியைக் கொண்ட பேரரசை நிறுவினர்.

## ஹர்ஷரின் முன்னோர்கள்

ஹர்ஷரின் முன்னோர்களில் நரவர்த்தனன், இராஜ்ய வர்த்தனன், ஆதித்திய வர்த்தனன் ஆகியோரைப்பற்றியே நாம் அறிகிறோம். இவர்கள் குறுநில மன்னர்களாயிருந்தனரா இல்லையா என்பதை உறுதிசெய்ய இயலாவிடினும் இவர்கள் அனைவரும் மகாராஜா என்னும் பட்டத்தைப் பெற்றிருந் தனர் என்பது மட்டும் உறுதி. ஆனல் இவர்கள் மேலதி காரத்தை உறுதியாகப் பெற்றிருக்கவில்லை. பிரபாகவர்த் தனரே மகாராஜாதிராஜா என்னும் பட்டத்தைப் பெற்றுத் தம் முன்னோர்களைவிட அதிக அதிகாரத்தைப் பெற்றிருந்தார். வலிமையையும், அரச தந்திரத்தையும் ஒன்றாக இணைத்துப் பிரபாகவர்த்தனர் தம் குடும்பச் செல்வாக்கை உயர்த்தினர்; மாளவத்தின் இளவரசியை மணந்துகொண்டார். கன்னோசி அரசர் அவந்திவர்மன் மௌகாரியின் மகன் கரகவர்மனுக்குத் தம் மகள் இராஜ்யஸ்ரீயை மணம் செய்து கொடுத்தபோது இவருடைய அரசியல் உடன்பாடு உறுதிபெற்றது. ஹூணர் களை அடக்கிக் கூர்ஜரர், மாளவர், போன்ற மற்றவர்களின் மீது இவர் கணிசமான வெற்றிகளைப் பெற்றார்.

## ராஜ்ய வர்த்தனர்

பிரவாக வர்த்தனருக்குப் பின் அவருடைய மகன் இராஜ்ய வர்த்தனர் அரசுரிமையைப் பெற்றார். இராஜ்யவர்த்தனர் தம்முடைய தகப்பனாரால் உருவாக்கப் பெற்ற வல்லமைச் சமநிலை குலைவுறும் நிலையில் இருந்ததைக் கண்டார். இராஜ்ய வர்த்தனர் கொலை செய்யப்படவே அமைச்சர் அவையினரின் பகர ஆளாகிய தலைவர் பந்தி என்பார் பதினறு வயது

இளைஞனாக இருந்த ஹர்ஷர் எனப்படும் இராஜ்யவர்த்தனரின் தம்பியை அரியணை ஏற்றினார். பஞ்சாப் நீங்கலாக ஆனால் பீஹாரையும் வங்காளத்தின் பெரும்பகுதியைக் கொண்ட மேல்பாதி இந்தியா முழுவதையும் ஹர்ஷர் வென்று கீழ்ப் படுத்தினார். கன்னோசியைத் தம் நாட்டின் தலைநகராக்கினார். தம் தந்தையைப் போலவே அரச தந்திரத்தில் சிறந்து விளங்கினார். படைவழி, அரச தந்திரத்தின் சூழ்ச்சி, நய இணைப்பு, ஆகியவற்றால் ஒரு பெரும் பேரரசை நிறுவினார். இவர் சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசியுடன் போர் நடத்தியபொழுது கி.பி. 620-இல் ஒரேஒருமுறைதோல்வியுற்ற படியால் நர்மதை ஆறு இவரது பேரரசின் தெற்கு எல்லையா யிற்று. வட இந்தியாவின் மேலதிகாரத்தையும் மேல் அரசு நிலையையும் குறிப்பிடுகின்ற பரமபக்தாரஹர், பரமேசுவரர் போன்ற பட்டங்களை ஏற்றார்.

### அரச பதவி

பெருமைக்குரிய அரச பதவி அல்லது கோனாட்சி பற்றிய கடந்த கால மரபுகள் தெய்வீகச் செல்வாக்கையும் ஆளும் உரிமையையும்அரசர்க்குஅளித்தன. குப்தர்கள் முதல் ஹர்ஷர் வரை சுதந்திர அரசர்கள். ஒரு சில அரசர்களின் பற்றுறுதி யைப் பெற்றிருந்தனர் என்னும் நிலைக்கு உயர்ந்த இவர்கள் **பரமேசுவரன்** அதாவது தன்னிகரற்ற தலைவன், **மகாராஜாதி ராஜா** அதாவது அரசர்களில் தலைசிறந்தவன், **பரம பக்தா ரகர்** அதாவது மிக்க வணக்கத்திற்குரிய தலைவன் என்னும் பட்டங்களைப் பெறத் தவறியதில்லை. பிரபாகவர்த்தனரும், ஹர்ஷவர்த்தனரும் **பரமபக்தாரகர், மகாராஜாதிராஜா** என்னும் பட்டங்களை ஏற்றுக் கொண்டனர். யசோதர்மன்கூட ஜனேந்திரன் அதாவது மக்களின் தலைவன், இராஜாதிராஜா, பரமேசுவரன் போன்ற பட்டங்களை ஏற்றுக் கொண்டார்.

### அமைச்சர்களின் பங்கு

முந்துப் பிறப்பு நிலை பற்றிய சட்டம் ஏதும் இருக்கவில்லை. இராஜ்யவர்த்தனர் மறைவிற்குப் பின்னர் அமைச்சர்களால் ஹர்ஷர் பின் வாரிசாக ஒப்புக்கொள்ளப்பட்டார் என்பதி லிருந்து அமைச்சர்கள் தெரிவு செய்யும் உரிமையைப் பெற்றி ருந்தனர் எனத் தெரிகிறது. பாணரின் கருத்துப்படி ஹர்ஷர் தெரிவு செய்யப்பட்டதற்கு சிம்மநாடர் முக்கிய காரணமாக இருந்தார்என்று தெரிகிறது. இவ்வுண்மைகள் முந்துப்பிறப்பு நிலைச்சட்டம் இல்லை என்பதை மெய்ப்பிப்பதோடு அரசுரி

மையைப் பொருத்தவரையில் அரசவையின் வலிமை மிக்க கட்சியின் ஆதரவு அல்லது அமைச்சர்களின் ஆதரவு எப்பொழுதும் தேவைப்பட்டது என்பதையும் அமைச்சர்களின் அல்லது அரச அலுவலர்களின் அதிகாரம் பெருமளவு பெருகிற்று என்பதையும் இது சுட்டிக் காட்டுகிறது.

### உயர்பதவியாளர்

அரசனுக்குரிய அலுவலர்களின் பதவிகள் மரபு வழி வந்தவையாகவே உள்ளன. விஷ்ணுவர்த்தனரின் அமைச்சராக விளங்கிய தக்ஷன் என்பார் அமைச்சர் குடும்பத்தைச் சார்ந்தவர். அன்வயப்பிராப்தசாகில் அதாவது மரபுரிமையால் அமைச்சர் பதவியை அடைதல் என்னும் சொற்றொடரைக் கொண்டிருக்கும் உதயகிரிக் கல்வெட்டும் இதே முடிவைத் தான் சுட்டிக் காட்டுகிறது. அரசின் உயர் பதவியாளர்கள் தம் பெருஞ்செல்வாக்கிற்கும், அதிகாரத்திற்கும், ஓரளவு, தம் மரபுரிமை வழிவந்த பதவிக் காலத்திற்கும், ஓரளவு தம் சிறந்த தன் மதிப்பு நிலைக்கும் கடப்பாடு உடையவர்களாயிருந்தனர். பெரும்பாலோர் கீழ்நிலைத் தலைவர்களாயிருந்தனர். ஹர்ஷரின் போர் அமைதிக்கான தலைமை அமைச்சராகிய அவந்தி என்பார் ஒரு குறுநிலத் தலைவர் எனத் தெரிகிறது. ஹர்ஷரின் சகோதரரின் நண்பரும் குதிரைப் படையின் தலைவருமாகிய குந்தவரும் இப்படிப்பட்டவராக இருந்திருக்கலாம்.

### பேரவை

ஹர்ஷரின் பேரரசுக்கட்டமைப்பு இறைமையை உள்ளடக்கிக்கொண்டிருந்த திக்குவிஜயக்கோட்பாடு, பேரரசு மண்டலம், சக்கரம் போன்றவைகளின் அடித்தளமாக இருந்தது. சிலர் போரில் தோல்வியுற்று பிடிபட்டனர் என்றாலும் பின்னர் அவர்கள் திறை செலுத்தும் மன்னர்களாக்கப்பட்டனர். ஹர்ஷருடைய திக்குவிஜயத்தின் போது வெளியிட்ட அறிக்கையில் இது தெளிவாகத் தெரிகிறது. பேரரசின் கட்டளைக்குக் கீழ்நிலை அரசர்கள் பணிவதில் மேதகவு நிலையின் அடையாளம் அடங்கியிருந்தது. சில சமயங்களில் திறை செலுத்தினர். சில சமயங்களில் பணிவிசைவு தெரிவிக்க வந்தனர். பிரயாகையில் ஐந்தாண்டுக் கொருமுறை கூடிய ஹர்ஷரின் பேரவைக்கு இருபது கீழ்நிலைத் தலைவர்கள் வந்திருந்தனர். குப்தப் பேரரசுக்குப் பின்னர் அசுவமேத வேள்வியின் அடிப்படையிலான ஒரு திறை செலுத்தும் முறையை அமைக்க மாளவ, வங்காள, தென்னிந்திய அரசர்கள் முயன்றனர். இத்தகைய

முறையை அமைக்க ஹர்ஷர் அரச தந்திரத்தைச் சூழ்ச்சி நலத்தோடு பயன்படுத்துவதில் வெற்றி பெற்ருர். குப்தர்களுக்குப் பின் அசுவமேத வேள்வியை நிகழ்த்தியவர்களில் முதன்மையானவர் ஹர்ஷராவார். இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட அரசு செல்வர்க்கு மண்டலங்கள் அல்லது சக்கரங்கள் என்று பெயர் பெற்று அசைக்க முடியாத முறையில் ஹர்ஷருடைய மேதகு நிலையை நிலைப்படுத்தியது.

## மையப்படுத்தப்பட்ட அரசமுறை

திக்குவிஜயத்தால் அடைந்த செல்வாக்கு மண்டலம் அல்லது அரசர் பட்டத்திற்குப் பின், அதாவது அரச தந்திரத்தாலும் அசுவமேத வேள்வியாலும் அடைந்த வெற்றி, அரச மேதகவாளர் அல்லது சக்கரவர்த்திப் பேரரசு ஆகியவற்றை முழுமையாக வைத்துக்கொள்ள ஆட்சியியல் நிறுவனத்தை வரைவது முதன்மையான பொறுப்பாகும். இதைப் பொருத்தவரை மகாசந்திவிக்ரகிகா, மகாபிரதிஹாரா போன்ற பேரரசு அதிகாரிகளோடு மையப்படுத்தப்பட்ட ஓர் அரசு முறை இருந்தது என்று கருதப்படுகிறது. சில அரசர்கள் வெல்லப்பட்டும் அவர்களுடைய நாடுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. மற்றவர்களை வென்று அவர்களே ஆட்சி செய்ய அனுமதிக்கப்பட்டனர். எல்லைப்புற அரசர்கள் தாமாகவே பணிந்து சேவை, பரிவு, திறைகள் ஆகியவற்றை உவந்தளித்தனர். இவைகளைத் தவிரக் குறிப்பிட்ட தன்னுட்சி இனங்களும் இருந்தன. எனவே ஒரே படித்தானவையாக இப் பலவகையான நாடுகளை மாற்றி அமைக்க முடியவில்லை.

அரசன் தன்னுடைய ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள மாறுபட்ட முறைகளை மதித்தும் ஆட்சி அமைப்புகளில் பல வகைகளை விட்டுவிடாது கடைப்பிடித்தும் அவ்வாறு செய்கின்ற போது தன்னுடைய மேதகு நிலையை (Supremacy) விட்டுவிடாதும் ஆட்சி செலுத்த வேண்டியிருந்தது. பேரரசுக்குட்பட்ட நாடுகள் ஆள்கின்ற அரசின் மீது நம்பிக்கை கொள்ளவேண்டியிருந்தது. தலமாறுபாடுகளை மதிக்கிறதும் ஆட்சி அமைப்புகளில் பலவகைகளைத் தக்கவைத்துக் கொள்கிறதும் அதே சமயத்தில் ஒருவரின் மேதகுநிலையை எல்லார்மீதும் புகுத்துவதுமான அரசு முறையை வகுக்க வேண்டியிருந்தது. பேரரசிற்குட்பட்ட எல்லாப் பாகங்களின் பற்றுறுதிகளையும் தக்க வைத்துக் கொள்ள இது நாடும்—அடுத்துத் தம் நாட்டையும், அரசர்க்குரிய சொந்த நிலத்தையும் முழுத்திறமையோடு ஆட்சி செய்ய முற்படும் இந்த இரண்டு பணிகளையும் செய்ய மரபு

வழி வந்த திறமையும் பற்றுறுதியும் மிக்க அலுவலர்களையும், திறை செலுத்தும் ராஜாக்களையும், மேதகு கிலெ அரசர்களின் ஆட்சியோடு அரசர் தாராளமாகப் பயன்படுத்திக் கொண் டார்.

### மாண்புமிக்க சேவை

சிலர் அரசரின் சொந்த நாட்டிலும், சிலர் பேரரசின் உறுப்பு நாடுகளிலும் பொறுப்பேற்றனர். அரசருக்குத் திறை செலுத்தியவர்கள் மாண்புமிக்க சேவை செய்ய விரும்பி னர். இதனால் தான் ஹர்ஷரின் கல்வெட்டில் மகாசாமந்த மகாராஜா பாணரையும் மதுபன் கல்வெட்டில் மகாசாமந்தஸ் கந்தகுப்தனையும், சாமந்தமகாராஜா ஈசுவரகுப்தனையும் பேரர சின் அதிகாரிகளாக நாம் காண்கிறோம். அவந்தியின் தலைவர் ஹர்ஷரின் போர் அமைதிக்கான போர் அமைச்சர் என்று பாணர் குறிப்பிடுகின்றார். யுவான்சுவாங் மிக முக்கியமான சமயங்களில் குமாரராஜா துருவபட்டர் பெரும்பாலும் அரச ரோடு தான் இருந்தார் என்றும் கன்னோசியில் ஹர்ஷர் அரச முறையில் நுழைந்தபோது இவரைத் துருவபட்டர் வரவேற்றார் என்றும் கூறுகிறார்.

### பேரரசின் பிரிவு

பேரரசில் தேசம் (புக்தி) அதாவது மாநிலம், விஷயம் அதாவது மாவட்டம் போன்ற ஏற்றத்தாழ்வான குழம்பிய ஆட்சிப் பரப்பு முறை இருந்தது. அரசரின் செல்வாக்கு மண்ட லத்தைப் பின்பற்றி மாநிலங்கள் அமைந்ததால் ஒவ்வொரு சமயமும் புதிய மாநிலங்கள் தோன்றின. எடுத்துக்காட்டாக ஹர்ஷரின் காலத்தில் யமுனைக்கும் நர்மதைக்கும் இடைப்பட்ட நாட்டைக் கொண்ட அவ்வளவு பெரியதொரு மாநிலத்தை நாம் காணவில்லை. ஹர்ஷரின் சிரவஸ்தி புக்தியும் அஹிச்சத்திர புக்தியும் குப்தர்கள் காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை.

### பட்டங்கள்

ஹர்ஷரின் பேரரசு அலுவலர்களின் பட்டங்கள் பகட் டோசை உடையனவாகவும் கவர்ச்சிகரமாகவும் இருந்தன. எடுத்துக்காட்டாகப் பரிபிராஜகமகாராஜா ஹஸ்தின், சர்வ நாதர் போன்ற குறைந்த வலிமையுடைய அரசர்களின் பட்டங் களைப் போலப் பேரரசு அலுவலர்களின் பட்டங்கள் இருந்தன. நாடு முழுவதும் தன்னாட்சிப் பரப்புப் புள்ளிகளைப்போல் சிதற லாக இருந்தது. பேரரசின் நிலப் பிரிவுகள் ஆட்சிப் பரப்பு

களாக இல்லை. அவைகளில் ஆட்களை அமர்த்தி அரசர் மேதகவாளர் மத்தியிலிருந்து கட்டுப்படுத்தவில்லை. சக்கரவர்த்தியின் சொந்த அரசோடு திறை செலுத்தும் தலைவர்களில் சிலர் தொடர்புபடுத்தப்பட்டிருந்தனர் என ஹர்ஷரின் பன் சேகரச் செப்பேடு உரைக்கின்றது.

ஆட்சித் துறையின் மையச் சக்தியாக விளங்கியவர் அரசரே ஆவார். ஆட்சித் துறை இயந்திரம் செப்பமுறச் செயல்பட அரசரின் பொறுப்பு மிகவும் குறிப்பிடத் தகுந்தது என்பது ஹர்ஷரின் எண்ணம். ஹியூன்சாங்கின் கருத்துப்படி அரசர் விடாமுயற்சியுடையவர்.

### அரசரின் பணிகள்

அரசர் ஒரு நாளினை மூன்று பகுதிகளாகப் பிரித்து அதில் ஒரு பகுதியை நாட்டின் பணிகளைக் கவனிப்பதில் செலவழித்தார். சிறந்த ஆளுமை படைத்தவராக அரசர் விளங்கினர். அரசர் எப்பொழுதும் வேலையில் ஈடுபட்டவராயிருந்தமையால் மக்களுக்கும் வேற்று அரசர்களுக்கும் அரசரைச் சந்திப்பது மிகவும் கடினமாயிருந்தது.

அரசர் நாட்டின் ஆட்சிப் பகுதிகளைச் சுற்றிக் கண்காணித்தார். நகரப் புறங்களுக்கு மட்டும் அரசர் செல்லாது நாட்டுப் புறங்களுக்கும் சென்றார். மழைக் காலங்களில் மட்டுமே அரசர் தன் சுற்றுப் பயணத்தை ஒத்தி வைத்தார். அரசர் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது ஆங்காங்கே தற்காலிகக் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. அரசர் அவ்வாறு தங்கியிருந்த போது பொதுமக்கள் அரசரைச் சந்தித்துத் தங்கள் குறைகளைத் தெரிவித்தனர்.

அரசர் சுற்றுலா வரும்போது ஆடம்பரமான நிகழ்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது வாத்திய இசை முழங்குவோர் இசை முழக்கினர். அரசருக்கு மட்டுமே அத்தகைய இசை முழக்கப் பெற்றது. அரச குடும்பத்தின் உயர் அலுவலர் அரசரைச் சந்திக்க வந்தோரை முறைப்படுத்தினர்.

### வல்லரசு

கொள்கை அளவில் ஹர்ஷருடைய ஆட்சி வல்லரசாக விளங்கிற்று. ஆயினும் மக்களுக்கு அவர்களுடைய பகுதியில் தன்னாட்சி வழங்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பணிகள் கிராம அவைகளுக்கு விடப்பட்டிருந்தன. கிராம அவைகளுக்

கும், மைய அரசுக்கும் இணக்கமான நெருங்கிய தொடர்பு இருந்தது. எனவே ஹர்ஷருடைய ஆட்சியினை வல்லாட்சி, மக்களாட்சி, ஆகியவற்றின் கலப்பு என்று கூறுதலே பொருத்த முடையதாகும்.

### அமைச்சரவை

அரசருக்கு உதவி புரிந்திட அமைச்சரவை ஒன்று இருந்தது. அமைச்சரவைக்கு அரச பதவிக்கு உரியவரைத் தெரிவு செய்வதில் பங்கு இருந்தது என்பதனை ஏற்கெனவே கண்டோம். அரசரைத் தேர்ந்தெடுப்பதில் மட்டுமின்றி வெளி உறவுக் கொள்கையினை வகுப்பதிலும் அமைச்சர்களின் பங்கு இருந்தது. இராஜ்யவர்த்தனர் மறைவிற்குக் கூட அவர் அமைச்சர்களின் சொற்கேட்டது தான் காரணம் எனப்படுகிறது. எதிரியின் அழைப்பை அமைச்சர் குழுவின் ஆலோசனையின் பேரில் தான் ஏற்றுச் சென்றார். எனவே தான் பீல் (Beal) என்னும் அறிஞர் அமைச்சர்களின் தவற்றினால் அரசர் எதிரிகளிடம் வீழ்ந்தார் என்று குறிப்பிடுகின்றார்.

### செயலகம்

தலைநகரத்தில் நன்கு ஒருமுகப்படுத்தப்பட்ட செயலகம் இருந்தது. போர், அயல்நாட்டு உறவுகள் ஆகியவற்றைக் கவனித்த அமைச்சர் அவந்தி என அழைக்கப்பட்டார். சிம்மநதர் (சிம்மநாடர்) படைத் தளபதியாக விளங்கினார். குதிரைப் படைத் தளபதி குண்டலா என அழைக்கப் பட்டார். யானைப் படைத்தலைவர் ஸ்கந்த குப்தா ஆவார். மதுவனப் பட்டயத்தில் பதிவேடுகளின் பாதுகாவலர் சாமந்த மகாராஜா ஈஸ்வர குப்தா என அழைக்கப்பட்டுள்ளார். பன்சேகரப் பட்டயத்தில் பதிவேடுகளின் பாதுகாவலர் பானு என அழைக்கப்பட்டுள்ளார். முக்கியமான அலுவலர்கள் மகாசாமந்தா, மகாராஜா, திவ்சதாஸ்தானிகா, பரமதாரா, இராஜ்தன்யா, குமார அமாத்யா, உபாரிகா, விஷயபதி என அழைக்கப்பட்டனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஊரியல் துறை

ஊரியல் துறையின் உயர் அலுவலர்கள் குமாரமாத்யர் ஆவார். அவர்களிலிருந்தே அமைச்சர்கள், செயலாளர்கள், மாவட்ட அலுவலர்கள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மைய அரசில் அதற்கெனத் தனியாக ஆய்வு அலுவலர்கள் இருந்தனர். அதைப் போலவே மைய அரசைச் சேர்ந்த

செய்தி கொண்டு செல்வோரும் இருந்தனர். அவர்கள் **தீர்க்கத்தவர்கள்** என ஹர்ஷ சரிதாவில் குறிப்பிடப்பட்டுள்ளனர். இரகசியத் துறையில் **சர்வகட** என்னும் உறுப்பினர் இருந்தார் எனவும் அறிகிறோம். பெரும்பாலான உயர் அலுவலர்களுக்கு ஊதியம் ரொக்கமாக வழங்கப்படாமல் நிலமாக அளிக்கப்பட்டது. அரசின் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு ஊதியம் ஏராளமாக வழங்கப்பட்டது. நிலமான்ய முறைக்கு அடிகோலியவர் ஹர்ஷர் என்றே குறிப்பிடலாம்.

இனி ஹர்ஷரின் படைத்துறை அமைப்பினைப் பற்றிய செய்திகளைக் காண்போம்.

### படைத்துறை அமைப்பு

ஹியூங்சாங்கின் கருத்துப்படி ஐயாயிரம் யானைகளும், இரண்டாயிரம் குதிரைகளும், ஐயாயிரம் காலாட்படைகளும் மட்டுமே ஆட்சிக்கு வந்தபோது கொண்டு இருந்த ஹர்ஷர் 60000 யானைகளையும் 1,00,000 குதிரைகளையும் உடைய படையாகத் தன் வலிமையின் அதனை விரிவடையச் செய்தார். காலாட்படை பல லட்சக்கணக்கில் பெருகிற்று. சாதாரண படைவீரர்கள் **சதர்கள்** என்றும் **பாதர்கள்** என்றும் அழைக்கப்பட்டனர். குதிரைப்படை அதிகாரிகள் **பிருகதீஸ்வரர்** என அழைக்கப்பட்டனர். காலாட்படை அதிகாரிகள் **பாலாதிகிரிதாஸ், மகாபாலாதிகிரிதாஸ்** எனவும் படைத்தளபதி **மகா சேனுதிபதி** எனவும் அழைக்கப்பட்டனர்.

### மாநிலங்கள்

ஹர்ஷரின் காலத்திலிருந்த மாநிலங்களின் எண்ணிக்கை நமக்குத் தெரியவில்லை. ஹர்ஷர் பல்வேறு லோகபாலர்களைக் கொண்டிருந்தார் என ஹர்ஷ சரிதம் இயம்புகின்றது. பட்டயங்கள் சிலவற்றில் புக்திகளைப் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. புக்தி விஷயங்களாகவும், விஷயங்கள் பதகங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கலாம். பதகங்களுக்கும் கிராமங்களுக்கும் இடையே வேறு ஏதேனும் அல்லது சிறிய பிரிவுகள் ஏதும் இருந்தனவா எனத் தெரியவில்லை. கிராமங்கள் **கிராமகட்சபாடலிகா** எனப்படும் கிராமத் தலைவரின் கீழ் இயங்கின. அவருக்குக் காரணிகர் எனப்படும் எழுத்தர்கள் உதவி செய்தனர்.

### வரிகள்

அரசு விதித்த வரிகளைப்பற்றி ஆராய்கின்றபோது **பாகா, ஹிரண்யா, பாலி** என மூன்று வகை வரிகள் விதிக்கப்பட்டதாக

அறிகிறோம். பாகா என்பது நிலவரி ஆகும். இவ் வரி பண்ட மாகச் செலுத்தப்பட்டது. ஹிரண்யா எனப்படுவது வணிகர் களாலோ, விவசாயிகளாலோ பணமாகச் செலுத்தப்படும் வரி ஆகும். பாலி என்பது எவ்வகை வரி என அறிய இயல வில்லை. படகுத்துறை வரிகள் இருந்தன எனத் தெரிகிறது. ஆறில் ஒரு பங்கு அரசின் பங்காக வசூலிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. வரி விதிப்புக் கடுமையாக இல்லை என ஹியூன்சாங் உரைக்கின்றார்.

## வருவாய்

அரசரின் நிலங்களின் வருவாய் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. முதல் பகுதியின் வருவாய் நாட்டின் பணி களுக்கும், இரண்டாவது பகுதியின் வருவாய் அமைச்சர்கள், அரசரின் அலுவலர்களுக்கான செலவுகளுக்கும், மூன்றும் பகுதியின் வருவாய் கற்றோர்க்குச் சிறப்புச் செய்வதற்கும், நான்காம் பகுதி கொடைக்குமாகப் பயன் படுத்தப்பட்டன.

## தண்டனை

ஹியூன்சாங்கின் கருத்தின்படி மிகவும் குறைந்த எண் ணிக்கை உள்ள குற்றவாளிகளே நாட்டில் இருந்தனர். சட்டத் தின் விதியை மீறுவோர் தண்டிக்கப்பட்டனர். குற்றவாளி களுக்குக் கடுந் தண்டனை விதிக்கப்படவில்லை. மிகக் கடுமை யான குற்றங்களுக்குக் குற்றவாளிகள் மூக்கு அறுக்கப்பட்டுக் காடுகளில் சென்று வாழுமாறு துரத்தப்பட்டனர். சிறிய குற்றங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. சோதனை முறை யும் இருந்தது.

## ஆட்சியின் தன்மை

அரசர் மிகவும் தாராள மனப்பான்மை உடையவராயும் மக்களுடைய வாழ்க்கையில் தலையிடாதவராயும் விளங்கினர் என அறிகிறோம். அல்டேகர் என்பார் ஹர்ஷரின் ஆட்சி மௌரி யர்களின் காலத்தைப் போன்றோ, குப்தர்களின் காலத்தைப் போன்றோ அத்துணைச் சிறப்பாக இருந்ததில்லை என்று குறிப்பிடுகின்றார். ஹியூன்சாங் ஹர்ஷரை வெகுவாகப் புகழ்ந்து எழுதியிருக்கிறார். என்றாலும் ஹியூன்சாங்கினுடைய பொருட்கள் தலைநகருக்கு அருகிலேயே கொள்ளையிடப் பட்டுள்ளன. எனவே நாம் ஹர்ஷரின் ஆட்சி ஓரளவிற்குச் சிறந்து விளங்கியது என்பதை ஒப்புக் கொண்டாலும், குப்தர்கள், மௌரியர்கள் ஆகியோருடையவைகளைப்

போன்று அத்துணைச் சிறப்புப் பெறவில்லை என்றே கருத வேண்டியுள்ளது.

## முடிவுரை

டாக்டர் முகர்ஜி என்பார் சமுத்திரகுப்தர், அசோகர் ஆகியோரின் பண்பு நலன்கள் வாய்க்கப் பெற்றவராகத் திகழ்ந்தார் என்று உரைக்கும்போது இராவின்சன் என்பார் அசோகர், அக்பர் போன்ற சிறந்த ஆட்சியாளர்களோடு வைத்து எண்ணப்படத்தக்கவர் ஹர்ஷர் என்றே கருத்துத் தெரிவிக்கின்றார். ஆனால் மஜும்தார் கூறுவது போல ஒன்று மட்டும் உண்மை. இந்துக்களின் காலக் கடைசிச் சிறப்புமிக்க அரசர் ஹர்ஷர் எனக் கருதப்படாவிட்டாலும், ஹர்ஷரைச் சிறந்த ஆட்சியாளர், உறுதி மிக்க இராணுவத் தலைவர், கலைகளை ஆதரித்தவர், குறிப்பிடத் தகுந்த ஆளுமை படைத்தவர் எனக் கூறலாம். அரசியல் ஒற்றுமையின் அடித் தளமாக விளங்கியவர் ஹர்ஷர். ஆனால் அவருடைய ஆட்சிக்குப் பின் வட இந்தியாவின் அரசியல் ஒற்றுமை சீர்குலைந்தது; பிளவுச் சக்திகள் வலுவடைந்தன; சிறுசிறு அரசுகளாகப் பல அரசுகள் தோன்றலாயின. குப்தர் காலத்திற்குப் பின் ஹர்ஷர் வரை உள்ள காலப்பகுதியின் ஆட்சி அமைப்பினைப் பற்றிய நம் ஆய்வினை இத்துடன் நிறுத்திக் கொண்டு அடுத்து வரும் அத்தியாயத்தில் ஹர்ஷருக்குப் பின்னர் முஸ்லிம்களின் வருகைக்கு முன் ஏற்பட்ட மாறுதல்களை ஆராய்வோம்.

# 14. இராஜபுத்திரர்களின் காலம்

## (Age of the Rajputs)

*ஹர்ஷருக்குப் பின்*

ஹர்ஷ வர்த்தனரின் மறைவுக்குப் பின் இந்தியாவின் அரசியல் நிலைமையையும், அரசு அமைக்கப்பட்டிருந்த விதம், செயல்பட்ட முறை பற்றியும் நாம் அறிந்து கொள்ளுதல் மூலமாக இஸ்லாமியரின் வருகைக்குப் பின் ஏற்பட்ட விளைவுகளை அறிய முடிகிறது. எப்படிப்பட்ட அமைப்பு முறை ஹர்ஷருக்குப் பின் இருந்தது? அது எவ் வகையில் இந்திய மண்ணில் இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்துவதிலும், இஸ்லாமிய ஆட்சி வெற்றி பெறுவதிலும் துணையாக இருந்தது என்பதை அறிந்து கொள்ள இந்தப் பகுதி உதவியாயிருக்கின்றது.

*வட இந்தியாவின் நிலை*

ஹர்ஷ வர்த்தனரின் மறைவுக்குப் பின் அரசியல் ஒற்றுமையை வட இந்தியா இழந்தது. சகல-உத்திர-பதேஸ்வரர் அல்லது மேலாட்சித் தலைவராக, நிலமானிய அல்லது திறை செலுத்தும் முறைகளின் தலைவராக, வட இந்தியா முழுமைக்கும் தலைவராக ஹர்ஷர் விளங்கினார். ஆனால் ஹர்ஷரின் மறைவோடு அத்தகைய ஒருமைப்பாடு மறைந்தது. திறை செலுத்தும் முறையின் அடிப்படை உண்மையான வலிமை வாய்ந்த ஓர் அரசரின் மேலாட்சியே ஆகும். குறைந்த வலிமை உள்ள அரசர்களும் ஆட்சியாளர்களும் ஹர்ஷருக்குக் கடப்பாடு கொண்டிருந்தனர். இந்தத் தலைவர்கள் தம் அரசுகளைப் பேணிக் கொண்டனர். தங்களுக்கு மேல் ஆண்ட நாட்டின் இணைந்த ஒரு பகுதியாக இல்லாமல் ஓர் இணைப்பாகச் செயல்பட்டனர். மையப்படுத்துதலை நோக்கிய எல்லா முயற்சிகளையும் இந்நிலை தடுத்தது. ஹர்ஷருக்குப் பின் வட இந்தியா குழப்பத்தில் ஆழ்ந்து விடவில்லை

அதற்கு மாறாகக் குறுநில மன்னர்கள் விடுதலை பெற்று அதற்கு முன் ஆண்டது போல் தம் நாட்டை ஆண்டனர். ஆனாலும் சிறிய அரசுகளுக் கிடையே ஏற்பட்ட போட்டியின் காரணமாக உள்நாட்டுப் போர் போன்ற குழப்பம் நிலவியது. ஹர்ஷப் பேரரசு சிதைந்து போனது பொதுவான அதிகாரப் போராட்டத்தைத் தூண்டியது எனலாம். இப் போராட்ட மானது காஷ்மீரத்திலிருந்து மகாராட்டிரம் வரைக்கும், சிந்துவிலிருந்து இமயமலை வரைக்கும் நடைபெற்ற தனி முதன்மை நிலைக்கான போராட்டமே ஆகும்.

### இராஜபுத்திரர்

ஹர்ஷருடைய மறைவிற்குப் பின்னர் இராஜபுத்திரர்கள் எழுச்சி பெற்றனர். இடைக்கால இந்தியாவின் அரசியல் வரலாற்றில் இராஜபுத்திரர்கள் சிறப்பான பங்கு பெற்றனர். ஹர்ஷரின் பேரரசு சிதைந்த காலத்திற்குப் பின்னால் வட இந்தியாவில் அதிகாரப் போட்டியொன்று எழுந்தது. இராஜபுத்திரர்கள் திக்குவிஜயம் செய்வதை அல்லது புதிய இடங்களை வெல்வதைத் தங்கள் குறிக் கோளாகக் கொண்டனர். தங்களுக்கெனச் சுதந்திரமான முடியரசுகளை வென்று ஏற்படுத்திக் கொண்டனர். பல்வேறு இராஜபுத்திரக் குலங்களால் நிறுவப்பட்ட சிறிய அரசுகள் வட இந்தியாவில் எழுந்தன. தகுந்த தலைமையோடு ஹர்ஷரின் பேரரசைப் போன்ற ஒன்றை நிறுவத் தவறி விட்டனர். ஆனால் கூர்ஜரப் பிரதிகாரர்கள் இத்தகைய முறையை அமைப்பதில் வெற்றி பெற்றனர். ஆயினும் அந்த வெற்றி நிலைபெறாது அது மிகக் குறுகிய காலமே இருந்தது. அவர்களுக்குப் பின்னால் நாடு, அரசியல் நிலை இல்லாமை நிலையில் ஆழ்ந்தது. முஸ்லீம்கள் படையெடுத்தபோது தனித் தனியே வீரத்தோடு போரிட்டனர். ஒன்றுபட்டு ஒரு தலைமையைப் பல இராஜபுத்திர அரசர்கள் உருவாக்கவில்லை. இதனை இராஜபுத்திரர்களுக்கும், முஸ்லீம்களுக்கும்இடையே ஏற்பட்ட தனி முதன்மை நிலைக்கான போராட்டம் என்றே கருத வேண்டும்.

### டாக்டர் பேணி பிரசாத்தின் கருத்து

கி. பி. 700 முதல் 1050 வரை உள்ள மூன்று நூற்றாண்டு களின் அரசியலைச் சலிப்பும், தேக்கமும் கொண்டது என டாக்டர் பேணி பிரசாத் குறிப்பிடுகின்றார். வட இந்தியாவில் தேக்கமுற்ற பொழுதும், அரசியல் திறமும், கற்பனைத்

திறமும் விலகிய பொழுதும் தென்னிந்தியா அரசியல் அமைப்பில் புதிய பாணிகளை வளர்த்துக் கொண்டிருந்தது. எனவே டாக்டர் பேணி பிரசாத்தின் கூற்றினை ஏற்க இயல வில்லை. நாம் இந்திய ஆட்சி அமைப்பு முறையின் வடிவம், செயல்வினை ஆகியவை பற்றிய ஆய்வினை மேற்கொள்ளு கின்றபோது வட இந்தியாவிற்கும், தென்னிந்தியாவிற்கும் பொதுவாக இருக்கின்றவற்றையும் அவை ஏதாவது ஒன்றுக்குத் தனிப்பட்டவைகளாக இருப்பவற்றையும் நம் முடைய ஆய்வுக்கு ஏற்றவையாகக் கொள்ளலாம்.

### மரபு உரிமை

இந்த நூற்ருண்டுகளில் இந்தியாவில் நிலவிய ஆட்சி அமைப்பு முறை முடியாட்சி முறையே ஆகும். இறக்கின்ற தருவாயில் அரசர் தமக்குப் பின் வருபவரை நியமிக்கும் மரபு முறை பெரும்பாலும் காணப்பட்டாலும் பொதுமக்களோ அல்லது அமைச்சரவையோ தெரிவு செய்தல் முற்றிலும் மறைந்து விடவில்லை. மரபுரிமைச் சட்டம் ஏதும் இருக்க வில்லை. வலிந்தோர், மெலிந்தோரை அடக்கி வாழ்தல் அல்லது மச்ச நியாயம் எனப்படும் கொள்கை பெரிதும் வெறுக்கப்பட்டது. இத்தகைய இயற்கை நிலையிலிருந்து மக்கள் விடுதலைபெற நினைத்தனர். இதற்குச் சான்று வங்காளத்தின் முதலரசராகக் கோபாலர் தேர்ந்தெடுக்கப் பட்டதைக் காலிம்பூர் பட்டயத்தின் மூலம் அறிகிருேம். நில மானியத் தலைவர்களும், அமைச்சர்களும் சில சமயங்களில் அரசரைத் தேர்ந்து எடுத்தனர். இராட்டிர கூட அரசர் அமோகவர்ஷர் பதவியில் அமர்த்தப்பட நிலமானியதாரர் களும், அமைச்சர்களும் பெரும் பங்குகொண்டனர். மூத்த மகன் அரியணையில் அமர்த்தப்பட வேண்டும் என லலிதாத் திய முக்தபிடர் என்பவர் விதித்தார். இரண்டாம் கோவிந்தர் தம் இளைய மகனைத் தமக்குப் பின்னர் ஆட்சி புரியத் தெரிவு செய்தார். நாம் இதுவரை மேலே கண்ட சான்றுகளின் வாயிலாக எத்தகைய மரபு உரிமைச் சட்டமும் இல்லை என்பதை அறிகிருேம். மூத்தவர்கள், தகுதி பெற்றவர்கள், திறமை பெற்றவர்கள், மரபுரிமைக்கு உரியவர்கள் ஆகிய தகுதிகளைப் பொதுவாகக் கவனித்தனர். அரசரின் அதிகாரங் களை அமைச்சர்கள் அடிக்கடி பறித்துக் கொண்டனர். சிந்து நாட்டின் அரசரான ஷாஸியின் பிராமண அமைச்சர், காஷ்மீர் அரசர் சக்கரவர்மனின் அமைச்சர் ஆகியோர் இவ்வாறே செய்தனர்.

### அமைச்சர்கள்

அரசருக்கு அடுத்தபடியாக நாட்டில் செல்வாக்குப் பெற்றவர்களாக விளங்கியவர்கள் அமைச்சர்களும் நிலமானியதாரர்களும் ஆவர். நாட்டின் வலிமையையும், பரப்பையும் பொறுத்தே அமைச்சர்களின் எண்ணிக்கை இருந்தது. வலிமையில்லாத நாடாயின் குறைந்த எண்ணிக்கை உடைய அமைச்சர்களும், வலிமை மிக்க நாடாயின் அதிக எண்ணிக்கை உடைய அமைச்சர்களும் இருந்தனர்.

அரசரின் பிரதிநிதியாக விளங்கியவர் தலைமை அமைச்சராவார். அரசன் இளையோனாயின், ஆட்சி புரியத் தக்க பருவம் அடையும் வரை அவ்வரசனுக்குப் பாதுகாவலனாகத் தலைமை அமைச்சர் விளங்கினார். தலைமை அமைச்சருக்கு அடுத்தபடியாகக் குறிப்பிடத் தகுந்தவர் மகா சந்தி விக்கிரகர் என அழைக்கப்பட்ட முதன்மை வெளி உறவு அமைச்சர் ஆவார். இவர் தம் கட்டுப்பாட்டின் கீழ்ப் பல சந்திவிக்கிரகர்களை வைத்திருந்தார். முதலாம் அமோகவர்ஷரின் செப்பேடுகள் மூலம் தலைமை நீதிபதி ஒருவர் இருந்தார் என அறிகிறோம். அரசவையில் புரோகிதர் மிக முக்கியமான உறுப்பினராக விளங்கினார். தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் கிடைத்துள்ள சான்றுகள் மூலமாக அமாத்தியர் என அழைக்கப்பட்ட வருவாய்த் துறைப் பொறுப்பிலிருந்தவரைப் பற்றியும், கருவூலப் பொறுப்பிலிருந்த பண்டாரகர் என்பவரைப் பற்றியும் அறிகிறோம்.

காஷ்மீரிலும் இதே போல அமைச்சர்கள் இருந்தனர். அமைச்சர்கள் பெயர் வேறுபட்டிருந்தாலும் வடக்கிலும் தெற்கிலும் எண்ணிக்கை ஒன்றாகவே இருந்தது. அமைச்சர்களுடைய கடமை அரசருக்கு நல்ல அறிவுரை வழங்குவது ஆகும். அரசர் தவறிழைத்தால் அத்தவறுகளுக்கு அமைச்சர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

### நிலமானியதாரர்கள்

நாட்டின் அரசியலில் அமைச்சர்களுக்கு அடுத்தபடியாகப் பெரும் பங்கு ஆற்றியவர்கள் நிலமானியதாரர்கள் (feudatories) ஆவார்கள். நிலமானியதாரர்களிலிருந்தும், அரசரின் உறவினர்களிலிருந்தும் அமைச்சர்கள் அமர்த்தப்பட்டனர். போரில் தோற்ற அரசனை வென்ற அரசன் அரசனைப் போலவே நடத்த வேண்டும் என்பது அரசியல் ஒழுக்கமாகும். முதல் தாத்தவர்,

இரண்டாம் தரத்தவர், மூன்றும் தரத்தவர் என மூன்று பிரிவினராக நிலமானியத்தவர்கள் இருந்தனர்.

முதல் பிரிவினர் ஆளுநர்களாக அமர்த்தப்பட்டனர். இவர்கள் பெரும் அதிகாரங்களைச் செயல்படுத்திப் போர்க் காலத்தில் மேல்நிலை அரசர்க்குப் படைகளை அளித்தனர்.

முதல் தரத்தவர்கள் சாமந்தசாகர சூடாமணி, மகாமண்ட லேச்சுவரர் அல்லது மகாசாமந்தாதிபதி என்று பெயர் பெற்றனர்.

இரண்டாம் தர நிலமானியத்தவர்கள் குறைந்த அதிகாரத்தையும் தன்னுட்சியையும் பெற்றிருந்தனர். மேலாட்சி அரசரின் ஒப்புதலின்றி இவர்கள் ஒரு கிராமத்தைக் கூட மானியம் கொடுக்க முடியாது. இந் நிலை இந்தியா முழுமைக்கும் பொதுவான நிலையாகும். இராட்டிரகூட அரசரின் நிலமானியத்தவரில் ஒருவராகிய சங்கரக்ணுவும், சோழ மன்னர்களின் நிலமானியதாரர்களாகிய வீர சோழரும், இரண்டாம் பிருதிவிபதியும் இத்தகைய ஒப்புதல் பெற வேண்டியிருந்தது.

இரண்டாம், மூன்றும் தரத்தவர்கள் மகாசாமந்தர் அல்லது சாமந்தர்கள் என்று பேர் பெற்றனர். மூன்றும் தரத்தவராகிய சாமந்தர்கள் பெரும்பாலும் அரசர்க்கும், இரண்டாம் தரநிலமானியதாரர்க்கும் அலுவலர்களாகப் பணியாற்றினர். நிலமானியத்தவர்கள் அரசர் அரியணை ஏறிட உதவி புரிந்தனர். துருவர், முதலாம் அமோகவர்ஷர், மூன்றும் அமோகவர்ஷர் ஆகிய இராட்டிரகூட அரசர்களும், அந்திவர்மன், சங்கரவர்மன் ஆகிய காஷ்மீர் அரசர்களும் வங்காளத்தின் இராமபாலரும் நிலமானியத்தவரின் உதவியினுல்தான் அரியணை ஏறினுர்கள்.

## பேரரசின் பரப்பு

இப்பேரரசுகளின் பரப்பை நாம் அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். இராட்டிரகூடப் பேரரசு தென் குஜராத்திலும் மத்திய மாகாணத்தின் மராத்தி மொழி பேசும் மாவட்டங்களிலும், ஐதராபாத் முழுவதிலும், கர்நாடகத்திலும், மைசூரின் சில பகுதிகளிலும் பரவியிருந்தது. பாலப் பேரரசு வங்காளம், பீஹார் முழுவதையும் கொண்டிருந்தது. மத்சய, மத்ரா, குரு, யது, யவன, அவந்தி, காந்தார அரசர்கள் மரியாதையோடு பாலரின் ஆட்சியை ஏற்றுக் கொண்டனர். கூர்ஜரப் பிரதி

காரர்களின் இரண்டு சிறந்த பிரதிநிதிகளாகிய போஜர், மகேந்திரபாலர் ஆகியவர்களின் அரசு வடக்கில் பஞ்சாப்பின் கர்னூல் மாவட்டத்திலிருந்து பீகார் வரையிலும், கத்தியவார் தீபகர்ப்பத்திலிருந்து வடக்கு வங்காளம் வரையிலும் பரவி யிருந்தது. காஷ்மீரம் சைனவுடனும், பூட்டானுடனும் இராச தந்திரத் தொடர்பு கொண்டு கன்னோஜையும், ஆக்ஸஸ் பள்ளத் தாக்கில் துருக்காரிஸ்தானையும், மேல்கிஷன்-கங்கா பள்ளத் தாக்கில் தார்த்தெஸாவையும் கைப்பற்றியதாகத் தெரிகிறது. ஷாகிகள் பஞ்சாப்பில் நிலை பெற்றிருந்தனர்.

### வருவாய் அலுவலர்

மக்களைத் துன்புறுத்தாமல் ஆண்டிற்கு ஓர் இலட்சத்தி லிருந்து மூன்று இலட்சம் கர்ஷம் வரை பெறும் முடி யரசின் அரசர் **சாமந்தராவார்**. மூன்று இலட்சத்திலிருந்து பத்து இலட்சம் கர்ஷத்திற்கு அதிகரிக்கும் ஆண்டு வருமான முடைய அரசின் மன்னர் **மண்டலிகர்** எனப் பெயர் பெற்றார். பத்து இலட்சம் முதல் இருபது இலட்சம் வரை செல்லும் வரு மானமுடையவர் **காசராவார்**. இருபது இலட்சத்திலிருந்து ஒரு கோடிக்கும் அதிகமான வருமானம் உள்ளவர் **மகாராஜா**. ஒரு கோடியிலிருந்து பத்துக்கோடிக்கும் அதிகமான வருமான முடையவர் **சாம்ராட்**. 10 கோடி முதல் 50 கோடி வரை **விராட்**. இவருக்கு மேலானவர் **சர்வபூமர்**. இந்த அரசர்களின் படிநிலை அமைப்போடு, அரசரின் அலுவலர்கள் பற்றிய மற்றொன்றும் இருக்கிறது. பத்துக் கிராமங்களின் ஆளுநர் **நாயகர்** எனவும், நூறு கிராமங்களின் ஆளுநர் **சாமந்தர்** எனவும், பத்தாயிரம் கிராமங்களின் ஆளுநர் **சுவராத்** எனவும் அழைக்கப்பட்டனர். கோ என்னும் சொல்லைக் கொண்ட பட்டங்களைப் பெற்றவர்கள் அரசரின் அலுவலர்களில் மிக உயர்ந்தவர்களாவர். அவர்கள் அரசரின் அலுவலர்களாக இருந்ததுடன் நிலமானியதாரர்களாகவும் இருந்தனர். சுக்கிர நீதியில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கும் அரசு அலுவலர் களின் படிநிலை அமைப்பு இது. கீழ்மட்ட அலுவலர் மகாநாயக் என்பவராவார். பத்துக் கிராமங்களுக்கு அமர்த்தப்பட்ட அரசு அலுவலர் நாயக் ஆவார். இவருக்கு மேல் மகாசாமந்தரும், அவருக்கு மேல் மகாமண்டலிகரும், மகாமண்டலிகருக்கு மேல் மகாராஜாவும், மகாராஜாதி இராஜனும் இருந்தனர்.

### ஆட்சிப் பிரிவு

இனி ஆட்சிப் பிரிவுகளைப் பற்றிக் காண்போம். நாராயண பாலரின் கல்வெட்டிலிருந்து ஆட்சிப் பிரிவுகள் புக்தி, விஷயம்,

மண்டலம் என்று இறங்கு வரிசையில் இருந்ததாகத் தோன்று கிறது. ஒரிசா நாட்டுக் கல்வெட்டு ஒன்றில் விஷயத்திற்குப் பதிலாக மண்டலம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இராட்டிரகூடப் பதிவுகளிலிருந்து இராட்டிரம், விஷயம், புக்தி என்று பிரிக்கப்பட்டு இருந்ததாக அறிகிறோம். சில சமயங்களில் இராட்டிரம் சிறியதாகவும், விஷயம் பெரிய பிரிவாகவும் செய்யப்பட்டிருந்தன. கூர்ஜரப் பிரதிகாரப் பேரரசு அமைப்பில் மண்டலத்தைக் காட்டிலும், புக்தி பெரிய ஆட்சிப் பிரிவாகத் தோன்றுகிறது. சோழப் பேரரசில் மண்டலம் என்பது மாநிலமாக இருந்தது. இராட்டிரத்தின் ஆளுநர் இராட்டிரபதியாகவும், விஷயத்தின் ஆளுநர் விஷய பதியாகவும், புக்தியின் ஆளுநர் **போகபதி**, அல்லது **போககராகவும்** இருந்தனர். கிராமத் தொகுதியின் ஆளுநர் யாரென்று உறுதிசெய்வது கடினமானதாகும். விஷயத்திற்கு அடுத்த பிரிவு கிராமம் என்று ஒரிசா நாட்டுக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. கிராமங்கள் பெருமளவு தம்மாட்சி பெற்றிருக்கையில் நகரங்கள் தனிப்பட்ட அலுவலர்களால் ஆளப்பட்டன. பெரும்பாலும் அரசின் உயர் பதவிகள் மரபு வழிப் பதவிகளாகக் கொண்டிருந்தன.

### அலுவலர்களின் நிலை வரிசைகள்

நிலமானியத்தவர்க்குள்ளிருந்து ஆளுநர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் நிலமானியத் தலைவர்களைக் கட்டுப்படுத்திச் செயலாட்சி செய்திருக்கலாம். இராட்டிரபதி, விஷயபதி, நகரபதி, கிராமபதி, நியுக்தர், இராஜபுருஷர் என அலுவலர்களின் படிநிலை வரிசையைக் கி. பி. 1026-ஆம் ஆண்டு பதிவு குறித்துள்ளது. இராட்டிரகூட ஆட்சியில் மகாமண்ட லேசுவரர் அல்லது மகா சாமந்தாதிபதி என்னும் பட்டத்தை மாநில ஆளுநர்கள் பெற்றிருந்தனர். நிலமானியதாரர்களைத் தவிர அரசருடைய உறவினர்களும் யுவ இராஜக் களும் பெரும்பாலும் மாநில ஆளுநர்கள் வருவாய் ஆட்சியின் தலைவர்களாக இருந்தனர். கிராமங்கள், நிலங்கள் ஆகிய வற்றின் வருவாய் அறுதியீடு, தலநிறுவனங்களின் ஒத்துழைப் போடு நிறைவேற்றப்பட்டது. மாநில அரசாங்கம் ஹர்ஷர் அல்லது குப்தர் காலத்தில் எப்படி இருந்ததோ அப்படியே தானிருந்தது என்று சொல்லப்படுகிறது.

### மாநில ஆட்சி

இந் நூற்றாண்டுகளில் முன்னிருந்ததைப் போல மாநில ஆட்சி, அதிகரணங்கள் என்று சொல்லப்பட்ட சில துறை

களைக் கொண்டிருந்தது. இவை ஒவ்வொன்றிலும் லேக்கர்கள், காயஸ்தர்கள் அல்லது எழுத்தர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். நாராயண பாலரின் பாலிப்பூர்ச் செப்பேடுகள் களங்களின் காவலர், எல்லைப் பாதுகாவலர், காவற்படையினர், மாநில ஆட்சியைச் சேர்ந்த படை அலுவலர்கள் போன்றோர்களைப் பற்றிக் குறித்துள்ளது. மாவட்டத் தலைவர்கள், விஷயபதிகள் என்று அழைக்கப்பெற்றனர். மாவட்டங்கள் சில வேளைகளில் மிகப் பெரியனவாகவும், வேறு சில வேளைகளில் மிகச் சிறியனவாகவும் இருந்திருக்கின்றன; நாட்டுப்புறப் பகுதிக்கு மிக முக்கியமானவையாகவும் இணைந்திருக்கின்றன. நாட்டுப்புறப் பகுதிக்கு மிக முக்கிமான கடமைகளைச் செய்கின்ற அலுவலர்கள், காவல் துறை அலுவலர்களாகிய தௌசாத சாதநிகர்களும், சௌரோதாரநிகர்களும், நீதித் துறையைச் சேர்ந்தவர்களாகிய தண்ட சக்திகளும், தண்ட பாசிகர்களும், சுங்கவரி வசூலிப்பவராகிய சௌல்கிகர்களும், காடுகளின் மேற்பார்வையாளர்களாகிய கௌல்மிகர்களும் ஆவார்கள். விஷயபதிகளும், போகர்களும் மரபு வழிவந்த வருவாய்த்துறை அதிகாரிகளின் உதவியோடு ஆட்சி செய்தனர்.

## கிராமம்

பொது ஆட்சியில் மிகச் சிறந்த இனம் கிராமத்தின் ஆட்சியாக இருந்தது. இயல்பாக ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு கிராமத் தலைவரைப் பெற்றிருந்தது. கிராமத் தலைவருடைய பதவி பெரும்பாலும் மரபு வழிக்குரியதாக இருந்தது. கிராமத் தலைவர் மைய அரசாங்கத்தின் பணியாள் என்பதைவிடப் பெரிதும் மக்களின் பிரதிநிதியாகவே கருதப்பட்டார். கிராமம் மிகப் பழைய காலத்திலிருந்தே ஓரளவு தன்னாட்சி பெற்றிருந்தது. இது மரபாகி எல்லா அரசியல் அமைப்பிற்கும், உறுதி நிலைக்கும் அடித்தளமாக அமைந்தது. அரசின் நிதிப் பிரிவுகளில் ஒன்றாகவும் கிராமம் இருந்தது. அரசரின் வருவாயோடு கிராமத் தலைவரை அடிக்கடி குறிப்பிடுவதால் இவர் அரசருக்குரிய வருவாய்களைத் திரட்டிச் செலுத்தும் பொறுப்பில் இருந்திருக்கலாமென்று கூறப்படுகிறது. கிராம அவைக் கூட்டத்தில் இவர் பெரும் பங்கு ஆற்றியதோடு, சிறிய குற்றவியல் வழக்குகளில் நடுவராகவும் பணியாற்றினார். சில கிராமங்களில் கிராமத் தலைவர்கள் பலர் இருந்தனர். கிராமப் பஞ்சாயத்தை உருவாக்கிய பெருமக்களாக இவர்கள் இருந்திருக்க வேண்டும் எனச் சின்ஹா கருதுகிறார்.

### கிராம அவை

கிராமத்தின் மிக முக்கியமான நிறுவனம் கிராம அவையாகும். கிராம அவைக்குரிய வாக்காளர்கள், வேட்பாளர்களின் தகுதி பற்றி விரிவான விதிகள் இருந்தன. குற்றம் இல்லாக் குண இயல்போடு இருத்தல் வேண்டும் என்பதோடு வேட்பாளர்கள் குறிபிட்ட சொத்துடைமை, கல்வித்தகுதிகளும் பெற்றிருத்தல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டனர். ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மூன்றாண்டிற்கு மறுபடியும் தேர்தலில் கலந்துகொள்ளக் கூடாது. ஆண்டு தோறும் தேர்தல் நடந்தது. அவையினர் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். கிராமத்தின் குளம், கோயில், சாலைகள், நன்செய், புன்செய் ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வோர் உட்குழுவும் ஏற்றுக் கொண்டது. தமிழ் நாட்டில் இருந்த இதே போன்ற நிறுவனங்கள் மற்றவற்றிலிருந்து மாறுபட்டவைகள் என்பதைத் தனியாகக் காணலாம். எப்படி எப்பொழுது வரி வசூலிக்க வேண்டும் என்பது குறித்து விதிகள் இருந்தன. எல்லாக் கிராமங்களும் முழுமையான அதிகாரம் பெற்றிருந்தன. வரி செலுத்தத் தவறியவர்களின் நிலத்தை விற்கும் அதிகாரம் கிராம அவைகளிடம் இருந்தது. இராட்டிரகூட ஆட்சியில் இவ்வதிகாரங்கள் மைய அரசிடமே இருந்தன. பிரதிநிதிகளின் வழியாக இவைகள் செயல்படுத்தப்பட்டன. இருப்பினும் கிராம அவைகள் பொதுப்பணிகள், பள்ளிக்கூடங்கள், அறச்சாலைகள் ஆகியவற்றை ஏற்று நடத்தின. காஷ்மீரில் **கிராமத்தின் அரசுப் பிரதிநிதி, கிராம காயஸ்தர்** எனப் பெயர் பெற்றிருந்தார். பல கிராமங்களில் அரசரின் அலுவலர்கள் பொறுப்பேற்றிருந்தனர். பத்துக் கிராமங்களில் பொறுப்பேற்றிருந்த அலுவலர்கள் தசகிராமிகள் என அழைக்கப்பட்டனர்.

நாம் இதுவரையில் அறிந்துகொண்ட செய்திகள் எல்லாம் கல்வெட்டுகளிலிருந்து அறிந்து கொண்டவையே. இக் கல்வெட்டுகள் மூலமாக நாம் அரசின் நீதி, சட்டம் ஆகியவை பற்றி ஏதும் அறிய இயலவில்லை. சுக்கிரநீதி என்னும் நூலின் மூலம் அவற்றை அறிகிறோம். சுக்கிரநீதியின் காலம் பற்றிக் கருத்து வேறுபாடு உள்ளது. சுக்கிரநீதி எட்டாம் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாகவே பொதுவாகக் கருதப்படுகிறது.

### வரிகள்

அரசர் அல்லது பேரரசின் அரசாங்கத் திட்டம் மிக விரிவானதாகவும், திறமையானதாகவும் இருந்திருக்க வேண்டும். அரசரின் முக்கியமான பணிகளில் ஒன்று வருவாய் திரட்டுதலாகும். அரசின் தலையாய அலுவலர்கள் புரோகிதர், பிரதிநிதி, பிரதானி, சச்சிவமந்திரி, பண்டிதர், அமாத்திய, சுமந்தா, தூதர் ஆகியோர் ஆவர். இவர்களுடன் பூங்கா, கட்டிடங்கள், அரண்மனை ஆகியவற்றின் கண்காணிப்பாளர்களும் இருந்தனர். நிலவரித் தீர்வைகள், தண்டங்கள், காடுகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள், சுரங்கங்கள், கேட்பாரற்ற சொத்திலிருந்து கிடைக்கும் வருமானங்கள் ஆகியவை வருவாய் மூலவளங்களில் அடங்கும்.

### உள் ஆட்சி

இனி உள் ஆட்சி பற்றிக்காண்போம். ஒவ்வொரு கிராமத்திலும் ஆறு அலுவலர்கள் இருந்தனர். அவர்கள் காவல்துறை அலுவலர், கிராமத்தலைவர், வரிகள் வசூலிப்பவர்கள், நிலவரி வசூலிப்பவர்கள், எழுத்தர், செய்தி கொண்டு செல்வோர் என இருந்தனர். தலைமை நீதிபதியின் கீழ் சட்டமும், நீதியும் இருந்தன. பகுத்தறிவு, நேர்க்காட்சி, ஆய்வுத் தீர்வு, ஒப்பு நோக்கு, ஊர் வழக்கம் ஆகியவற்றினைப் பயன்படுத்தி அரசருக்கு அறிவுரை வழங்குகின்ற பணியினை மேற்கொண்டனர். ஒரு நீதிபதியால் இயலாதவற்றைப் பல நீதிபதிகள் கூடிய அவை முடிவு செய்தது. சாட்சிகளை ஆய்தலும், ஆவணங்களும் ஒரு முடிவிற்கு வருவதற்கு இன்றியமையாத கூறுகளாகும். ஊர் வழக்கம் போதிய இடம் பெற்றது.

### குற்றங்கள்

குற்றங்கள் மூன்று தலைப்பின் கீழ் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. அவை சிறு குற்றங்கள், அடாப்பழிகள், அரசுக்கெதிரான குற்றங்கள் ஆகும். சாத்திரத்தில் சொல்லப்பட்டிருப்பவைகளின் குறைகளை ஊர்ப் பழக்கங்கள் நிறைவு செய்கின்றன. சாட்சிகள் கவனமாக விசாரிக்கப்படுதல், வாக்குமூலங்கள் சரியானபடி பதிவு செய்யப்படுதல் ஆகியவை வலியுறுத்தப்பட்டன. கேள்வி கேட்டுப் பகுப்பாய்வு செய்திட அரசு வழக்குரைஞர்களைப் போன்றவர்களிருந்தனர். வழக்கு முழுவதும் விசாரிக்கப்பட்ட பின்னரே தீர்ப்பு அளிக்கப்பட்டது. கருத்து வேற்றுமை ஏற்பட்டபோது பெரும்பான்மையோரின் தீர்ப்பே ஏற்றுக் கொள்ளப்பட்டது. உண்மையைப் பெற

மூன்று முறைகள் பயன்படுத்தப்பட்டன. அதில் கடுஞ்சோதனை முறையும் ஒன்றாகும். வழக்குத் தொடுப்பவர் வழக்குகளைச் சாட்சியாலும், ஆவணத்தாலும், உடைமையாலும் மெய்ப்பிக்க வேண்டும். உரிமை இயல் வழக்குகளில் (சிவில்) பிரமாணங்கள், காரணங்கள், வழக்காறுகள், உறுதிமொழிகள், அரசரின் தனிப்பட்ட ஆணைகள், வாதிகளின் ஏற்பு ஆகியவைகளின்படி முடிவுகள் செய்யப்பட்டன. தண்டனைகளை நால்வகையாகப் பிரித்தனர். **திக்தண்டம்** (ஒழுக்கமுறை மறுப்பு), **வாக்குத்தண்டம்** (வாக்குத் தண்டனை), **அர்த்ததண்டம்** (தண்டங்கள்) உடல் சார்ந்த தண்டனைகள்—இதனை அரசர் மட்டுமே விதிக்கலாம்.

### சட்டம், நீதி

இதுவரையில் சட்டமும், தண்டனையும் தெய்வத்திற்கு உரிய இயலுலகு கடந்த குறிப்புகளிலிருந்து விடுதலை பெற்றிருக்கின்றன. சட்டம் நீதி பற்றியவைகளில் அரசரின் அதிகாரம் இறுதியாகக் கருதப்பட்டது குறிப்பிடத்தக்க கருத்து ஆகும். உரிமை இயல் (Civil) குற்ற இயல் (Criminal) என இரு பிரிவுகள் இதற்கு முன் இல்லை. தண்டனையில் படிநிலை வரிசை இக் காலத்தில் ஏற்பட்டுள்ளது என்பதையும் கவனிக்க வேண்டும். சட்டங்களை உருவாக்கியவராக அரசர் விளங்கினார். முரசறைந்து இச் சட்டங்களை அரசர் அறிவித்தார். எழுதப்பெற்ற அறிவிப்புகளாக அவற்றை வைத்தார். எனவே அரசரைச் சிறந்த வழிகாட்டி எனவும், காலத்தைப் படைத்தவரெனவும் சுக்கிரநீதி கருதுகிறது. கோட்பாட்டளவிலாவது சட்டம் இதுவரை இருந்து வந்த சமயச் சார்பிலிருந்து விடுவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தகுந்தது.

### இறைமை

அரசு உயிருள்ள பொருளோடு ஒப்பு நோக்கப்பட்டு அதன் உறுப்புகளாக இறை, அமைச்சு, நட்பு, பொருள், நிலம், அரண்கள், படை ஆகியவை கருதப்பட்டன. சட்டத்தைப் பரப்புபவராகவும், சமயத்தைப் பாதுகாப்பவராகவும், நீதியின் தலைவராகவும், தலையாய வழிகாட்டியாகவும், காலத்தைப் படைப்பவராகவும் இருக்கும் இவருடைய அதிகாரத்தில்தான் அரசரின் இறைமை (Sovereignty) இருந்தது. மக்களுக்கு அமைதியை அளிக்கும் கருவியாகவும், செல்வத்தைப் பெறுவதற்கான கருவியாகவும் அரச அதிகாரத்தைக் கருதுவது ஒரு பழமையான குறிக்கோளாகும். இத்தகைய

சூழ்நிலையில் முஸ்லீம்கள் இந்திய மண்ணில் காலடி வைத்தனர். சமய வெறியோடும், நன்கமைந்த ஒற்றுமையோடும் முஸ்லீம்கள் போரிட்டனர். மற்றொரு சாரார் (இந்தியர்கள்) குறுகிய தல நோக்கோடு அமைதியற்றும், ஒற்றுமையற்றும் போரிட்டனர்.

இராசபுத்திரர்களின் ஆட்சி முறையினால் ஏற்பட்ட நன்மை தீமைகளை ஆராய்கின்றபோது, இவ்வாட்சி முறையின் விளைவாகத் தன்னாட்சி உணர்வுகள் தலை தூக்கப்பட்டுத் தனித்தனிச் சிற்றரசுகள் தோன்றின எனத் தெரிகிறது. இச் சிற்றரசுகளின் தோற்றம் படை எடுத்து வருகின்ற அந்நியருக்கு அவர்கள் மேற்கொண்ட படை எடுப்பில் வெற்றியைத் தேடித் தந்தது. ஒவ்வோர் அரசும் தனித்தனியாகத் தங்கள் விருப்பம் போல் ஆட்சி நடத்தின. அதன் விளைவு இந்தியா முழுமைக்கும் பொதுவான ஆட்சி அமைப்பு முறை உருவாக்கப்பட இயலாமல் போனதே ஆகும். சிறிது சிறிது மாறுபட்ட ஆட்சி முறைகளை நாம் இஸ்லாமியரின் படை எடுப்பின் போது காணுவதே இக் காரணத்தினால்தான். இந்தியாவை ஒரே குடையின் கீழ்க் கொண்டுவர இயலாது போயிற்று.

பகுதி II

# 15. சங்க காலத் தமிழக ஆட்சி முறை

(Sangam Polity)

சங்ககாலத் தமிழக ஆட்சி முறையினைப் பற்றியும் அரசியல் வாழ்க்கையினைப் பற்றியும் அறியும் முன்னர் சங்க காலம் எது எனத் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும். சங்க இலக்கியங்களின் காலமே சங்க காலமாகும் என்று கூறப்பட்டாலும் சரியான உறுதிமிக்க சான்றுகளோடு ஒரு குறித்த காலத்தைக் காட்ட நம்மால் இயலவில்லை.

### சங்க காலம் எது

சங்க காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு எனத் திரு வி. கனக சபை என்பவர் உரைத்த கருத்துப் பொதுவாக வர லாற்றறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. டாக்டர் வின்செண்ட் ஸ்மித் சங்க காலம் கிறித்து சகாப்தத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளுக்குள் இருக்கலாம் என உரைத்தார். ஆனால் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் கிறித்துவ சகாப்தத்திற்கு முந்திய காலங்களைச் சார்ந்தது எனவும், டாக்டர் வி. ஆர். ஆர். தீட்சிதர் கி. மு. ஐந்தாம் நூற் றூண்டு எனவும் உரைத்துள்ளனர். டாக்டர் என். சுப்பிர மணியம் தம்முடைய நூலில் கிறித்து சகாப்தத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் உள்ள காலமே சங்க காலம் என்னும் முடிவினைக் காட்டுகிறார்.

### மூவரசர்கள்

சங்க காலம் குறித்த செய்திகளை இவ்வளவில் நிறுத்திக் கொண்டு, சங்ககால மக்களின் ஆட்சி அமைப்பு, வாழ்க்கை முறை முதலியவை எவ்வாறு அமைந்திருந்தன என்பது

குறித்து ஆராய்வோம். சங்க காலத் தமிழகத்தில் முடியாட்சியைத் தவிர வேறு எவ்வகை ஆட்சியும் இருந்ததாகத் தெரியவில்லை. எண்ணிறந்த குறுநில மன்னர்கள் இருந்தனர். தமிழகத்தின் வரலாறு அறிந்த காலம் முதல் சேரர்கள், சோழர்கள், பாண்டியர்கள் என மூன்று பெரிய அரச வம்சங்கள் இருந்தன. சேரர்கள் தென்மேற்குப் பகுதியிலும், சோழர்கள் வடகிழக்குப் பகுதியிலும், பாண்டியர்கள் தெற்கிலும், தென்கிழக்குப் பகுதியிலும் ஆண்டு வந்தனர்.

## அரச பதவி

அரச பதவியின் தோற்றம் மற்றைய இடங்களில் இருந்ததுபோல் இல்லாமல் மாறுபட்டு இருந்தது. முறையான அரசின் தோற்றம் முல்லை நிலத்திலிருந்து தோன்றியதாகத் திரு பி. டி. சீனிவாச ஐயங்கார் தம்முடைய நூலில் குறித்துள்ளார். அரசன் கோன், கோ எனப் பெயர் பெற்றான். முல்லை நிலத்தில் பசும் புல்வெளிகள் மிகுதி; ஆடு மாடுகள் அதிகம்; அங்குள்ள மக்களின் செல்வம் அவையே. அச் செல்வம் பிறரால் கவரப் பட்டால், கால்நடைகளைப் பாதுகாக்கவும், அவற்றால் வரும் வாழ்வைப் பாதுகாக்கவும் அரசு தேவைப் பட்டது. போருக்கு என்று—தங்களைக் காப்பதற்கு என்று ஒப்புக் கொண்டிருந்த தலைவனே நாளடைவில் அரசன் ஆயினன்.

## அரச பதவியின் படிநிலை

ஆட்சித் துறையின் மையமாக விளங்கியவன் அரசனே ஆவான். அரசனுடைய இடமும், இறைவனின் ஆலயமும் கோவில் என அழைக்கப்பட்டன. நிலையான புகழைப் பெற்றவன் மன்னன் எனவும், உயர்ந்த பெரிய அரசன் வேந்தன் எனவும் அழைக்கப்பட்டனர். மூவரசர்கள் மட்டுமே வேந்தர்கள் என அழைக்கப்பட்டு மூவேந்தர் எனப்பட்டனர். தொல்காப்பியம் மூவேந்தர் என்று உரைக்கிறது. வெற்றி பெற்றவன் என்னும் பொருளில் கொற்றவன் எனவும் அரசன் அழைக்கப்பட்டான்.

## மரபு வழி ஆட்சி

மரபு வழி ஆட்சியே பொதுவான முறையாக இருந்தது. ஆளுகின்ற அரசனின் மூத்தமகனே தொடர்ந்து ஆட்சி நடத்தினான். இது முறைமுதல் கட்டில் என அழைக்கப்பட்டது. சேர அரசன் செங்குட்டுவனே ஆட்சி நடத்துவது முறை என

இளங்கோ துறவு மேற்கொண்டது இதனை உறுதி செய்கிறது அறிஞர்களிடையே தந்தை வழியே அரச பதவியிருந்தது என்பது குறித்துக் கருத்து வேறுபாடு காணப்பட்டாலும், கிடைத்துள்ள சான்றுகள் தந்தையின் சொத்துகளுக்குத் தனயன் உரிமை பெற்றதையே நிலை நிறுத்துகின்றன. சங்க காலத் தமிழகத்தில் அரச பதவியைப் பெண்கள் பெறும் உரிமை இருந்ததாகத் தெரியவில்லை. வாரிசு அற்று அரசன் இறந்து விட்ட போது பட்டத்து யானையின் கையில் மாலையை அளித்து, அது யாருக்கு மாலையிடுகிறதோ அவனே அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். தேர்தல் முறை ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை. மரபு வழிமுறையே ஆட்சிக்கு வந்ததாக அறிகிறோம். அரசன் இளையோனாக இருந்தாலும் முடி சூட்டப் பட்டான். கரிகாலன், தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் ஆகியோர் இளம் வயதிலேயே முடி சூட்டப் பட்டவர்கள். முடி சூட்டப்பட்ட நாளிலிருந்து ஆட்சி நடத்திய ஆண்டுகள் கணக்கிடப்பட்டன.

### அரச அவை

சங்க காலத் தமிழக முடி மன்னர்களும், குறுநில மன்னர் களும் தங்கள் தங்கள் அவையைக் கூட்டினர். அரசனின் அவை அரசவை, ஓலக்கம், இருக்கை, வேட்டவை என அழைக்கப் பட்டது. அரசு அலுவல்கள் இவ் வவையிலேதான் நடைபெற் றன. அரசவையில் அரச குடும்பத்தினர், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் ஆகிய அனைவரும் பங்கேற்றனர். அவையில் நேரடியாக அரசர் கலந்து கொண்டார். அரச அவையில் இசை முழக்கங்களும் கேட்பதுண்டு. அரசன் பொது மக்கள் மத்தியில் தோன்றுவதற்குக் கட்டுப்பாடு ஏதும் விதிக்கப் படவில்லை. அரசனோடு அரசவையில் அரசியும் வீற்றிருந் தாள். நெடுஞ்செழியன் அவையில் கோப்பெருந்தேவி இருந்த செய்தி சிலப்பதிகாரம் மூலம் நமக்குத் தெரியவருகிறது. தன்னுடைய ஆலோசனை தேவைப்பட்டால் ஒழிய அரசி அரசு அலுவல்களில் பெரும்பாலும் கலந்து கொள்வதில்லை. அரசனும் அரசியும் ஒன்றாகவே அவைக்கு வந்தனர்.

### அரசர்களின் இயல்பு

அரசன் அரியணையில் செங்கோல், வெண்கொற்றக் குடை ஆகியவற்றுடன் அமர்ந்திருந்தான். அரசனுக்கு வலது புறத்தில் தூதுவர்கள், மற்ற நாட்டுத் தலைவர்கள் அமர இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அரச அவையில் புலவர்கள் சிறப் பிடம் வகித்தனர். அரசர்கள் பெரும்பாலும் கல்விமான்களா

கவும், கற்றறிந்தோரைப் போற்றும் திறத்தவராகவும் இருந்தனர். புரோகிதர்கள், பெருங்கணி, அமைச்சர்கள், தானைத் தலைவர்கள் ஆகியோர் தங்கள் தங்கள் இடங்களில் அமர்ந்திருந்தனர். அரசனின் ஆணையை எதிர்பார்த்தவர்களாகவே இருந்தனர். கொள்கை அளவில் அரசனுக்கு அறிவுரை கூறும் அமைப்பாகவே அவை இருந்தது. வயது முதிர்ந்தோர், அனுபவசாலிகள், அறிவாளிகள், கற்றறிந்தோர் ஆகியோர் அரசனுக்கு அறிவுரை கூறும் வல்லமை பெற்றிருந்தனர். அரசனுக்கு அறிவுரை கூற என்று தனியாக அமைப்பு எதுவுமில்லை. சட்டத்தை உருவாக்குபவனாக அரசன் இல்லை. சட்டத்தின் காவலனே அரசன். ஏனென்றால் வழக்கில் இருந்தவைகளையே அரசர்கள் மதித்தனர்.

### அரசனின் பிறந்த நாள் விழா

அரசனின் பிறந்த நாள் விழா ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுப் பெருநாள் என அது அழைக்கப்பட்டது. அந்நாளில் கைதிகளை விடுவித்தல், வரியைத் தள்ளுபடி செய்தல் ஆகிய செயல்கள் மேற்கொள்ளப்பட்டன. அரசர்களுக்கு என ஐவகைச் செயல்கள் இருந்தன. அவை கற்றல், வேள்வி நிகழ்த்தல், அன்பளிப்புகள் அளித்தல், குடிகளைக் காத்தல், தீயோரை ஒறுத்தல் ஆகியவை ஆகும். இராசசூயம், அசுவமேதம் ஆகிய வேள்விகளையும் அரசர்கள் நிகழ்த்தினர்.

### கல்விமான்கள்

அரசன் முறை வைத்துக் கொண்டு காரியங்களை முறைப்படி நடத்தவில்லை. அரசர்கள் வேட்டையாடுதலை மிக விருப்பமுடன் மேற்கொண்டனர். காட்டு விலங்குகளைக் கொன்று மக்களைக் காத்தனர். அரசர்கள் பெரும்பாலும் தலைநகரில் நாட்களைக் கழித்தனர். மாற்றாரை வென்ற பின்னர் அவர்தம் பிரதேசங்களில் ஆட்சி முறையினை மேற்கொள்ளச் சிறிது காலம் அங்குத் தங்கினர். சங்க கால அரசர்கள் கல்விமான்களாகவும், புலவர்களாகவும் திகழ்ந்தனர். இலக்கியப் படைப்புகளைச் சுவைத்து அவைகளை ஆக்கியவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்குவதைப் பெருமைக்குரிய செயலாகக் கருதினர்.

### முடிதுறப்பு

அரசர்கள் மக்களால் விரட்டப்பட்டதாகவோ, மக்கள் அரசியல் புரட்சிகள் ஏதும் நடத்தியதாகவோ தெரியவில்லை. சில சமயங்களில் அரசர்கள் தாங்களாகவே பதவியைத் துறந்தனர். போரில் தோல்வியுற்ற போதும், மகன் தந்தைக்கு

எதிராகக் கிளர்ந்து எழுந்த போதும், தோல்வி அடைந்த அரசன் சிறைப்பட்ட போதும் அரசர் முடி துறந்தனர். தோற்றவர்கள் மானத்திற்கஞ்சி வடக்குத் திசை நோக்கி அமர்ந்து உண்ணா நோன்பு மேற்கொண்டு உயிர் துறந்தனர். அரசர்கள் போர்க் களத்தில் உயிர் துறத்தலையே பெருமைக்குரிய ஒன்றாகக் கருதினர்.

### அரண்மனை

கோயிலாள், மனையாள் என்றும் அரசியார் அழைக்கப்பட்டார். அரசனின் அந்தப்புறத்து மகளிர் உரிமை மகளிர் என அழைக்கப்பட்டனர். அரசனின் மூத்தமகன் கோமகன் என்றும், இளைய மகன் இளங்கோ என்றும் அழைக்கப்பட்டனர். அரண்மனையினுள் பாணர், பொருநர், பார்ப்பனர், தூதுவர் ஆகியோர் தடையின்றி உட்செல்ல அனுமதிக்கப்பட்டனர். வெளிநாட்டு அடிமைகள், அலிகள் போன்றோர் அரண்மனையில் பணியாட்களாக அமர்த்தப்பட்டனர். அரசியின் அந்தப்புரத்தில் அரச குடும்பத்தவர் தவிர வேறு ஆடவர் யாரையும் அனுமதிக்கவில்லை. அரசியின் இருப்பிடம் சிலப்பதிகாரத்தில் கோப்பெருந் தேவியின் கோயில் என அழைக்கப்பட்டது. அரசர்கள் தங்களுக்கெனச் சின்னங்கள் கொண்டிருந்தனர். சோழர்கள் புலிச் சின்னத்தையும், சேரர்கள் வில் சின்னத்தையும், பாண்டியர்கள் மீன் சின்னத்தையும் கொண்டிருந்தனர். அரசு வருவாய் முழுவதும் அரசருக்கே சொந்தமாய் இருந்தது. எனவே அரசர் தம் விருப்பம் போல் செலவுகள் செய்தார்.

### செங்கோல்

அரசன் தன் சின்னங்களோடு அரச பதவியைக் குறிக்க முடி, வெண் கொற்றக்குடை, முரசு, கொடி போன்றவைகளைக் கொண்டிருந்தான். சேர, சோழ, பாண்டியர்கள் முடியுடைய வேந்தர்களாக இருந்தமையால் அவர்கள் முடியுடை வேந்தர் என அழைக்கப்பட்டனர். அரச பதவியைப் பெறும் விழா முடி சூட்டல் எனச் சொல்லப்பட்டது. அரசன் தன் கையில் செங்கோலைக் கொண்டிருந்தான். நீதி நெறி வழுவாது (வாழ்ந்தால்) ஆண்டால் செங்கோன்மை என்றும், நீதி நெறி தவறினால் கொடுங்கோன்மை என்றும் கருதினர். அரசன் ஆசனத்தில் அமர்ந்த போது பணியாட்கள் வெண்கொற்றக் குடையினைப் பிடித்திருந்தனர். அரசனின் அதிகாரத்தை வலியுறுத்த முரசு பயன்பட்டது. வீர முரசு, தியாக முரசு, நியாய

முரசு என மூன்று வகைப்பட்ட முரசுகளிருந்தன. ஒவ்வொரு அரசரும் தங்கள் சின்னங்களைக் கொடிகளில் பொறித்தனர். சேரர்கள் பனம்பூ மாலையையும், சோழர்கள் ஆத்தி மாலையையும், பாண்டியர்கள் வேம்பு மாலையையும் அணிந்தனர். அரசர்கள் வெண்சாமரமும் வைத்திருந்தனர். ஒவ்வொரு அரண்மனையிலும் பட்டத்து யானையொன்று அரசன் ஏறிச் சென்று போர் செய்வதற்கு உதவியாக இருந்தது.

### அரசன் அளித்த பட்டங்கள்

அரசன் எட்டி, காவிதி, ஏனாதி ஆகிய சிறப்புப் பட்டங்களை வழங்கினான். தூதுவர்கள் ஒற்றர்களை விட மேம்பட்டவர்களாகக் கருதப்பட்டனர்.

சங்க காலத்தில் புரோகிதர் ஆசான் அல்லது கருமவினையினன் என்று அழைக்கப்பட்டார். ஐம்பெருங் குழுவில் ஆசான் இடம் பெற்றிருந்தார். புரோகிதர்கள் பெரும்பாலும் பிராமணர்களாகவே இருந்தனர். திருக்குறளில் அமைச்சர்களோடு புரோகிதர்களை ஒன்றாகக் கருதவில்லை என்பதைப் பின்னால் தனி அத்தியாயத்தில் காண்போம்.

### சோதிடர் (நிமித்திகன்)

அரசர்கள் சோதிடத்தில் (நிமித்திகத்தில்) நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தனர். நல்ல நேரங்கள், சிறந்த பொழுதுகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள நிலையாகச் சோதிடர்களை வைத்திருந்தனர். சோதிடர்கள் கணியர் என அழைக்கப்பட்டனர். இவர்களுடைய கடமை நல்ல நேரத்தை, நல்ல நாளை, நல்ல வேளையை அரசர்க்கு எடுத்துரைப்பதும், நாட்கள், மாதங்கள் ஆகியவற்றைக் கணக்கு வைத்திருப்பதும் ஆகும். நாழிகைக் கணக்கர் என்னும் சிறிய அதிகாரிகளும் இருந்தனர். இவர்களைத் தவிர மந்திரக் கணக்கர் என்னும் அலுவலர்களும் இருந்தனர்.

### ஆட்சித் துறைப் பிரிவு

ஆட்சித் துறையின் பிரிவுகளை ஆராய்கின்ற போது அடிப்படையான பிரிவு கிராமமே என்று தெரிகிறது. தன்னுடைய செயல்களைக் கிராமமே கவனித்துக் கொண்டது. ஊர் என்றால் நகரம் என்று பொருள் கொள்ளப்படுகிறது. ஆனால் பல வீடுகள் சேர்ந்து உருவான சேரியைவிட்டப் பெரிதாகவே ஊரிருந்தது. கிராமத்தினுடைய விவகாரங்களை ஆராய்கின்ற போது

**மன்றம், பொதியில், அம்பலம், அவை** ஆகியவை ஒரே பொருளைத் தருகின்ற சொற்களாகக் காணப்படுகின்றன. திருமுருகாற்றுப் படையில் மன்றமும், அம்பலமும் தனித் தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பொதியில் என்னும் கிராமத்தின் நுழைவில் பிரயாணிகள், பாணர்கள் தங்கினர் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதியிலில் யானைக் குட்டிகள் கட்டப்பட்டிருந்ததாகப் புறநானூறு கூறுகிறது. எனவே பொதியில் என்பது கிராமத்திற்கு வெளியே இருந்த கிராமத்தைச் சார்ந்த இடம் எனவும் ஒய்வெடுக்கவும், உரையாடல் நிகழ்த்தவும், கிராமச் சம்பந்தமான அரசியல் பணிகளைக் கவனிக்கவும் மரத்தடியில் மக்கள் கூடினர். பொதியில், மன்றம் ஆகியவை கிராமத்தில் ஏற்படக் கூடிய வழக்குகளைத் தீர்ப்பதற்குரிய கிராம நிறுவனம் ஆகும். வரிசைப்படுத்தப்பட்ட அதிகாரிகள் யாரும் இல்லை. வயது முதிர்ந்தோரே அதிகாரம் படைத்து இருந்தனரெனவும் அறிகிறோம்.

## கிராமம்

ஐம்பெருங்குழு, எண் பேராயம் ஆகிய இரண்டும் அரசனோடு தொடர்பு கொண்ட குழுக்கள். **மாசனம், புரோகிதர்** என்போர் ஐம்பெருங் குழுவினரென்று சிலப்பதிகார அரும்பத உரை ஆசிரியர் கூறியுள்ளார். மாசனம் என்பது குடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் குறிப்பது. இவர்கள் குடிகளின் நலன்களையும், தேவைகளையும் அரசனிடம் எடுத்துக் கூறினர். புரோகிதர் சமயத் தொடர்பான செயல்களைக் கவனித்தனர். நாட்டுச் சுகாதாரத்தை மருத்துவர்கள் கவனித்து வந்தனர். நாட்டிற்கு நடைபெற வேண்டிய நல்ல செயல்களைத் தொடங்குவதற்குரிய நாளையும், கோத்தையும் குறிக்கவும், வருவது உரைக்கவும் கணியர் பயன்பட்டனர். நாட்டின் வருவாயையும் அரசாங்கச் செலவையும், நீதி முறையையும் அமைச்சர்கள் கவனித்தனர். சிலப்பதிகாரத்திற்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லார் (1) அமைச்சர், (2) புரோகிதர், (3) படைத் தலைவர், (4) தூதுவர், (5) சாரணர் ஆகிய ஐவர் அடங்கிய குழுவே ஐம்பெருங் குழு என்று கூறியுள்ளார்.

## ஐம்பெருங் குழுவும் எண் பேராயமும்

**கரணத்தியலவர், கர்மவிதிகள், கனகச் சுற்றம், கடை காப்பாளர், நகர மாந்தர், படைத் தலைவர், யானை வீரர், இவுளி மறவர்** என்போர் எண் பேராயத்தவராவர். மன்னன் ஐம்பெருங் குழுவினரையும், எண் பேராயத்தாரையும் கலந்தே

ஆட்சி புரிந்தான். மன்னர்கள், இப் பெருமக்கள் நற்குடிப் பிறப்பு, கல்வி, தூய உள்ளம், நல்லொழுக்கம், உண்மை உடைமை, நடுவு நிலைமை முதலிய நற்பண்புகள் பெற்றிருக்க வேண்டுமென்று எதிர் பார்த்தனர். இவர்களும் நாட்டுப் பெரு விழாக்களிலும், நாட்டுப் பெருஞ் செயல்களிலும் கலந்து கொண்டனர்.

### அமைச்சர்கள்

அரசருக்குதவியாக அமைச்சர்கள் பலர் இருந்தனர். அவர்கள் தங்களிடம் ஆலோசனை கேட்கப்பட்டவற்றிற்கு ஆலோசனை வழங்கினர். மதுரைக் காஞ்சியில் அமைச்சர் காவிதி மாக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். அறை போகு அமைச்சர், நூலறி புலவர், அருந்திறல் அமைச்சர் என்று சிலப்பதிகாரம் அமைச்சரைப் பற்றிக் கூறுகிறது. திருக்குறளில் அமைச்சர் இலக்கணத்தையும், கடமைகளையும் பற்றிக் கூறப்பட்டுள்ளவை குறள் கூறும் அரசியல் நெறி என்னும் தலைப்பில் கூறப்படும்.

### தூதுவர்கள்

சங்க கால அரசர்கள் தங்கள் பிரதிநிதிகளாகத் தூது வர்களை அனுப்பினர். அவர்களை இக்கால மொழியில் அம்பா செடர்கள் (Ambassadors) என்று அழைக்கலாம். தூதுவர் களாக இளவரசர்களும், பிராமணர்களும் அனுப்பப்பட்டனர். சங்க காலத்தில் ஔவையார், கோவூர்க்கிழார் போன்ற புல வர்களும் தூது சென்றனர். சங்க காலத் தமிழ் மன்னர்கள் துப்பு அறிதல்பொருட்டு ஒற்றர்களை வைத்திருந்தனர். ஒற்றர்கள் அயல் அவைகளில் தூதுவர்களைப் போல சிறப் பிடம் பெறவில்லை.

### ஆட்சிப் பிரிவுகள்

கண்டிப்பான முறை எதனையும் கொண்டு மாநிலங்கள் மாவட்டங்கள் என்று பிரிவுகள் பிரிக்கப்படாவிட்டாலும், ஆட்சித் துறைப் பிரிவுகள் இருந்தன. சிறியதாக இருப்பினும், பெரியதாக இருப்பினும் நாடு முழுவதும் மண்டலம் என அழைக்கப்பட்டது. சேர மண்டலம், சோழ மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகியவை முன்னர் இருந்த மண்டலங் கள். பின்னல் தோன்றியவை கொங்கு மண்டலம், தொண்டை மண்டலம் ஆகியவை ஆகும். நாடு என்பது மண்டலத்தின் துணைப் பிரிவு ஆகும். நாட்டின் உட்பிரிவு கோட்டம் என்று

வி. ஆர். ஆர். தீட்சிதர் உரைக்கின்றதனை உ. வே. சுவாமிநாத ஐயர் ஒப்புக் கொள்கிறார். கோட்டம் என்பது கூற்றம் என் பதின் திரிபே ஆகும். ஊர் என்பது நகரமாகும். அது பேரூர் எனவும் அழைக்கப்பட்டது. சிறிய கிராமம் சிற்றூர் என அழைக்கப்பட்டது. பழைய கிராமம் மூதூர் என அழைக்கப் பட்டது. கடற்கரை நகரம் பட்டினம் என அழைக்கப்பட்டது. பாக்கம் என்பது நகரத்தை அடுத்த பகுதியாகும். சாலை என்பது நெடுஞ்சாலை. தெரு என்பது நகரத்தின் ஒரு தெரு. ஆவணம் அல்லது அங்காடி என்பது கடைவீதி. கிராமத்தின் ஆட்சி அமைப்புகள் தெரிந்தபோது நகராட்சி பற்றிய குறிப் புகள் காணப்படவில்லை. ஆனால் ஏதோ சில முறைகள் இருந் தன என்று மட்டும் அறிகிறோம். மக்கள் தொகைக் கணக் கெடுப்பு இருந்ததா எனத் தெரியவில்லை. அங்கியரைத் தனி யாகக் கவனிக்க அவையோ குழுக்களோ ஏற்படுத்தப் படவில்லை.

பெரிய நகரங்களும், தலைநகரங்களும் வளம் பெற்ற போது கிராமங்கள் சீரழிந்தன. முக்கியமான நெடுஞ்சாலை களில்லை. முன்சிபல் (நகர) அரசு பற்றிய முறை ஏதும் இல்லை. எனினும் பெரிய நகரங்கள் அருமையாகக் கவனித்துக்கொள் ளப்பட்டன. நகரங்களில் இரவில் தகுந்த பாதுகாப்பு இருந் தது. ஊர்க்காவலர் இரவில் உறக்கம் தவிர்த்து ஊர் சுற்றி வந்தனர்.

### போர்க் காரணம்

கால் நடைகளைக் கடத்துதலே போருக்கு முக்கிய காரண மாக அமைந்தது. நோயுற்றோர், பிராமணர்கள், பசுக்கள், பெண்கள், பிள்ளையில்லாதவர்கள் ஆகியோரைப் போரில் கொல்லக் கூடாது என்று விதிக்கப்பட்டிருந்தது. அழிவுச் செயலுக்கே படை வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. காலாட் படை, குதிரைப் படை, யானைப் படை, தேர்ப் படை ஆகியவை இருந்தன. படை வீரர்களுக்குத் தலைவன், தானைத் தலைவன், படைத் தலைவன் என அழைக்கப்பட்டான். அவர்கள் வேல், வில், வாள் முதலியன கொண்டு போரிட்டனர்.

### நீதித்துறை

சங்க காலத் தமிழகத்தில் நீதித்துறை எவ்விதமிருந்தது என்பது குறித்து ஆராய்கின்றபோது தலைநகரங்களில் அவை என்னும் அமைப்பும், கிராமங்களில் மன்றம் என்னும் அமைப்பும் இருந்தன என அறிகிறோம். நீதித்துறைப் பணி

களை மேற்கொள்ளத் தனியே நீதிபதிகளோ (Judges) அமைதி காப்பு நடுவர்களோ (Magistrates) நியமிக்கப்படவில்லை. அரசரின் அவை, நீதி வழங்குமிடமாகப் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. தலைநகரில் அரசரே நீதி மன்றத்திற்குத் தலைமை தாங்கினர். தலைநகரில் இருந்த கற்றறிந்தோர் நீதி வழங்கிட அரசர்க்கு ஆலோசனை கூறினர். நீதி மன்றம் அறக்களம் என அழைக்கப்பட்டது. அது அறங்கூறு அவையம் எனவும் அழைக்கப்பட்டது. அவையின் அனுமதியின்றி அரசன் தீர்ப்பு வழங்கினலும், அரசனின்றி அவையினர் தீர்ப்பு வழங்கியதாகத் தெரியவில்லை. வழக்குத் துறை எனவும் தீர்ப்பு முறை எனவும் வழங்கப்பட்டது. நீதி வழங்குவதற்கு வயதும், அனுபவமும் அவசியம் என்று கருதப்பட்டது. கரிகாற் சோழன் பற்றி அறிகின்ற செய்தி ஒன்றின் மூலம் அரசனே வழக்குகளை விசாரித்தான் எனவும், இளைய அரசன் தீர்ப்பு வழங்குவதை விரும்பாதிருக்கும் உரிமை மக்களுக்கு இருந்தது எனவும், அரசன் அதைத் தவருகக் கருதவில்லை எனவும் அறிகிரேம். அவையத்தார்களுள் காவிதி என்னும் பட்டம் பெற்ற அமைச்சர்களும் இருந்தனர்.

**உரிமை இயல், குற்ற இயல் (Civil, Criminal)**

உரிமை இயல், குற்ற இயல் என இருவகை வழக்குகளும் இருந்தன. உரிமை இயல் வழக்குகளைவிடக் குற்ற இயல் வழக்குகள் பற்றியே அதிகம் கேள்விப்படுகிரேம். வழக்கு விசாரணை மிக எளிய முறையில் இருந்தது. சாட்சிகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. நீர், நெருப்பு ஆகியவற்றைக் கொண்டு ஒருவன் குற்றவாளியா இல்லையா என்னும் சோதனை முறை பல்வேறு நாடுகளில் இருந்ததுபோல் தமிழ் நாட்டிலும் இருந்தது.

*மரண தண்டனை*

திருட்டிற்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது என்பதற்குச் சிலப்பதிகாரமே சான்று பகர்கிறது. வரி கொடாமை, நிலவரி செலுத்தாமை ஆகியவை உரிமையியல் வழங்குகளாகக் கருதப்பட்டு ஏற்றவாறு தண்டனை வழங்கப்பட்டது. குற்றவாளிகள் காவலர்களால் கைது செய்யப்பட்டனர். உடல் உறுப்புக் குறைத்தல், சித்திரவதை செய்தல், தண்டம் விதித்தல், சிறையிலடைத்தல் ஆகியவை தண்டனைகளாக விதிக்கப்பட்டன. தண்டனைகள் மற்றவர்கள் அவற்றைச் செய்யக் கூடாது என்பதற்காகவே விதிக்கப்பட்டனவே தவிர, குற்றவாளிகள் திருந்த வேண்டும் என்பதற்காக விதிக்கப்படவில்லை.

**இறை**

ஆட்சி நடத்திடப் பொருள் தேவைப்பட்டது. அதன் பொருட்டு அரசர்கள் பலவிதமான வரிகளை விதித்தனர். நில வரியே முக்கியமான வரியாக இருந்தது. வரியை இறை என்றே அக்காலத்தவர் அழைத்தனர். எதிரிகளிடமிருந்து வசூலிக்கப்பட்டதும் இறை என்றே அழைக்கப்பட்டது. முறை கேடான வழிகளில் அரசன் வரி வசூலித்தால் அந்த அரசு நிலைபெறாது என மக்கள் கருதினர். வரி செலுத்தக் கூடிய பிரிவு வாரியம் என அழைக்கப்பட்டது. விளைபொருளில் ஆறில் ஒரு பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது. சில சந்தர்ப் பங்களில் அரசன் வரியைத் தள்ளுபடி செய்தான். புதிதாக ஆலயங்கள் எழுப்பப்பட்ட போதோ, அரசன் எதிரியை வெற்றி கொண்ட போதோ, மக்கள் ஒருமித்துக் கொண்ட போதோ அரசன் வரி வசூலித்தலை நிறுத்தி வைத்தான். அரசன் நிலவரி செலுத்த வேண்டாத நிலங்களாகச் சில வற்றை விட்டு வைத்திருந்தான். அவை இறையிலி நிலங்கள் என அழைக்கப்பட்டன. நிலவரி தவிர வாரிசில்லாதார் சொத்துகளும், தோற்ற எதிரிகளுடைய சொத்துகளும் அரசனைச் சார்ந்தன. வசூலிக்கப்பட்ட வரிகள் போரிடு வதற்கும், அறப்பணிகள் செய்யவும், ஆலயங்கள் எழுப்பவும் செலவிடப் பட்டன.

நிலவரி தவிர மற்ற வரிகளுக்கும் பணத்திற்குப் பதிலாகப் பண்டங்களாகக் கொடுத்தனர். பொது மக்களும் அரசனுக்கு அன்பளிப்பு வழங்கினர்.

**முடிவுரை**

நாம் இதுவரை பார்த்தவற்றிலிருந்து சங்க காலத் தமிழ் மக்களுடைய ஆட்சியமைப்பு முறையினைப் பற்றிய செய்திகளை அறிந்து கொண்டோம். திருக்குறளில் கூறப்பட்டுள்ள முறை களைத் தனியாக அறிய வேண்டுவது அவசியமாகும். ஏனென் றால் நாம் இதுவரை சங்க காலத்தில் நிலவிய ஆட்சி அமைப்பு முறை பற்றிய பொதுக் கருத்துகளையே கண்டோம். திருக் குறளில் கூறப்பட்டுள்ள ஆட்சி அமைப்பு முறைகளைப் பற்றி இந்த அத்தியாயத்தில் அங்குமிங்குமாக மேலெழுந்த வாரி யாகக் குறிப்பிட்டுள்ளோம். ஆனால் விளக்கமாக அதனைக் கையாளாததன் காரணம் பின்னால் விளக்கமாக அதனைப் பற்றி ஒரு கட்டுரையில் விளக்கப்படுவதே ஆகும். சங்க காலத் தமிழ் மக்கள் பண்பட்டவர்களாக, முறைப் படுத்தப் பட்ட நெறிப் படுத்தப்பட்ட சிறந்த ஆட்சி முறையைக் கொண்டிருந்தனர் என்பதே நம் முடிவு ஆகும்.

# 16. திருக்குறள் கூறும் ஆட்சியியல் நெறி

## (Thirukkural Polity)

*முப்பால்*

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் திருக்குறள், ஆட்சியியல் நெறி பற்றியும் விளக்கக் கூடிய ஒரு நூலாகும். குறளின் காலம் பற்றியும், திருக்குறளை உருவாக்கிய திருவள்ளுவர் எச் சமயத்தவர் என்பது குறித்தும் அறிஞர் பெருமக்களிடையே கருத்தொற்றுமையில்லை. குறளில் காணப்படுகிற அரசியல் நெறிமுறைகளைப் பற்றி மட்டுமே நம் கவனத்தைச் செலுத்த வேண்டும். திருக்குறள் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களைக் கொண்டது. அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப் பால் என மூன்று பிரிவுகளாக அது பிரிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று பிரிவுகளிலும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவைகளைப் பற்றி நாம் குறள் மூலமாக அறியும் போது நம் மனத்தில் பண்டைக்கால இந்திய இலக்கியங்களில் காணப்படும் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் ஆகியவை எதிரொலிக்கின்றன எனச் சில வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். திருக்குறளில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றைப் பற்றி மட்டும் வலியுறுத்துவதால் அதனை முப்பால் என்று அழைக்கின்றனர். பொருட்பாலின் எழுபது அதிகாரங்களையும் மூன்று பிரிவுகளாக அரசில், அங்கவியல், ஒழிபியல், (அரச பதவி, அரசின் அங்கங்கள், இவை தவிர்த்த அரசோடு இயைந்தவைகள்) என அழைக்கின்றனர்.

*திருக்குறளுக்கும் அர்த்த சாத்திரத்திற்கும் உள்ள ஒற்றுமை*

திருக்குறளை ஆராய்கின்ற போது அர்த்த சாத்திரத்திற்கும், திருக்குறளுக்கும் பல ஒற்றுமைகள் இருப்பதை அறிகிறோம். திருக்குறள் எந்த நூலையும் பின்பற்றி எழுதப்படாத நூலாகும். ஆனால் திருவள்ளுவர் எதனையும் பின்பற்றாது சொந்தக் கருத்தாக எழுதினாலுங்கூட அவ்வாறு எழுதுவ

தற்கு அடிப்படை நாட்டில் தர்ம சாத்திரம் போன்றவை வேரூன்றியிருந்ததே ஆகும். பழக்க வழக்கங்கள், சமுதாய முறைகள் ஆகியவை தர்ம சாத்திரங்களின் அடிப்படையில் இருந்தன. வள்ளுவர் அவர் காலத்துச் சமுதாயத்தை விளக்கும் போது, அவரது நூல் அவரையும் அறியாமலேயே தர்ம சாத்திரங்களின் அடிப்படையில் அமைந்து விட்டது என்றும் சில வரலாற்று ஆசிரியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். அவற்றை நாம் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனென்றால் தமிழகத்தில் அறக் கருத்துகள் வழக்கிலிருந்தன. அவற்றையே வள்ளுவர் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

### வேறுபாடு

வள்ளுவருக்கும், கௌடில்யருக்கும் உள்ள வேறுபாடு என்ன? கௌடில்யருடைய அர்த்த சாத்திரம் ஸ்வதர்மா என்னும் தனி மனிதனின் கோட்பாடு. அது அதனை நிலை நிறுத்தத் தண்ட நீதியைப் பயன்படுத்தல் பற்றிய செய்திகளை முன் வைத்துப் பேசுகிறது. ஆனால் திருக்குறளில் அரசு என நாட்டைப்பற்றியும், அதனுடைய தலைவனான அரசனைப் பற்றியும் உரைக்கப்பட்டுள்ளது. திருக்குறளில் அரசனின் கடமைகள், அரசனுவதற்குரிய தகுதிகள் ஆகியவை பற்றிக் கூறிய பின்னர், அமைச்சர்கள், சுற்றம் ஆகியவைபற்றிக் கூறப்பட்டது. திருக்குறள் சமுதாய விளக்கநூல். கொள்கையளவில் மட்டும் உள்ள கருத்துகளை விளக்கும் நூலாக அமையாது வாழ்க்கை அனுபவ ரீதியான நூலாகவும் விளங்குகிறது.

### சமுதாய வாழ்க்கை

திருக்குறளில் அரசுபற்றியும் அரசன் பற்றியும் மட்டுமே பேசப்படுகிறதே தவிர, சமுதாய அமைப்புப் பற்றியோ, அந்தச் சமுதாய அமைப்பு அரசியல் வாழ்க்கைக்கு எவ்வாறு துணை நின்றது என்பதுபற்றியோ ஏதும் கூறப்படவில்லை. அதே நேரத்தில் அர்த்த சாத்திரம் நாட்டைப்பற்றியும், அரச பதவியின் வளர்ச்சி பற்றியும் உரைக்கிறது.

### அரசன்

நாம் இனி வருகின்ற பத்திகளில் குறளில் கூறப்பட்டுள்ள செய்திகளைக் காண்போம். முதலில் அரசனைப் பற்றியும் அரசனுடைய செங்கோல் பற்றியும் கூறப்பட்டுள்ள செய்திகளைக் காண்போம். ஒருவனைச் சிறந்த அரசனாகக் கதிருட

அவன் சிறந்த படையினையும், வளம்மிக்க மக்களையும், பெருகுகின்ற செல்வத்தையும், நம்பிக்கைக்குரிய அமைச்சர்களையும், சிறந்த நண்பர்களையும் பெற்றிருக்க வேண்டும். சமுதாயத்தின் காவலன் அரசன் என்னும் விதிமுறையிலிருந்து வழுவாமல் நடப்பதே அரசனின் முக்கிய பணியாயிற்று. சமுதாயத்தைக் காக்கின்ற பணியில் ஈடுபட்டுள்ளபோது ஏற்படுகின்ற இடையூறுகள், தொல்லைகள், துன்பங்கள் ஆகியவற்றை அரசன் மிகவும் கவனமாக நடந்து வெற்றி கொள்கிறான். அரசனுடைய கடமை அரச தர்மத்தை நிலைநிறுத்துவது. இக் கருத்தினைத் திருக்குறள் மட்டுமின்றி எல்லா இலக்கியங்களுமே வலியுறுத்துகின்றன.

## கடமை

மக்களைக் காத்து முறையாக நீதி வழங்குகின்ற அரசன் இறைவனுக்குச் சமம் என்று கருதப்பட்டான். அரச தர்மத்தைக் காப்பது மட்டும் அரசனுடைய கடமையில்லை. பொருளுதவி வேண்டி நிற்போர்க்குப் பொருளுதவி அளித்தலும், தன் பாதுகாப்பின்கீழ் இருப்போரை அன்புடன் நடத்துதலும், பாகுபாடின்றி நீதி வழங்குதலும், மக்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளித்தலும், தலையாய கடமைகளாகக் கருதப்பட்டு அவ்வாறு கடமைகளை நிறைவேற்றுவோனை மிகச் சிறந்த அரசனாகத் திருவள்ளுவர் கருதினார்.

## மக்களின் இறைவன்

மக்களைக் காத்து நீதிநெறி வழுவாமல் ஆள்பவனே மக்களில் இறைவனாகக் கருதப்படுவான் என்பதோடு, கொடியவர்களைக் கொலைத் தண்டனையால் ஒறுத்தலும் அவசியமாயிற்று. கொலைத் தண்டனை வழங்குவது பயிரைக் காப்பாற்றிட வேண்டி நிலத்தில் உள்ள களையினைக் களைவதற்கு நிகரான செயலாகக் கருதப்பட்டது. குடிகளை வருந்தச் செய்கின்ற முறையில்லாத செயல்களைச் செய்து நடக்கும் அரசன் கொலைத் தொழிலைக் கொண்டவரை விடக் கொடியவனாகக் கருதப்பட்டான். நாட்டை நல்ல முறையிலே காக்க வேண்டிய அரசன் தவறி நடந்தால் என்ன ஏற்படும் என்பதனையும் குறள் நமக்கு உரைக்கின்றது. பால் தருகின்ற பசுக்கள் பால் தருதலாகிய பயன் குன்றும். அது மட்டுமா? அந்தணர்கள் அதாவது அறவோர்கள் அறநூல்களை மறந்து விடுவார்கள். அரசன் தனக்குத் துணையாக உள்ள சிறந்த அறிஞர்களுடைய கருத்துகளைக் கேட்டு

நடவாது எதையும் ஆராயாமல் செய்தால் பொருளை இழந்து விடுவான்.

### அரசனின் செங்கோல்

அரசன் குடிகளை அன்போடு அணைத்துக்கொண்டு செங்கோல் செலுத்திடல் வேண்டும். அத்தகைய அரசனுடைய அடிகளைப் பொருந்தி உலகம் முழுவதும் நிலைபெறும். ஓர் அரசனுக்கு வெற்றியைத் தேடித் தருவது வேல் அன்று; அதாவது போர்க்களத்திலே பெறுகின்ற வெற்றி மட்டுமில்லை; அரசனுடைய செங்கோலும் ஆகும். அரசன் அரிய செல்வி உடையவனும், ஆராய்ந்து நீதிமுறை செய்பவனும் இருத்தல் வேண்டும். நீதி முறைப்படி செங்கோல் செலுத்தும் அரசனுடைய நாட்டில் பருவ மழையும், நிறைந்த விளைவும் ஒருசேர ஏற்படும். குறள், நேரான நீதிமுறை வழுவாத ஆட்சியை வலியுறுத்தி அரசனை மழைபெய்தலுக்குக் கூடக் காரணமாகக் காட்டுகிறது. மழையினால் உலகம் நலம் பெறுகிறது. அதைப்போல் நல்லாட்சியினால் மக்கள் நலம் பெறுகின்றனர். அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி, துணிவுடைமை ஆகிய குணங்கள் அரசனிடம் எதிர்பார்க்கப்பட்டன. அரசன் தன் பணியாளர்களைக் கண்காணித்துக் கொள்ளவேண்டி இருந்தது. கொடுங்கோன்மையான, முறையற்ற ஆட்சி நடத்தும் அரசன் பாவி எனக் கருதப்பட்டான்.

### ஒற்றர்கள்

ஒற்றர்களையும் புகழ் அமைந்த நீதி நூல்களையும், அரசன் தன் கண்களாகக் கருத வேண்டும். ஒற்றர்களின் பணி என்ன? அவர்கள் எப்படிப் பணிபுரிதல் வேண்டும் என்பது குறித்தும் குறளில் கருத்துகள் காணப்படுகின்றன. துறந்தவரின் வடிவத்தை உடையவராய், அரிய இடங்களில் எல்லாம் சென்று ஆராய்ந்து ஐயுற்றவர் என்ன செய்தாலும் சோர்ந்து விடாதவரே ஒற்றர் ஆவார். எல்லாரிடத்திலும் நிகழ்கின்றவை எல்லாவற்றையும் எக்காலத்திலும் ஒற்றரைக் கொண்டு விரைந்து அறிதல் அரசனுக்குரிய தொழிலாகும். ஒற்றர்கள் தம்முடைய தொழிலைச் செய்கின்றவர், தம் சுற்றத்தார், தம் பகைவர் என்று கூறப்படும் எல்லாரையும் ஆராய வேண்டியிருந்தது. ஓர் ஒற்றன் மறைந்து கேட்டுத் தெரிவித்த செய்தியை மற்றோர் ஒற்றனால் கேட்டுவரச் செய்து அதனோடு ஒப்பிட்டுப் பார்த்த பின்னரே உண்மை என்று அரசன்

கொள்ள வேண்டும். அரசன் ஒற்றனிடத்தில் செய்யும் சிறப்பைப் பிறர் அறியுமாறு செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் மறைப் பொருளைத் தானே வெளிப்படுத்தியவனாவான். ஒற்றரால் நாட்டு நிகழ்ச்சிகளை அறிந்து அவற்றின் பயனை ஆராய்ந்து உணர்வதைப்போல் அரசன் வெற்றி பெறத்தக்க வழி வேறு இல்லை.

### பொருள்

இத்தனைப் பணிகளோடும் பொருள் வரும் வழிகளை மேன் மேலும் இயற்றலும், வந்த பொருள்களைச் சேர்த்தலும், காத்தலும், காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தலும் அரசனின் கடமைகளாயின. கொடை, அருள், செங்கோல் முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன் அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன் என்று கூறப்படுகிறான்.

### இறைமை

வடமொழி இலக்கியங்களின் கருத்துப்படி இறைமை அதிகாரம் ஏழு உறுப்புகளைக் கொண்டது. அவையாவன: படை, அமைச்சு, நாடு, அரண், கருவூலம், குடி, நட்பு ஆகியவை. உடலுக்கு உறுப்புகள் இருப்பது போலவே நாட்டினையும் உடலாகக் கருதி அதனுடைய உறுப்புகளில் அரசனை முக்கியமான ஒன்றாகக் குறள் கூறுகிறது. படை, குடி, கூழ் அமைச்சு, நட்பு, அரண் என்று கூறப்படும் ஆறு அங்கங்களையும் உடையவன் அரசர்களில் ஆண்சிங்கம் என்று கருதப்பட்டான்.

### அங்கம்

அங்கம் என்னும் பிரிவில் அரசனைப் பற்றிய செய்திகளைக் கண்டோம். அடுத்து அமைச்சு என்னும் தலைப்பில் அமைச்சர்களைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது. நெறி பிறழாத உறுதி, திறமையான பாதுகாப்பு அளிக்கும் திறன், ஆட்சித் துறையில் கைதேர்ந்தவராய் இருத்தல், எல்லாச் செயல்களிலும் அரசனின் நம்பிக்கைக் குரியவராய் இருத்தல், அரசனின் கடமைகளை உணர்ந்து இருத்தல், சிறந்த கல்வியறிவு வாய்க்கப் பெற்றிருத்தல், சிறந்த வழி முறைகளைத் தேர்வு செய்யும் ஆற்றல், இயற்கை அறிவு ஆகிய திறன்கள் வாய்க்கப் பெற்றவர்களே அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். குறளில் அமைச்சர் என்றால் அவருக்குரிய

தகுதிகள் பற்றி உரைப்பதோடு அமைச்சரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னல் நிகழ்த்தப்பட்ட சோதனைகள் பற்றியும், சோதனைகளில் தேரியவர்களே அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர் எனவும் அறிகிறோம். அரசன் மிகவும் நம்பிக்கையோடு தன் துணையாக அமைச்சர்களைக் கொண்டிருந்தான்.

## அமைச்சு

அமைச்சு என்னும் சொல் அமர்த்தியா என்னும் வடமொழிச் சொல்லின் அடியாகப் பிறந்தது என டாக்டர் கிருட்டினசாமி ஐயங்கார் கருத்துத் தெரிவித்துள்ளார். ஓர் அமைச்சர் பேசுகின்ற போது, தன் எதிரிலுள்ளவர்களுடைய ஞானத்தினை உணர்ந்து பேசுவதை மிஞ்சியது ஏதும் இல்லை. ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டுமாயின் நல்ல அமைச்சர் அதனை முறையாகவும் தெளிவாகவும் எடுத்து உரைத்தால் உலகமே எவ்வித மறுப்பும் இன்றி அவருடைய அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளும். தன்னுடைய தாய் பட்டினியால் வாடினல்கூடச் சான்றோர்கள் பழிக்கின்ற செயல்களைச் செய்யக்கூடாது. செயல்களைச் செய்யும் போது தோல்வியடையும் படியான வகையில் செயல்களைச் செய்தல் கூடாது. அப்படியே தோல்வி ஏற்பட்டால்கூட மன உறுதியை இழந்துவிடக் கூடாது. வெற்றி கிட்டும் வாய்ப்பு இருந்தாலே போரைத் தொடங்க வேண்டும். ஒரு செயலைத் தொடங்கும் முன் ஐவகைக் கருத்துகளை, அதாவது செயல், செயலுக்கான தேவை, வழிமுறைகள், அதற்கான உபகரணங்கள், சரியான நேரம், முடிவு ஆகியவற்றை மனத்தில் எண்ணி அம்முடிவினை அடையச் செய்ய வேண்டியவைகளை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

## தூதுவர்கள்

அடுத்த படியாக அமைச்சர்களில் மற்றொரு வகையினரான தூதுவர்கள் பற்றியும், அவர்தம் தகுதி பற்றியும் கூறப்பட்டுள்ளவற்றைக் காண்போம். தூது உரைப்பவனுடைய தகுதிகள் யாவை? அன்புடையவனதல், தகுதியான குடிப்பிறப்பு உடையவனதல், அரசர் விரும்பும் சிறந்த பண்பு உடையவனதல் ஆகிய இவை தூது உரைப்பவனுடைய தகுதிகள். தூது உரைப்பவர்க்கு மேலே கூறப்பட்டுள்ள மூன்று தகுதிகள் வடமொழி இலக்கியங்களிலும் கூறப்பட்டு உள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. இவை மட்டுமின்றி வேறு பல தகுதிகளும் கூறப்பட்டுள்ளன. தூதுவர்கள் தூய

ஒழுக்கம் உடையவர்களாகவும், துணை உடையவர்களாகவும், துணிவு உடையவர்களாகவும் இருக்க வேண்டும். அன்பு, அறிவு எதனையும் ஆராய்ந்து சொல்கின்ற சொல்வன்மை ஆகிய இவை தூதுஉரைப்பவர்க்கு இன்றியமையாத மூன்று பண்புகளாகும். யாரிடம் தூது அனுப்பப்பட்டிருக்கின்றானோ அவ்வரசனிடம் சென்று தன் அரசனுடைய வெற்றிக்குக் காரணமான செயலைப் பற்றித் தூது உரைப்பவன் திறம், நூல் அறிந்தவருள் நூல் வல்லவனாக விளங்குதல் ஆகும். தூது உரைப்பவன் தன் கடமை இன்னது என்று தெளிவாக அறிந்து அந்தக் கடமையினைச் செய்வதற்கு ஏற்ற காலத்தை எதிர் நோக்கித், தக்க இடத்தையும் அறிந்து, ஆராய்ந்து சொன்னால் அவன் சிறந்த தூதனாகக் கருதப்படுவான். குறளில் மூன்று வகையான தூதுவர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

### தூதுவகையினர்

பல செய்திகளைத் தொகுத்துச் சொல்லியும், அச் செய்திகளில் பயனற்றவைகளை நீக்கியும், அச் செதியைக் கேட்ட அரசன் மகிழுமாறு சொல்லியும் தன் தலைவனுக்கு நன்மை உண்டாக்குபவன் முதல் வகையைச் சேர்ந்தவன். இரண்டாவது வகையைச் சேர்ந்தவன் தன் கருத்து எதையும் சொல்லாது, அரசன் சொல்லி அனுப்பிய செய்திகளை மட்டும் சொல்பவன் ஆவான். மூன்றாவது வகையைச் சார்ந்தவன் அரசனுடைய கடிதங்களை மட்டுமே கொண்டு செல்பவனுவான். இம் மூன்று பிரிவினர்களில் முதலாவது சொல்லப் பட்டவர்கள் தமக்கு அழிவே நேர்வதாக இருந்தாலும் அதற்காக அஞ்சிவிடாமல் தம் அரசனுக்கு நன்மை உண்டாகுமாறு செய்து சிறந்த தூதர்கள் என்று பெயரெடுத்தனர்.

### அமைச்சர்களின் குண இயல்புகள்

அமைச்சர்கள் அரசனிடமிருந்து மிகவும் விலகிச் செல்லாமலும், மிகவும் நெருக்கமாக இல்லாமலும், நெருப்பில் குளிர்காய்கின்றவர் போல இருத்தல் வேண்டும். அமைச்சர்கள், அரசரை எமக்கு இளையவர், எமக்கு இன்ன முறையில் உறவினர் என்று இகழாமல் அவருடைய நிலைக்கு ஏற்ற வகையில் அமைந்த புகழுடன் பொருந்த நடந்து கொள்ள வேண்டும். அரசர்கள் விரும்புகின்றவற்றை மட்டும் சொல்லிப் பயனில்லாதவற்றை அரசரே கேட்ட போதிலும்கூடக் கூறாமல் விட்டுவிட வேண்டும். அரசருடைய குறிப்பை அறிந்து தக்க காலத்தை எதிர் நோக்கி வெறுப்பு இல்லாத

வற்றையும், விருப்பமான வற்றையும் அரசர் விரும்புமாறு சொல்ல வேண்டும். அவையினருக்கு ஏற்றவற்றையே அமைச்சர்கள் பேச வேண்டும். அவையில் ஒன்றைக் கேட்ட வர்க்கு அஞ்சாது விடைகூறும் பொருட்டாக நூல்களைக் கற்கும் நெறியில் அளவை நூல் அறிந்து கற்க வேண்டும். பத்து அதிகாரங்களில் வள்ளுவர் அமைச்சர்களுடைய கடமை களைப் பற்றிப் பொதுவாகக் கூறியுள்ளார். அவ்வாறு கூறு கின்றபோது எவ்வகையினர் அமைச்சர்கள் பிரிவில் சேர்க்கப் பட்டிருந்தனர் என்பது குறித்தும் கூறியுள்ளார்.

### நாடு

நாடு என்பது பற்றித் திருவள்ளுவர் கூறியுள்ள செய்தி களைப் பற்றி அறிந்து கொள்ளுதல் அவசிய மாகும். நாடு என்பதனை வடமொழியாளர்கள் ஜனபாதா என்று குறிப்பிடு கின்றனர். நாடு என்பது யாது என்பதனை விளக்குகின்ற திருவள்ளுவர் குறையாத விளைபொருளும், தக்க அறிஞரும், கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடு ஆகும் என்கின்றார். எல்லாரும் விரும்பத் தக்க தாய், மிக்க பொருள் வளம் உடையதாகக், கேடில்லாததாய், மிகுதியாக விளைபொருள் தருவதே நாடாகும். வாழ்கின்ற மக் களுக்குச் சிறந்த நன்மைகளைத் தருவதோடு, அரசனுடைய வருவாயும் குறையாது பார்த்துக் கொள்ள வேண்டும். மாறு படும் கூட்டங்களும், உடனிருந்து அழிவைச் செய்யும் பகையும், அரசனைத் துன்புறுத்துகின்ற கொலைத் தொழில் பொருந்திய குறுநில மன்னரும் இல்லாதது நாடு ஆகும். பகைவரால் கெடுக்கப்படாததாய் அப்படியே கெட்டுவிட்ட காலத்திலும் வளம் குன்றாததாய் உள்ள நாடே நாடுகள் எல்லாவற்றிலும் தலையானது.

### நாட்டு வளம்

ஊற்றும் மழையும் ஆகிய இருவகை நீர் வளமும், தக்க வாறு அமைந்த மலையும், அந்த மலையிலிருந்து ஆறாக வரும் நீர் வளமும், வலிய அரணும் நாட்டிற்கு உறுப்புகளாகும். நோயில்லாதிருத்தல், செல்வம், விளைபொருள் வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல் ஆகிய ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவார் திருவள்ளுவர். அவர் முயற்சி செய்து வளத்தைத் தேடாமலே வளத்தினைத் தரும் சிறப்பினை உடைய நாடுகள் சிறந்த நாடுகள் என்று கூறுவார். தேடி முயன்று வளம் சேர்ப் பவை சிறந்த நாடுகள் ஆக மாட்டா. எல்லா வளங்களையும்

இந்த நாடுகள் பெற்றிருந்தாலும் நல்ல அரசனில்லாவிட்டால் பயனில்லாமல் போகும். நல்ல அரசன் மட்டுமின்றி நல்ல அரசும் இல்லையென்றால் இயற்கையாகவே நல்ல நாடாக இருந்தாலும், அதனால் மக்களுக்கு நன்மையில்லை. எனவே நாட்டிலே வாழ்கின்ற மக்களுக்கு முன்னேற்றத்தை அளிப்பதற்குச் சிறந்ததோர் அரசும் அவசியமாகும் என உணர்கிறோம்.

## அரண்

அரண்களைப் பற்றி அடுத்துக் கூறப்பட்டுள்ளது. படை நடத்திச் சென்று போர் புரிவோர்க்கும், பகைவரால் துரத்தப் பட்டுப் புகலிடம் அடைகின்றவர்களுக்கும் அரண் சிறந்ததாகும். நாலுவகையான பாதுகாப்புகளை அரண் அளிக்கிறது. மணி போல் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஆகிய நான்கும் உடையதே அரண் என்று சொல்லப்படுவதோடு, உயரம், அகலம், உறுதி, பகைவரால் அழிக்க முடியாத அருமை ஆகிய நான்கும் அமைந்திருக்க வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. காக்க வேண்டிய இடம் சிறியதாய், அதே நேரத்தில் எண்ணிறந்த மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத்தக்க பரப்பு உள்ளதாய் எதிரியினால் கைப்பற்ற இயலாததாய் உள்ளது அரண் எனவும் உரைக்கிறது குறள். இவை மட்டுமின்றித் தன்னிடம் வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள் கொண்டதாயும், உள் இருப்போர் நிலைத்து வாழ்வதற்கு எளிதாகிய தன்மை உடையதாயும் அரண் இருக்க வேண்டும். தன்னிடமுள்ளவர்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் உடையதும் போர் நெருக்கடியான நேரத்தில் ஆபத்தில் உள்ளவர்களுக்கு உதவக் கூடிய சிறந்த வீரர்களைக் கொண்டதும் அரண் ஆகும். அத்தகைய அரண் முற்றுகையிட்டும், வஞ்சனை செய்தும், முற்றுகையிடாமல் போர் செய்தும் எப்படியும் பகைவரால் கைப்பற்ற முடியாத அருமை உடையது.

## வருவாய்

நாட்டின் வருவாயைப் பற்றிய செய்திகளை அடுத்த பிரிவில் அறிகிறோம். அப்பிரிவில் முதலாவது குறளே சிறப்புடையது. அது பொருள் என்று தொடங்குகிறது. சேர்க்கும் திறம் அறிந்து தீமை ஒன்றும் இல்லாமல் சேர்க்கப்பட்டு வந்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும், இன்பத்தையும் கொடுக்கும் என்று வள்ளுவர் கூறுகின்றார். இந்த இடத்தில்

நாம் அர்த்த சாத்திரத்திற்கும், திருக்குறளுக்கும் உள்ள பெருத்த வேறுபாடு ஒன்றினைப் பற்றி அறிந்து கொள்ளுதல் அவசியமாகும். பொருளுக்குச் சிறப்புத்தன்மை அளித்தாலும், குறள் அர்த்த சாத்திரத்தின் மற்ற பிரிவுகளான அறத்தையும் இன்பத்தையும் வலியுறுத்துகிறது. திருக்குறளில் மூன்றுவகை வருவாய்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதலாவது வகை கேள்வி கேட்கப்படாது இருந்த பொருள். இரண்டாவது வகை சுங்கமாக வந்து சேர்ந்த பொருள். மூன்றாவது வகை அரசன் தன் அதிகாரத்தைச் செலுத்துவதன் மூலமாகக் கிடைக்கக் கூடியது. அதாவது நீதி வழங்குகின்ற பணி மூலமாகக் கிடைத்த பொருள். அரசன் பொருளை ஈட்ட வேண்டும். அரசனுடைய கடமைகளில் பொருளைத் திரட்டுவதும் ஒரு கடமை ஆயிற்று. ஏன் அவ்வாறு பொருள் திரட்ட வேண்டும் என்றால் தன் மக்களுக்குத் துயரைக் கொடுக்கின்ற பகைவர்களை ஒழிப்பதற்கான வாள் போன்று பொருள் கருதப்பட்டது. இறுதியாகக் கூறுமிடத்து சிறந்ததாகிய பொருளை மிக அதிகமாக ஈட்டியவர்க்கு மற்ற அறமும், இன்பமும் ஆகிய இரண்டும் ஒரு சேரக் கை கூடும் எளிய பொருளாகும் என்று கூறப்பட்டுள்ளது.

படை

எல்லா உறுப்புகளும் நிறைந்ததாய் இடையூறுகளுக்கு அஞ்சாததாய் உள்ள வெற்றி தரும் படையே அரசனுடைய செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததாகும் என்று அரசனுடைய படை மாட்சியினைப் பற்றி வள்ளுவர் உரைக்கின்றார். போரிலே கலந்து கொண்டு அழிவு ஏற்பட்டு அதனால் வலிமை குன்றினாலும் இடையூறுகளுக்கு அஞ்சாத அஞ்சாமை தொன்று தொட்டு வந்த பெருமையை உடைய படைக்கு உண்டு. இந்தக் கருத்தின் மூலமாக மரபு வழியே படைகள் இருந்தன என்று அறிகிறோம். அவ்வப்போது ஏற்படுத்தப்பட்ட படைகளும் இருந்தன. ஆகவே மரபு வழிப் படைகள் அவ்வப்போது ஏற்பட்ட படைகள் என இரு பிரிவுகள் இருந்தன என்று அறிகிறோம். போர் முனையில் அழிவு படாததாய்ப் பகைவருடைய வஞ்சனைக்கு இரையாகாததாய்த் தொன்று தொட்டு வந்த அஞ்சாமை உடையதே படையாகும். தன்மேல் எதிர்த்து வந்த பகைவரின் போரைத் தாங்கி வெல்லும் தன்மை அறிந்து, பகைவரின் தூசிப் படையை எதிர்த்துச் செல்ல வல்லதே படையாகும். எவ்வளவு தான் சிறந்த படையாக இருந்தாலும், எவ்வளவு தான் அதில் உள்ள வீரர்கள் உறுதியாக இருந்தாலும், படையை நடத்திச் செல்லச் சிறந்த தலைமை அவசிய

மாயிற்று. பகைவரைச் சினந்து நோக்கிய கண் அப்பகைவர் வேல் கொண்டு எறிந்தபோது சிறிதளவாவது அஞ்சி இமைக்குமேயானாலும், அது வீரமுடையவர்க்குத் தோல்வியே ஆகும். போர் வந்தால் உயிரின் பொருட்டு அஞ்சாமல் போர் செய்யத் துணியும் வீரர் அரசர் சினந்தாலும் தம்முடைய சிறப்புக் குன்றாதவர் ஆவார். போரில் ஈடுபட்டுத், தம்மைக் காத்த தலைவருடைய கண்கள் நீர் பெருக்குமாறு சாகப் பெற்றால் அச்சாவு இரந்தும் பெற்றுக் கொள்ளத்தக்க பெருமையுடையது.

## நட்பு

திருவள்ளுவர் நட்பைப் பற்றி விளக்கிப் பதினேழு அதிகாரங்கள் எழுதியுள்ளார். முதல் ஐந்து அதிகாரங்களில் எது சிறந்த நட்பு என்று விளக்கி அடுத்த பன்னிரண்டு அதிகாரங்களில் கூடா நட்பின் தன்மைகளை விளக்குகின்றார். நட்பைப் போலச் செய்து கொள்வதற்கு அருமையானது ஏதும் இல்லை. பகைவர் வணங்கித் தொழுதகையினுள்ளும் கொலைக் கருவி மறைந்திருக்கும்; பகைவர் அழுது சொரிந்த கண்ணீரும் அத்தகையதே. முகத்தில் இனிமையாகச் சிரித்துப் பழகி, அகத்தில் தீமை கொண்டுள்ள வஞ்சகருடன் நட்புக் கொள்ள அஞ்ச வேண்டும். நூல்களை ஓதியும், அவற்றின் பொருளை உணர்ந்தும், பிறர்க்கு எடுத்துச் சொல்லியும், அவற்றின் நெறியில் அடங்கி ஒழுகாத பேதை போல் வேறு பேதையரில்லை. பேதையிட மிருந்து பிரிவு நேர்கின்ற போது அப் பிரிவு துன்பம் ஒன்றும் தருவதில்லை. ஆகையால் பேதையருடன் கொள்ளும் நட்பு இனியதாகும். தனக்கு நன்மையானவற்றைப் பிறர் ஏவினாலும் செய்யாதவனும் தானாகவும் உணர்ந்து தெளியாதவனும் உள்ளவனுடைய உயிர் போகுமளவும் ஒரு நோயாகும்.

## பகை

பகை என்பது ஒரு நோயைப் போன்றது. அப் பகை செய்கின்ற செயல் நட்பினை இல்லாததாக ஆக்குவது. பகை எல்லா வகையான தீச்செயல்களையும் உருவாக்கும் போது நட்பு எல்லா வகையான நன்மைகளையும் உருவாக்கும். தனக்கு உதவியான துணையில்லாத நிலையில் இரண்டு பகைவர்கள் இருந்தால், ஒருவன் தன் இரண்டு பகைவர்களில் ஒருவனை நட்பாக்கிக் கொள்ள வேண்டும். பகையை ஆரம்பத்திலேயே கிள்ளவேண்டும். இது முள் மரத்தை இளையதாக இருக்கும் போது வெட்டுவதற்கு ஒப்பான செயலாகும். வயிரம் ஏறி

முதிர்ந்த போது வெட்டுகின்றவர்களின் கையையே அது வருத்தும்.

**பெண் வழிச் சேறல்**

பெண் வழிச் சேறல், வரைவின் மகளிர் என முறையான, முறை தவறிய பெண்களைப் பற்றி இரு அதிகாரங்கள் உள்ளன. மதுவின் தீமைகளும், சூது பற்றியும் உரைக்கப்பட்டுள்ளன. பின் அடுத்து இறுதி அத்தியாயத்தில் மருந்து பற்றிக் கூறப் பட்டுள்ளது. இவ்வாறாக, அங்கங்கள் பற்றிய செய்திகளை விளக்குகின்ற குறள் பல்வகைப் பிரிவுகளைப் பற்றியும் அடுத்து உரைக்கிறது. பல்வகைப் பிரிவில் பிறப்பு, சிறந்த மனிதர் களின் பிறவித் தகுதிகள், பெருமை, ஒழுக்கம், அதனைப் பாது காத்தல், சொத்து, அவமானம், விவசாயம், பஞ்சம், பிச்சை, கயமை ஆகியவை பற்றிய செய்திகளை அறிகின்றோம்.

நாம் இதுவரை பார்த்தவற்றிலிருந்து தெரிந்து கொள்ளு கின்ற உண்மை ஆட்சித் துறையைப் பொறுத்த மட்டில் திருக் குறள் முழுமையானது அன்று என்பதே. அர்த்த சாத்திரத் தினையே முழுமையான நூலாகக் கருத வேண்டும். அரசியல் துறையைப் பற்றி இன்னும் சிலவற்றைச் சேர்த்தாலே திருக் குறள் முழுமை பெறும். ஆனால் இதனைக் குறையாகக் கருத முடியாது. நாம் அதனை இன்றைய கண்ணோட்டத்தில் நோக்கு வது தான் நம்மிடையே உள்ள குறை.

திருக்குறளை இன்றைய கண்ணோட்டத்தோடு நோக்கு கின்ற போது மேலே கண்ட குறைபாடு தென்படுகிறது. நாம் பழைய இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளை இன்றைய வாழ்க்கை நிலையோடு ஒப்பிடுவது தவறு என்று தான் கருத வேண்டும். ஏன் என்றால் கால மாறுபாடுதான் காரணம் என்னும் பதில் கிடைக்கிறது. நம்முடைய ஆராய்ச்சி எல்லாம் அவர்கள் வாழ்ந்த காலத்தில் இந்தக் கருத்துகள் எந்த அளவு பின்பற்றப்பட்டன? எத்தகைய முறை கடைப் பிடிக்கப் பட்டது? என்பதாகவே இருத்தல் வேண்டும்.

இதற்குக் காரணம் இன்றுள்ள சமுதாயச் சூழ்நிலைகள் அன்று இல்லாமையே. இன்றைய மக்கள் வாழ்க்கையில் எத்தனையோ மாறுதல்கள் நேரிட்டு விட்டன. இன்று ஒரு நாட்டில் பேசப்படும் குடியரசு என்னும் கொள்கை மற்றொரு குடியரசு என்று சொல்லப்படும் நாட்டில்

மாறுபட்டு இருக்கிறது. இக் கால அமைப்புகளோடேயே ஒப்பிட்டு ஒரு முடிவிற்கு வர இயலாது போய்விடுகின்றபோது, எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த அமைப்புகளோடு ஒப்பிடுவது எவ்வாறு பொருத்தமாகும்? நாம் மேற்கூறியவற்றைக் குறைபாடுகள் என்று கருதுவதைவிட, அக்காலத் தேவையின்மை என்று கருதி முடிவு கட்டுவதே பொருத்தமுடையது. அக் காலத்திலும் இத்தகைய அமைப்பு முறைகளுக்குத் தேவை ஏற்பட்டிருந்தால் நாம் எதிர்பார்ப்பவை எல்லாம் அதில் காணப்படலாம்.

# 17. சோழர்களின் ஆட்சி முறை

## (Chola Administration)

*பழமையான அரசு*

சோழர்கள் அரசு இந்தியாவின் மிகப் பழமையான அரசுகளில் ஒன்றாகும். இந்தியாவின் பழைய இலக்கியங்களில் ஒன்றான மகாபாரதத்தில் சோழர்களைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. எனவே சோழர்கள் அரசு பழமையானது என்னும் முடிவினை ஏற்றுக் கொள்கிறோம். மெகஸ்தனிஸ் எழுதி வைத்துள்ள குறிப்புகள், அசோகரின் கல்வெட்டுகள் ஆகியவற்றிலும் சோழர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இலங்கை தேசத்து மகாவம்சம் என்னும் நூல் சோழர்களுக்கும் இலங்கை அரசர்களுக்கும் இடையே இருந்த உறவை வெளிப்படுத்துகிறது. தாலமி என்னும் கிரேக்க வரலாற்றறிஞரும் சோழர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். நீதியின் விளக்கமாக அமைந்த சோழ அரசர்களைப் பற்றிச் சங்க காலத் தமிழ் நூல்களும் எடுத்து உரைக்கின்றன. பெரிப்புளூஸ் என்னும் நூல் சோழ நாட்டிலிருந்த நகரங்களைப் பற்றிய செய்திகளை நமக்கு அறிவிக்கிறது. இதுகாறும் கூறியவற்றிலிருந்து சோழர்கள் பழமையான அரச குடும்பத்தவர்கள் என்பதனைத் தெளிவாக உணர்கிறோம்.

சோழர்களைப் பற்றி அறிந்து கொள்ளப் பெரிதும் துணை நிற்பவை பட்டயங்களும், சாசனங்களுமாகும். சங்க இலக்கியங்கள், திருத்தொண்டர் புராணம், திவ்விய சூரிசரிதம், குருபரம்பரை, வீர சோழியம், கலிங்கத்துப் பரணி, உலாப் பாடல்கள், குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், கம்ப இராமாயணம், மார்க்கோபோலோ போன்ற பயணிகளின் குறிப்புகள் ஆகியவையும் நமக்குத் துணை புரிகின்றன. இச் சான்றுகளிலிருந்து நாம் சோழர்களைப் பற்றிய வரலாற்றினை முறையாகத் தொகுத்து உருவாக்குகிறோம்.

### முடியாட்சி

சோழர் கால ஆட்சி அமைப்பு முறை சங்க காலத்தைப் போன்று முடியாட்சி முறையாகவே இருந்தது. சோழர்கள் சிறந்ததொரு ஆட்சி முறையினை நடத்தினர். தன்னாட்சி பெற்ற கிராமமே அரசின் பிரிவாக விளங்கிற்று. பல கிராமங்கள் ஒன்றாக இணைந்த பகுதிகள் கூற்றம், நாடு, கோட்டம் எனப் பல பெயர்களில் பல இடங்களில் அழைக்கப்பட்டன. தனியூர் என அழைக்கப்பட்ட கிராமம், கூற்றம் என அழைக்கத் தக்க தாய் இருந்தது. தனியூர் இடைக்கால இங்கிலாந்தில் இருந்த பர்ரோ என்னும் அமைப்போடு ஒப்பிட்டுப் பேசப் படுகிறது. சோழர்களின் பேரரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

### ஆட்சிப் பிரிவுகள்

அவ்வாறு பிரிக்கப்பட்ட மாநிலங்கள் மண்டலங்கள் என அழைக்கப்பட்டன. மாநிலங்களின் எண்ணிக்கை ஒவ்வோர் அரசர் காலத்தும் வேறுபட்டிருந்தது. சில அரசர்களின் காலத்தில் எண்ணிக்கை ஆறாகவும், சில அரசர்களின் காலத்தில் எண்ணிக்கை எட்டாகவும் இருந்தது. இராசராச சோழனின் காலத்தில் இலங்கைப் பகுதியைச் சேர்த்து எட்டு அல்லது ஒன்பதாக இருந்தது. ஒவ்வொரு மண்டலமும் பல கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கோட்டமும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு நாடுகள் என அழைக்கப் பட்டன. நாட்டினுடைய கட்டுப்பாட்டினுள் கூற்றங்கள் என அழைக்கப்பட்ட கிராம ஒன்றியங்கள் இருந்தன. கீழ் நிலையில் இருந்த பிரிவுகள் அடிக்கடி பெயர் மாற்றம் செய்யப்பட்டன.

### அரசர்

ஆட்சித் துறைத் தலைவராக விளங்கியவர் அரசரேயாவார். பேரரசின் விரிந்த பரப்பும் அதன் நெல் வளமும் சோழப் பேரரசின் வலிமையையும் மதிப்பையும் அதிகப்படுத்தின. அரசு மிகவும் ஆடம்பரமாகவும் கவரத் தக்க வகையிலும் அமைந்திருந்தது. அரசர், பேரரசர், சக்கரவர்த்தி என மன்னர் அழைக்கப்பட்டார். அரசர் அலுவல் குறிப்புகளில் உடையார் எனவே அழைக்கப்பட்டார். சோழ அரசர்கள் சிறப்பு மிக்க பெயர்களைக் கொண்டு அதிகாரங்களும் நிரம்பப் பெற்றவர்களாக விளங்கினர்கள். சோழ அரசர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு இராஜ குரு என அழைக்கப்பட்டவர் இருந்தார்.

இராஜ குருக்கள் என ஈசான சிவாச்சாரியார், சர்வ சிவாச்சாரியார் ஆகியோரின் பெயர்களைக் கல் வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. விஜயாலயசோழனின் காலம் முதல் தஞ்சையே தலைநகரமாக விளங்கிற்று. இராசேந்திர சோழனின் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரம் தலைநகரமாகச் சிறிது காலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. துறைகளின் தலைவர்கள் அரசரோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாய் இருந்தனர். அரசன் அடிக்கடி அவர்களுடன் ஆலோசனை கலப்பது வழக்கம். அரசு அலுவலர்களுக்கு நிலங்கள் மானியங்களாக வழங்கப்பட்டதோடு பல பட்டங்களை அளித்தும் அவர்கள் சிறப்பிக்கப்பட்டனர். உயர் அதிகாரிகள் பெருந்தரம் என்றும், சிறிய அதிகாரிகள் சிறுந்தரம் என்றும் அழைக்கப்பட்டனர்.

### மண்டலத் தலைவர்

மண்டலங்களின் தலைவர்களாக இருந்தவர்கள் அரசர்களால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் அரசருக்கு உறவினராகவோ அல்லது அரச வமிசத்தவர்களாகவோ இருந்தனர். மண்டலத் தலைவர் தொடர்ந்து மைய அரசரோடு தொடர்பு வைத்திருந்தார். அரசரிடமிருந்து வந்த ஆணைகளை ஏற்று நிறைவேற்றியதோடு தாம் மேற்கொண்டுள்ள பணிகளைப் பற்றியும் அரசர்க்குத் தகவல்கள் அறிவித்தார். எல்லாப் பதிவுகளும் இவரால் பாதுகாக்கப்பட்டன. இவரின் கீழ் எண்ணிறந்த அலுவலர்கள் பணி புரிந்தனர்.

### கிராமச் சபைகள்

பொது வருவாய்கள் கிராமச் சபைகளினால் பணமாகவோ பண்டமாகவோ அல்லது இரண்டுமாகவோ வசூலிக்கப்பட்டன. நிலங்கள் தனிப்பட்டவர்களின் உரிமையாகவும், சமுதாயத்தின் உடைமையாகவும் இருந்தன. குடியானவர்கள் நிலச் சொந்தக்காரர்களாக இருந்து விவசாயத்தைக் கவனித்து வந்தனர். அது மட்டுமின்றி வேறு வகைகளிலும் நில உரிமையாளர்கள் இல்லாத நிலையில் நிலங்களைக் கண்காணித்தனர். உள்ளூர் அரசும், மைய அரசும் விவசாயத்திற்குச் சிறப்பிடம் வழங்கின. விவசாயம் சிறந்திடச் சிறந்த நீர்ப்பாசன முறை அவசியமாயிற்று. எனவே நீர்ப்பாசனத்தைக் கவனிக்கச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

### அரசின் பங்கு

கிராமச் சபைகளின் பணியில் மிக முக்கியமான பணி கிராமக் குளத்தினை நல்ல நிலையில் பார்த்துக்கொள்வதாகும். முதலாம் இராசராச சோழன் காலத்தில் மொத்த வருவாயில் மூன்றில் ஒரு பங்கு அரசின் பங்காகப் பெறப்பட்டது. நிலத்தை நன்கு அளந்து அதன்பின்னரே அரசின் பங்கு நிர்ணயிக்கப்பட்டது. நிலத்தை அளக்கின்ற அத்தகைய முறைகளைப் பின்பற்ற ஆணையிட்டவர்கள் முதலாம் இராசராச சோழனும் முதலாம் குலோத்துங்கனுமாவர். நிலங்களைப் பிரிக்கின்ற முறையில் அடிக்கடி மாறுதல்கள் செய்யப்பட்டதைப் போலவே நில வருவாயை மதிப்பிடுவதிலும் அடிக்கடி மாறுதல்கள் செய்யப்பட்டன.

### நில வருவாய்

நில வருவாய் தவிர அரசுக்குச் சுங்கவரி, இறக்குமதி வரி, தொழில் வரி, அரங்கங்கள், காடுகள், உப்பளங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைத்த வரிகள் ஆகியவை சேர்ந்தன. இவ்வரிகள் விதிக்கப்பட்ட நோக்கம் நிலவரி நிலையாகப் பெறத்தக்கது அன்று என்பதால்தான் என அறிகிறோம். பஞ்சங்களும் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டால் அதன் விளைவாக நில வரி எதிர்பார்த்த அளவு கிட்டாது. சில சந்தர்ப்பங்களில் ஊதியம் இன்றி மக்கள் அரசில் பணியாற்ற நேரிட்டது. நில மானியத் தலைவர்கள் இருந்த படியால் மக்கள் மீது வரிச்சுமை அதிகரித்தது. நிலவரி செலுத்தப்படவில்லை என்றால் எந்த நிலத்திற்கான வரி செலுத்தப்படவில்லையோ அந்த நிலத்தை விற்கின்ற உரிமை அரசருக்கு இருந்தது. கோவிலைச் சார்ந்த நிலங்கள் கூட இதற்கு விதி விலக்காக இல்லை.

### செலவினங்கள்

இனி அரசுக்கு எவ்வகையில் செலவினங்கள் (expenditures) ஏற்பட்டன என்பதனைக் காண்போம். அரசனுக்கும் அரசவைக்கும் ஆன செலவுகள் அரசின் வருவாயிலிருந்தே பெறப்பட்டன. அதைத் தவிரப் படைகளுக்கான செலவும், கப்பற் படைக்கான செலவும், சாலைகள், நீர்ப் பாசன வசதிகள், ஆறு குளங்கள் மேற் பார்வையிடல் ஆகியவற்றிற்கான செலவுகளும், ஆலயங்களுக்கு அளிக்கப்பட்ட மானியங்களும் முக்கிய செலவினங்களாக இருந்தன.

### பொதுப்பணி

சோழ அரசர்கள் பொதுப் பணிகளுக்காக அதிகப் பணத்தைச் செலவிட்டனர். சோழ அரசர்கள் சாலைகள், பாலங்

கள், படகுத் துறைகள் ஆகியவற்றை நிருவகித்தனர். தண்ணீரைச் சேமித்துத் தேவைப்படும்போது சிறு சிறு கால்வாய்கள் வழியாக நீர்ப் பாசனத்திற்குப் பயன்படச் செய்வதற்காக அணைகள் பல கட்டப்பட்டன.

### படை

சோழ அரசர்கள் நிலையான பெரிய படையினையும், கடற்படையினையும் நிர்வகித்தனர். சோழர்களின் படை யானைப் படை, குதிரைப் படை, காலாட் படை என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இராணுவத்திற்குச் சிறந்த பயிற்சியும், ஒழுக்கமும், கட்டுப்பாடும் வலியுறுத்தப்பட்டன. மொத்தப் படையின் எண்ணிக்கை 1,50,000 என மதிப்பிடப்பட்டது. படையில் இருந்தவர்கள் கைக்கோளர்கள் அல்லது செங்குந்தர்கள் என அழைக்கப்பட்டனர். வேலைக்காரர்கள் என்று சொல்லப்படுபவர்கள் அரசனின் பாதுகாவலர்களாக விளங்கினர். தங்களுடைய உயிர் அழிந்தாலும் அரசருடைய உயிரைக் காப்பதாக அவர்கள் சபதம் எடுத்துக் கொண்டிருந்தனர். அதுமட்டுமின்றி இறந்து விட்ட அரசனின் சிதையில் பாய்ந்து உயிர் விடவும் சித்தமாயினர். குதிரைப் படைக்குத் தேவையான குதிரைகள் அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் அவைகள் இந்தியாவின் தட்ப வெப்ப நிலையைத் தாங்கமாட்டாது அதிக நாட்கள் வாழவில்லை. அரசர்களும் இளவரசர்களும் படைத் தலைமை தாங்கி நடத்திச் சென்றனர் என்பதற்குச் சான்றுகள் ஏராளமாக உள்ளன. இராஜாதித்தியனும் முதலாம் இராஜாதி ராஜனும் முறையே தக்கோலம், குப்பை ஆகிய போர்க் களங்களில் இறந்தனர்.

### படைத் தளபதி

படைத் தளபதிகளாக விளங்கியவர்கள் நாயகர்கள், சேனாபதிகள், மகாதண்ட நாயகம் என்றழைக்கப்பட்டனர். தளபதிகளில் வெள்ளாளர்களும், பிராமணர்களும், மற்றவர்களும் இருந்தனர். போரில் சிறந்து விளங்கியவர்கள் க்ஷத்திரிய சிகாமணி என அழைக்கப்பட்டனர். சோழ அரசர்கள் எவ்வித மான நீதிநெறியையும் போர்க்களத்தில் பின்பற்றவில்லை. குழந்தைகளாய் இருந்தாலும் பெண்களாயிருந்தாலும் விதி விலக்கு ஏதும் அளிக்கப்படவில்லை. சோழ அரசர்கள் சிறந்த கப்பற் படையினை வைத்திருந்தார்கள். கடற்படையின் வலிமையினால் கடல் கடந்து சென்று அயல் நாடுகளைக் கைப்பற்றி

னர். சோழ அரசர்கள் சோழ மண்டலக் கடற்கரையினையும், மலபார்க் கடற்கரையினையும் தங்கள் அதிகாரத்தில் வைத்திருந்தனர்.

### கிராம அவை

சோழர் ஆட்சியில் குறிப்பிடத் தகுந்த அம்சம் கிராமச் சுய ஆட்சியாகும். கிராமங்களிலும், நகரங்களிலும் அவைகள் இருந்தன. கிராம ஆட்சி முறையினைப் பற்றி அறிந்து கொள்ள உத்திரமேரூர்ச் சாசனங்கள் நமக்குத் துணை புரிகின்றன.

### அவையும் ஊரும்

அநேகக் கிராமங்களில் ஊர் என அழைக்கப்பட்ட கிராம அவைகள் இருந்தன. ஆனால் அவைகளின் அமைப்பு முறை பற்றிய செய்திகள் ஏதும் தெளிவாகத் தெரியவில்லை. சில சந்தர்ப்பங்களில் ஊர் என்னும் அவை, மகா அவையோடு சேர்த்துப் பேசப்படுவதைக் காண்கிறோம். திருவேலங்காட்டுச் சாசனம் ஒன்றில் மகா அவையும், ஊர் என்னும் சபையும் பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம். சபை, ஊர் ஆகியவை ஆற்றிய பணிகளைப் போன்ற பணிகளை ஆற்றிய நகரத்தார் என்னும் குழுவைப் பற்றிய செய்தியையும் நம்க்கு வரலாறு அறிவிக்கிறது. பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி அவர்கள் நகரத்தார் என்னும் குழுவினர் வாணிபக் குழுவினர் என்று கருதுகின்றார். பின்னர் நாட்டார் என்னும் மற்றொரு ஆட்சித் துறைப் பிரிவினைப் பற்றிக் காண்கிறோம். நாட்டார் எனப் படும் பிரிவு மண்டலத்தை விடச் சிறியதாய்க் கிராமத்தை விடப் பெரியதாய் விளங்கிற்று.

### வாக்குச் சீட்டு

மக்களரசு என்பது இக்கால மக்கள் வாழ்க்கையில் தோன்றிய புதிய அரசியல் முறை. அதனைச் சோழர் காலத்திலும் இருந்தது எனத் தேர்தல், வாக்குச் சீட்டு என்னும் சொற்கள் இடைத்ததைக் கொண்டு முடிவு கட்டி விடக் கூடாது.

### கிராம ஆட்சி

சோழர் காலக் கிராம ஆட்சி குறித்து அறிஞர் பெரு மக்களிடையே கருத்தொற்றுமை யின்மை காணப்படுகிறது. சாசனங்களின் பொருள் குறித்து டாக்டர் நீலகண்ட சாஸ்திரி

யாரும், டாக்டர் வெங்கையாவும் மாறுபட உரைக்கின்றனர். நாம் பொதுவாகக் காணப்படுகின்றவற்றை மட்டும் கொள்ளுதல் ஏற்புடையதாகும்.

### மக்கள் ஆட்சி

கிராம அவைகள் மக்கள் ஆட்சியில் பெரும் பங்கு கொண்டன. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பெரும் அவையும், தனித் தனிப் பணிகளைக் கவனிக்கச் சிறு உள் அவைகளும் இயங்கின. அவை வாரியங்கள் என அழைக்கப்பட்டன. ஊரில் விளையும் பொருள்களைப் பொதுவாக வாங்கவும், விற்கவும் சிலரை இச் சபையார் ஏற்பாடு செய்திருந்தனர். பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படாது தடுக்கவும், பொருட்களின் விலைகள் ஏறியும், இறங்கியும் மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் செய்யவும் ஒரு நல்ல முறையினை ஏற்பாடு செய்திருந்தனர். இவ் வவையினர் தேர்வு மூலமே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ் வூர் அவைகளைத் தவிர்த்து ஆலய நிர்வாகத்திற்கெனவும், அறங்களைக் காப்பதற்கு எனவும் தனித்தனி அவைகள் இருந்தன.

### தேர்தல் முறை

தேர்தல் முறையினை நோக்குகின்ற போது கலந்து கொள்ளுதல் கூடாது எனச் சிலருக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. தேர்தலுக்கு முந்திய மூன்று ஆண்டுகளில் கலந்து கொள்ளுபவர்களோ, அவர்களுடைய உறவினர்களோ எந்த வாரியத்திலும் பணியாற்றி இருத்தல் கூடாது. கொலைக் குற்றங்கள், திருட்டுக் குற்றங்கள் செய்தவர்களும் அனுமதிக்கப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பது பேர்களில் பன்னிருவர் பொதுவாரியத்தையும், பன்னிருவர் கோட்ட வாரியத்தையும், அறுவர் ஆறு, குளம் ஆகியவற்றையும் மேற்பார்வையிட்டனர். இவை தவிர இரண்டு தனி வாரியங்களும் இருந்தன.

### வாரியங்கள்

எம்முறையில் தேர்தல் நடைபெற்றது என ஆராயும்போது யார் யார் தகுதி வாய்ந்தவர்களோ அவர்களின் பெயர்கள் பனை ஓலைகளில் எழுதப்பட்டு ஒரு குடத்தினுள் போடப்பட்டன. பின்னர் அவ் வோலைகள் யாராவது ஒரு சிறுவனைக் கொண்டு எடுக்கப்பட்டன. இம்முறையினைக் குடவோலை முறை என அழைத்தனர். வாரியங்கள், எண்ணிக்கையில் கிராமத்திற்குக் கிராமம் வேறுபட்டிருந்தன. உறுப்பினர்

களுக்கு அவர்கள் ஆற்றும் பணிகளுக்காக ஊதியம் ஏதும் வழங்கப்படவில்லை. இவ் வாரியங்களின் உறுப்பினர்கள் வாரியப் பெருமக்கள் என அழைக்கப்பட்டனர். இவ்வுறுப் பினர்கள் பெரும்பாலும் கிராமக் கோவில்களிலேயே கூடினர். சிற்சில சமயங்களில் மர நிழலிலோ, அல்லது குளக்கரை யிலோ கூடினர்.

### கிராம நிர்வாகம்

கிராம அவைகள் கிராமத்தினுடைய நிர்வாகப் பொறுப் பினை மேற்கொண்டன. அரசுக்குச் சேர வேண்டிய வருவாயை வசூலித்ததோடல்லாமல் கிராமங்களின் நீதி நிர் வாகத்தையும் கவனித்துக்கொண்டன. அது மட்டுமின்றி எல்லா வகையான பொது அறக்கட்டளைகளுக்கும் அறங் காவலர்களாகத் திகழ்ந்தன. சந்தைகளையும் கிராம அவை யினரே நிர்வகித்து வந்தனர். பொதுக் காரியங்களை முன் னிட்டு அதிக வரி வசூலிக்கும் உரிமை பெற்றவைகளாகத் திகழ்ந்ததோடு கட்டாய உழைப்பைப் பெறும் அதிகாரமும் பெற்றிருந்தன. பொதுவாக வழக்கத்தில் வரும் வரிகளைத் தவிர்த்துப் புதுவரி விதித்தால், அவையோர் அவ் வரியால் பாதிக்கப்படுவோரை அழைத்து விசாரித்து நன்மை தீமை அறிந்தே வரி விதிப்பர். கிராமங்களில் பஞ்சம் ஏற்பட்டபோது கிராமச் சபைகள் கிராம மக்களுக்குத் தேவையானவற்றை வழங்கி உதவி செய்தன. அது போன்ற சந்தர்ப்பங்களில் ஆலயங்களில் நிறைந்து இருந்தவற்றை எடுத்து வழங்கினர். இச் சபைகளின் கடமை ஆலயங்களில் இறைவழிபாடும், அந் நிலையங்களில் அறம் வழங்குதலும் முறைப்படி நடந்திடுவதை மேற்பார்வையிடுவதுமாகும்.

### அபராதம்

கிராம அவைகளே கிராமங்களின் மீது அதிக அதிகாரம் செலுத்தும் ஆற்றல் பெற்றவைகளாக விளங்கின. அரசுக்குச் சேர வேண்டிய வரிப் பணம் முறையாகச் சேர்ந்திடுவதற்குப் பொறுப்பாளிகளாக விளங்கியவர்கள் கிராமச் சபையினரே. அரசுக்குச் சேர வேண்டிய தொகையை அனுப்பாமையால் கிராம அவை உறுப்பினர்கள் சிறை செய்யப்பட்டனர் எனக் கூறப்படும் குறிப்பு ஒன்று நமக்குக் கிடைத்துள்ளது. அதைப் போலவே கடமை தவறிய சந்தர்ப்பங்களில் கிராம அவையி னருக்கு அபராதம் விதிக்கப்பட்டது எனவும் அறிகிறோம். அரசனுக்கு அவ்வப்போது ஆலயங்களில் நடைபெறும் ஊழல்

களைத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பும் கிராம அவையி னுடையதே ஆகும்.

### தானம்

சோழர்கால நீதி முறையினைப் பற்றிய கல்வெட்டுகள் ஏதும் இல்லை. ஆயினும் சில தானக் கல்வெட்டுகளை நோக்கு மிடத்துப் பாவஞ் செய்வார் மிகக் கடுமையாகத் தண்டிக்கத் தக்கவர் எனத் தோன்றுகிறது. இலக்கியச் சான்றுகளில் சிறப்பாகப் பெரிய புராணம் ஓரளவிற்கு நீதி முறை பற்றிய வரலாற்றினை நமக்கு அறிவிக்கின்றது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள மக்களின் ஊர் அவைகளே அவ்வவ்வூரின் பழக்க வழக்கங்களுக்கும், நியதிக்கும், முறைக்கும் ஏற்ப நீதி வழங்கின. ஆகையால் அப் பொறுப்பினை அரசன் ஏற்றுக் கொள்ளவில்லை.

### நீதித்துறை

இக்காலத்தில் இருப்பது போல உரிமைச் சட்டம், குற்றச் சட்டம் என வேறுபாடு நீதியில் காணப்படவில்லை. தவறு செய்வோரைத் தண்டிக்கும் முறை ஊர் அவையிடமே யிருந்தது. தவறுகளைக் காணப் பல வழிமுறைகள் இருந்தன. பெரிய புராணம் சுந்தரருக்கும், முதியவருக்கும் நடந்த வழக்கினை வேதியர் தீர்த்து வைத்ததைக் காட்டுகிறது. உண்மை உணருவதற்காக 'ஆட்சியில், ஆவணத்தில், அன்றி மற்று அயலார் தங்கள் காட்சியில், மூன்றில் ஒன்று காட்டுவாய்' என ஊர்ச்சபையார் கிழவரைக் கேட்டனர். அவர் ஆவணம் காட்டி வென்றார். திருடு, பொய்க் கையொப்பம், ஒழுக்கக் குறை முதலியன பெருங் குற்றங்களாகக் கருதப்பட்டன. அரச குடும்பத்தவர்கள் இக் குற்றங்களைச் செய்யின் அரசனே விசாரித்துத் தண்டிப்பான். அரசியல் அதிகாரிகளாயின் அமைச்சரும், மற்றவர்களாயின் ஊர் அவையினரும் தண்டித் தனர்.

### நில அமைப்பு முறை

இனி, நில அமைப்பு முறை பற்றிக் காண்போம். பிற்காலச் சோழர் காலத்தில் மூன்று முறையில் நிலங்களை அளந்து—நீர்ப் பாசனம், விளைவு, பிறவகைப் பாகுபாடுகள் ஆகியவற்றை ஒட்டி அவற்றிற்கு வரி விதித்தனர். பயிரிடும் நிலம் போகப் பொதுப் பயனுக்காக ஊர் நத்தம், அரசுக்குரிய புறம்போக்கு, பறைச்சேரி முதலிய இடங்களை வரியிலிருந்து விலக்கியிருந்

தனர். விதித்த வரியை வசூலிக்கக் குடிகளைக் கொடுமைப் படுத்துவதில்லை. வரி வசூலிப்பதற்குக் கொடுமை செய்த அதிகாரி அதற்குக் கழுவாயாகக் கோவிலுக்கு விளக்கிட்டார் என்று அறிகிறோம். எனினும் வரிகொடாகிலமை எல்லை கடக்தால் உரிய நிலத்தை விற்பதுவ‌து உண்டு. விளையாவிடில் வரி தள்ளுபடி செய்யப்பட்டது. விளையும் பொருட்களைச் சேர்த்து வைத்ததோடு பொதுப் பணிக்கும் உதவினர்கள். நாட்டின் பல ஊர்களுக்கும் வாணிகத் தொடர்பு இருந்து வந்தது. வாணிகம் சிறந்து இருந்தமையால் நல்ல போக்குவரவுச் சாலைகளிருந்தன. அரசியலார் வாணிகத்திற் சில வரி விதிப்புகளைச் செய்திருந்தனர். கடனுக்காக அடமானப் பத்திரம் எழுதும் வழக்கம் இருந்தது. நூற்றுக்குப் பன்னிரண்டரை சதவிகிதம் வட்டி வாங்கப்பட்டது. விற்கும் நிலத்திற்கு எல்லைகளைக் குறித்தனர். உள்நாட்டு வாணிகமேயன்றிக் கடல்வாணிகமும் இருந்தது. வாணிகம் பெருகவே அதன் விளைவாக அதன் துணைக்காக அளவு, நாணயம், முதலியன ஒழுங்கு செய்யப்பட்டன.

### அளவைகள்

கழஞ்சு, மஞ்சாடி, கச்சாணம், ஐம்பொன் ஆகிய நாணயங்கள் இருந்தன. நிறுத்தல், முகத்தல் அளவைகளும் இருந்தன. பொன் நிறைக்கு ஆட வல்லான் என்னும் தராசு இருந்ததோடு, ஆடவல்லான் என்னும் முகத்தல் அளவை ஒன்றும் இருந்தது. நிறுத்தல் அளவைக்குச் சாதாரண கற்கள் பயன்படுத்தப்பட்டன.

தமிழ் நாட்டு வரலாற்றில் பிற்காலச் சோழர்களின் காலமே பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய காலம் என உரைக்கப்படுகிறது. சங்க காலமும், பல்லவர் காலமும் சிறந்தனவேயானாலும், உலகம் முழுதும் தமிழ் நாகரிகம், தமிழ்ப் பண்பாடு ஆகியவை பரவப் பாடுபட்டவர்கள் பிற்காலச் சோழர்களே ஆவர். பிற்காலப் பாண்டியர்களைப் பற்றிக் காண்கின்ற போது அவர்கள் எத்தகைய சிறந்த புதிய முறையினையும் புகுத்தவில்லை எனத் தெரிகிறது.

சோழர்களின் ஆட்சிச் சிறப்பு அதில் மக்களுக்கும் பங்கு இருந்தமைதான். மக்களின் கருத்துகளுக்கு மன்னரிடம் மதிப்பு இருந்தது. அரசர்கள் ஆடம்பரமாக வாழ்க்கை நடத்திய போதும் மக்கள் அதனைத் தவறாகக் கருதவில்லை, அதனைப் பெருமையாகவே கருதினர். ஆலய நிர்வாகம் மிகச்

சிறப்பாக நடைபெற்றது. ஆலய நிர்வாகத்திற்கு அரசன் அதிகமாகச் செலவழித்தான். ஆலயங்கள் செல்வச் சிறப்போடு விளங்கின.

பிற்காலப் படை எடுப்பாளர்களுக்குச் செல்வத்தை வாரி வழங்கிய ஆலயங்கள் மக்கள் துயரடைந்த போது துணை புரிந்தன. பஞ்சம் ஏற்பட்ட போது மக்களைக் காத்தன. சோழர்கள் ஆட்சி முடியாட்சியாக விளங்கிய போதும் மக்களுக்குப் போதிய சுதந்திரம் இருந்தது. தங்கள் குறைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளும் அளவிற்கு அவர்களுக்கு ஆட்சித்துறை நிறுவனங்கள் உதவின என்பதும் சோழர் ஆட்சி முறையின் சிறப்பாகும்.

# 18. பல்லவர் காலம்

### சான்றுகள்

சங்க இலக்கியங்களில் பல்லவர்களைப் பற்றிய குறிப்பு ஏதும் காணப்படவில்லை. கி.பி. இரண்டாம் நூற்றுண்டிற்குப் பிற்பட்ட நூல்களில் பல்லவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. லோக விபாகம் என்னும் சமண நூல், அவந்தி சுந்தரி கதை என்னும் வடமொழி நூல், மத்தவிலா சப் பிரகசனம் என்னும் நாடகம், சைவத் திரு முறைகள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், நந்திக் கலம்பகம், பாரத வெண்பா ஆகிய இலக்கியச் சான்றுகள்பல்லவர்களது ஆட்சி முறையினைப் பற்றிய செய்திகளையும் நமக்கு அறிவிக்கின்றன. இலக்கியச் சான்றுகள் தவிரக் கல்வெட்டுகளும், பட்டயங் களும் நமக்குத் துணை புரிகின்றன.

### ஆட்சிப் பிரிவு

பல்லவப் பெருநாடு பல இராட்டிரங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. ஒவ்வோர் இராட்டிரத்திலும் பல விஷயங்கள் இருந்தன. பல்லவர்கள் ஆண்ட தமிழகத்தில் கோட்டம், நாடு, ஊர் என்னும் பிரிவுகள் இருந்தன. பல்லவர்கள் நாட்டுப் பிரிவுகட்கு ஏற்கெனவே இருந்த பெயர்களைத் தங்கள் ஆட்சி யிலும் கையாண்டனர் என்பதற்கான சான்றுகள் காணப் படுகின்றன. தொண்டை நாடு, புழல் கோட்டம், ஈக்காட்டுக் கோட்டம், மணவிற் கோட்டம், எயில் கோட்டம், தாமல் கோட்டம், ஊற்றுக்காட்டுக் கோட்டம், ஆம்பூர்க் கோட்டம், களத்தூர்க் கோட்டம், செம்பூர்க் கோட்டம், வெண்குன்றக் கோட்டம், பல குன்றக் கோட்டம், இலங்காட்டுக் கோட்டம், கலியூர்க் கோட்டம், செங்கைக் கோட்டம், படுவூர்க் கோட்டம், கடிகூர்க் கோட்டம், செந்திருக்கைக் கோட்டம், குறைவட்டான் கோட்டம், வேங்கடக் கோட்டம், வேலூர்க் கோட்டம், சேத்தூர்க் கோட்டம், புலியூர்க் கோட்டம் என இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இராட்டிரங்

களாகிய மண்டலங்களை ஆண்டவர்கள் பெரிதளவு தம்மாட்சியே செய்து வந்தனர். இவர்கள் நாளடைவில் வழிவழியாக இப்பதவிகளில் நிலைத்து விட்டனர். பல்லவர்கள் வடவர் ஆதலாலும், இராட்டிரர், பாண்டியர், ஆகியோரால் துன்புறுத்தப்பட்டதாலும், தமிழ்க் குறுநில மன்னர்களை அதிகமாக்கினர். தமிழ் மக்களுக்கு ஆளும் பொறுப்பினைத் தந்தனர்.

### மைய அரசு

மைய அரசின் தலைவர் அரசரே ஆவார். மரபு வழியே அரசுரிமை பெறுகின்ற முறையே பல்லவர் காலத்தில் வழக்கில் இருந்தது. அரசனுக்கு வாரிசு இல்லாவிடில் அரசனுடைய தம்பி மகன் பட்டத்தைப் பெற்றான். காசக்குடிச் செப்பேடுகளிலிருந்து சிம்ம விஷ்ணுவிற்குப் பின் அவர் தம்பி பீமவர்மன் மகேந்திர வர்மன் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை பதவி வகித்தார். அரசர் வாரிசு ஏதுமின்றித் தற்செயலாக இறந்துவிட்டால் அமைச்சர் முதலானோர் ஒன்றுகூடி அரச மரபில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து முடி சூட்டினர்.

### தேர்தல் முறை

தேர்தல் முறையும் பல்லவர் காலத்தில் இருந்தது என அறிகிறோம். இரண்டாம் பரமேசுவரன் இறந்த பின்னர் பொதுமக்கள் அரசனைத் தேர்ந்தெடுக்கக் கூடினர். இவ்விதம் மக்கள் அரசனைத் தேர்ந்தெடுத்தமை மக்களின் அரசியல் உணர்வை வெளிப்படுத்துகின்றது. காசக்குடிச் செப்பேட்டில் பல்லவர்கள் பிரம்மாவின் வழித் தோன்றல்கள் என்னும் குறிப்புக் காணப்படுகிறது. தெய்விக மரபுக் கொள்கை ((Divine Right theory) இருந்தது என்பதற்குச் சான்றுகள் இல்லை. அரசர்கள் தர்ம மகா இராஜாதிராஜா, மகா இராஜாதிராஜா, தர்ம மகா இராஜா, மகா இராஜா ஆகிய பட்டங்களைத் தத்தம் தகுதிக்கேற்றவாறு பெற்றிருந்தார்கள். பல்லவ வேந்தர்கள் தாம் செய்த வேள்விப் பெயர்களையும், தங்கள் பட்டப் பெயர்களாகக் கொண்டனர். பல்லவர்களுக்கு இடப்பட்ட பெயர் வேறு; முடி சூட்டப்பட்டவுடன் கொண்ட பெயர் வேறு. இராசசிம்மன் என்னும் இயற் பெயர் கொண்ட அரசன் முடி சூட்டப்பட்டவுடன் நரசிம்ம வர்மன் ஆயினன்.

### விருது பெயர்கள்

பல்லவ அரசர்கள் விருது பெயர்கள் பலவற்றைப் பெற்றிருந்தனர். பல்லவ அரசர்கள் அனைவரும் வடமொழிப்

புலவர்களாக விளங்கினர். சிறந்த இலக்கியங்களைப் படைத்தனர். முதலாம் மகேந்திர வர்மன் சிறந்த இசைக் கலைஞனாக விளங்கினான். பல்லவர்கள் சமயப் பற்று மிக்கவர்களாகவே விளங்கினார்கள். பல்லவ அரசன் இராசசிம்மன் சைவசித்தாந்தத்தில் சிறந்தவன். அவன் சிறந்த அழகுமிக்க ஆலயங்களைக் கட்டி, அவைகளில் வழிபாடுகள் முறையாக நடைபெற மானியங்களை வழங்கினான். சமயக் கொலை யாராவது பல்லவ அரசர் நிகழ்த்தி இருப்பாரேயானால் எப்போதாவது நடந்த சம்பவமாகவே அது கருதப்படும். பல்லவர்கள் நந்தி இலச்சினையைக் கொண்டனர். நந்தி இலச்சினை பல்லவர்களின் சமய உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது. சில இலச்சினைகளில் சிங்கம் காணப்படுவதைக் கொண்டு அறிஞர்கள் சிலர் சிங்கமே பல்லவர்கள் பயன்படுத்திய ஒன்றான உரைத்தனர். பிற்காலப் பல்லவர் அனைவருமே நந்தி இலச்சினையை நன்கு பயன்படுத்தினர். பல்லவர் கொடி நந்திக் கொடியே ஆகும். பல்லவர்களின் காசுகளில் நந்தி இருத்தலைக் காணலாம். பல்லவர் ஆட்சியில் தனிப்பட்ட ஒரு அரசன் எச் சமயத்தவன் ஆயினும் சைவமே முக்கிய சமயமாக இருந்தது. சிவ ஸ்கந்த வர்மன் தன்னை அக்னிஷ்டோம—வாஜ பேய—அஸ்வ மேத ராஜ் என அழைத்துக் கொண்டதாக அறிகிறோம். இதன் மூலம் பல்லவ வேந்தர்கள் தாம் செய்த வேள்விப் பெயர்களையும் தங்கள் பட்டப்பெயர்களாகக் கொண்டிருந்தனர் என்னும் உண்மை வெளிப்படுகிறது.

### அமாத்தியர்

கத் வாங்கம் என்பது சிவனின் படைகளில் ஒன்றாகும். இதனால் தான் சிவபெருமான் **கத்வாங்கன், கத்வாங்கதரன்** என்றெல்லாம் அழைக்கப்பட்டார். பிற்காலப் பல்லவர் இக் கத் வாங்கப் படையைத் தமது சமய அடையாளமாகக் கொண்டிருந்தனர். வைகுந்தப் பெருமாள் கோவில் கல் வெட்டுகள் கூறுகின்ற உண்மை இதுவாகும். ஹிரஹத கல்லிப் பட்டயங்களில் இருந்து அமாத்தியர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பெரிய புராணத்தில் மகேந்திர வர்மன் திருநாவுக்கரசரை அழைத்து வரத் தன் அமைச்சரை அனுப்பியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அமாத்தியர்களுக்கும், அமைச்சர்களுக்கும் வேறுபாடு உண்டு. அமாத்தியர் ஆலோசனை கூறுபவர். அமைச்சர் அரச தந்திரம் உணர்ந்தவர். வைகுந்தப் பெருமாள் கோவில் கல் வெட்டுகளில் மாத்திரர்கள் என்னும் சொல் காணப்படுகிறது. மாத்திரர்கள்

என்பதை அமைச்சர்கள் என்றே பொருள் கொள்ள வேண்டுமென திரு. பி. டி. சீனுவாச ஐங்காரும், டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்காரும் கருத்துத் தெரிவித்தனர். சிறுத் தொண்டர் என அழைக்கப்பட்ட பரஞ்சோதி முனிவர் மகா மத்திரர்கள் குடும்பத்தில் பிறந்தவர் என்று கூறப்படுகிறது.

### அமைச்சர் குழு

இரண்டாம் நந்தி வர்மன் காலத்திலும், பிற்காலத்திலும் பல்லவர் அரசியல் அமைப்பில் அமைச்சர் குழு இருந்தது என்பதற்குரிய சான்றுகளைக் கல்வெட்டுகளால் அறியலாம். இரண்டாம் நந்திவர்மனது தலைமை அமைச்சர் பிரம்ம ஸ்ரீராஜன் எனப்பட்டார். மூன்றும் நந்திவர்மனின் அமைச்சர் கம்பன் இறையூர் உடையான் ஆவார். பிரம்மராஜன், பேரரையன் என்பன அமைச்சர்கள் பெற்ற சிறப்புப் பட்டங்கள். மாணிக்க வாசகர் தென்னவர் பிரம்மராயன் என அழைக்கப்பட்டார் என டாக்டர் இராச மாணிக்கனுர் குறிப்பிடுகின்றுர். பண்டைத் தமிழ் அரசர்கள் தம் அமைச்சர்களுக்குப் பிரமராயன், பேரரசன் என்பன போன்ற பட்டங்களை வழங்கியதை ஒட்டியே பல்லவரும் நடந்து கொண்டனர் என்பதனை மீனுட்சி அம்மையார் எழுதியுள்ள நூலின் மூலம் அறிகிறோம். அரசன் இடும் ஆணையை நடைமுறையில் கொண்டு வந்தவர் உத்தம சீலன் என்னும் அமைச்சர் எனவும், அமைச்சர் அரசர்க்கு ஆலோசனையாளர் எனவும் வைகுந்தப் பெருமாள் கோவில் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

### கடமைகள்

அமைச்சர்களுடைய கடமைகளைப் பற்றி ஆராயும் போது அரசர்க்குத் தங்கள் சேவையையும், உதவியையும் ஆட்சித் துறையில் நல்கியது மட்டும் இன்றி நாட்டின் அயல் நாட்டுக் கொள்கைகள், முக்கிய கொள்கைகள் ஆகியவற்றினை உருவாக்கும் பணியிலும் உதவினர். அமைச்சர்கள் படைத் தளபதிகளாகவும் பணியாற்றினர். அமைச்சர்கள் அரசனைத் தேர்ந்தெடுப்பதிலும், முடிசூட்டு விழாவிலும் முக்கிய பங்கு வகித்தனர். ஹிரஹத ஹல்லிப் பட்டயங்களிலிருந்து அரசருக்கு உதவிடத் தனிச் செயலாளர் இருந்தார் என அறிகிறோம். காசக்குடிப் பட்டயங்களிலிருந்து வாயில் காப்பார், கீழ்வாயில் காப்பார் எனப்படும் அலுவலர்களும் இருந்தனர் என அறிகிறோம்.

*நீதித்துறை*

பல்லவர் காலத்து நீதித் துறையினை ஆராய்கின்ற போது மூன்று வகைப்பட்ட நீதி மன்றங்களைப் பற்றிய செய்திகளை நாம் அறிகிறோம். பல்லவப் பெரு நகரங்களிலிருந்த நீதி மன்றங்கள் அதிகரணங்கள் என்றும், சிற்றூர்களில் இருந்த நீதிமன்றங்கள் கரணங்கள் எனவும், இக்கால உயர் நீதிமன்றம் போல் விளங்கிய நீதி மன்றம் தரும சாசனம் எனவும் அழைக்கப்பட்டன. மகேந்திரன் எழுதிய மத்தவிலாசப் பிரகசனத்தால் **அதிகரணங்கள்** பெரு நகரங்களில் இருந்தவை என்னும் செய்தியையும் அறிகிறோம். சிற்றூரில் இருந்த **கரணம்** என்னும் நீதி மன்ற அலுவலாளர்கள் அதிகாரிகள் என அழைக்கப்பட்டனர். மூன்றாம் நந்திவர்மன் காலத்தில் திருவெண்ணெய் நல்லூரில் இருந்த ஊர் அவை வழக்கை விசாரித்து முடிவு கூறிய செய்தியினைப் பெரிய புராணம் அறிவிக்கின்றது.

அரசரே நீதித் துறையின் தலைவராக இருந்தார். மாவட்டங்களிலும், கிராமங்களிலும் இருந்த நீதிமன்றங்கள் அரசரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. நீதிபதிகள் தர்மாதிகாரிகள் என அழைக்கப்பட்டனர். **அதிகரண தண்டம், கரண தண்டம்** என்னும் இருவகை அபராதம் விதிக்கப்பட்டது என்பதிலிருந்து அதிகரண தண்டம் தலைமை நீதி மன்றத்தாலும், கரண தண்டம் மற்ற நீதி மன்றங்களினாலும் விதிக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது. அதிகரணவில் இலஞ்ச ஊழல் நிலவியதாகவும், காய்தல், உவத்தல் இன்றி நீதி வழங்கப்படவில்லை என்றும், மத்த விலாசம் கூறும் செய்திகள் அறிவிக்கின்றன. அதிகரணம் என்பது குற்ற இயல் வழக்குகளை விசாரிக்கும் மன்றம் எனவும், தருமாசனம் என்பது உரிமையியல் வழக்குகளை விசாரிக்கும் மன்றம் என்றும் கருதலாம். தருமாசனம் பல்லவப் பேரரசின் பொது மன்றம் என்பது டாக்டர் இராசமாணிக்கனாரின் கருத்து ஆகும்.

*சான்றுகள்*

வழக்கில் முடிவு கூற 1. **ஆட்சி** (நீண்ட காலமாகக் கையாண்டு வரும் ஒழுக்கம் அல்லது அனுபோக பாத்தியம்) 2. **ஆவணம்** (வழக்கை முடிவு செய்ய உதவும் சுவடி, ஓலை முதலிய எழுத்துச் சீட்டுகள்) 3. **அயலார் காட்சி** (வழக்கு நிகழ்ச்சியைக் கண்டவர் கூறுவது) ஆகிய மூன்று சான்றுகள் தேவைப்பட்டன. அந்தந்த ஊரார் கையெழுத்துகளையும்,

கையொப்பங்களையும் தனியாக ஊர்ப் பொது ஆவணக் காப்பகத்தில் வைக்கும் வழக்கம் அக் காலத்தில் இருந்தது. சாட்சிகளாகக் கையெழுத்திட்டவர் மேல் எழுத்திட்டவர் எனப் பட்டனர்.

### நிலம்

பல்லவர் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டில் நிலம் முழுவதுமே செவ்வையாக அளவிடப்பட்டிருந்தது. பல்லவர் ஆட்சியில் நில அளவைக் கணக்கு உண்டு என்பதைப் 'படிப் பிரம்மதேயம் இருபத்து நான்கு வேலியும் நீக்கி' என்னும் பட்டயத் தொடர் மூலம் அறிகிறோம். சில பகுதி நிலங்கள் வரி செலுத்த வேண்டாத இறையிலி நிலங்களாக இருந்தன. நில அளவைக் கணக்குகளையும், வரி அளவை முதலிய கணக்குகளையும் சிற்றூர், பேரூர் அரசியல் அலுவலாளர் வைத்திருந்தனர். நிலத்தை அளந்து கள்ளியும், கல்லும் நட்டு எல்லை வகுத்தல் அக் காலப் பழக்கமாக இருந்தது. அரண்மனை அலுவலாளர்களில் பொற்கொல்லர், பட்டய எழுத்தாளர், புலவர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அரண்மனைப் பொற்கொல்லர் அரசுக்கு வேண்டிய அணிகலன்களைச் செய்ததோடு அரசர் ஆணைகளைச் செப்புப் பட்டயங்களில் பொறித்தனர். அரசியார்க்கு அணிகலன் செய்த பொற்கொல்லர் மாதேவிப் பெருந்தட்டார் எனப் பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொற்கொல்லரைத் தவிரச் செப்புப் பட்டயங்களைத் தீட்டப் பட்டய எழுத்தாளர் என்பவரும் இருந்தார். அரசர் புகழை நாளும் பாடிட காரணிகர் எனப்படும் புலவர் பல்லவர் அரண்மனையில் இடம் பெற்றிருந்தார்.

### படை

பல்லவர்கள் படையினை நான்கு பிரிவாகப் பிரித்திருக்கலாம் என்று தெரிகிறது. அவை: யானைப் படை, குதிரைப் படை, காலாட் படை, தேர்ப் படை என்பனவாகும். தேர்ப் படை என்னும் பிரிவு பல்லவர் காலத்திலும் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. தேர்ப் படை பல்லவரிடம் இருந்தது என்பதை மெய்ப்பிக்கச் சான்றுகள் கிடைக்கவில்லை. வைகுந்தப் பெருமாள் கோவில் சிற்பங்கள் வாயிலாகப் போர்ப்பரிகள் பல இருந்தன என அறிகிறோம். படை அதிகாரிகள், சேனாதிபதிகள் என்று அழைக்கப்பட்டனர். பல்லவர்கள் சாளுக்கியர்களோடு போர் செய்தமையால் சிறந்த படையினை வைத்திருந்தனர் எனக் கருதலாம். பல்லவர்கள் சிறந்த கடற்படையினையும் வைத்திருந்தனர். நரசிம்ம

வர்மன் மானவன் மனுக்கு உதவி புரியத் தன் கடற்படையை ஈழத்திற்கு அனுப்பி அப்படையும் வெற்றி கொண்டது | என்பதை அறியும்போது பல்லவர் கடற்படையின் வலிமையினை அறிகிறோம்.

### வரிகள்

உப்புத் தயாரித்தல் அரசின் ஏகபோக உரிமையாயிற்று. தென்னை மரங்களைப் பயிரிட விரும்பினோர் அவற்றின் விளைச்சலில் ஒரு பகுதியை அரசர்க்கு வரியாகச் செலுத்தி வந்தனர். கல்லாலமரம் பயிரிடச் சிற்றூரார் அரசரிடம் உரிமை பெற வேண்டியிருந்தது. அவ்வுரிமைக்குச் சிறு தொகை செலுத்த வேண்டியிருந்தது. அது கல்லால் காணம் எனப்பட்டது. நோய் தீர்க்கும் மருந்துச் செடிகளைப் பயிரிட அல்லது விற்கும் உரிமை பெறச் செலுத்தப்பட்ட தொகைக் கண்ணிட்டுக் காணமாகும். குவளைச் செடிகளை நடவும், விற்கவும் உரிமை பெறச் செலுத்தப்பட்ட தொகைக் குவளைக் காணமாகும். சிற்றூர்த் தலைவனுக்கு ஊரார் செலுத்தி வந்த வரி வியவன் காணம் என்று அழைக்கப்பட்டது. இவ்வாறு பல துறைகளிலும் வசூலிக்கப்பட்ட வரிகள் அரசு கருவூலத்தை அடைந்தன. கருவூலத்தின் தலைவன் குமாரன் என அழைக்கப்பட்டான். பொருள் கொடுக்கும்படி ஆணையிடும் அலுவலர் கொடுக்கப் பிள்ளை எனப்பட்டனர்.

### அளவைகள்

கலப்பை, நிவர்த்தனம், பட்டிகா, பாடகம் என்னும் நான்கு அளவைகள் பல்லவ ஆட்சியில் இருந்தன. இரண்டு எருதுகள் பூட்டப் பெற்ற ஒரு கலப்பையைக் கொண்டு குறிப்பிட்ட ஒரு நேரத்தில் ஒருவன் உழும் நிலத்தின் அளவு கலப்பை எனவும், ஒருவன் ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியிலிருந்து குறிப்பிட்ட நேரத்திற்குள் நடந்து புறப்பட்ட இடத்தை அடைந்தவுடன் அவனால் எல்லைக் கோடிடப்பட்ட நில அளவு நிவர்த்தனம் எனவும், ஆட்டை ஓரிடத்தில் கட்டி அதன் கயிற்றின் உதவியால் சுற்றும் அளவையுடைய நிலப் பகுதி பட்டிகா எனவும், இருநூற்று நாற்பது குழி (குழி என்பது 144 சதுர அடி முதல் 576 சதுர அடிவரை) கொண்ட நிலம் பாடகம் எனவும் அழைக்கப்பட்டன. இந்த அளவைகளோடு நாலு சாண் கோல், பன்னிரு சாண் கோல், பதினறு சாண் கோல் முதலிய நீட்டலளவைகளும் இருந்தன எனக் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.

*முகத்தலளவைகள்*

உரி என்பது ஒரு முகத்தலளவைக் கருவியாகும். பல அளவைகள் கோப்பெருந்தேவியின் பெயரைக் கொண்டன வாக இருந்திருக்கலாம். பிருதிவி மாணிக்கம் என்னும் நிரு பதுங்கவர்மன் மனைவியின் பெயரால் பிருதிவி மாணிக்க உரி என்னும் அளவைக் கருவி இருந்தது. எண்ணெய், நெய், பால் முதலியன அளக்கப் பயன்பட்ட சிறிய அளவை பிடி எனப் பட்டது. நெல் முதலியன அளக்கச் **சோடு, நாழி, மரக்கால், பதக்கு, குறுணி, காடி, கலம்** முதலியன பயன்பட்டன. **கரு நாழி, நாள்வா நாழி,** மாகாய நாழி, பிழையா நாழி, **நாரா யண நாழி** என்னும் பல நாழிகள் இருந்தன. **விடேல், விடுகு, உழக்கு** என்பன பொதுவாக முத்திரை இடப்பட்ட பல்லவர் கால முகத்தல் அளவைகளாகும். கழஞ்சு, மஞ்சாடி முதலி யன பொன் நிறுக்கும் அளவைகள். கழஞ்சின் பன்னிரண்டில் ஒரு பாகம் மஞ்சாடி.

*ஏரிகள்*

பல்லவர் தடாகம் எனப்படும் பல ஏரிகளை உண்டாக்கி னர். அவை அரசர் பெயரையோ, தோண்டப்பட்ட இடத்தைச் சேர்ந்த தலைவன் பெயரையோ கொண்டனவாகவே இருந்தன. உதாரணம்: இராசதடாகம், திறலைய தடாகம், மகேந்திர தடாகம் என்பன. ஏரிகள் அல்லாமல் கூவல்கள் (கிணறுகள்) பல எடுக்கப்பட்டன. பாலாறு, காவிரி, முதலிய ஆறுகளிலி ருந்து நீரைக் கொண்டு செல்ல ஆற்றுக்கால் வாய்க்கால், நாட்டுக்கால் வாய்க்கால் எனப்படும் கால்வாய்கள் பல்லவர் நாடெங்கும் இருந்தன. ஏரி, கிணறு, வாய்க்கால், மதகு இவற்றை மேற்பார்வை இட்டு வேண்டிய திருத்தங்களை ஏரி வாரியத்தினர் கவனித்து வந்தாலும், ஊராரும் நீர்ப்பாசன வசதிகளைத் திருத்தமுறச் செய்யப் பல நிலங்களைத் தானம் செய்தனர். அரசும் போதிய பொருளுதவி செய்தது.

*பஞ்சம்*

பெரும் போர்களின் போது சிற்றூர்களில் முன்னெச்சரிக் கையாகப் பஞ்சம் ஏற்பட்டபோது மக்கள் துயரடையாமல் காக்கப் பல்லவப் பேரரசர்கள் பஞ்சவாரியம் ஏற்படுத்தி ஒவ்வொரு சிற்றூரிலும் அறுவடையானவுடன் பஞ்ச ஒழிப்புக் கென்று ஒரு பகுதி நெல் ஒதுக்கப்பட்டது. மூன்றும் நந்தி வர்மன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில் **'திருக்காட்டுப் பள்ளிப் பஞ்ச வாரம் ஆயிரக்காடி நெல்'** என்னும் தொடரின்

மூலம் குடிகள் கொடுத்த நெல் பஞ்சவாரம் எனப் பெயர் பெற்றதாக அறிகிறோம்.

### உள் ஆட்சி முறை

இனி உள் ஆட்சி முறை பற்றிக் காண்போம். கோட்டம் அளவில் பெரியது; நாடு என்பது கோட்டத்தை விடச் சிறியது. ஆனால் சிற்றூரை விடப் பெரியது. நாடு என்னும் பிரிவினைச் சேர்ந்த அறிஞர்கள் நாட்டார் எனப்பட்டனர். ஊரார் என்பவர்கள் சிற்றூரைச் சேர்ந்த அறிஞர்கள். ஆள்வார் என்பவர்கள் ஊரை ஆண்ட அவையினர். ஒரு நாட்டிற்குட்பட்ட எந்தச் சிற்றூரைப் பற்றிய செய்தியிலும் நாட்டார், ஊரார், ஆள்வார் ஆகிய மூவருமே கலந்து முடிவு செய்தனர். அரசனால் இடப்பட்ட ஆணைகள் திருமுகம் எனப்பட்டன. நாட்டார் அவ் வாணைகளை நிறைவேற்றிப் பொதுமக்களுக்கு அறிவித்தனர். அதனை அறை ஓலை என்றழைத்தனர் என்பதனைப் பின்வரும் பட்டயச் சான்று விளக்குகிறது. 'நாட்டார்க்கு விட்ட திருமுகம் நாட்டார் தொழுது தலைக்கு வைத்து எல்லை போய்க் கல்லும் கள்ளியும் நாட்டிப் பதாகை வலம் செய்து நாட்டார் விடுத்த அறை ஓலைப்படி...'

### ஊர் அவை

ஊர் ஆட்சி எவ்வாறு இருந்தது என்பதனைத் தெளிவாக விளக்கும் சான்றுகள் கிடைக்கவில்லை. ஊரார் சிற்றூரைச் சேர்ந்த அவையாருடன் கலந்து வேலை செய்தனர் என்பதைக் கல்வெட்டுகள் நமக்கு அறிவிக்கின்றன. ஊர் அவையினர் பெருமக்கள் என அழைக்கப்பட்டனர். இப் பெருமக்களுடைய பணிகள் உழவு, கோவிற்பணி, அறங்கூறல் முதலியவைகளாக இருந்தன. கோபாலன் என்பார் எழுதி வைத்துள்ள காஞ்சிப் பல்லவர்கள் (Pallavas of Kanchi) என்னும் நூலில் ஊர் அவை பல உட்பிரிவுகளாகப் பிரிந்து பல துறைகளிலும் நுழைந்து சிற்றூர் ஆட்சியைத் திறம்படச் செய்தது என்று குறித்துள்ளார்.

### வாரியம்

ஊர் அவைக்குள் பல பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு பிரிவும் வாரியம் எனப்பட்டது. ஏரி வாரியப் பெருமக்கள், தோட்ட வாரியப் பெருமக்கள் எனப் பல வகுப்புப் பெருமக்களைக் கொண்ட முழு அவையே ஊர் அவையாகும். பல்லவர் காலத்தில் ஏறக்குறைய இருபது ஊர் அவைகள் இருந்

தன என்பதைப் பட்டயங்களாலும், கல்வெட்டுகளாலும் அறிகிறோம். மேலும் பல ஊர் அவைகள் இருந்திருத்தல் வேண்டும். ஆனால் அவை குறித்த செய்திகள் நமக்குக் கிடைக்கவில்லை. பெரிய புராணத்தின் மூலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் திருவெண்ணெய் நல்லூரிலும், சிதம்பரத்திலும் ஊர் அவைகள் இருந்தன என்பதை அறிகிறோம். சிற்றூரை நேரே பொறுப்பாக ஆட்சி செய்தவர்கள் ஆளுங் கணத்தார் என அழைக்கப்பட்டனர். இவர்களுக்கும் ஊர் அவைக்கும் இருந்த தொடர்பு வேறுனது. ஊரவையாரை இன்றைய நகரவைகளைப் போலவும், ஆளுங்கணத்தாரை இன்றைய நிர்வாக அதிகாரி (ஆணையாளர்) போலவும் கருதலாம். இவர்களைத் தவிர ஆலயங்கள் சம்பந்தப்பட்ட பணிகளைக் கவனித்து வந்தவர்கள் அமிர்த கணத்தார் என அழைக்கப்பட்டனர். அமிர்த கணத்தாருடைய பணிகள் யாவை? இவர்களுக்கும் ஊரவைக்கும் உள்ள தொடர்பு யாது? அமிர்த கணத்தார் கோவில் சம்பந்தமான செய்திகளில் ஊர் அவையாருக்குப் பொறுப்புள்ளவர் ஆவர். அது மட்டுமின்றி கோவிலுக்கு வரும் அறக் கொடைகளை வரவு வைத்தல், கோவில் கருவூலத்திலிருந்து பொருட்களைக் குறைந்த வட்டிக்குக் கடன் தருதல், அது தொடர்பான பதிவுகளைப் பாதுகாத்தல், கோவில் சம்பந்தப்பட்ட பிற வேலைகள் ஆகியவற்றைக் கவனித்து வந்தனர்.

இக்காலச் சிற்றூர்களே பெரும்பாலும் மாறுதல் இன்றி அக் காலத்திலும் இருந்தன. ஒவ்வொரு சிற்றூரும் நன்கு அளக்கப்பட்டு எல்லைகள் குறிக்கப்பட்டிருந்தது. மறையவர் பொருட்டு உண்டாக்கப்பட்டவை பிரம்மதேயச் சிற்றூர்கள் என அழைக்கப்பட்டன. உதய சந்திர மங்கலம், தயாமுக மங்கலம், பட்டத்தாள் மங்கலம் முதலியன பிரம்மதேயச் சிற்றூர்களில் சிலவாகும். இச்சிற்றூர்கள் எத்தகைய வரியும் அரசுக்குச் செலுத்த வேண்டியதில்லை. சில சிற்றூர்கள் கோவிலுக்கு என்று விடப்பட்டன. அவை தேவதானச் சிற்றூர்கள் எனப் பெயர் பெற்றன. அச் சிற்றூரின் வருவாய் முழுவதும் கோவில் பணிக்கே செலவிடப் பட்டது.

**தனிப் பரிவாரம், கோவில் பரிவாரம், அமிர்த கணத்தார்** என்பவர் அனைவரும் கோவில் வருவாயைக் கொண்டு பிழைத்தவர் ஆவர். கோவில்களை அடுத்து அடியார்கட்கும் ஏழைகட்கும் உணவுச் சாலைகள் நடைபெற்று வந்தன. கோவில் அல்லது உணவுச் சாலைக்கு ஊராரிடமிருந்தும் வணிகரிட

மிருந்தும் இக் கால வழக்கம் போல மகமையாக ஒரு பகுதி நெல், அரிசி முதலியவற்றைப் பல்லவர் காலத்தில் வசூலித்து வந்தனர் என்பதனை இரண்டாம் நந்திவர்மன் காலத்துக் கல்வெட்டுத் தெளிவாக அறிவிக்கின்றது. இந்து ஆலயங்களுக்கு மட்டுமின்றிச் சமணப் பள்ளிக்கென விடப்பட்ட இறையிலி நிலங்கள் **பள்ளிச் சந்தம்** என அழைக்கப்பட்டன. ஆனால் பௌத்தர்க்கு நிலம் விட்டதாகச் சான்று ஒன்றும் கிடைக்கவில்லை.

பல்லவர்கள் ஆட்சி முறையின் சிறப்பு சிறந்த நெறிப்படுத்தப்பட்ட ஆட்சி முறை என்பதுதான். பல்லவர்கள் ஏற்கெனவே வழக்கில் இருந்த முறைகளைப் பின்பற்றியதால், அதில் மாற்றம் ஏதும் செய்தற்குரிய அனுபவம் பெற்றனர். பழைய முறைகளில் இருந்த குறைபாடுகளை நீக்கினார்கள். ஆயினும் பல்லவர் காலத்தில் இலஞ்ச ஊழலை ஒழிக்க இயலவில்லை என்பதை நமக்கு மத்தவிலாசம் கூறும் செய்தி அறிவிக்கின்றது.

இதுகாறும் கண்ட செய்திகளிலிருந்து பல்லவர்கள் தென்னிந்திய வரலாற்றில் மட்டுமின்றி இந்திய வரலாற்றிலும் குறிப்பிடத் தகுந்த அளவிற்கு ஆட்சித் துறையில் தங்கள் பங்கினைச் செய்துள்ளனர் என்று அறிகிறோம். இயன்ற அளவில் தமிழ்ப்பண்புகளைக் கையாண்டமையால் பல்லவர்கள் வடவர்களாய் இருந்த போதிலும், அவர்கள் ஆட்சி தமிழர்கள் ஆட்சி முறையையே ஒத்திருந்தது.

# 19. விஜய நகரப் பேரரசு காலம்

## (Vijaya Nagar Polity)

இடைக்கால ஐரோப்பிய வரலாற்றினை எழுதுகின்ற வரலாற்று ஆசிரியர்கள் பொதுவாக நிலமானிய முறை அக்காலத்தின் தேவையாக இருந்தது என்று உரைப்பது வழக்கம். அதைப் போலவே விஜய நகரப் பேரரசில் தோன்றிய ஆட்சி முறையும் அமைந்திருந்தது. அரசரின் இறைமையை ஒட்டி முடியரசுகள் செயல்பட்டன. விஜய நகரப் பேரரசு இதற்கு விலக்கு அன்று. ஹரிஹரர் புக்கர் எனப்படும் சகோதரர்களால் ஏற்படுத்தப்பட்ட அரசு இரண்டாம் தேவராயர், சாளுவ நரசிம்மன், கிருஷ்ணதேவராயர் ஆகியோரால் நிலைப்படுத்தப் பட்டது. மற்ற முடியரசுகளில் இருந்தது போலவே விஜய நகரப்பேரரசிலும் அரசரே ஆட்சித்துறைத் தலைவராக உன்னத மான இடத்தினை நாட்டில் வகித்து வந்தார். கிருஷ்ண தேவ ராயரின் ஆமுக்த மால்யதாவில் பழங்கால இந்தியாவின் இறைமையின் ஏழு கூறுகளில் அரசர் மிகவும் முக்கியமானவர் என்று கூறப்பட்டுள்ளது.

### முடி சூட்டு விழா

இந்து அரசுகள் எல்லாவற்றிலும் முடி சூட்டும் விழா மிக முக்கியமானது ஆகும். முடி சூட்டு விழாவினை நிகழ்த்தத் தனி யான அவை கூட்டப்பட்டது. அவ் வவையில் சிற்றரசர்கள், வகுப்புத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அமைச் சர்கள் இவ் விழாவில் சிறப்பிடம் வகித்ததோடு அதனை நடத்தி யும் வைத்தனர். முடி சூட்டு விழா ஓர் உறுதியை அரசர்க்கு அளித்தது. அரசர்களும் இவ் விழாவில் உறுதி மொழிகளை எடுத்துக் கொண்டனர். விஜய நகரப் பேரரசில் அரசர்கள் தங்களுக்குப்பின் ஆட்சி நடத்தத் தங்கள் வாரிசை நியமித்து யுவராஜா எனப் பட்டம் சூட்டினர்கள். இளவரசன் ஆட்சித் துறையில் போதிய அனுபவம் பெற்ற பின்னரே யுவராஜ

பட்டாபிஷேகம் நிகழ்த்தப்பெற்றது. இளவரசர்கள் பட்டம் சூட்டப்பட்ட பின்னர் அறிவுத்திறனைப் பெருக்குவதிலும் உடல் ஆற்றலை வளர்ப்பதிலும், போர்க்கலையிலும் தேர்ச்சி பெற்றனர். வாரிசைத் தேர்ந்தெடுப்பதில் சமுதாயத்தில் முதன்மையானவர்களுக்கு உரிமை இருந்ததாக அறிகிறோம். ஆனால் வாக்கு எடுப்பு ஏதும் நடை பெறவில்லை எனலாம். அரசன் முதன்மையானவர்களை ஆலோசனை கலந்திருக்கலாம் என்றே கருதப்படுகிறது.

### குறுநிலத் தலைவர்கள்

இந்த அவையினில் குறு நில மன்னர்களும் சமுதாயத்தில் இருந்த தலைவர்களும் கலந்து கொண்டனர். கிருஷ்ணதேவ ராயரின் முடி சூட்டு விழாவின் போது குறு நிலத் தலைவர்களும், சமுதாயத் தலைவர்களும் கலந்து கொண்டனர் எனக் கிருஷ்ண ராஜ விஜயமு என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

### திரு முழுக்கு

முடி சூட்டு விழா நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பான முறையில் நடை பெற்றன. புரோகிதர் பொன்னால் செய்யப்பட்ட முடியினை மந்திரங்கள் ஓதப்பட இறைவணக்கம் நிகழச் சூட்டினர். அவ்வாறு சூட்டப்பட்டவுடன் அரசனுக்குத் திரு முழுக்கு (அபிஷேகம்) செய்விக்கப்பட்டது.

### இணை அரசு முறை

விஜய நகரப் பேரரசு காலத்தில் இணை அரசு முறை (Co-rulership) இருந்ததா என்பதனை ஆராய்கின்ற போது அத்தகைய முறை இருந்திருக்க வேண்டும் என்னும் முடிவிற்கு வருகின்றோம். பங்களூர் தாலுக்காவில் இருந்து கிடைத்துள்ள சாசனம் ஒன்று முதலாம் புக்கர் முதலாம் ஹரிஹாருடன் சேர்ந்து இணை அரசராக ஆண்டதாக உரைக்கின்றது. கோபிநாதராவ் என்பவர் விஜய நகர வரலாற்றில் ஓர் அரசர் உயிருடன் இருக்கும் போது அவருடைய வாரிசாக மற்றொருவருக்கு முடி சூட்டும் வழக்கம் இல்லை என்கிறார். முடிவாக இணை அரசராக இளவரசர் அல்லது யுவராஜா ஆட்சி செய்திருக்கலாம் என்று கருத இடம் உள்ளது.

### அரசனின் கடமை

அரசனின் முதலாவதும் தலையாயதுமான கடமை குடிமக்களுக்குப் பாதுகாப்பினை அளித்து அவர்கள் குறைகளைக்

கணேவதே ஆகும். அரசனுக்கு இரட்டைப் பொறுப்புகள் இருந்தன. அந்நியர்களிடமிருந்து மக்களைக் காத்தல் முதலாவதும், அமைதியையும் ஒழுங்கையும் நிலை நிறுத்தும் காவல் துறைப்பணி இரண்டாவதும் ஆகும். அரசனின் மற்றொரு முக்கிய கடமை நீதித் துறையின் ஆட்சி செய்வது ஆகும். அரசரே நாட்டின் நீதி முறையின் தலைவர். கீழ் வழக்கு மன்றங்களில் நீதியைப் பெற இயலாதவர்கள் அரசனிடம் முறையிட்டனர். தீவிரமான வலிமைமிக்க அயல் நாட்டுக் கொள்கையினை அரசர் மேற்கொண்டார். கொடுந் தண்டனைகள் வழங்கப்படவில்லை.

மாநிலத்தலைவர்கள் மக்களைத் துன்புறுத்தினால் அவர்களிடமிருந்து மக்களைக் காக்கின்ற கடமையினையும் அரசர்கள் மேற்கொண்டனர். கட்டாயமாக அமைச்சர்கள் மக்களை வற்புறுத்திப் பரிசு பெறுவதை வெறுத்த மக்கள் வெளி நாடுகளுக்குச் சென்றுவிடுவதை அறிந்த அரசர் அவ்வாறு மக்கள் செல்லாது தடுத்தல் பொருட்டு அமைச்சர்களைக் கண்டித்து அச் செய்தியினை மக்கள் அறியும்படிக் கல்வெட்டுகளிலும் பொறித்து வைத்தார். இதனைத் தென்னார்க்காடு மாவட்டம் கிழூர் என்னும் இடத்தில் உள்ள சான்று ஒன்று அறிவிக்கின்றது.

இந்தச் சாதாரண கடமை தவிரச் சமுதாய ஒற்றுமையை ஏற்படுத்துதல் அரசனின் முக்கிய கடமைகளில் ஒன்றாக இருந்தது. ஒவ்வொரு தனி மனிதனும் நிறைவேற்ற வேண்டிய தர்மம் ஸ்வதர்மம் ஆகும். இதனை அவரவர் நிறைவேற்றிட இடையூறுகள் ஏற்படாதவாறு காத்தல் அரசனின் கடமையாகும். தனி மனிதனின் வாழ்க்கையில் அரசு எப்போதும் தலையிடுவதில்லை. அரசன் சமய ஆச்சாரியர்களை நியமித்து ஸ்வதர்மத்தை நிறைவேற்றினான்.

**சமுதாயம்**

விஜய நகரப் பேரரசு காலத்தில் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருந்தன. மக்களுடைய பொருளாதார வாழ்க்கையிலும் மாறுபாடுகள் இருந்தன. அரசன் அவற்றைச் சமப்படுத்த முயற்சிகள் ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. மக்களின் பொருளியல் முன்னேற்றத்திற்கான வசதிகளைச் செய்ய வேண்டியது அரசனின் கடமை ஆதலால் காடுகள் அழிக்கப்பட்டுப் புதிய கிராமங்கள் உருவாயின. அவ்வாறு செய்திட இயலாதபோது மக்களுக்கு வரிச்சலுகை அளிக்கப்

பட்டது. நில வருவாயைப் பெருக்கிட முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அயல் நாடுகளுடன் வாணிபம் பெருகிட ஆவன செய்யப்பட்டது. அயல்நாட்டு வணிகர்கள் தலைநகரில் தங்கி வாணிபம் செய்திடப் போதிய உதவி செய்யப்பட்டது. சில தொழில்களுக்கு அரசு ஊக்கம் அளித்தது. சுரங்கத் தொழில் அரசின் வசமிருந்தது.

### அயல்நாட்டுக் கொள்கை

அரசர்கள் தீவிரமான அயல்நாட்டுக் கொள்கையினைக் கடைப்பிடித்தனர். தருந்த நேரத்தை எதிர்பார்த்து எதிரியின் மீது பாய்ந்திட அரசன் காத்திருக்க வேண்டியிருந்தது எதிரிக்கு அவன் நாட்டிலேயே எதிரிகள் இருந்தால் அவர்களை ஊக்குவித்து அந் நாட்டினைப் பலவீனப் படுத்தி அதன் மூலம் அரசர்கள் வெற்றி பெற்றனர். இடைத் தடுக்கு நாடு (Buffer-State) எதிரியோடு நட்புப் பூண்டு அந் நாடு உருவாவதற்குக் காரணமாக இருந்த நாட்டிற்கு எதிராக நடந்தால் அதனை அழித்திட வேண்டியது அரசரின் கடமையாகும்.

### பொறுப்பாளர்கள்

ஆட்சியாளரைத் தெரிவு செய்தல் அமைச்சர்கள் உயர் குடியினர் ஆகியோர் முன்னிலையிலேயே நடைபெற்றது அரசர்கள் பதவியைத் துறந்து வாழ்தலும் உண்டு. அவ்வாறு முடி துறந்த அரசர்கள் அரசியல் வாழ்க்கையை நீக்கி ஆன்மிக வாழ்க்கையில் ஈடுபட்டனர். தங்களுக்குப்பின் குழப்பம் எதுவும் நேரிட்டுவிடக் கூடாது என்பதற்காகத் தங்கள் வாரிசு யார் என அறிவித்து அவ் வாரிசுக்கு யுவராஜா என்று பட்டம் சூட்டினர். அவ்வாறு பட்டம் சூட்டப்பட்டவருக்கு ஆட்சிப் பிரிவு ஒன்று அளிக்கப்பட்டு, ஆளும் முறை பயிற்றுவிக்கப்பட்டது. பட்டத்து அரசன் இளையோனாக இருந்தால், அவ் வரசன் தக்க பருவம் அடையும்வரை யாருடைய பொறுப்பிலாவது இருந் தான். அப்படி அரசனைத் தங்கள் பொறுப்பில் வைத்திருந்த வர்கள் சுயநலமிகளாய் இருந்தனர்.

### வல்லாட்சி

அரசன் எல்லா அதிகாரங்களையும் தன்னகத்தே கொண் டிருந்தாலும் வல்லாட்சியாளனாகத் (Despot) திகழவில்லை. அரசனுடைய அதிகாரத்திற்குத் தடை விதிக்கத் தக்க அரசியல் சட்டத் தடைகள் (Constitutional Checks) இருந்தனவா என்பதை ஆராய்கின்றபோது அரசியல் சட்டத் தடைகள் என்று சொல்லத்தக்க அளவில் தடைகள் ஏதும் இல்லாவிடினும்

அவற்றைவிட வலுவான வழக்காறுகளும், அனுபவங்களும் இருந்தன. விஜய நகரப் பேரரசர் யாரும் புதிதாகச் சட்டங்களை உருவாக்கியவர்கள் அல்லர். ஏற்கெனவே இருந்தவற்றை அமுல் நடத்துவதே அவர்கள் பணியாயிற்று. அரசர்கள் தர்மத்தைக் காக்க வேண்டும் எனக் கிருஷ்ண தேவராயர் வலியுறுத்தினார். ஒருங்கிணைக்கப்பட்ட சமுதாயமும் அரசனின் அதிகாரத்திற்குத் தடையாக விளங்கியது. மக்களின் எண்ணமும் வழக்கங்களும் ஓரளவிற்கு அரசன் அதிகாரத்தினைத் தடை செய்யும் வகையில் விளங்கின. பெரும்பாலும் மக்களின் எண்ணங்களே மன்னர்களால் மதிக்கப்பட்டன. மன்னருடைய செயல் தங்கள் விருப்பத்திற்கு மாறாக இருக்குமேயானால் மக்கள் வரி செலுத்த மறுத்தனர். அரசனின் அதிகாரத்திற்குத் தடையாக இருந்த அமைப்பு அரச அவையாகும். அரசர்கள் அவையினரைக் கலக்காது நாட்டின் பணி எதையும் ஆற்றவில்லை. அரசனின் பட்டமளிப்பு விழாவினை இவ் வவையினரே நடத்தினர். கிருஷ்ண விஜயமு என்னும் நூலிலிருந்து கிருஷ்ண தேவராயர் போன்ற ஆற்றல் மிக்க அரசரும் அவையினரைக் கலந்து ஆலோசித்தனர் என அறிகிறோம்.

### தடை

டாக்டர் வின்செண்ட் ஸ்மித் விஜய நகர அரசர்கள் வல்லாட்சியாளர்கள் என்றும் அவர்களின் அதிகாரத்திற்குத் தடை ஏதும் இருக்கவில்லை என்றும் கருத்துத் தெரிவித்தார் ஆனால் அவர் கருத்துக்கு எதிராக டாக்டர் ஈஸ்வரி பிரசாத் விஜய நகர அரசர்கள் வல்லாட்சியாளர்களாக விளங்கவில்லை என்று உரைத்தார். விஜய நகர அரசர்கள் மக்களின் நலம் நாடும் மன்னர்கள் என்றும் கூறலாம். கிருஷ்ண தேவராயர் அவையிலிருந்த அல்லசானி பெத்தண்ணாவின் மனுசரிதமு என்னும் நூலும், ஆமுக்தமால்யதாவும் அதற்குச் சான்று பகருகின்றன.

### பேரவை

விஜய நகரப் பேரரசில் பேரவை ஒன்று இருந்தது. இப் பேரவையில் அறிஞர்கள், புலவர்கள், இசைவாணர்கள், கலைவாணர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். கிருஷ்ண தேவராயரின் பேரவையில் குறுநில மன்னர்களும், வணிகர்களும், அயல் நாட்டுத் தூதுவர்களும் கலந்து கொண்டனர். இப் பேரவை தவிர மௌரியப் பேரரசு காலத்தில் இருந்த மந்திரி

பரிஷத்தைப் போன்ற அரசன் ஆலோசனை கலந்திட வேண்டிய சிறிய அவை ஒன்றும் இருந்தது. இவ் வவையின் தலைவர் சபாநாயகம் என்று அழைக்கப்பட்டார். இந்த அவையோடு அரசன் எத்தகைய உறவு கொண்டிருந்தான் என்பது தெரியவில்லை. அரசன் இல்லாத போது சபாநாயகம் தலைமை வகித்து நடத்தியிருக்கலாம். இந்த அவை தனியான ஓரிடத்தில் கூடியது. இச் சபையின் எண்ணிக்கை நிலையான தாக இல்லை; காலந்தோறும் மாறுபட்டது. தலைமை அமைச்சர், மற்ற துறைத் தலைவர்கள், அரசனின் உறவினர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டிருக்கலாம். நியூனிஸ் (Nuniz) என்பார் இரண்டாம் தேவராயரின் உறவினர் ஒருவர் அரசனின் இருபது அமைச்சர்களில் ஒருவர் என்று குறித்துள்ளார். எனவே அரசனின் உறவினர்களும் அமைச்சர்களாகப் பணியாற்றியிருக்க வேண்டும் என்னும் முடிவிற்கு வருகின்றோம். அவர்கள் ஏதேனும் துறைகளின் பொறுப்பாளர்களாக இல்லாது பெயரளவில் அமைச்சர்களாக இருந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

பிரதானி, தல அதிகாரி, தனி நாயகர், சாமந்த அதிகாரி ஆகியோர் அமைச்சர்களாவர். மகாசிரப் பிரதானி, உபப் பிரதானி என்று பிரதானி எனப்பட்டவர் அழைக்கப்பட்டார். அமைச்சரவையில் ஆட்சித் துறை அலுவலர்களுக்கும் இடமிருந்தது.

### அமைச்சரவை

அமைச்சரவையினர் அரசனுக்கு முடி சூட்டி ஆட்சி நடத்துவதில் வழிகாட்டினர். வலிமை மிக்க அரசர்கள் தங்கள் ஆளுமையினாலும், வலிமையாலும் அமைச்சரவையினரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தினர். ஆனால் பலவீனமான அரசர்கள் அமைச்சர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர். எவ்வாறு அமைச்சர் குழுவின் முடிவுகள் அரசரைக் கட்டுப்படுத்தின என்பது தெரியவில்லை. அரசன் இக் குழுவின் ஆலோசனையை முக்கியமான சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. சிலர் தம்முடைய முடிவிற்கு அவையினரைப் பணிய வைத்தனர். கிருஷ்ண தேவராயர் குறித்து நியுனிஸ் கூறுகின்ற சான்று உள்ளது. அரசர் வலுவுள்ளவராயின் அமைச்சர்கள் அரசரின் ஆலோசனைக்குப் பணிந்தனர். வலுவற்றவராயின் அமைச்சர்கள் அரசரைப் பணிய வைத்தனர்.

### *அமைச்சரின் தகுதி*

அமைசர்களாக அமர்த்தப்பட்டவர்கள் சிறந்த அறிவாளிகளாகவும், அதர்மத்தைக்கண்டு அஞ்சுபவர்களாகவும், இராஜநீதியில் தேர்ந்தவர்களாகவும், ஐம்பது வயதிற்கு மேற்பட்ட உடல் நலம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. அரசர்களுக்கும் அமைச்சர்களுக்கும் இடையே உறவு முறை நட்புடையதாக எப்போதும் இருந்திருக்கவில்லை. வலிவுமிக்க அமைப்பாகத் திகழ்ந்தமையால் அரசன் இதன் நடவடிக்கையினை உன்னிப்பாகக் கவனித்தான்; அமைச்சர்களை ஒற்றர்கள் மூலம் கண்காணித்து வந்தான். அரசனுக்குப் பட்ட முழுக்குச் செய்வித்து வழி காட்டினர். அரசர்கள் ஆற்றல் மிக்கவர்களாக இருந்தால்கூட அமைச்சர்கள் குழுவினால் பொம்மையைப் போல நடத்தபட்டனர். ஆயினும்அரசனுடைய நம்பிக்கைக்கு உரியவர்களாக இருந்த வரையிலேயே அமைச்சரவையினரின் பதவி நிலைத்தது.

### செயலகம்

மிகப் பரந்து விரிந்த பேரரசு அவை ஒன்றின் துணைக் கொண்டு மட்டுமே அரசனால் ஆளப்பட்டிருக்க முடியாது. அரசின் ஆணைகளை நிறைவேற்றச் செயலகம் ஒன்று இருந்திருக்க வேண்டும். இராயசம் என்னும் அலுவலகம் ஒன்றினைப் பற்றியும் அதன் அலுவலர்களைப் பற்றியும் குறிப்புகள் பட்டயங்களில் அடிக்கடி காணப்பட்டாலும், ஆட்சிப் பிரிவில் எந்தப் பகுதி அது என்பது தெரியவில்லை. அரசர்கள் ஆணைகள் ஏதும் தாங்களாகவே எழுதி அனுப்பவில்லை எனவும் செயலர்களே இப் பணியைச் செய்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. இதைத் தவிரக் கணக்காயர் என்னும் பொருளைத் தருகின்ற காரணீக்கம் என்னும் சொல் ஒன்று காணப்படுகிறது. சரவணுயகா அல்லது மணிய பிரதாணு, அக்கினி பரிபாலகா, வாசல் காரியம் என அழைக்கப்படும் அலுவலர்கள் மைய அரசில் இருந்தனர்.

### *மாநில ஆட்சி*

இனி மாநில ஆட்சி பற்றிக் காண்போம். பேரரசு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. ஆளுநர்கள் அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். மாநிலங்களின் உள்ளாட்சி இவர்களின் கீழ் நிலவியது. தங்களுக்கு என்று தனி அவை, தனிப்படை, தனி அலுவலர்களைக் கொண்டு ஆட்சி செய்தனர். ஆளுநர்கள் அரச

குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி உயர்தர அதிகாரிகளாக இருந்தாலும் சரி ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுதல் செய்யப்பட்டனர். அமைச்சர்களின் ஆலோசனையின் பேரிலேயே பொதுவாக ஆளுநர்கள் அமர்த்தப்பட்டனர். மக்களை ஆளுநர்கள் கடுமையாக நடத்தியபோது, மைய அரசு தலையிட்டது. மாநில ஆளுநர்களுக்குச் சிறப்புப் பட்டங்கள் அளிக்கப்பட்டன. சட்டத்தையும் ஒழுங்கினையும் தங்கள் ஆட்சிப் பகுதியில் பாதுகாத்தலும் மாநில ஆளுநர்களின் கடமை ஆயிற்று. ஆளுநர்கள் மைய அரசில் முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டனர் எனவும் அறிகிறோம்.

### நாயன்கார முறை

விஜய நகரப் பேரரசில் குறிப்பிடத் தகுந்த அம்சம் நாயன்காரமுறையாகும். இம் முறைப்படி அரசன் நிலத்தின் சொந்தக்காரன் ஆவான். எனவே அரசன் தன்னைச் சார்ந்தவர்களுக்கு நிலங்களைப் பகிர்ந்தளித்தான். அரசனுக்கு ஆற்றிய அருஞ் சேவைகளுக்கு மானியமாக நிலம் வழங்கப்பட்டது. அரசனிடமிருந்து நிலத்தைப் பெற்றவர்கள் நாயக்கர்கள் என்று அழைக்கப்பட்டனர். பிற்காலத்தில் இப் பட்டம் சாதியைக் குறிப்பதாயிற்று. நாயக்கர்கள் தங்களுடைய பகுதிகளைச் சுயேச்சையாக ஆண்டு வந்தனர். தங்கள் வருவாயில் பாதியை அரசுக்கு அளித்தனர். தங்கள் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைதியை நிலை நாட்டியதோடு குற்றங்களைக் கண்டு பிடிக்கும் பொறுப்பும் அவர்களுக்கு இருந்தது. அரசனுக்கு ஆண் மகவு பிறந்த போதும், அரசனின் பிறந்த நாட்களின் போதும் இவர்கள் அன்பளிப்புகள் வழங்கினர். இத்தகைய கட்டுப்பாடுகளை நிறைவேற்றாதவர்களுடைய உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டன. ஆளுநர்க்கும், நாயக்கர்களுக்கும் வேறுபாடு உள்ளது. ஆளுநர்கள் அரசனின் பிரதிநிதிகள். ஆனால் நாயக்கர்கள் இராணுவத் தலைவர்கள். நாயக்கர்களுடைய மாவட்டங்களின் உள் ஆட்சியில் அரசன் குறுக்கிடுவதோ அல்லது மாறுதல் செய்வதோ வழக்கமில்லை. நாயக்கர்கள் எண்ணிறந்த கடமைகளை அதாவது காடுகளை வாழுமிடங்களாக மாற்றுவது, விவசாயத்தைக் கொண்டு வருவது ஆகிய பணிகளைச் செய்தனர். ஆளுநர்கள் தண்ட நாயகர்கள் என்று அழைக்கப்பட்டனர். பெரும்பாலும் பிராமணர்களே ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர்.

### நிலமானிய முறை

நாயக்கர்களின் பிரதிநிதியாக அரசனின் அவையில் ஸ்தானுபதி என்பவர் இருந்தார். இந்த நாயன்கார முறையானது இடைக்கால ஐரோப்பாவிலிருந்த நிலமானிய முறையினை நமக்கு நினைவூட்டுகிறது. இருப்பினும் ஐரோப்பிய நிலமானிய முறையினின்றும் இது வேறுபட்டது. ஏனென்றால் நாயன்கார முறையில் அரசனே பகுதிகளை அளித்து நிலமானியத்தவர் செலுத்தவேண்டிய அளவினையும் வகுத்தான். மேலும் ஐரோப்பிய நில மானிய முறையில் சமுதாயம் முழுவதுமே ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. ஆனால் நாயன்கார முறையில் மக்களில் ஒரு பகுதியினரே இம் முறையில் இருந்தனர். நாயன்காரர்களைத் தவிரத் தோல்வியுற்ற மன்னர்கள் பேரரசனுக்கு அடங்கிக் கப்பம் செலுத்தி வந்தனர். பேரரசின் மாநிலங்கள் தம்மாட்சி பெற்றவையாக விளங்கிய போதிலும் அவைகளைக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரத் தனி ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அரச குடும்பத்திலிருந்தவர்களே தனி ஆணையாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### கிராமம்

மாநில அரசில் கிராமம் ஆட்சித் துறைப் பிரிவாக இருந்தது. ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்றதாக விளங்கியது. கிராமத்தின் ஆட்சியைக் கிராம அவையே மேற்பார்வையிட்டது. கிராம அவையின் முக்கியமான பணிகளில் ஒன்று வரி வசூலித்தல் ஆகும். கிராம அவைகள் நீதித்துறை அதிகாரங்களும் பெற்றிருந்தன. வழக்குகளை விசாரிக்கவும், குற்றம் இழைத்தோர்க்குத் தண்டனை வழங்கவும், தவறிழைத்தோர் நிலங்களைப் பறித்துக் கொள்ளவும் உரிமை பெற்றிருந்தன. கிராம அவைகள் ஆலயங்களைக் கண்காணித்தன. கிராம அவைகள் தனிப்பட்ட சிலருக்கு விருதுகள் வழங்கின. அறக் கட்டளைகள், அற நிலையங்கள் ஆகியவற்றினை நிர்வகிக்கும் பொறுப்பினையும் மேற்கொண்டன. கிராமத்தை விடப் பெரிய அமைப்பு நாடு ஆகும். நாட்டிலிருந்த சபைகள் நாடு எனவும் அதன் உறுப்பினர்கள் நாட்டவர் எனவும் அழைக்கப்பட்டனர். கிராம அவையைப் போலவே நாடும் தன் ஆட்சிப் பகுதியில் நிருவாகம் நடத்தியது. அரசர்கள் கிராமக் குடியரசுகளின் உரிமையில் தலையிடவில்லை. ஒவ்வொரு கிராமத்திலும், ஆயக்காரர்கள் என்று சொல்லப்படும் பன்னிரண்டு அலுவலர்கள் இருந்தனர். இவர்கள் மரபு வழி உரிமை பெற்றவர்கள்.

### வருவாய்

வருவாய்த் துறையைப் பற்றி நமக்கு விளக்குகின்ற சான்றுகளில் குறிப்பிடத் தகுந்தவை பட்டயங்களும், அயல் நாட்டு அறிஞர்களின் குறிப்புகளும் ஆகும். சாசனங்களில் கடமை, மகமை, காணிக்கை, கட்டணம், வரி, பட்டம், இறை கட்டாயம் ஆகிய சொற்கள் காணப்படுகின்றன.

விஜய நகர வருவாயினை நிலவரி, சொத்து வரி, வணிக வரி, தொழில் வரி, தொழிற்சாலை வரி, இராணுவ வரி, சமூக வரி, நீதித்துறை அபராதம், விடப்பட்ட இனங்கள் எனப் பிரிக்கலாம்.

நிலம் நன்செய், புன்செய், காடுகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. நில வரியே முக்கிய வரியாய் இருந்தது. நிலவரி விதிக்கும் போது நிலத்தின் அமைப்பு, நிலத்தின் தன்மை, பயிராகும் பொருளின் தன்மை ஆகியவைகளைக் கருத்தில் கொண்டனர். கோவில் நிலங்கள் தேவதானம் எனவும், பிராமணர்களின் நிலங்கள் பிரம்மதேயம் எனவும் அழைக்கப்பட்டன.

புன்செய்ப் பயிர்கள், காய்கறிகள் ஆகிய வற்றிற்கும் வரி விதிக்கப்பட்டது. புன்செய் நிலத்தில் விதைக்கப்பட்ட நன்செய்ப் பயிருக்கும், புன்செய் நிலத்தில் விதைக்கப்பட்ட புன்செய்ப் பயிருக்கும் வரி வேறுபட்டது. தோட்ட நிலங்களிலிருந்து தோட்டப்புரவு என்னும் வரி வசூலிக்கப்பட்டது. இவைதவிர இடையர்கள் ஆடுகளை மேய்ப்பதற்கு மேய்ச்சல் வரி விதிக்கப்பட்டது. வீடுகளுக்கு விதிக்கப்பட்ட வரி வாசல் பணம் என்றும், வீட்டு மனைகளின் மீது விதிக்கப்பட்ட வரி மனை என்றும் அழைக்கப்பட்டன. கிராம அதிகாரிகள் செலவிற்கு வசூலிக்கப்பட்ட வரி காரணீக்க ஜோதி, தலையாரிக்கம், இராயசவர்த்தனை, அவசரவர்த்தனை, அதிகார வர்த்தனை, நோட்ட வர்த்தனை, நிருபகம்பளம், அழுக்கு நீர்ப்பட்டம், படிக்காவல் முதலியனவும் ஆகும். இவ் வரிகள் எல்லாம் உள்ளூர் அரசுகளால் வசூலிக்கப்பட்டன.

### நில அளவை

நில அளவைக்கு ஒரே மாதிரியான அளவுகோல் இருக்கவில்லை. பல்வேறுவகையான அளவுகோல் பற்றிச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. திருப் பூக்குழிச் சாசனம் நாடளவு கோல், இராஜ விவாதன் கோல் ஆகியவை பற்றியும், திருப்

பாலைவனப் பட்டயம் கண்டராய கண்டன் கோல் என்பது பற்றியும் குறிப்பிடுகின்றன.

*பங்கு*

அரசின் பங்கு ஆறில் ஒன்று என்பது நீண்ட கால மாகவே வழக்கில் இருந்து வந்தது. இருப்பினும் அரசின் செலவைச் சரிக்கட்டச் சில நேரங்களில் பங்கு அதிகரிக்கப் பட்டது. நூனிஸ் என்பார் பத்தில் ஒன்பது பங்கை உயர் குடியினர் பெற்றனர் என்றும், அதில் பாதியை அரசனிடம் செலுத்தினர் என்றும் கூறினர். அதனை டாக்டர் மகாலிங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. நிலவரி தவிரச், சொத்து வரி மூலமும் அரசுக்கு வருமானம் கிட்டியது. பட்டயங்கள் சொத்துகள் மீது விதிக்கப்பட்ட வரி பற்றிக் கூறுகின்றனவே தவிர எவ் வளவு என்பது குறித்து ஏதும் கூறவில்லை.

*வணிக வரி*

அரசு வருவாயின் பெரும் பங்கில் வணிக வரியும் சேர்ந் திருந்தது. கடல் வழியாகவும், தரை வழியாகவும் செல்லும் போக்கு வரத்துகளுக்குச் சுங்கவரி விதிக்கப்பட்டது. ரைஸ் (Rice) என்பவர் சுங்க வரிகளை ஸ்தலதாயம் (ஒரே இடத்தில் விற்பதற்கு இறக்குமதி செய்யப்படும் வரி) மார்க்க தாயம் (மாவட்டங்கள் வழியே செல்லும் பொருளுக்கு விதிக்கப் படும் வரி) மாமூலதாயம் (வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு விதிக்கப்பட்ட வரி) என மூன்று பிரிவாகப் பிரித்தார். விலைக்காணம், விற்பணம், கைவிலைக்காணம், மாஸ்தி, அதிகாசு, சந்தை முதல், பாசி விலை, அட்டகாட சுங்கம், மூல விசாபடி ஆகியவை வாணிகம் சார்ந்த வரிகளில் சில.

**தொழில் வரி**

தொழில் செய்வோர் இக் காலம் போல அக்காலத்திலும் தொழில் வரி செலுத்த வேண்டியிருந்தது. தொழில் செய்வதற் காக மட்டுமின்றி அத் தொழில் செய்யும் இனத்தில் பிறந்த தற்காகவும் சேர்த்தே வரி விதிக்கப்பட்டது. தொழில் வரி பெரும்பாலும் பணமாகவே செலுத்தப்பட்டது. மாதந் தோறும் வசூலிக்கப்படாது ஆண்டு முழுவதற்குமாகச் சேர்த்தே வரி வசூலிக்கப்பட்டது.

தொழில் செய்வோருக்கு மட்டுமின்றித் தொழிற்சாலை களுக்கும் வரி விதிக்கப்பட்டது. தறிக்கடமை, செக்குக்

கடமை, அரிசிக்காணம், பொன் வரி, செம்பொன் வரி, புல்வரி, நூலாயம், பட்டாடை, நூலகம், மரக்கலம் ஆகியவை தொழிற் சாலை வரிகளாகும்.

### இராணுவ வரி

இராணுவச் செலவிற்காகச் சில வரிகள் விதிக்கப்பட்டன. கோட்டைகளைப் பராமரிக்க வசூலிக்கப்பட்ட வரி கோட்டை மகமை என்று அழைக்கப்பட்டது.

திருமணங்கள் செய்து கொள்பவர்களும் அரசுக்கு வரி செலுத்த வேண்டும் எனப்பட்டது. சோழர் காலத்திலேயே திருமண வரி பற்றிக் கூறப்பட்டுள்ளது. அப்போது கல்யாணக் காணிக்கை என அது அழைக்கப்பட்டது. திருமண ஊர்வலங் கள், திருமணப் பந்தல், பல்லக்கு ஆகியவற்றிற்கும் வரி விதிப்பு இருந்தது. கிராம தேவதைக்குரிய ஆலயப் பாது காப்பிற்குப் பிடாரி வரி என்னும் வரி வசூலிக்கப்பட்டது.

### நீதி வரி

இவைதவிர நீதித் துறையில் விதிக்கப்பட்ட அபராதங் களும் அரசின் முக்கிய வருவாயில் பங்கு பெற்றன. வழக் காற்றில் தோரணக் காணிக்கை, தரிசனக் காணிக்கை எனப் படும் சில வரிகளும் இருந்தன.

இதுவரை குறிப்பிடப்பட்டுள்ளவற்றைத் தவிரவும் வேறு சிலவரிகள் வசூலிக்கப்பட்டன. பதினெட்டு ஜாதியினரைச் சேர்ந்தவர்களின் சொத்துகள், அவர்களுக்கு வாரிசு இல்லா மல் போனதால் அரசுக்குச் சொந்தமாயின.

### வரி தள்ளுபடி

அப்துல் ரசாக் என்பவரின் கூற்றிலிருந்து வரைவின் மகளிரிடமிருந்து பன்னிரண்டாயிரம் பணம் கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது. வரி விதிப்பு அதிகமாகவே மக்களிடம் எதிர்ப்பு உணர்ச்சி பரவுதலைக் கண்ணுற்ற அரசு வரிக் குறைப்பு அல்லது வரி நீக்கம் செய்தது.

### நீதித்துறை

நீதித்துறையைப் பொருத்தமட்டில் அரசனே தலைமை நீதி மன்றமாவான். முக்கியமான வழக்குகளில் அரசனின் தீர்ப்பே முடிவானது. ஊரியல் வழக்குகள் இந்துச் சட்டப்படியும், வழக்காறுகளின்படியும் தீர்மானிக்கப்பட்டன. சான்றுகள்

பரிசோதிக்கப்பட்டன. குற்ற இயல் சட்டம் கடுமையானது. உண்மையைக் கண்டு பிடிக்கச் சித்திரவதை அனுமதிக்கப்பட்டது. திருட்டுக் குற்றத்திற்கு மரண தண்டனையோ அல்லது உடல் உறுப்புக் குறைப்புத் தண்டனையோ வழங்கப்பட்டது. சில நேரங்களில் குற்றவாளிகள் யானைகளால் இடரப்படுமாறு செய்யப்பட்டனர். சில குற்றங்களுக்கு அபாரதம் விதிக்கும் பழக்கமுமிருந்தது என அறிகிறோம். அரசினால் அநீதி வழங்கப்பட்டவர்க்கு இழப்பீடு வழங்கப் பட்டது. விஜய நகர அரசர்கள் காலத்தில் நீதிமுறை ஆட்சியைப் பற்றி அறிகின்றபோது அரசர்கள் நல்ல முறையில் நீதி வழங்க வேண்டும் என்னும் எண்ணம் உடையவர்களாக இருந்தனர் என்று அறிகிறோம். தண்டனையின் கடுமையே மக்களைக் குற்றம் செய்ய விடாமல் தடுத்தது. குற்றவியல் சட்டநீதி விஜய நகரப் பேரரசில் மட்டுமின்றி இடைக்காலம் முழுவதிலுமே கடுமையாக இருந்தது.

காவல்படை

அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டச் சிறந்த காவற்படையினை வைத்திருப்பது அரசின் கடமையாயிற்று. காவற்படை இரண்டு வகைப்பட்டதாக இருந்தது. ஒரு வகை அரசினால் நிர்வகிக்கப்பட்டது. மற்றொரு வகை மக்களால் அவரவர் பகுதிகளில் நிருவகிக்கப்பட்டது. தலை நகரில் தனிக் காவற்படை ஒன்றும் இருந்தது. காவற் றுறையினர் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதையும், குற்றங்களைக் கண்டுபிடிப்பதையும் முக்கிய பணிகளாகக் கொண்டிருந்தனர். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கத் தவறியவர்கள் களவுபோன பொருட்களுக்கு ஈடாகத் தங்கள் சொத்துகளை இழந்தனர். நாயன்கார முறையில் இருந்த மாநிலங்களில் நாயக்கர்களே அப்பணியை மேற்கொண்டு அதனை நிறைவேற்றக் காவல் காரர்கள் என்று சொல்லப்படுவோரை அமர்த்தினர். பேரரசின் சில பகுதிகளில் தலைமைக் காவல்காரர் அரசு காவலர் என அழைக்கப்பட்டார். காவல்காரர்கள் தங்களுக்குக் கீழே தலையாரிகள் என்று சொல்லப்படுவோரை அமர்த்தி அவர்களுக்கு ஊதியம் பணமாகவோ, பண்டமாகவோ வழங்கினர். காவல் துறையை மக்களே ஏற்பாடு செய்தனர். அரசு காவல் துறையின் ஒரு பகுதியை மட்டுமே நிர்வகித்தது. காவற்றுறை ஏற்பாடுகள் சிறப்பான முறையில் இருந்த போதிலும் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்காத அலுவலர்கள் மிகவும் கடுமையாகத் தண்டிக்கபட்டது

அவ்வளவு சிறப்பாக இல்லை. பாடி காவல் என்பது காவல் பணி அல்லது காவல் துறையைப் பாது காக்கும் அமைப்பு என்று கூறப்படுகிறது.

### இராணுவம்

இடைக்கால இந்தியாவில் இராணுவத்தின் முக்கியத்துவம் பெரிதும் உணரப்பட்டது. இந்தியப் படை மிகவும் பெரிதாகவே இருந்தது. நூனிஸ் என்பாரின் கூற்றுப்படிக் கிருஷ்ண தேவராயர் ஆறுயிரம் குதிரைப்படை வீரர்கள் அடங்கிய ஐம்பதாயிரம் படை வீரர்களை வைத்திருந்தார். படை வீரர்களைத் தேர்ந்தெடுக்கப் பல வகைகள் பின்பற்றப்பட்டன. முதல் வகை அரசர்களே படை வீரர்களுக்கு நேரடியாக ஊதியம் வழங்கித் தங்களின் பொறுப்பின் கீழ் வைத்துக்கொள்வதாகும். இரண்டாவது வகை நிலமானியத் தலைவர்களால் அரசுக்குப் படை வீரர்களைப் போருக்கு அளிக்கப்படுவதாகும். பேரரசு பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுக் குறித்த அளவு இராணுவத்தினரைக் கொடுப்பதற்காகத் தலைவர்களிடம் வழங்கப்பட்டது.

### கண்டசாரா

விஜய நகரப் பேரரசின் இராணுவத் துறை கண்டசாரா என்னும் துறையின் கீழ் இருந்தது. அதில் காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப்படை, ஒட்டகப்படை முதலியன அடங்கியிருந்தன. யானைகள் மீது மிகவும் நம்பிக்கை வைத்துப் போருக்குக் கொண்டு சென்றனர்; ஆனால் அவைகள் பீரங்கிப் படைகள் முன் நிற்க அஞ்சி ஓடின.

விஜய நகரப் பேரரசு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையால் வெற்றி பெற இயலாமல் போய்விட்டது என்று வரலாற்றறிஞர்கள் சிலரால் கருதப்படுகிறது. போர்த்துக்கீசியர்களுக்குச் சலுகைகள் வழங்கியமையால் நாட்டின் உறுதிப்பாடு குலைந்தது. இராணுவத் துறையில் அதிகக் கவனம் செலுத்தாமையால் விஜய நகர அரசர்கள் தங்கள் எதிரிகளை அழித்திட முடியவில்லை. இதன் விளைவாக விஜய நகரப் பேரரசு நிலை பெற்ற அமைப்பாக மாறிட இயலாமல் போய்விட்டது. சிறந்த ஆட்சித்துறை அமைப்பு இருந்தும் மேற்கூறிய குறைபாடுகள் பேரரசின் அழிவிற்கு வழி வகுத்தன.

*பகுதி III*

# 20. சிந்துவில் அராபியரின் ஆட்சி

## (Arab Rule of Sind)

### *சிந்துப்படை எடுப்பு*

முஸ்லிம்கள் முதன் முதலாகப் பாரதத்தினுள் நுழைந்தது கி.பி. 712-இல் தான். இவ்வாண்டில் முகம்மது-பின்-காசிம், பாக்தாதின் கலீஃபாவினால் சிந்து நாட்டைத் தாக்குதற் பொருட்டு அனுப்பப்பட்டார். சிந்து நாட்டின் மீது படை எடுப்பதற்கான காரணம் ஒன்று அராபியருக்குக் கிடைத்தது. கடல் வழியே வாணிபம் செய்துகொண்டிருந்த சில அராபியர்களை மேலைக் கடற்கரை ஓரங்களில் இந்தியக் கடல் கொள்ளைக்காரர்கள் கொள்ளையடித்தனர். சிந்துவின் அரசர் இதற்குப் பொறுப்பாளி யாக்கப்பட்டார். கடற் கொள்ளைக்காரர்களை அடக்குகின்ற செயலையோ அல்லது அராபியர்களுக்கு இழப்பீடு அளித்தலையோ செய்யாதபடியால் முகம்மது பின் காசிமின் தலைமையில் படை ஒன்று அனுப்பப்பட்டது. முகம்மது பின் காசிமின் படைக்குச் சிந்துப்படை தோற்கவே, சிந்து கலீஃபாவின் நாட்டுடன் இணைக்கப்பட்டது. சிந்துவில் அராபியரின் ஆட்சி சுமார் ஒன்றரை நூற்றுண்டு காலமே நீடித்தது. கலீஃபாவின் வலிமை குறையக் குறையச் சிந்துவின்பால் அவர் கொண்டிருந்த பிடியும் தளரலாயிற்று.

### *அரேபியாவிற்கும் இந்தியாவிற்கும் உள்ள வேறுபாடு*

முஸ்லிம்கள் தம்மோடு சில அரசியல் கருத்துகளையும், நிறுவனங்களையும் கொண்டு வந்தனர். அரேபியாவிலும், பாரசீகத்திலும் பிறந்து வளர்ந்த இவர்கள் கலீஃபாவின் ஆட்சி நிறுவனங்களில் இடம் பெற்றிருந்த முறைகளைக் கொண்டு வந்தனர். முகமது நபியின் போதனைகள், தீர்வு முடிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பொது, தனிச் சட்ட முறைகள்

அரேபியாவில் வளர்ச்சியடைந்திருந்தன. அவைதாம் இவர்களுடைய பொது, தனிச் சட்ட முறைகள். கலீ:பாவின் ஆட்சி முறையின் அடிப்படையில் அராபியர்களின் நிதியியல் முறை அமைந்திருந்தது. முஸ்லிம் அரசர்களின் இந்தியச் சூழ்நிலை கலீ:பாவின் ஆட்சிச் சூழ்நிலையிலிருந்து பெரிதும் மாறுபட்டிருந்தது. இது வரையில் ஒரே சமயத்தைச் சார்ந்த மக்களை ஆண்டு வந்த அராபியர்கள் தனித்த சமயம், தத்துவம், பண்பாடு, ஆட்சி நிறுவனங்கள் ஆகியவற்றைப் பெற்றிருந்த முஸ்லிம் அல்லாத, எளிதாக அடக்கி ஆளவோ, மதமாற்றம் செய்யவோ முடியாத மக்களை ஆள வேண்டியிருந்தது. இத்தகைய மக்கள் கடும் பிரச்சினைகளைத் தோற்றுவித்தனர்.

### சபாரித் குலம்

கி.பி. 712-இல் சிந்து நாடு முகமது-பின்-காசிமிடம் வீழ்ச்சியடைந்தது. ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டு காலத்திற்கு அராபியரின் ஆட்சி முழு வலிமையோடு இந்தியாவில் இருந்தது என்று கூறப்படுகிறது. கி.பி. 870—71 வரையில் அபாசித் கலீ:பாக்கள் சிந்துவின் மீது கொண்டிருந்த கட்டுப்பாட்டை இழந்தனர். பின்னர் சிந்துவின் ஆட்சி சபாரித் குலத்தின் கீழ் வந்தது. அதன்பின் சபாரித் குலத்தவரிடமிருந்து சமானித் குலத்தவர் கைக்கு ஆட்சி மாறியது. இவ்விரண்டு இனத்தவரின் ஆட்சியும் சிந்துவை விட்டு நீங்கிவிடவே, ஆங்காங்கே சிறு சிறு அரசுகள் தோன்றின. கி.பி. 915—16-இல் சிந்துப் பகுதிக்கு வந்த அல் மசூதி என்பார் முல்தானையும், மன்சுராவையும் தலைநகராகக் கொண்ட இரண்டு அராபிய முடியரசுகளை அங்கே கண்டார். இச் சிறிய அராபிய அரசுகள் மகம்மது கஜினியின் படையெடுப்பு வரை தொடர்ந்து இருந்து வந்தன.

### இந்தியர்களின் பங்கு

சிந்துவில் அராபியர் ஆட்சி அமைப்பு எவ்வாறு இருந்தது என்பதனைக் காண்போம். அராபியர் நிறுவிய அரசாங்கம் மற்ற நாடுகளில் இருந்தவைகளை ஒட்டியே சிந்துவிலும் அமைந்து இருந்தது. இது வரையில் அராபியர்களிடம் இருந்துவந்த முறை மாறிவிட்ட சூழ்நிலையை இப்போது காண்கிறோம். இராணுவ இயல்புடைய அராபியர்களின் ஆட்சியின் தொனி இந்தியாவில் மாறிவிட்டது. மற்ற இடங்களில் அராபியர்கள் ஆட்சி செலுத்திய போது இஸ்லாம் சமயத்தைத் தழுவாதவர்களை ஆட்சியில் எவ்வித

பொறுப்பும் ஆற்றிட அனுமதிக்கவில்லை. ஆனால் சிந்துவில் சுதேசிகள் அதாவது சிந்துவில் நிலைபெற்று வாழ்ந்தவர்களை ஆட்சியில் தாராளமாகப் பயன்படுத்திக் கொண்டனர். தாகீர் எனப்பட்ட இந்திய அரசர் முகம்மது பின் காசிமிடம் தோற்று விட்ட பின்னர் அவரது அமைச்சர் சிசாகர் என்பவர் காசிமினால் பதவிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டார். அவரை மிக்க அன்போடு நடத்தி அவருக்கு வாசீர் பதவியும் அளித்தனர். முகமது பின் காசிம் கிராம மக்களிடமிருந்து அரசு அலுவலர்களை அமர்த்தி வரிகளை வசூலித்தார். இதனால் மக்களுக்கு வலிமை உணர்வும், காப்புணர்வும் இருந்தன.

### உரிமைகள்

ஆட்சித் துறையில் மட்டுமின்றிச் சமயத் துறையிலும் அராபியர்கள் மாறுதல்களை அடைந்தது இந்தியாவிலே தான். சமயத் துறையில் இருந்த காழ்ப்பு உணர்வு இங்கு அவர்களிடம் இல்லை. மக்களுக்குப் போதிய உரிமைகள் வழங்கப் பட்டன. உருவ வழிபாடு செய்யவும் சிந்துவின் மக்கள் அனுமதிக்கப்பட்டனர். பணிந்து விட்டவர்கள், தலைவரியைச் செலுத்த ஒப்புக் கொண்டவர்கள் ஆகியவர்களின் உயிரின் மீதும் உடைமையின் மீதும் எந்த வகையிலும் கை வைத்தல் கூடாது என்னும் கட்டளையினைக் கலீஃபா விதித்திருந்தார். எவரும் தத்தம் சமயத்தைப் பின்பற்றுவதிலிருந்து தடை செய்யப் படவில்லை. வழிபாடு நிகழ்த்துவதற்கு அனுமதி அளித்தது மட்டுமின்றிக் கோவில்களைக் கட்டித் தங்கள் விருப்பம் போல் வழிபாடு நிகழ்த்தவும் அனுமதி அளிக்கப் பட்டது குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். ஏழ்மையான பிராமணர்களை அன்போடும், சலுகையோடும் பேணவும், அவர்களுடைய சடங்கு முறைகளையும், பழக்கங்களையும் பின் பற்றவும், முன்னுள் பழக்கத்தை ஒட்டிப் பிராமணர்களுக்குப் பலியுணவு, நன்கொடை கொடுக்கவும் முகம்மது பின் காசிம் கட்டளையிட்டார். இவ்வளவு தாராள மனப்பான்மையுடன் அராபியர்கள் நடந்து கொண்ட விதம் இந்தியர்களிடையே அராபியர்களுக்கு ஆதரவான கருத்தை உண்டாக்கியது; பல இந்தியர்களை இஸ்லாமைத் தழுவத் தூண்டியது; முகமது கஜினியின் படையெடுப்பு வரை இஸ்லாமிய ஆட்சியின் சிறப்பு ஒளியைக் காத்தது.

### எதிரிகளை நடத்திய முறை

ஆயினும் அராபியர்கள் தேவையான இடங்களில் மாறுதல்களைப் புகுத்தி வைத்துக் கொண்டார்கள். எனினும் அவர்

கள் இராணுவ அதிகாரத்தையே முழுவதும் நம்பியிருந்தார்கள். சிறிதளவு மக்களின் பற்றுறுதியிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர். விருப்பத்தோடு எதிர்க்கமாட்டாது கீழ்ப் பணிந்தவர்கள் அல்லது தோற்ற தலைவர்களும், ஆளுநர்களும் அவர்கள் குறிப்பிட்ட திறைப் பொருள்களைச் செலுத்த உடன்பட்ட பின்னர் ஏற்கெனவே இருந்து வந்த பதவியில் அமர்த்தப் பெற்றனர். தகீரின் ஆட்சியில் தலைவர்கள், ஆளுநர் ஆகிய கீழ்நிலை அலுவலர்கள் தக்கூர், ரவாட்கள், ராணுக்கள் என்று பலவாறு பெயர் பெற்றிருந்தனர். தகீரின் வலிமை மிக்க, உறுதியான தலைவர்களில் ஒருவர் தம் குடும்பத்தாருடனும், இருபது புகழ்பெற்ற தக்கூர்களோடும் பிடிக்கப்பட்டு முகமது பின் காசிமின் முன் கொண்டு வரப்பட்டபொழுது அவரிடம் அவரது நாட்டைத் திருப்பிக் கொடுத்ததோடு, நன்மதிப்பு விருதினையும், நூறாயிரம் திராம்களைக் கொண்ட ஒரு நாற்காலியையும் அளித்து அன்போடும், மதிப்போடும் நடத்தினர். தகீரின் தக்கூர்கள் சேணம் பூட்டப் பெற்ற குதிரைகளையும், நீண்ட மேலங்கியையும் முகமது பின் காசிமுக்கு அளித்தார்கள். கக்கா எனப் பெயர் பெற்ற வௌதியா நாட்டின் தலைவரையும், நூபா என்பவரையும் இவ்வாறே நடத்தினர். இருப்பினும் பொதுவாகத் தலத் தலைவர்களுக்கு மேலாக ஓர் அராபிய ஆளுநரே அமர்த்தப்பட்டுத் திறைகளைத் திரட்டும் பொறுப்பையும், தலத் தலைவர்களைக் கட்டுப்படுத்திச் செயலாட்சி செய்யும் பொறுப்பையும் கொடுத்தார். சிவிஸ்தானும், பௌதியாவும் கைப்பற்றப்பட்டபொழுது நாட்டின் ஊரியல் கடமைகளை நிறைவேற்றக் காசிம் தம் அலுவலர்களை அமர்த்தினர். ராலாட்டுகள் என்னும் அலுவலர்களும் அமர்த்தப்பட்டனர். ராலாட்டுகள் கிராமத் தலைவர்கள் அல்லது முக்கதாம் போன்ற சிறு தலைவர்களாக இருந்ததாகத் தோன்றுகிறது.

### நகரங்களும் அரண்களும்

முக்கியமான நகரங்களும், அரண்களும் திறமையான அலுவலர் அல்லது படைத் தலைவர்களின் கீழ் விடப்பட்டன. முல்தான், அலோர், காரூர் போன்ற இடங்களுக்குத் தனிப்பட்ட அலுவலர்களும், ஆளுநர்களும் அமர்த்தப்பட்டனர். படைத் தலைவர்களோடு தனிப்படைகளை அனுப்பி நாட்டின் கீழ்க் கொண்டுவரப்படாத பகுதிகளை அராபியரின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரச் செய்தார். படைத் தலைவர்கள் தாங்கள் படையெடுத்த பகுதிகளைக் கைப்பற்றியவுடன் சிறு படையோடு

அப்பகுதிகளிலேயே தங்கிவாழ்ந்தனர். முக்கியமான நகரங்கள் அக்கறையோடு கவனிக்கப்பட்டன. தல மக்களுடைய உதவியைப் பெறுவதில் முகமது பின் காசிம் கவனம் செலுத்தினர். சான்றுகப் பிராமணாபாத் நகரின் மேலாண்மைக்காக ஹமியுதின் நாஸ்தி என்பவரின் மகனை விதா என்பவரை அமர்த்தி அவருக்கு உதவியாளர்களையும், மேற்பார்வையாளர்களையும் தந்து உதவியதோடு சொத்து பற்றிய எல்லாவற்றையும் கவனிக்கும் பொறுப்பை நான்கு வணிகர்களிடம் ஒப்படைத்தார். அவர்கள் விதாவைக் கலந்து கொள்ளாமல் எதையும் முடிவு செய்யக் கூடாது எனக் கண்டிப்பாகக் கட்டளையிடப்பட்டனர். பிராமணர்களுக்குப் பிச்சை இடுவதற்குரிய பழக்கத்தை ஒழுங்கு படுத்தினர். நூறு திராம் வருவாய் இருந்தால் மூன்று திராம் தனியே எடுத்து வைக்க வேண்டும் என விதி செய்யப்பட்டது. அராபியர்கள் தாங்கள் கைப்பற்றிய நாட்டில் இருந்த தலப் பழக்கங்களையே இயன்றவரை பயன்படுத்தினர்.

### வருவாய்

நகராட்சிகளில் மட்டுமின்றி நாட்டின் புறப் பகுதிகளின் ஆட்சியிலும் தலப் பழக்கங்கள் பின்பற்றப்பட்டன. சமானிஸ் நாட்டுத் தலைவர்களும், வணிகர்களும், முகமது பின் காசிமிடம் பணிந்தபோது அவர்கள்மீது வரி விதித்து ஒவ்வோர் இனத்திலிருந்தும் ஒவ்வொன்றிற்கும் தலைவரென ஒருவரை அமர்த்தினர். இஸ்லாமை ஏற்றுக் கொண்டவர்களிடமிருந்து சொத்திலும், விளை பொருளிலும் பத்தில் ஒரு பகுதி வரி வசூலிக்கப்பட்டது. வணிகர்களும், கைவினைஞர்களும் கடுமையான வரி விதிப்பிற்குட்படவில்லை. முகமது பின் காசிம் சிந்துவில் உள்நாட்டு அலுவலர்களை வைத்துக் கொண்டதோடு சிந்துவின் மக்களைத் துணைப் படையினராகச் சேர்த்துக் கொண்டார். நிலவரி, தலைவரி, சுங்கத் தீர்வைகள் மற்றைய வரிகள் ஆகியவை எல்லாம் சேர்த்து 11,500,000 திராமைக் கொண்ட ஒரு தொகையையும், நூற்று எண்பது பவுண்டு அகில் கட்டையையும் சிந்துவிலிருந்து பெற்றார். விளை பொருள்களில் ஐந்தில் இரண்டு பங்கு நிலவரியாக விதிக்கப்பட்டது. பொதுக் கால்வாய்கள் மூலம் விவசாயம் செய்யப்பட்டதால் அத்தகைய வரி வசூலிக்கப்பட்டது. செயற்கை முறைகளால் நீர்ப்பாசன வசதி பெற்றவைகளுக்குப் பத்தில் மூன்று பங்கும், முற்றிலும் பாசன வசதியே பெருதவைகளுக்கு நாலில் ஒரு பங்கும் நிலவரியாக வசூலிக்கப்பட்டது. வரிகளைப் பணமாக

வும், பண்டமாகவும் செலுத்த அனுமதிக்கப்பட்டது. பயிர்த் தொழிலிலிருந்து பெறப்படாதவைகளைப் பண்டமாகக் கொடுக்க வேண்டும். இஸ்லாமிய சமயத்தில் நம்பிக்கை வைக்காதவர்களிடமிருந்து சுங்க வரி இரண்டு பங்காக வசூலிக்கப் பட்டது. சிந்துவின் உழவர்கள் பாஜ், உஷரி போன்ற மற்ற வரிகளையும் செலுத்த வேண்டியிருந்தது.

### ஜாஹீர் முறை

ஒவ்வொரு முஸ்லிம் பயணிக்கும் மூன்று நாட்களும், இரவுகளும் உமரின் பழைய சட்டத்தின் படி அரசு உணவளிக்க வேண்டி இருந்தது. இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சியின் தொடக்கத்திலேயே ஜாஹீர் முறை துவங்கியது. ஆனால் ஜாஹீர்தார்கள் வேளாண்மையில் ஈடுபட அனுமதிக்கப் படவில்லை. ஜாஹீர்தார்களுக்காக நாட்டு மக்கள் வேளாண்மை செய்தனர்.

### நீதி முறை

அராபியர் காலத்து நீதி முறையைப் பொறுத்தவரையில் உறுதியாக எதுவும் சொல்வது கடினம். வரி வசூலுக்கும், நீதி முறைக்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கவில்லை. அமீர்கள் எனப்பட்டோர் மரண தண்டனை அளிக்கும் அதிகாரத்தைச் செயல் படுத்தினர். அமீர்கள் சட்ட வரன்முறைகளை நேர்மையாகப் பின்பற்றவிடவில்லை. நீதி வழங்குவதில் பாரபட்சமில்லை இருந்தது. முஸ்லிம்களுக்கு இடையேயான தகராறுகளில் நீதி வழங்குவதற்கு அமர்த்தப்பட்ட காஜி (Qazi) குர்ஆனின் நீதி வாசகங்களை ஒட்டியே தீர்ப்பு வழங்கியதாகக் கருதப்பட்டது. இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே ஏற்பட்ட வழக்குகளிலும் அவ்வாறே நடந்து கொண்டதாகக் கூறினாலும் இந்துக்கள் சிறிதளவே நீதியைப் பெற்றனர். அரசியல் குற்றங்களும், பொதுவான குற்றங்களும் யார் செய்தாலும் ஒரே மாதிரியான முறையே பின்பற்றப்பட்டது. இந்துக்கள் மேல் முறையீடு செய்வதற்கான (appeal) அமைப்பு எதுவுமில்லை. பஞ்சாயத்துகள், நடுவர்கள் ஆகியோர் தீர்ப்புகளையே இந்துக்கள் பெற்றனர். இந்து நிறுவனங்கள் தொடர்ந்து இருந்து வந்தன. தாடி வைத்திருத்தலும், முஸ்லிம்களின் உடையை அணிதலும் கட்டாயமாக்கப் பட்டன. நீதி முறைமை அரசாங்க நிறுவனத்திலிருந்து பிரிக்க முடியாததாகும். ஆனால் நீதி முறையில் தூய்மை முறை ஏதும் பின்பற்றப்படவில்லை.

**ஆளுநர்கள்**

ஆளுநர்கள் அடிக்கடி மாற்றப்பட்டனர். கீழ் நிலை நோக்கிய போக்குத் தோன்றியது. அராபியர்கள் தங்கள் இனக் குழுக்களுக்குள்ளே தம் இனைப் பகையைத் தொடங்கி னர். யாமானியர்களுக்கும், மெஜாரியர்களுக்கும் வெளிப் பகை மூண்டது. இந்திய வரலாற்றில் நாம் காணும் சிந்துவில் ஏற்பட்ட அராபியர்களின் ஆட்சி உட்கதைதான். இந்திய ஆட்சி அமைப்பு முறை வளர்ச்சிக்கு அராபியர்களின் அரசு ஒன்றும்செய்யவில்லை என்னும் பெரிய உண்மையினை இதுவரை பார்த்தவற்றிலிருந்து தெரிந்து கொள்கிறோம். அராபியர்கள் புதிதாக ஏதும் செய்யவில்லை என்பதோடு சிந்துவில் அராபி யரின் ஆட்சி எவ்வித விளைவுகளையும் உண்டாக்கவில்லை. சிந்துவில் ஏற்கெனவே இருந்த இந்து முறைகளுக்குப் பல சந்தர்ப்பங்களில் அராபியர்கள் விட்டுக் கொடுத்தனர். ஆட்சித் துறையில் எவ்வித விளைவும் ஏற்படுத்தவில்லையென்ப தோடு, சமூகத் துறையிலும் அவர்கள் முத்திரை பதிக்கப் படவில்லை. அராபியர்கள் தலைத் தலைவர்கள் அல்லது ஆளு நர்களுக்கு உதவினர்கள் என்று கண்டோம். அராபியர்களி டம் உதவி பெற்ற தலைத் தலைவர்களான ஆளுநர்கள் அராபியர் களையே எதிர்த்து நின்றனர். எனவேதான் வரலாற்று ஆசிரி யர்கள் அராபியர்கள் சிந்துவைக் கைப்பற்றி ஆண்ட வர லாற்றினை உரைக்கின்றபோது, அதனை உட்கதையே (Episode) என்றும், எந்தவிதமான முடிவையும் தராத, விளைவையும் ஏற் படுத்தாத வெற்றி என்றும் குறிப்பிட்டார்கள்.

இந்திய ஆட்சி அமைப்பு முறை வளர்ச்சியில் அராபியர் களின் பங்கு மிகச் சிறியது என்றாலும் கூட, அராபியர்கள் ஆட்சி அமைப்பு முறையினைப் பற்றி நாம் அறிந்து கொள்ளு தல் அவசியமாகிறது. அராபியர்கள் சிந்துவில் ஏற்படுத்திய ஆட்சி மிகச் சில ஆண்டுகளே இருந்தது என்றாலும் பின்னல் அராபியர்களைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அந்நியர்களுக்கு அராபியர்கள் ஆட்சித் துறையில் கற்றுக் கொண்ட பாடம் பயனளித்தது.

அராபியர்களைப் பொறுத்த வரையில் ஆட்சித் துறையில் குறிப்பிடத் தகுந்த சாதனைகள் ஏதுமில்லை என்னும் காரணத் தால்தான் வரலாற்று அறிஞர்கள் எந்தவிதமான முடிவையும், விளைவையும் ஏற்படுத்தாத வெற்றி என்று அவர்கள் வருகை யினைக் குறிப்பிட்டார்கள் போலும். இது வரையில் முஸ்லிம்களை மட்டும் ஆண்டு வந்த அராபியர்கள் இந்துக்

களையும் ஆள வேண்டியவர்களாக மாறிய போது புதிய அனுபவங்கள் பெற்றனர். ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டு காலம் ஆட்சி செய்த அராபியர்களின் ஆட்சி அமைப்பு முறையினை, இந்திய ஆட்சி அமைப்பு முறையின் வளர்ச்சியினைப் பற்றி ஆராயும் போது, நாம் ஒதுக்கி வைத்தால் தெரிந்தே தவறு செய்தவர்களாவோம். புதிதாக ஆட்சிக்கு வந்த எவரும் தலப் பழக்கங்களைக் (Local customs) கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. அதனையும் செய்து அராபியர்கள் இந்திய வரலாற்றில் தங்கள் பெயரை நிலைக்கச் செய்து குறிப்பிடத் தகுந்தவர் ஆயினர்.

# 21. கஜ்ன வைடுகளின் காலம்

## (Gazna Vide's Age)

சென்ற அத்தியாயத்தில் அராபியர்களின் வருகையினைப் பற்றியும் அதனல் இந்திய ஆட்சியியலில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டதா என்பதைப் பற்றியும் கண்டோம். இந்த அத்தியாயத்தில் அவர்களுக்குப் பின்னர் ஆண்ட கஜ்ன வைடுகளின் காலத்தில் டெல்லிச் சுல்தானிய அரசு எவ்வாறு உருவாயிற்று என்பதையும், அரசின் நிர்வாக இயந்திரம் எவ்வகையில் செயல் புரிந்தது என்பதனையும் காண்போம்.

### மகமதுகோரி

கஜினி முகம்மது இந்தியாவின் மீது படையெடுத்தார். பதினேழு முறை படை எடுத்த அவர் இந்தியச் செல்வத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு சென்ருர். வட இந்தியாவில் வாழ்ந்த இந்துக்களின் மனத்தில் பீதியை ஏற்படுத்திஞர். சிலை வணக்கத்தை (Idol worship) இந்தியாவிலிருந்து அறவே ஒழித்துக்கட்டிவிடுவதென அவர் சபதம் பூண்டார். ஆனல் அவர் ஆட்சியியல் நிறுவனம் எதனையும் இந்தியாவில் புகுத்தவில்லை. அடுத்து வந்த கோரியின் நிலையும் அத்தகையதாகவே இருந்தது. மகமதுகோரி தான் ஆட்சி நடத்தாது இந்தியாவில் தமக்குக் கிடைத்த நாடுகளைத் தமது நம்பிக்கைக்குப் பாத்திரமானவரும், திறமை மிக்கவருமான பிரதிநிதியான குத்புதீன் அய்பெக் என்பாரின் கையில் ஒப்படைத்துச் சென்ருர். கி.பி. 1206-ஆம் ஆண்டில் மகமதுகோரி ஒரு கொலையாளியின் கையில் சிக்கி மாண்டார். குத்புதீன் அய்பெக் சுல்தான் என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். வங்காளத்தை ஆண்ட இக்தியாருதீன், முல்தான், உச் என்னும் நாடுகளின் ஆளுநராயிருந்த நசிருதீன் குவேச்சா என்போரும் குத்புதீனைத் தங்களது தனித் தலைவராக ஏற்றுக் கொண்டனர். அதிலிருந்துதான் டில்லிச் சுல்தானிய அரசு என எல்லா

ராலும் அறியப்படுகின்ற முஸ்லிம் பேரரசு இந்தியாவில் தொடங்கியது.

### ஒப்புறவு

தோன்றி நின்ற 200 ஆண்டுகளில் சிறந்ததோர் ஆட்சி முறையை நிறுவக் கஜ்ன வைடுகளால் முயற்சிகள் பல செய்யப்பட்டன. அதைப் போலவே முஸ்லிம்களுக்கும், இந்துக்களுக்கும் இடையே ஓர் ஒப்புறவை உண்டாக்க ஆட்சித் துறைக் கொள்கைகள் பல வகுக்கப்பட்டன. சுல்தானிய அரசின் ஆட்சிக் காலத்தில் வல்லவர்களையே திகைக்க வைக்கச் செய்யும் பிரச்சினைகள் பல தோன்றின. அப்பிரச்சினைகளைத் தீர்க்க முயலும்போது டில்லிச் சுல்தானிய அரசர்கள் இஸ்லாமிய அரசின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறுபட்டு நடக்க நேரிட்டது. முஸ்லிம்களால் ஆளப்பட்ட இந்தியக் குடிமக்களின் எண்ணிக்கை ஆள்வோரின் எண்ணிக்கையை விடப் பலமடங்கு அதிகமாக இருந்தபடியால் முஸ்லிம்கள் எங்குச்சென்றாலும் அங்குத் தனிச்சிறப்புரிமைகளைக்கொண்ட ஒரு சிறுபான்மைக் கும்பலாகவே இருந்துகொண்டு ஆட்சி புரிந்தனர். இந்தியாவின் எண்ணற்ற மக்கள் கூட்டத்தை எல்லாம் வாள் முனையாலோ அல்லது வேறு வகையாலோ மாற்றி விடமுடியாதென்பதை அவர்கள் உணர்ந்தனர். எனவே சமய அடிப்படையில் அமைந்திருந்த தங்கள் அரசின் சட்டங்களைத் தளர்த்தி முஸ்லிம்கள் இந்தியாவைத் தமது நாடாக ஏற்றுக் கொண்டனர்.

### வேறுபாடு

முஸ்லிம் அரசின் ஆட்சிக் கலையிலும் ஒரு திருப்பம் ஏற்பட்டது. இந்தியாவிலிருந்த அரசின் பண்பும் பெரிதும் மாறி அமையலாயிற்று. நபி நாயகத்தின் சட்ட திட்டங்களைக் கொண்டோ அல்லது முஸ்லிம் சட்ட அறிஞர்களும் சமய ஞானிகளும் தெரிவிக்கின்ற கருத்துகளின்படியோ இந்தியாவை ஆள முடியாது என அவர்கள் கண்டனர். இந்தியாவில் முஸ்லிம்கள் ஆட்சி நடத்துவதற்குத் தேவையான கருவிகளும், அரேபியா போன்ற முஸ்லிம் நாடுகளில் ஆட்சிக்குத் தேவையாயிருந்த சாதனங்களும் ஒன்றுக் கொன்று வேறுபட்டிருந்தன.

### சுல்தானின் பதவி

இந்தியாவில் சுல்தானின் பதவியானது ஓரளவு அடிமை நிலைமையில் இருப்பதைப் போல் புதிய சுல்தான்கள் உணர்ந்தனர். முஸ்லிம்கள் அல்லாதவர்கள் பெரும்பான்மையாக

இருந்து கொண்டு மன்னரை நெருக்கியபோது முஸ்லிம் அதிகாரிகளும், மன்னரது ஆணையை மதிக்காது செயல்பட்டனர். மன்னரையே மதிக்காது கலக மனப்பான்மையோடு இருந்த அதிகாரிகளைத் தண்டிப்பது அவசியம் என்றாலும்கூட அது இஸ்லாமிய சட்டத்திற்கு ஒவ்வாததாக இருந்தது. மேலும், கொலையும், கொள்ளையும் எங்கும் தாண்டவம் ஆடி நாட்டின் சுதந்திரத்திற்கும், அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் ஊறு விளைவித்தபோது இக் குறைகளை எல்லாம் களைவதற்கான புதிய சட்டங்களை அதாவது சமயச் சட்ட அறிஞர்களால் ஒத்துக்கொள்ளப்பட இயலாதசிலசட்டங்களை நாட்டுக்குநலன் விளைவித்தால் போதும் என்னும் எண்ணத்தில் ஆக்க அரசர்கள் முன் வந்தனர். எனவே யாவராலும் ஒப்புக் கொள்ளப் பட்டதும், முஸ்லிம் சமய அடிப்படையில் அமைந்ததுமான அரசு கொள்கையை விடுத்து, அதற்கு மாறான அரசாங்கக் கொள்கையை வகுக்க வேண்டுவது அவசியமாயிற்று. அதனோடு இந்தியாவில் இஸ்லாமிய சமயத்துக்கும், இஸ்லாமிய அரசுக்கும் இருந்த அடிப்படையான வேறுபாடுகளை ஒப்புக் கொள்ள வேண்டுவதும் அவசியமாயிற்று. சமயச் சட்ட அறிஞர்களும், சமயக் கொள்கை நிபுணர்களும் அரசுக்கு அல்லது அரசு பொறுப்பை மேற்கொண்டுள்ளவர்க்கு என்னென்ன செய்ய வேண்டுமென்பதை அரசுக்கு அதிகாரத்தோடு அறிவுரை கூறத் தக்கவர்களா இல்லையா என்னும் கேள்வி எழுப்பப்பட்டது. டில்லிச் சுல்தானிய ஆட்சியின் போது இஸ்லாமிய அரசு, இஸ்லாமிய சமயம் என்னும் இரண்டின் அதிகார வரம்புகள் தனித்தனியே பிரிக்கப்படுவதற்கான முயற்சிகள் நடைபெற்றன. முஜ்தாகிதுகள், உலேமாக்கள் முதலியோர் அரசு பற்றிய காரியங்களில் தலையிடுவதை மன்னர் தடுத்தார்.

### அரசு நிறுவனம்

முஸ்லிம் அரசர்களிடையே புதிய கருத்து மாற்றம் ஏற்பட்டது. இந்தியாவைப் பொருத்த வரையில் இந்துக்களை முற்றிலும் ஆட்சித் துறையிலிருந்தும், இராணுவ ஊழியத்திலிருந்தும் விலக்கி விடுதல் என்னும் கொள்கை மூலம் அரசாங்கத்தைத் திறம்பட நடத்த முடியாது என்பதை டெல்லிச் சுல்தான்கள் பலர் உணர்ந்தனர். ஏற்கெனவே இருந்த அரசாங்க நிறுவனங்களை நன்கு பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதனை உணர்ந்தனர். ஏனென்றால் அவைகளுக்குப் பதிலாக ஏற்படுத்தப்படக்கூடிய புதிய நிறுவனம் ஏதும் அவர்களிடம்

இல்லை. இந்தியத் தளபதிகளான சேவந்த்ராய், ஜெய்சென் விஜய்ராய் முதலியவர்களையும், வேறுபலரையும் முஸ்லிம் மன்னர்கள் நியமிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. டில்லிச் சுல்தானிய அரசர்களின் காலத்தில் இந்திய அதிகாரிகள் பலரும் அவரவர் பதவிகளில் தொடர்ந்து நீடிக்குமாறு விடப் பட்டனர். பெரும் இந்தியத் தலைவர்கள் முதல் சிற்றதிகாரிகள் வரை எல்லா இந்திய அதிகாரிகளும் தங்கள் தங்களது அதி கார வட்டத்துக்குள் மைய அரசின் உறுப்பினர்களாக இருந்து பணியாற்றினர். குத்புதீன் டில்லி அரியணையைக் கைப் பற்ற ரந்தோல் போன்ற இந்தியத் தளபதிகளும், இந்தியப் போர்வீரர்களும் பக்கபலமாய்த் துணை நின்றனர். இத்தகைய சூழ்நிலை இருந்தமையால் டில்லிச் சுல்தானிய அரசை இந்திய இஸ்லாமிய அரசு என வரலாற்று ஆசிரியர்கள் அழைக்கின்ற னர். இனிக் கஜ்ன வைடுகளின் காலத்திலிருந்து டில்லிச் சுல்தா னிய அரசின் காலம் வரை நிர்வாக இயந்திரம் இயங்கிய முறையினைக் காண்போம்.

**சுல்தான்**

நாட்டின் மன்னராகத் திகழ்ந்தவர் அரசரென்று அழைக்கப் படுவதற்கு மாறாகச் சுல்தான் என்று அழைக்கப்பட்டார். ஆரம்பத்தில் அப் பட்டத்தை அளித்தவர் கலீஃபா ஆவார். சுல் தான் என்னும் சொல்லானது அராபிய மொழிச் சொல்லாகும். சுல்தான் என்னும் சொல்லுக்கு ஆள்பவர் என்பது பொருள். ஒருவருக்குச் சுல்தான் என்னும் பட்டம் வழங்கப்பட்ட போது சில சடங்குகள் செய்யப்பட்டன. அச் சடங்குகள் நாட்டின் சிவில், இராணுவ அதிகாரங்கள் ஒரே மனிதரிடம் இணைந்து இருந்தன என்பதைக் காட்டின. ஒரு தடவை முடிசூட்டப் பட்ட பின் அல்லது வழங்கப்பட்ட பின் அது பரம்பரைப் பட்டமாக மாறியது. ஒருவர் இறந்து மற்றொருவர் அப் பட்டத் திற்கு வந்த போது முதலாமவர்க்குச் செய்யப்பட்டது போல் பின் வந்தவர்க்கும் அரச பட்டத்திற்குரிய சடங்குகள் செய்யப் பட்டன. ஒவ்வொரு முறையும் பட்டத்திற்குரியவர் இப் பட்டம் வழங்கப்படுவதற்கு முன் அதற்கான விண்ணப்பஞ் செய்ய வேண்டும். மகம்மது கஜினியின் வழித் தோன்றல்கள் அனை வரும் சுல்தான் என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டனர். மகமது கோரியின் மறைவுக்குப் பின்னர் ஆளுகர்களாயிருந்த தாஜ் உத்தீன், எல்டோஸ், குத்புதீன் அய்பெக் ஆகியோரும், அய்பெக்கிற்குப் பின் அரியணையில் அமர்ந்த ஒவ்வொரு அரசரும் டெல்லிச் சுல்தான் என்று பட்டம் சூட்டிக்கொண் டனர். இல்டுமிஷ் பெரோஸ்ஷா போன்ற மன்னர்கள்

தங்களது பட்டங்களை உறுதி செய்து தரும்படி கலீஃபாவிடம் விண்ணப்பம் செய்து கொண்டனர்.

### வல்லரசு

சுல்தான் வல்லரசாக, எல்லையற்ற அதிகாரத்தைச் செலுத்துவோராகத் திகழ்ந்தாலும், அரசரின் அதிகாரம் உலேமாக்களாலும், முஜ்தாகீதுகளாலும் ஓரளவு கட்டுப்படுத்தப் பட்டது. சமயத்துறை சம்பந்தமானவற்றைச் சுல்தான்கள் அவர்களிடமே புறக்கணிக்கப்படக் கூடாத ஒரு வகையான அதிகாரமாக விட்டிருந்தனர். அல்லாவுதின் கில்ஜி, மகமது பின் துக்ளக்கைத் தவிர வேறு எந்தச் சுல்தானுக்கும் சமயச் சட்டங்களால் வரையறுக்கப்பட்ட, சமயச் சட்ட நிபுணர்களால் அறிவிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு மாறாக நடக்கத் துணிவு இல்லை. பிற்போக்கு வாய்ந்த சட்ட நிபுணர்களால் அரசர்கள் ஆட்டுவிக்கப் பட்டனர் என்று பிரோஷாத்துக்ளக் கூறும் கூற்றிலிருந்து அறிகிறோம்.

### சுல்தானின் நிலை

இஸ்லாமியச் சட்டப்படிக்கும், சட்ட அறிஞர்கள் கூறிய பொருள் விளக்கத்திற்கும் ஏற்பவே நீதி வழங்கப்பட்டது. மஹிதி என அழைக்கப்பட்ட ருக்நுதின் சமயத்திற்கு முரணாக நடந்ததாகவும், தவறு புரிந்ததாகவும், அதனால் அவர் சமய விரோதி எனவும் சட்ட வல்லுநர்கள் குற்றம் சாட்டி மரண தண்டனை விதித்திட வேண்டும் எனக் கூக்குரல் இட்டபோது புனிதச் சட்டங்களை உணர்ந்த பேரறிஞர்களின் தீர்ப்புக் கிணங்க குற்றஞ் செய்தவர் தண்டிக்கப்பட்டார். சுல்தானே கௌரவம், மரியாதையின் பிறப்பிடம், நீதியின் இருப்பிடம் என இஸ்லாம் ஒத்துக் கொண்டது. நாட்டின் சுல்தானாக விளங்கியவரே நாட்டிலிருந்த நிலம், நீர் ஆகியவற்றின் இறைவராகத் திகழ்ந்தமையால் அவருக்குத் தம் விருப்பப்படி நிலங்களை வழங்கவும், பறிமுதல் செய்யவும் அதிகாரம் இருந்தது. சுல்தான் உண்மையிலேயே நாட்டின் இறைவராக விளங்கினார். ஏனென்றால் அவரே நாட்டின் படைத் தலைவராகவும் இருந்தார். திறமையற்ற சுல்தானை உயர் குடி மக்கள் எதிர்த்தனர். ஏனென்றால் உயர் குடி மக்கள் படை பலமும், பணபலமும் வாய்க்கப் பெற்றிருந்தனர்.

### தொழுகை

தொழுகை நடைபெறும் போது சுல்தானே அதற்குத் தலைமை தாங்கி நடத்தினார். கலீஃபாவின் துணையாளர்களான

வாலீகள், நைபுகள் ஆகியோர் தொழுகைகள் நடைபெற்ற போது தலைமை தாங்கித் திருவுரை நிகழ்த்தியமையால் இந்தியச் சுல்தான்களும், பொதுத் தொழுகைகளைத் தலைமை தாங்கி நடத்தவும், வெள்ளிக் கிழமைகளில் திருவுரைகளை ஆற்றவும் உரிமைபெற்றிருந்தனர். வெள்ளிக் கிழமைகளிலோ அல்லது ஈத் விடுமுறை நாட்களிலோ பொதுத்தொழுகை நடைபெற்ற வேளைகளில் சுல்தான்கள் அவற்றில் அரசியல் காரணங்களுக்காகவே கலந்து கொண்டனரேயன்றிச் சமயக் காரணங்களின் பொருட்டு அன்று என்று சின்ஹா உரைக்கின்றார். வழிபாடுகளை நடத்தியவர்கள் அதற்கென்றே தனிப்பட்ட முறையில் நியமிக்கப்பட்டு இருந்த இமாம் என்னும் அதிகாரிகளே ஆவர். இமாம் பதவி நாட்டின் மிக முக்கியமான பதவிகளில் ஒன்று. என்றும் கருதப்பட்டது. மன்னர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்னும் கொள்கையே முன்பு நிலவியது. பில்கதீஜன் என்பாரின் மரணத்திற்குப் பின் அமீர்பாரி என்பவர் பட்டத்திற்கு வந்தார். ஆனால் அவருடைய தீய நடத்தையின் விளைவாக மக்கள் சபுக்டிஜின் என்பாரைக் கஜினியின் தலைவராகத் தேர்ந்தெடுத்ததையும், பஹராம்ஷாவிற்குப் பின்னர் அல்லாவுதீனைத் தேர்ந்தெடுத்ததையும் சான்றாகக்காட்டலாம்.

### நியமன வழி

டில்லிச் சுல்தானிய பதவியை அடைவதற்குரிய வழி பொதுவான நியமன வழியே அன்றித் தேர்தல் வழி அன்று என்று உறுதியாகக் கூறலாம். மன்னர் ஒருவரது மரணத்திற்குப் பின் யார் பட்டத்திற்கு வருவது என்பது டில்லியில் எங்ஙனம் தீர்மானிக்கப்பட்டது என்பதற்கு அல்லாவுதீன் கில்ஜி, முகம்மது பின் துக்ளக் ஆகியோர் பதவியைக் கைப்பற்றக் கடைப்பிடித்த முறைகளும், நாற்பதின்மர் என்னும் துருக்கிய அடிமைகள் பட்ட உரிமையைத் தீர்மானிப்பதில் செலுத்திய செல்வாக்குமே சிறந்த சான்றுகளாகும்.

### உயர் குடியினர்

மன்னருக்கு அடுத்த படியாகச் சுல்தானியத்தில் சிறப்பிடம் பெற்றவர்கள் உயர் குடியினர் (பிரபுக்கள்). அவர்கள் அரசரிடமிருந்து பரப்பு மிக்க ஜாகீர்களையும், சிறப்பு மிக்க பட்டங்களையும், பெருஞ்சேனைகளின் தலைமைப் பதவிகளையும், ஆளுநர் பதவிகளையும் பெற்றிருந்தனர். பட்டத்திற்கு வரும் போதோ அல்லது வெற்றிகளைப் பெறும் போதோ சுல்தான் பல பதவி உயர்வுகளையும், பட்டங்களையும் வழங்குவது

வழக்கம். முக்கிய நண்பர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரை அமீர்களாக நியமித்தலும், அமீர்களாக இருந்தவர்களை மாலிக்குகளாக நியமிப்பதும் வழக்கம் எனத் தெரிகிறது. உயர் குடியினரில் மூன்று பிரிவினர் இருந்தனர். அவர்கள் அமீர்கள், மாலிக்குகள், கான்கள் என அழைக்கப்பட்டனர். இவ் வுயர் குடியினர் பெரும் ஜாகீர்களின் உரிமையாளர் களாகப் பெருஞ் சேனைகளை வைத்திருந்தனர். உண்மை யிலேயே உயர் குடியினருக்கு ஜாகீர் வழங்கும் வழக்கமானது டில்லிச் சுல்தானியர்களின் ஆட்சியின் கீழ்ப் பெருவாரியாகக் கைக்கொள்ளப்பட்டது. சுல்தானுக்குத் துரோகம் இழைத்த உயர் குடியினரின் கண்கள் குருடாக்கப்பட்டன. அவர்கள் கொலை செய்யப்பட்டனர். சொத்துகள் பறிமுதல் செய்யப் பட்டன. உயர் குடியினருக்குக் கிராமங்கள் தானமாக வழங்கப் பட்டன. ஜாகீர் முறையின் விளைவுகள் சுல்தானிய அரசுக்குப் பாதகமாக அமைந்தன. ஜாகீர் முறையால் பரம்பரையாகப் பதவி வகிப்போரின் எண்ணிக்கை பெருகி, ஊழலும், திறமைக் குறைவும் அரசில் தோன்றின.

### உரிமையாளர்

சுல்தான் எல்லா உடைமைகளுக்கும் சொந்தமானவராயும், நிலம் நீர் ஆகியவற்றிற்குச் சொந்தத் தலைவராயும், கொள்கை அளவில் மட்டுமின்றி நடை முறையிலும் திகழ்ந்தார். தாமே விரும்பி அளித்தவற்றை வேண்டிய போது திரும்பப் பெற்றுக் கொண்டார். உயர் குடியினர் இறந்தவுடன் அவர்களின் உடைமைகள் யாவும் அரசருக்குச் சொந்தமாயின.

### பிரிவுகள்

பேரரசின் பரப்பு, காலத்திற்குக் காலம் மாறுபட்டுவந்தது. கில்ஜியின் காலத்தேதான் பேரரசு மிகப்பரவலாக விரிந்தது. அநேகமாக இந்தியா முழுவதையுமே உட்கொண்ட பகுதியைக் கில்ஜி மரபினர் ஆண்டனர். அப்போது இரண்டு தவிப்பட்ட ஆட்சித் துறைப்பகுதிகள் இருந்தன. ஒன்று சுல்தானின் நேரடி ஆட்சியிலும், மற்றொன்று அவரது மறைமுகமான ஆட்சியின் கீழும் கட்டுப்பட்டிருந்தன. தோற்ற சிற்றரசர்களிடம் அவர் களது நாட்டைத் திரும்ப அளித்துக் கப்பம் கட்டி வருமாறு செய்யும் வழக்கம் சுல்தான்களின் நிலையான கொள்கையாக இருந்து வந்துள்ளது. அச் சிற்றரசர்களை மிகவும் விழிப்போடு கண்காணித்து வந்தனர். அவர்களில் பலர் அடிக்கடி அரச வைக்கு வந்து போகும்படிப் பணிக்கப்பட்டனர். நன்கு வரை

யறுக்கப் பெற்ற பெரும் மாகிலங்கள் பல பேரரசில் இருந்த தாகத் தெரிகிறது. ஒரு மாகிலமானது பொதுவாகப் பல மாவட்டங்களாக அல்லது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவும் ஷிக் என அழைக்கப்பட்டது. ஒவ்வொரு ஷிக்கும் பல இக்தாத்துகளாகப் பிரிக்கப்பட்டது. மகமது பின் துக்ளக் மராத்திய நாட்டை நான்கு ஷிக்குகளாகப் பிரித்து ஒவ்வொரு வட்டத்தையும் கிராமங்கள் அடங்கிய பர்காளுக் களாகவும் பிரித்திருந்தார்.

## அமைச்சர்கள் அவை

மகமது கஜினியின் காலத்திலிருந்து பிரோஸ்ஷாவின் காலம் வரை அமைச்சர்கள் அவை போன்றதொரு நிறுவனம் அரண்மனையில் இருந்துவந்ததாகத் தெரிகிறது. சுல்தான் அடிக்கடி அதைக் கலந்தாலோசித்தே காரியங்கள் செய்வது வழக்கம். சுல்தானுக்கு உடனடியாகக் கீழே இருந்த இவர்கள் ஆட்சித்துறைப் பகுதிகள் அனைத்திலும் பரவலாக நியமிக்கப் பட்டிருந்த அதிகாரிகளுக்கும், சுல்தானுக்கும் இடையே இருந் தனர். சுல்தானுக்கு நேரடியாகப் பொறுப்பு வாய்ந்தவர் அத்தகைய அமைச்சர்களில் தலைமை அமைச்சராக விளங்கிய வர்; அவர் வசீர் என அழைக்கப்பட்டார். அவர் சுல்தானின் நம்பிக்கைக்கு உகந்தவராகவும், மிக வல்லமை வாய்ந்தவரா கவும் விளங்கினர். சுல்தானின் மிக முக்கிய அதிகாரிகளாக வசீர், சேனாதிபதி, அரிஜ், ஹஜீப், திவான் ஆகியோர் விளங் கினர். முஷ்ரிப், முஸ்தபி என்னும் அதிகாரிகள் இருவரைப் பற்றியும் கேள்விப்படுகிறோம்.

## வசீர் (wazir)

அமைச்சரவையில் தலை சிறந்த பதவியை வகித்தவர் வசீர் என்னும் அதிகாரியே. இராணுவக்காரியங்களைத் தவிர மற்றைய காரியங்கள் யாவற்றையும் வசீரே தலைமை தாங்கி நடத்தினர். எனவே மிகவும் கவனத்தோடு ஆராய்ந்து சிறந்த வர்களையே வசீராகச் சுல்தான் நியமிப்பது வழக்கம். வசீரின் பதவி கொள்கை அளவில் எவ்வளவு முக்கியமானதாக இருந்த போதிலும் நடைமுறையில் சுல்தானின் செயலாளர் போன்றே அவர் தம்மைக் கருதிக் கொண்டார். மன்னர்கள் எதேச் சாதிகாரிகள். மன்னரின் வெறுப்புக்கு ஆளான வசீர்களின் பதவி பறிபோனது மட்டுமல்லாமல் உயிரும் பறிக்கப்பட்டது. ஏட்டளவில் உயர்ந்த பதவி என்றாலும் நடை முறையில் சுல் தானின் திறமைக்கும், மனத்திட்பத்திற்கும் ஏற்பவும், உயர்

குடியினர் அவரை எந்த மனப்பான்மையுடன் நடத்தினர் என்பதற்கு ஏற்பவுமே அவர்கள் செயல்பட முடிந்தது. டாக்டர் திரிபாதி வசீருக்கென்று தனியே ஒரு மதிப்போ, அதிகாரமோ இருந்ததாகத் தெரியவில்லை; பிரபுக்கள் ஒன்று சேர்ந்து எதிர்த்தால் சுல்தானுங்கூட அவரைக் காப்பாற்ற இயலாது போகும் என்று குறிப்பிடுகின்றார். உயர் குடியினரின் ஆதரவு இருந்தாலே வசீர்கள் உண்மையான அதிகாரத்தைச் செலுத்தும் வாய்ப்புப் பெறமுடியும். தந்திரமும், திறமையும் கொண்ட அமைச்சர்களே செல்வாக்குடன் விளங்கினர். நாட்டின் நிர்வாகப் பொறுப்பை உண்மையில் மேற்கொண்டவர்கள் அமைச்சர்களேயாதலால் அமைச்சரவையின் உறுப்பினர்கள் என்னும் முறையில் அவர்கள் அனைவருமே அதிகாரமும், முக்கியத்துவமும் பெற்றிருந்தார்கள். மன்னர் வசீருடன் மட்டுமின்றி வேறு அமைச்சர்களுடனும் இரகசிய ஆலோசனை நடத்தினர். பல சமயங்களில் வசீர்கள் தம் பதவியினின்றும் நீக்கப்பட்டு வேறு பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். வசீரும் ஏனைய அமைச்சர்களைப் போலவே, யதேச்சாதிகார அரசர்களின் பலத்துக்கும், மனப் போக்குக்கும் ஏற்பவும், இராணுவ பலம் கொண்ட உயர் குடியினரின் மனப்பான்மைக் கேற்பவுமே அதிகாரத்தையும், சிறப்புரிமையையும் நிலையாகப் பெற முடிந்தது.

### வசீரின் கடமைகள்

வசீரின் கடமைகள் யாவை? அவர் நீதி பரிபாலனம் செய்வது, பொது ஆட்சித்துறை விவகாரங்களைக் கவனித்தல், அரசின் வெவ்வேறு துறைகளை ஒருங்கிணைத்து ஒரு முகமாக இயங்கச் செய்தல், மேற்பார்வையிடுதல், நெறிப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் என்னும் அதிகாரங்களைச் செலுத்திவந்தார். சுல்தானின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிவதற்கு மட்டுமே ஏனைய அமைச்சர்கள் தகுதியுள்ளவர்களாக இருந்த போது, வசீர் ஒருவர் மட்டுமே அவசியமான அறிவுரையையும், ஆலோசனையையும் வழங்குகின்ற ஓர் அதிகாரத்தைக் கொண்டாடக் கூடியவராக விளங்கினர். வசீருக்கென்று ஒரு தனி ஹஜீபும், செயலாளரும், இன்னும் அவரது பதவிக்கேற்ற ஆடம்பரங்களும் அவரிடம் தரப்பட்டிருந்தன.

### அரசனின் தனிப் பிரதிநிதி

கொள்கையளவில் ஆட்சித் துறைகள் எல்லாவற்றினுடைய தலைவர்களும் வசீருக்குக் கட்டுப்பட்டவர்கள். வசீர்

நல்ல திறமையும் சுறுசுறுப்பும், சமயோசித அறிவும் வாய்க்கப் பெற்றிருந்ததால் அத் தலைவர்கள் மீது ஏராளமான செல்வாக்கையும், கட்டுப்பாட்டையும் செலுத்த முடிந்தது. உண்மையிலேயே வசீரின் ஆணைகளுக்காக அவர்கள் காத்திருந்தனர். வசீரின் சொந்த ஆற்றலைப் பொறுத்தே அவரது வெற்றி தோல்வி அமைந்தன. வசீரை ஏளனம் செய்தவர்களைச் சுல்தான்கள் கண்டும் கண்டுகொள்ளாமல் விட்டதும் உண்டு. அதேபோன்று சிறிது வசீரை அவமதித்தாலும் மரண தண்டனையே விதிக்கப்பட்ட காலங்களும் உண்டு. வசீரைச் சுல்தானின் தனிப் பிரதிநிதியாகக் (Personal Representative) கருதினர். அரசர் யதேச்சாதிகாரியாய் இருந்தமையால் சுல்தானின் பிரதிநிதி நாட்டிற்குத் தேவைப்பட்டார். சுல்தானே எதையும் சுயமாகத் தொடங்கக்கூடிய அதிகாரத்தைப் பெற்றிருந்ததால் வசீர் அவர் காட்டிய வழி நடக்க வேண்டியதாயிற்று. நிர்வாகச் சம்பந்தமான சிறு நடவடிக்கைகளில் அரசர் தலையிடும் வழக்கமில்லை. சுல்தான் மறுப்புக் கூறாத வரை சுயமாகவே வசீர் தம் பணிகளைச் செய்தார். எதைச் செய்தாலும் சுல்தானின் இசைவு பெற வேண்டியது வசீரின் கடமையாகும்.

ஒவ்வொரு துறைக்கும் தலைவர்களாகப் பல அமைச்சர்கள் இருந்தனர். வசீர் நியமிக்கப்பட்டது போலவே அவர்களும் வேலையில் அமர்த்தப்பட்டனர்.

### சேனாதிபதிகள்

கஜினி முகம்மது போன்ற பெரிய வேந்தர்களின் ஆட்சிகளில் தவிர மற்ற ஆட்சிகளில் எல்லாம் சேனாதிபதிகள் மிகவும் செல்வாக்குப் பெற்றவர்களாகவே விளங்கினர். ஆளுநர்களாக இருப்பவர் ஆட்சி செய்யும் மன்னர்க்கு எதிராகக் கிளர்ச்சி செய்தால் சேனாதிபதியை மன்னர் கலந்து ஆலோசிப்பது வழக்கமாக இருந்தது. போர்க் கால ஆலோசனைச் சபைகள் கூட்டப்பட்டுச் சேனாதிபதியும், பெருந் தளபதிகளும் மட்டுமே அதற்கு அழைக்கப்பட்டனர். படையானது வசீரின் அதிகார வரம்பிற்குட்படாதிருந்த காரணத்தால் அவர் அச்சபைக்கு அழைக்கப்படவில்லை. எவ்வளவு முக்கியமான அதிகாரியாக வசீர் விளங்கினாரோ அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்தவராகச் சேனாதிபதியும் விளங்கினார்.

### அமீர்-இ-ஹாஜிப்

அரசனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அதிகாரிகளில் குறிப்பிடத் தகுந்தவர் அமீர்-இ-ஹாஜிப் என்னும் அதிகாரி

ஆவார். எப்போதும் சுல்தானின் அருகில் இருந்த அவர் மூலமாகவே இரகசியமான பல முக்கியமான செய்திகள், முறையீடுகள் யாவும் அனுப்பப்பட்டன. எல்லாவிதமான இரகசியக் கடிதப் போக்குவரத்துகளையும் செய்தவர் இவரே. அரண்மனைக் காவலர்கள் இவருடைய கட்டுப்பாட்டின் கீழ் இருந்தனர். அரசரின் மெய்க்காப்புப் படையும் இவரது கண் காணிப்பிற்கும், கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டிருந்தது. இவர் பொதுவாகநாட்டின் மிக முக்கிய அதிகாரியாகவும், அரசருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவராதலால் செல்வாக்குப் பெற்றவராகவும் விளங்கினார். வசீர் உட்பட அரசவையிலி ருந்த எல்லா அதிகாரிகளும், அவரிடம் சற்று அச்சத்துடனும், மரியாதையுடனும் நடந்து கொண்டனர். நாட்டில் பல ஹாஜிப்புகள் இருந்தனர். அத்தனை ஹாஜிப்புகளுக்கும் தலைவர் ஒருவர் இருந்தார். ஹாஜிப்பாக நியமிக்கப்பட்டவர் ஆளுநர் பதவியில் அமர்த்தப் படுவது உண்டு. ஹாஜிப்பின் பதவியினை நாம் ஆராய்கின்ற போது அவரது பணிகள் இக் கால முதல் அமைச்சரின் தனிச் செயலாளருடைய அலுவல் களை ஒத்திருப்பதைக் காணலாம்.

### திவான்

திவான் அல்லது அரசின் செயலாளர் எனப்பட்டவர் அரசவையில் சீரும் செல்வாக்கும் பெற்று ஹாஜிப்பைப் போன்று விளங்கினார். அவரது அலுவலகம் தாவித் கானா என அழைக்கப்பட்டது. அரச கட்டளைகளையும், செய்திக் கடிதங்களையும் வேறு முக்கியமான ஆவணங்களையும் எழுதி அமைப்பதே அவரது கடமையாகும். தாமாகவே அவற்றை அவர் எழுத வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. அவரது அலுவலகத்தில் ஆவணங்கள், நியமனக் கடிதங்கள், நாட்டின் பலபாகங்களிலிருந்தும் வருகின்ற கணக்குப் பதிவேடு கள் முதலியவை பாதுகாக்கப்பட்டன. சுல்தான், வசீர் ஆகிய இருவருக்கும் நம்பகமான அதிகாரியாக அவர் விளங்கினார். வசீருக்கும், சுல்தானுக்கும் இடையே நடைபெற்ற நம்பகமான செய்திப் போக்குவரத்துகளைக் கவனித்துக் கொண்டவரும் அவரே.

### அரிஜ்

அரிஜ் அல்லது படை ஊதியத் தலைவர் என்பவர் திவா னுக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்று விளங்கியவர். ஒற்றுத் துறையை நன்கு அமைத்துக் கண்காணித்தலும்

படையில் ஒழுங்கும், கட்டுப்பாடும் நிலைநாட்டுதலாகியகடமை யும் இவர் நிறைவேற்றிய இரண்டு முக்கியமான கடமைகள் எனத் தெரியவருகின்றன. வசீர் இப் பணியில் எல்லாவிதமான துணையையும், அறிவுரையையும் நல்கினார். மாநிலங்களில் பல ஒற்றர்களையும், செய்தி அனுப்புபவர்களையும் நியமித்தவரும் இவரே.

முக்கிய நீதிபதி, கொத்தவால், சிறைக்கூட ஆளுநர், முஷ்ரி:.பி, முஸ்தா:.பி முதலிய அதிகாரிகள் பற்றியும் அறிந்து கொள்ளுவது மிகவும் அவசியமாகும். ஏனென்றால் மைய ஆட்சித் துறையில் இவர்கள் குறிப்பிடத் தகுந்த அதிகாரிகளாவர்.

### நீதித்துறை

ஹாஜி-உல்-குசாத் என்பார் நீதித் துறையின் தலைவ ராக இருந்தார். தலைநகரிலும், மாநிலங்களிலும் ஏராளமான நீதிபதிகள் அவரின் கீழ் பணிபுரிந்தனர். நீதித்துறையுடன் வரி திரட்டல், சிவில் நிர்வாகக் காரியங்கள் என்னும் இரு முக்கிய பணிகளும் சேர்க்கப்பட்டிருந்தன. நீதிபதியின் கடமைகளும், ஆளுநரின் கடமைளும் ஒன்றுக்கொன்று மோதிடாவகையில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. வரி வசூல் செய்தல் பணியை ஹாஜீக்கள் கவனித்துக்கொள்ளப் போர் செய்தல் பணியை ஆளுநர் கவனித்து வந்தார். பெயரள விலேதான் ஹாஜி உல் குஸாத் நீதித்துறையின் தலைவராக விளங்கினார். மிக முக்கியமான வழக்குகள் விசாரிக்கப்பட்ட வேலைகளில் வசீரே தலைமை வகித்தார். முக்கிய நீதிபதியும், மற்ற நீதிபதிகளும், வரி நிர்ணயிப்பாளர்களும், நீதிமன்ற உறுப்பினர்களாக அமர்ந்திருந்தனர்.

### கொத்தவால்

கொத்தவால் என்னும் இராணுவ அதிகாரி பெரும் கலகங் களை அடக்கவும் வெளிநாட்டுப் படையெடுப்புகளை முறியடிக் கவும் நியமிக்கப்பட்டிருந்தார். தலைநகரில் அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாக்கின்ற பணியோடு சுல்தானும் வசீரும் தலைநகரில் இல்லாத வேலைகளில் அரச குடும்பத்தைப் பாது காக்கின்ற தனிப் பொறுப்பும் கொத்தவாலைச் சார்ந்ததாக இருந்தது. தனிப்பட்ட முறையில் கவனித்துக் கொள்ளப்பட வேண்டிய கண்ணியமிக்க உயர் சிறை வாசிகள் இவருடைய பொறுப்பிலேதான் இருந்தனர்.

*முஷ்ரி.:ப் முஸ்த.: பின்*

நாட்டின் பொதுச் சிறைக் கூடம் இராணுவ அதிகாரியாக இருந்த, எப்போதும் ஒரு சிறு படையினை வைத்திருந்த சிறைக் கூட ஆளுநரின் பொறுப்பிலிருந்தது. முஷ்ரி.:ப் என்னும் அதிகாரி ஒற்றுத் துறையைச் சார்ந்த அதிகாரியென டாக்டர் முகமது என்பார் கூறிய கூற்றினை டாக்டர் திரிபாதி மறுத்து அரசாங்கத்தின் பால் கொண்டு வரப்பட்ட சிறியனவும், பெரியனவும் ஆகிய எல்லாப் பொருள்களுக்கும் கணக்கு வைத்துக் கொள்வதே முஷ்ரி.:பின் கடமை என்று உரைக்கின்றார். முஷ்ரி.:புகள் அலுவலகங்களை அவ்வப்போது பரிசோதித்து உள்ள நிலைமையை விவரமாக அரசருக்கு அறிவித்து வந்த பொதுக் கண்காணிப்பாளராக விளங்கினர். முஸ்த.:பின் என்னும் அதிகாரி வரி வசூல் தொகையைத் திரட்டல், இருப்புத் தொகையைப் பாது காத்தல் என்னும் இரு பணிகளையும் ரொக்கக் கணக்கை மேற்பார்வையிடுதல் என்னும் பணியையும் மேற்கொண்டிருந்தார்.

இது வரையில் மைய ஆட்சித் துறை நிறுவனங்களைப் பற்றிக் கண்டோம். இனி மாநில ஆட்சி (Provincial Administration) பற்றிய செய்திகளைக் காண்போம். மாநில அரசு மைய அரசின் பிரதிபலிப்பாகவே இருந்தது. மாநில ஆட்சித் துறையில் ஆளுநர், காஜி, ஷிராஜி, என்னும் செய்திகளை மேற்பார்வையிடும் அதிகாரி, ஆகிய சம அந்துஸ்துள்ள மூன்று அதிகாரிகள் தலைவர்களாக விளங்கினர். ஆளுநர் படைகளை நடத்திச் சென்று கப்பப் பணம் வசூலித்தார். சிவில் விவகாரங்களைக் கவனித்துக் கொள்வதும் வரி வசூல் செய்வதும் காஜியின் கடமைகளாகும். சிவில் விவகாரங்களுக்கு காஜியும், இராணுவக் காரியங்களுக்கு ஆளுநரும் தலைவர்களாக விளங்கினர். காஜிக்கு உதவியாக அமீல் அல்லது வரி வசூல் செய்பவரும், முஷ்ரி.:ப் அல்லது கணக்குத் தணிக்கைத் தலைவர்களும் இருந்தனர். காஜியோடுகூட அரசரிடமிருந்தவர் செய்தி எடுத்துச் செல்வோரின் மேற்பார்வையாளராவார். இவர் மாநில அரசில் நடப்பவற்றை ஆளுநரின் உதவியோடு மைய அரசிற்கு அனுப்பிவைத்தார். ஆளுநர் அல்லது அமீரின் கீழ் **ஹஜீ.:ப், முஸ்த.:பி, முஷ்ரி.:ப்** ஆகியோர் அவரது அலுவலகத்தில் பணிபுரிந்தனர். மாநில ஆளுநர் மைய அரசு பலவீனமாக இருந்த சமயங்களிலெல்லாம் தம் விருப்பப்படி நடந்து கொண்டார்.

## முடிவுரை

இது வரையில் கஜினி சுல்தான்களின் கீழ் இயங்கி வந்த ஆட்சித் துறையின் அமைப்பைப் பற்றிக் கண்டோம். நாளடைவில் கஜினிப் பேரரசு சிறு சிறு நாடுகளாகச் சிதறியது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் குத்புதீன் அய்பெக் அரசு எய்திய பின்னும் புதியதொரு அரசு டில்லியில் ஏற்பட்டது. புதிதாக வந்த சுல்தான்கள் காபூல், கஜினி போன்ற பகுதிகளைப் புறக்கணித்து டில்லியிலேயே தங்கி விட்டார்கள். டில்லிச் சுல்தானிய ஆட்சியில் இன்னும் பல மாறுதல்கள் நேரிட்டன. கஜினி அரசுகளின் முறையைவிடப் பல்வகைகளில் அது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்திருந்தது. கஜினி அரசுகளின் ஆட்சித்துறை நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு டில்லிச் சுல்தானிய அரசுகளின் ஆட்சி முறையினை அடுத்த அத்தியாயத்தில் காண்போம்.

# 22 டில்லிச் சுல்தானிய ஆட்சி

## (Sultanate Polity)

### குத்புத்தின் அய்பெக்

வட இந்தியாவின் ஆட்சி குத்புதீன் அய்பெக்கின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டது என ஏற்கெனவே கண்டோம். 1193-ஆம் ஆண்டில் குத்புதீன் டெல்லியைத் தலைநகராகக் கொண்டார். நிலமார்க்கத்தில் வடஇந்தியாவுக்கு வழிவிடும் வாயிலாக விளங்கிய டில்லிதான் இந்தியாவின் தலைநகராக இருந்துவரத் தொடங்கியது. குத்புத்தீன் அய்பெக்கினால் தோற்றுவிக்கப்பட்ட அடிமை வமிசம் என்று சொல்லப்படுகின்ற டில்லிச் சுல்தானிய அரசு முழுமையாகத் தொண்ணூறு ஆண்டுகள் ஆட்சிப் பீடத்தில் இருந்தது. அவர்களுக்குப்பின் டில்லியைக் கைப்பற்றிய கில்ஜிகள் காலத்தில் அதன் பரப்பு இன்னும் விரிவுற்றது. கில்ஜிகளின் ஆட்சி முப்பதாண்டுகள் நீடித்தது. ஆட்சித் துறை அமைப்பில் பல வகையிலும் திருப்பம் ஏற்பட்டது கில்ஜி வம்சத்து அரசரான அலாவுதீன் கில்ஜியின் காலத்தில் தான். அவர் காலத்தில் தென்னிந்தியா (தக்காணம்) முதன் முதலில் முஸ்லிம்களால் ஆளப்பட்டது. கில்ஜிகளுக்குப் பின் துக்ளக்குகள் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுகாலம் ஆண்டனர். அவர்களுக்குப்பின் முஸ்லிம்கள் கடைப் பிடித்துவந்த ஆட்சிக் கொள்கைகள் மாற்றம் பெற்றன. முஸ்லீம் பேரரசு மெல்ல மெல்லச் சுருங்கத் தொடங்கியது. நாடு கொஞ்சம் கொஞ்சமாக நலிவுற்றுச் சிதற ஆரம்பித்தது. அது 1398-இல் தைமூரின் படையெடுப்பினால் வீழ்ந்தது. வீழ்ச்சி அடைவதற்கு முற்பட்ட காலத்தில் டெல்லிச் சுல்தானிய அரசில் நிலவிய ஆட்சி அமைப்பு முறைகளை இனிக் காண்போம்.

டில்லிச் சுல்தானிய அரசு தோன்றி நின்று அழிவுற்ற இரு நூறு ஆண்டு காலத்தில் ஒழுங்காக ஆட்சி முறையை நிறுவப்

பல முயற்சிகள் நடைபெற்றன. ஆனால் அவை யாவும் செம்மையற்றனவாயும், பண்படாத முயற்சிகளாகவுமே இருந்தன.

### மன்னர் நிலை

டில்லிச் சுல்தானிய அரசில் மன்னர் ஒரு யதேச்சாதிகாரியாக (autocrat) இருந்தார். தாம் பெற்ற வெற்றியின் மூலமாகவோ அல்லது பரம்பரையாகப் பெற்ற ஓர் உரிமை காரணமாகவோ இந்திய ஆட்சியைத் தாம் பெற்றுள்ளதாகக் கருதிய அவர் தம்மால் வெல்லப்பட்ட நாடுகளின் மீது தமக்குப் பரம்பரை உரிமை உண்டென்றும், அந் நாடுகளை ஆளக் கலீ:பாவின் ஒப்புதலைத் தாம் பெற்றவர் என்றும் கூறிக் கொண்டார். டில்லிச் சுல்தானிய அரசர் தம்மால் ஆளப்பட்ட மக்களுக்கு இருவகையில் தோற்றம் அளித்தார். முஸ்லிம் மக்களுக்கு மதக்காவலராயும், மத விசுவாசங்களில் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வராயும் தோன்றினார். ஆனால் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு வரம்பற்ற வல்லரசராகவும், வெளிநாட்டுப் படை எடுப்பாளரும், அந்நியருமாகவே தோற்றமளித்தார். சுல்தானின் வாயிலிருந்து புறப்பட்ட சொற்கள் எல்லாமே சட்டமாக இருந்த போதிலும், அச் சொற்கள் குர்ஆனில் கூறப்பட்டுள்ள கருத்துகளின் அடிப்படையிலேயே இருத்தல் வேண்டும். குர்ஆனின் கோட்பாடுகளுக்கு முரணாகவோ, புனிதச் சட்டத்துக்குப் புறம்பாகவோ இருத்தல் கூடாது. கலீ:பாவின் பிரதிநிதியாக ஆட்சி செய்தமையால் இஸ்லாமிய சமயத்தை ஓங்கச் செய்வதும், இஸ்லாமிய சமயத்தவரைப் பாதுகாப்பதும் சுல்தானின் கடமை எனக் கருதப்பட்டது. இஸ்லாமிய மன்னர்கள் சமயத்தின் வழியே ஆட்சி புரிய வேண்டியிருந்தது அவர்களுடைய கைகளைக் கட்டிப் போட்டது போலாயிற்று. சமயத்தின் வழி ஆட்சி சமயக் குருமார்களின் ஆதிக்கத்தை ஓங்கச் செய்து, அரசருடைய அதிகார வரம்பைக் குறைத்தது. எனவே சில சமயங்களில் பொறுமை இழந்த அரசர்கள் குரானின் கட்டளைகளுக்கும், சமயச் சட்டங்களுக்கும் எதிராக நடக்கத் தொடங்கினர்.

### சமயப் பொறை

இக் காலத்தில் ஆண்ட சுல்தான்கள் யாரும் எல்லாச் சமயங்களையும் ஒன்றாகக் கருதுகின்ற மனப்பாங்கு பெற்றிருக்கவில்லை. இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஒரே மாதிரியான சமயப் பொறை வழங்கப்படவில்லை. நாட்டில் சில புதிய முறைகளைப் புகுத்தியபோது அலாவுதீன் கில்ஜி அரசியல் அதி

காரத்தைத் தமது கையில் குவித்துச் செல்வம் அனைத்தையும் சேர்த்து மங்கோலியப் படை எடுப்பை முறியடித்து அதன் மூலமாக உள்நாட்டு அமைதியைப் பாதுகாக்க எண்ணினார். மத விவகாரங்களில் அவர் தலையிட்டுக்கொள்ள வில்லை. அதைப் போலவே சமயத்துறைத் தலைவர்களும் ஆட்சியில் தலையிடுவதை அவர் விரும்பவில்லை. டில்லிச் சுல்தானிய அரசர்களில் பெரும்பாலோர் சமயமானது அரசின் மீது அதிகமான ஆதிக்கத்தைச் செலுத்துவதாகவே உணர்ந்தனர். சமய வல்லுநர்கள் பரந்த அளவிலேயே நாட்டில் செல்வாக்கையும், அதிகாரத்தையும், செலுத்திவந்தாலும், திறமையும், தகுதியும் ஒன்றாக வாய்க்கப் பெற்ற அரசர்கள் சிலர் அவர்கள் செலுத்திவந்த அதிகாரத்தையும், அதிகார வரம்பையும் கட்டுப்படுத்தும் வகையில் செயலாற்றினர். நாட்டின் நன்மைக்காகவும், நாட்டுமக்களின் நலனுக்கும் மட்டுமே தாம் ஆணைகளை வெளியிடுவதாகவும், அவை சட்டத்திற்கு உடன்பட்டனவா இல்லையா என்பதைப் பற்றி அக்கறை கொள்ள வில்லை என்றும் சுல்தான்கள் சிலர் கூறினர். இத்தகைய மாற்றம் சுல்தான்களிடத்தில் தோன்றியதன் காரணம் சூழ்நிலையே ஆகும். குரானியக் கட்டளைகளுக்குப் புறம்பாகச் செல்லவும் முஸ்லிம் சட்ட நிபுணர்களின் செல்வாக்கைக் கட்டுப்படுத்தவும், தங்களுடைய விருப்பம்போல் ஆணைகளை வெளியிடவும் முயன்றதன் விளைவாக டில்லிச் சுல்தான்கள் உண்மையில் ஒருவகையான தனிப்பட்ட யதேச்சாதிகாரத்தை நிறுவவே முயன்றனர் என்பதில் ஐயமில்லை. ஆனால் மிதமான யதேச்சாதிகாரமே செலுத்தினர் என்றே கூற வேண்டும்.

### துறைத் தலைவர்கள்

இனி டில்லிச் சுல்தானிய அரசின் மைய ஆட்சித் துறையைப் பற்றிக் காண்போம். டில்லி மைய அரசின் நிறுவனத்தில் சுல்தானுடைய கட்டளைகளுக்கு நேரடியாகக் கட்டுப்பட்டு இருந்த பல துறைத் தலைவர்கள் இருந்தனர். துறைத் தலைவர்களுக்கும், சுல்தானுக்கும் இடையில் இருந்த உறவு எந்த நிலையான கொள்கையின் அடிப்படையிலும் இருக்கவில்லை. சுல்தான் வல்லமையுள்ளவராக இருந்தால், துறைத் தலைவர்கள் அவருக்குக் கட்டுப்பட்டிருந்தனர். சுல்தான் வலிமையற்றவராக இருந்தால் அவர் துறைத் தலைவர்களுக்குக் கட்டுப்பட்டு நடந்தார்.

### நாயாபிமாம்லிகாத்

நாயாபிமாம்லிகாத் என்பவரே சுல்தானுக்கு அடுத்தபடியாக இருந்த அதிகாரியாவார். அவர் துணைத் தலைவராக

விளங்கினர். சில சுல்தான்களின் காலத்தில் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்று அவர் யதேச்சாதிகாரியாக நடந்து கொண்டார். அரசர் வயது வராத சிறுவராயிருந்தால் இடைக்காலப் பாதுகாப்பாளராக அவரே இருந்து ஆட்சியை நடத்தினர். நாட்டின் சேனைதிபதியாகவும் அவர் விளங்கினர். உண்மையான அரசப் பிரதிநிதியாக அவர் விளங்கினர் என்று கூறலாம். ஏனென்றால் கஜ்னவைடுகளின் காலத்தில் அரசர்க்கு அடுத்த படியாக இருந்த வசீர், ஊரியல் (சிவில்) துறைத் தலைவராக மட்டுமே விளங்கினர். ஆனல் நாயாபி இராணுவத் துறைக்கும் தலைமை தாங்கினர். நாயாபிக்கு அடுத்த படியாக மிக வல்லமையுள்ள அதிகாரியாக அரசாங்கத்தில் மிக முக்கியமான இடத்தை வகித்தவர் வசீர் என்பவராவார். அவர் மதத்துறைத் தலைவராகவும் நிதித் துறைத் தலைவராகவும் விளங்கிவந்தார். வசீருக்கு அடுத்த படியாக முக்கிய அதிகாரிகளாக விளங்கியவர்கள் அமைச்சர்களாவர். அவர்களுள் அமீரிஹஜீ:ப் (Amir-I-Hajib), மாலிக் உல் (Malik Ul) ஹீஜாப் ஆகிய அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் அரசருக்கு அருகாமையில் இருந்து கொண்டு பணிவிடை புரிந்து வந்தனர். சிலர் அரசரின் குடும்பப் பணிகளைக் கவனித்துக்கொண்டனர். சிலர் மாநில விவகாரங்களைக் கவனிக்கவோ அல்லது போர்ப் படைகளை ஒட்டிய காரியங்களை மேற்கொள்ளவோ அனுப்பப்பட்டனர். அமீரி ஹஜீப்புடன் அவரது பிரதிநிதியான நாயாபி அமீரி ஹஜீப் (Nayab-I-Amir-I-Hajib) என்பவர் இருந்தார். அவர் அரண்மனைக் காவலரின் தலைவராக விளங்கினர் என எலியட் தாசன் முதலியோரின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம்.

### திவானி அரீஸ்மமாலிக்

அமீரி ஹஜீப்புக்கு அடுத்தபடியாக வைத்து எண்ணப்படத்தக்கவர் திவானி அரீஸ்மமாலிக் (Diwan-I-Ariz-Mamalik) என்பவர் ஆவார். இவர் போர் வீரர் கணக்கெடுப்புத் துறைக்குத் தலைவராக இருந்தார். அரீஸ் என்பவர் ஒற்றுத் துறையை நன்கு கண்காணித்தலையும், படையில் ஒழுங்கு முறையையும், கட்டுப்பாட்டையும் நிலை நிறுத்துதலையும் செய்து வந்தார். அரீஸிற்குத்துணை அதிகாரி ஒருவர் இருந்தார். இவர்களேயன்றி முஷ்ரி:பி மமாலிக் (Mushrifi Mamalik) அஷ்ரீ:பிமமாலிக் (Ashrifi Mamalik) என்னும் அதிகாரிகளும் இருந்தனர்.

இந்தப் பதவிகளோடு சுல்தானுடைய ஆணைகளையெல்லாம் எழுதி அரசின் ஆவணங்களைப் பாதுகாத்து வந்த சதர் உல் முல்க் (Sadr-ul-Mulk) என்னும் பதவியும் சேர்க்கப்பட்டது.

நஸீருதின் காலத்தில் **சதருல்முல்க்** பதவியை வகித்தவரே **முஷ்ரி.:பிமமாலிக்** அல்லது **அஷ்ரீபிமமாலிக்** விசாரத் (wizarat) பதவியையும் வகித்தார் எனக் கூறப்படுகிறது.

### காஜிமமாலிக்

**காஜிமமாலிக்** (Gazi Mamalik) என்பவர் சமயச் சட்டப்படி நீதி வழங்குவதையும், சமயத்திற்கும், அறப்பணிகளுக்கும் என அர்ப்பணிக்கப்பட்ட நிலங்களையும், நிதிகளையும் நிருவகித்து வந்தார். **ஹாஜி**, (Haji) **கதீ.:ப்** (Katif) **இமாம்** (Imam) ஆகிய மூவரின் பணிகளையும் ஹாஜிகள் செய்து வந்தனர். மேலும் சட்டச் சம்பந்தமான எல்லாக் காரியங்களுக்கும் ஹாஜி தலைமை வகித்தார். முக்கியமான நகரங்களிலிருந்த சமயக் கல்லூரிகள் யாவும் ஹாஜிகளின் மேற்பார்வையில் இருந்தன. **அமீர்தாட்** என்பார் கிரிமினல் வழக்குகளை மட்டும் விசாரிக்கும் அதிகாரியாக இருந்திருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது. நாம் இது வரையில் பார்த்த அதிகாரிகள் மைய அரசின் அதிகாரிகளே. அவர்கள் மைய அரசு துறைகளை மட்டுமின்றி மாநில அரசு துறைகளையும் கண்காணித்தனர்.

### வசீர் பதவியின் தாழ்வு நிலை

அலாவுதீன் கில்ஜியினுடைய காலத்தில் வசீரைப் பற்றி அனைவரும் மறந்து விட்டனர். **மிகச் சாதாரணமான** மனிதர்கள் அப்பதவியில் அமர்த்தப்பட்டதால் அது மிகத் தாழ்ந்த நிலையை அடைந்து விட்டது. அப் பதவியின் செல்வாக்கு, சிறப்பு எல்லாம் குறையக் குறைய வெறும் நிதித்துறைத் தலைவராகவே அவர் மதிக்கப்பட்டார். பிற்காலத்தில் நிதித் துறை திவானி விசாரத் (Divan-I-wizarat) என அழைக்கப் பட்டது. வசீர் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். இல்ட்ட மிஷின் காலத்திலிருந்து படிப்படியாக அமைந்த அதிகாரிகளின் கூட்டமொன்று நாட்டில் ஏற்பட்டுவிட்டது. அதில் **நாயாபி வசீர்** (Nayabi wazir) **முஸ்த.:பி, முஷ்ரி.:பி, காஜி நாடார்,** (Gazi Naadar) **பால்லதார்** ஆகியோர் அடங்கி இருந்தனர்.

### புதிய பதவிகள்

டில்லிச் சுல்தான்களில் இல்ட்ட மிஷின் காலத்தில் நாயாபி வசீர் (Nayabi wazir) என்னும் புதிய பதவி தோற்று விக்கப்பட்டது. பல நாயாபி வசீர்கள் தெலிங்கானா, குஜராத், டில்லி போன்ற இடங்களுக்கு ஆளுநராக நியமிக்கப் பட்டனர். டில்லிச் சுல்தான்கள் நாட்டில் ஒடுகின்ற ஆறுகள்

பற்றி மிகுந்த அக்கறை கொண்டு, நதிகள், படகுகள் ஆகிய வற்றைக் கண்காணித்து வருதற் பொருட்டு ஷஹீனைகி பாஹர் என்னும் அதிகாரியை நியமித்தனர். ஒடங்களைப் பார்த்துக் கொள்வதும், சுங்க வரி வசூல் செய்வதும் அவரது முக்கிய கடமைகளாகும். ஜலாலுதின் கில்ஜியின் காலத்தில் திவானி வாஹீப் என்னும் புதிய பதவியும், அலாவுதீன் கில்ஜியின் காலத்தில் திவானி முஸ்தக் ராஜ் என்னும் புதிய பதவியும், முகம்மது பின் துக்ளக் காலத்தில் **திவானி, அமீரி, கோஹி** என்னும் புதிய பதவிகளும் ஏற்படுத்தப்பட்டன. இவர்களைத் தவிர சுல்தான்களின் குடும்பங்களோடு தொடர்பு கொண்ட வேறு சில அதிகாரிகளும் இருந்தனர்.

### மாநில அரசு

இனி மாநில அரசு துறைகள் பற்றிய செய்திகளைக் காண்போம். மைய அரசு விரிவடைந்ததற்கு ஏற்ப மாநில ஆட்சித் துறைகளும் விரிவடைந்தன. மாநில அரசுகளின் போக்கில் யதேச்சாதிகாரத் தன்மையும், மத்திய அரசாங்கக் கட்டுப்பாட்டை வெறுக்கும் இயல்புகளும் காணப்பட்டன. மாநிலத்தின் தலைவராக நயாப் (Nayab) என்னும் அதிகாரி விளங்கினர். அரசரின் பிரதிநிதியாக விளங்கிய அவர் ஜாஹீர் தாராகவும், உயர் குடி மக்களில் ஒருவராகவும் இருந்தார். அவரது ஆட்சிக்குட்பட்ட பெருநகரங்களில் கொத்தவால்கள் (Kotwal) கதி:புகள், காஜிகள் என்னும் அதிகாரிகள் ஆட்சி புரிந்தனர். அதனை மைய அரசின் சிறிய உருவம் (Miniature) எனக் கருதலாம். மைய அரசின் அரிஸ் (Ariz) கஜி:ப், முஷ்ரி:ப், முஸ்தா:பி போன்ற அதிகாரிகளின் பெயர்கள் மாநில அரசாங்கத்திலும் காணப்பட்டன.

### வருவாய்

ஹனபி முறையில் சுல்தானியர்களின் பொருளாதாரக் கொள்கை **அமைக்கப்பட்டது**. சுல்தானியர்களின் அரசுக்கு இருவகையில் வருவாய் கிட்டியது. அவ்விரு வகைகளைச் சமயச் சார்புடைய வருவாய்களென்றும், சமயச் சார்பிலா வருவாய் **களெனவும் அழைக்கலாம்**. சமயச் சார்புடைய வரிகள் **இஸ்லாமியரிடத்திருந்து** மட்டுமே வசூலிக்கப்பட்டன. **அவை களை ஜஹாத்** என அழைத்தனர். ஜஹாத் ஒரு பொருளுக்கு ஓராண்டு உரிமையாளராக இருந்தவரிடமிருந்து வசூலிக்கப்பட்டது. இவ்வரிக்கு எனத் தனிக் கருவூலம் இருந்ததாக அறிகிறோம். ஜிஸியா என்பது இந்துக்கள் மீது விதிக்கப்

பட்ட தலைவரியாகும். பெண்கள், குழந்தைகள், முனிவர்கள், இரவலர், கண் தெரியாதோர், உடல் ஊனமுற்றோர் ஆகியோரிடமிருந்து வரி வசூலிக்கப் படவில்லை. பெரோஷாவைத் தவிர மற்ற அரசர்கள் பிராமணர்களுக்கு வரி விலக்கு அளித்தனர் என்று கூறப்படுகிறது.

### வரி உயர்வு

அரசுக்கு நில வரியே மிக முக்கியமான வருவாயாக இருந்தது. வருவாய்த் துறை ஆட்சியில் முக்கிய மாறுதல்களைச் செய்தவர் அலாவுதீன் கில்ஜியே ஆவார். சமயத்தின் பெயரால் அனுபவிக்கப்பட்டு வந்த இனாம் நிலங்கள் போன்றவை சுல்தானால் திரும்பப் பெறப்பட்டன. சுல்தானின் பங்கு விளை பொருளில் பாதியாக உயர்ந்தது. வீட்டு வரி, மேய்ச்சல் நிலங்களுக்கான வரிகள் எனவும் சில வரிகள் விதிக்கப்பட்டன. அவருடைய கொள்கைகள் எல்லாச் சமயத்தவரும் வரிச் சுமையை அனுபவிக்க வேண்டும் என்பதே. இந்து உழவர்கள், கிராமத் தலைவர்கள் ஆகியோர் பெற்றிருந்த சலுகைகளனைத்தையும் அலாவுதீன் அகற்றினார். முகம்மது துக்ளக் தோஆப் பிரதேசத்தில் ஐம்பது சதவீதம் வரிகளை உயர்த்தினார். திவானி ஹோகி எனப்படும் புதிய விவசாயத் துறை நிறுவனம் ஒன்று இவர் காலத்தில் ஏற்பட்டது. நிலவரி மட்டுமின்றித் தண்ணீர்த் தீர்வை மூலமும் அரசுக்கு வருவாய் கிட்டியது. குடிமக்கள் மன்னர்க்கு அன்பளிப்புகள் அளித்தனர். யாராவது ஒருவர் சுல்தானைக் காண வேண்டுமாயின் அன்பளிப்போடு சென்று காண்பதே வழக்கமாகும். இம் முறை முகலாயர்கள் காலத்திலும் தொடர்ந்து நிலை பெற்றது.

### படை வீரர்கள்

மக்களின் விருப்பப்படி (எண்ணப்படி) உருவாக்கப்பட்ட அரசாகச் சுல்தானியர்கள் அரசு அமையவில்லை. எனவே அரசைக் காத்திட வலிமை மிக்க படை ஒன்று அவசியமாயிற்று. சில படை வீரர்கள் அரசரின் சொந்தப் பொறுப்பிலும் மற்றவர்கள் உயர் குடியினரின் கட்டுப்பாட்டின் கீழும் இருந்தனர். அரசரிடமிருந்த படையின் எண்ணிக்கையைக் காட்டிலும் உயர் குடியினரின் கட்டுப்பாட்டிலிருந்த படையின் எண்ணிக்கை மிகுதியாய் இருந்தது. எனவே அலாவுதீன் கில்ஜி நிலையான வலுவுள்ள படை அமைத்திட வழி கோலினார். இக் காலத்தில் படையில் வீரர்களைச் சேர்த்திட எவ்வித விதி

முறைகளும் வகுக்கப் படவில்லை. படையில் பல்வேறுபட்ட துருக்கிய இனத்தவரும், தாஜிகள், பெர்சியர்கள், மங்கோலியர்கள், ஆப்கானியர்கள், அராபியர்கள், அபிசினியர்கள், இந்திய முஸ்லிம்கள், இந்துக்கள் ஆகியோர் இருந்தனர். இவர்கள் எந்தவித விசுவாச அடிப்படையிலும் இல்லாது பணத்திற்காகவே பணி புரிந்தனர்.

### படைகள்

படையில் குதிரைப் படை, காலாட் படை, யானைப்படை ஆகியவை இருந்தன. காலாட் படைவீரர் பாயக்என அழைக்கப் பட்டனர். வில்லாளிகள் தனுக்குகள் என அழைக்கப்பட்டனர். சுல்தான்கள் யானைப் படையிலே தனிக் கவனம் செலுத்தினர். பால்பன் போன்ற சுல்தான்கள் ஐந்நூறு குதிரை வீரர்களுக்கு ஒரு யானை சமம் என்று கருதினர். படையின் அளவு காலந் தோறும் வேறுபட்டிருந்தது. படை வீரர்களுக்கு ஊதியமும், நிலப் பகுதிகள் ஒதுக்கீடும் இருந்தன.

### நீதித்துறை

சுல்தானியர்களின் காலத்தில் நீதித்துறை சீராகச் செம்மையாக அமைக்கப்படவில்லை. திவானி காஜி என்பவர் மூலம் சுல்தான் நீதி வழங்கினார். திவானி சியாசட் என்னும் தனித்துறை ஒன்றை முகம்மது துக்ளக் உருவாக்கினார் என்று இபின் பதூதா (Ibn Batuta) உரைக்கின்றார். ஒவ்வொரு நகரத்திலும் காஜி என்பவர் வழக்குகளைத் தீர்த்து வைத்ததோடு அனாதை இல்லங்கள், வசதியற்றோர் வாழுமிடங்கள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டார். மாநில ஆளுநர்கள் காஜியின் பணி சிறந்திட உதவி புரிய வேண்டியிருந்தது. காஜிகள் நேரடியாக மைய அரசினால் பதவியில் அமர்த்தப் பட்டமையால் அவர்கள் ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் இல்லை. சுல்தான்கள் சட்டத்தை மதித்துப் போற்றினர். சிறப்பாக முகமது பின் துக்ளக் போன்றவர்கள் மிகவும் மதித்து நடந்தனர் என இபின் பதூதாவின் மூலம் அறிகிறோம். வழக்கு மன்றத்தில் காஜி அமர்ந்தபோது சுல்தானுக்கு எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டியதில்லை என்னும் நிலை இருந்தது.

### தண்டனைகள்

நாட்டின் பாதுகாப்பில் சுல்தான் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். காவல்துறைப் பணிகளைக் கொத்தவால் கவனித்து வந்தார் என்று கண்டோம். குற்ற இயல் துறை

மிகவும் கடுமையானது. கடுந் தண்டனைகள் வழங்கப்பட்டன. கிராமப் புறங்களிலும் கொத்தவாலின் அதிகாரம் செல்லுபடியாயிற்று. குற்றவாளிகள் தெருக்களில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். முறையான சீரான ஆட்சிமுறை சுல்தானியர்களின் காலத்தில் இல்லை.

### பிரதேசங்கள்

அலாவுதீன் கில்ஜி வெற்றி கொண்டபோது மூவகைப் பிரதேசங்கள் இருந்தன. முதலாவது வகை ஏற்கெனவே இருந்தவை; அவை இக்தாஸ்கள் எனப்பட்டன. இரண்டாவது வகை புதிதாகக் கைப்பற்றப்பட்டவை ஆகும். மூன்றாவது வகைப் பிரதேசங்களில் இந்துக்கள் ஆளுநர்களாக இருந்தனர். சுல்தானிய அரசின் உச்சநிலையில் 23 பிரதேசங்கள் இருந்தன. ஒவ்வொரு பிரதேசத்திலும் ஷகிபி திவான் என அழைக்கப்பட்ட குவாஜா (Khwaja) என்பவர் இருந்தார். கணக்குகளை மேற்பார்வையிட்டுத் தலைநகருக்கு அனுப்பியவர் இவரே. குவாஜா ஆளுநருக்குக் கீழ்ப்பட்டவராக இருந்தாலும் ஆளுநருக்குத் தடையாக விளங்கியவர் இவரே. அரசரிடம் செய்யப்படும் குவாஜாவின் புகார் ஆளுநருக்குப் பதவி இழப்பைக்கூட உருவாக்கும் என்று கூறப்படுகிறது.

### ஆட்சிப் பிரிவு

பதின்மூன்றாம் நூற்றாண்டில் இக்தா என்பது ஆட்சித்துறையில் அடிப்படையான ஒரு பிரிவாக இருந்தது. ஆனால் பதினான்காம் நூற்றாண்டில் பிரதேசங்கள் ஷிக்குகளாகப் பிரிக்கப்பட்டன. எல்லா இடங்களிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. தென்னிந்தியா நான்கு ஷிக்குகளாக முகமது துக்ளக்கினால் பிரிக்கப்பட்டது. ஷிக்குகளின் தலைவர் ஷிக்தார் ஆவார். இவர் இராணுவத் துறை அதிகாரி. தன் ஆட்சிப் பிரதேசத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நிறுத்துதல் இவரது பணியாக இருந்தது.

### கிராமம்

ஷிக்குகளுக்கு அடுத்த பிரிவு பர்கானு என மூர்லாண்டு உரைக்கிறார். அதற்கு அடுத்த பிரிவு கிராமம் ஆகும். கிராமங்களின் ஆட்சி இந்துக்களின் பொறுப்பில் இருந்தது என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்து ஒன்று இருந்தது. வழக்குகள் அங்கே தீர்த்துக்கொள்ளப்

பட்டன. முக்காடம் (Muggadam) என்னும் அதிகாரிகள் கிராமங்களில் வரி வசூல் செய்தனர். சௌத்ரி என்பவர் பொருளாளராகவும் ஆவணக் காப்பாளராகவும் பணியாற்றினர். படை வீரர்களுக்கும், உயர் குடியினருக்கும் நிலங்கள் மானியங்களாக வழங்கப்பட்டன. நிலையில்லாப் படையைச் சார்ந்தவர்கள் ஊதியம் பெற்றனர். மானியங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டன. தணிக்கை செய்யப்படுவதற்காகக் கணக்குகளைக் கருவூலத்தில் ஒப்படைக்கும்படிக் கட்டளையிடப்பட்டது. கணக்குகளைத் தணிக்கை செய்யும் பணி கருவூலத்தில் நடைபெற்றது. மிகவும் கவனமாகத் தணிக்கை செய்யப்பட்ட பின்னரும் ஆட்சித் துறையில் ஊழல்கள் பல இருந்தன. கையூட்டுப் பெற்று இல்லாததை இருப்பதாகக் காட்டும் அதிகாரிகள் பலர் இருந்தமையால் படைகளின் வலிமையும் பொது ஆட்சித் துறையின் திறமையும் குறையலாயின.

## தேசிய உணர்வு

டில்லிச் சுல்தானிய அரசின் ஆட்சிக் காலத்தில் நாட்டின் நிலைமையும் நாட்டு மக்களின் நிலைமையும் செல்வாக்கு மிக்கனவாகவே இருந்தன. செழிப்பான நிலைமை எங்குப் பார்த்தாலும் காணப்பட்டது. மக்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள் யாவற்றையும் தட்டின்றிப் பெறக் கூடிய நிலை இருந்தது. அரசர்களின் அடக்கு முறைகளாலும், உள்நாட்டுத் தொல்லைகளாலும், இந்திய நாடு அலைக்கழிக்கப்பட்ட போதும் மக்கள் ஓரளவு செல்வாக்குடன் வாழ்ந்தனர். முற்றிலும் யதேச்சாதிகாரத் தன்மை வாய்ந்த அரசின் கீழ் வாழ்ந்த மக்களிடையே தேசிய உணர்வோ ஒற்றுமையோ நிலவவில்லை. டெல்லிச் சுல்தானிய அரசு இராணுவ ஆட்சியே ஆகும். மக்களிடமிருந்து பண வசூலைப் பெரிதெனக் கருதியதே தவிர மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்தில் அக்கறை ஏதும் காட்டவில்லை. முஸ்லிம் அல்லாதார் எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருந்தும் அவர்களின் நலன் புறக்கணிக்கப்பட்டது; எனவே சுல்தானின் நிலை வலுவுள்ளதாக இல்லை. இதன் விளைவு அடிக்கடி புரட்சிகள் ஏற்பட்டதே ஆகும்.

## முடிவுரை

1398-ஆம் ஆண்டில் தைமூரின் படை எடுப்பு, துக்ளக்குகளின் வீழ்ச்சி, ஆகியவை டில்லிச் சுல்தானிய வரலாற்றில் ஒரு

குழப்பமான காலத்தைத் தோற்றுவித்தன. மாநிலங்கள் தம்மை ஆண்ட அரசப் பிரதிநிதிகளின் தலைமையின் கீழ்ச் சுயேச்சை பெற்றுச் சுதந்திர நாடுகளாக மாறி ஒன்றுக்கொன்று போரிட்டுக் கொள்ளத் தலைப்பட்டன. இதன் விளைவாக அரசியல் இறைமையானது (sovereignty) இடம் மாறத் தொடங்கியது.

# 23. உள்ளூர் அல்லது வட்டார நாடுகளின் ஆட்சி அமைப்பு முறை

நாம் சென்ற அத்தியாயத்தில் இந்திய வரலாற்றில் ஆட்சி அமைப்புத் துறையில் சுல்தானியர்கள் ஆற்றிய பங்கு குறித்தும், ஆட்சி அமைப்பு முறைகள் குறித்தும் கண்டோம். இந்திய ஆட்சி அமைப்புத் துறை வளர்ச்சியானது ஒவ்வொரு அரசர்கள் காலத்தும் மாறி மாறி வந்துள்ளதைப் பார்க்கிறோம். இதற்குக் காரணம் அவர்கள் ஒவ்வொருவரும் வாழ்ந்த காலத்தின் சூழ்நிலையே ஆகும். தைமூரின் படையெடுப்பும், துக்ளக்குகளின் வீழ்ச்சியும் ஒரு குழப்பமான காலத்தைத் தோற்றுவித்துவிட்டுச் சென்றன என்றும் கண்டோம்.

## பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின்

பதினைந்தாம் நூற்றாண்டானது சிறந்ததோர் எதிர் காலத்தை உருவாக்கக் கூடிய போராற்றல்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. மேலும் பதினாறும் நூற்றாண்டில் சமுதாயமானது நன்கு நிறுவப்படுவதற்குப் பதினைந்தாம் நூற்றாண்டுதான் அடிப்படையாக அமைந்தது. பதினைந்தாம் நூற்றாண்டில் பல குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் ஏற்பட்டன. அரசியல் சக்திகள், புதிய முறையில் ஒன்றோடொன்று கலக்க ஆரம்பித்ததன் விளைவாகப் பல புதிய நாடுகள் எழுந்தன. டில்லிச் சுல்தானிய அரசு என அழைக்கப்பட்டு வந்த அரசு மாண்டு ஒழிந்து போயிற்று. சிந்து, காஷ்மீர், மேவார், மாளவம், குஜராத், காண்டேஷ், ஜான்பூர், வங்காளம், ஆகிய நாடுகள் சுயேச்சை பெற்ற நாடுகளாக மாறின. டில்லிச் சுல்தானிய அரசின் சாயை பெற்று அதற்குப் பின் ஆட்சி செலுத்திய அரசு முன் போலப் பரந்த பகுதிகளைக் கொண்டு ஆட்சி நடத்துவதற்குப் பதிலாக டில்லியைச் சுற்றியிருந்த பகுதிகளுக்கு மட்டுமே உரிமை கொண்டாட வேண்டிய அளவிற்கு நிலைமை ஏற்

பட்டது. அவர்கள் லோடிகள் எனப்படுவோரிடத்தில் ஆட்சிப் பகுதிகளை விட்டு விட்டுச் சென்றனர். லோடிகளின் ஆட்சியின் கீழ் பஞ்சாப், இன்றைய மத்தியப் பிரதேசம், பீகாரின் ஒரு சில பகுதிகள் ஆகியவை அடங்கியிருந்தன. நாட்டின் மற்ற பகுதிகள் சின்னஞ் சிறு நாடுகளாகப் பிரிந்து ஒற்றுமையின்றிப் பொறுமையும் பூசலும் கொண்டு விளங்கின. வலிமை மிக்க பரந்த நிலையான முடியரசுகள் இல்லாமலிருந்தன.

### மக்கள் வாழ்க்கை முறை மாறுதல்

ரஷ்புரூக் வில்லியம்ஸ் என்பார் சமயச் சார்புகளை ஒட்டியே அரசியல் நாடுகளிடையே தொடர்புகள் ஏற்பட்டன என்றும், அதற்கு ஏற்ப முஸ்லிம் நாடுகள் என்றும், இந்துக்கள் நாடுகள் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிந்து இருந்தன என்றும், அப்பிரிவினையே பதினைந்தாம் நூற்றாண்டின் குழப்பத்திற்கும், போராட்டத்திற்கும் காரணமாயிருந்தது என்றும் கூறுகின்றார். ஆனால் அவருடைய கூற்றுச் சரியானது அன்று என்றே அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர். இக் கால இந்திய வரலாற்றில் முதன் முதலாக, இதுவரை இந்துக்கள் முஸ்லிம் ஆட்சியிலிருந்த நிலை மாறி முஸ்லிம்கள் இந்துக்கள் ஆட்சியின் கீழ் வாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

### ஒத்துப் போக வேண்டிய நிலை

டில்லிச் சுல்தானிய ஆட்சியின் போது இந்து ஒருவர் அமைச்சர் பதவியில் அமர்த்தப்பட்ட ஒரு நிகழ்ச்சியை நாம் காண முடியாது. ஆனால் டில்லிச் சுல்தானிய அரசு சிதைவுற்றுப், பல சிறு நாடுகளாகப் பிரிந்துவிட்ட காரணத்தால் புதிய முறையில் இந்துக்களோடு தொடர்பு கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனவே முஸ்லிம் மன்னர்களில் சிலர் இந்துக்களோடு ஒத்துப் போகும் கொள்கையைச் சிறப்பான முறையில் தாமாகவே கடைப்பிடிக்கத் தொடங்கிப் பொது நன்மையை எய்துவதற்காக ஒரு புதிய மாறுபட்ட செயல் முறையை ஆட்சிக் கலையில் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தனர்.

### சமயப் பொறை

இக் காலத்தே வாழ்ந்த மன்னர்களில் ஒரு சிலர் அக்பர் காலத்தில் பின்னால் ஏற்பட்ட நடைமுறைகளுக்கு அடிப்படையாக இந்துக்களை அரசின் பொதுப் பதவிகளில் நியமித்தனர்.

இந்துக்களைச் சமாதானப் படுத்தப் புதியதொரு சமயக் கொள்கையைக் கடைப்பிடித்தனர். முதன் முதலாகக் குர்ஆனின் கட்டளைகளுக்கு விரோதமாகச் சமயப் பொறைக் கொள்கையானது ஒரு சில தாராள குணம் படைத்த முற்போக்கு வாதிகளான மன்னர்களால் கடைப்பிடிக்கப் பட்டுப் புதியதொரு சகாப்தத்தைத் தோன்றச் செய்தது. தனிப்பட்ட ஒரு சில மன்னர்களே அன்றி வங்காளத்தை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் அனைவருமே இந்துக் குடி மக்களிடம் சமயப் பொறையுடன் நடந்து கொண்டனர். ஆனாலும் பெரும்பான்மையான முஸ்லிம் அரசர்கள் இந்துக்களைத் துன்புறுத்துபவர்களாகவே இருந்தனர்.

### திருமண உறவு

இக்காலத்தே ஓங்கி நின்ற புதிய மனப்பான்மைக்கு ஏற்ப முஸ்லிம் மன்னர்கள் பலர் அரசியல் காரணங்களுக்காக இந்து இளவரசிகளைத் திருமணம் செய்து கொண்டனர் என அறிகிறோம். அத்தகைய திருமண ஒப்பந்தங்கள் வட இந்தியாவை விடத் தென்னிந்தியாவில்தான் அதிகமாக நடைபெற்றன. சுருக்கமாகச் சொல்லப் போனால் இந்துக்களும், முஸ்லிம்களும் ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வளர ஆரம்பித்தது இக் காலத்தில்தான் என்று சொல்லவேண்டும்.

### நாடுகளின் பிரிவு

இக் காலத்திலிருந்த நாடுகளை இரு பகுதிகளாக டில்லிப் பேரரசு நாடுகளென்றும், உள்ளூர் அல்லது வட்டார நாடுகள் என்றும் பிரிக்கலாம். டில்லிப் பேரரசு நாடுகளில் இந்துக்கள் முற்றிலும் விலக்கப்பட்டு முஸ்லிம்கள் மட்டுமே ஆட்சியின் எல்லாத் துறைகளிலும் அமர்த்தப்பட்டனர். உள்ளூர் அல்லது வட்டார நாடுகளை இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இருவகை மன்னர்களும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆண்டு வந்தனர். டில்லிப் பேரரசு நாடுகள் சையதுகள், லோடிகள், சூர்கள் ஆகியோரின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தன. நிறுவன அமைப்பைப் பொறுத்த வரையில் இவ்விரு வகை நாட்டுத் தொகுதிகளும் ஒன்றை ஒன்று ஒத்திருந்தன. இவைகளின் அரசாங்க நிறுவனங்களும் ஒரே முறையில் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றின் கருப் பொருள்கள் அநேகமாக ஒன்றாகவே இருந்தன. அவைகள் தொன்று தொட்டு நிலவி வந்துள்ள மரபுகளையும், நிறுவனங்களையும் பின்பற்றின.

டில்லிச் சுல்தானியர் காலத்து இந்தியாவில் வாழ்ந்த சமுதாயத்தின் வாழ்க்கை நிலை குறுகிய மனப்பான்மை கொண்டதாய், வைதீகம் நிறைந்ததாய், மனநிறைவு கொண்டதாய் விளங்கிற்று.

நாம் இவ் விருவகை நாடுகளின் அரசாங்க அமைப்புகளைப் பற்றி அறிய வேண்டுவது அவசியமாகும். இந்த அத்தியாயத்தில் உள்ளூர் அல்லது வட்டார நாடுகளில் இருந்த நிறுவனங்களைப் பற்றிக் காண்போம்.

## இறைமை

அரசருடைய இறைமையை வலியுறுத்துவதற்குச் சமய இயக்கங்கள் துணைபுரிந்தன. சமுதாயம், சமயம் ஆகிய துறைகளில் அமைந்திருந்த நிறுவனங்கள் அனைத்தையும் சுன்னி சமயமானது பிணைத்து வைத்திருந்தது. அரசர் தமது முக்கியத்துவத்தை உணர்ந்து பல்வேறு சமயங்களையும், சட்டங்களையும் பின்பற்றி வாழ்ந்து வந்த சமுதாய அமைப்பில் தமக்குப் பெரியதொரு முக்கியத்துவமும் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டார். சமயத் துறையில் ஏற்பட்ட விளைவுகளின் விளைவாகத் தமது சொந்த விருப்பங்களை வலுப்புறுத்தித் தற்பெருமையை நிலை நாட்டுவதே அரசரின் பணியாயிற்று. அது அரசரின் அதிகாரத்திற்குப் பக்கபலமாயிருந்தது. சமயத் துறையிலும், சமுதாயத் துறையிலும் ஏற்பட்ட பிளவு என்னும் அபாயத்தைத் தடுக்க, அதுவரையில் எல்லாம் வல்லவர்களாயிருந்த சமயத் தலைவர்களும், சமயக் காவலர்களும் சமுதாயத்திலும், சமயத்திலும் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்த அரசரின் உதவியை நாடினர். இந்தியாவிலிருந்த முஸ்லிம் சமுதாயத்தின் சம நிலையையும், ஒற்றுமையையும் அரசர் ஒருவராலேதான் நிலை நாட்டமுடியும் என்று நம்பினார்கள். சமுதாயக் கட்டுக் கோப்பையும், சமய ஒற்றுமையையும் நிலைநாட்ட அரசரின் வல்லமையை அவர்கள் நாடியதன் விளைவாக அரசரின் கௌரவம் உயர்ந்தது. குர்ஆனின் கட்டளைகளாலும், உலேமாக்களின் ஆணைகளாலும் கட்டுப்படுத்தப்படாமல் நாட்டின் நலனை வளர்ப்பதற்கு ஏது சிறந்ததோ அதைக் கடைப் பிடித்தனர். சட்டம், சமயம் இவற்றின் காவலர்களாய்த் திகழ்ந்த கூட்டத்தாரின் தனி ஓர் ஆதிக்கம் நிலவிய இடத்தில் அரசரின் இறைமையான்து (sovereignty) நன்கு நிலை நாட்டப்பட்டு விட்டது. மதக் குருமார்களின் ஆதிக்கத்திலிருந்து பெருமளவிற்குத் தம்மை விடுவித்துக் கொண்ட அரசர் இறைமை என்று பேசப் படுகின்ற அரசியல் அதிகாரக்

குறிக்கோளை அடைந்து வந்தார். அரசாங்கத் துறையில் புதிய கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலமும், ஆட்சித் துறையிலும் அதிகாரச் செறிவை ஏற்படுத்தும் தமது அதிகாரக் குறிக்கோளை எய்தினர்.

### அரசரின் பணிகள்

அரசரே மக்களின் உண்மையான தலைவராகத் திகழ்ந்தார். அரசர் விரும்பினால் எந்த மக்களுடைய சொத்தையும், நிலத்தையும் அவர்களைக் கேளாமலேயே எடுத்துக் கொள்ளும் உரிமை பெற்றிருந்தார். நாட்டிலுள்ள நிலம், நீர் அனைத்துக்கும் அரசரே தலைவராக விளங்கினர். சமயக் காவலர் ஆயினும் பொதுத் தொழுகையைத் தலைமை தாங்கி நடத்துபவராயும், சிலை வணக்கத்தை வேறுப்பவராயும் விளங்கிய அரசரின் நேரடியான கட்டுப் பாட்டிற்குள் அரசாங்கம் இருந்தது. அவர் பெயரளவில் மட்டுமின்றி உண்மையிலேயே நாட்டைக் கட்டி ஆண்டு வந்தார். நாட்டின் படைகளுக்கு அரசரே தலைவர். தளபதிகள் போர்க்களத்தில் மாண்ட போதும், போர் முனையில் தோல்வியுற்ற போதும் அரசரே தலைமை தாங்கிப் படையை நடத்திச் சென்றார். ஆட்சித் துறை பற்றிய கட்டளைகளை அவ்வப்போது பிறப்பித்துக் கொண்டிருந்தார். நீதி, போலீஸ், இராணுவம், சமயம் ஆகிய துறைகள் பற்றிய ஆட்சி நுணுக்கங்களைக் கட்டுப் படுத்தி வந்தவர் மன்னரேயாவர். அவரது அமைச்சர்களுக்குச் சொந்தமாக எந்த அதிகாரமும் தரப்படவில்லை. அவர்கள் மன்னரின் கட்டளைகளை நிறைவேற்றுவதையும், ஆட்சித் துறையைக் கண்காணிப்பதையும் கடமையாகக் கொண்டனர்.

### நீதி

நீதிக்கும், பெருமைக்கும் அரசர் ஊற்றுகத் திகழ்ந்தார். ஒழுங்குமுறை (Moral Regulations) பற்றிய விவகாரங்களில் அவரது தீர்ப்பே முடிவானதாயும், எல்லாரையும் கட்டுப் படுத்தக் கூடியதாயும் இருந்தது. நீதித் துறையைப் பொருத்த மட்டில் அரசரே முடிவான அதிகாரத்தை உடையவராய் இருந்த போதிலும், உண்மையில் சட்ட விளக்கம் செய்பவர்களின் துணைக் கொண்டுதான் அவர் தமது இறுதித் தீர்ப்புகளை வழங்கினர். அதைப் போலவே நீதி மன்றங்களில்கூடத் தம்மால் ஆக்கப்படாத சட்டங்களின்படியேயும் தீர்ப்பு வழங்கினர்.

தடைகள்

ஆட்சித் துறை பற்றிய செயல்களில் வரம்பற்ற வல்லாட்சி செலுத்தக் கூடிய நிலையில் அரசர் இருந்தாலும், முழு வல்லாட்சியைச் செலுத்துவதினின்று அவரைத் தடை செய்ய அவரது அதிகாரத்தின் மீது தடைகள் இல்லாமல் இல்லை. மதச் சம்பந்தமான காரியங்களில் அரசர்க்கென்று தனிப்பட்ட அதிகாரம் இல்லை. உலோமாக்களும், காஜீகளும், சமயச் சம்பந்தமான காரியங்களிலும் தனிப்பட்ட அதிகாரத்தைச் செலுத்தித் தாங்கள் ஆற்றுகின்ற செயல்களுக்கு அரசரிடம் பதில் ஏதும் கூற வேண்டி இருக்கவில்லை. கொள்கை அளவில் அரசர் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்டவரே. சட்டத்தைவிட உயர்ந்தவராக, மேம்பட்டவராக அரசர் கருதப் படவில்லை. சட்டத்தைப் புறக்கணித்தபோது அரசராயிருந் தாலும்கூடச் சாதாரண குற்றவாளிகளைப் போல நடத்தப் பட்ட நிகழ்ச்சிகள் பலவற்றை நாம் வரலாற்றிலே காண கிறோம். சட்டக் காவலர்கள் தங்களுக்கு மேல் எந்த அதிகா ரத்தையும் ஒப்புக்கொள்வதில்லை என்னும் ஒரு நிலைமையின் விளைவாக நாட்டில் ஒன்றுக்கொன்று சமமான இரு அதிகாரங் கள் தழைத்தன. அது ஒப்பற்ற தனித்தலைமையை அதாவது இறைமை என்று பேசப்படுவதை அரசர் அடைய இயலாத வகையில் செய்யும் தடையாக இருந்தது. சமுதாய நீதி (Social Justice) எங்ஙனம் பெறப்பெற்றது என்பதற்குச் சான்று இது. இதனையே தடைகளும், சமநிலையும் (Checks and Balances) என்று குறிப்பிடுகின்றனர்.

தடை

மேற்கூறிய தடை தவிர மற்றொரு தடையும் இருந்தது. அரசன் தான் அடைந்த ஓர் உரிமையானது செல்லுபடியாக வேண்டுமானாலும் மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் படவேண்டுமானாலும் சமயத்தின் சம்மதத்தைப் பெறவேண் டும் என்பது கட்டாயமாகிவிட்டது. கதீஃப்புகளால் குத்பா ஓதப்பட வேண்டுவது அவசியம் எனக் கருதப்பட்டது. அரசரொருவர் அரியாசனத்தைத் தமக்கே பெறவேண்டுமா னால், அதற்குக் குத்பா ஓதப்படுவதென்பது ஒரு தடுக்க முடி யாத சடங்காகிவிட்டது. இந்தக் காலப் பகுதி முழுவதையும் ஒன்றாக எடுத்துக்கொண்டு பார்க்கும்போது சமய விற்பன்னர் களும், சட்ட அறிஞர்களும் மன்னர்கள் மீது ஏராளமான ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள் என்பதையும் அரசர்களின் அதிகாரச் செயல் முறையைத் தங்களது விருப்பப்படிக் கட்டுப்

படுத்தி வந்தனர் என்பதையும் அறிகிறோம். சமயக் குருமார்களை எதிர்த்த மன்னர்களும் இருந்தனர் என்னும் செய்தியும் கிடைத்துள்ளது.

### வசீரும் பேஷ்வாவும்

இனி அரசர்க்குதவிய ஆட்சித்துறை நிறுவனங்களில் முதலில் மைய அரசில் இருந்தவற்றை அறிந்துகொள்வோம். அரசருக்கு ஆலோசனை கூற அமைச்சர்கள் பலர் இருந்தனர். அவர்களுக்குத் தலைவராகத் தலைமை அமைச்சர் ஒருவரிருந்தார். அவர் வசீர் என வட இந்தியாவிலும், பேஷ்வா எனத் தென்னிந்தியாவிலும் அழைக்கப்பட்டார். சிறப்பாக பீஜப்பூர், கோல்கொண்டா, அகமத் நகர் முதலிய நாடுகளில் பேஷ்வா என்றும், குஜராத், காஷ்மீர், வங்காளம் போன்ற இடங்களில் வசீர் எனவும் அழைக்கப்பட்டார். தந்திரமாக நடந்து கொள்வதிலும், சதி வேலைகளில் ஈடுபட்டு அரசருடைய செல்வாக்கைப் பெறுவதிலும் வல்லவராய் யார் விளங்கினாரோ அவரே தலைமை அமைச்சராக (பிரதமர்) ஆக முடிந்தது. தென்னிந்திய நாடுகளில் பேஷ்வா தானைத் தலைவராகவும் பணியாற்றினர். மன்னரொருவர் உயிரோடு வாழ்ந்த போதும், அவர் இறந்த பின்பும் வசீர் மிக மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தார். பொதுவாக மற்றவர்களைக் காட்டிலும் அறிவிலும், ஆற்றலிலும் சிறந்தவராய்த், திறமை மிக்க தளபதியாய்ச், சாமர்த்தியம் நிறைந்த ராஜதந்திரியாய், நல்ல நிர்வாகியாய் இருந்தார். வாரிசு உரிமைப் போராட்டங்களைத் தவிர்ப்பதற்காகச் சில மன்னர்கள் சற்று வழக்கத்திற்கு மாறாகத் தங்கள் உடன்பிறந்தோர்கள் அல்லது மைந்தர்களைத் தலைமை அமைச்சர்களாக வைத்துக்கொள்வது வழக்கம். பின்னர் அப் பிரதமர்களே ஆட்சிக்கு வருவதும் வழக்கம். வசீர் வயது வராத அரச பதவிக்கு வர இருக்கின்ற இளைஞர்க்குப் பதிலாக இளவரசின் பாதுகாவலராக இருந்துகொண்டு செயலாற்றி வந்த வேளைகளில் அவர் **வக்கீல்** எனவும் அழைக்கப்பட்டார். வசீருக்கு இணையான பதவியாக **வக்கீலுஸ்** என்னும் பதவி கூறப்படுகிறது.

### சேனாதிபதி

வசீருக்கு அடுத்தபடியாக அரசில் குறிப்பிடத் தகுந்தவர் சேனாதிபதியாவார். பொதுவாகச் சேனாதிபதியின் பதவியானது வேறொரு அமைச்சரின் பணியோடு பொருத்தப்பட்டிருப்பது வழக்கம். ஏனென்றால் அக் காலத்தில் ஒவ்வொரு

பொதுத்துறை அதிகாரியும், பொதுத்துறை, இராணுவத் துறை எனப் பணிகள் சரிவரப் பிரிக்கப்படாத காரணத்தால் ஒவ்வொரு இராணுவத்துறை அதிகாரியாகவும் பணியாற்றினர். சேனாதிபதி என்னும் அதிகாரியோடு அரண்மனைச் சேவகர்களின் தலைவர் ஒருவர் இருந்தார். அரசரின் மெய்க் காப்பாளர்க்கு அவரே தலைமை பூண்டு விளங்கினார். பெரும் பொறுப்பும், பெருஞ்சிறப்பும் கொண்ட அவரிடம் அரச குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது. அவர் மீர் நௌபத் அல்லது சரி நௌபத் என்று அழைக்கப்பட்டார். அவரிடத்தில் உயர் குடியினரின் பிள்ளைகளிலிருந்து பொறுக்கி எடுத்திட்ட இளைஞர்களும், பெர்தேதார்கள் அல்லது குடும்பக் காவலர்கள் என்னும் அதிகாரிகளும் இருந்தனர்.

### அமீர் ஜின்லா

அமைச்சர்களுக்குள்ளேயே மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தவர் அமீர் ஜின்லா என அழைக்கப்பட்ட பொருளாதார அமைச்சர் ஆவார். சடங்குகளுக்கெல்லாம் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் இருந்தார். அவருக்கு வெவ்வேறு பெயர்களிருந்தன. காஷ்மீரில் அமீரி தூர் என்றும், அகமது நகரில் கவந்தி மஜ்லிஸ் என்றும், பாமினிப் பேரரசில் வசீரி அஸ்ரப் என்றும் அவர் அழைக்கப்பட்டார். சமயச் சம்பந்தமான செயல்களைக் கவனிப்பதற்கென அரசாங்கத் துறை ஒன்றும் இருந்திருப்பதாகத் தெரிகிறது. அத்தகைய துறையைப் பற்றியோ அல்லது அதன் நடவடிக்கைகள் பற்றியோ திட்டவட்டமான குறிப்புகள் காணப்படவில்லை. தென் நாடுகளில் சித்நதீஸ் அல்லது செயலாளர் என அழைக்கப்பட்ட உயர் அதிகாரி ஒருவர் அமைச்சர்க்குரிய மேலான இடத்தில் இருந்திருக்கக்கூடும் என எண்ணப்படுகிறது.

### எட்டு அமைச்சர்கள்

இந் நூற்றாண்டுக் காலத்தில் தென்னாடுகளில் எட்டு அமைச்சர்களடங்கிய அவை ஒன்று இருந்து வந்திருக்கிறது. சர்உல்ஸ்லி ஹேக் என்பார் எட்டு அமைச்சர்களின் பெயர்களைப் பின் வருமாறு குறித்துள்ளார்.

i. வக்கிலுஸ் சுல்தானத் (Wakil-us-Sultant)—நாட்டின் துணைத் தலைவர்.

ii. வஸீரி குல் (Waziri-Kull)—மேற்பார்வையிடும் அமைச்சர்.

iii. *அமீரி ஜீம்லா* (Amiri-Jumla)—*நிதி அமைச்சர்.*

iv. *வஸீரி அஷ்ரா:ப்* (Waziri-Ashraf)—*வெளிநாட்டு விவகார அமைச்சரும், சடங்குகளின் தலைவரும்.*

v. *நஸீர்* (Nazir)—*பொருளாதாரத் துணை அமைச்சர்.*

vi. *பேஷ்வா* (Peshwa)—*நாட்டின் துணைத் தலைவரோடு சேர்ந்து நின்று பணியாற்றியவர். பிற்காலத்தே அப் பதவியும் இவருடையதும் வேறுபாடு இன்றி ஒன்றுகப் பிணைந்து விட்டன.*

vii. *கொத்வால்* (Kotwal)—*முக்கியப் போலீஸ் அதிகாரியும், தலைநகரின் மாஜிஸ்திரேட்டுமாயிருந்தவர்.*

viii. *சதரி ஜஹான்* (Sadri-Jahan)—*முக்கிய நீதிபதியும், மதம், மத மானியம் பற்றிய அமைச்சருமாய் விளங்கியவர்.*

*மாநிலங்கள்*

நாடுகள் பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தன. ஒவ்வொரு மாநிலத்தையும் ஒவ்வொரு ஆளுநர் (Governor) அல்லது அரசப் பிரதிநிதி (Viceroy) கண்காணித்து வந்தார். பாமினி நாட்டிலிருந்த மாநிலங்கள் தர:ப்புகள் என அழைக்கப்பட்டன. நாடுகளின் பரப்பளவிற்கேற்ப மாநிலங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. மாநிலங்கள் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் பல நகரங்களும், கிராமங்களும் அடங்கியிருந்தன. கிராமங்களுக்கெனத் தனிப்பட்ட அதிகாரிகளும், நகரங்களுக்கெனத் தனிப்பட்ட அதிகாரிகளும் இருந்தனர். நகரங்களுக்கு எனக்கொத்தவால்கள் என்னும் தனிப்பட்ட அதிகாரிகளும், கிராமங்களுக்கெனக் குல்கர்னிகர், ஹவில்தார்கள் என்னும் அதிகாரிகளும் இருந்தனர்.

*ஊரியல் அரசு*

ஊரியல் அரசை மாநிலங்களிலும், மாவட்டங்களிலும் அந்தந்தப் பகுதிகளில் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டிருந்த அதிகாரிகளும், நகரங்களில் கொத்தவால்களும் காஜிகளும், கிராமங்களில் ஹவில்தார்களும் நடத்தி வந்தனர். ஆளுநரிலிருந்து ஹவில்தார் வரை அரசின் ஊரியல் அதிகாரிகள் இராணுவ அதிகாரிகளாகவே இருந்தனர். ஆளுநர்கள் அவரவரது மாநிலங்களில் வரி வசூல் செய்து அதில் வந்த

வருமானத்தில் ஒரு பகுதியை ஊரியல் அரசுகளின் செலவுகளுக்காகவும், மற்றொரு பகுதியைத் தமது அரண்மனைச் செலவுகளுக்கென்றும், மூன்றாவது பகுதியைக் குதிரைப் படைவீரர்களுக்காகவும் ஒதுக்கி வைத்தனர். உள்நாட்டு அமைதியைப் பாதுகாக்கச் சில அரசர்கள் தனிப் போலீஸ் படையை நிறுவினர். போலீஸ் அதிகாரிகள் கடமை தவறினால் அரசு பொறுப்பேற்றுக் கொண்டது. மாநிலங்களை ஆண்டு வந்த ஆளுநர்கள் திருடர்களையும், வழிப்பறி செய்வோரையும் அறவே ஒழித்திட முயன்றனர்.

### நீதித் துறை

நீதித் துறையைப் பொருத்த மட்டில் குடி மக்களுக்கு நீதி வழங்குவதில் அரசர்கள் அளவுக்கு மீறிய அக்கறை காட்டினர். தமது ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் யாவற்றிலும் கண்டிப்பான முறையில் நீதி வழங்கப்பட வேண்டும் என்பதற்காகப் பல சட்ட திட்டங்களை இயற்றியும் ஏழை என்றும், பணக்காரர் என்றும் பாராது, வலியோன் என்றும் எளியோன் என்றும் பாகுபாடு செய்யாது ஓரவஞ்சனையற்ற நீதியை யாவருக்கும் சமமாக வழங்குமாறு நீதிபதிகளையும் உள்ளூர் ஆட்சியாளர்களையும் வலியுறுத்தினார்கள். தனிப்பட்ட அன்பின் காரணமாகவோ, வேறு அக்கறையினாலோ நீதிபதிகளில் யாராவது நீதியினின்றும் சிறிதேனும் வழுவுவதாகத் தெரிந்தால் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

### மருத்துவமனை

ஒரு சில அரசர்கள் குடிமக்களின் ஒழுக்க நலனைப் பேணுவதில் பெரிதும் அக்கறை காட்டினர். வறியோர்க்கென மருத்துவமனைகளைக் கட்டி அங்கு இந்துச் சமயத்தைச் சார்ந்த மருத்துவர்களை மட்டுமின்றி, முஸ்லிம் மருத்துவர்களையும் நியமித்துச் செலவுகளைச் சமாளிக்க நிலங்களை மானியங்களாக வழங்கினர். சில மன்னர்கள் யாவர்க்கும் சமநீதி வழங்கப்படத் தனிப்பட்ட சட்டங்களின் தொகுதி (Code) ஒன்றை ஏற்படுத்தி அதைச் செப்பேடுகளில் பொறிக்கச் செய்து பொதுச் சந்தைகளிலும் நீதி மன்றங்களிலும் அவற்றை வைக்குமாறு செய்தனர்.

### வரம்பிலா ஆட்சித் தடை

முஸ்லிம் மன்னர்கள் கொள்கை அளவில் நாட்டிலுள்ள நிலம், நீர், உடைமை ஆகிய எல்லாவற்றிற்கும் அதிபதிகள்

என்றாலும் உள் நாட்டுத் தலைவர்களின் ஆட்சிக் குட்பட்ட பிரதேசங்களைத் தமக்குச் சொந்தமாக ஆக்கிக்கொள்ள அவர்கள் துணிந்ததில்லை. நாட்டின் வெவ்வெறு பாகங்களில் பொது மக்களின் நன்மதிப்பையும், விசுவாசத்தையும் பெற்றிருந்த இராயர்கள், இராணுக்கள், மண்டலிக்குகள், தேசாய்கள், இராஜாக்கள், பாளையக்காரர்கள் என்று பலவிதமாக அழைக்கப்பட்டவர்கள் அதிகாரத்தைச் செலுத்திவந்தமையானது இக் கால முஸ்லிம் மன்னர்களின் வரம்பிலா ஆட்சிக்குப் பெருந்தடையாக மட்டுமின்றி இஸ்லாமின் சட்டமானது நாடெங்கும் பரவுவதற்கும் தடையாக இருந்தது. எனவே சட்ட பூர்வமான இறைமையானது இராணுவ பலத்திற்குத் தக்கபடி செலுத்தப்பட்டது. இக்காலத்தில் ஒரே மாதிரியான சட்ட முறைமையோ, நீதி முறைமையோ அல்லது நீதித் துறை நிறுவனமோ இல்லை.

இது வரையில் நாம் உள்ளூர் அல்லது வட்டார நாடுகளில் காணப்பட்ட ஆட்சிமுறை அமைப்பைப் பற்றிக் கண்டோம். இனி அடுத்து வரும் அத்தியாயத்தில் டில்லிப் பேரரசு நாடுகளில் நிலவிய ஆட்சி முறையினைக் காண்போம்.

# 24. ஆப்கானியர்களின் ஆட்சி முறை

## இரு வேறுபட்ட நாடுகள்

பதினைந்தாம் நூற்றாண்டில் நாம் இருவேறுபட்ட நாடுகளின் தொகுதிகளை டில்லிப் பேரரசு நாடுகள் என்றும் உள்ளூர் அல்லது வட்டார நாடுகள் என்றும் பிரிக்கலாம் என்று கண்டோம். ஆனால் இப் பிரிவு வசதியை முன்னிட்டு நம்மால் பிரிக்கப்பட்டதேயாகும். இத்தகைய பிரிவு ஏதும் அக் காலத்தில் செய்யப்படவில்லை. நாம் படிக்கின்ற வரலாற்றுக் காலத்தில் டில்லிப் பேரரசு நாடுகள் முதலில் சையதுகளிடத்தும், பின்னர் லோடிகளிடத்தும் இருந்து வந்தன. டில்லிப் பேரரசு நாடுகளில் கூடியவரை இந்துக்கள் விலக்கப்பட்டு முஸ்லிம்கள் மட்டுமே பெரிதும் ஆட்சியின் எல்லாத் துறைகளிலும் அமர்த்தப்பட்டனர். டில்லிப் பேரரசு நாடுகளைச் சேர்ந்த மன்னர்கள் தமது ஆளுகைக்குட்பட்ட இந்துக்களின் மீது நம்பிக்கையில்லாத காரணத்தால் தமது உறவினர்களையே வைத்துக் கொண்டு ஆட்சியை நடத்தினர்.

## சமயப் பற்று

டில்லிப் பேரரசு நாடுகளைச் சேர்ந்த மன்னர்களிடம் சமயப்பற்று நிறைந்திருந்தது. அதைச் சமய வெறி என்றும் கூறலாம். இந்தியர்களை ஒழித்து விட வேண்டும் என்னும் எண்ணம் கொண்டிருந்தனர். இஸ்லாமியச் சட்டத்திற்கு ஏற்ற வகையில் ஆட்சி புரிய வேண்டுமென்னும் அவாவினால் இந்தியாவில் நிலவிய சூழ்நிலையைப் புரிந்துகொள்ள மறந்துவிட்டனர். இந்துக்களை மட்டுமே எதிரிகளாகக் கருதிய அவர்கள், இந்திய முஸ்லிம்கள் (இந்தியாவில் பிறந்து முஸ்லிம்கள் ஆனவர்கள்) பெரும் சக்தியாக விளங்குவதை உணரவில்லை. இந்திய முஸ்லிம்களையும், இந்துக்களையும் எதிரிகளாக்கிக் கொண்டனர். தமது இனத்தவர்களையே நம்பினார்களே தவிர வேறு யாரையும் நம்பவில்லை. ஆனால் அவர்கள் இனத்தவர்களோ தங்களுக்குள்ளேயே போரிட்ட

வண்ணம் இருந்தனர். அதன் விளைவாகப் பேரரசு ஒன்றைத் தோற்றுவிப்பதில் அவர்கள் வெற்றி பெறுமல் போயினர். இராஜதந்திர முறையின் மூலம் ஒரு கட்சியை நட்பாக்கிக் கொண்டு அதன் மூலம் இன்னொரு கட்சியை அழிப்பது என்பது மிகவும் பயன் தரத்தக்கதும், எளிதானதுமான வழி என்பதை லோடிகள், சூர்கள் ஆகிய முஸ்லிம்கள் ஒருவர்கூடச் சூழ்நிலைக்குத் தக்கபடி இவ்விதம் நடந்து கொள்ள வேண்டியதின் அவசியத்தைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. ஆப்கானியப் பேரரசில் ஊரியல் ஆட்சி முறையின் அடித்தளத்தில் இந்துக்கள் நியமிக்கப் படுவது மிக அரிதான நிகழ்ச்சியாக இருந்தது. எங்கெல் லாம் மன்னர்கள் அவ்விதம் நடந்து கொண்டார்களோ அங்கெல்லாம் அவர்களது ஆட்சியானது நீண்ட காலம் நீடித்தது.

### கோட்பாட்டு மாறுதல்கள்

டெல்லியை ஆண்ட லோடிச் சுல்தான்கள் புதிய பேரரசை மட்டும் தோற்றுவிக்கவில்லை. சுல்தானியர்களின் காலத்தில் இருந்த ஆட்சித் துறை நிறுவனங்களில் மாறுதல்கள் பல வற்றையும் செய்தனர். லோடிச் சுல்தான்கள் அரசபதவி குறித்துக் கொண்டிருந்த கோட்பாட்டிற்கும், துருக்கியர் கொண்டிருந்ததற்கும் வேறுபாடிருந்தது. லோடி அரசர்களுக்கு முன்னர் இருந்தவர்கள் மையப்படுத்தப்பட்ட ஆட்சி முறையினைக் கொண்டிருந்தனர். இன வழி அரசாட்சி. (Tribal Rule) முறையினைக் கைக்கொள்ள ஆரம்பித்தனர்.

### இனத் தலைவர்கள்

இதற்குக் காரணம் ஆப்கானியர்கள் குடிவழி நிறுவனங் களில் தீவிர பற்றுக் கொண்டதுதான். ஆப்கானிய மன்னர் கள் குடிப்பற்று நிறைந்த ஓர் இராணுவப் பிரிவு வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். ஆப்கானியர்களின் தலைவர் மதிக்கப்பட்டாலும், சமமானவர்களில் முதன்மையானவர் (first among the Equals) என்றே கருதப்பட்டார். எனவே ஆப்கானிய இனத்தலைவர்கள் அடங்கி நடந்திடும் பாங்கினைப் பெறவில்லை. தலைவன் வேலையாள் என்னும் எண்ணம் அவர்க ளிடம் வலுப் பெறவில்லை.

### எழுச்சி

வட இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு ஆப்கானியர்கள் எழுச்சி பெற்றனர். கி.பி.

1444-இல் சுல்தான் மகமது ஷா என்னும் அரசர் இறந்துவிட்ட சமயத்தில் லேங்காக்கள் என்று அழைக்கப்பட்ட ஆப்கானியர் மூல்தானில் விடுதலை பெற்றனர். ஜான்பூர் மன்னரான இப்ராஹீம்ஷா தென்கிழக்குப் பகுதியில் சில மாவட்டங்களைக் கைப்பற்றினர். தோ ஆப் பிரதேசத்தில் ஆண்டவர்கள் தங்கள் விருப்பம் போல ஆண்டனர். குவாலியர் அரசர் உள்ளிட்ட பல இந்துத் தலைவர்கள் டில்லிச் சுல்தானுக்குக் கப்பம் கட்டாது தட்டிக் கழித்து வந்தனர். சார்ஹிண்டு, சமானு, திபல்பூர், லாகூர் ஆகிய பிரதேசங்களை மானியங்களாகப் பெற்று ஆண்டு வந்த பஹ்லால் லோடி இத்தகைய குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு தன்னைச் சுல்தான் என அறிவித்தார். அரண்மனைச் சூழ்ச்சி ஒன்றின் விளைவாகப் பஹ்லால் டில்லியைக் கைப்பற்றி 1451-ஆம் ஆண்டு அரியணையில் அமர்ந்தார். டில்லிப் பேரரசின் இறைமையானது சையதுகளிடமிருந்து லோடிகளின் கைகளுக்கு மாறியது. டில்லி அரியணையில் ஏறியதன் விளைவாகப் பஹ்லால் லோடிக்கு டில்லி ஒன்று மட்டுமே கைவசமாயிற்று. அவர் இன்னும் வட இந்தியப் பகுதிகள் பலவற்றைக் கைப்பற்ற வேண்டியிருந்தது. இந் நிலையில் உள்நாட்டுத் தலைவர்கள் டில்லி அரசை எதிர்த்தனர். அவர்கள் எதிர்ப்பானது பஹ்லால் லோடியின் வாழ்க்கைப் போராட்டமாக அமைந்தது. தம்முடைய ஆட்சியை இந்திய மண்ணிலே நிலைபெறச் செய்ய வேண்டும் என்பதற்காகப் பல வழிகளையும் அவர் கையாண்டார்.

### பஹ்லால் லோடி

பஹ்லால் லோடி சுல்தானகியபோது மிகப் பெரும் துயர்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அதற்கு மற்றைய ஆப்கானியர்களின் தயவை நாடலானர். இதன் விளைவாக இன மக்களிடையே அரசர் உயர்ந்தவர் என்னும் எண்ணம் மறைந்து சமமானவர்களில் முதல்வர் என்னும் கருத்து வழிப்பட்ட இன அமைப்பு முறைக்கு வழி ஏற்பட்டது.

### அவர் பண்புகள்

பஹ்லால் லோடி இதன் விளைவாக உயர் குடியினர் அனைவரையும் மிகவும் பொறுப்புடனும், மரியாதையுடனும் நடத்தத் தலைப்பட்டார். அரசனுடைய இறைமையை எப்போதும் வெளிப்படையாகக் காட்டவில்லை. உயர் குடியினருடன் அளவளாவும்போது அவர்களுக்குமேலாக அரியாசனத்தில் அமராது, சுல்தான் என்று தம்மை மக்கள் எண்ணினால் போதும் என்று

உயர் குடியினரோடு சமமாக அமர்ந்தார். ஒவ்வொருவருக்கும் அரசு நிலைபெறுவதில் உயர்வான பங்கு அரசனுக்கு இருப்பது போல் உள்ளது என்பதைப் பதிய வைத்தார். யாராவது ஓர் உயர் குடியைச் சார்ந்தவர் மன்னருடைய அதிருப்திக்கு ஆளானால், அரசர் நேரடியாக அவரிடமே சென்று பேசினர். இது உயர் குடியினரிடையே தாமும் ஆளுகின்ற வர்க்கத்தைச் சார்ந்தவர் என்னும் எண்ணத்தைத் தோற்றுவித்தது. பஹ்லால் லோடி மஸ்நத் அலி என்று அழைத்தபோது தங்கள் நிலை உண்மையிலேயே உயர்வானது என எண்ணினர். இவ்வாறுன ஆப்கானியர்களின் போக்கு, அரசருக்குப் பணியாத தன்மை, இன அமைப்பு முறைத் தலைமைக்கு (Tribal Chieftancy) வழிகோலியது.

### இறைமைப் பலி

அரசர் டில்லிப் பேரரசை நிலைபெறச் செய்வதற்கு வேண்டிய பொருள் வசதியோ, ஆள் பலமோ இல்லாத நிலையில் பிறரைச் சார்ந்திருக்க வேண்டிய நிலைமைக்குத் தம்மை ஓரளவு தாழ்த்திக் கொண்டார். உறவினர்களின் ஆதரவைப் பெற வேண்டியிருந்தது. உறவினர்களின் ஆதரவைப் பெறவேண்டித் தமது இறைமையைப் பலி கொடுக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு அரசர் எல்லாருக்கும் முதல்வராய் இருந்ததுபோக இப்போது சமமானவர்களிடையே முதல்வர் என்னும் நிலைக்கு வந்தார். ஜான்பூர் சுல்தானாகிய மகமது டில்லியில் முற்றுகையிட்டபோது தமக்கு உதவி செய்வதற்காக இந்தியாவிற்கு வருமாறு ஆப்கானிய உயர் குடியினருக்கு வேண்டுகோள் விடுத்தார். அவ் வேண்டுகோளில் இறைமை என்பது தம்மோடு பெயரளவில் இருக்கட்டுமென்றும், வெல்லப்படுகின்ற நாடுகளனைத்தும் சமமாகப் பிரித்துத் தரப்படும் என்றும் வாக்குறுதி அளித்தார்.

பஹ்லால் லோடி எல்லா நிலங்களையும், சொத்துகளையும் தமக்குச் சமமானவர்களிடத்தே பிரித்துக் கொடுத்து விட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்ற கூற்றுகளிலிருந்து நிலங்களை உரிமையாக்கிக் கொண்டவர்கள் எவ்வித நிலவரியும் செலுத்தவில்லை என்பதையும் அறிகிறோம்.

### உயர் குடியினர்

இதன் விளைவாக இந்தியா முழுவதும் ஆப்கானியத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது. அளவுக்கு மீறி உயர்குடியின

ருக்கு இடம் கொடுக்கப்பட்டதால் அவர்கள் ஒரு சிறிய கட்டுப்பாட்டைக்கூடப் பொறுக்க முடியாத அளவுக்குச் சுதந்திர வாழ்வில் பழக்கப்பட்டுவிட்டனர். சுல்தான் சிறிதளவு அவர்கள் மீது அதிகாரம் செலுத்தினாலும் போதும் தங்கள் சக்தி என்ன என்பதைச் சுல்தானுக்கு உணர்த்தத் தலைப்பட்டனர். சதா சண்டையிடும் மனப்பான்மையானது அடக்கி வைக்க முடியாத அளவுக்கு வளர்ந்து ஒழுங்கின்மையும், கட்டுப்பாடின்மையும் காணப்பட்டன. இரத்தம் சிந்துவதின் மூலமாகவே தாம் வேண்டியதைப் பெற முடியும் என்னும் எண்ணம் குடிகொண்டது. அரசர் மீதோ அல்லது தாங்கள் வாழ்கின்ற நாட்டின்மீதோ பற்றுக்கொள்வதற்கு மாறாகத் தங்கள் குழுக்கள் அல்லது கூட்டத்தின்மீது பற்றுக் கொண்டனர். முதலில் குழுதான் அவர்களுக்குப் பெரியது. அரசர், நாடு எல்லாம் அதற்குப் பின்னர்தான். ஒரு குழுவினைச் சார்ந்தவர்கள் மற்றொரு குழு நன்கு வாழ்வதைப் பொறுக்க முடியாது பொறாமை கொண்டு எதிர்த்தனர். ஒவ்வொரு குழுவும் இராணுவத்தைக் கொண்டிருந்ததாலும், நாடாளும் அதிகாரம் பெற்று இருந்ததாலும், அவர்களுக்கிடையே ஏற்பட்ட போட்டிகளும், போர்களும் அரசரின் அதிகாரத்திற்குப் பெரிதும் பங்கம்ஏற்படுத்தின. அரசனைப்போலவே அவரவர் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தினர். அவர்களுக்கு இருந்த ஒரே பொறுப்பு அரசன் இராணுவ உதவியை நாடியபோது அதனைத் தவறாமல் கொடுப்பதுதான். அரசன் வெளிநாட்டு விவகாரங்கள், பாதுகாப்பு, நாணயங்கள், நீதித் துறை ஆகிய பொறுப்புகளை மட்டுமே கவனித்து வந்தான் என்று அறியும்போது ஆப்கானியர்களுடைய அரசு கூட்டிணைப்பு என்றே அறிகிறோம். இதன் விளைவாகச் சில குறைபாடுகள் தோன்றின. பிரிவினை எண்ணம் தலை தூக்கத் தொடங்கியது. உயர்குடியினரை உயர்ந்தவர்களாக ஆக்கியதோடு, அரசனை உயர்குடியினரின் தலைவன் என்னும் நிலைக்கு உயர்த்தியது. இவ்வாறாக வல்லாட்சியின் அடிப்படை தகர்க்கப் பட்டுவிட்டது. அரசனால் அமைதியை நிலைநாட்டுவது இயலாமல் போய்விட்டது.

## போர்கள்

பஹ்லால் லோடியினால் இந்த முறையில் மாறுதல் ஏதும் செய்ய இயலாமல் போனதற்குக் காரணம் போர்களேயாகும். ஆனால் பஹ்லால் லோடியின் மகனான இப்ராஹிம் லோடி தன்னிச்சையாகச் செயல்படும் உயர் குடியினரை அடக்கி ஒரு வழிப்படுத்தி அரசனின் அதிகாரத்தை நிலை நாட்டப்போதிய வாய்ப்புப் பெற்றிருந்தார். உயர்குடியினரின்

சக்தி குறைக்கப்பட்டால்தான் அரசனின் அதிகாரம் செல்லு படியாகும் என்பதை உணர்ந்து அவர்களது வசதிகள் சில வற்றைக் குறைக்கும் முயற்சியில் இறங்கினர். அவை கூடிய போதும், உயர் குடியினருடன் அளவளாவும் போதும் அரியா சனத்தே இருந்து பேசினர். உயர் குடியினரைத் தம் கட்டுப் பாட்டின் கீழ்க் கொண்டு வந்தார். நிலமானியதாரரைத் தேவை ஏற்பட்டபோது வேறு இடங்களுக்கு மாற்றியும், அவர்களின் கீழ் இருந்த நில அளவைக் குறைத்தும் மாறுதல்கள் செய்தார். அவர்களுடைய கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டன. மைய அரசுக்குக் கணிசமான தொகை கொடுக்க வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. படிப்படியாகத் தம் அதிகாரத்தை உயர்த்தித் தம்மை மதித்துப் போற்றுமாறு ஆக்கினர்.

### இன அமைப்பு முறை

இப்படியெல்லாம் செய்தும் கூடப் பஹ்லால் லோடியினால் உருவான அமைப்பை முழுவதும் மாற்ற இயலவில்லை. இன அமைப்பு முறை இன்னும் தொடர்ந்து வந்தது. சில அமைப்பு கள் மரபு வழியாக இருந்தன. கானிஜஹான், காரிகானன், ஆஸன்குமாயுன், கானிஆசம் ஆகிய பட்டங்கள் அரசரால் வழங்கப்பட்டன. சிக்கந்தர் லோடியின் அரசு துருக்கிய அரசர்களின் அமைப்பு முறைக்கும், பஹ்லால் லோடியின் அமைப்பு முறைக்கும் இடைப்பட்டதாக இருந்தது என ஏ. பி. பாண்டே என்பார் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

ஆனால் இப்ராஹிம் லோடியின் காலத்தில் இன்னும் மாறு தல்கள் ஏற்பட்டன. உயர் குடியினர் போதிய மரியாதை யோடு நடத்தப்படவில்லை. அரசனின் ஆணைகளை மதியாத வர்கள் கொடுமைப் படுத்தப்பட்டனர்.

### அரசனின் ஆணை

அரசன் முன் கைகட்டி நிற்க வேண்டிய நிலைக்கு உயர் குடியினர் தாழ்ந்தனர். இதன் விளைவாக உயர் குடியினர் அரசனின் ஆணைக்குப் பணிவதை வெறுத்தனர். அரசனுக்கு எதிராகக் கிளம்பினர். சதிச் செயல்களில் ஆர்வம் கொண்ட னர். இப்ராஹிமின் கொள்கைகள் அவருக்கு மட்டும் தீங்கைத் தராமல், ஆப்கானியர்களுக்கும் தீங்கை விளைவித்தன.

### ஏறுதல்கள்

துருக்கியர்கள் வாரிசு பற்றி எவ்வித கொள்கையும் கொண்டிருக்கவில்லை. அடிமைகள், சிறுவர்கள், பெண்கள்

முஸ்லிம்களாக மாறியவர்கள், அரை முஸ்லிம்கள் (half Muslims) யாராயிருந்தாலும் அரசாள அனுமதித்தனர். ஆப்கானியர்கள் இதில் சில மாறுதல்களைச் செய்தனர். தேர்வு முறையே இவர்களிடம் இருந்தது. இன அமைப்பு முறை இருந்தமையால் அரசனைத் தேர்ந்தெடுத்தனர். பஹ்லால் லோடி தேர்ந்தெடுக்கப்பட்டது அவ்விதமேதான். பஹ்லால் லோடியின் விருப்பப்படி அவருடைய மகனை அரசோச்ச அனுமதிக்கவில்லை. யார் தகுந்தவர் என்பதை இனத்தவர் கூடித் தீர்மானித்தனர்.

## சவால்

மையத்தில் அதிகாரம் செறிந்த ஓராட்சி ஏற்படுவதற்கு வழி இல்லாமல் போய்விட்டது. ஆப்கானியர்களின் சமுதாய அமைப்பில் மன்னர் பெயருக்கு மட்டுமே தலைவராகக் கருதப்பட்டார். மிகத் திறமையானவர்கள்கூடத் தமது குலத்த வரிடையே ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் ஏற்படுத்த இயலவில்லை. அரசரையே எதிர்பார்ப்பதற்குரிய மனப் பான்மையை உயர் குடியினர் பெற்றனர். பயத்தோடும், பக்தியோடும் மன்னர்க்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக அடங்காப் பிடாரிகளான உயர் குடியினர் அவரது அதிகாரத்திற்கே சவால் விட்டனர். ஆப்கானிய அரச பதவியின் தன்மை இவ்வாறு இருந்ததை அடிப்படையாகக் கொண்டு நாம் டில்லிப் பேரரசிலிருந்த ஆட்சி முறையின் நிறுவனங்களைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

## அதிகாரச் செறிவு

டில்லிப் பேரரசு நாடுகளில் ஆப்கானியர்களின் நில மானியக் கருத்துகளும், இனமுறை அமைப்பும், லோடிகளின் அரசாங்க அமைப்பும், இத்தியப் பின்னணியில் அமைக்கப்பட்ட ஆப்கானிய நிறுவனங்களேயாகும். இன அமைப்பைப் பற்றிய எண்ணங்கள் காரணமாக அரசாங்க மானது முற்றிலும் தனிப்பட்ட மனிதர்களின் சொந்த விவகார மாயும், நிலமானியக் கருத்துகளின்படி அரசாங்கத்தின் அதிகாரமானது சிதறடிக்கப்பட்டும் இருந்தது. மேற்கூறிய காரணங்களின் விளைவாக அதிகாரம் ஓரிடத்தில் செறியப் பெற்ற ஆட்சி முறை உருவாவதற்கு வழி இல்லாமல் போயிற்று. அரசர் சமமானவர்களில் முதன்மையானவர் எனக் கருதப்பட்டார் என்பதை ஏற்கெனவே கண்டோம். சுல்தானின் அதிகாரம் குறைக்கப்பட்டுப் பெயரளவிற்கே

அவர் இறைமை பூண்டு விளங்கினார். ஆப்கானிய உயர் குடியினரின் அதிகாரத்தையும், செல்வாக்கையும் குறைக்க முயன்று தோல்வி கண்டவர்கள் தம்மையே அழித்துக் கொண்டு, ஆப்கானியப் பேரரசின் அழிவிற்கும் வகை தேடினர். நிலமானிய முறை, இன முறை, ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த அரசாங்கமே ஆப்கானிய அரசாங்கம். வரம்பற்ற முடியாட்சி என்பது அங்கு இல்லை. ஆக்கத் திறன் கொண்ட மேதைத் தன்மையான எந்தவிதமான அரசியல் நிறுவனத்தையும் அவர்கள் தங்களது சொந்த நாட்டிலிருந்து கொண்டுவரவில்லை. லோடி அரசாங்கத்தில் இன முறைக் கொள்கைகளும், நில்மானியக் கோட்பாடுகளும் இருந்ததோடு டில்லிச் சுல்தான்கள் காலத்து யதேச்சாதிகார மரபுகளும் புகுந்து விட்டன.

## கட்டுப்பாடு

அரசர் குடி மக்கள் மீது ஏராளமான கட்டுப்பாட்டையும் அதிகாரத்தையும் செலுத்தி வந்தார். கொள்கையளவிலும், உண்மையிலும் அரசரே நீதியின் ஊற்றாகத் திகழ்ந்தார். நாட்டில் உள்ள நிலம் நீர் அனைத்தும் அவரால் கொடுக்கப்பட்ட அன்பளிப்புகள் என்னும் கருத்தே நிலவியது. அவர் அரசியல் கௌரவங்களுக்கு ஊற்றாகவும் மதத்திற்குப் பாதுகாப்பாகவும் விளங்கினார். பெரும்பான்மையோர் மத வெறி பிடித்தவர்களாகவே இருந்தனர். இஸ்லாம் மதத்திற்குப் புறம்பானவர்களுடைய கோவில்களையெல்லாம் தரை மட்டமாக்கி அடையாளம் தெரியாதவாறு சில மன்னர்கள் செய்தனர். முக்கியமான இந்துக் கோவில்களைப் பிரயாணிகளின் தங்குமிடமாகவும், கல்லூரிகளாகவும் மாற்றினார்கள். சமுதாயத் துறையிலும், சமயத் துறையிலும் முக்கியமான விளைவுகளைச் சுல்தான்கள் தங்களுடைய அதிகாரத்தைச் செலுத்திய முறையானது ஏற்படுத்தியது. ஆப்கானியர்களின் ஆட்சியானது அரசர்களின் சொந்த யதேச்சாதிகார ஆட்சியாகவே இருந்து வந்தது. சமமானவர்களிடையே ஒரு தலைவர் என்னும் நிலையானது நாளடைவில் மாறியது. சிக்கந்தர் லோடியும் இப்ராஹீம் லோடியும் மையத்திலிருந்து கட்டளைகள் பிறப்பித்து எல்லாவற்றையும் வழி நடத்தல் என்னும் முறையினால் ஆப்கானிய இராஜரீகத்திற்கு வலிமையும், கௌரவமும் அதிகரிக்கச் செய்தனர். முடியரசானது நாளுக்கு நாள் வரம்பற்ற வல்லரசாக மாறிக் கொண்டு வந்தது.

### வசீர்

லோடி அரசர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு உதவியாகப் பல அமைச்சர்களிருந்தனர். அவர்களில் உண்மையிலேயே மிகவும் முக்கியமானவர் வசிர் என்பவரே யாவார். வருமானங்கள் பற்றிய காரியங்கள் அனைத்திலும் வசிரே முடிவான அதிகாரம் உடையவராய் விளங்கினார். வருமானத் துறையை வழி நடத்தவும், கட்டுப்படுத்தவும் வசிருக்குத் துணையாயிருந்தவர் திவான் என்னும் அதிகாரி யாவார். கணக்கு வழக்குகளைப் பற்றிய பதிவேடுகள் அனைத்தையும், ஜாகிர்கள், மானியங்கள் பற்றிய பல்வேறு பத்திரங்களையும் வைத்துக் காத்து வந்த அலுவலகத்தின் தலைவராகத் திவான் விளங்கினார். வருமானத்தைப் பற்றிய வழக்கு அல்லது முறையீடு எதுவாயிருந்தாலும் அவரே உலேமாவின் துணைக்கொண்டு தீர்த்து வைத்தார். நீதித் துறையின் தலைவராக விளங்கியவர் வக்கீல் என்னும் அதிகாரி யாவார். அவர் வசிருக்குக் கீழே அவருக்கு அடுத்தபடியாக அல்லது ஒருவேளை சமமாக அதிகாரம் செலுத்தி வந்தவ ராவார். பிரபுக்களில் முதலிடம் வகித்தவரும் மிக வல்லமை பொருந்தியவருமான ஒருவரே அப் பதவியை வகித்தார். அவர் தம்முடைய கடமைகளை நிறைவேற்றும்போது அவருக் குதவியாக ஒரு காஜியும், பன்னிரண்டு உலேமாக்களும் இருந்தனர். வருமானம் பற்றிய வழக்குகளில் திவானுக்கு உலேமாக்கள் உதவி புரிந்தனர். ஊரியல், குற்ற இயல் வழக்குகளையும் சமயச் சம்பந்தமான வழக்குகளையும், கொள் கையைத் துறந்தவர்கள் அல்லது அறநெறி, சமயநெறி முதலியவற்றில் பிசகியவர்கள் பற்றிய வழக்குகளையும் தீர்க்கக் காஜியும், வக்கீலும் திவானுக்குப் பெரிதும் துணையாக இருந்தனர். சிக்கந்தரின் ஆட்சிக் காலத்தில் முக்தாரி, முட்லக் எனப்படுவோர் ஆட்சி முறையைப் பற்றிய விவகாரங் கள் அனைத்தையும், கல்விமான்களுக்கும், சமய விற்பன்னர் களுக்கும் நிலங்களையும் வேறுபல பரிசுகளையும் வழங்குவதை யும் கவனித்துக்கொண்டனர்.

### போர் வீரர்கள்

போர் வீரர்களின் கணக்கெடுப்பையும், அவர்களின் சம்பளப் பட்டுவாடாவையும், பக்ஷி என்னும் அதிகாரி கவனித்துக் கொண்டார். கஜீ∴ப் என்பவர்கள் அரசருக்கு அருகிலிருந்து கொண்டு பணிவிடை செய்து வந்தனர். லோடி அரசாங்கத்தின் ஒரு புதுமையான இயல்பு என்னவென்றால்

அதிலிருந்த மிக முக்கியமான உயர்குடியினர் யாவரும் மன்னரோடு நெருங்கிய தொடர்புள்ளவர்களாகவும், முக்கிய மான காரியங்களில் அவருக்கு ஆலோசனை கூறுபவர்களாயும் இருந்ததேயாகும். திரிபாதியின் கூற்றுப்படி லோடி அரசுரிமையானது ஒருவிதக் கூட்டுத் தலைமையே ஆகும்.

### ஆட்சிப் பிரிவுகள்

லோடிகளின் ஆட்சியின் கீழ் சர்க்கார்கள், பர்கானுக்கள் போன்ற பிரிவுகளும் இருந்தன. ஆனால் இப் பிரிவுகளின் பரப்பளவு என்ன என்பது பற்றியும் ஆளுநர்கள் அல்லது நாய்ஃபுகளின் கடமைகள் யாவை என்பது குறித்தும் நாம் உறுதியாக எதையும் அறிய முடியவில்லை. நாய்ஃப் என்பவர் உதவி ஆளுநராக, ஆளுநர்க்குக் கீழ்ப்பட்டவராக இருந்திருக்கலாம் எனச் சிலர் கூறுகின்றனர். அரசரின் பிரதிநிதியாக விளங்கிய அவர் ஏதாவது ஒரு நிலப்பிரிவை ஆண்டு வந்தவராகவே இருந்தார். ஆளுநர்கள், அமைச்சர்கள் அல்லது அவர்களுக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகள் ஆகிய பல வகையான அதிகாரிகளுள் எவரும் எந்தத் தரத்தைச் சார்ந்தவர்? அவர் பெற்று வந்த ஊதியம் எவ்வளவு? என்பவற்றையெல்லாம் பற்றி எதையும் திட்டவட்டமாகக் கூறுவது இயலாது. ஒவ்வொரு அதிகாரிக்கும் ஒரு ஜாஹீர் அல்லது மானியம் வழங்கப்பட்டதே யொழிய ரொக்கப் பணமாக ஊதியம் ஏதும் தரப்படவில்லை. ஜாகீர்களை வழங்குகின்ற ஒரு வழக்கமானது இந்த நாட்டில் நன்கு நிலைபெற்றிருந்தது. எனவே அம்முறையினை ஆப்கானியர்கள் அப்படியே ஏற்றுக் கொண்டனர். அக்பரின் காலத்தில் இருந்த மான்சப் தாரி முறையைப் போன்ற திட்டம் ஒன்று இந் நாட்டில் இருந்தது என்று கூறப்படுகிறது.

### சூர் வம்சம்

ஆப்கானிய இனத்தவர்களில் சூர்வம்சத்து அரசர்களான ஷெர்ஷாவும், இஸ்லாம் ஷாவும் குறிப்பிடத் தகுந்தவர்கள். இவர்கள் ஆட்சி முறை ஆப்கானிய லோடிகளினின்று மாறு பட்டிருந்தது. இம் மாறுதலைச் செய்ததில் ஷெர்ஷாவின் பங்கு குறிப்பிடத் தகுந்தது. ஷெர்ஷாவின் இளமைக் கால வாழ்க்கை அவருக்குப் போதிய அனுபவம் தந்தது. ஷெர்ஷா வின் காலத்தில் மன்னர் முழுமையான தகுதியைப் பெற்றவராக மாறியதுடன் அரச பதவிக்கே ஒரு தனிப் பெருமையைத் தோற்றுவித்தார்.

### வேறுபாடுகள்

இதுவரையில் இருந்து வந்த் ஆப்கானிய அரசர்களுக்கும் ஷெர்ஷாவிற்கும் வேறுபாடு இருந்தது. அவர்கள் அரசர்களாயிருந்தாலும் மற்றவர்களும் அரசர்களைப் போலச் சமமான வலிமை உள்ளவர்கள் என்று கருதிச் சமமாக நடத்தினார்கள். அரசர் சமமானவர்களில் முதல்வர் அதாவது சமமானவர்களில் முதன்மை பெற்றவரே தவிர அவருக்கு என்று சிறப்பான தகுதிகள் ஏதும் இல்லை என்பதே இதன் கருத்தாய் இருந்தது. நாம் ஏற்கெனவே பகலோல் லோடி அவ்வாறு நடந்து கொண்ட முறையினைப் பார்த்தோம். ஆனால் ஷெர்ஷாவின் ஆட்சியில் முழுமாற்றம் நேரிடுகிறது. அப்படி ஏற்பட்ட மாற்றம் யாது என்பதை இனி ஆராய்வோம்.

### மன்னரின் அதிகாரம்

சூர் வம்சத்து ஆட்சியின்போது மன்னரே நாட்டின் ஒப்பற்ற தலைவராக விளங்கினர். மன்னர் சமமானவர்களில் முதல்வராகக் கருதப்படவில்லை. மன்னரின் அதிகாரத்திற்குச் சடங்கு பூர்வமான மதிப்பு மட்டுமின்றி உண்மையிலேயே பெருமதிப்பு இருந்து வந்தது. முஸ்லிம் மத விற்பன்னர்கள் அரசரின் அதிகாரத்திற்குத் தடையாய் இருந்தனர். அந்த ஒரே தடையை மன்னர் உதறித் தள்ளினர். அந்த அளவிற்கு அரசர் இறைமை பெற்றிருந்தார். முற்றிலும் சமயத் துறையைச் சார்ந்த காரியமாயிருக்தாலும் இஸ்லாமியக் கொள்கைகளுக்கு முற்றிலும் முரணாக அமைந்த நிகழ்ச்சிகளில் கூட அவை உலேமாக்களின் அதிகார வரம்பிற்குள் நியாயமாக வர வேண்டியிருந்தாலும் அரசர் அவற்றில் தலையிட்டுத் தமது அதிகாரத்தை நிலை நாட்டினர்.

ஷெர்ஷாவிற்குப் பின்னர் இஸ்லாம் காலத்தில் சமயச் சட்டத்திற்கே காவலாக விளங்கிய சமயத் தலைவர்கள் அலட்சியமாக நடத்தப்பட்டனர். அரசர் கொண்டாடிய அதிகாரமானது வரம்பு இல்லாத முழுமை பெற்ற அதிகாரமாகும். ஆட்சித் துறை அதிகாரங்கள் யாவும் ஒரே இடத்தில் குவிக்கப் பெற வேண்டும் என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இக்காலத்தே இறைமை (sovereignty) என்று கருதப்படுகின்ற தனித்தலைமை நிலையைச் சூர் அரசர்கள் எய்திச் சமயத்தின் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டது அக்பரது ஆட்சிக்கு முன்னோடியாக விளங்கியது.

*அதிகாரச் செறிவு*

சூர் வம்சத்து ஆட்சியில் மையத்திலே அதிகாரச் செறிவு ஏற்பட்டது. லோடிகள் காலத்தில் வழக்காற்றில் இருந்த ஆப்கானிய அரசு முறையை மட்டு மின்றி ஆப்கானிய அரசுரிமைக் குறிக்கோளையே மாற்றி அமைக்க முயன்றனர். நிலமானியத்தவரிடையே அதிகாரம் பங்கிடப்படுகின்ற கொள்கையின் அடிப்படையில் அரசு நிறுவனம் அமைக்கப் படவில்லை.

*நிலமானிய முறை*

சூர் வம்சத்து அரசு நிலமானிய முறையில் அமைக்கப்பட வில்லை. நிலமானிய முறையில் பெரும் பிரபுகள் தங்களுக் கென்று தனித்தனிப் படைகளை வைத்துக் கொண்டு குறுகிய குலப்பற்றின் பிடியில் சிக்கி ஒருவரோடு ஒருவர் சண்டை யிட்டுக்கொண்டிருந்தனர். ஆனால் ஷெர்ஷாவின் காலத்தில் மையத்தில் அதிகாரச் செறிவு ஏற்படவே அரசருடைய அதி காரத்திற்கு அனைவரும் கண்டிப்பாகக் கீழ்ப்படிய வேண்டு மென்பது வற்புறுத்தப்பட்டது. அரசின் அதிகாரங்கள் யாவும் அரசரின் கைகளில் குவிக்கப் பெற்றன. இப்படிச் செய்ததன் மூலமாக இந்தியாவில் வழக்காற்றில் இருந்து வந்த அரசாங்க மரபுகளையும், அரசுரிமைக் கொள்கைகளையும் பெரிதும் பயன்படுத்திக் கொண்டனர். எல்லா நிலமும், சொத்தும், பதவியும் அரசரிடமிருந்தே பெறத்தக்கன என்பது இந்திய மரபாகும். அதை ஒட்டியே ஷெர்ஷா நடந்து கொண்டார்.

*கட்டுப்பாடு*

கட்டுப்பாடற்ற கூட்டமாக ஆப்கானியர்கள் இருந்தனர். அவர்களை ஒன்று திரட்டிய பெருமை ஷெர்ஷாவையே சாரும். அவர்களைத் திரட்டி ஒரே கொடியின் கீழ்க் கொண்டு வந்து மொகலாயர்களை எதிர்க்க வைத்தவர் ஷெர்ஷாவே ஆவார். ஆப்கானிய அரசு மீண்டும் எழுச்சி பெற்றது இவர் காலத்தில் தான். ஆனால் அவ் வெழுச்சி பதினைந்து ஆண்டுகளுக்குத் தான் நிலைத்தது. இருப்பினும் முன்பு ஆண்டுகொண்டிருந்ததை விட வலிமை பெற்றதும் பெரியதுமான பேரரசை அவர்கள் தோற்றுவித்தனர். ஷெர்ஷாவின் மேதைத் தன்மை அக்பருக்கு வழிகாட்டியாக அமைந்தது. உண்மையிலேயே ஷெர்ஷா அவர் மகனை சிக்கந்தர் ஆகிய இருவரும் சாதித்த அரும்

பெருங் காரியங்கள் அக்பரது ஆக்க வேலைத் திட்டமானது நன்கு அமைக்கப்படுவதற்கு முன்னோடியாக அமைந்தன.

### அதிகாரக் குவிப்பு

சூர் குலத்தவர்களின் சாதனைகளை இரண்டாகப் பிரிக்க லாம். முதலாவதாக அவர்கள் அதிகாரங்கள் யாவும் மையத்தில் குவிக்கப் பெற்றதோர் அரசைத் தோற்றுவித்தனர். அதில் அதிகார வர்க்கத்தின் செல்வாக்கு ஓங்கி இருந்தது. இலஞ்ச ஊழல்கள் ஒழிக்கப்பட்டுத் திறமை வலியுறுத்தப் பட்டது. இரண்டாவதாக மைய அரசில் இறைமையானது நன்கு போற்றி வளர்க்கப்படுவதற்கு ஏற்றதொரு சூழ்நிலை உருவாக்கப்பட்டது. அவ்வாறு உருவாக்கப்பட வேண்டும் என்னும்நோக்கத்திலேயே ஆப்கானிய பழக்கங்களைக் கைவிட்டனர். அரசரே எல்லா வல்லமைக்கும், பெருமைக்கும், சிறப்புரிமைக்கும், நீதிக்கும் இருப்பிடமானவர் என்று கூறி அரசுரிமையைப் பெரிதும் மேம்படுத்திய இந்திய அரசியல் மரபுகள் கைக்கொள்ளப்பட்டன.

### மையத்தில் செறிவு

அதிகாரங்கள் மையத்தில் செறியப் பெற்றதும் அதிகார வர்க்கத்தின் கெடுபிடிகள் நிறைந்ததுமான ஓர் ஆட்சி முறையை ஷெர்ஷா கடைப்பிடித்தார். ஷெர்ஷாவிற்கு முன்னர் ஆண்ட எந்த அரசருக்கும் அரசியல் சட்டம் அல்லது மதம் ஆகிய துறைகளில் தமது ஆணையே இறுதியானது என்று அறிவிக்கப் போதிய அளவு துணிவும் அதற்கேற்ற பக்க பலமும் இல்லை.

### ஜாகீர்

ஷெர்ஷா ஜாகீர் முறையை ரத்து செய்வது, குடி மக்களை வரையும் பாரபட்சமின்றி நடத்துவது, அரசின் அதிகாரங்களைத் தம் கையில் குவித்துக் கொள்வது ஆகிய மூன்று அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டிருந்தார். தமது புதிய குறிக்கோளாக வரம்பற்ற முடியாட்சியை ஏற்படுத்தவும், ஆப்கானிய அரசியல் அமைப்பு ஒழுங்கு முறையின் குறைபாடுகளைக் களையவும், அரசாட்சி நீடித்து நடைபெறவும் மேற்கூறிய மூன்று கொள்கைகளைத் துணைக் கொண்டார்.

நாட்டின் ஆட்சித் துறை பற்றிய ஒவ்வொரு காரியத்தையும் தாமே கவனித்து வந்தார். வருமானத்தைப் பற்றிய

விவகாரம் சிறியதாய் இருப்பினும் பெரியதாய் இருப்பினும் தம் சொந்தப் பொறுப்பில் கவனித்தார்.

*அமைச்சர்கள்*

ஷெர்ஷா அமைச்சர்களை வெறும் செயலராளர்கள் என்னும் அளவிலேயே வைத்திருந்தார். அவர்களுக்குச் சொந்தமாகக் கொள்கைகளை வகுக்கவோ புதிய சீர்திருத்த முறைகளைப் புகுத்தவோ சுதந்திரம் அளிக்கப்பட வில்லை. ஷெர்ஷாவின் ஆட்சி ஓர் ஒற்றை மனித ஆட்சி முறை (one man rule) என்று கருதப்படுகின்றது. ஷெர்ஷாவின் அமைச்சரவை யானது முக்கியத்துவத்தில் குறைந்தது. ஷெர்ஷா ஆட்சித் துறை பற்றிய ஏற்பாடுகளில் சொந்தமாகச் செய்தது யாது என்பது குறித்து அறிஞர்களிடையே விவாதம் தோன்றி யுள்ளது.

*நிறுவனங்கள்*

இந்திய வரலாற்று அறிஞர்கள் ஷெர்ஷாவை மிகச் சிறந்த போர் வீரர் என்றும் நிர்வாகத் திறமை சிறந்தவரே வாய்க்கப் பெற்றவரென்றும் கருதினர்கள். ஆனல் டாக்டர் கே. ஆர். கானுங்கோ அக் கருத்துகளைச் சிதறடித்து அக்ப ரைக்காட்டிலும் ஷெர்ஷா மிகப் பெரிய ஆக்கும் திறம் படைத்த மேதை என்றும், நாட்டை உருவாக்குபவரென்றும் தமது தனி நூலில் குறிப்பிட்டார். ஆயினும் டாக்டர் திரிபாதி, டாக்டர் சாரன் போன்றவர்கள் டாக்டர் கானுங்கோவின் கருத்துகளை ஏற்றுக் கொள்ளாது, ஷெர்ஷாவின் சாதனைகள் மிகைப்படுத்தப்பட்டுள்ளன என்றும், அவர் உண்மை யிலேயே ஓர் சீர்திருத்த வாதியே தவிர எதையும் ஆட்சித் துறையில் புதிதாகக் கண்டு பிடிக்கவில்லை என்றும் கூறினர். டாக்டர் ஸ்ரீ வத்சா தம்முடைய நூலில் ஷெர்ஷா உண்மையில் இடைக்கால இந்தியாவின் மிகச் சிறந்த நிர்வாகிகளில் ஒருவ ராக இருப்பினும் அவர் புதிய நிறுவனம் எதனையும் ஏற்படுத்த வில்லை; பழைய நிறுவனங்களுக்குப் புத்துயிர் கொடுத்தார்; இச் செயலில் அவர் வெற்றி கண்டமையால் இடைக்கால இந்தியாவின் நிறுவனத்தை முற்றிலும் மாற்றி அமைத்து மக்களுக்குப் பயனளிக்கும்படி செய்தார். நிருவாகப் பிரிவினை களும், கிளைப் பிரிவினைகளும் பழங்காலத்திலிருந்து பெறப் பட்டவையே என்று குறித்துள்ளார். அவர் அலாவுதீன் கில்ஜியி னுடைய இராணுவச் சீர்திருத்தங்களையே மேற் கொண்டி ருந்தார் எனவும் சொல்லப்பட்டது.

*வல்லாட்சியாளர்*

டெல்லிச் சுல்தானியத்தைச் சார்ந்த எல்லா ஆட்சியாளர்களைப் போலவே ஷெர்ஷாவும் ஒரு வல்லாட்சியாளரே ஆவார். வரம்பற்ற அதிகாரத்தைப் பெற்றிருந்த அவர் தமக்கு முன்னர் ஆண்டவர்களைப்போல் இல்லாது மக்களின் நலன் கருதி ஆட்சி செய்தார். அதனுல் அவரை நல நோக்கு வல்லாட்சியாளர் (Benevolent despot) என்று குறிப்பிடுகின்றனர். இருப்பினும் ஆட்சிமுறை பற்றிய கொள்கைத் தீர்மானமும் இராணுவ அதிகாரங்களும் அவரிடத்திலேயே இருந்தன. நாள்தோறும் நடத்த வேண்டிய நிர்வாகத்தின் பொறுப்பு அவருடைய அமைச்சர்களிடத்தில் இருந்தது. ஒரு கொள்கையை ஆரம்பித்து வைக்கவோ, அல்லது விவகாரங்களை நடத்தும் முறையிலோ அல்லது நிர்வாக அமைப்பிலோ மாறுதல் எதையும் கொண்டுவர அதிகாரமற்றவர்களாகவே அமைச்சர்களிருந்தனர். தனி ஒருவராக இருந்து பேரரசின் நலனை அமைச்சர்களின் உதவியின்றிக் கவனிப்பது இயலாததாகும். ஆகையினுல் ஷெர்ஷா சுல்தானியர்களின் காலத்தை ஒட்டி நான்கு துறைகளை அமைத்தார்.

*மைய அரசின் அமைப்பு*

அவைகள்: (1) திவானி விசாரத் (2) திவானி ஆரிஸ் (3) திவானி ரசாலாத் (4) திவானி இன்ஷா எனப்பட்டன. இவைகளைத் தவிர மேலும் திவானி காஜி, திவானி பரீத் என்னும் துறைகளும் இருந்தன. ஷெர்ஷாவின் கீழிருந்த மத்திய அரசின் அமைப்பு அடிமை அரசர்கள் (Slave rulers) என அழைக்கப்பட்ட அரசர்கள் காலந் தொட்டுத் துக்ளக்குகளின் காலம் முடியும் வரை ஆண்ட முந்திய டெல்லிச் சுல்தானியர்களின் அமைப்பைப் போலிருந்தது.

திவானி விசாரத் துறையின் (Diwani Wizarat) தலைவர் வசிர் என அழைக்கப்பட்டார். அவர் வருமானம், நிதி ஆகிய வற்றினைக் கவனித்த அமைச்சராவார். அது மட்டுமின்றி மற்ற அமைச்சர்கள் மீது தமது பொது மேற்பார்வை அதிகாரத்தைச் செலுத்தினர். ஷெர்ஷா இத் துறையில் மிகுதியாகத் தம் கவனத்தை வைத்திருந்தார். அக்பர் காலத்திய வரலாற்றறிஞர்களின் கருத்துகளிலிருந்து ஷெர்ஷா தமது அரசின் வரவு செலவு பற்றிய விவகாரங்களைத் தினமும் கேட்டறிந்து பர்கானுக்களிலிருந்து வர வேண்டிய பாக்கிகள் குறித்தும் விசாரித்தார் என அறிகிறோம்.

### ஆரிஸிமமாலிக் (Ariz-I-Mamalik)

திவானி ஆரிஸ் என்னும் துறைக்குத் தலைமை தாங்கியவர் ஆரிஸிமமாலிக் என்னும் அதிகாரி ஆவார். இவரை இராணுவ அமைச்சர் என்று கூறலாம். படையில் முதன்மைத் தளபதி அரசரே ஒழிய இவர் இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. ஆட்சிகளைத் தேர்ந்தெடுத்தல், அமைப்பு, ஒழுங்கு ஆகியவற்றின் பொறுப்பு இவரிடத்தில்தான் இருந்தது. படை வீரர்கள், அலுவலர்கள் அனைவருக்கும் ஊதியம் வழங்குவதையும், போர்க்களத்தில் படையின் நிலையைக் கவனிப்பதையும் இவர் கவனித்து வந்தார். இராணுவத்துறை மிக முக்கியமான ஒன்ருகையால் இத் துறையில் திவானி ஆரிஸியின் செயல் முறையில் ஷெர்ஷா அடிக்கடி தலையிட்டார். படை வீரர்கள் அரசரால் நேரடியாகப் பார்வையிடப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். படை வீரர்களின் ஊதியத்தையும் அவரே நிர்ணயித்தார்.

### தூதுவர்கள்

திவானி ரசாலாத் (Diwani Rasalat) அல்லது திவானி முஹ்தசிப் என்பது மூன்ருவது துறையாகும். இத் துறையின் அமைச்சரை வெளிநாட்டு அமைச்சர் என்று கூறலாம். இவருடைய பணிகள் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப் பட்ட தூதர்களுடனும், வெளிநாட்டிலிருந்து வந்த தூதர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருத்தல் ஆகும். சில சமயங்களில் அறக் கொடைத் துறையின் பொறுப்பையும் இவர் மேற்கொண்டார் என அறிகின்ருேம்.

திவானி இன்ஷா (Diwani 'Insha) என்பது நான்காம் துறையாகும். அரசு விளம்பரங்களையும், கடிதங்களை வரைவு செய்தலையும் இத் துறை அமைச்சர் செய்து வந்தார். ஆளுநர்களுடனும் மற்ற தல நிர்வாக அலுவலர்களுடனும் தொடர்பு கொள்ளுதலும் இவரது கடமை ஆகும். அரசாங்க ஆவணங்களும், பதிவுகளும் இவருடைய பொறுப்பில் இருந்தன.

### நீதித் துறை

திவானிகாஜி (Diwani Gazi) என்பவர் நீதி பரிபாலனத்தை மேற் பார்வையிடுவதும், வழக்குகளைத் தீர்த்து வைப்பதும் ஆகியவற்றைக் கவனித்தார். திவானி பரீத் (Diwani Barid) துறையின் தலைவர் பரீதிமமாலிக் என்னும் அதிகாரி ஆவார். இவர் ஒற்றர் துறைத் தலைவராவார். நாட்டில் நிகழும்

நிகழ்ச்சிகளை அரசனுக்குத் தெரிவிப்பது இவருடைய கடமையாகும். இவரின் கீழ்ச் செய்தி எழுதுபவர்கள் பலரும், ஒற்றர்களும் இருந்தனர். நகரங்களிலும் அங்காடிகளிலும் முக்கியப் பேட்டைகளிலும் ஒற்றர்கள் அமர்த்தப்பட்டனர். அரசரது இல்லம் அதனை ஒட்டியிருந்த பலவகை நிறுவனங்கள் ஆகியவற்றின் பொறுப்புகளை அரண்மனைச் சிறப்பு அலுவலர் என்னும் அதிகாரி பெற்றிருந்தார். அரசரது இல்லத்துறையினை நிர்வகித்து அதனை ஒட்டிப் பணி புரிந்த ஏவலர்களைக் கண்காணிப்பதும் இவரது பணியே ஆகும்.

### பேரரசின் நிர்வாகப் பிரிவு

ஷெர்ஷாவின் ஆட்சிக் காலத்தில் பேரரசின் நிர்வாகப் பிரிவினைகளைப் பற்றிய இரண்டு கருத்துகள் உள்ளன. சர்க்காரே உயர்நிலை பெற்ற பிரிவு எனவும் மாநிலங்களும் மாநில ஆளுநர்களும் அக்பரால் நிறுவப்பட்டவை எனவும் டாக்டர் கானுங்கோ கருதுகிறார். ஆனால் டாக்டர் சாரன் இக் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை அமீர் அல்லது ஆளுநர்க்கு மட்டுமே அவர்கள் கட்டுப்பட்டவர்கள். சர்க்கார் நல்ல முறையில் அரசாளப் பெறுவதற்கு அமீர் என்பவர் அரசருக்கே நேரடியான பொறுப்பு வாய்ந்தவராயிருந்தார். ஷிக்தார் மிகமுக்கியத்துவம் பெற்றவராவார். மதிப்பிற்குரிய படையையும் தம் கீழ்க் கொண்டிருந்தார். தலைமை ஷிக்தார் என்பவர் அமில்கள், குடிமக்கள் ஆகியோரின் நடவடிக்கைகளைக் கண் காணித்தல், மக்களை அமீன்களின் கொடுங்கோன்மையினின்றும் பாதுகாத்தல், அரசருக்குச் சேர வேண்டிய வருமானத்தை அமீல்கள் அபகரிக்காமல் பார்த்துக் கொள்ளுதல், எல்லைத் தகராறுகளைத் தீர்த்து வைத்தல், சட்டத்தை மீறிய நடவடிக்கைகளைத் தடுத்தல் முதலிய போலீஸ் பணிகளைப் பொதுவாகச் செய்து வந்தனர்.

### அமீர்கள்

அமீர் என்பவர் சர்க்காரின் ஆளுநராகப் பணியாற்றினார். சர்க்காரில் பணி புரிந்த எல்லா அதிகாரிகளும், அவரது ஆணைக்குட்பட்டே நடந்தனர். பொதுவான முறையில் அவர் எல்லா அதிகாரிகள் மீதும் தமது கட்டுப்பாட்டைச் செலுத்தினார். சர்க்காரின் நல்ல அரசுக்கும், வளத்திற்கும் அவரே இறுதிப் பொறுப்பு வாய்ந்தவராயிருந்தார். சர்க்கார்களை அமீர்கள் பொறுப்புடன் கவனித்தமையால் ஷெர்ஷா டில்லிச்

சர்க்கார் முதல் லக்னோ சர்க்கார் வரை எனக்குக் கவலைப்பட வேண்டியது ஒன்றுமில்லை என்று குறித்தார்.

### மற்ற அலுவலர்கள்

தலைமை முனிசிப்பு பெரும்பாலும் ஒரு நீதிபதியேயாவார். அவர் ஊரியல் வழக்குகளில் தீர்ப்பு வழங்க வேண்டியிருந்தது. அதே சமயத்தில் பர்கானாக்களில் உள்ள அமீர்களின் பணியையும் அவர் பார்வையிட்டார். முனிசிப்பின் பணிகளைச் சில சமயங்களில் பேரரசரே கண்காணித்தார். அதற்காக அவர் அவ்வப்போது நாட்டின் பல தொகுதிகளுக்கும் சென்று வருவது வழக்கம். ஃபௌஜ்தார் என்பவர் பெயரளவில் அமீருக்கு உட்பட்டவராயிருந்தாலும் உண்மையில் அவர் அரசருக்கே கட்டுப்பட்டவராயிருந்தார். தலைமை முனிசிப்பின் முன் அவ்வப்போது சூடு போடப்பட்ட குதிரைகளைக் கொண்டு வந்து கணக்கு ஒப்புவித்தல் அவரது கடமையாய் இருந்தது. உண்மையிலேயே ஃபௌஜ்தார் அமீர் அல்லது சர்க்காரின் ஆளுநர்க்குச் சகபாடியாக இருந்து பணியாற்றினர் எனவும், அந்தஸ்தில் அவர் அமீருக்குச் சற்றுத் தாழ்ந்தவராகக் கருதப்பட்டார் எனவும், குதிரைகள் சூடு போடப்பட்டதைக் கண்காணித்து வந்த தலைமை முன்சிப்பு ஃபௌஜ்தாரின் சக அதிகாரிகளில் முக்கியமானவர் எனவும் எச். என். சின்ஹா உரைக்கிறார்.

### பர்கானாக்கள்

ஒவ்வொரு சர்க்காரும் பர்கானாக்களைக் கொண்டதாக இருந்தது. ஷெர்ஷாவின் பேரரசில் இருந்த பர்கானாக்களின் எண்ணிக்கையைப் பற்றிக் கூறும் போது அப்பாஸ்கன் முதல் இக்கால வரலாற்று ஆசிரியர்கள் வரைப் பலரும் குழப்பத்தை விளைவிக்கின்ற முறையிலேயே எழுதி வைத்துள்ளனர். ஷெர்ஷாவின் ஆட்சிச் சக்கரத்தின் அச்சு பர்கானா ஆட்சியேயாகும். ஏனென்றால் பர்கானாக்களுக்குக் கீழே கிராமங்கள்தாம் இருந்தன. வஹியதி முஷ்டகி என்னும் நூலில் ஷெர்ஷாவுக்குட்பட்ட பிரதேசங்கள் எல்லாவற்றிலும் சேர்த்து மொத்தம் 13000 பர்கானாக்கள் இருந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. ஒவ்வொரு பர்கானாவிலும் ஒரு ஷிக்தாரையும் ஓர் அமீன் அல்லது முனிசிப்பையும், ஒரு போட்தாரையும், இரண்டு கர்கூன்களையும் ஷெர்ஷா நியமித்தார் என அறிகிறோம். வரி வசூல் செய்வதை ஷிக்தார் கவனித்துக் கொண்டார். சட்டத்தை மீறுபவர்களைத் தண்டித்தார். வரிவசூல் செய்யும்போது ஏற்

படுகின்ற வழக்குகளைத் தீர்த்து வைத்தார். பொதுவாக நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டினர். இவ்வாறு தமது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் அவசியமான பல போலீஸ் பணிகளைச் செய்து வந்தார். முனிசிப் என்னும் அதிகாரி எல்லைப் புறங்களிலுள்ள படைக் குதிரைகளின் அடையாளச் சூடுகளைப் பரிசிலனை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தார். அவருடைய முன்னிலையில்தான் ஒவ்வொரு மனிதனும் தனது குதிரைகளைக் கொண்டுவந்து காட்டிச் சூடுபோடுவித்துக் கொண்டான். அப்போது தன்னிடமுள்ள குதிரைகளின் கணக்கை ஒப்புவித்தான். அரசருக்குச் சேர வேண்டிய வரித் தொகைகளை வசூலித்த பின்னர் அமீர் அதைப் பொருளாளரிடம் அல்லது போட்தாரிடம் ஒப்படைத்தார். இரண்டு கர்கூன்கள் பொருளாளருக்கு உதவி செய்தனர். முனிசிப்பு வரி வசூல் சம்பந்தமான கணக்குகளையும், படையில் சூடு போடப்பட்ட குதிரைகளின் எண்ணிக்கையையும், ஒவ்வொரு போர் வீரனும் கொடுத்த கணக்கையும் குறித்து வைத்துக் காத்தார். பர்கானவில் கானுங்கோ என்னும் ஓர் அதிகாரி ஷெர்ஷாவின் காலத்துக்கு நெடு நாட்களுக்கு முன்பிருந்தே ஆட்சி செலுத்தினர். ஆனல் ஷெர்ஷாவின் காலத்தில் அவரது முக்கியத்துவம் பெரிதும் குறைந்தது. நிலவரியைத் திட்டம் செய்வதற்காக நிலங்களை அளக்க வேண்டுமென ஷெர்ஷா தீர்மானித்தபோது அத்தகையோரின் முக்கியத்துவமானது பெரிதும் குறைந்தது.

### கிராமங்கள்

பர்கானக்களுக்குக் கீழே கிராமங்கள்தாம் இருந்தன. ஒவ்வொரு கிராமத்திற்கும் இரண்டு சாதாரண அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் முக்கதம், (Muqqadam) பட்வாரி (Patwari) என அழைக்கப்பட்டனர். சௌகிதார் என்னும் கிராம அதிகாரிகளின் மூலம் அவற்றுடன் அரசர் தொடர்பு கொண்டிருந்தார். ஒவ்வொரு முக்கிய கிராமமும் ஒரு பொது நல ஆட்சியாக அமைந்திருந்தது. கிராமத்தைச் சார்ந்த முதியோர்களை உட்கொண்டிருந்த பஞ்சாயத்து ஒன்று பாதுகாவலுக்கும், ஆரம்பக் கல்விக்கும், சுகாதாரம், நீர்ப்பாசனம், மேலும் பல விவகாரங்கள் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்தது. வழக்குகளையும் அப் பஞ்சாயத்துத் தீர்த்து வைத்தது. ஷெர்ஷா குடியானவர்களோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களிடம் நேரில் விவகாரங்களைத் தீர்த்துக் கொள்ள விரும்பினலும் இதை இடையில் தரகர்கள்

இல்லாமல் அவரால் நிறைவேற்ற இயலவில்லை. வரி வசூல் செய்வதற்காக முக்கதங்களின் துணையை நாட வேண்டியிருந்தது. ஒவ்வொரு அறுவடையின் போதும் நிலத்தை அளக்க வேண்டுமென்றும், அந்த அளவுக்கு ஏற்பவும், விளைச்சலுக்கு ஏற்பவுமே வரிகளை வசூலிக்க வேண்டுமென்றும், அவர் ஆளுநர்க்குக் கட்டளை பிறப்பித்திருந்த போதிலும் முக்கதத்துக்கு அதில் பாதிப் பங்கைக் கொடுத்துவிட வேண்டுமென வும் அவர் ஆணையிட்டார். முக்கதங்கள் ஷெர்ஷா, இஸ்லாம்ஷா ஆகியோரின் காலங்களில் அவர்களுடைய சொந்தக் கிராமங்களின் எல்லைகளைப் பாதுகாத்து வந்தனர். கிராமங்களில் நடைபெறும் திருட்டு, கொலை, கொள்ளை ஆகியவற்றிற்கு அந்தக் கிராமங்களைச் சேர்ந்தவர்களே பொறுப்பானவர்கள் என்று வலியுறுத்தப்பட்டதோடு, திருட்டோ, கொலையோ ஓரிடத்தில் நடந்துவிட்டால், அந்த இடத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள முக்கதங்களைப் பிடித்துச் சிறை செய்து திருட்டுப் போன பொருட்களுக்கு ஈடுசெய்ய வேண்டுமென அமீர்களுக்கும், ஆளுநர்களுக்கும் ஷெர்ஷா கண்டிப்பான கட்டளை பிறப்பித்திருந்தார். இதிலிருந்து கிராமங்களின் அமைதிக்கும், ஒழுங்குக்கும் முக்கதங்கள் பொறுப்பு என அறிகிறோம்.

### படைகள்

ஷெர்ஷாவின் காலத்தில் படைகள் நாட்டின் பல பாகங்களிலும் வைக்கப்பட்டிருந்தன. ஷெர்ஷாவின் ஆட்சி முறையானது இராணுவப் பண்புடன் விளங்கியது. நாடெங்கும் படைகள் மிக விழிப்பாக ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தன. எல்லைப் புறங்களிலும், இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் மிக மிக விழிப்போடு கவனம் செலுத்தும் மிக வல்லமையுள்ள படைகளை அவர் நிறுத்தி வைத்தார். '1,50,000 குதிரைப்படை வீரர்களும், 25,000 காலாட்படை வீரர்களும் துப்பாக்கிகள் அல்லது விற்களை ஏந்தியபடி எப்போதும் இருந்து வந்தனர்' எனத் தரீக்-இ-ரஷர் ஷாஹி என்னும் நூல் குறிப்பிடுகின்றது. நாட்டில் ஏதாவதொரு பகுதியில் கலகம் ஏற்படுவதற்கான அறிகுறி ஏற்பட்டால் உடனே ஒரு படையை ஏவி, அங்கே போய்க் கலகக்காரரை ஒடுக்கும்படி ஆணை இடுவது அவர் வழக்கம். சம்பல், கன்னோசி சர்க்கார்களில் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டபோது அவர்களுக் கெதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### மாநிலங்கள் (Provinces)

அரசாங்கத் திட்டம் முழுவதையும் அவர் இராணுவ அடிப் படையிலேயே அமைத்து இருந்தார். மற்ற ஆப்கானிய அரசர்களைப் போலவே ஷெர்ஷா பெரிய இராணுவ ஆளுநர் பதவிகளை அமைத்திருந்தார் என்றும் இந்தியாவில் அக்பரின் ஆட்சிக் காலத்திற்கு முன்பே மாநிலங்கள் இருந்தன என்றும் கூறப்பட்டது. இந்த இரண்டு கருத்துகளும் பொருத்த மானவைகளாகத் தோன்றவில்லை. ஷெர்ஷா, இஸ்லாம்ஷா ஆகியவர்களின் காலத்தில் மாநிலங்களை ஒத்த நிருவாகப் பிரிவுகள் இருந்தன. ஆனால் அவைகள் பரப்பிலும், வருவா யிலும் ஒரு வகைப்பட்டவையாக இல்லை. அவை மாநிலங்கள் அல்லது சுபாக்கள் என்று வழங்கப்படாது இக்தாஸ் என்று வழங்கப்பட்டன. டெல்லியின் முந்திய சுல்தான்களின் ஆட்சிக் காலத்தில் மாநிலங்களின் மீது மைய அரசின் ஆதிக்கம் பெயரளவிற்கே இருந்து வந்தது. ஷெர்ஷாவின் காலத்தில் அது மிக மிக அதிகமாகவும், கடுமையாகவும் இருந்தது. ஷெர்ஷாவின் காலத்தில் லாகூர், பஞ்சாப், மாளவம், ஆஜ்மீர் போன்ற இராணுவ மாநில ஆட்சிப் பகுதிகள் இருந்தன. வங்காளத்தைப் பல சர்க்கார்களாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவினையும் ஓர் ஆப்கானிய அதிகாரியின் பொறுப்பில் விட்டார். முழு மாநிலமும் ஆப்கானிய ஊரியல் அதிகாரியின் பொறுப்பில், சிறு படையுடன் விடப்பட்டது. அவரது கடமை அரசு அதிகாரிகளினுடைய பணியை மேற்பார்வையிட்டு அவர்களுக்கிடையே உண்டான சச்சரவுகளைத் தீர்க்க வேண்டி டியது ஆகும். எந்த வகையான ஒருமைப்பாட்டையும், நிருவாக அமைப்பு, நீதி முறை ஆகியவற்றில் காணுவதற் கில்லை. உண்மையில் புல மாநிலங்களில் பணி புரிந்த அலுவலர்கள் பற்றியோ, அலுவல்கள் பற்றியோ, அவர்களின் எண்ணிக்கை பற்றியோ நாம் ஒன்றும் அறிய இயலவில்லை.

### சர்க்கார்கள்

ஒவ்வொரு மாநிலமும் பல சர்க்கார்களாகப் பிரிக்கப் பட்டு இருந்தது. ஷெர்ஷா பெரும் மாநிலங்களை அமைக்க வில்லை. நாட்டின் மிகப் பெரிய ஆட்சித் துறைப் பகுதிகளாக சர்க்கார்களே இருந்தன. சர்க்கார்கள் எல்லாம் அரச ராலேயே பிரிக்கப்பட்டு அரசரின் சொந்த அதிகாரி களாலேயே ஆளப்பட்டன. ஷெர்ஷாவின் ஆட்சித் துறை ஏற் பாட்டில் ஒவ்வொரு சர்க்காரும் பல அதிகாரிகளின் கண் காணிப்பில் விடப்பட்டிருந்தது.

### நிலமானியப் படை

சர்க்காரிலிருந்த அதிகாரிகள் தலைமை ஷிக்தார் (ஷிக்தாரி-ஷிக்தாரான்) Shiqdar-I-Shiqdaran தலைமை முனிசிப்பு (முன்சி:பி முன்சி:பான்) Munsif-I-Munsifan, :பாஜ்தார் (Faujdar) ஆவர். இம் மூவரும் சமமான அதிகாரம் படைத்த வர்களாக இருந்தனர். ஆப்கானிஸ்தானத்திலிருந்தும், காட்டின் மற்ற பகுதிகளிலிருந்தும் படை வீரர்களை வர வழைத்து அவர்களது தகுதி, திறமைகள் ஆகியவை களுக்கேற்பப் பதவி அளித்தார். ஆதலால் படையில் பெரும் பாலும் ஆப்கானியர்களே இருந்தனர் என்றாலும் இந்துக்கள் உட்பட வேறு இனத்தவரும் இருந்தனர். நில மானியப் படை திறமையற்றிருக்கும் என உணர்ந்து நிரந்தரப் படையொன்று நிறுவப்பட்டிருந்தது. ஊதியம் சிலருக்குப் பணமாகவும், சிலருக்கு ஜாகீர்களாகவும் வழங்கப்பட்டன.

### தனிப்பட்ட அக்கறை

வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து ஷெர்ஷா இராணுவத் துறையில் தனிப்பட்ட அக்கறை காட்டினார் எனவும், தாமே மிக விழிப்புடன் படை வீரர்களைக் கவனித்து அவர்களுடைய ஊதியத்தை நிர்ணயம் செய்தாரெனவும் அறிகிறோம். படை வீரர்களைத் தாமே கவனிக்கின்ற முறையினைத் தலைநகரில் மட்டுமே அரசர் மேற்கொண்டிருக்கலாமென்றும், மாநிலத் தலைநகரங்களில் பொது அதிகாரிகள் அனுமதிக்கப் பட்டிருக்கக் கூடுமெனவும் கூறப்படுகிறது.

அரசின் குதிரைகளை விற்றுவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பயனற்ற குதிரைகளைப் பயன்படுத்தவும் சிலர் முயன்றனர். இதைத் தடுக்க அலாவுதீன் கில்ஜி என்ன முறை களைக் கையாண்டாரோ அம் முறைகளே ஷெர்ஷாவினாலும் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் இலஞ்ச ஊழல் தவிர்க்கப்பட்டது.

ஒவ்வொரு படை வீரருக்கும் தனிப்பட்ட பற்றுதலாக இல்லாது அதிகாரபூர்வமான இணைப்பாக மாறியது. படை வீரர்களுக்குத் திறமை, ஆற்றியிருந்த பணி ஆகியவற்றின் அடிப்படையில்தான் பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

### ஊதியம்

ஷெர்ஷா ஜாகீர் முறையைக் கடைப்பிடிக்கவில்லை என வும் படை வீரர்களுக்கு ரொக்கமாக ஊதியம் வழங்கினார்

எனவும் தவறான கருத்து பரவியுள்ளது. பேரதிகாரிகளுக்கும் சிற்றதிகாரிகளுக்கும் ஜாகீர்கள் வழங்கப்பட்டன என்பதற்கு நமக்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. சிசாகான் என்பவரைச் சம்பல் பிரதேசத்தின் ஆளுநராக நியமித்தபோது உம்முடைய குடும்பத்துக்காகவும், பழைய குதிரை வீரர்களுக்காகவும் நாம் உமக்குக் கேண்ட் கோலா தில்ஹர் ஆகிய பர்கானாக்களை மானியமாக வழங்குகிறோம் எனக் கூறியதாகக் கூறப்படுகிறது. சாதாரண போர் வீரர்களுக்குக்கூட ஜாகீர்கள் வழங்கப்பட்டன. அதிகாரிகள் அரண்மனையில் பணிபுரிந்தாலும் சரி, நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் தொழில் புரிந்தாலும் சரி அவர்கள் வெவ்வேறு இராணுவப் பதவிகளை வகித்து வந்தனர் என்பதிலிருந்து அரசு சேவை இராணுவச் சேவையுமே என அறிகின்றோம். எல்லைப் புறங்களில் அல்லது தூரதேசங்களில் நியமிக்கப்பட்டிருந்த அரசு அதிகாரிகளுக்கும் ஜாகீர்கள் வழங்கப்பட்டன. வஹியத் என்னும் நூலின் ஆசிரியர் ஷெர்ஷாவின் காலத்தே ரொக்கமாக ஊதியம் பெற்று வந்த அனைவருக்கும் அவர் நிலத்தையும் பர்கானாக்களையும் வழங்கினார் என்று குறிப்பிடுகின்றார். இவை அனைத்திலிருந்தும் நாம் ஜாகீர் முறையானது நடைமுறையில் இருந்து வந்தது என அறிகின்றோம். படைகளில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் திறமையும் ஒங்குவதற்கு முனிசீப்புகள் கருவியாயிருந்தனர். போக்குவரத்து ஏற்பாடுகளும் படைவீரர்களுக்கான உணவு ஏற்பாடுகளும் வீரர்களிடமும் தளபதிகளிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. படைகள் சென்ற இடங்களிலெல்லாம் வியாபாரம் செய்பவர்களும் சென்றனர்.

**காஜிகள்**

சமயச் சட்டங்கள் அனைத்திலும் மிகச் சிறந்ததாகக் கருதப்படுவது நீதி வழங்கலே ஆகும் என்று ஷெர்ஷா உரைத்தார் எனச் சொல்லப்படுகின்றது. இடைக்கால இந்தியாவில் எல்லா முஸ்லிம் அரசர்களுமே நீதியின் மேம்பாடுபற்றி உயர்வான எண்ணங்களைக் கொண்டிருந்தனர். அப்பாஸ்கான் என்பவர் கூற்றிலிருந்து ஒவ்வோரிடத்திலும் ஷெர்ஷா நீதிமன்றங்களை ஏற்படுத்தியதாக அறிகிறோம். நீதி பற்றிய விவகாரங்களில் அரசரது தீர்ப்பே முடிவானது. உரிமை இயல் வழக்குகளை விசாரிக்க என்று **மீர் அடில்கள், காஜிகள்** ஆகியோர் நியமிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பண்டைக் காலந் தொட்டு இருந்துவரும் வழக்கத்தின்படி முதன் முறையாக விசாரிக்கப்படும் வழக்குகளையும், அப்பீலில் வரும் வழக்கு

களையும் அவரே விசாரித்தார். அரசருக்கு அடுத்தபடியாக நீதித் துறையின் தலைவராக முதன்மை காஜி இருந்தார். காஜியின் நீதிமன்றம் முறையீட்டு நீதிமன்றமாக (Appeal) இருந்த போதிலும் முதன் முதலாக விசாரிக்கப்படும் வழக்குகளிலும் தீர்ப்பளிக்கப்பட்டது. எல்லா மாவட்டங்களிலும் எல்லா முக்கிய நகரங்களிலும் ஒரு காஜி இருந்தார். நீதி வழங்கும் பொறுப்பை முதன்மை முனிசீப்பு ஏற்றிருந்தார். அத்தகைய பொறுப்புகளைப் பர்கானுவில் அமீன்கள் ஏற்றிருந்தனர். காஜிகள் குற்ற இயல் வழக்குகளையும், அமீன்கள் உரிமை இயல் வழக்குகளையும் விசாரித்து இருக்கக்கூடும். மிக நெருங்கிய உறவினர்களுக்கும் ஷெர்ஷா நீதி வழங்கும் முறையில் சலுகைகள் காட்டியதில்லை. நீதி வழங்கும் துறையில் நியாயமான அரசர் என்னும் புகழ் அவருடைய மறைவிற்குப் பிறகும் நெடுங்காலம் வரை நிலைத்திருந்தது. ஷெர்ஷாவின் ஆட்சிக் காலத்தில் ஒரு வியாபாரி அவரது பொருள் கொள்ளையடிக்கப் பட்டுவிடுமோ என்னும் அச்சமின்றி பாலைவனத்திலும் சொல்லலாம் என்று எழுதப்பட்டுள்ளது.

## வருவாய்

நிலத்தின் மீது விதிக்கப்பட்ட தீர்வைதான் அரசாங்க வருவாயின் முக்கிய மூலமாகும். வாரிசுகளில்லாத சொத்து, வாணிபம், தங்கச்சாலைகள், பரம்பரைச் சொத்து, உப்பு, ஜெஸியா எனப்படும் தலைவரி, போரின் போது கொள்ளையடிக்கப்பட்ட பொருள், நிலவரி ஆகியவை மைய அரசில் குறிக்கப்பட்டிருந்த வருவாயின் ஆதாரங்களாகும். பல வகையான தொழிற்சாலைகளில் உற்பத்தியாகின்ற பொருள்கள், மக்கள் நுகர்கின்ற பொருள்கள் ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்ட வரிகளின் மூலம் கிடைத்த வருவாய் தல வருவாய் ஆகும். நிலவரி நிர்வாக முறை ஷெர்ஷாவின் காலத்தில் முன்னேற்றம் பெற்றது. பீஹாரில் ஜாஹீர்தாராக இருந்து பெற்ற அனுபவம் நிலவரி நிருவாக முறையில் புதிய முறைகளைப் புகுத்திட ஷெர்ஷாவிற்குத் துணை புரிந்தது. சாகுபடி நிலங்கள் எல்லாம் சிறந்த நிலம், நடுத்தர நிலம், மட்டமான நிலம் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வகை நிலத்தின் விளைச்சலும் நிர்ணயிக்கப்பட்டது. அவற்றை ஒன்று கூட்டி மூன்றால் வகுத்து நிலத்தின் சராசரி விளைச்சல் கண்டுபிடிக்கப்பட்டது. விளைச்சலில் மூன்றில் ஒரு பங்கு அரசரின் பங்காக நிர்ணயிக்கப்பட்டுப் பணமாகவோ பண்டமாகவோ பெறப்பட்டது. அரசாங்கம் ஒவ்வொரு விவ

சாயிக்கும் ஒவ்வொரு பட்டா அளித்தது. அதில் அரசின் வேண்டுதல் அதாவது அரசுக்கு விவசாயி செலுத்த வேண்டிய வரி குறிப்பிடப்பட்டிருந்தது. ஒவ்வொரு குடியானவனும் கபூலியத் எனும் ஒப்புச் சாசனம் ஒன்றில் கையொப்பம் இட வேண்டியிருந்தது. ஒவ்வொரு குடியானவனிடத்திலும் இருந்த நிலத்தின் விவரங்களும், பரப்பளவுகளும் அவ்விரு பத்திரங்களிலும் குறிக்கப்பட்டிருந்தன. அரசாங்கத்தின் பங்கை நிர்ணயிப்பதற்காகக் கையாளப்பட்ட இது போன்ற முறை எல்லாக் காலங்களிலும் நாகரிக முதிர்ச்சியுற்றதும் மக்கள் பாராட்டுக்குரியதும் ஆகும். குடியானவரின் நலனில்ஷெர்ஷா மிக்க கருத்துச் செலுத்தினர். குடியானவர்களுக்குக் காட்டும் சலுகையினல் அரசாங்கம் பெருத்த இலாபத்தைப் பெறுகிறது என்று அவர் நம்பினர். நிலவரியை மதிப்பிடும் போது இளக்கமாக நடந்து கொள்ளும்படியும், வரி வசூலிக்கும் போது மிகக் கண்டிப்பாக இருக்கும் படியும், அதிகாரிகளுக்கு ஆணையிடப்பட்டிருந்தது. படை வீரர்கள் அணி வகுத்துச் செல்லும் போது பயிர்கள் மிதிக்கப் பட்டோ அல்லது வேறு எவ் வகையிலாவது சேதமுற்ருலோ அதற்கு இழப்பீடு அளிக்கப்பட்டது. தனிப்பட்ட குடியானவனுக்கும் அரசுக்குமிடையே நேரடியான தொடர்பு இருந்தது.

### செலவினங்கள்

அரச இல்லம், பொது இராணுவ நிறுவனங்கள் ஆகியவை முக்கிய செலவினங்கள் ஆகும். வருமானத்தின் பெரும்பகுதி கட்டடங்களைக் கட்டுவதிலும், சாலைகள், சராய்கள், மற்ற பொது நலப் பணிகள் ஆகியவற்றுக்கும் செலவிடப்பட்டது. போர்களுக்காக நிறைய பணம் செலவிடப்பட்டது. அறக்கொடை நிறுவனங்களின் மீதும் அரச வருவாயின் பெரும் பகுதி செலவிடப்பட்டது.

### சாலைகள்

சூர்களின் ஆட்சி இராணுவத் தன்மை வாய்ந்தது என்று கண்டோம். தங்களது ஆட்சியின் இராணுவத் தன்மையை ஓரளவு குறைக்க வேண்டி மக்களின் நலன் குறித்துப் பற்பல பொது நலச் செயல்களைச் செய்தனர். தமது பேரரசின் பல்வேறு பகுதிகளை இணைக்கக் கூடிய பல பாதைகள் அமைத்தனர். கௌர் பிரதேசத்திலிருந்து அயோத்தி வரை ஒன்றும், காசியிலிருந்து பர்கான்பூர் வரை இன்னென்றும், ஆக்ராவிலிருந்து ஜோத்பூர் வரை

இன்னொன்றும், பயானவிலிருந்து அஜ்மீர் ஜான்பூர் வரை இன்னொன்றுமாக நான்கு பாதைகளை அவர் அமைத்தார். பிரயாணிகளின் வசதிக்காக ஒவ்வொரு நெடுஞ்சாலையிலும் இரு 'கோஸ்' தூரத்திற்கு ஒன்றாக ஒவ்வொரு சராய் அல்லது சத்திரம் அமைக்கப்பட அவர் ஏற்பாடு செய்தார். ஒவ்வொரு சராயிலும் தண்ணீர்ப் பானைகள் யார் வேண்டுமானாலும் நீர் அருந்தித் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள வைக்கப்பட்டன. இந்துக்களுக்கு வேண்டிய சௌகரியங்களைக் கவனிக்கப் பிராமணர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். பிரயாணிகளுக்கு உண்ண உணவும் இருக்க இடமும் அளிக்கப்பட்டன.

### வரம்பற்ற இறைமை

இது வரையில் நாம் சூர் வம்சத்து அரசர்களின் ஆட்சித் துறை நிறுவனங்களைப் பற்றிக் கண்டோம். ஆனால் வரம்பற்ற இறைமையின் அளவுக்கு மேல் தங்களது சிறப்பை ஓங்கச் செய்திருந்த போதிலும் கோனாட்சியானது நிறுவன ரீதியில் சரியான அடிப்படை இல்லாமலே இருந்தது. அதிகாரச் செறிவை வெறுத்த அவர்கள் அரசரது வரம்பற்ற இறைமையையும் வெறுத்தனர். ஓர் அரசர் இறந்தபின் அவரது மூத்த மகனே பட்டத்திற்கு வரவேண்டும் என்னும் சட்டம் மதிக்கப்படவில்லை. மாபெருங் குற்றம் செய்தவராயிருந்தாலும் வெறுக்கத் தக்கக் கொடூரமான இயல்புடைய சுல்தானாய் இருந்தாலும் உயர் குடியினர் பெருங்குற்றமாக அதைக் கருதாது அவரை ஆதரித்தனர். கலீஃபாவினுடைய ஆதிக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவும், இந்தியாவில் அக் கலீஃபாக்களின் நிலையைத் தாங்கள் அடையவும் தீர்மானித்த சூர்கள் டில்லிச் சுல்தான்களால் கடைப்பிடிக்கப் பட்ட பழைய வழக்கங்களைக் கைவிட்டு, பின்னால் வந்த அக்பருக்கு வழிகாட்டிகளாக அவர்களை ஆக்கியது. ஷெர்ஷா சுல்தானாக உண்மையாகவே விளங்க எண்ணிய போது யாருடைய சம்மதத்தையும் பெறவும், தமது வல்லமையையும், பெருமையையும் நிலை நாட்ட யாருடைய தயவை எதிர் பார்த்தும் இருக்கவில்லை.

### கலீஃபா

ஷெர்ஷாவிற்கு முன்னர் ஆண்ட டில்லிச் சுல்தான்கள் அனைவரும் மறைமுகமாகவோ அல்லது வெளிப்படையாகவோ கலீஃபாவிற்கு வணக்கம் செலுத்தி வந்தனர். இவ்வாறு அவர்களுடைய இறைமையானது கலீஃபாவின்

மேலான அதிகாரத்தை அங்கீகரித்தமையால் பெரிதும் அளவில் சுருங்கியது. கலீஃபாவைத் தங்களுக்கு மேலானவர் என்று அவர்கள் கருதிக் கொண்டிருந்த வரையில் அவர்கள் வரம்பற்ற இறைமையைக் கொண்டாட முடியாத நிலையில் இருந்தார்கள். ஆனால் இத்தகைய நிலையிலிருந்து ஷெர்ஷாவும், அவருடைய சந்ததியார்களும் முதலில் விடுபட்டுத் தங்கள் இறைமையானது எவருக்கும் கட்டுப்படாதது என்பதை நிலை நாட்டினார்கள். ஷெர்ஷாவே தம்மைக் கலீஃபாவென வெள்ளி, செப்பு நாணங்களில் பொறித்துக் கொண்டார். சூர்கள் இறைமையின் உட்பொருளைத் தங்களது சொந்த வடிவத்திலேயே காண்பதில் பெரு வெற்றி பெற்றனர். எனவே கோனாட்சி என்பது சூர்களின் காலத்தில் ஒரு நிறுவனம் என்னும் முறையில் என்றும் இல்லாதவாறு சிறப்பில் உயர்ந்தது. சின்ஹா, 'இடைக்கால இந்தியாவில் வளர்ச்சி பெற்ற இந்த இறைமைக் கொள்கையானது இந்திய இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையின் வளர்ச்சிக்கு ஒரு பெருங் காணிக்கை' என்று கூறுகிறார்.

இறைமையின் உட்பொருளைத் தங்களின் சொந்த வடிவத்தில் கண்டது எவ்விதம் என்று ஆராய்கின்றபோது, அரசரே இறைமை அதிகாரம் வாய்ந்தவராகவும், நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும் தலைவராகவும் விளங்கியதோடு, தமது அதிகாரத்தையோ வல்லமையையோ காட்டிட யாருடைய துணையையும் அவர் நாடவில்லை. அரசர் தாமே செல்வாக்குப் பெற்றவராக நேரடியாக எல்லா விஷயங்களிலும் அதிகாரங்களின் இருப்பிடமாக விளங்கினார்.

ஆப்கானியர்களின் ஆட்சி முறையில் ஷெர்ஷாவின் ஆட்சி மட்டுமே போற்றத் தகுந்தது. ஷெர்ஷாவிற்குப் பின்னால் வந்த அக்பருக்கு ஆட்சித் துறையில் வழி காட்டியாக விளங்கியவர் ஷெர்ஷாவே ஆவார். ஷெர்ஷாவிற்குக் கிடைத்த அனுபவங்கள் ஆட்சித் துறையில் சிறந்த மாறுதல்களைத் தோற்றுவித்தன. ஆப்கானியர்களின் ஆட்சியில் மிகவும் புகழ் பெற்ற சிறப்பு மிக்க ஆட்சி ஷெர்ஷாவினுடைய ஆட்சியேயாகும்.

ஷெர்ஷாவிற்குப் பின்னரும் சூர் வம்சத்து ஆட்சி தொடர்ந்தது. ஆனால் ஷெர்ஷாவினுடையதைப் போல் சிறப்புப் பெறவில்லை. அக்பரின் காலத்திற்குள்ளேயே சூர் வம்சம் சிறப்பு இழந்தது. முகலாயர்கள் ஏற்றம் பெற்றனர்.

# 25. மராத்தியர்கள் ஆட்சி முறை

## சிவாஜியின் காலம்

## (Marathia Polity Under Shivaji)

### மரபுவழி

கிருஷ்ண தேவராயருக்குப் பின்னர் ஓர் இந்துப் பேரரசை நிறுவிய பெருமை சிவாஜியைச் சேர்ந்ததாகும். சிவாஜியினுடைய பேரரசு அவருடைய முன்னோர்களால் மரபுவழியே ஆளப்பட்டது அன்று. சிவாஜியினால் உருவாக்கப்பட்ட புதிய அரசு அது. தனித்தனியே பிரிந்து வாழ்ந்த மராத்தியர்களை ஒன்றாக இணைத்து ஒரு பேரரசைச் சிவாஜி நிறுவினார். சிவாஜி தோன்றுவதற்கு முன்னர் மராத்தியர் மேற்குத் தக்காணத்தில் அணுக்களைப் போலச் சிதறிக் கிடந்தனர். அவர்களிலே முதன்மையான குடியினர் தக்காணத்திலிருந்த முஸ்லிம் அரசுகளில் படைத் தலைவர்களாகவும், ஜாகீர்தார்களாகவும் பணியாற்றினர். மராத்தியர் ஒன்றுபட்ட ஒரே சமுதாயமாய் மராத்தியைப் பொது மொழியாகவும், இந்துச் சமயத்தைப் பொதுச் சமயமாகவும் கொண்டு வாழ்ந்தனர்.

### தேசிய இனம்

ஆனால் அவர்கள் மத்தியில் ஒரு குறைபாடு இருந்தது. அவர்கள் தேசிய இனமாக மாறுவதற்குரிய அரசியல் அதிகாரமும், உரிமையும் அவர்களிடத்து இல்லாமல் இருந்தது. குறைபாட்டை நீக்கி அவர்களை தேசிய இனமாக்கி அரசியல் அதிகாரமும் உரிமையும் உடையவர்களாக ஆக்கியவர் சிவாஜியே ஆவார். சிவாஜி மக்களிடம் மறைந்து கிடந்த சக்தியை வெளிப்படுத்தி அவர்களுக்குப் புது வாழ்வும் புதுத் தெம்பும் அளித்தார்.

### முடிசூட்டு விழா

பல பகுதிகளை வெற்றிகொண்டு உரிமை பெற்ற அரசனைப் போல் சிவாஜி ஆட்சி செய்தாலும் பீஜப்பூர் சுல்தான் அவரை ஒரு கலகக் காரராகவே கருதினர். சிவாஜி தம்முடைய வெற்றிகளைவிட முக்கியமான செயலைச் செய்ய வேண்டி யிருந்தது. முறையான முடி சூட்டு விழாவினை நடத்தி அரசர் என்னும் பட்டத்தைப் பெற வேண்டிய அவசியமும் இருந்தது. இங்குச் சிவாஜி ஏன் முடிசூட்டி அரசர் என்றுக வேண்டும் என் னும் கேள்வி எழலாம். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. முதலாவது காரணம் அக் காலத்திலிருந்த அரசுகளோடு சம நிலையில் தொடர்பு கொள்ளும் உரிமை அவருக்கு உண்டு என்பதை வலியுறுத்தற் பொருட்டேயாகும். இரண்டாவது அவரால் வெளியிடப்படும் ஆணைகட்கும், பிற அரசர்களோடு மேற்கொள்ளும் உடன்படிக்கைகளுக்கும் சட்ட முறையான நேர்மைத் தகவு அளித்திடற் பொருட்டும் அவசியமாயிற்று. மூன்றுவதாகச் சமுதாய நிலையில் சமமாகவோ உயர்வாகவோ இருந்த மராத்தியக் குடும்பங்கள் அவரது நிலைபற்றிய கருத்தை மாற்ற வேண்டியதற் பொருட்டும் அவசியமாயிற்று.

### இந்துப்பேரரசு

மராட்டிய அறிஞர்கள் இந்துப் பேரரசை நிறுவிட விரும்பி னர்கள். இந்துச் சாம்ராச்சியம் என்னும் கனவை நிறை வேற்ற வேண்டிய பொறுப்பு சிவாஜிக்கு ஏற்பட்டது. சிவாஜி யின் முடிசூட்டு விழாவினைப் பெருமளவு ஆடம்பரமாகக் கொண்டாடத் தீர்மானித்த அவர்களின் எண்ணத்திற்கு ஒரு தடை ஏற்பட்டது. பண்டைக் கால இந்து வழக்கமே அத்தடை ஆகும். க்ஷத்திரியர்களே பண்டைக் கால இந்து வழக்கப்படி அரசர் ஆக முடியும். சிவாஜி க்ஷத்திரியர் இல்லை யாதலால் பழைமைப் பண்பு கொண்ட வைதிகப் பிராமணர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.

### விஸ்வேஸ்வர்

எனவே சிவாஜி விஸ்வேஸ்வர் என அழைக்கப்பட்ட காகப்பட்டர் என்பவரை முடிசூட்டு விழாவினை நடத்தி வைக்க அழைத்தார். வேதங்கள், இந்துச் சமய முறைகள், இந்துச் சமய நூல்கள் ஆகியவற்றில் தேர்ந்தவரும் தற்காலப் பிரம்ம தேவர், வியாசர் என்றெல்லாம் அழைக்கப்பட்டவரும் ஆகிய காகப்பட்டர் சிவாஜியை க்ஷத்திரியராக ஏற்று முடிசூட்டினர்.

### காகபட்டர்

முடி சூட்டப்படுவதற்கு முன்னர் புகழ் படைத்த பல கோவில்களுக்குச் சிவாஜி சென்று வந்தார். இனி எவ்வாறு முடி சூட்டு விழா நடைபெற்றது என்பதனைக் காண்போம். பிரதாப்கார், சிப்சன் ஆகிய ஊர்களிலிருந்த கோவில்களுக்கு விலையுயர்ந்த பரிசுகளை வழங்கினர். 1674-ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஏழாம் நாளன்று அவர் தவமிருந்தார். அதன் பின்னர் காகபட்டரால் சிவாஜிக்குப் பூணூல் அணிவிக்கப்பட்டது. க்ஷத்திரிய முறைப்படி ஏற்கெனவே மணம் செய்திருந்த தமது இரு மனைவியரையும் மீண்டும் மணம் செய்து கொண்டார். சிவாஜி துவிஜி எனப்படும் இரு பிறப்பும் பெற்ற க்ஷத்திரிய ராக ஆக்கப்பட்டார். அப்போது காகபட்டரும் மற்ற பிராமணர்களும் மந்திரங்களை ஓதினர். பின்னர் சிவாஜி துலாதானம் செய்தார். தம் வாழ்நாளில் செய்த பாவங் களுக்குப் பரிகாரமாகத் தைல முழுக்காடினர். பிராமணர் களுக்குத் தங்கம், வெள்ளி, செம்பு, துத்தநாகம், தகரம், ஈயம் இரும்பு ஆகிய ஏழு உலோகங்களையும், சிறந்த ஆடைகள் முத லிய பல பொருட்களையும் தராசில் வைத்து ஒரு லட்சம் ஹூன்களையும் அளித்தார்.

### அமைச்சர்கள்

முடிசூட்டு விழாவன்று அரசர் அதிகாலையில் எழுந்து குல தெய்வத்தை வணங்கிய பின்னர் தமது குல குருவான பாலம்பட்டர், காகபட்டர் முதலான தலை சிறந்த பிராமணர் களை வணங்கித் தொழுது அவர்களுக்கு ஆடையும் அணிகலன் களும் வழங்கினர். தூய வெண்ணிற ஆடை அணிந்து பட்டத்து அரசி பக்கமிருக்கப் பொன் தகடு வேய்ந்த இருக்கையில் அமர்ந்தார். அரசியின் ஆடையின் நுனியும் அரசரின் ஆடை யின் நுனியும் முடியப்பட்டிருந்தன. இளவரசர்கள் அவர் களுக்குப் பின்னர் இருக்க, அமைச்சர்கள் எண்மரும் புண்ணிய ஆறுகளிலிருந்து கொண்டுவந்த நீரை அரசர், அரசியார், பட்டத்து இளவரசர் ஆகியோர் தலைகளில் தெளித்த போது வேத மந்திரங்களும் இசையும் முழங்கின. அதன் பின்னர் ஆரத்தி எடுக்கப்பட்டது.

### அரியணை

ஆரத்தி எடுக்கப்பட்ட பின்னர் அரசர் தம் உடையை மாற்றித் தம்மை அலங்கரித்துக் கொண்டு மூத்தோரையும் பிராமணர்களையும் வணங்கிவிட்டு அலங்கரிக்கப்பட்ட

அரியணையிருந்த மண்டபத்தினுள் நுழைந்து இசைக் கருவிகள் முழங்க அரியணையில் அமர்ந்தார். பிராமண அறிஞர்கள் மந்திரங்கள் ஓதக் காகப்பட்டர் வெண் கொற்றக் குடையைப் பிடித்து நின்றார். அதன் பின்னர் அரசர் தானம் வழங்கினார். அதன் பின்னர் அரசர் ஊர்வலமாகத் தெருக்கள் வழியே சென்றார்.

### புதிய அரசு

சிவாஜியினுடைய ஆட்சித் துறை நிறுவனங்களைப் பற்றிக் காண்பதற்கு முன்னர் நாம் ஒரு கருத்தை நினைவில் நிறுத்த வேண்டும். சிவாஜி ஒரு புதிய அரசை அமைத்தவர். அவருடைய அரசு புதிய இந்து அரசு. எனவே ஆட்சியை நடத்துவதற்குரிய நிறுவனங்களையும் புதிதாகவே அமைக்க வேண்டும். ஆனால் சிவாஜிக்கு ஆட்சி முறையை அமைத்திட முன்பு இருந்து வந்த அரசுகள் முன் மாதிரிகளாகவும் முகலாயப் பேரரசு ஒரு விளக்கமாகவும் அமைந்தன.

இடைக் காலத்தில் அரசர்கள் வல்லரசர்களாக விளங்கியதோடு அதிகாரம் அனைத்தும் உடையவர்களாகவும் விளங்கினர். எனவே சிவாஜியும் இடைக்கால அரசர்களைப் போல அதிகாரம் அனைத்தும் உடைய வல்லரசராக விளங்கினார். ஆனால் மற்ற அரசர்களுக்கும் சிவாஜிக்கும் ஒரு பெருத்த வேறுபாடு இருந்தது. இடைக் கால மற்ற அரசர்கள் மக்கள் நலனைக் கருதி ஆட்சி புரியவில்லை. ஆனால் சிவாஜியோ குடிமக்களின் நலம் கருதி ஆட்சி புரிந்தவர். எனவே அவர் நற்செயலாற்றும் விருப்பமுள்ள வல்லரசர் (benevolent despot) என்று அழைக்கப்பட்டார்.

### அஷ்டப்பிரதான்

அரசர் ஒருவர் மட்டுமே தனியாக ஆட்சி நடத்திவிட இயலாது. அதற்கு அமைச்சர்கள் என்போரின் துணை தேவைப்பட்டது. சிவாஜிக்கு உதவி செய்வதற்கு விஜயநகரப் பேரரசில் இருந்தது போல அஷ்டப்பிரதான் என அழைக்கப்பட்ட எண்மரைக் கொண்ட அமைச்சரவை இருந்தது. சிவாஜியினுடைய அமைச்சரவையினை இக்கால அமைச்சரவையோடு ஒப்பிடக் கூடாது. இக்கால அமைச்சர்கள் மக்களுக்குப் பொறுப்பானவர்கள். ஆனால் சிவாஜியின் அமைச்சர்கள் சிவாஜிக்கே பொறுப்பானவர்கள். அரசருக்கு அவர்களை எவ்விதக் காரணமுமின்றி நீக்கவும், பதவியிலிருத்தவும் அதிகாரம் இருந்தது. ஆயினும் அரசர் அவர்கள்பால் மிகுந்த நம்பிக்கை கொண்டு

அவர்களுக்குப் பொறுப்பான பணிகளை அளித்தார். அஷ்டப் பிரதான் எனப்படும் எண்மர் குழுவில் இருந்த அமைச்சர்கள் :

1. பேஷ்வா அல்லது முக்கியப் பிரதான்,
2. மஜ்ஙும்தார் அல்லது அமாத்யர்,
3. வாக்னிஸ் அல்லது மந்திரி,
4. தபீர் அல்லது சுமந்தா,
5. சர்னிஸ் அல்லது சச்சிவ்,
6. பண்டிட் ராவ்,
7. சேனாபதி,
8. நியாய தீஷ்

ஆகியோர் ஆவார்கள். எப்போது இக்குழு அமைக்கப்பட்டது என்பது தெரியவில்லை. முடி சூட்டு விழாவின் முன்னரும், பின்னரும் சிவாஜி இந்த அவையினரைக் கலந்தார். அஷ்டப் பிரதான் சிவாஜியினால் உருவாக்கப்பட்டது என்று கூற இயலாது. தபீர், சர்னிஸ், வாக்னிஸ், மஜ்ஙும்தார் ஆகிய பாரசீகச் சொற்கள் முகமதியர்களின் காலத்திலும் இப் பதவிகள் இருந்தன என்பதைக் காட்டுகின்றன. சிவாஜியின் காலத்தில் இக் குழுவினர் ஆயுள் முழுமைக்கும் என அப்பதவியில் அமர்த்தப்படவில்லை. ஆனால் பேஷ்வாக்களின் காலத்தில் இப் பதவிகள் மரபு வழியினவாயின. ஆறு சேனாதிபதிகள் சிவாஜியின் காலத்தில் நியமிக்கப்பட்டனர். இவர்கள் யாவரும் முன்னால் இருந்த சேனாதிபதிகளுக்கு உறவினர்கள் இல்லை. சிவாஜி எந்த அலுவலர்க்கும் ஜாகீர் வழங்கும் முறையை ஏற்காது ஊதியமே வழங்கினார்.

இராணடே என்பவர் அஷ்டப் பிரதான் என்னும் இக் குழுவினை அரசப் பிரதிநிதியின் செயற் குழுவோடு (Viceroy's Executive Council) ஒப்பிட்டுப் பேசுகின்றார். இந்த எண்மரின் பணிகளைப் பற்றி அறியும் போது மற்றொரு செய்தியையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். தங்களின் கீழ்ப் பணி புரிகின்றவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இவர்களுக்குக் கிடையாது. இவர்கள் வேலை நிமித்தம் வெளியிடங்களுக்குச் சென்ற போது பொறுப்பில் இருந்த முதல்விகள் என்பாரைக் கூடப் பேரரசரே பதவியில் அமர்த்தினார்.

இந்த அமைச்சர்களைவிடத் தகுதியில் குறைவில்லாத செயலர்கள் பலர் இருந்தனர். அவர்கள் சிட்னிகள் என அழைக்கப்பட்டனர்.

அஷ்டப் பிரதானியர்களுடைய துறைப் பணிகளை எட்டு எழுத்தர்கள் மேற்கொண்டனர். அவர்கள் முறையே திவான், மஜும்தார், பட்னிகள், சப்னிகள், கர்கானிக்கர்கள், சிட்னிகள், ஜமேதார், போட்னிகள் என அழைக்கப்பட்டனர்.

### ஆலோசனை

அரசர் பெரும்பாலும் அவர்களுடைய பணியில் குறுக்கிடுவது கிடையாது. ஆனால் கொள்கை வகுக்கும் விஷயத்தில் அரசர் தலையிடுவதுண்டு. அமைச்சர்களுடைய முக்கியப் பணி அரசருக்கு ஆலோசனை கூறுவதாகவே இருந்தது. அமைச்சர்களில் சிறப்பான இடத்தை வகித்தவர் பேஷ்வா என அழைக்கப்பட்டார். பேஷ்வா தமது சகாக்களாகிய மற்ற அமைச்சர்களின் மேல் மேலாண்மை கொண்டவர் அல்லர். அஷ்டப் பிரதான் என அழைக்கப்பட்ட எட்டு அமைசர்களில் பேஷ்வா என அழைக்கப்பட்ட முதலமைச்சர் முக்கியப் பிரதான் என அழைக்கப்பட்டார். நாட்டின் நலனுக்கும் பொது ஆட்சிக்கும் பொறுப்பானவராக இவர் விளங்கினர். இவரது முக்கியக் கடமைகள் மற்ற அதிகாரிகளைத் தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொள்வதும், ஆட்சித்துறையில் ஒத்திசைவை வளர்ப்பதும் ஆகும். மன்னர் இல்லாத போது அவருக்குப் பிரதிநிதியாகப் பணிபுரிந்தஇவர் அரசு கடிதங்கள், செய்தி மடல்கள் ஆகியவற்றில் மன்னருடைய முத்திரையில் தமது முத்திரையைப் பொறித்தார்.

### வரவு செலவுக் கணக்கு

வரவு செலவுக் கணக்குகளைச் சரிபார்த்து நாடு முழுவதையும் சார்ந்த அல்லது குறிப்பிட்ட மாவட்டங்களைச் சார்ந்த கணக்கு விவரப் பட்டியலின் மேல் கையெழுத்திடும் தணிக்கையாளர் அமாத்தியா அல்லது மஜீதார் என அழைக்கப்பட்டார்.

### வாக்கிய நவிஸ்

அரசருடைய அன்றாட அலுவல்களைச் சேகரித்துக் குறித்து வைக்கும் பணியினை மேற்கொண்டவர் வாக்கிய நவிஸ் அல்லது மந்திரி அல்லது நிகழ்ச்சித் தொகுப்பாளர் என அழைக்கப்பட்டார். மன்னர்களுக்கு எதிராகச் சதிகள் ஏதேனும் நடைபெற்றால் அதனை அறிந்து தடுத்திட வேண்டுவது இவர் கடமையாகும். எனவே அரசருக்கு வரும் அழைப்

பிதழ்களின் உண்மைத் தன்மையை ஆராய்தல், உணவுப் பொருள்களில் கச்சுப் பொருள்கள் கலந்துள்ளனவா என்று கண்காணித்தல் ஆகிய முக்கியப் பணிகளை இவர் மேற் கொண்டார் என்று தெரிகிறது.

### சச்சிவா

ஷுரு நவஸ் அல்லது **சச்சிவா** என்றழைக்கப்பட்ட கண் காணிப்பாளர் அரசரின் அஞ்சல்கள், அரசரின் அறிக்கைகள் ஆகியவை சரியான முறையில் எழுதப்பட்டுள்ளனவா எனக் கண்காணித்தார். அவ்வப்போது அவற்றில் காணப்பட்ட குறைபாடுகளும் திருத்தி அமைக்கப்பட்டன. பர்கானுக்களின் கணக்குகளைச் சரிபார்க்கின்ற பொறுப்பும் இவருடையதாகவே இருந்தது.

### சுமந்த்

அயல் நாடுகளுடன் உறவு, போர், சமாதானம் ஆகிய பிரச் சினைகளில் மன்னருக்கு ஆலோசனைகளையும், தக்க வழிகாட்டு தலையும் தந்து வந்தவர் **சுமந்த்** அல்லது **தபீர்** என அழைக்கப் பட்ட அயல் நாட்டுச் செயலாளர் ஆவார்.

### சாரிநௌபத்

**சாரி நௌபத்** எனப்படுபவர் உயர் படைத் தலைவர் ஆவார். சேனாபதி எனவும் அழைக்கப்பட்ட இவர் படையினைத் திரட்டி அதனை முறையாக அமைத்துக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கும் பொறுப்பினை மேற் கொண்டார். போர்க் காலங்களில் படைகளின் நிலையை ஒழுங்கு படுத்தினர்.

### தலைமைக் குரு

சாதரும் முஹதாகிப், பண்டிட் ராவ், தானதியக்ஷா என்றெல்லாம் அழைக்கப்பட்ட தலைமைக் குரு சமயச் சடங்கு களுக்கு நாள் குறித்தல் புறச் சமயத்தை ஒறுத்தல், அறக் கொடைகளுக்கு என அரசர் ஒதுக்கிய பெருந் தொகையைப் பிராமணர்களுக்குப் பகிர்ந்தளித்தல் ஆகிய தமது முக்கியக் கடமைகளைச் செய்து வந்தார். இவர் சமயச் சட்ட நடுவராக வும், அரசரின் பஞ்சாங்கமாகவும், பொது ஒழுக்கப் பாது காவலராகவும் விளங்கினர்.

### நியாயதீசர்

நாட்டின் உயர் நீதிபதி நியாயதீசர் என அழைக்கப்பட் டார். பொது ஆட்சித் துறை, படைத் துறை ஆகியவற்றைச்

சார்ந்த நீதி இவர் பொறுப்பாகும். நிலங்கள் பற்றிய உரிமைகள், ஊர்த் தலைவர் பதவி முதலானவற்றில் சட்ட முறையான தீர்ப்புகளுக்கு ஏற்பிசைவு அளிப்பது இவரது பொறுப்பாக இருந்தது.

*முத்திரை*

முகலாயர்களின் ஆட்சித் துறையினை நாம் நோக்கிய போது அரண்மனையில் பணிபுரிந்தாலும் சரி, வருவாய்த் துறையில் பணி புரிந்தாலும் சரி அரசு அலுவலர்கள் இராணுவத் துறைப் பணிகளையும் மேற்கொண்டனர் எனக் கண்டோம். அதைப் போலவே சிவாஜியின அமைச்சர்களில் பண்டிட்ராவையும், நியாயதீசரையும் தவிர மற்ற அனைவரும் படைகளுக்குத் தலைமை தாங்கவும் படை எழுச்சிகளை நடத்திச் செல்லவும் கடமைப்பட்டவர்கள். அரசர் தம் கடிதங்களில், உரிமைப் பத்திரங்களில், உடன்படிக்கைகளில் அரசருடைய முத்திரையோடு பீஷ்வாவின் முத்திரையும் காணப்பட்டது. அமாத்தியர், வாக்கிய நவிஸ், சச்சிவா, சுமந்த் ஆகியோரின் புறக் குறிப்புகளும் அவற்றில் காணப்பட்டன. நாட்டில் மொத்தம் பதினெட்டுத் துறைகள் அமைச்சர்களின் பொறுப்பிலும் மேற்பார்வையிலும் இருந்தன.

*பகர ஆள்*

சிவாஜியின் பேரரசு நான்கு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றும் ஓர் அரசப் பகர ஆளின் பொறுப்பில் இருந்தது. இந்த மாநிலங்களைத் தவிரத் தென் தார்வார் மாவட்டத்தையும், சுந்தா, பெட்னர் அரசுகளையும் உள்ளடக்கிய கனரா மேட்டு நிலங்களையும் சிவாஜி அநேகமாக வென்றடக்கினர். அவர் இறக்கும் போது அப் பகுதி அவரது ஆட்சிக்கு உட்பட்டு இல்லை. ஆனல் அது அவரது செல்வாக்கிற்கு உட்பட்டுத் திறையும் செலுத்தி வந்தது.

*பர்கானக்கள்*

மாநிலங்கள் பர்கானக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பர்கானவிலும் படைப் பிரிவு ஒன்றுடன் மாவட்டத் தலைவர் பணியாற்றியிருக்க வேண்டும். ஆனல் இத்தகைய உட்பிரிவுகளில் ஆட்சி பற்றிய விளக்கங்களை அறிய முடியவில்லை.

*படை*

நன்றியும், விசுவாசமும் உள்ள படைவீரர்களைக் கொண்டதாகப் படை விளங்கினலே அரசு சிறக்க முடியும். சிவாஜி

யின் படை அத்தன்மைத்தாகவே விளங்கிற்று. சிவாஜியின் படையில் 45,000 பாகா குதிரை வீரர்களும், 60,000 சிலாதார் குதிரை வீரர்களும், ஓர் இலட்சம் மாவ்லி காலாட் படையினரும் அடங்கியிருந்தனர். சிவாஜி பார்கீர்களுக்கு அளித்த 5,000 குதிரைகள் நீங்கலாக 32,000 பரிகளைத் தமது கொட்டில்களில் வைத்திருந்தார். அவரிடம் இருந்த யானைகளின் எண்ணிக்கை 1260 என்றும், 125 என்றும், 300 என்றும் பலவாறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. டாக்டர் ஸ்ரீவத்சா 300 என்னும் எண்ணிக்கையையே அதிகப் பொருத்த முடையதாகக் குறிப்பிடுகின்றார்.

### பாகா

சிவாஜியின் படையில் மிகச் சிறந்த பகுதி பாகா அல்லது அரச குதிரைப் படைதான். ஹவல்தாரின் கீழிருந்த பிரிவில் 25 பார்கீர்கள் (படை வீரர்கள்) இருந்தனர். ஐந்து ஹவல்தார்களுக்கு மேல் ஒரு ஜம்லாதாரும், பத்து ஜம்லாதார்களுக்கு மேல் ஒரு ஹஸாரியும் இருந்தனர். 1250 வீரரைக் கொண்ட பெரும்படைப் பிரிவிற்கு ஹஸாரி தலைவராவார். பாகாவில் பாஞ்ச் ஹஸாரியே மிக உயர்ந்த பதவியாகும். அரச குதிரைப்படை முழுவதற்கும் உயர் படைத்தலைவர் அல்லது குதிரைப் படையின் சாரி நௌபத் ஒருவர் இருந்தார். 25 வீரர்கள் அடங்கிய படைப் பிரிவில் நீர் கொண்டு செல்பவர் ஒருவரும் குதிரை மருத்துவர் ஒருவரும் இருந்தனர். சிலாதார் என்னும் மற்றொரு வகையான குதிரைப் படையினரும் பணிபுரிந்தனர். சிலாதார் தங்களுக்கு என்று சொந்தக் குதிரைகளையும் படைக்கலன்களையும் வைத்திருந்தனர். ஆனால் அவர்கள் பாகா குதிரை வீரர்களுக்குத் தாழ்ந்தவர்கள். ஆனாலும் குதிரைப் படையின் சாரிநௌபத்தின் தலைமையிலேயே அவர்கள் இருந்தனர்.

### காலாட் படை

படைத் துறையில் அடுத்த முக்கியப் பிரிவு காலாட் படையே ஆகும். இது ஒன்பது படை வீரர்கள் அல்லது தனிப் பட்ட வீரர்கள், பைக்கள் அடங்கிய சிறு படைப் பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு சிறு படைத் தலைவர் அல்லது நாயக் தலைவராக விளங்கினர். ஐந்து நாயக்குகளுக்கு மேல் ஒரு ஹவல்தாரும், இரண்டு அல்லது மூன்று ஹவல்தார்களுக்கு மேல் ஒரு ஜம்லாதாரும், பத்து ஜம்லாதார்களுக்கு மேல் ஒரு ஹஸாரியும் இருந்தனர். சாத்ஹஸாரி

எனப்படும் பதவி அதை விட உயர்ந்த பதவியாகும். சாத்ஹஸாரிகளுக்கு மேல் தலைவராகக் காலாட் படையின் சாரிநௌபத் விளங்கினர். 20,000 மாவ்லி படை வீரர்களைக் கொண்ட சிவாஜியின் காவற்படைப் பிரிவு பெரும் பொருட்செலவில் மிகச் சிறந்த முறையில் உடை, படைக் கலன்கள் பிற சாதனங்கள் ஆகியவற்றைப் பெற்றுத் திகழ்ந்தது.

### ஓய்வு

படை வீரர்களுக்கென்று செலவழித்திட நாட்டில் செல்வம் போதிய அளவு இருக்கவில்லை. எனவே அந்நியருக்குச் சொந்தமான பகுதிகளைத் தாக்கியே தமது படைகளுக்கு வேண்டிய பொருட்களைக் கொண்டு வருவது என்னும் பழக்கத்தினைச் சிவாஜி வைத்திருந்தார். மழைக் காலங்களில் படை வீரர்களுக்கு ஓய்வு கிட்டியது. தசராவிற்குப் பின்னர் மன்னர் தேர்ந்தெடுத்த பகுதியின் மீது படை கொண்டு சென்றனர். படை வீரர்கள் படை நடத்திச் செல்வதற்கு முன்னர் அவர்களிடமிருந்த பொருள்கள் குறித்த பட்டியல் தயாரிக்கப்பட்டது. அது போலவே அவர்கள் போர்க் களத்திலிருந்து திரும்பி வந்த போதும் இருந்த பொருள்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு இரண்டும் ஒப்பிடப்பட்டன. அப்படி ஒப்பிடப்பட்ட போது ஏற்கெனவே இருந்த பட்டியலில் இருந்ததைவிட அதிகம் இருந்தால் அப் பொருள்களை அரசு எடுத்துக் கொண்டது.

### தளவாடங்கள்

சிவாஜியின் படை எளிதில் இடம் விட்டு இடம் பெயரக் கூடியதாகவும், கட்டுப்பாடு மிகுந்ததாகவும் விளங்கிற்று; குறைந்த அளவு படைத் தளவாடங்களையே கொண்டு சென்றது. படையுடன் பெண்கள் வர அனுமதிக்கப்படவில்லை. படை வீரர்களுக்கு மட்டுமே இக் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை. அரசருக்கும் இத்தகைய கட்டுப்பாடு இருந்தது. எவ்வளவுக் கெவ்வளவு குறைந்த படைத் தளவாடங்களைக் கொண்டு செல்ல முடியுமோ அவ்வளவுக் கவ்வளவு குறைவானவற்றையே கொண்டு சென்றனர். அது பதினேழாம் நூற்றுண்டில் பிறரால் எதிர்த்து நிற்க முடியாத படையாகத் திகழ்ந்தது என்றல் அதற்குக் காரணம் ஒழுங்கான அமைப்பு, தீவிரக் கட்டுப்பாடு, அருமையான எளிமை முதலியனவே. சிவாஜி நிலையான போர்க் களங்களில் போர் செய்வதை விடக் கொரில்லாப் போர் முறையையே பெரிதும் பின்பற்றினர்.

நிதி வருவாய்

கெப்போலியனைப் போலத் தம்முடைய காலத்தில் ஊரியல் துறை நிறுவனங்களை (Civil) உருவாக்கி அமைத்தவர் சிவாஜி என்று இராணடே குறிப்பிடுகின்றார். சிவாஜியின் ஆட்சியின் கீழ் இருந்த விவசாயிக்குத் தான் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி அளவும் தெரிந்திருந்தது. எனவே எவ்வித வற்புறுத்தலுமின்றி அவர்களாகவே வரி செலுத்தினர் என்று கென்னடி குறிப்பிடுகின்றார்.

சிவாஜியினுடைய வருவாய்த் துறை அமைப்பு அவருடைய முழுக் கற்பனையில் உருவானது என்று கூற முடியாது. மாலிக் அம்பர் (Malik Ambar) என்பாரின் வருவாய் முறையினை அறிந்து தம் நாட்டிற்குப் பொருந்தும் வகையில் அதனைச் சிவாஜி மாற்றி அமைத்தார். மாலிக் அம்பர் முகலாய அரசில் தென்னாட்டில் வருவாய்த் துறை நிருவாகத்தைச் சீராக்கினவர்.

சிவாஜி கண் மூடித் தனமாக அம் முறைகளை அப்படியே பின்பற்றிவிட வில்லை. நில அளவைக்குக் கயிற்றினைப் பயன்படுத்துவதை மாற்றி நில அளவு கோல் ஒன்றினைப் பயன்படுத்தச் செய்தார். நில அளவையை அரசு உயர் அதிகாரிகள் மேற்பார்வையிட்டனர். அன்னஜி தாட்டோ என்பவர் நிலவரியை மொத்த வருவாயில் 33 சதவிகிதம் என்று ஏற்படுத்தினார். ஆனால் சிவாஜி அதனை 40 சதமாக உயர்த்தினார். நிலவரி விதிக்கப்படாத நிலங்களும் இருந்தன.

பயிரிடப்படாது இருந்த நிலங்களுக்கு வரி விதிக்கப்படவில்லை. ஆனால் பின்னர் அவற்றிற்கும் வரி விதிக்கப்பட்டது. சிவாஜியின் காலத்தில் மாநிலங்கள் ஸ்வராஜ்யா என்று அழைக்கப்பட்டன. ஸ்வராஜ்யங்கள் வருவாய் காரியங்களுக்காகப் பிராந்த்களாகப் பிரிக்கப்பட்டன. இரண்டு மூன்று மாவட்டங்கள் சேர்ந்து பிராந்த்கள் உருவாயின. இராணடேயின் கருத்துப்படி சிவாஜியின் கீழ் 16 மாநிலங்கள் இருந்தன.

அரசரால் நேரடியாக அமர்த்தப்பட்ட அலுவலர்கள் வரி வசூலித்து வந்தனர். முகலாயர்களின் காலத்தில் வருவாய்ப் பணிகளுக்கு மௌஜா, பர்கானு, சர்க்கார், சுபாக்கள் போன்ற பிரிவுகள் இருந்தன. சிவாஜி அவற்றை மாற்றி அமைத்தார். மௌஜங்கள், தார்ப்கள், பிராந்த்கள் என நாடு

பிரிக்கப்பட்டது. தார்ப்களை நிர்வகித்தவர்கள் அவில்தார், கார்க்குன் என அழைக்கப்பட்டனர். பிராந்தின் அலுவலர்கள் சுபேதார், முக்கிய தேசாதிகாரி ஆவர். அநேக பிராந்த்கள் சர்சுபேதார் என்பாரின் பொறுப்பில் இருந்தன. இவர்கள் சுபேதார்களைக் கண்காணித்தனர்.

அரசர், அலுவலர்களின் நடவடிக்கைகளை இரகசியப் படையினரைக் கொண்டு கண்காணித்தார். சிவாஜியினுடைய ஆட்சி முறையினைக் குறை கூறியவர் ஃபிரையர் (Fryer) என்பாராவார். அவருடைய கருத்துகளுக்கு அவ்வளவு மதிப்பு வைத்திட வேண்டுவதில்லை என்பதே பொதுவான கருத்து. ஏனென்றால் சிவாஜி தொடர்ந்து போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையால் சில தவறுகள் அவர் பார்வையில் படாமல் நேர்ந்திருக்கலாம்.

நிலவருவாய், சுங்கவரி தவிர நாணயச் சாலைகளிலிருந்தும் அரசுக்கு வருவாய் கிடைத்தது. சிவாஜியின் கருவூலத்தில் 32 வகைத் தங்க நாணயங்களும், ஆறு வகை வெள்ளி நாணயங்களும் இருந்தன.

நில அளவை

டாக்டர் சர்க்கார் குடியானவர்களை ஜமீன்தார்கள் ஆகியோருடைய கட்டுப்பாட்டின் கீழும் இல்லை யென்றும், நிலத்தைக் கவனமாகக் காதி எனப்படும் அளவு கோலினால் அளந்து முதலில் முப்பது சதவீதமும் பின்னர் மற்ற வரிகளை நீக்கியவுடன் நாற்பது சதவீதமும் வசூலிக்கப்பட்டது என்றும் கூறினர். அவர்கள் செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யப்பட்டுவிட்ட படியால் குடியானவர்கள் துன்புறுத்தப் படவில்லை. பஞ்சக் காலங்களில் விவசாயிகளுக்கு அரசின் கருவூலத்திலிருந்து கடன் கொடுக்கப்பட்டுப் பின்னர் தவணை முறையில் வசூலிக்கப்பட்டது என அறிகிறோம். டாக்டர் ஃபிரையர் என்பவர் சிவாஜியினுடைய நிதித் துறை ஆட்சியினைக் கடுமையான ஒன்று என்று கூறியுள்ளார். ஆனால் கிராண்டு டஃப் (Grant Duff) போன்றவர்கள் சிவாஜியின் வருவாய்த் துறையினைப் பாராட்டியுள்ளனர்.

சௌத், சர்தேஷ்முகி

சௌத், சர்தேஷ்முகி ஆகிய வரிகளின் மூலம் அரசுக்கு வருவாய் கிட்டிய அளவிற்கு நிலவரியிலிருந்தோ வேறு வழியி

லிருந்தோ வருவாய் கிடைக்கவில்லை. நிதி வேண்டி ஊரியல் துறையைவிட, இராணுவத் துறையையே சிவாஜி பெரிதும் நம்பியிருந்தார். சௌத் என்னும் வரி இரானடே என்பாரின் கூற்றின்படி மக்களுக்கு ஏற்படும் அபாயங்களிலிருந்து அவர்களைக் காத்திட அரசு விதித்த வரியாகும். மேலும் அவர் இதனைத் துணைப்படைத் திட்டத்தோடு ஒப்பிட்டு வெல்லெஸ்லி பிரபுவுக்கு சிவாஜியே வழிகாட்டி என்று உரைக்கிறார். டாக்டர் சர்க்கார் இதனைத் துணைபடைத் திட்டத்தோடு ஒப்பிடுவது தவறு என்று குறிப்பிடுகின்றார். சர்தேசாய் எதிரிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட திறையே சௌத் என்று உரைக்கின்றார். சுரேந்திரநாத் சென் என்பார் இது இராணுவத்துறை வரியே என்று உரைக்கின்றார்.

சிவாஜியின் நாடு இராணுவ அடிப்படையில் எழுந்த நாடு. பொருள் வேண்டினால் போர் செய்ய வேண்டிய நிலையிலேயே சிவாஜி இருந்தார். ஆனால் டாக்டர் ஜே. என். சர்க்கார் துணைப்படைத் திட்டத்தோடு இதனை ஒப்பிடுவது தவறு என்று கருதுகின்றார். சர்தேசாய் என்னும் வரலாற்றாசிரியர் எதிரிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட திறையே சௌத் என்று உரைக்கின்றார். மேலும் அவர் மேற்கு இந்தியாவில் சிவாஜிக்கு முன்னரே அம்முறை இருந்தது என்று கூறுகின்றார். படையெடுத்துச் சென்று வெற்றி பெற்ற நாடுகளிடமிருந்தும், மற்ற படையெடுப்புகளிலிருந்தும் அவற்றைக் காத்திட வசூலித்தார். சர்தேஷ்முகிக்கும், சௌத்துக்கும் உள்ள வேறுபாட்டினை ஸ்ரீ வத்ஸா பின் வருமாறு குறிப்பிடுகின்றார்.

### சௌத்

சிவாஜியின் முக்கிய வருவாய் இனமாக இருந்தது சௌத் வரியாகும். திறை செலுத்துமாறு செய்வதற்காகச் சிவாஜி தாக்கிய அண்டை நாடுகளுக்குச் சொந்தமான பகுதிகளின் நிலையான வருவாயில் நான்கில் ஒரு பங்கினைக் கொள்வது வழக்கமாகும். ஒவ்வொரு ஆண்டும் சௌத் வரியினைக் கொள்வது வழக்கம். சர்தேஷ்முகி அல்லது இத்தகைய நாடுகளின் நிலையான வருவாயில் பத்தில் ஒரு பங்கு கொள்வதும் மற்றொரு முக்கிய வருவாய் மூலமாக இருந்தது.

### சர்தேஷ்முகி

தேசாய் என்னும் சொல் தேசஸ்வாமி அல்லது தேஷ்முக் என்னும் வடமொழிச் சொல்லின் திரிபாகும். சர்தேஷ்முக் என்பவரின் கீழ் அநேக தேசாய்களும், தேஷ்முக்குகளும் பணி

யாற்றினர். சர்தேஷ் ஆற்றிய பணிகளுக்கு வழங்கப்பட்ட ஊதியம் சர்தேஷ்முகி என அழைக்கப்பட்டது. சிவாஜி பரம்பரை சர்தேஷ்முக்காகக் கருதப்பட்ட படியால் பத்துச் சதவீதம் அதிகமாகக் கேட்டார்.

### நீதித் துறை அமைப்பு

சிவாஜியினுடைய காலத்தில் நீதித்துறை அமைப்பு எவ்வாறு இருந்தது என அறிகின்ற போது அது மிகவும் பழமையான ஒன்ருக இருந்தது என்பதனை அறிகிருேம். நீதி மன்றங்கள் என்று வழக்கு மன்றங்கள் ஏதும் முறையாக ஏற்படுத்தப்படவில்லை. கிராமங்களில் ஏற்பட்ட வழக்குகளைப் பஞ்சாயத்துகளே தீர்த்து வைத்தன. குற்றவாளியை அறியப் பரிசோதனை முறை இருந்தது. குற்ற இயல் வழக்குகளைப் பட்டேல்கள் விசாரித்தனர். சிவில் கிரிமினல் வழக்குகளில் தோன்றிய மேல் முறையீடுகளை நியாயாதீஷ் என்பவர் கேட்டார். ஹஸீர் மஜ்லீஸ் என்பதே மேல் முறையீட்டு (உயர் நீதி) மன்றமாக விளங்கியது.

### இந்து ஒற்றுமை

சிவாஜியினுடைய ஆட்சி சிறிது காலமே நடைபெற்ற படியால் தன் நிலையை அவரால் உறுதிப் படுத்த முடியவில்லை. மராத்திய சமுதாய அமைப்பும் அதற்குத் தடையாக இருந்தது. மராத்தியர்களுக்குள் பல பிரிவுகள் இருந்தன. அதைப் போல் குடி மக்களின் அறியாமையும் அதற்குக் காரணமாயிற்று. சமுதாய முன்னேற்றத்துக்கான செயல்களையோ மராத்தியர்களை ஒன்று படுத்துவதற்கான செயல்களையோ அவர் மேற்கொள்ளவில்லை. சிவாஜியினுடைய நோக்கம் மகாராட்டிரத்தில் வாழ்கின்ற இந்துக்களை விடுதலை செய்வது மட்டுமன்று. ஆங்காங்கே சிதறிக் கிடந்த இந்துக்களை ஒன்று படுத்துவதே அவர் நோக்கமாக இருந்தது.

### கல்வி

சிவாஜி நேரடியாகக் கல்விப் பணிக்கு ஏதும் செய்யவில்லை. அரசினால் ஏற்படுத்தப்பட்டு அரசு உதவியினால் நடைபெற்ற பள்ளிகள் ஏதும் இல்லை. ஆயினும் சிவாஜியின் அவையில் புலவர்கள் பலர் இருந்தனர்.

### பொது இராணுவம்

சிவாஜியின் பொது இராணுவ நிர்வாகம் அக்கால மக்களின் தேவையை அனுசரித்தே தோன்றியது. எப்போதும்

போரில் கலந்து கொண்டிருந்தமையால் சிவாஜியினால் ஆட்சித் துறைச் சீர்திருத்தத்தில் முழுக் கவனம் செலுத்த இயல வில்லை.

சிவாஜி தம்முடைய முப்பத்தைந்து ஆண்டு அரசியல் வாழ்க்கையில் ஓர் அரசை மட்டும் உருவாக்கவில்லை. ஒரு நாட்டையே உருவாக்கினார் என்று சொல்லலாம்.

*நிலை பெருமை*

ஏன் சிவாஜியின் ஆட்சித் துறை நிறுவனங்கள் நிலைபெற வில்லை என்னும் கேள்விக்கு மராத்தியர்களிடையே இருந்த சாதிப் பிரிவுதான் காரணம் என்று டாக்டர் சர்க்கார் குறிப்பிடு கின்றார்.

*முகலாயர்களின் சாயல்*

இனி மராத்தியர்களுடைய ஆட்சித் துறை நிறுவனங்களில் முகலாயர்களின் பிரதிபலிப்பு எவ்வளவு இருந்தது என்று காண்போம்.

முகமதிய சுபேதார்கள் இருந்த இடத்தினை மராத்திய சுபேதார்களும், முகலாய சுல்தானின் இடத்தை மராத்திய சத்திரபதியும் நிரப்பினர். அரசின் வருவாய்த் துறைக் குறிப் புகள் பாரசீக மொழியிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டன.

இந்துச் சட்ட அறிஞர்களின் சட்டங்கள் முகலாய ஆட்சி யாளர்களால் பின்பற்றப்பட்டன. முகலாய ஆட்சி முறை களைப் பின்னர் மராத்தியர்கள் தொடர்ந்தனர். எனவே பழைய இந்துக் கோட்பாடுகளே தொடர்ந்தன.

நில வருவாய்த் துறையில் முஸ்லிம் சட்ட அறிஞர்கள் நிலத்தின் வளம், நிலத்தில் விளையும் பயிர், பாசன முறை ஆகியவற்றை மனத்தில் வைத்தே நிலங்களைப் பிரித்தனர். அம் முறையையே மராத்தியர்களும் பின்பற்றினர்.

நில வருவாயினை வசூலிக்கும் முறை முகலாயர் காலத்தும் மராத்தியர் காலத்தும் ஒன்றாகவே இருந்தது. கிராமத் தலைவர் வரி வசூல் செய்ய அதனைக் கிராமக் கணக்கர் கணக்கில் வைத்தார். வரியில்லா நிலங்கள் என்று சில ருடைய நிலங்களுக்கு வரி விதிக்கப்படாமல் முகலாயர்கள்

காலத்தில் இருந்த முறையையே மராத்தியர்களும் பின் பற்றினர்.

விஜய நகரப் பேரரசின் காலத்தில் இருந்து அக்பர், ஜஹாங்கீர் போன்ருேரால் நீக்கப்பட்ட வரிகள் மராத்தியர் களின் காலத்தில் மீண்டும் விதிக்கப்பட்டன. அத்தகைய வரிகளில் ஒன்று கல்யாண வரியாகும். மரங்களின் மீது விதிக் கப்பட்ட ஜட்ஜ தோரரா என்னும் வரி மற்ருெரு வரியாகும்.

வருவாய்த் துறையை விட இராணுவத் துறையிலேதான் முகலாயர்களின் பிரதிபலிப்பை அதிகமாகக் காண்கிருேம். அரசரால் நேரடியாகவே இராணுவத்தினர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். முகலாய அரசர்கள் படை வீரர்களுக்கு முழு ஊதியமாக வழங்காது பாதி ஊதியமும், பாதி ஊதியத் திற்கு ஆடைகளும் வழங்கினுர்கள். சிவாஜியின் காலத்திலும் அத்தகைய முறை பின்பற்றப் பட்டது.

போரில் திறமையோடு பணியாற்றியவர்கள் முகலாயர் கள் காலத்தில் கௌரவிக்கப்பட்டது போலவே, மராத்திய ஆட்சிக் காலத்திலும் கௌரவிக்கப்பட்டனர்.

டாக்டர் சர்க்கார் சிவாஜியைப் பற்றிக் குறிப்பிடுகின்ற போது மனிதர்களிலே அரசன் எனவும் தேசியப் படை ஒன்றை உருவாக்கிய வீரர் என்றும் குறிப்பிடுகின்ருர். டாக்டர் சர்க்கார் கூறுவது போல சிவாஜி மராத்திய அரசை மட்டும் உருவாக்கியவர் அல்லர். இடைக்கால இந்தியாவினை உருவாக்கும் ஆற்றல் பெற்ற மேதை என்றே குறிப்பிடலாம்.

# 26. முகலாயர் ஆட்சி அமைப்பு முறை

## (Moghul Polity)

முகலாயரின் ஆட்சிக் காலத்தினை இந்திய வரலாற்றின் சிறப்பு மிக்க காலங்களில் ஒன்று என்று கூறலாம். ஏனென்றால் முகலாயர்களின் ஆட்சிக் காலத்தில் சமயத் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் மாறுதல்கள் பல தோன்றின. அது மட்டுமின்றி ஆட்சியியல் துறையிலும் பகுத்தறிவின்பாற்பட்ட நல்லாட்சி ஏற்படத் தொடங்கியதும், சமயம், கலை, பண்பாடு ஆகிய எல்லாத் துறைகளிலும் அரும் பெருஞ் செயல்கள் நிகழ்த்தப் பெற்றதும், முகலாயர்கள் காலத்தில்தான் என்று கூறவேண்டும். இக் காலத்தின் இடையில் ஏற்பட்ட பதினைந்து ஆண்டு சூர் வம்சத்து ஆட்சி இடைவெளி தவிர ஏனைய காலமெல்லாம் ஊக்கமும் ஆக்கமும் நிரம்பப் பெற்றவையே. அக்பரின் ஆட்சிக் காலம் பதினாறும் நூற்றாண்டின் பாதியளவு காலத்தைக் கவர்ந்து கொண்டிருக்கிறது.

*பானிப்பட்டிற்குப் பின்*

முஸ்லிம்கள் இந்தியாவை வென்ற வரலாற்றில் முகலாயர்களின் வெற்றி மட்டும் ஒரு தனிச் சிறப்பைப் பெறுகிறது. முகலாயர்களின் வெற்றி என்று கூறத் தகுந்த உண்மையான வெற்றி பாபரின் வெற்றிக்கு முப்பது ஆண்டுகள் கழிந்த பின்னரே அதாவது அக்பரின் காலத்திலேதான் தொடங்கியது. அவ்வெற்றி பதினாறும் நூற்றாண்டு முழுவதும் தொடர்ந்தது. பதினாறும் நூற்றாண்டின் முதல் கால் பாகத்தை மட்டும் ஆராய்வதில் பயனேதுமில்லை. பாபர், ஹுமாயூன் ஆகியோர் ஆட்சித் துறையில் கடைப் பிடித்த முறைகளைவிட அக்பர் கையாண்ட முறைகளையே முதலில் நாம் மிகவும் கவனமாக ஆராயவேண்டும். ஏனென்றால் பானிப்பட்டில் பாபர் பெற்ற வெற்றி அவரை இந்தியா முழுவதற்குமான பேரரசராக ஆக்குவதற்குப் போதுமானதாக இல்லை. அவர் சாதிக்க

வேண்டியன மேலும் பல இருந்தன. அவற்றையெல்லாம் நிறைவேற்றுமுன் அவர் இறந்துவிட்டார். ஆனால் அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த ஹுமாயூனே போதிய திறமையற்றவர். அவரது திறமையின்மை, அப்பாவித்தன்மை ஆகியவை காரணமாக அரச பதவியிலிருப்பவர்கள் என்றுமே அனுபவித்திராத துன்பங்களை அவர் அனுபவித்தார்.

அக்பர் தமக்கு முன்னால் ஆண்டவர்களின் தன்மையை நன்கு உணர்ந்து, அதுவரை இந்துக்களின் உள்ளத்தில் தோற்றுவிக்கப்பட்ட காழ்ப்புணர்ச்சிகளைக் களைய அவர்கள் பால் நட்புணர்ச்சியையும், நல்லுணர்வையும் காட்டினார். தமது தனித்தன்மையை அக்பர் தமக்கு ஏற்பட்ட இடையூறுகளை வென்று வெளிப்படுத்தினார்.

### இந்தோ-இஸ்லாமிய அமைப்பு முறை

இந்தோ-இஸ்லாமிய அமைப்பு முறை அக்பரின் காலத்திலேதான் தனது வளர்ச்சியின் உச்சநிலையை அடைந்தது. அக்பருக்கு முன்போ பின்போ இந்தோ-இஸ்லாமிய அமைப்பு அத்தகைய உச்சநிலையை அடையவில்லை என்று கூறலாம். இறைமை என்னும் சொல்லின் உண்மைப் பொருளாக, இறைமையின் உறைவிடமாக அக்பர் விளங்கினார். இறைமாட்சியைச் செயற்படுத்த அக்பர் கடைப்பிடித்த முறையானது இஸ்லாமிய அரசியல் கலையில் பயன் படுத்தப்படும் முறைகளிலே ஒரு புரட்சியைத் தோற்றுவித்தது.

### அரசுரிமை

அரசுரிமை பற்றிய கோட்பாடுகளையும், மரபுகளையும் அக்பர் தம் வழிமுறைச் சொத்தாகப் பெற்றார். அரசுரிமை இறைவனிடமிருந்து தோன்றியது, இறைவனின் சாயையாக நிற்பது ஆகியவையும், அரசியல் துறையில் தனித்தன்மை, சமயத் துறையில் தலைமை ஆகியவையும் முகலாய அரசுரிமையின் பண்புகளாகக் கருதப்பட்டன. அரசரை உலகில் வாழும் இறைவன், சமய விளக்கம் செய்ய வந்தவர், அரசியல் இறைமையின் உறைவிடம், காலத்தின் போக்கை ஆக்குபவர் என்றெல்லாம் இந்துக்கள் கருதியது போலவே முகலாயர்களும் கருதினர். இந்துக்களுக்கும், முகலாயர்களுக்கும் பொதுவான ஒரு குறிக்கோளை வகுப்பதில் இந்துக்களின் உதவியை அக்பர் பயன்படுத்தி அதன் மூலம் ஆள்கின்றவர்கள், ஆளப்படுகின்றவர்கள் ஆகியோரிடையே இருந்த

வேற்றுமை உணர்ச்சி மறைந்து, அரசியல் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் பொதுவான ஒரு குறிக்கோளையும், மரபுரிமையையும் உருவாக்க வாய்ப்பு ஏற்படுத்தினர்.

### முஜ்தாஹித்

அக்பர் நிலைநாட்ட விரும்பிய அரசுரிமையின் தன்மை யாது? சமயத் துறைத் தலைமையும், அரசியல் துறைத் தலைமையும் ஒருவரிடமே அதாவது தம்மிடமே இருக்க வேண்டும் என்பதில் அவர் பெரிதும் அக்கறை காட்டி அக்குறிக்கோள் நிறைவேறப் பாடுபட்டார். வெளிப்பார்வைக்குப் பிறரைப் பின்பற்றுவது போல அக்பர் காட்டிக் கொண்டாலும் உண்மையில் முஜ்தாஹித்தாக (முஸ்லிம் சட்ட விளக்கம் பெறும் தகுதி நிலையர்) தோற்றமளிக்க விரும்பினர். முஜ்தாஹித் என்னும் பட்டத்தோடு மட்டும் திருப்தி அடைந்து விடாது சுல்தான்-இ-ஆடில் அல்லது இமாம்-இ-ஆடில் என்னும் அதை விட உயர்ந்த பட்டத்தையும் சூட்டிக் கொண்டார். சமயச் சார்புடைய காரியங்களிலும், அரசைச் சேர்ந்த செயல்களிலும் தமது அதிகாரம் தனித் தலைமையுடன் விளங்க வேண்டுமென எண்ணி அதற்கேற்ப நடந்து கொண்டார்.

### இரு கடமைகள்

அக்பர் நிறைவேற்ற விரும்பியவை இருவகைக் கடமைகள். அவர் இஸ்லாமியச் சமூகத்தின் இணையற்ற தலைவராக விரும்பியதோடு நேர்மையோடும் நீதியோடும் ஆட்சி புரிகின்றவராகவும் ஆக விரும்பினர். இந்த இரண்டு கடமைகளும் நிறைவேறினாலன்றி முகலாய ஆட்சி இந் நாட்டில் வேரூன்ற முடியாது என்பதை அக்பர் நன்கு உணர்ந்தார். இங்கு ஒரு சிக்கல் எழுகின்றது. இஸ்லாமியச் சமூகத்தின் இணையற்ற தலைவராக விளங்க வேண்டுமாயின் இஸ்லாமின் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும். இஸ்லாமிய வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டுமாயின் மற்ற சமயங்களை எல்லாம் ஒழித்து விட்டு உண்மையான இஸ்லாம் சமயம் மட்டுமே நாட்டில் பரவிடச் செய்ய வேண்டும். ஆனல் நீதியோடும் நேர்மையோடும் ஆட்சி செய்தால்தான் மற்ற சமயத்தவரின் ஆதரவைப் பெற்று ஆட்சியை நிலை பெறச் செய்ய முடியும்.

### முரண்பட்ட நிலை

இவ்விதம் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலைகளில் நின்று செயல் புரிவது என்பது மிகவும் கடினமான காரியம்

ஆயினும் சுல்தான்-இ-ஆடில் என்னும் (நடு நிலையோடும், நீதியோடும் ஆட்சி புரியும் அரசர்) பதவிக்கு அதிக முக்கியத்துவம் அளித்தார். பேரரசு, இஸ்லாம் இவை பற்றிய சிக்கலில் நேர்மை நெறிக் கொள்கையைக் கடைப்பிடித்தார். இஸ்லாமியக் கொள்கைகளுக்கு ஏற்ப மட்டும் காட்டின ஆட்சி புரியாது நேர்மை நெறிக்கு ஏற்ற வகையில் மக்களை ஆள வேண்டுவதன் அவசியத்தையும் அவசரத்தையும் உணர்ந்து அக்பர் அதனைக் கடைப்பிடித்தார்.

### பிழையாத்தன்மை ஆணை (Infallibility degree)

நேர்மை நெறிக்கு ஏற்ற வகையில் மக்களை ஆள அக்பருக்குக் கொள்கை நடை முறையில் சட்டச் சம்மதம் தேவைப் பட்டது. அச் சட்டச் சம்மதம் சுல்தான்-இ-ஆடில் என்னும் ஓர் அரச ஆணையின் மூலம் அறிவிக்கப்பட்டபோது அவருக்குக் கிடைத்தது. அத்தகைய ஆணை பிழையாத் தன்மை ஆணை என அழைக்கப்பட்டது. அந்த ஆணையின் மூலமாக அரசுரிமை அல்லது இறைமை என்னும் குறிக்கோளை அவர் அடைந்திட முயன்றார். எவை யெல்லாம் சமுதாயம் அனைத்துக்கும் நன்மையானவையோ, யாவருக்கும் சரிசமமாகவும், நியாயம் தவறுமலும் நீதி வழங்கக் கூடியவையோ, சமய சந்தர்ப்பங்களுக்கேற்ற சூழ்நிலைத் திறன்களோ அவற்றை அரசுரிமையின் வழிகாட்டிக் கொள்கைகளாக வைத்துக்கொண்டார்.

### தாராள மனப்போக்கு

இதன் விளைவாக இஸ்லாமுக்கும், இஸ்லாமியருக்கும் மட்டும் என்று தனிப்பட்ட சலுகை ஏதும் கிட்டவில்லை. முஸ்லிம்கள் மட்டுமே அரசில் பங்கும், எல்லாச் சிறப்பும், செல்வமும் பெறுவது இயலாமல் போய் விட்டது. ஓர வஞ்சனையற்ற முறையில் தம் குடிமக்கள் அனைவரையும் சமமாக நடத்த வேண்டும் என நினைத்த முதல் அரசர் அக்பர் என்று கேம்பிரிட்ஜ் இந்திய வரலாறு என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இராஜபுத்திரர்களைப் பதவியில் அமர்த்தியபோது அக்பர் உண்மையிலேயே தமக்கு முன்னல் ஆண்டவர்கள் எவருமே அதுவரைக் கடைப்பிடித்திராத தாராள மனப்போக்கு, அரசியல் விவேகம் ஆகிய நற்பண்புகளை வெளிப்படுத்தினர். யாத்திரிகர் வரி, ஜெஜியா வரி ஆகியவற்றை நீக்கியது மட்டுமின்றி அக்பருக்கு முன் ஆண்டவர்கள் எல்லா மக்களிடமிருந்தும் வசூலித்து வந்த நாற்பது வெவ்வேறு விதமான வரிகளையும் நீக்கினர். அக்பரின் கொள்கை தில்லிச் சுல்தான்கள்

எவருமே இதுவரை பின்பற்றாத ஒன்றாகும். அது மட்டுமன்றித் தில்லிச் சுல்தான்களின் கொள்கைக்கு முற்றும் மாறான கொள்கையும் ஆகும்.

### சமயப் பொறையின்மை

இந்துக்களை மட்டுமே சமாதானப் படுத்தித் தம் பக்கம் ஈர்க்க அக்பர் முனைந்தார் என்று தவறாக எண்ணிவிடக் கூடாது. அவர் ஜைனர்கள், கிறித்தவர்கள், பார்சிகள் ஆகியோடமும் சமமாக ஒரே முறையில் நட்புப் பாராட்டினார். குடிமக்களிடையே சமய வேற்றுமை பாராட்டாது அனைவருக்கும் அவர் சமநீதி வழங்கினார். முகலாயப் பேரரசின் நலனுக்கு உகந்ததாக இல்லாத சமயப் பொறையின்மை என்னும் பிற சமயத்தவர்பால் வெறுப்புக்காட்டும் கொள்கையினைத் தகர்த்திட முயன்று அதில் அக்பர் வெற்றியும் கண்டார் என்றே கூற வேண்டும்.

### புதிய சமயத்தின் தோற்றம்

மகமதுவின் சீடர் என்னும் முறையில் நடந்துகொண்டால் சமயப் பொறைக் கொள்கையை, அதாவது பிற சமயத்தவரை மதித்து நடந்திடும் கொள்கையை அவரால் கடைப்பிடிக்க முடியவில்லை. அவர் பின்பற்றிய பிழையாத் தன்மை ஆணை பயனற்றதாயிற்று. இஸ்லாமிய அறநெறிக்கு மாறாகத் தாம் செல்வதைத் தவிர்த்திட வேண்டி இஸ்லாம் சமயத்தை ஒதுக்கிவிட்டு, எல்லாச் சமயக் கருத்துகளும் இணைந்த புதிய ஒரு சமயத்தை உருவாக்க எண்ணினார். அவருடைய அந்த முயற்சிக்கு இபதத்கானாவில் (சமய விவாதம் நடைபெற்ற கூடம்) நடைபெற்ற சமய வாதங்கள் துணை செய்தன. ஏனைய எல்லா மதங்களின் அடிப்படையான உண்மைகள் யாவற்றையும் புதிய சமயம் உட்கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பிய அவர் அத்தகைய சமயத்தை உருவாக்கத் தாமே தகுதியானவர் என்று நம்பி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

### இறைமை

முகலாய ஆட்சியை நிலை நாட்டவேண்டும் என்று எண்ணித் தற்காலத்தே இறைமை என்று கருதப்படுகின்ற ஒன்றுக்குச் சமமான இறை மாட்சியை எல்லாச் சமயத்தவர்க்கும் பொதுவான வகையில் இருந்திடச் செய்ய வேண்டும் என்னும் எண்ணத்தினால் இந்துக்கள்பால் சமயப் பொறையோடு

கூடிய சமாதானக் கொள்கையைக் கடைப்பிடித்தார். ஆனால் அங்ஙனம் கடைப்பிடிப்பது-இஸ்லாமியச் சமயத்தைச் சார்ந்தவராக இருந்துகொண்டு நிறைவேற்றுவது பொருந்தாததாக இருந்த காரணத்தால் அரசியலும் அற நெறியும் ஒன்றாகக் கலந்த ஒருவகையான புதிய சமயத்தை உண்டாக்கினார். புதிய சமயத்தை உருவாக்கினாலும் அம் முயற்சியில் அக்பர் வெற்றி பெறவில்லை. எனவே அவர் தோற்றுவித்த சமயம் அவரோடு மாய்ந்துவிட்டது. அச் சமயம் மறைந்ததற்கு வேறு பல காரணங்களும் இருந்தன.

### ஒருங்கிணைப்பு

ஆயினும் வழக்கறிஞர்கள், சமய அறிஞர்கள் யாவரையும் விட அரசர் உயர்ந்தவர் என்னும் கொள்கையும், சமயத் துறை, அரசியல் துறை இரண்டுக்கும் அவர் தலைவர் என்னும் கோட்பாடும், அரசரே இறைவனின் பிரதிநிதி, தம் ஆணையைச் சமயப் பொறையால் நிலை நாட்ட வல்லவர் என்பன போன்ற கொள்கைகளும் அவருடைய சந்ததியினரால் நன்கு கடைப்பிடிக்கப்பட்டன. அக்பரின் சாதனை ஒருங்கிணைப்பே ஆகும். ஒருங்கிணைப்பு என்று குறிப்பிடும்போது அது அரசியல் துறையின் தன்மைகளையும் சமயத் துறையின் தன்மைகளையும் ஒருங்கிணைத்ததே ஆகும். இவ்வாறு இரண்டையும் ஒன்று சேர்த்து நாட்டு மக்கள் அனைவரும் யாதொரு வேறுபாடுமின்றித் தமக்குக் கீழ்ப் படியச் செய்தார்.

### சமயச் சார்பற்ற தன்மை

அக்பர் ஏற்படுத்திய நிருவாக முறைகள் எல்லாவற்றிலும் சமயச் சார்பற்ற தன்மை பிரதிபலித்தது. எவ்வாறு அது பிரதிபலித்தது என்பதை அறிய அக்பரின் ஆட்சி அமைப்பு முறைகளைப் பரிசிலனைசெய்ய வேண்டும். சமயச் சம்பந்தமான எல்லாக் காரியங்களிலும், சமயச் சம்பந்தமான சட்டங்களைப் பொறுத்த வரையில், தலையாய சட்ட அதிகாரிகளாக இது வரை விளங்கி வந்த, சத்திரி சதுர் (Sadri-Sadur) என்னும் அதிகாரிகள் சமயப் பணிகளுக்காகவும், அறப் பணிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்ட எல்லா நிலங்களையும் மேற்பார்வையிட்டு வந்தனர். அக்பர் அந்தப் பதவியின் முக்கியத்துவத்தைக் குறைத்து அவர்களை ஐந்து பிகா நிலங்களைக் கூட மானியமாக வழங்க அதிகார மற்றவர்களாக்கினார். மாநிலங்களிலும் திவான்களுக்கு அவர்கள் கட்டுப்பட்டு அதிகாரமோ கௌரவமோ இல்லாதவர்களாக ஆக்கப்பட்டனர்.

### தூய சட்டம் (Holy Law)

அக்பரின் காலத்தில் சட்டமும், நீதியும்கூடச் சமயச் சார்பற்ற தன்மையை அடைந்தன. தூய சட்டம் எனப்படும் சட்டத்தின் மீதுகூட அரசரின் ஆதிக்கம் கட்டுப்பாடுகளை விதித்தது. ஒரு மாநிலத்தின் சுபேதாரோ அல்லது ஆளுநரோ தனிப்பட்ட ஒரு மனிதனின் சமயக் கொள்கையில் தலையிடக் கூடாது என்று அக்பரால் ஆணையிடப்பட்டிருந்தார். நீதித் துறையில் உண்மையிலேயே அக்பர் தமது இறைமைத் தன்மையை வெளிப்படுத்தினர். நீதி பற்றிய செயல்களில் மன்னர் தனித் தலைமை பெற்றவர் என்னும் நிலையை ஏற்படுத்தினர். மக்களின் குறைகளைக் களைதல் இறைமை வாய்ந்த மன்னர்களுக்கே உரிய கடமை என்பது அவர் கருத்து. எனவே அவர் மேல் முறையீட்டு நீதி மன்றமாகத் (Court of appeal) திகழந்தார். அவரால் சட்டத்தின் வழியே நீதியும் சமயச் சார்பற்ற முறையில் வழங்கப் பட்டது.

### அதிகாரச் செறிவு

மிகத் திறமை வாய்ந்ததும், அதிகாரச் செறிவு அரசரிடத்து நிரம்பிதுமான ஓர் ஆட்சி முறையினை நடத்திக் காட்டியதே அக்பரது ஆட்சி முறையின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். மக்களுடைய உணர்வுகளுக்கு மகிழ்வூட்டுகிற வகையில் அரச பதவி அமைக்கப்பட்டிருந்தது. அரச பதவியினை மக்களின் முழு அன்பையும் பெற்ற செல்வாக்கு மிக்க ஒரு நிறுவனமாக மாற்றி அமைத்த பெருமை அக்பருடையதே யாகும். எல்லா மக்களும் அவரைத் தெய்வம் போல் போற்றி வழிபட்டனர். பண்டைய இந்துக்களின் அரசியல் முறையில் காணப்பட்ட ஒருவகையான அரச வழிபாடு அக்பரது காலத்திலும் நாட்டில் தோன்றியது. பரந்ததோர் அடிப்படையில் உண்மையிலேயே அமைந்ததாயும், மக்களின் முழு ஆதரவைப் பெற்றதாயும், குடி மக்கள் நலனுக்குப் பாடுபட வேண்டும் எனும் கொள்கையைக் கொண்டதாயும் அரசு விளங்கத் தொடங்கியது. அக்பரின் அரசு அமைப்பு முறையில் நிறுவனங்களிடையே ஒருவிதப் பிணைப்புக் காணப்பட்டது. அக்பரின் அரசு நிறுவன முறை அவருடைய ஆட்சி அமைப்பு முறைக்குப் புதிய வலிமையையும், உயிரோட்டத்தையும் உண்டாக்கியது. டில்லிச் சுல்தான்களின் முறைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அவை அக்பருடையதைப் போல் அவ்வளவு சிறப்பானவைகளாக இருக்கவில்லை. அக்பரது கால ஆட்சி

அமைப்பின் உட்பொருளேமாறி, புதியதொரு விறுவிறுப்பு ஏற்பட்டது.

### இராணுவக் கடமை

அக்பரின் அரசு குடி மக்களைத் தந்தையைப் போல் பேணும் அரசு அல்லது மக்களின் நலனில் அக்கறை கொண்ட ஒரு தன்னரசு என்று கருதப்பட்டது. அக்பருடைய அரசு முற்றிலும் இராணுவ பலத்தை அடிப்படையாகக் கொண்ட அரசாக விளங்கிற்று. சாதாரண ஊரியல் ஆட்சி முறையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த அதிகாரிகளில் முக்கியமானவர் பலரும் இராணுவத் தளபதிகளாக இருந்த காரணத்தினல் மட்டும் அவரரசை இராணுவப் பண்பு கொண்ட அரசு என்று கூறி விடமுடியாது. அரசர் வேண்டும் போது மட்டுமே அவருடைய அலுவலர்கள் இராணுவக் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று விதிக்கப்பட்டது. மக்கள் மீது இராணுவ ஆட்சியைப் பலவந்தமாகத் திணிப்பது என்பதிலிருந்து இம்முறை முற்றிலும் வேறுபட்டது. அரசு வன்முறையைக் கொண்டு நடத்தப்பட்டாலே இராணுவ பலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறை என்று அதனைக் கருதுதல் நியாயமானதாகும்.

### தன்னரசு

பேராசிரியர் சின்ஹா, அக்பரால் ஏற்படுத்தப்பட்ட முகலாய அரசு, சமயச் சார்பற்ற தன்மையைப் பெற்றிருந்தது எனவும், புற அமைப்பைப் பொறுத்தவரை அஃது ஒரு முகப்பட்ட அரசாகவும், அதே சமயத்தில் பல தரப்பட்ட மக்களைக் கொண்ட அரசு நிறுவனமாயும் விளங்கியது என்றும், தந்தை மக்களைப் பேணுவது போன்ற உணர்வுடன் குடி மக்களைக் காத்து வந்த கருணையோடு கூடிய தன்னரசாக விளங்கிற்றென்று தயக்கமின்றிக் கூறலாம் என்றும் கூறுகின்றார்.

### சிபாசாலார்

இதுவரை நாம் ஆராய்ந்தவற்றை நன்றாக நினைவில் இருத்திக் கொண்டு அக்பரது பேரரசில் இருந்த ஆட்சித் துறை நிறுவனங்களைப் பற்றிக் காண்போம். அக்பரின் பேரரசில் மைய அரசு, மாநில அரசு என தனிப்படுத்தப்பட்ட பகுதிகளை உட்கொண்ட இருவகை அரசு அமைப்புகள் இருந்தன. அவை இரண்டும் ஒரே மாதிரியாக அமைக்கப்

பட்டு, ஒரு முகமாகச் செயல்படும் வகையில் பிணைக்கப்பட்டு இருந்தன. மைய அரசில் இருந்தது போன்றே மாநில அரசிலும் ஆட்சித் துறை நிறுவனங்கள் இருந்தன. மைய அரசு பற்பல துறைகளைக் கொண்டதாய் விளங்கிற்று. முக்கியமான துறைகள் மைய அரசின் பொறுப்பில் இருந்தன. மாநில அரசுகள் மைய அரசின் அமைப்பையே பின்பற்றின. மைய அரசில் காணப்பட்ட எல்லாப் பிரிவுகளும் மாநில அரசிலும் காணப்பட்டன. மைய அரசில் அதன் தலைவராக இருந்து அரசர் ஆற்றிய பணிகளை மாநில அரசில் சிபாசாலார் என்று அழைக்கப்படும் சுபாதார் தலைவராக இருந்து நிறைவேற்றினர். சிபாசாலார் என்று பெயர் மாற்றம் பெற்றிருந்தாரே தவிர மாநிலத்தில் ஓர் அரசராகவே அவர் விளங்கினர். அக்பரின் பேரரசு சுபாக்கள் என்று அழைக்கப்படும் பிரிவுகளைக் கொண்டிருந்தது. ஆரம்பத்தில் பன்னிரண்டாக இருந்த சுபாக்களின் எண்ணிக்கை பதினைந்தாகப் பின்னர் மாறியது. சுபாக்கள் சர்க்கார்களாகவும், சர்க்கார்கள் பர்க்கானுக்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. பர்க்கானுக்கள் என்பன பல கிராமங்கள் ஒன்று சேர்ந்த கூட்டங்களைக் குறித்தன. ஒரு பர்க்கானுவிற்கு எத்தனை கிராமங்கள் என்று தெரியவில்லை.

## நிறுவனங்கள் (Organisations)

அபுல் ஃபாசலின் கூற்றுப்படி அக்பரின் நிறுவனங்கள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. முதலாவது பிரிவு அரண்மனை நிர்வாகத்தைக் கவனித்தது. அரண்மனை நிர்வாகம் என்னும் பிரிவில் அரசரின் அந்தப்புரம், பேரரசு கருவூலம், விலையுயர்ந்த கற்கள் அடங்கிய கருவூலம், நாணய உற்பத்திச் சாலை, செலவணித் துறை, அரசரின் பிரயாணத் தேவைகளைக் கவனிக்கும் துறைகள், அரசர் வெளியூர் முகாம்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கி அளிக்கும் துறை, அரண்மனை அலங்கரிப்புத் துறை, பேரரசின் சமையற்கட்டு, ஆடை உற்பத்திச் சாலை, குதிரைக் கொட்டில், யானை, ஒட்டகம், கோவேறு கழுதை போன்ற விலங்குகளின் கொட்டில்கள், பேரரசு கட்டடங்கள், பாதைகள் போன்ற பொது நன்மைக்குரிய சாதனங்கள், அறச் சாலைகள், இராணுவக் கிடங்குகள், வெடி மருந்துச் சாலைகள் ஆகியவற்றை நிருவகிக்கும் நிறுவனங்கள் எனப் பல துறைகள் அடங்கியிருந்தன.

தரைப் படை நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்ட இரண்டாவது பிரிவில் மன்சப்தார்கள், சுகாதிகள் இன்னும் ஏனைய துருப்புகளைத் திரட்ட ஓர் அமைப்பும், குதிரை

களுக்குச் சூடு போடுதலைக் கவனிக்க ஒரு நிறுவனமும், வாகியா நவிஸ்களின் கடமைகளைக் கண்காணிக்க, சன்னதுகள், கொடைகள், தானங்கள், சயூர்கள் ஆகியவைகளை மேற்பார்வையிட, கடற்படை அமைப்பைக் கவனிக்க, திருமணங்கள், கேளிக்கைகள், கல்வி போன்ற விவகாரங்களைக் கவனிக்க எனப் பல துறைகள் இருந்தன.

மூன்றாவது பிரிவு பேரரசின் நிர்வாகப் பிரிவு ஆகும். பேரரசு சுபாக்களாகவும், சர்க்கார்களாகவும், பர்க்கானுக்களாகவும் பிரிக்கப்படுதலை மேற்பார்வையிட அவற்றின் அளவு, வரி நிர்ணயம் ஆகியவற்றைக் கண்காணிக்க மாநில ஆளுநர்கள், சேனைத் தலைவர்கள், பௌஜ்தார்கள் ஆகியோரின் கடமைகளையும், அதிகாரங்களையும் மேற்பார்வையிட எனப் பல ஆட்சித் துறைப் பிரிவுகளும், நீதித் துறைகள், வருமானத் துறை, பட்டணப் பகுதிகளைக் கண்காணிக்கும் துறை போன்றவையும், வேறு சில சிறிய துறைகளும் அடங்கியிருந்தன என அறிகிறோம்.

அக்பரின் கீழ் நடைபெற்று வந்த ஆட்சி முறையைப் பற்றி அபுல் ஃபாசல் கொடுத்துள்ள விளக்கத்திலிருந்து பேரரசின் பொறுப்பில் என்னென்ன துறைகள் அடங்கியிருந்தன என்பதும், அவை ஒவ்வொன்றும் என்னென்ன கடமைகளை மேற்கொண்டன என்பதும், ஒவ்வொரு துறையிலும் தக்க படியான பணியாளர்கள் நியமிக்கப் பட்டிருந்தார்கள் என்பதும், அவர்களிடையே அவரவர்க்குரிய தரங்களும், பணிகளும் முறையாக நியமிக்கப்பட்டிருந்தன என்பதும் முதலாவதாக நமக்குத் தெரிய வருகின்றன. இரண்டாவதாக இந்த அரசியல் அமைப்பில் அரசரின் சொந்த விவகாரங்களுக்கும், பொது ஆட்சித் துறை பற்றிய விவகாரங்களுக்கும் வேறுபாடு ஏதும் காட்டப்படவில்லை என்பதையும் நாம் அறிகிறோம். அரசரது அந்தப்புர நிர்வாகத்திலிருந்து நீதி வழங்கும் அதிகாரம் வரை எல்லாம் அரசரின் விருப்பு வெறுப்புகளை ஒட்டியே அமைந்தன.

## நான்கு பிரிவுகள்

அபுல் ஃபாசல் பேரரசின் ஊழியர்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்துள்ளார். அவையாவன: (1) அரசனைச் சார்ந்த பிரபுக்கள் (2) போரில் வெற்றிக்குத் துணை புரிந்தவர்கள். (3) அரசரின் உடன் கூட்டத்தார் (4) கடைநிலை ஊழியர்கள்.

வக்கீல், மீர்மல், மீர் பக்ஷி, மீர் அர்ஜ், குர்பேகி மீர்தோஸக், மீர்பஹ்ரி, மீர்பர், மீர்மன்சில், மீர்முன்ஷி ஆகியோர் அரசரின் பிரபு வர்க்கத்தைச் சார்ந்தவர்கள்.

வஜீர், முஸ்டா:பி, சாஹிபிடௌஜி, அவர்ஜா நாவீஸ், மீர்சாமன், நாஜிரிபு யூதத், திவானிபு யூதத், முஷ்ரீப், வாகியா நாவீஸ், அமீல் ஆகியோர் வெற்றிக்குத் துணை புரிந்த பிரிவினர்.

சதர், மீர் அடில், காஜி, மருத்துவர், வானநூல் நிபுணர், கவிஞர், சோதிடர்கள் ஆகியோர் அரசரின் உடன் கூட்டத்தார் ஆவர்.

அரசருக்கு வேண்டிய பணிகளைச் செய்து வந்தவர்கள் கடைநிலை ஊழியர்கள் ஆவர். இப் பிரிவில் உணவு பரிமாறும் ஊழியர், படைக்கலன் ஏந்துவோர், நீர், சர்பத் ஆகியவற்றை அளிப்போர், இரத்தினக் கம்பளங்களையும், அரச உடுப்புகளையும் வைத்துக் காத்த பணியாளர்கள் ஆகியோர் அடங்கியிருந்தனர். அக்பர் ஆட்சிப் பொறுப்பைச் சொந்தமாக ஏற்றுக் கொண்டவுடன் அதிகாரிகளுக்கு எவ்விதமான சுதந்திரத்தையும் அளிக்கவில்லை. அவர்கள் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் அரசரின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்தனர்.

### ஆலோசனை

எனினும் நம்பிக்கைக்குரிய சிலரை அவ்வப் போது அரசர் கலந்து ஆலோசித்தார். எந்த அளவுக்கு அக்பருக்குக் கொள்கையை வகுப்பதிலும், அதை நடைமுறையில் நடத்துவதிலும் ஒருவர் பயன் உடையவராய் இருந்தாரோ, அதற்கு ஏற்பவே அரசியலில் அவருக்குப் பதவி உயர்வும், வேறு பல சிறப்புகளும் ஏற்பட்டன. அரசு துறைத் தலைவர்களாக இருந்ததால் மட்டுமே அவர்களுக்குப் பெருமை ஏற்படவில்லை. அரசர் ஆலோசனை கலந்திட அரசு துறைத் தலைவர்களாகத்தான் இருக்க வேண்டுமென்னும் விதியும் இல்லை. அரசர் அபுல்:பாசல், மான்சிங் தோடர்மால், பீர்பால் போன்றவர்களையும் எப்போதும் கலந்தாலோசித்தார்.

### குஷல் கானு

ஒரு வகையான அந்தரங்க ஆலோசனைச் சபை அக்பர் காலத்தில் இருந்ததாகக் கூறப்படுகிறது. அது மன்னர்

அன்றுடம் கலந்து ஆலோசனை புரிகிற ஒரு சபையாக விளங்கி வந்திருக்கக் கூடும். அது குஸல் கானு என்னும் பெயர் கொண்ட பேரவையாகத் திகழ்ந்தது. அச் சபையில் அரசில் மிக உயர் பதவிகள் வகித்தவர்கள் மட்டுமே கலந்து முக்கியமான அலுவல்களை எல்லாம் விவாதித்தனர். போர், சமாதானம் முதலிய மிக இரகசியமாக வைத்திருக்கப்பட வேண்டிய செய்திகள் அச் சபையிலே நன்கு விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டன. மனூச்சி என்பார் குஸல் கானு என்றே அச் சபைக்குப் பெயரிட்டு அழைக்கின்றார்.

அக்பர் ஒரு சிலர் அடங்கிய அமைச்சர் அவையினைக் கலந்து ஆலோசித்தார் எனவும் அவ் வவையில் உயர் அதிகாரிகளைத் தவிர அக்பரது நம்பிக்கைக் குகந்த வேறு மனிதர்களும் இடம் பெற்று இருந்தனர் என்றும் அறிகிறோம். அக்பர் நாள் தோறும் இல்லாவிடினும் அடிக்கடி கலந்து ஆலோசித்துக் கொண்டு வந்த பெரும் அதிகாரிகள், வக்கீல், வஜீர், சத்ரே சதுர், மீர்சாமன் திவானி குல், மீர் பக்ஷி, மீர் அர்ஸ், மீர் முன்ஷி போன்ற மிக முக்கியமான அமைச்சர்களே ஆவர். அமைச்சரவை என்னும் சொல் இக் காலத்தில் எப்பொருளில் வழங்கப்படுகிறதோ, அந்த உயர்ந்த பொருளில் அக்பர் காலத்தில் கருதப்படவில்லை. அரசின் செயலாளர்களைப் போன்று பணியாற்றினும், அவரவர்களின் ஆட்சித் துறைகளின் அதிகார வரம்புக்குள் பெரும் அளவு அமைச்சர்கள் சுயேச்சையுடன் விளங்கினர்.

## அதிகாரப் பிரிவினை முறை

அக்பர் கால ஆட்சித் துறையினை ஆராய்கின்ற போது அவ் வாட்சித் துறையின் பணிகள் யாவும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டு, அதன் விளைவாக ஆட்சி முறையில் ஒரு சமநிலை காணப்பட்டது என்பதைக் காண்கிறோம். ஆட்சித் துறைகள் ஒவ்வொன்றும் தனித்தனியே பிரிக்கப்பட்டுத் தனித் தனியே செய்ல்படக் கூடிய அதிகாரப் பிரிவினை முறை (Separation of Power) அங்கே கடைப்பிடிக்கப்படவில்லை. ஆயினும் உண்மையிலேயே இந்த அரசு துறைகள் அனைத்தும் அவற்றின் அன்றாடப் பணிகளைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட சுயேச்சையான ஆட்சித் துறை நிறுவனங்களாக விளங்கின. ஆனால் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ அவை ஒன்றையொன்று சார்ந்து நின்றன என்றால் அதற்குக் காரணம் மன்சப்தாரி முறையே ஆகும். மேலும் பல துறைகளையும் இணைக்கக்கூடிய மத்தியச் செயலகம்

மற்றொரு காரணமாகும். பேரரசு நீதி மன்றமும், ஆலோசனைச் சபையும் மத்திய மாநில ஆட்சித் துறைகளை இணைத்து வைத்தன.

### வக்கீல்

இனி அரசின் முக்கிய அதிகாரிகள் பற்றிக் காண்போம். வக்கீல் அரசரின் ஏகப் பிரதிநிதியாக விளங்கினர். சிபாசாலர்களையும், சுபாக்களில் அவர்களுக்குட்பட்டிருந்த பல்வேறு நிறுவனங்களையும் கட்டுப்படுத்தியவர் அவரே. அரசரின் குடும்ப விவகாரங்களையும் அவரே கவனித்து வந்தார். படைகளை அமைத்தல், முக்கியமான ஆட்சித் துறை நடவடிக்கைகளை வகுத்து வழி நடத்தல் ஆகியவற்றைச் செய்து வரும் அவரே. அவருடைய பணிகள் இக் காலத் தலைமை அமைச்சரின் பணிகளை ஒத்து இருந்தன. அரசரையும் அரசையும் இணைத்து வைக்கும் சங்கிலியாக—ஓர் இணைப்புப் பாலமாக வக்கீல் விளங்கினர். எப்பொழுதெல்லாம் வக்கீல் உண்மையிலேயே திறமை உடையவராக இருந்தாரோ அப்பொழுதெல்லாம் மன்னர் ஓரளவு இருக்கும் இடம் தெரியாமலே ஆட்சி புரிந்தார். அக்பரைப் போன்ற திறமை மிக்க அரசர்கள் ஆட்சியில் இருந்தபோது வக்கீலின் முக்கியத்துவம் குறைந்தது. வக்கீல் என்பார் புகழ் மிக்க தளபதியாகவும் விளங்கினர்.

அக்பர் காலத்திய தலைமை அமைச்சர் வக்கீல் என அழைக்கப்பட்டார். சில சமயங்களில் அவர் வக்கீலி முதலாக் எனவும் அழைக்கப்பட்டார். பைராம்கான் பதவியில் இருந்த வரையில் மைய அரசின் எல்லாத் துறைகளுக்கும் பொறுப்புடையதாக வக்கீல் பதவி விளங்கியது. தமக்குக் கீழ் இருந்த பிற அமைச்சர்களை நியமனம் செய்யவும், பதவியிலிருந்து நீக்கவும் வக்கீலுக்கு அதிகாரமிருந்தது. ஆனால் பைராம்கானுக்குப் பின்னர் வக்கீலின் மேற்கூறிய தனி உரிமைகள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டன. முதன் முதலில் நிதித் துறை அவரிடமிருந்து எடுக்கப்பட்டு, அதனை நிர்வகிக்கத் திவான் என்னும் தனிப்பட்ட அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

### வசீர்

அக்பருடைய காலத்தில் வக்கீலுக்கு அடுத்தபடியாகச் சிறப்பிடம் வகித்தவர் வசீர் அல்லது முஷ்ரிபி திவான் என்பவ

ராவார். பொருளாதாரக் காரியங்கள் அனைத்திலும் பேரரசின் பிரதிநிதியாக விளங்கியதோடு, பேரரசின் கருவூலங்களைக் கண்காணித்துக் கணக்குத் தணிக்கை செய்து நாட்டின் வரு மானங்களை எல்லாம் திரட்டி வைக்கும் பொருளாளராகவும் அவர் விளங்கினர். அவர் தலைவராயிருந்த பொருளாதாரத் துறையில் பொது, இராணுவக் கிடங்குகள், பேரரசு கருவூலம், பொதுவான குறிப்பேடுகள், இரகசிய ஊழியம் இவை பற்றிய துறைகளும் அடங்கியிருந்தன. முஷ்ரிபிதிவானின் பதவியைப் பற்றிக் குறிப்பிடும்போது அது திவான் பதவியை விடச் சற்றே தாழ்ந்ததே ஆகும் என்றுரைப்பதால் முஷ்ரிபி திவான் பதவியும், வசீர் பதவியும் ஒன்றே என்று முடிவு கட்ட லாம்.

படைக்கு ஆள் சேர்ப்பது, ஒரு சில பதிவேடுகளை வைத்துப் பாதுகாப்பது, நாட்டிலுள்ள உயர் அதிகாரிகளின் பெயர்கள் வரிசையாய் எழுதப்பட்ட பட்டியல், அரண்மனைக் காவலாளி களின் பெயர்ப் பட்டியல், ஊதியம் வழங்குவது பற்றிய விதிகள், ரொக்கமாக ஊதியம் வழங்கப்பட்ட அலுவலர்களின் பெயர்ப் பட்டியல் முதலியவற்றை வைத்துக் காத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டவர் மீர் பக்ஷி எனும் அதிகாரியா வார். மீர் பக்ஷியின் கீழ் ஹிபிதௌஜி என்னும் இராணுவக் கணக்கர், பக்ஷிகள், உதவிப் பக்ஷிகள் ஆகியோர் பணி புரிந் தனர்.

## ஊரியல் துறை

பொருள் பற்றிய கடமைகளைப் பொறுத்தவரை மீர் பக்ஷி, திவானிகுல் ஆகிய இருவரும் ஒரே மாதிரியாகவே செயலாற் றினர் என்று கூறப்படுகிறது. அக்பரது ஆட்சிமுறை முழு வதும் இராணுவ அடிப்படையில் அமையவில்லை. அவரது அரசில் ஊரியல் துறை ஒன்று தனியாக இருந்தது. ஊரியல் துறை அரசின் மிக முக்கியமான பகுதியாக விளங்கிற்று. அதனுடைய பொருளாதார விவகாரங்களைக் கண்காணிக்கவும் அதன் செயல்களை வெளிப்படுத்தவும் தனியே ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டிருந்தது. அதன் தலைவராக விளங்கியவர் திவானிகுல் ஆவார். இராணுவ சம்பந்தமான பணிக்கு ரொக்கமாகவும், ஜாகீராகவும் மீர் பக்ஷி ஊதியம் வழங் கினர். இராணுவமில்லாத பொதுத் துறைப் பணிகளுக்குச் சம்பளம் வழங்கும் கடமையைத் திவானிகுல் மேற்கொண் டார்.

*சத்ரிசதுர்*

நிருவாகத் துறைத் தலைவராயும், சமய ஒறுப்புத் துறைத் தலைவராயும், அறப் பணிகளின் கண்காணிப்பாளராயும், உயர் நீதிபதியாகவும், குத்பா பரப்புபவராகவும் பணி ஆற்றி வந்தவர் சத்ரிசதுர் என்னும் ஊரியல் தன்மை பொருந்திய ஒரு துறையின் தலைவராவார். மாநிலச் சதுர்களைக் கண்காணிப்பதும் அறப்பணிகளுக்கான மானியங்களை வழங்குவதுமே சத்ரி சதுரின் முக்கிய கடமைகளாக இருந்தன. தலைமைச் சத்ரி சதுரின் கடமைகளை மாநிலச் சதுர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்ட படியால் அக்பரது காலத்தில் சத்ரிசதுரின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது.

*மீர்கள்*

அக்பரது காலத்தில் நாட்டில் ஏறக்குறைய நூறு பேரரசு கிடங்குகள் இருந்தன. மீர்சாமன் என்பவர் பேரரசின் கிடங்குகளுக்குத் தலைவராகப் பணியாற்றினார். அவருக்குக் கீழ் திவானி பியூதத், நாஸிரி பியூதத் எனப்படும் சில அதிகாரிகள் பணி புரிந்தனர்.

அரசரது நம்பிக்கைக்குப் பாத்திரமான அரசவை சம்பந்தமான பல்வேறு சடங்குகளையும் நன்கு அறிந்திருந்த ஒருவரே அக்பரால் மீர் அர்ஸாக நியமிக்கப்பட்டார். அவர் இரவிலும், பகலிலும் எப்போதும் அரண்மனையிலிருந்து கொண்டு அரசரால் இடப்படும் ஏவல்களுக்காகக் காத்திருந்தா

பேரரசின் கடிதப் போக்கு வரத்துகள் அனைத்தையும் கவனித்துக் கொள்ளவும், வெளிநாட்டு உறவு, பொதுக் காரியங்கள், இராஜ தந்திரக் காரியங்கள் ஆகியவை குறித்த கடிதப் போக்குவரத்துகளைக் கவனித்துக் கொள்ளவும் மீர் முன்ஷி எனப்படும் அந்தரங்கக் காரியதரிசி ஒருவர் இருந்தார். அக்பரின் காலத்தில் அவர் ஆசிய மன்னர்களோடு தொடர்பு கொள்ள உதவிட அபுல் ஃபாசல் இருந்தார். இரகசிய ஆலோசனைகளை மன்னர் நடத்தியபோதெல்லாம் அந்தரங்கக் காரியதரிசியும் உடன் இருந்தார்.

*குதிரைப் படை*

மேலும் பேரரசின் குதிரை லாயங்களைக் கவனித்துக் கொண்டவர் அஹ்டா பேஹி என்னும் அதிகாரியாவார்.

அரசுக்குச் சொந்தமான குதிரைகள் அனைத்தையும் கட்டிக் காத்ததோடு, குதிரைப் படையைக் கண்காணித்து வந்த எல்லா அதிகாரிகளையும் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார். அவர் நாட்டின் மிக உயர்ந்த அதிகாரிகளில் ஒருவராக இருந்தார். சமுதாயத்தில் மிக உயர்ந்த நிலையில் இருந்தவர்களே அப் பதவியை வகித்தனர் என்று தெரிகிறது. இவர்களைத் தவிரக் குர்பேகி, மீர்மல் என்னும் இரு அதிகாரிகளைப் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைத்துள்ளன. குர்பேகி பேரரசின் விருந்துகளை மேற்பார்வை செய்தவர் ஆவார். பேரரசின் சொந்தப் பணத்தை நிர்வகித்து வந்தவர் மீர்மல் எனப்பட்டார். ஆனால் அவர்களுடைய கடமைகள் யாவை என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இதுவரையில் அரசரின் பணிகள், மைய ஆட்சி முறை ஆகியவைகளைப் பற்றிய செய்திகளைக் கண்டோம். இனி மாநில ஆட்சி எவ்விதம் நடைபெற்றது என்பதை அறிவோம்.

### மாநிலங்கள்

அக்பர் தமது பேரரசைப் பல மாநிலங்களாகப் பிரித்தார். மாநிலங்களைத் தவிரப் பேரரசில் பல சிற்றரசுகள் இருந்தன. சிற்றரசுகள் அக்பரின் மேலாண்மையை (Supremacy) ஒப்புக்கொண்டவை. அக்பரின் ஆட்சிக் காலத்தின் இருபத்து நான்காம் ஆண்டில் ஒவ்வொரு சுபா எனப்படும் மாநிலத்திலும் சிபாசாலார், திவான், பக்ஷி, சதிரிஜஸ், மீர் அதுல், காஜிகர், கொத்தவால், மீர் பஹர், வாஹியா நவிஸ் எனப்படும் அதிகாரிகள் இருந்தனர்.

### சுபேதார்

மாநிலத்தின் தலைவரான சிபாசாலார் பெரியதொரு படைக்கும் பொறுப்பானவராக இருந்தார். இவரைச் சுபேதார் அல்லது சுபா என அழைத்தனர். இவர் அரசரால் நியமனம் செய்யப்பட்டார். மாநில மக்களின் நலத்திற்குப் பொறுப்புள்ளவர் இவரே. குற்ற இயல் வழக்குகளை விசாரித்ததோடு, அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டிக் குற்றம் புரிவோரையும், கட்டுப்பாடுகளை மீறுகின்றவர்களையும் தண்டிக்கும் அதிகாரமும் இவர் பெற்றிருந்தார். மக்கள் முழுச் சமயச் சுதந்திரம் அனுபவிக்கிறார்களா என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டியதும் இவரது கடமையாக இருந்தது. சிபாசாலார் ஒரு படை அதிகாரியாக இருந்தமையால் வீரர்கள்

கட்டுப்பாட்டுடன் இருந்து இவருக்குப் பணிவதையும் இவர் கவனிக்க வேண்டிய கடமை இருந்தது.

### ஃபௌஜ்தார்

ஒவ்வொரு மாநிலமும் பல சர்க்கார்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு சர்க்காரையும் நிர்வகிக்க ஃபௌஜ்தார் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். தமது ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவது இவரது பொறுப்பாக இருந்தது. அரசுக்கு எதிராக ஏற்படும் கலகங்களைத் தடுத்து நிறுத்த வேண்டியவரும் இவரே. சிபாசாலாரின் உதவியாளர்களில் முதன்மையானவரும் இவரே.

### திவான்

ஒவ்வொரு மாநிலத்திலும் மைய அரசின் திவானுடைய பரிந்துரையினால் நியமிக்கப்பட்ட திவான் என்னும் அதிகாரி ஒருவர் இருந்தார். மாநிலத்தின் நிதித்துறைப் பொறுப்பேற்றிருந்த இவர் நிலவரி வசூல், வரவு செலவுக் கணக்கு வைத்தல், ஊரியல் நீதி வழங்குதல், சம்பளப் பட்டுவாடா செய்தல் ஆகிய அலுவல்களை—மேற்கொண்டதோடு நிலவரிப் பாக்கி இல்லாமலும் பார்த்துக் கொண்டார்.

### கொத்தவால்

கொத்தவால் என்னும் அதிகாரி முக்கியமான நகரங்களிலும், பட்டணங்களிலும் அமைதி காக்கும் பணிகளை மேற்கொண்டார். கொத்தவாலுக்கு விரிவான அதிகாரங்களும், பெரிய பணி மன்றமும், பல கீழாட்களும் இருந்தனர். மாநிலத்தின் சகல தாணாக்களுக்கும் பிரதம ஆட்சித் துறைத் தலைவர் கொத்தவால்தான். அரசாங்கத்துக்கு விரோதமாக ஏற்படுத்தப்பெறும் சதிகளைப் பற்றி ஒற்றர்கள் மூலம் உணர்ந்து அவற்றைத் தடுப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை அவர் எடுத்துக்கொண்டார். ஓரளவு சமுதாயத்தின் அற நெறிக் காவலராகவும் அவர் திகழ்ந்தார்.

காஜிகள், மீர்ஆதில் ஆகியோர் தலைநகர்களில் அமைதி காணும் நீதிபதிகளாகப் பணிபுரிந்தனர். காஜி வழக்குகளைத் தீர விசாரித்து ஒவ்வொரு வழக்கிலும் தீர்ப்பு வழங்கினார். அவர் வழங்கிய தீர்ப்பை நடைமுறையில் செயலாக்குவது மீர்ஆதில் என்பாரின் கடமையாகும்.

அமீர்

வரி வசூல் செய்வதற்கு அமீர் என்பவர் ஒவ்வொரு சர்க்காரிலும் இருந்தார். ஒவ்வொருவரும் எளிதில் நெருங்கும் வண்ணம் அவர் தம் இருப்பிடத்தை அமைத்துக்கொண்டார். மக்களிடமிருந்து என்னென்ன வரிகள் வாங்கவேண்டும் என்பதுபற்றியும், அவர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றியும் மைய அரசிடமிருந்து அவருக்குச் சதா அறிவுரைகள் வந்துகொண்டே இருந்தன. கொத்தவால் ஓரிடத்தில் இல்லாதபோது அமீர் அவருடைய கடமைகளையும் தாமே மேற்கொள்ளவேண்டும். அமீர் தமக்கு உதவியாகப் பிதிக்ஷி என்பவரை அமர்த்தியிருந்தார். பிதிக்ஷியை எழுத்தர் அல்லது பதிவாளர் என்று கருதலாம்.

கிராமங்களின் எல்லைகளை வகுத்துச் சாகுபடிக்குத் தகுதியான நிலங்கள் எவ்வளவு, தகுதியற்ற நிலங்கள் எவ்வளவு என்று மதிப்பிட்டுச் சொல்வது பிதிக்ஷியின் கடமையாகும். வருமான வரிப் பாக்கியையும், கருவூலத்தில் வரவு எவ்வளவு வந்தது, எவ்வளவு செலவுக்காக வழங்கப்பட்டது என்பது பற்றிய தகவல்களையும் மாதமொரு முறை மைய அரசவைக்கு அனுப்பிவைக்க வேண்டியது அவரது கடமையாகும். பொருளாளராக மிகப் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருந்த போட்தார் என்பவர் இருப்புத் தொகைக்குக் கணக்கு வைத்திருந்தார். திவானின் அனுமதியின்றி எந்தத் தொகையையும் வழங்க இவருக்கு அதிகாரமில்லை.

பர்க்கானுக்கள்

ஒவ்வொரு சர்க்காரும் பர்க்கானுக்கள் அல்லது மகல்கள் என்னும் உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பர்க்கானு தான் ஆட்சி முறைக்கும், நிதி நிர்வாகத்திற்கும் மிகச் சிறிய ஆட்சிப் பிரிவாகும். ஒவ்வொரு பர்க்கானுவிலும் ஷீக்தார், அமீர், போட்தார், கானுங்கோ எனப்படும் நான்கு முக்கிய அதிகாரிகள் இருந்தனர்.

ஷீக்தார் பர்க்கானுவின் ஆட்சித் துறைத் தலைவராகப் பொது நிர்வாகத்திற்குப் பொறுப்பேற்றிருந்தார். பர்க்கானுவின் ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்டுவதோடு அல்லாமல் உழவர்கள் பர்க்கானுக் கருவூலத்தில் பணம் செலுத்தும் போது அதனைப் பெற்று வரவு வைத்ததோடு கருவூல அதிகாரிகளை மேற்பார்வையிடவும், கட்டுப்படுத்தவும்

அதிகாரம் பெற்றிருந்தார். குற்றவியல் நீதியும் அவர் வழங்கினாலும் மாஜிஸ்திரேட் என்னும் முறையில் அவரது அதிகாரங்கள் வரம்புக்குட்பட்டவை. ஏனென்றால் அவரது அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட வழக்குகளைக் கொத்தவாலுக்குத் தாக்கல் செய்வது அவரது கடமையாகும்.

அமீர் அல்லது முனிசிப் என்று அழைக்கப்பட்டவர் சர்க்காரில் அமீல் குஷார் ஆற்றிவந்த அதே விதமான கடமைகளைப் பர்க்கானாவில் செய்து வந்தார். அவர் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதிலும் குற்றவாளிகளைத் தண்டிப்பதிலும் ஷிக்தாருக்கு உறுதுணையாக இருந்தார். அவர் ஊரியல் நீதியும் வழங்கியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

### கானுங்கோ

பர்க்கானாவின் கருவூல அதிகாரி, போட்தார் ஆவார். கானுங்கோ என்னும் அதிகாரி விளையும் பயிர்கள், நிலவரி நிர்ணயம், செலுத்தப்படும் வரித் தொகைப் பாக்கிகள் முதலியவை பற்றிய கணக்குகளைப் பதிவு செய்தார். பட்வாரி என்பவர் கிராமங்களின் கணக்குகளை எழுதியது போலக் கானுங்கோ கிராமம் முழுவதற்கும் கணக்குகளை எழுதினார். 'உழவர்களின் தஞ்சம்' என்று அபுல்ஃபாசல் இவரைக் குறிப்பிடுகின்றார். சர்க்கார் என்னும் வரலாற்றாசிரியர், கானுங்கோ என்னும் அலுவலர் நடைமுறையில் உள்ள சட்டங்கள், பழக்கங்கள் ஆகியவற்றை நன்கு அறிந்து வைத்துள்ளவர் என்று குறிப்பிடுவதோடு நடைமுறைக் குறிப்புகள் போன்றவற்றின் இருப்பிடம் என்றும் குறிப்பிடுகின்றார். கிராம வருவாய் அலுவலர்களாகப் பணியாற்றியவர்கள் நில அளவை, பதிவேடுகளைப் பாதுகாத்தல், இறப்புகளைக் குறித்தல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டனர். அவர்கள் ஆற்றும் பணிகளுக்கு இறையிலி நிலங்களும், பல்வேறு படிகளும் (Allowances) வழங்கப்பட்டன.

### கடல் துறை

பர்க்கானாக்களில் இருந்தவை தவிரச் சில குறிப்பிட்ட வட்டாரங்களில் வேறு பல அரசியல் ஆட்சித்துறை உட்பிரிவுகளும் இருந்தன. அவைகள் கடல் துறைகளும், எல்லைப்புறக் காவல் நிலையங்களும், எல்லை அரண்களும், தானாக்களுமாகும். இந்த இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சுங்கச்சாவடியும், அதனை நிர்வகிக்க ஒரு மேற்பார்வையாளரும், பல எழுத்தர்கள், சேவகர்கள், சிப்பந்திகள், வணிகர்களிடமிருந்து வரிகளை வாங்

கும் அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட ஒரு பணி மன்றமும் இருந்தன.

### நகர ஆட்சி (கொத்தவாலின் பணிகள்)

அக்பர் காலத்திய நகர ஆட்சிமுறையைப்பற்றி நாம் அறிந்துகொள்ள அய்னி அக்பாரி நமக்குத் துணைபுரிகிறது. நகரங்களில் நகராண்மைக் கடமைகளையும் காவலர் பணியையும் செய்து வந்தவர் கொத்தவால் என அழைக்கப்பட்டார். இவர் மைய அரசினால் நியமிக்கப்பட்டவர் ஆவார். நகரம் பல வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அவை கொத்தவால் நியமித்த அதிகாரிகளின் பொறுப்பில் விடப்பட்டிருந்தன. நகரத்தின் தூய்மையைக் கண்காணித்துப் பொது வீதிகளில் உள்ள தடைகளையும், இடர்ப்பாடுகளையும் அகற்றவேண்டியதோடு சோம்பேறிகளையும், ஊர்சுற்றிகளையும் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபடுத்தவேண்டிய பொறுப்பும் கொத்தவாலுக்கு இருந்தது. நகரக் காவல் படையின் தலைவராக விளங்கியவர் கொத்தவாலே யாவார். கொத்தவாலைப் பற்றிக் கூறும்போது சட்ட முறைகளை வெளியே கடைப்பிடிப்பவர் என்றும் மனத்தினுள் இறைவனுக்குப்பயந்துநடந்தவர் என்றும் சொல்லப்படுகிறது. அரசன் அல்லது அரசப் பிரதிநிதி நீதிமன்றத்தை நடத்திய போது இவர் கலந்துகொண்டார். கொத்தவால், அப் பதவியை ஏற்றுக்கொள்ளும் போது கணக்கில் உள்ள குதிரைகள், துப்பாக்கிகள், பிற பொருட்கள் ஆகியவை சரியாக உள்ளனவா என்று சரிபார்த்திடவேண்டும். அதைப் போலவே சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் எண்ணிக்கையையும் சரிபார்த்துக் கொள்ளவேண்டும். குற்றவாளிகள் தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளைப்பற்றி அறிந்து தங்கள் விடுதலைக்கு முயலுவதோ, தண்டனைக் குறைப்பிற்கு வழிவகை செய்வதோ செய்யலாம்.

சிறையில் அடைப்பதற்கு உரியவர்களின் பெயர்களைச் சட்ட அதிகாரிகளுக்கு இவர் அறிவித்தல் வேண்டும். மரண தண்டனை விதிக்கப்பட வேண்டியவர்களுடைய பெயர்களை எழுத்து மூலமாக நீதிபதிக்குத் தெரிவித்துஅவருடைய கை எழுத்து இடப்பட்ட அனுமதியைப் பெற்று அதனை இவர் நிறைவேற்ற வேண்டும்.

காவலாளிகள், தெருவினைத் தூய்மைப் படுத்துவோர் ஆகியோர் தாம் பணி புரியும் இடங்களில் நிகழ்ந்தவற்றை இவரிடம் அன்றாடம் அறிவித்தனர். காஜியைப் போல இவர் நீதி

வழங்கவும் வேண்டியிருந்தது. நகரங்களின் தெருக்களில் இரவு ஒன்பது மணி முதல் விடியும் வரைச் சுற்றி வரக் காவலாளிகள் இவரால் நியமிக்கப்பட்டனர். கேளிக்கை நடைபெறும் இடங்களில் வேடிக்கை பார்ப்போரின் பொருட்களை யாரும் திருடிவிடாதபடிப் பார்த்துக்கொள்ள அலுவலர்களை இவர் நியமித்தார். தடை செய்யப்பட்ட செயல்களைச் செய்த மதுபான வியாபாரிகள், நடனப் பெண்கள், பிற வியாபாரிகள் ஆகியோர் இவரால் அபராதம் விதிக்கப்பட்டனர். அய்னி அக்பாரி என்னும் நூலில் ஒரு சிறந்த கொத்தவாலின் பணிகள் இவையே என்று கூறப்பட்டுள்ளதே தவிர உண்மையில் இக் கடமைகளை எல்லாம் அவர் ஆற்றினரா என்பது தெரியவில்லை.

நகர ஆட்சி முறையை இந்து முறைப்படி அக்பர் அமைத்து இருந்தார். அரசரின் சமூக மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு நகரமே விளை நிலமாக விளங்கியது. கொத்தவாலின் கடமைகள் மிக அதிகமாக இருந்தமையால் காவல் துறை அதிகாரிகள், ஒற்றர், எழுத்தர், சேவகர் போன்ற பல துணை அதிகாரிகளை நியமனம் செய்துகொள்ள அவருக்கு உரிமை வழங்கப்பட்டது.

### கிராமக் குடியரசுகள்

கிராமக் குடியரசுகள் என்று அழைக்கப்பட்ட ஊராட்சி மன்றங்கள் இந்தியாவில் இருந்துவந்தன. அக்பர் காலத்திய ஊராட்சியின் சிறப்பைப் பற்றிய முழு விவரங்களும் நமக்குக் கிட்டவில்லை. ஒவ்வொரு ஊரும் ஊராட்சி மன்றமாகச் செயல்பட்டது. அங்கு வாழ்ந்த குடும்பங்களின் தலைவர்களைக் கொண்ட மன்றம் ஒன்று ஒவ்வொரு கிராமத்திலும் இருந்தது. இந்த மன்றம் ஊராட்சிக்கும், ஊரின் காவல், துப்புரவு, தொடக்கக் கல்வி, நீர்ப்பாசனம், மருத்துவ உதவி, பொதுப் பணிகள், மக்களின் ஆன்மீக, சமய நலம் ஆகியவற்றிற்கும் பொறுப்பாக இருந்தது.

### மன்சப்தாரி முறை

முகலாயர்களின் ஆட்சிக் காலத்தில் அக்பரின் பெயருடன் சேர்த்துப் பேசப்படுவது மன்சப்தாரி முறை எனப்படும் நிறுவன அமைப்பு ஆகும். அரசாங்கத்தில் பணிபுரியும் பொது, இராணுவத் துறை அலுவலர்களை அவர்கள் பெற்ற ஊதியத்திற்கேற்ப வரிசைப் படுத்தி நிருவாகம் செய்ததையே மன்சப்தாரி முறை எனலாம். இம் முறையைப் பற்றிப் பேசும்

போது நாம் அக்பரையே நினைவு கொள்ளுகிறோம். இம் முறையை நிறுவியவர் அக்பரே என்று கூடச் சிலர் கூறுவதுண்டு. ஆயினும் உண்மை அது வன்று. பாபர், ஹுமாயூன் காலத்திலும் மன்சப்தாரி முறையினைப் போன்ற நிருவாக அமைப்பு ஒன்று இருந்தது என்பதனை டாக்டர் ஸ்மித், டாக்டர் சரன் போன்றவர்கள் வலியுறுத்துகின்றனர். எனினும் அதனைச் சீர்படுத்தித் தம் பெயரோடு அதனைச் சம்பந்தப்படுத்தத் தக்க அளவில் செய்தவர் அக்பரே ஆவார்.

### நிறுவக் காரணம்

அக்பர் நிருவாகச் சீர்திருத்தம் செய்தல் வேண்டும் என்னும் முடிவிற்கு வந்ததற்குக் காரணங்கள் பல இருந்தன. படையைக் கட்டுப்படுத்தி இயக்கத் தேவையான முழு அதிகாரத்தைத் தம் கைகளில் வைத்துக்கொள்ளாமல் தம் அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் முழுமையாகவும் உறுதியாக வும் நிலை நாட்ட முடியாது என்னும் முடிவிற்கு அவர் வந்தார். அவருடைய படை வீரர்கள் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். ஒவ்வோர் இனத் தலைவர்களின் கீழும் படை ஒன்று இருந்தது. அதனை நிருவகித்தற் பொருட்டு அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. ஆனால் அத் தலைவர்கள் கணக்கில் அதிக எண்ணிக்கை உடைய படையினை வைத்திருப்பது போலக் காட்டி அதற்குரிய பணம் பெற்றனரே தவிர உண்மையில் குறைவான படையையே வைத்திருந்தனர். இவ்வாறு நிலவிய ஊழலை ஒழித்திடவும் அவர் எண்ணங் கொண்டார். அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு, மீர்பக்ஷியாகப் பணியாற்றிய ஷபாஸ் கான் என்பவர் துணை புரிந்தார். அரசர் அவருடைய துணையோடு, படையைக் கட்டுப்படுத்தி அதனை வன்மையான கட்டுப்பாடுள்ள ஒன்றாக ஆக்கக் கூடிய அளவிற்குப் படையினைத் திருத்தி அமைக்க முடிவு செய்தார்.

### மன்சப்

மன்சப் என்னும் அராபிச் சொல்லை அடிப்படையாகக் கொண்டே மன்சப்தாரி என்னும் சொல் உருவாக்கப்பட்டது. மன்சப் என்னும் அச் சொல்லுக்கு நிலையை நிர்ணயித்தல் என்பது பொருள். இர்வின் (Irvine) என்னும் வரலாற்றறிஞர் மன்சப்தாரி என்பது பதவியைக் குறிக்க உருவாக்கப்பட்ட சொல் எனவும், படையில் ஒருவருடைய வரிசை நிலையையும், ஊதியத்தையும், அரசவையில் அவருடைய தகுதியையும் எடுத்துக் காட்டுவது எனவும் உரைக்கிறார். மன்சப்தாரின்

வரிசை நிலை எண்ணிக்கையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தது. மன்சப்தார்கள், 'மன்சப்தார் ஐயாயிரம், மன்சப்தார் இருபது' என்பது போல அழைக்கப்பட்டனர். மன்சப்தார் ஐயாயிரம் என்றால் அவர் ஐயாயிரம் பேரைக் கொண்ட படைக்குத் தலைவர் என்று பொருளில்லை; அவருடைய தகுதி நிலை அது.

### வேறுபாடு

இன்று இராணுவம், பொது என்று ஆட்சித் துறைப் பிரிவுகள் இருப்பது போல் முகலாயர்களின் காலத்தில் பிரிவுகள் இல்லை. எல்லாருமே இராணுவத் துறைப் பணிகளைச் செய்ய வேண்டி இருந்தது. ஒருவர் அரண்மனையில் பணி புரிந்தாலும் சரி, வரி வசூலிப்பவராகப் பணி ஆற்றினாலும் சரி அவர் இராணுவத் துறைப் பணியாளராகவும் பணி ஆற்ற வேண்டி வந்தது. குறிப்பிட்ட இவர்களே இராணுவத் துறையினர், இவர்களே போருக்குச் செல்ல வேண்டும் என்னும் நிலை இல்லை. வருவாய்த் துறை அமைச்சராகப் பணியாற்றினும் இராஜா தோடர்மால் போருக்குச் சென்றார்.

### அரசப் பணியாளர்

மன்சப்தார் என்று ஒருவரை அழைத்தால், அவர் அரசாங்கத்தில் பணி புரிபவர் என்பது பொருள். உயர்குடியினர் அதாவது பிரபுக்கள் என்று தனியாக யாரும் இல்லை. படைத்துறை, பொதுத்துறை, உயர்குடியினர் என்னும் தன்மை எல்லாம் மன்சப்தார் என்னும் பதவியில் ஒன்று கலந்து இருந்தன என ஆர். பி. கோஸ்லா என்பவர் கூறுகின்றார்.

### நிலைகள்

அரசாங்கத்தில் மிகவும் கீழான நிலையில் பணிகளைச் செய்தவர்கள் மன்சப்தார்கள் என்று அழைக்கப்படாமல் இரவுசிந்தர்கள் (Rowzindars) என அழைக்கப்பட்டனர். மன்சப்தார் பத்து முதல், மனசப்தார் பத்தாயிரம் வரை நிலை இருந்தது. அக்பருடைய காலத்தில் இறுதிநிலை மன்சப்தார் பன்னிரண்டாயிரமாயிற்று. அவருடைய சந்ததியார் காலத்தில் இறுதி நிலை மன்சப்தார் இருபதாயிரமாக உயர்ந்தது.

மன்சப்தார்களின் தகுதி கீழ்க்காணும் முறையில் வரிசைப் படுத்தப்பட்டது.

| | |
|---|---|
| 20 முதல் 100 வரை | (இருபது, இருபதாக உயர்த்தப் பட்டது. மன்சப்தார் 20, மன் சப்தார் 40 என்பது போல்) |
| 100 முதல் 500 வரை | (ஐம்பது, ஐம்பதாக உயர்த்தப் பட்டது. மன்சப்தார் 100, மன்சப்தார் 150 என்பது போல்) |
| 500 முதல் 1000 வரை | (நூறு, நூறாக உயர்த்தப்பட்டது. மன்சப்தார் 600, மன்சப்தார் 700 என்பது போல்) |
| 1000 முதல் 5000 வரை | (ஐந்நூறு, ஐந்நூறாக உயர்த்தப் பட்டது. மன்சப்தார் 1500, மன் சப்தார் 2000 என்பது போல்) |
| 5000க்கு மேல் | (ஆயிரம், ஆயிரமாக உயர்த்தப் பட்டது. மன்சப்தார் 5000, மன்சப்தார் 6000 என்பது போல்) |

ஒருவர் மன்சப்தார் இருபதாகப் பதவி வகித்தால் அடுத்து அவரது பதவி நிலை மன்சப்தார் முப்பது என்றோ, முப்பத்தைந்து என்றோ அமர்த்தப்படுவதில்லை. மன் சப்தார் இருபதின் அடுத்த பதவி நாற்பது என்று படிப்படி யாகத்தான் உயரவேண்டும் என்னும் கட்டாயமும் இல்லை. திறமையையும், அரசரின் அன்பையும் பெற்றவராய் இருந் தால் நேரடியாக எந்த உயர் நிலையிலும் நியமிக்கப்படலாம்.

மன்சப்தாரி முறையில் மேலும் மூன்று பெரும் பிரிவுகள் இருந்தன.

20 முதல் 400 வரை உள்ள மன்சப்களை வைத்திருந்தவர்கள் மன்சப்தார்கள் என்று மட்டுமே அழைக்கப்பட்டனர்.

500 முதல் 2500 வரை உள்ள மன்சப்களைக் கொண்டிருந் தவர்கள் உமாரா (Umara) என அழைக்கப்பட்டனர்.

3000-க்கு மேற்பட்ட மன்சப்களை வைத்திருந்தவர்கள் உமாரா-இ-குபர் (Umara-I-Kubar) என அழைக்கப்பட்டனர்.

மன்சப்தார்களுக்கு ஊதியம் வழங்கும் முறை மட்டுமே இருந்ததா? அல்லது ஜாகீர்கள் வழங்கும் முறையும்

இருந்ததா என்பது குறித்து அறிஞர் பெருமக்களிடையே சிறிது கருத்தொற்றுமையின்மை காணப்படுகிறது. மன்சப்தார்களுக்கு அவர்களுடைய ஊதியத்திற்குச் சமமான வருவாய் தரக்கூடிய ஜாகீர்கள் வழங்கப்பட்டன. மன்சப்தார்கள் தங்களுக்கு எவ்வளவு தொகை விதிக்கப்பட்டு உள்ளதோ அவ்வளவு தொகைக்கு மேல் வசூலிக்க முடியாது. ஏனென்றால் நிலவரி இவ்வளவு என்று அரசினால் வரையறை செய்யப்பட்டு விட்டமையால், ஜமீன்தார் முறைகளில் காணப்பட்டது போன்ற அதிக வரி வசூலித்து மக்களைக் கொடுமைப் படுத்தும் குறைபாடுகளைக் காணமுடியாது.

மன்சப்தார்களுக்கு ஜாகீர்கள் வழங்கும் முறை தவிர ஊதியம் வழங்கும் முறையும் இருந்தது. பேராசிரியர் எஸ். ஆர். சர்மா, மன்சப்தார்களுக்கு ஊதியம் பணமாகப் பன்னிரண்டு மாதங்களும் வழங்கப்பட்டது என உரைக்கின்றார். மன்சப்தாரி முறையினைப் பற்றி நாம் அறிந்து கொள்ள மூர்லண்டு (Moreland) என்பவரின் கருத்துகளே துணை புரிகின்றன. மூர்லண்டு மன்சப்தார்களின் ஊதியம் குறித்த கீழ்க்கண்ட பட்டியலை நமக்கு எடுத்துக் காட்டுகின்றார்.

| வரிசை நிலை | மாத ஊதியம் ரூபாயில் | | | அவர்களின் பொறுப்பில் இருந்த குதிரைகள், யானைகள் போன்றவற்றிற்கான செலவு |
|---|---|---|---|---|
| | முதல் பிரிவினர் | இரண்டாவது பிரிவினர் | மூன்றாவது பிரிவினர் | |
| 5000 | 30,000 | 29,000 | 28,000 | 10,600 |
| 1000 | 8,200 | 8,100 | 8,000 | 3,000 |
| 50 | 250 | 240 | 230 | 185 |
| 10 | 100 | 82½ | 75 | 44 |

மன்சப்தார்களுக்குக் கிடைத்த மொத்த ஊதியத்திலிருந்தே அவர்கள் பொறுப்பிலிருந்த குதிரைகள், யானைகள் போன்றவற்றிற்கான செலவுத் தொகை கழிக்கப்பட வேண்டும்.

மன்சப்தார்களுக்கு மிக உயர்ந்த தொகை மாதந்தோறும் ஊதியமாகக் கொடுக்கப்பட்டமையால் அவர்கள் மிக ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்தனர். தாவூத்கான்

என்னும் மன்சப்தார் தம்முடைய வளர்ப்புப் பறவைகளுக்காக மட்டும் ஆண்டுக்கு ரூ. 25,000 செலவழித்தார் எனவும், இஸ்லாம்கான் என்பவர் நடன நங்கையர்க்கு மட்டும் ஆண்டிற்கு ரூ. 1,000,00 செலவழித்தார் எனவும் மனூச்சி என்பவர் குறித்து வைத்துள்ளார்.

இவ்வாறு அவர்கள் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்ததற்குக் காரணம் இருந்தது. ஒரு மன்சப்தார் இறந்துவிட்டால் அவருடைய வாரிசுகளுக்கு அவருடைய சொத்துகளை (மனைவிக்குக்கூட) அனுபவிக்கும் உரிமை இருக்கவில்லை. அரசாங்கம் எல்லா உடைமைகளையும் எடுத்துக்கொண்டது. இதனால் அவர்கள் தாங்கள் உயிரோடு இருக்கும்போதே எல்லாவற்றையும் அனுபவித்துவிட எண்ணங்கொண்டனர்.

ஸாட், ஸ்வர்

அக்பருடைய காலத்தில் ஸாட் (Zat), ஸ்வர் (Swar) எனப்படும் இரு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன என அறிகிறோம். ஆனால் அப் பிரிவுகளின் தன்மையினைக் குறித்து வரலாற்றறிஞர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் கருத்துத் தெரிவிக்கின்றனர். புளோச்மேன் (Blochman) என்பார் ஸாட் என்பது ஒவ்வொரு மன்சப்தாரும் எவ்வளவு குதிரைகள் வைத்திருக்கவேண்டும் என விதிக்கப்பட்ட அளவு என்றும், ஸ்வர் என்பது உண்மையிலேயே எவ்வளவு வைத்திருந்தனர் என்பதைக் காட்டுவது எனவும் குறிப்பிட்டார். டாக்டர் திரிபாதி, ஸ்வர் என்பது கூடுதலான சிறப்புப் பட்டம் எனவும், அப்பட்டம் பெற்றவர்களுக்குச் சிறப்புத் தொகை வழங்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் எஸ். ஆர். சர்மா ஸ்வர் என்னும் பிரிவு ஸாட் மன்சப்தார் முதல் பிரிவைச் சேர்ந்தவரா அல்லது இரண்டு அல்லது மூன்றாவது பிரிவைச் சேர்ந்தவரா என்பதனைத் தீர்மானித்தல் பொருட்டு ஏற்பட்டது எனக் கருதுகிறார்.

சில வரலாற்று அறிஞர்கள் ஐரோப்பிய நில மானிய முறையோடு மன்சப்தாரி முறையை ஒப்பிட்டுப் பேசுகின்றனர். மன்சப்தாரி முறை, ஐரோப்பிய நில மானிய முறையினின்றும் வேறுபட்டது. நில மானிய முறையில் நிலத்தின் முழுப்பொறுப்பும் நில மானியத்தவரிடமிருந்தது. ஆனால் மன்சப்தாரி முறையில் அப்படி இல்லை. தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்திலிருந்து இவ்வளவுதான் வரி வசூலிக்கவேண்டும் என்று வரையறை செய்யப்பட்டிருந்தமையால் மன்சப்தார்

கள் அதற்குமேல் வரி வசூல் செய்யமுடியாது. மன்சப்தார்கள் அடிக்கடி இடமாறுதல் செய்யப்பட்டனர். மன்சப்தார்களின் தலைமையில் பணிபுரிந்த படைவீரர்கள் மன்சப்தார்களின் படைவீரர்கள் அல்லர்; அரசாங்கத்தின் படைவீரர்கள் அரசரால் ஊதியம் வழங்கப்பட்டமையால் அரசருக்கே விசுவாசமாக நடந்துகொண்டனர். மன்சப்தார்களின் வாரிசுகள் அவர்கள் இறந்தபின் உரிமையைப் பெறமுடியாமற் போனது போன்ற சூழ்நிலை நில மானிய முறையில் இல்லை என்பதை எல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது நில மானிய முறை வேறு, மன்சப்தாரி முறை வேறு என்னும் முடிவிற்கு வருகிறோம்.

மன்சப்தாரி முறையினால் சீர்கேடுகள் பல நேரிட்டன. மன்சப்தார்களின் மனைவி, மக்கள் ஏழ்மையை அடைந்தனர். மன்சப்தார்கள் அதிக ஊதியம்பெற்று அதனை வீண் விரயமாக்கியதால், முகலாயப் பேரரசுக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இதன் விளைவாகத்தான் முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைந்தது என்றுகூடச் சொல்லலாம். ஜே. என். சர்க்கார் கூறுவதுபோல, மன்சப்தாரி முறையே முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்களில் முதலாவது காரணமாகும்.

அக்பரை உண்மையிலேயே ஆக்கத்திறன் வாய்ந்த மேதை என்று குறிப்பிடலாம். மன்சப்தாரி முறையினைப் போன்றே அக்பரின் நில வருவாய்த்துறையும் புகழ்பெற்ற ஒன்றாகும். நில வருவாயைச் சீர்திருத்தி அமைப்பதில் அக்பருக்கு உதவி செய்தவர் இராஜா தோடர்மால் ஆவார்.

### நில வருவாய் முறை

அக்பரின் நில வருவாய் முறையை அறிந்து கொள்வதற்கு முன் அவருடைய முன்னோர்களின் காலத்தில் நில வருவாய் முறை அமைப்பு எப்படி இருந்தது என்பதைத் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும். ஆட்சியைக் கைப்பற்றியபோது பாபருக்கு ஆட்சி அமைப்புப் பணியில் கவனம் செலுத்திடப் போதிய வாய்ப்புக் கிடைக்கவில்லை. போர் செய்வதிலேயே அவருடைய காலம் கழிந்தது. அவர் ஏற்கெனவே இருந்து வந்த ஜாஹீர்தாரி முறையையே பின்பற்றினார். அவரைப் போலவே அவருடைய மகனான ஹுமாயூனும் ஜாகீர்தாரி முறையையே பின்பற்றினார்.

நில வருவாய்த் துறையில் அக்பர் செய்த சீர்திருத்தங்களுக்கு முன்னோடியாக விளங்கியவர் ஷெர்ஷாவே ஆவார். ஷெர்ஷாவின் நில வருவாய்த்துறை முறையினைப் பின்பற்றி அதனைச் சீர்படுத்திய பெருமை அக்பரையே சாரும். 1570-இல் முஜாபர்கான் தர்பார்தி என்பவர் அக்பரின் வருவாய்த்துறை அமைச்சராக விளங்கினர். இவருடைய காலத்தில் கானுங் கோக்கள் நில வருவாய் சம்பந்தப்பட்ட விவரங்களைச் சேகரித்தனர். பின்னர் வருவாய்த் துறை அமைச்சராக நியமனஞ் செய்யப்பட்ட இராஜா தோடர்மாலும் அக்பரும் இணைந்து புதிய முறை ஒன்றை ஏற்படுத்தினர். இம் முறை ஜப்திமுறை (Zabti) என அழைக்கப்படுகிறது. இந்த ஜப்தி முறை லாகூர், ஆக்ரா, அலகாபாத், ஆஜ்மீர், அயோத்தி, மாள்வா, முல்தானம், டெல்லி ஆகிய எட்டு மாநிலங்களிலேதான் அறிமுகப் படுத்தப்பட்டதே தவிர, வங்காளம், பீகார், சிந்து, காஷ்மீர் ஆகிய சுபாக்களில் அறிமுகப்படுத்தப்படவில்லை.

ஜப்தி முறையினை வசதியின் பொருட்டுக் கீழ்க்கண்ட பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(1) நில அளவை (2) நிலப்பிரிவு (3) மதிப்பீடு
(4) கட்டணம் (5) வசூல்.

*நில அளவை*

நில அளவை முறையை ஷெர்ஷா ஏற்படுத்தினர். அவருடைய முறையில் சில குறைபாடுகள் இருந்தன. நில அளவைக்குக் கயிறே அளவுகோலாகப் பயன்படுத்தப்பட்டு வந்த முறையை நீக்கி, இருபுறமும் இரும்புப் பூண்களைக் கொண்ட மூங்கில் கழியைப் பயன்படுத்தினர். நிலத்தை அளந்து கொடுப்பதற்கு அரசு ஊழியர்கள் பணம் ஏதும் பெறக்கூடாது என வலியுறுத்தப்பட்டனர். ஒரு பிகா நிலத்தை அளப்பதற்கு ஒரு டேம் (முகலாய நாணயம்) அரசாங்கத்திலுல் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

*நிலப் பாகுபாடு*

ஒவ்வொரு பிரிவிலும் இருந்த நிலங்கள் அவற்றின் தரத்திற்கேற்ப நான்கு வகையில் பாகுபாடு செய்யப்பட்டன. ஒவ்வோராண்டும் தொடர்ந்து இடைவெளியின்றிப் பயிரிடப் பட்டு வந்த நிலங்கள் போலாஜ் (Polaj) எனப்பட்டன. தொடர்ந்து பயிரிடப்பட்டு வந்து எப்போதாவது ஓரிருமுறை

பயிரிடப்படாமல் விடப்பட்ட நிலங்கள் பிரவ்தி (Prauti) எனப் பட்டன. மூன்று நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பயிரிடப்பட்டு வந்த நிலங்கள் சச்சார் (Chachar) எனப்பட்டன. ஐந்தாண்டுகளுக்குமேல் பயிரிடப்படாமல் விடப்பட்டவை பாஞ்சார் (Panjar) எனப்பட்டன.

இவ்வாறு பிரிக்கப்பட்ட நிலங்கள் ஒவ்வொன்றும் மூன்று பிரிவுகளாக மேலும் பிரிக்கப்பட்டன. நல்ல நிலங்கள், இடைப்பட்ட நிலங்கள், மட்டமான நிலங்கள் என்பவை அவை.

### மதிப்பீடு

அரசின் பங்காக எவ்வளவு பெறலாம் என்னும் மதிப்பீட்டைச் செய்வதற்கு நிலத்தின் தன்மை, நிலத்தின் அளவு, விளை பொருள் ஆகியவற்றையெல்லாம் கருத்தில் கொண்டனர். பத்து ஆண்டுகளில் ஒவ்வோர் ஆண்டின் சராசரி விளை பொருள் கணக்கு எடுக்கப்பட்டு அதில் மூன்றில் ஒரு பங்கு அரசின் பங்காகப் பெறப்பட்டது.

ஒரு பிகா (ஏக்கர் என்று இன்று அழைப்பதைப் போல் அன்று அழைக்கப்பட்ட ஓர் அளவு) போலாஜ் நிலம் கீழ்க் கண்ட வகையில் மதிப்பிடப்பட்டது.

| ஆண்டு | பயிர் | உற்பத்தி | |
|---|---|---|---|
| 1572 | கோதுமை | நல்ல நிலம்<br>இடைப்பட்ட நிலம்<br>மட்டமான நிலம் | சராசரி 20 |
| 1573 | ,, | ,, | சராசரி 18 |
| 1574 | ,, | ,, | ,, 20 |
| 1575 | ,, | ,, | ,, 20 |
| 1576 | ,, | ,, | ,, 10 |
| 1577 | ,, | ,, | ,, 12 |
| 1578 | ,, | ,, | ,, 20 |
| 1579 | ,, | ,, | ,, 16 |
| 1580 | ,, | ,, | ,, 24 |
| 1581 | ,, | ,, | ,, 20 |
| | | | 180 |

180/10 = 18 மணங்கு
(சராசரி உற்பத்தி)

அரசாங்கத்தின் பங்கு மூன்றில் ஒன்று
அதாவது 18/3

கட்டண விகிதம்

அக்பர் அரசுக்குச் சேர வேண்டிய பங்கைப் பணமாகப் பெற விரும்பினர். அரசாங்கம் பணமாகப் பெற விரும்பியது என்று அறியும் போது உற்பத்திப் பொருள்களின் விலையை எங்ஙனம் நிர்ணயித்தனர் என்பதைத் தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும். பத்து ஆண்டுகளுக்கு உற்பத்திப் பொருள் களின் விலை கணக்கெடுக்கப்பட்டு அதன் சராசரி விலையே அரசாங்கத்தினுல் நிர்ணயிக்கப்பட்ட விலையாகத் தீர்மானிக் கப்பட்டது.

வரி வசூலிப்பு முறை

நில வருவாய் ஆண்டுக்கு இருமுறை அமால் குஸார் எனப் படும் அலுவலரால் வசூலிக்கப்பட்டது. அவருக்கு முக்கதம், போட்தார் போன்றவர்கள் உதவினர். வசூலித்த தொகை யில் இரண்டரை சதவிகிதம் போட்தாருக்கு அளிக்கப் பட்டது.

பிறமுறைகள்

வங்காளம், பீஹார், சிந்து, காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் இதுவரை நாம் பார்த்த ஜப்தி எனப்படும் முறைக்குப் பதிலா கப் பட்டாய் (Batai) நஸ்க் (Nasq) எனப்படும் முறைகள் பின் பற்றப்பட்டன. பட்டாய் எனப்படுவது அரசு பங்கீடு செய்து கொள்ளும் முறைக்குப் பொதுவான பெயராகும். பட்டாய் எனப்படும் பங்கீட்டு முறையிலும் பலவகைகள் இருந்தன. குத்து மதிப்பாக அரசாங்கம் தன் பங்கைப்பெறும் முறைக்குக் கன்கட் என்பது பெயராகும். பயிர்கள் அறுவடை செய்யப்பட்டு வந்தபின் பங்கிட்டுக்கொள்ளும் முறைக்குக் கல்லாபக்ஷி (Ghalla Bakshi) என்பது பெயராகும். மொத்தமாகச் சில நிலங்களின் வருவாய் முழுவதும் அரசுக்கு எனப் பங்கீடு செய்யப்படும் முறை கேட் படாய் (Khet Batai) எனப்படும். அறுவடை செய்யப்பட்ட பயிர்களைக் கட்டாகக் கட்டிப் பங்கீடு செய்வது லாங் படாய் (Laug Batai) எனப் பட்டது.

நஸ்க் முறை என்ருல் என்ன என்பது குறித்து யாரும் சரியான விளக்கம் அளிக்கவில்லை. எனவே அதைப் பற்றிப் போதிய சான்றுகள் கிடைத்த பின்னரே நாம் ஏதும் உரைத் திட இயலும்.

பஞ்சக் காலங்களின் போதும், விளைச்சலில்லாத போதும் வரி வசூலிக்கப்படவில்லை. விவசாய வளர்ச்சிக்கு அரசு உழவர்களுக்குக் கடன் உதவி செய்தது. படை வீரர்கள் பயிருக்கு ஏதேனும் சேதம் விளைவித்தால் அரசரால் இழப்பீடு செய்யப்பட்டது.

அக்பருக்குப் பின்னர் ஜஹாங்கீரும், ஷாஜகானும் அக்பரின் ஜப்தி முறையைப் பின்பற்றினர். ஆனால் அக்பர் நடந்து கொண்டது போல் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளாது இளக்கமாகவே நடந்து கொண்டனர். ஔரங்கசீப்பின் காலத்தில் இம் முறை கை விடப்பட்டது. தாறுமாறான முறையில் நிலவரி வசூலிக்கப்பட்டு அரசு மக்களின் எதிர்ப்பைத் தேடிக்கொண்டது.

இதுவரை நாம் பார்த்தவற்றிலிருந்து அக்பரின் ஆட்சித் துறைச் சிறப்புகளை ஓரளவு உணர்கிறோம். அக்பருடைய மேதைத் தன்மை ஏற்கெனவே நிலை பெற்று இருந்தவற்றை மாற்றித் திருத்திக் காலத்திற்கேற்ப அமைப்பதிலே தான் சிறப்பிடம் பெற்றது. அக்பர் என்ன புதிய ஏற்பாடுகள் செய்தாலும், புதிய நிறுவனங்களை அமைத்தாலும் மௌரியர்கள் காலத்திலிருந்து இந்திய அரசுகள் கடைப்பிடித்து வந்த மரபுகளையே கைக் கொண்டார். இந்துக்களால் போற்றப்பட்ட நல்ல அரசருக்குரிய பண்புகள் என்று கூறப்பட்டிருந்தவற்றைக் கொண்டதோடு குடி மக்களைத் தம் செல்வங்களைப் போல் தந்தை நிலையிலிருந்து காத்தார். இவ்வாறு நடந்து கொண்டதன் மூலம் ஆளும் தாம் அந்நியர் என்னும் எண்ணத்தையே இந்திய மக்கள் மனத்திலிருந்து மாற்றினர்.

இந்துக்களுக்கு ஓர் ஆன்மீக வழிகாட்டியாகவும், முஸ்லிம்களுக்கு நபி நாயகராகவும், அரசராகவும் அக்பர் விளங்கினர். அக்பரது அரசியல் அமைப்பில் இந்து மரபுகள் மட்டுமின்றிக் கலீஃபாக்களிடமிருந்து பெற்ற நல்ல நிறுவனங்கள், தைமூரின் இறைமை, டில்லிச் சுல்தானிய ஆட்சியின் சிறப்பு அம்சங்கள் ஆகியவை பின்னிப் பிணைந்து கிடந்தன. இந்தோ இஸ்லாமிய அரசியல் அமைப்பு முறைக்கு ஒரு சிறப்பும் பெருமையும் ஏற்பட்டது அக்பராலேதான். பல நூற்றுண்டுகளுக்கு முன்னர் அசோகரது அரசு எய்திய சிறப்பை அக்பரது அரசு பெற்றது. பல நூற்றுண்டுகள் இந்த அமைப்புத் தொடர்ந்து அக்பரது புகழை நிலைக்கச் செய்தது.

### *அக்பருக்குப்பின்*

அக்பருடைய காலத்திற்குப் பின்னர் ஔரங்கசீப்பின் காலம் வரை அரசு அமைக்கப்பட்டிருந்தவிதம் குறித்து இனிக் காண்போம். அரசு நிறுவனங்கள் அக்பரால் வகுக்கப்பட்டிருந்த நிலையில் இல்லாது மேலும் விரிவாக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஏனென்றால் பேரரசின் எல்லை விரிவடைந்து கொண்டிருந்தது. புதிய பணிகளை மேற்கொள்ளும் போது, புது நிர்வாகத் துறைகள் உண்டாக்கப்பட்டன. ஆனால் அவருக்குப்பின் வந்தவர்களால் எடுக்கப்பட்ட பெருமுயற்சிகள், நிர்வாகத் துறை மாற்றங்கள் ஆகியற்றை நாம் உற்று நோக்கும்போது பெருகிவரும் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பேரரசு துறையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. நிர்வாகத்தில் உறுதியும் திறமையும் அதிகரிப்பதற்குப் பதிலாகச் சிறிது சிறிதாக நலிவு ஏற்பட்டது. அரசு விரிவடைய விரிவடையப் பிரச்சினைகள் பெருகின. பிரச்சினைகளினால் ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் போகவே டில்லி அரசு தன் கீழ் இருந்த மாநில அரசுகளின் மீது கொண்டிருந்த பிடியைத் தளர்த்தியது.

டெல்லியை ஆண்ட அரசர்களின் போக்கிலும் மாறுதல்கள் தோன்றின. அவர்கள் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதற்காக எதையும் செய்யத் துணிந்தனர். தந்தை உயிரோடு உள்ள போதே கிளர்ச்சி செய்து பதவியைக் கைப்பற்றிவிட மக்கள் ஆசைப்பட்டனர். இப் போக்கு அக்பரது ஆட்சிக் கால இறுதியிலே முளைவிடத் தொடங்கியது. அக்பருக்கு எதிராக அக்பருடைய ஆட்சியின் போது ஜஹாங்கீரும், ஜஹாங்கீருக்கு எதிராக அவருடைய ஆட்சியின்போது அவருடைய மகன் குஷ்ருவும், ஷாஜஹானும், ஷாஜஹானுக்கு எதிராக அவரது மூன்றாவது மகனான ஔரங்கசீப்பும், ஔரங்கசீப்பிற்கு எதிராக இளவரசர் அக்பரும் கிளர்ச்சி செய்தனர். முகலாயர்களிடையே வாரிசு உரிமைச் சட்டம் என்று ஏதும் இல்லை. ஒவ்வொருவரும் பேரரசர் ஆவதற்கு வலிமையும், குடிப்பிறப்பும் உற்ற கருவிகள் என்னும் எண்ணம் கொண்டிருந்தனர் என்னும் உண்மையினை இதன் மூலம் அறிகிறோம்.

### *கிளர்ச்சிகள்*

இதனுடைய விளைவு என்ன? மக்களுக்கு அரச பதவியில் இருந்த மதிப்புக் குறைந்தது. இதுவரையில் தெய்வீகத் தன்மை வாய்ந்த ஒன்றாக அதனை எண்ணி அரசுக்கு எதிராகக்

கிளர்ச்சி செய்வது இறைவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வதாகும் என்று எண்ணியிருந்த மக்கள் மத்தியில் அந்த எண்ணம் மறையவே அரசரை எதிர்த்துக் கிளர்ச்சிகள் செய்யத் தலைப்பட்டனர். கிளர்ச்சி செய்வது நியாயம் என்று அவர் தம் செயலுக்கு நியாயம் கற்பிக்கவும் தொடங்கினர்.

### பக்தி பயமாக மாறியது

அது மட்டுமின்றி அரசர்கள் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப ஆட்சி புரியத் தொடங்கினர். இதன் விளைவாக ஜஹாங்கீரின் காலத்தில் நூர்ஜஹானின் ஆதிக்கம், மகபத்கானின் கிளர்ச்சி, கான்ஜஹான் லோடியின் கிளர்ச்சி, சத்னாமிகளின் கிளர்ச்சி போன்ற பல நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அக்பரின் காலத்திற்குப் பின்னர் மக்கள் அரச பதவியின் மீது கொண்டிருந்த புனிதத் தன்மை மறைந்து விட்டது. அரசரிடம் பக்தியிருந்து வந்த நிலை மாறுதல் அடைந்து அது பயமாக மாறியது. அரசரின் படை, ஆள் வலிமை போன்றவற்றிற்கே அஞ்சினர். ஔரங்கசீப்புப் போன்ற திறமை மிக்க அரசர்களாலும்கூடச் சமாளிக்க முடியாத அளவிற்குத் தொல்லைகளும், பிரச்சினைகளும் தோன்றின என்பதை நாம் காண்கின்றோம். ஒவ்வொரு அரசருக்கும் அவரது திறமைக்கு மீறிய செயல்களைச் செய்யவேண்டிய அளவுக்குப் பிரச்சினைகள் பெருகியிருந்தன. அரசருக்கு ஒரு தெய்வீகத் திறமையே தேவைப்பட்டது. பேரரசர் ஒருவர் மட்டுமே வரையறையின்றிப் பெருகிவிட்ட நிர்வாகச் செயல்களைக் கவனிப்பது என்பது முடியாமல் போய்விட்டது. அக்பருக்குப் பின்வந்த முகலாய அரசர்களிடத்தில் பரந்த மனப்பான்மையும், எதிர்கால நோக்கும் இல்லை.

### வல்லரசு

அக்பரைப் போலவே ஔரங்கசீப்பும் ஒரு முழு வரம்பற்ற வல்லரசை அமைக்க முயன்றார். ஆனால் மதவெறி புகுந்ததின் காரணமாக அவ் வெண்ணம் ஈடேறவில்லை. தொன்று தொட்டுவரும் மரபுகளுக்கும் வேர் ஊன்றிய நம்பிக்கைகளுக்கும் மாறாக அரசு அமைந்தபடியாலும், மக்களின் உணர்ச்சிகளை மதித்து நடக்காமையாலும் மக்களிடையே ஆட்சிக்கு எதிர்ப்புத் தோன்றி ஆட்சித்துறையில் பேரரசின் வலிமை குன்றி ஒரு சீரழிவு ஏற்பட்டது. ஔரங்கசீப்பின் வல்லரசில் மத ஏற்பும், அரசியல் ஒரவஞ்சனையும் தோன்றி அரசின் சீரழிவிற்கும், நலிவிற்கும் அவை காரணமாயின.

அக்பரால் ஏற்படுத்தப்பட்டுப் பேரரசுக்கு ஓர் உறுதுணையாயிருந்த கோளுட்சித் தத்துவத்தின் அடிப்படையே ஔரங்கசிப்பின் காலத்தில் குலைந்தது. கடவுளின் சாயை, ஆன்மீகம், உலகியல் துறை ஆகிய இரண்டிற்கும் இறைவர் என்றெல்லாம் கருதப்பட்ட ஷாஜஹான் சிறையில் கிடந்து வாடுகின்றார் எனக் கேள்விப்பட்டதும் மக்கள் அரசர் மீது வைத்திருந்த பெருமதிப்பை இழந்தனர். மன்னர்களைச் சூழ்ந்து நிற்பதாக மக்கள் எண்ணிக் கொண்டிருந்த கண்ணியமும், புனிதத் தன்மையும் இருக்குமிடந் தெரியாமல் மறைந்தன.

## வேறுபாடுகள்

அக்பருடைய காலத்திற்கும் அவருக்குப் பின்னால் வந்தவர்களுடைய காலத்திற்கும் நிறைய வேறுபாடுகள் இருந்தன. அக்பர் முகலாயர் ஆட்சி நன்கு நிலை பெறுவதற்குப் பாடுபட்டார். ஆனால் அவருக்குப் பின்னால் வந்தவர்கள் காலத்தில் நிலைபெற்றதும், திறமை மிக்கதுமான ஓர் ஆட்சி நன்கு அமைக்கப்பட்டு வரம்பற்ற முடியாட்சிக்கு வகை செய்யக் கூடிய அடிப்படைகள் யாவும் நன்கு உறுதியாய் அமைக்கப்பட்டு விட்டன. ஜஹாங்கீருக்கோ, ஷாஜஹானுக்கோ, ஔரங்கசிப்புக்கோ ஒரு பேரரசைத் தோற்றுவிக்க முற்படும் அரசனின் முன் ஏற்படும் பிரச்சினைகள் எவையும் ஏற்படவில்லை. புதிதாக அரசை நிறுவும் அரசனுக்கு ஏற்படும் பிரச்சினைகள் அதிகமானவை.

## குண நலன்கள்

அக்பருடைய வழித் தோன்றல்களைச் சோம்பேறித்தனம், சிற்றின்ப வேட்கை, பிடிவாதம், குறுகிய மனப்பான்மை, தன்னல மனப்பான்மை ஆகிய தீய பண்புகள் ஆட்கொள்ள அதிகார மமதையாலும் ஆடம்பர மோகத்தாலும் அவர்கள் உந்தப்பட்டனர். அவர்கள் அக்பர் கடைப்பிடித்த நெறியினின்றும் பிறழ்ந்து சென்றனர். அக்பரின் நிறுவனங்களும், மரபுகளும் சில சமயங்களில் கடைப்பிடிக்கப்பட்டாலும், அக்பரின் மனப்பான்மைக்கு முற்றிலும் மாறாகவே அவற்றை மேற்கொண்டனர். சமயப் பொறையின் விளைவால் இந்துக்களின் நட்பை அக்பர் பெற்றாரென்றால் அதனைக் கைவிட்டதன் விளைவாக அதிருப்தியும், கலகங்களும் தோன்றக் காரணமாயிருந்தனர் அவருக்குப் பின் வந்தவர்கள்.

### இந்து சமய வெறுப்பு

சமயப் பொறை முதன் முதலில் ஜஹாங்கீர் காலத்தில் புறக்கணிக்கப்பட்டது. அஜ்மீரில் இந்து ஆலயங்கள் தரை மட்டமாக்கப்பட்டன. ஷாஜஹானும் தன் தந்தையின் கொள்கையைப் பின்பற்றிக் காசி மாவட்டத்தில் எழுபத்தாறு கோவில்களைத் தரை மட்டமாக்கினார். கிறிஸ்தவக் கைதிகள் கூட அவரால் மத மாற்றஞ் செய்யப்பட்டனர். புனிதக் கோவில்களை இடித்து அவற்றை அசுத்தப்படுத்தியதோடு ஜஹாங்கீர் நிறுத்திக் கொண்டார். ஆனால் ஷாஜஹானே ஒரு படி மேலே சென்று இந்துக்களைப் பலவந்தமாக மதமாற்றஞ் செய்தார். ஆனால் அவருடைய மகனான ஔரங்கசீப்பு அவரையும் மிஞ்சினார். இந்துக்கள் மட்டுமின்றி இஸ்லாமின் மற்றொரு பிரிவினரான ஷியா மதத்தவரும் இவரால் கொடுமைப் படுத்தப்பட்டனர். ஔரங்கசீப்பின் சம காலத்தவர்களாகிய இரண்டாம் ஷா அப்பாஸ் என்னும் பாரசீக அரசர், நிக் கோலோ போன்றவர்கள் ஔரங்கசீப்பின் நடத்தையை மிக இழிவானதாயும் மனிதத் தன்மை அற்றதாயும் கருதினார்கள். இந்தச் சமயக் கொள்கையை நாம் விவாதிப்பதன் காரணம் இதுஆட்சி முறை அமைப்பைப் பாதிக்கும் என்று காட்டுதற் பொருட்டேயாகும்.

### கைவிடப்படுதல்

ஆப்கானியர்களைப் போன்ற எதிரிகள் போரிடுவதற்கு இல்லாத காரணத்தாலும், முகலாயர்களை அந்நியர்கள் என எண்ணும் சூழ்நிலை மாறிவிட்ட படியாலும், முகலாய மன்னர்கள் இந்துக்களின் விசுவாசத்தையோ, இராஜபுத்திரர்களின் ஒத்துழைப்பையோ ஒரு பொருட்டாக எண்ணாது தங்களது சமயத்தின் கோட்பாடுகளைப் பற்றி எண்ணத் தலைப் பட்டனர். நாட்டை ஆளும் அரசர்கள் என்னும் உணர்வை விட முஸ்லிம்கள் என்னும் உணர்வே அவர்களிடத்து மேலோங்கி யிருந்தது. அக்பருடைய கொள்கையை மாற்றும் முயற்சி ஷாஜஹான் காலத்தில் தொடங்கியது. அக்பரின் கொள்கைகளைக் கைவிடுவதன் மூலம் பிற்போக்கு உணர்வு தலை எடுத்தது. அவர்கள் இஸ்லாமிய அரசியல் அமைப்பை நிறுவ முயன்ற செயல் புத்திசாலித்தனமான செயலாகாது. இஸ்லாமிய அரசு எத்தனையோ நூற்றாண்டுகளாக இந்தியாவில் இருந்து எத்தனையோ மாற்றங்களை அடைந்து விட்ட பின்னர் அது மீண்டும் பழைய முழுமையான தூய்மை நிலையை அடைய

முடியாது. அது இந்தோ இஸ்லாமிய அரசியல் அமைப்பே தவிர இஸ்லாமிய அரசியல் அமைப்பன்று.

### இஸ்லாமிய அரசியலமைப்பு

ஔரங்கசீப் செய்ய எண்ணியதெல்லாம் இந்தோ இஸ்லாமிய அரசியலமைப்பு முறையைக் கலைத்துவிட்டு இஸ்லாமிய அரசியலமைப்பை நிறுவுவதே. இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்கு முறையை மீண்டும் உயிர்ப்பிக்க அவர் செய்தது என்ன என்பதை இனி ஆராய்வோம்.

### புனிதப்போர்

இஸ்லாமியக் கருத்தின்படிப் பல தெய்வ வணக்கம் ஷர்க் என அழைக்கப்பட்டது. அக் குற்றத்தைச் செய்தவர்கள் காபிர்கள் ஆவார்கள். அவர்கள் வாழ்வதற்கே தகுதியற்றவர்கள். அப்படிப்பட்ட காபிர்களை ஒழிப்பது ஜிகாத் அல்லது புனிதப் போர் என அழைக்கப்பட்டது. ஔரங்கசீப்பின் காலத்தில் அத்தகைய காபிர்கள் கோடிக் கணக்கில் இருந்தனர். அவர்கள் அனைவரையும் கொல்வது முடியாத செயல். எனவே அவர்களை மத மாற்றம் செய்வது ஒன்றே சரியான வழி. அதனால் அவர்கள் மீது ஜெஸியா வரியும், முஸ்லிம்கள் எல்லாம் செலுத்தாத சுங்க வரியும் திணிக்கப்பட்டன. பொருளாதார நிர்பந்தங்களையும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் விதித்தால் அவற்றிற்கு அஞ்சி அம் மக்கள் இஸ்லாமை ஏற்றுக் கொள்வர் என நம்பினர் அவர். பல வகையில் இந்துக்களை இஸ்லாமியச் சமயத்திற்கு ஈர்த்திட ஔரங்கசீப்பின் மகன் அக்பர் அரும்பாடு பட்டார். தீவிர முஸ்லிம்கள் ஆன கலீஃபாக்கள் ஏற்கெனவே செய்து வைத்துப் போன முன்னிகழ்வுச் செய்திகளை ஒத்தே எல்லாச் செயல்களும் நடைபெறவேண்டும் என்று விரும்பி நாணயங்களிலிருந்து கலீமாவை அவர் நீக்கினர். இஸ்லாமியருக்குப் பலவிதக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இஸ்லாமுக்கு விரோதமாக யார் என்ன செய்தாலும் தண்டிக்கப்பட்டனர்.

### நிறுவனங்கள்

இந்த அளவோடு நாம் முன்னுரையாகக் கூறப்பட்டுள்ள செய்திகளை நிறுத்திக்கொண்டு அரசு துறை நிறுவனங்கள் அக்பரின் காலத்திற்குப் பின் எவ்வாறு இருந்தன என்பதனைக் காண்போம்.

வடிவம்

பேரரசின் அமைப்பு முறையின் வடிவமும், அரசின் போக்கும் அக்பராலேயே முதலில் நிர்ணயிக்கப்பட்டன. ஜஹாங்கீரும், ஷாஜஹானும் பேரரசின் அமைப்பு முறையின் புற வடிவத்தை அப்படியே ஏற்றுக் கொண்டாலும் அரசின் தன்மையைப் பொறுத்த வரையில் ஒவ்வொருவரும் அவரவரது மனப்போக்குக்கும் கால நிலைக்கும் ஏற்றவாறு மாற்றிக் கொண்டனர். ஷாஜஹான் காலத்தில் தென்னிந்தியாவின் பெரும்பகுதி வெல்லப்பட்டது. அஹமத் நகர் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. ஔரங்கசீப்பின் காலத்தில் பீஜப்பூர், கோல்கொண்டா ஆகியவையும் பேரரசுடன் இணைந்தன. மனூச்சி என்பாரின் கருத்துப்படி ஔரங்கசீப்பின் காலத்தில் தென்னிந்தியாவில் ஆறு சுபாக்களும், தென்னிந்தியாவின் வடக்கே பதினைந்து சுபாக்களும் இருந்தன. அக்பரது பேரரசு அமைப்பு முறையில் இருந்த பேரரசின் குடும்பத் தொழிலகங்கள், படை ஆகியவற்றின் நிர்வாகத்திற்கும், பொது ஆட்சித் துறை நிர்வாகத்திற்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. அக்பரின் காலத்தில் இருந்த முறையே தொடர்ந்தது. அக்பர் காலத்தில் எவ்வாறு இருந்ததோ அதே போன்றுதான் ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கசீப்புக் காலத்திலும் பேரரசு அமைப்பு முறை இருந்தது. முகலாய ஆட்சியைக் காக்ஜி இராஜ் (காகித அரசு) என்று கூறினர். அக்பரின் காலத்திற்குப் பின்னர் ஏற்பட்ட அரசுகள் காகித அரசுகள் என்று கூறப்பட்டதற்கு காரணம் இல்லாமல் இல்லை. ஓர் அரசின் ஆணைகளை அந்த அரசின் அலுவலர்களோ அல்லது மக்களோ மதித்து நடக்க வேண்டும். அவ்வாறு ஆணைகள் மதிக்கப்படாமல் காகித அளவிலே, செயலளவில் செயல் முறைக்கு வராமல் இருந்தால் அந்த அரசு காகித அரசு என்றே அழைக்கப்படும்.

எட்டுத் துறைகள்

பேராசிரியர் சர்க்கார் எட்டுத் துறைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அவைகள் முறையே (1) கருவூலமும் வருவாயும், (2) பேரரசு குடும்பம் (3) இராணுவ ஊதியக் கணக்குகள், (4) சமயத் தொடர்பான மானியங்கள், (5) அறப் பணிகள், (6) பொது அற நெறிக் கண்காணிப்பு, (7) துப்பாக்கிப் படை, (8) உளவுத் தபால்கள் ஆகியவை ஆகும். திரு. சின்ஹா இக் காலத்தில் இருந்திருக்கக் கூடிய முக்கியத் துறைகள், நிதி, படை, அதோடு கூடிய சம்பளம் கணக்கு

வழக்குகள், உணவு பற்றிய துறைகள், பேரரசு குடும்பம், நீதியும் சட்டமும், சமயச் சார்பான மானியங்களும் அறப்பணிகளும், பொது அறநெறிக் கண்காணிப்புப் பற்றிய துறைகள், மத்திய உளவு அல்லது வாகியா நவிஸ் துறையுமாகும் என்று குறிப்பிடுகின்றனர். அக்பரால் தோற்றுவிக்கப்பட்ட செயலகம் அல்லது த∴ப்தார் என்னும் நிறுவனமானது அவரது காலத்தில் இருந்ததைப் போன்றே பணிபுரிந்து வந்தது. இவை மட்டுமின்றிப் பேரரசைச் சார்ந்த ஏராளமான கார்காணுக்கள் அதாவது தொழிலகங்களும் பண்டக சாலைகளும் இருந்தன. அதற்குத் தனித்தனியே மேற்பார்வையாளர்களும் தரோகாக்களும், மீர்சாமன் அல்லது கானிசாமன் என்னும் அதிகாரிக்குக் கட்டுப்பட்டுப் பணிபுரிந்து வந்தனர்.

### வசீர்

அரசின் அதிகாரிகளில் வக்கில், வசிர் ஆகிய இருவரைப் பற்றியும், அக்பரின் ஆட்சியின் போது அறிந்தோம். ஆனால் ஜஹாங்கிர் காலத்திலும் ஔரங்கசீப்புக் காலத்திலும், வசிர் என்னும் ஒருவரைப் பற்றி மட்டுமே கேள்விப்படுகிறோம். ஷாஜஹான் தன் மனைவியின் வேண்டுகோளின்படி ஆச∴ப் கானை வக்கிலாக நியமித்தார். வசிர் உண்மையிலேயே நாட்டின் தலைமை அமைச்சராகக் கருதப்பட்டார். மாநிலத் திவான்கள், திவானி குல், திவானி தான், திவானி அல்சா, திவானி புயூதத், திவானி சதத் ஆகியோரும், பல்வேறு துறைகளின் நிதி விவகாரங்களைக் கவனித்து வந்த அதிகாரிகள், மற்றைய திவான்கள் ஆகியோரும் அவருக்குட்பட்டே இருந்தனர். பல சமயங்களில் அரசரின் பிரதிநிதியாக இருந்து பேரரசுக்குரிய சடங்குகளை வசிர் செய்தார். மன்னர்கள் சார்பாகப் பல கடிதங்களைத் தயாரித்து வெளிநாட்டு மன்னர்களுக்கு வசிர் அனுப்பினர். உண்மையில் செயலர்களின் பணிகளையே வசிர் செய்தார். ஜஹாங்கிர் காலத்தில் ஷரி∴ப் கான் ஒரு பிரபல வசிர் ஆவார். ஷாஜஹான் காலத்து மீர் ஜும்லா என்பவரும், ஔரங்கசீப்புக் காலத்து ஜாபர்கான் என்பவரும் வசிர்களாயிருந்தனர்.

சர்க்காரின் கூற்றின்படி வசிர் அரசின் எல்லாத் துறைகளையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். முக்கியத் துணை அதிகாரிகள் திவானி அல்சாவும், திவானிதானும் ஆவர். திவானி அல்சா பல அலுவலர்களை நியமிக்கும் பொறுப்பையும், பேரரசு முகாம்களிலும் சுபாக்களிலும் நடை

பெரும் வரவு செலவுக் கணக்குகள் பற்றிய ஓர் அறிக்கையை யும், அரசருக்குச் சொந்தமான மகல்கள் பற்றியும், தொழி லாளர்களைப் பற்றியும் பட்டியல்களைத் தயாரித்து வைத்து இருந்தார்.

### திவானிதான்

திவானிதான் என்னும் மற்றொரு அதிகாரி ஜாகீர்களின் கட்டுப்பாட்டையும், சம்பளம், உதவிப்பணம், இவற்றுக்குப் பதிலாக ஒதுக்கப்பட்ட நில வருமானத்தைப் பற்றிய காரியங் களையும் கவனித்துக்கொண்டார். பேரரசின் ஆணைகளை எழுதி வெளியிடும் எழுத்தகமும் அவருடைய கட்டுப்பாட்டுக் குள்தான் இருந்தது. ஜாகீர்கள், ரொக்கப் பண்டங்கள் பற்றியும், ஜமீன்தார்கள், ஜாகீர்தார்கள், மன்சப்தார்கள் ஆகியோரைப் பற்றியும் உள்ள எல்லாக் காரியங்களையும் அவர் கவனித்துக்கொண்டார்.

### மீர் பக்ஷி

வக்கீல், வசீர் ஆகியோருக்கு அடுத்தபடியாக மீர் பக்ஷி என்பார் சம்பள விநியோகத் துறைத் தலைவராக விளங்கினர். மனுசப் என்பாரின் கூற்றுப்படிக் குதிரைப்படை அணித்துக் கும் அவரே பொறுப்பு வாய்ந்தவராவார். மன்சப்தார் பதவி க்கு ஆள் சேர்ப்பதிலும், அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கு வதிலும் மீர்பக்ஷிக்கு உதவியாக மூன்று பக்ஷிகள் இருந்தனர். மீர்பக்ஷிக்குத் துணை புரிய ஏராளமான எழுத்தர்கள் இருந் தனர். அரண்மனையில் அல்லது மாநிலங்களில் இருக்கின்ற மன்சப்தார்கள் யார் யார் என்பதைப் பற்றிய விவரங்களை அவர் சேகரித்தார். இவை மட்டுமின்றி இன்னும் பல கடமை கள் அவருக்கு இருந்தன. அக்பரின் காலத்தைப் போன்றே பணித்துறைச் சிப்பந்திகள் சாஹிபி தௌஜ் என்பவரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து பணி புரிந்தனர்.

### ஜாகீர்

அக்பரின் காலத்தில் ஜாகீர் வழங்கும் வழக்கம் நாட்டில் ஏற்பட்டிருந்தது. ஷாஜஹான் காலத்தில் ஜாகீர்கள் ஏராள மாக வழங்கப்பட்டன. ஜாகீர்தாரி முறையினல் அரசுக்கு இரண்டு வகையில் நன்மை ஏற்பட்டது. முதலாவதாக ஜாகீர் தார்கள் அமைதியை நிலை நாட்டி அதன் மூலம் தங்களுக்குச் சேர வேண்டிய வருவாயை வசூல் செய்வதில் குறியா யிருந்தனர். இதனல் தொலைவில் உள்ள இடங்களிலிருந்து

வருவாயை வசூல் செய்து தலைநகருக்குக் கொண்டு வருகின்ற பொறுப்புப் பேரரசுக்கு இல்லை. இரண்டாவதாகத் தங்களுடைய விசித்திரமான படையின் காரணமாகப் படை ஒன்றை எப்போதும் நன்னிலையில் வைக்க வேண்டிய கட்டாயம் ஜாகீர்தார்களுக்கு ஏற்பட்டது. மைய அரசு உண்மையிலேயே அதனைப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏற்றதாயிற்று.

### சேலாக்கள்

மன்சப்தார்கள் ஒவ்வொருவரும் தம்மையே அண்டி வாழும் சேலாக்கள் என்னும் அடிமைப் பட்டாளம் ஒன்றையும் தம்மைச் சுற்றியும் வைத்துக்கொண்டிருந்தனர். அடிமைகளுக்கு என்று தனி வீடோ, உடைமையோ ஏதும் கிடையாது. அரசனது பாசறை எதுவோ, அதுவே அவர்கள் வாழுமிடமாக இருந்தது. அவர்கள் அரசர் சென்ற இடங்களுக்கெல்லாம் தொடர்ந்து சென்றார்கள். சேலா என்னும் இந்திப் பெயர் துருப்பினர்க்கு வழங்கப்பட்டது. சாதாரணப் படை வீரர்களை விட உயர்ந்ததும் மன்சப்தாரை விடச் சற்றுத்தாழ்ந்ததுமான ஒரு பதவியை அகாதிகள் அல்லது கண்ணியமிக்கத் துருப்புகள் எனப்படுவோர் வகித்தனர். அவர்கள் பேரரசருக்கு அருகில் இருந்து அவரது தேவைகளை நிறைவேற்றினர். மனூச்சி என்பார் அகாதிகள் கண்ணியமான பிரபுக்களின் குடும்பங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட கண்ணியமிக்க குடும்பத்தவர் என்று குறிப்பிடுகிறார். அகாதிகள் பேரரசரின் மெய்க்காப்பாளர்களாக இருந்திருக்கக் கூடும் எனச் சிலரும் மெய்க்காப்பாளர் போன்று இருந்தனர் என்று சிலரும் கூறுகின்றனர்.

### பீரங்கிப் படை

அக்பர் காலத்தில் இருந்தது போலவே பீரங்கிப் படையானது பேரரசுக் குடும்பத் துறையின் ஒரு பகுதியாகவே இருந்தது. மைய அரசைச் சார்ந்த இது மைய அரசாலேயே நிருவகிக்கப்பட்டு வந்தது. போர்க்களப் பீரங்கிகள், துப்பாக்கிகள் முதலிய வெடி மருந்துப் போர்க் கருவிகள் உற்பத்தி செய்வதையும் வெடி மருந்துக் கிடங்குகளையும் கானிசாமன் என்னும் அதிகாரி கண்காணித்து வந்தார். போர்க் காலத்தில் பீரங்கிப் படை பயன்படுத்த வேண்டிய முறைகளைத் தீர்மானித்தவர் மீர் ஆகஷ் என்னும் அதிகாரியாவர். அக்பருக்குப் பின் வந்த படைகள் அவருடைய படையைப்

போல் திறமை வாய்ந்தவைகளாக இல்லை. ஆனால் அவை அளவில் பெரியனவாகவே இருந்தன. ஔரங்கசீப்பின் காலத்தே இந்தியாவுக்கு வந்த மனூச்சி என்பார் இந்தியப் பேரரசு முழுவதையும் வெல்லுவதற்கு 30000 வீரர்களைக் கொண்ட ஓர் ஐரோப்பியப் படை போதுமானது எனக் கருத்துத் தெரிவித்தார்.

### சட்டம், நீதி

இனிச் சட்டம், நீதி ஆகியவை அக்பருக்குப் பின் எப்படி இருந்தன என்பதனைக் காண்போம். யாவருக்கும் மேலான இறைமையைப் பெற்றிருந்த காரணத்தால் பேரரசரே நீதியின் பிறப்பிடமாகவும் தலைமை நீதி மன்றமாகவும் விளங்கினார். அரசருக்குக் கீழ்ப் பேரரசின் தலைமைக் காஜி அல்லது காஜி உல்குஸாத் என்பவர் இருந்தார். காஜி என்பார் நீதித் துறையின் தலையாய அதிகாரங்களைச் செலுத்தி வந்தார். மரண தண்டனை ஒன்றில் மட்டுமே அவருக்குச் சிறிது கட்டுப்பாடு விதிக்கப்பட்டு இருந்தது என்று மனூச்சி கூறுகிறார். காஜி யாரேனும் ஒருவருக்கு மரண தண்டனை விதிப்பாரேயானால் அத் தண்டனையை நிறைவேற்று முன் அரசரின்முன் அவர் மூன்று முறை அதைப் பற்றித் தெரிவித்துக் கொள்ள வேண்டியிருந்தது.

### குற்றவியல்

வழக்குகள் எல்லாம் இரானியச் சட்டப்படியே விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டன. உரிமையியல் வழக்குகள் ஆதில்கள் அல்லது உரிமையியல் நீதிபதிகளால் சாதாரணச் சட்டப்படி விசாரிக்கப்பட்டன. அவருக்கு உதவி செய்ய மப்திகள் எனப்படும் அதிகாரிகள் இருந்தனர். மப்திகள் சட்டச் சம்பந்தமான வழக்குகளில் நீதி வழங்குதல் பற்றிய ஆலோசனைகளைக் காஜிக்கு எடுத்துரைத்தனர். அவரை இக்கால அரசு வழக்குரைஞர்களின் தலைவர் என்று கூறலாம். மப்தி சட்டத் துறையில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தார். காஜிகள் களியாட்டங்களில் கலந்து கொள்வதோ, கையூட்டுப் பெறுவதோ அனுமதிக்கப்படவில்லை.

### தீர்ப்பு

ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைகளில் அரசர் முதல் வழக்குகளையும், மேல் முறையீட்டு வழக்குகளையும் திறந்த நீதி மன்றங்களில் தாமே நீதிபதியாக அமர்ந்து தீர்ப்பு வழங்

கியபோது காஜிகள், மப்டிகள், உலேமாக்கள், ஃபத்துவா எனப்படும் முன்னிகழ்வு வல்ல ஆதாரங்களில் வல்ல மேதைகள், நீதிமன்ற மேற்பார்வையாளர், கொத்தவால் ஆகியோரும் உடன் இருந்தனர். அரசர் நன்கு விசாரணை செய்து உலேமாக்களிடமிருந்து சட்டத்தைக் கேட்டுத் தீர்ப்பு வழங்கினர். நீதி உணர்ச்சியால் பெரிதும் உந்தப்பட்டே அவர்கள் செயல் புரிந்தாலும் நடைமுறையில் விசாரணைகள் மிக விரைவாக நடைபெற்றுத் தீர்ப்பு உடனே வழங்கப்பட்டது. கொத்தவால் என்பார் நகரக் காவல்துறை மேற்பார்வையாளரைப் போன்ற பதவியிலிருந்து, நகரில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டிக், கொலை செய்தல் போன்ற குற்றங்களைக் கண்டுபிடித்து, மக்களின் நடமாட்டங்களையும், நடவடிக்கைகளையும் கண்காணித்து நகர வருவாயை வசூலித்தார். குற்றவாளிகளையும், திருடர்களையும் காஜியின் முன் கொண்டுவந்து நிறுத்தியவர் கொத்தவாலே ஆவர்.

சத்ரிசதுர் என்னும் அதிகாரி அக்பர் காலத்தே வரையறுக்கப்பட்டிருந்த கடமைகளையே அவருக்குப் பின்னும் கைக்கொண்டிருந்தார். அதோடு அவர் ஒரு உரிமையியல் நீதிபதியாகவும் விளங்கினர். ஆனல் அவருடைய அதிகார வரம்பானது மதத்தானீத் எனப்படும். அறநெறிக் கண்காணிப்பாளரின் குறுக்கீட்டால் மாநிலங்களிலிருந்த சதுர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறையினை அறிவுறுத்தியவர் அவரே.

### அறநெறிக் கண்காணிப்பாளர்

ஔரங்கசீப்பின் காலத்தில் மக்களுடைய பழக்க வழக்கங்களை வாழ்க்கை முறையை குர்ஆனியக் கோட்பாட்டின்படி அமைத்திட அறநெறிக் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். பேரரசின் ஆணைகளை நடைமுறையில் கொண்டு செலுத்துவதற்காக மன்சப்தாரிகளும், அசாதிகளும் அடங்கிய ஒரு படைப் பகுதியானது அவர் பொறுப்பிலிருந்தது. அதுமட்டுமன்றிக் குர்ஆனில் விதித்துள்ள செய்யக்கூடியது முதலியவற்றைப் பரப்புமாறு ஆளுநர்கள் வற்புறுத்தப்பட்டனர். இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு விரோதமாக நடப்பவர்களைத் தண்டிப்பதும் இவரது கடமையே.

### செயலகம் (Secretariat)

செயலகத்தைப் பொறுத்த மட்டில் எல்லா அரசு துறைகளும் த.ஃப்தர் அல்லது பேரரசின் செயலகத்தோடு இணைக்கப்

பட்டிருந்தன. அப்வாடில்மால், அப்வாடித்தகவில், தௌஜி, மைய உளவகம் ஆகிய துறைகள் அடங்கியிருந்தன. மைய உளவுத்துறையில் வாகியாநவிஸ், கூஃபியாநவிஸ் ஆகியோர் இருந்தனர். இவர்கள் செய்திகளைத் திரட்டி மன்னரிடம் அறிவித்தனர். வாகியா நவிஸ்கள் வாரத்துக்கு ஒரு முறையும், கூஃபியாநவிஸ்கள் வாரத்துக்கு இருமுறையும் அரசரிடம் செய்திகளை அறிவித்தனர்.

மிக அவசரமும், அவசியமும் வாய்ந்த செய்திகள் மன்னர்க்கு உடனுக்குடன் தெரிவிக்கப்பட்டன. அரசு துறைகள் மையச் செயலகத்துடன் இணைக்கப்பட்டிருந்தமையால் அவற்றின் தலைவர்கள் தினந்தோறும் மன்னரைச் சந்தித்து இரகசிய ஆலோசனை நடத்தினர். இந்த இரகசிய ஆலோசனைச் சபை குஷல்கானா எனப்பட்டது. இதனுடைய நேரான பொருள் குளியல் இல்லம் என்றாலும் உண்மையில் இது சிறிய ஆலோசனைச் சபையையே குறித்தது. டாக்டர் சாக்சேனா என்பார் அக்பர், ஜஹாங்கீர் ஆகியோரின் காலங்களில் திவானி காஸ் குஷல்கானாவாக விளங்கியதாகக் கூறுகின்றார்.

## குடும்ப நிர்வாகம்

அக்பர் காலம் முதல் ஷாஜஹான் காலம் வரை அரசவை மிகப் பொலிவோடும் ஆடம்பரத்தோடும் காட்சியளித்தது. ஆனால் ஔரங்கசிப்பின் காலத்தில் தூய்மையும் எளிமையும் அதிகமாகப் புகுத்தப்பட்டு ஆடம்பரம் குறைந்தது. அரண்மனைக் குடும்ப நிர்வாகத்தின் மொத்த அமைப்பில் அதிக மாற்றம் ஏற்படவில்லை.

முகலாய அரசியல் அமைப்பில் ஒரு முக்கியக் கோட்பாட்டினைக் காண்கிறோம். ஒவ்வொரு நிறுவனத்துக்கும் சம அந்தஸ்திலுள்ள இரண்டு அதிகாரிகள் தலைவர்களாக நியமிக்கப்பட்டதே அக்கோட்பாடு. மாநில அரசாயினும், பேரரசு குடும்பமாயினும், நிதித் துறையேயாயினும் எல்லா நிறுவனங்களிலும் இக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

## மக்கள் தொடர்பு

நாட்டுப்புறங்களில் (urban) வசித்து வந்த மக்களுக்கும், தலைநகரில் வசித்து வந்த பேரரசர்க்கும் ஓர் இணைப்புப் பால

மாக மாநில அரசாட்சி விளங்கிற்று. மாநில உட்பகுதிகளில் நியமிக்கப்பட்டிருந்த ஃபௌஜ்தார் மூலமாகவும், வருமானத் துறையில் நியமிக்கப்பட்டிருந்த சுபாதார்களின் நீதிமன்றத் துக்கு ஜமீன்தார்கள் அடிக்கடி செல்வதன் மூலமாகவும், சுபாதாரின் சுற்றுலா மூலமாகவும் மாநில அரசு மக்களுடன் தொடர்பு கொண்டிருந்தது.

நசீம்

மாநில ஆட்சிமுறை அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சிறிது சிறிது மாற்றப்பட்டு இருந்ததே தவிரப் பெரும்பாலும் மைய அரசாட்சி முறையை ஒத்தே இருந்தது. மாநிலத்தின் தலைவராக விளங்கியவர் சுபாதார் என்றும் நசீம் என்றும் அழைக்கப்பட்டார். சுபாதார் தவிர, திவான், பக்ஷி, காஜிநாடர், காஜிசதர், புயூதத், கண்காணிப்பாளர் ஆகிய அதிகாரிகளும் இருந்தனர். சுபாதார் பேரரசரின் அதிகாரங்களை எல்லாம் மாநிலத்தில் செலுத்தி வந்தார். நடைமுறையில் அவர் அரசப் பிரதிநிதியாக விளங்கினர். மாநிலத்தின் ஊரியல், இராணுவத் தலைவர் இவரே ஆவார். சுபாதாரின் முக்கியப் பணி மாநிலங் களில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டலும், வருமா னங்களை வசூலிக்கத் தகுந்த ஏற்பாடு செய்தலும், அரசரால் அவ்வப்போது அனுப்பப்படும் ஆணைகளை நிறைவேற்றலும் ஆகும். இம் முக்கியப் பணிகள் போன்ற பல்வேறுபட்ட பணி களையும் அவர் மேற்கொண்டார். அதிகாரத்திற்குப் பணிய மறுக்கும் ஜமீன்தார்களையும், சட்டத்துக்குக் கட்டுப்படாத நபர்களையும் அவர் கடுமையாகத் தண்டித்தார். சிறு வருமான அதிகாரிகள் அல்லது அரசு சிற்றதிகாரிகள் குடியானவர் களுக்கு எவ்விதத் தீங்கும் இழைத்திடா வண்ணம் பார்த்துக் கொண்டார்.

படைச் செலவு

அவர் தங்களுடைய மாநிலங்களின் எல்லைப் புறத்துக்கு அருகில் வாழ்ந்த சிற்றரசர்களிடமிருந்து நிறைய வசூல் செய்து அரண்மனைக்கு அனுப்பினர். தமக்குக் கீழ்ப்படிந்து நடந்த வருக்குப் பதவி உயர்வு தரும்படி பரிந்துரை செய்தவரும் அவரே. குற்றவாளிகளையும், கொள்ளைக்காரர்களையும், பணமோ, பரிசோ பெற்றுக் கொண்டு அவர் விடுவித்தால் அது கையூட்டுப் பெற்றதற்குச் சமமாகக் கருதப்பட்டது. தமது மாநிலத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தாக் சௌக்கியின் மூலம் மாதம் இருமுறை பேரரசர்க்கு அறிவித்

தார். அவர் எங்கும் எப்போதும் சென்று போரிடப் படையினைத் தயாராய் வைத்திருந்தார். தமது மாநில வருவாயிலிருந்து திரும்பப் படைச் செலவை எடுத்துக்கொண்டார். மாநிலத்தில் நியமிக்கப்பட்டிருந்த மாநிலத் திவான்கள் மையத் திவான்களின் கட்டுப்பாட்டினுள் இருந்தனர்.

### கருவூலமும் திவானும்

ஔரங்கசீப்பின் சனத் (Sanad) ஒன்றிலிருந்து திவானின் கடமைகளைப் பற்றி அறிகிறோம். அதிலிருந்து சாகுபடி செய்யும் நிலங்களை அதிகப்படுத்தியும், கிராமக் குடியிருப்புகளைப் பெருக்கியும், பேரரசு கருவூலத்தைக் கண்காணித்தும் வந்ததோடு யாரும் அரசின் முறையான அனுமதியின்றிப் பொருள் எடுத்துச் செல்லாது அவர் கண்காணித்தார் எனவும் அறிகிறோம். அரசுக்கு உண்மையாக இல்லாத தீய அமீல்கள் இருந்தால் அவர்களைப் பற்றிய தகவல்களையும் மைய அரசுக்கு அனுப்ப வேண்டிய பணியும் அவருடையதே.

### புதிய அலுவலர்கள்

ஔரங்கசீப்புப்புதிய மதக்கொள்கையைக்கடைப்பிடித்த தன் விளைவாக அக்பர் காலத்தில் இல்லாத புதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். அக்பரால் நீக்கப்பட்ட ஜெசியா வரியை மீண்டும் விதித்தமையால், அவ் வரியை வசூலித்திட ஆமினி ஜெசியா என்னும் அதிகாரி நியமிக்கப்பட்டார். வரிக்குறைப்புச் செய்ய வேண்டிய சூழ்நிலை இருந்தாலும் அதனைச் சற்றும் பொருட்படுத்தாது துல்லியமாக வரி வசூல் செய்யுமாறு ஆணையிடப்பட்டனர். ஜெசியா வரிக் கண்காணிப் புத்தலைவர் என்னும் ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தார். இவர் ஆமினி ஜெசியாவைக் கண்காணித்து அவ் வரி சரியாக வசூலிக்கப்படுகிறதா என்பதையும் கண்காணித்தார். தலைநகரில் இருந்த மக்தாசிப் என்னும் அதிகாரிபோலப் பல அறநெறிக் கண்காணிப்பாளர்கள் மாநிலங்களிலும் நியமிக்கப்பட்டனர்.

### ஔரங்க சீப்பின் காலத்தில் மாநில ஆட்சி

அக்பர் காலத்து அடிப்படையிலேயே மாநிலங்களில் ஆட்சித்துறைப் பிரிவுகள் இருந்தன. வரி வசூலிப்பதற்கென்று கரோரிகள் என்பார் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு உதவியாக ஃபௌஜ்தார், அமீன், போட்தார் ஆகியோர் இருந்தனர். இவர்களின் பணிபற்றி ஏற்கெனவே கண்டோம். கிராமத்தில்

கிராமத் தலைவர், ஜமீன்தார், கானுங்கோ ஆகியோர் முக்கியமான பணிகளை மேற்கொண்டிருந்தனர். ஔரங்கசீப்பு ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் நடைபெற்ற வாரிசுரிமைப் போராட்டத்தினாலும், கலகங்களாலும், கட்டுப்பாடின்மையாலும், தென்னிந்தியப் போரினாலும் பேரரசின் வலிமையும் வளமும் நிர்வாகத் திறமையோடு சேர்ந்து ஈடு செய்ய முடியாத அளவிற்குக் குறைந்துவிட்டன. அரசு அலுவலர்கள் நேர்மையற்ற வர்களாக மாறினர்கள். வரிச்சுமை தாங்க முடியாததாகவும் ஊழல் நிறைந்ததாகவும் இருந்தது.

### ஒழுங்கு முறை

அக்பரால் நிறுவப்பெற்ற இந்தோ இஸ்லாமிய அரசியலமைப்பு ஒழுங்குமுறை என்னும் கட்டடம் இடிக்கப்பட்டு வகுப்பு வாதம், வஞ்சகம் நிரம்பிய அரசு தோன்றியது. பதினைன்காம் நூற்றுண்டில் கில்ஜிகள், துக்ளக்குகள் ஆகியோரால் அமைக்க முடியாத ஒன்று எனக் கருதப்பட்ட இஸ்லாமிய அரசைப் பதினேழாம் நூற்றுண்டில் நிறுவ முயல்வது என்பது அரசியல் முறையாகப் பார்க்கும்போது அருவருப்பான செயலாகத் தோன்றுகிறது.

### சாதனைகளும் தோல்விகளும்

சந்திர குப்தர், சமுத்திர குப்தர் ஆகியோரின் ஆட்சிப் பரப்பை விடப் பரந்த எல்லையே முகலாயர்களின் ஆட்சியில் இருந்தது. முகலாய ஆட்சி ஒரே மாதிரியான ஆட்சிமுறை, ஒரே ஆட்சி மொழி, நாணயங்கள் ஆகியவற்றை அளித்தது என்று டாக்டர் சர்க்கார் குறிப்பிடுகின்றார்.

முகலாய ஆட்சியினால் ஏற்பட்ட நன்மைகளில் ஒன்று வரலாற்று இலக்கியங்களை வழங்கியதே. இந்துக்கள் நினைவுக் குறிப்புகள், வரலாற்றுச் செய்திகள் ஆகியவற்றைத் தொகுத்தனர். அவர்களின் குறிப்புகளில் நாள், மாதம் ஆண்டு ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. புத்த சமய மறைவிற்குப் பின்னர் இந்தியாவிற்கும் அயல்நாடுகளுக்கும் இடையே விடப்பட்டிருந்த தொடர்பு தொடர்ந்தது. வாணிபப் போக்குவரத்து, ஆங்கிலேயர்களால் நிறைவேற்றப்பட்டது. கலை வளர்ச்சிக்கு முகலாயர்கள் அருந் தொண்டாற்றினர்.

### விழிப்புணர்ச்சி

இஸ்லாமிய-இராஜபுத்திரக் கலைகள் ஒன்று படுத்தப்பட்டு இந்தோ சான சீனியக்கம் என்னும் புதிய முறை உருவா

யிற்று. இஸ்லாமிய ஆட்சிமுறை இந்திய அறிஞர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் அடிப்படையான இந்து தர்மத்தை வலியுறுத்தச் செய்தது. ஆனால் இஸ்லாமியர்களின் வருகைதான் ஒரே தெய்வம் என்னும் கொள்கையை இந்துக்களுக்கு உருவாக்கியது என்று டாக்டர் சர்க்கார் உரைக்கின்றார்.

'போர்க் கருவிகளுக்கு மத்தியில் சட்டங்களுக்கு மதிப்பில்லை' என்பது லத்தீன் பழமொழி. எண்ணிறந்த வட்டத் தலைவர்களின் தோற்றம் மைய அரசை வலிவு குன்றச் செய்தது. இந்துக்களின் வளர்ச்சிக்கு முகலாயர்களின் ஆட்சி தடைக் கல்லாயிருந்தது. வடமொழி புறக்கணிக்கப்பட்டது. இந்து அரசர்களால் போற்றப்பட்ட கலைகள் அழிந்தன. திருத்திக் கொள்ள முடியாத தவறுகள் நிறைந்துவிட்டமையால் முகலாயப் பேரரசு வீழ்ந்தது. முடியாட்சி முறையின் வெற்றி தோல்விகள் அரசனைப் பொறுத்தனவே. வெற்றி கொண்ட பகுதியில் இராணுவ அமைப்பே ஏற்படுத்தப்பட்டது. முகலாயர் ஆட்சி இராணுவம் சார்ந்த ஆட்சியே யாகும்.

இதுவரையில் பாபர் தொடங்கி ஔரங்கசீப்புவரை உள்ள காலம் முடிய முகலாயர்களின் ஆட்சி அமைப்புச் செய்திகளைக் காணும்போது, ஆங்கிலேயர்களின் வருகை முகலாய ஆட்சியில் மாறுதல்களை ஏற்படுத்தியது என்பதையும் சில அடிப்படைக் கொள்கைகள் தொடர்ந்து நிலை பெற்றன என்பதையும் அறிகிறோம்.

## இந்நூல் எழுதத் துணை புரிந்த நூல்கள்


| | |
|---|---|
| Abbot | Sind |
| Alberuni | India |
| Aga, M. A. | Rise and fall of Muhammed bin Tughlak |
| Altekar | State and Government in Ancient India |
| ,, | Rashtrakutas and their Times |
| Bandyopadhyaya | Development of Hindu Polity and Political Theories, Part I & II |
| ,, | Internal Law and Customs in Ancient India |
| Banerjee, G. N. | Hellenism in Ancient India |
| Banerjee, R. O. | The Age of the Imperial Guptas |
| Baruar, B. M. | Asoka and his inscriptions |
| Briggs | History of the Rise of the Muhammaden Power in India till 1612 |
| Cambridge History of India | Vols. I, II, III & IV |
| Dandekar | History of Guptas |
| Das, A. C. | Rig Vedic Culture |
| Dikshitar | Hindu Administrative Institutions |
| ,, | Mauryan Polity |
| Duff, J. G. | The History of the Marathas Vols. I, II & III |

| | |
|---|---|
| Edwards and Garrett | Mughal Rule in India |
| Ghoshal, W. | A History of Hindu Political Theories |
| Gopalan, R. | History of the Pallavas of Kanchi |
| Haq, S. M. | A Short History of the Delhi |
| Heras | Sultanate |
| Habibulla | Studies in Pallava History |
| Ed. by Md. Habib & Kaliq Ahmed Nizami | A Comprehensive History of India Vol. 5 (Published under the auspicis of Indian Historical Congress. |
| Jayaswal, K. P. | Hindu Polity |
| Iswari Prasad | History of Medieaval India |
| Keith, A. B. | Constitutional History of India |
| Krishnaswamy Iyengar, S. | Ancient India |
| ,, | Evolution of Hindu Administration Institutions of India |
| Mahalingam, T. V. | South Indian Polity |
| ,, | Administration and Social Life under Vijayanagar |
| Mookerji | Local Government in Ancient India |
| Minakshi, C. | Administration and Social Life under the Pallavas |
| Neelakanta Sastri | Studies in Chola History and Administration |
| ,, | Cholas 4 Vols. |
| Palande, M. R. | Introduction to Indian Administration |
| Qureshi | Administration of the Sultanate of Delhi |
| Rangasamy Ayyangar, K. V. | Some Aspects of Ancient Indian Polity |
| Raychandri | Political History of Ancient India |
| Sarkav, B. K. | Political Institutions and Theories of the Hindus |

| | | |
|---|---|---|
| Sarkar, J. | Mugal Administration | |
| SastriShama | Evolution of Indian Polity | |
| Satyanathaier | College Text Book of Indian History Vols. I, II & III | |
| Sen, S. | Administrative Systems of the Maraths | |
| Sharma, S. R. | Mughal Government and Administration | |
| Sinha, S. N. | The Development of Indian Polity | |
| Srivastava, A. L. | History of India 1000 A.D.–1707 A.D. | |
| Srinivasa Iyengar | Indian Constitutional Problems | |
| Sulaiman Nadri | Arab & India | |
| Tripathi, R. P. | Some Aspects of Muslim Administration | |
| Kanniah, V. | இந்திய ஆட்சி அமைப்பு முறை | I |
| Hanumanthan, K. R. and V. Kanniah | ,, | II |
| Hanumanth, K. R. | ,, | III |
| பல்லவர் வரலாறு | மா. இராசமாணிக்கனர் | |
| தென்னிந்திய வரலாறு | கே. கே. பிள்ளை. | |
| நாமிருக்கும் நாடு அல்லது தென்னிந்திய வரலாறு | ஆரோக்கியசாமி | |

## கலைச் சொற்கள்

Abdication — முடிதுறப்பு, அரசு துறத்தல்
Absolute Government — முழு வல்லாட்சி அரசு
Acquisition — கைக்கொள்கை
Administration — ஆட்சி, ஆளுகை, நிருவாகம்
Administrative Boards — ஆட்சி வாரியங்கள்
Ambassador — தூதர்
Amil — அமீல் (வருவாய்த்துறை அதிகாரி)
Amir — அமீர் (டில்லி சுல்தானியத்தில் மூன்றுவது நிலை)
Amiri-Akhur — குதிரைப்படை அதிகாரி
Amiri-Hajip — அரச அவை அதிகாரி
Amiri-Koh — வேளாண்மைத் துறை அதிகாரி
Amiri-Shikar — வேட்டைப் படையின் அதிகாரி
Amiri-Tarab — அரச பொழுது போக்குக் குழு அதிகாரி
Amir-I-Hajib — அமீரி ஹஜீஃப்
Anarchy — அரசியல் குழப்பம்
Ancient Monuments — பழைய நினைவுச் சின்னங்கள்
Appeal — முறையீடு
Aristocracy — உயர் குடியாட்சி
Ariz — படை வீரர்கள், குதிரைகள் ஆகியவற்றின் எண்ணிக்கைக்குப் பொறுப்பான அதிகாரி
Assassination — அரசியல் கொலை
Assembly — அவை

Autocracy — தன்னரசு, தன்னாட்சி
Appointment — நியமனம்

Bahadur — வீரம் மிக்கவர்
Banjara — தானிய வியாபாரி
Balance of Power — செல்வாக்குச் சமநிலை
Barid Mamalik — ஒற்றுத் துறைத் தலைவர்

Ballot Paper — வாக்குச் சீட்டு
Bhang — கஞ்சா
Board — வாரியம்
Boycott — புறக்கணிப்பு
Bribery — கையூட்டு, இலஞ்சம்

Cabinet — அமைச்சரவை
Casting Vote — முடிவுசெய் வாக்கு
Censure — கண்டனம்
Census — குடிக் கணக்கு
Central Govt. — மைய அரசு
Central Assembly — மையச் சட்ட மன்றம்
Ceremony — சடங்கு
Charai — சத்திரம்
City Council — நகர அவை
Civilisation — நாகரிகம், பண்பு
Civil Service — ஊரியல் பணித்துறை
Civil Servents — ஊரியல் அலுவலர்கள்
Clan — வகுப்பு
Colony — குடியேற்றம்
Commissioner — ஆணையர்
Contract — ஒப்பந்தம்
Consent — இசைவு, ஒப்பம், சம்மதம்
Co-rulership — இணை அரசு
Coronation — முடிசூட்டு விழா
Constitutional Checks — அரசியல் சட்டத் தடை
Corporation — மாநகராட்சி
Corruption — இலஞ்சம்
Cosmic — இயலுலகு சார்ந்த
Coup d'etat — வன்முறை ஆட்சி மாற்றம்
Criminal — குற்றவியல்
Crown — அரசு, மன்னர்

| | | |
|---|---|---|
| Dagh | — | சூடு போடுதல் |
| Decentralisation | — | அதிகாரப் பன்முகப் படுத்தல் |
| Decree | — | ஆணை |
| De Facto | — | நிகழ் முறையில் |
| De Jure | — | சட்ட முறையில் |
| Despot | — | வல்லாட்சியாளன், கொடுங் கோலன் |
| Despotism | — | வல்லாட்சி |
| Dinar | — | ரோம் வெள்ளி நாணயம் |
| Dictator | — | சர்வாதிகாரி, வல்லாட்சி யாளன் |
| Diwan | — | அலுவலகம், மையத் தலைமைச் செயலகம் |
| Diwani Ariz | — | இராணுவத் துறை அலுவலகம் |
| Divine Law | — | தெய்வீகச் சட்டம் |
| Divani-Insha | — | தலைமைச் செயலரின் அலுவலகம் |
| Diwani Riyazat | — | வர்த்தகத் துறை அமைச் சரின் அலுவலகம் |
| Diwani Wizarat | — | வசீரின் அலுவலகம் |
| Divine Right Theory | — | இறைவழி உரிமைக் கோட் பாடு, தெய்வீக உரிமைக் கோட்பாடு |
| Division of Powers | — | அதிகாரப் பங்கீடு |
| Doab | — | யமுனைக்கும், கங்கைக்கும் இடைப்பட்ட நிலம் |
| Election | — | தேர்ந்தெடுத்தல் |
| Empire | — | பேரரசு |
| Enlightened Despotism | — | புதுநோக்கம் கொண்ட வல்லாட்சி |
| Espionage | — | ஒற்று |
| Executive | — | செயல் துறை |
| Faujdar | — | இராணுவத் துறைப் பிரிவின் தளபதி |
| Federation | — | உறுப்புகளால் அமைந்த கூட்டு இணை அமைப்பு கொள்கை |

| | |
|---|---|
| Federal State | — கூட்டாட்சி அரசு |
| Feudalism | — நிலமான்ய முறை |
| Fundamental Rights | — அடிப்படை உரிமைகள் |
| Governor | — ஆளுநர் |
| Government organisation | — அரசு நிறுவனம் |
| Grades | — நிலை வரிசைகள் |
| Haj | — புனித யாத்திரை |
| Hereditary | — இன மரபு |
| Hereditary | — மரபுவழி, இனவழி |
| Holy Alliance | — புனிதக் கூட்டுறவு |
| Holy Law | — தூய சட்டம் |
| Historical Sense | — வரலாற்று அறிவு |
| Hypothetical | — புனைவுக்கோல் இயல்பான விளக்கம் |
| Immemorial | — தொன்று தொட்டு |
| Imam | — உயர் தளபதி |
| Interregnum | — ஆட்சி இடையீடு |
| Infallilility | — பிழையாத்தன்மை ஆணை |
| Inam | — அன்பளிப்பு |
| Industrial Arts | — தொழிற் கலைகள் |
| Iconoclast | — சிலை வணக்க மறுப்பாளர் |
| Iqtadar | — ஆளுநர் |
| Jagir | — அரசினால் அலுவலர்க்கு வழங்கப்பட்ட நிலம் |
| Jizya | — முஸ்லீம் அல்லாதார் செலுத்த வேண்டிய வரி |
| Karkuns | — தொழிலாளர்கள் |
| Khan | — மங்கோலியர்கள், துருக்கியர்கள் ஆகியோரிடையே சுயேச்சை ஆட்சியாளர்கள் |
| Khiraj | — நிலவருவாய் |
| Khwaja | — தலைவன், வணிகன் மதிப்புப் பெற்றவன் |
| Kotwal | — நகரப் பொறுப்பாளன் |
| Law of Dharma | — தர்மக் கோட்பாடு |

Law of Primogeniture — மரபுவழிச் சட்டம்
Local Government — ஊர் அரசு

Madrassa — கல்வி நிலையம்
Magistrates — அமைதிகாப்பு நடுவர்கள்
Malik — டெல்லிச் சுல்தானியத்தில், கான்களுக்கும், அமீர்களுக்கும் இடைப்பட்ட அதிகாரிகள்
Malik Naib — அரசனுடைய பொறுப்புக்களை நிறைவேற்றியவர்
Material — பொருளியல்
Muhtasib — நகர் மன்றத்தில் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை மேற்பார்வை யிட்டவர்
Muggaddam — கிராமத் தலைவர்
Mushriff — கணக்குப் பொறுப்பு அதிகாரி
Middle Ages — இடைக்காலம்
Minorities — சிறுபான்மையினர்
Mixed State — கலப்பு அரசு
Moral State — குறிக்கோளரசு
Moral Regulation — ஒழுங்கு முறை
Monarchy — முடி அரசு, கோனாட்சி

Naib — உதவியாளர், பிரதிநிதி
Nation — நாடு
National — தேசியம்
Natural Law — இயற்கைச் சட்டம்

Obligation — கடப்பாடு
Organisation — நிறுவனம்
Ordeal — சோதனைமுறை
Origin — தோற்றம்

Patriotism — நாட்டுப்பற்று
Patriarch — தந்தை வழிச்சார்ந்தது
Personal Representative — தனிப் பிரதிநிதி
Philosophical — தத்துவ ரீதியிலான
Principle — கோட்பாடு
Politics — அரசியல்
Primogeniture — முதன் மகவு வாரிசு

Qila — கோட்டை
Quorum — கோர் எண்
Quota — விதப்பங்கு

Ratnanis — இரத்தினங்கள்
Rank — படிநிலை முறை, வரிசை
Religious Toleration — சமயப் பொறை
Revenue Officer — வருவாய் அலுவலர்
Records — ஆவணங்கள்
Region — மண்டலம், வட்டம்

Secretariat — செயலகம்
Secretariat Central — தலைமைச் செயலலம்
Shahibi Thauji — பணத்துறைச் சிப்பந்திகளை மேற்பார்வையிடுபவர்
Shaik — தலைவன்
Shiqdar — குறித்த ஒரு பகுதியின் அதிகாரி
Social Contract — சமுதாய ஒப்பந்தம்
Society — சமுதாயம்
Sovereignty — இறைமை
Siphasalar — படைகளின் தளபதி
Spiritual — மன இயல்
State of Nature — இயற்கை நிலை
State Tribunal — நாட்டின் தீர்ப்பு மன்றம்
Social Club — சமூகக் குழாம்
Social Justice — சமுதாய நீதி
Superintendent — கண்காணிப்பாளர்
Succession, Law of Heredity — மரபுரிமைச் சட்டம், வாரிசுரிமைச் சட்டம்

Sultan — அரசன்

Theocracy — சமயச் சார்பு ஆட்சி முறை
Trade & commerce — வர்த்தகம், வாணிபம்
Tribute — திறை
Tribal Rule — இனவழி அரசாட்சி

Urban — நாட்டுப்புறம்
Ulama — முஸ்லீம் கல்வி மான்கள்

Vakil — வாதாடுபவர், துணை அதிகாரி

Viceroy — அரசப் பிரதிநிதி